
திருவாசகம்

தெளிவுரை



மணிவாசகர் பதிப்பகம்

புலவர் வ. சிவசங்கரன்

திருவாசகம்

தெளிவுரை

உரையாசிரியர்
புலவர் **வ. சிவசங்கரன்**
திருக்கழுக்குன்றம்

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை.
சென்னை-600108.

முதல் பதிப்பு : மே, 2006

இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட், 2008

திருவள்ளுவர் ஆண்டு : 2039

விலை : ரூ. 60.00

மணிவாசகர் வெளியீட்டு எண் : 1285

நினைவில் வாழும்

நிறுவனர்

ச. மெய்யப்பனார்



டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

'பதிப்புச் செம்மல்' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

மணிவாசகர் நூலகம்

12-B, மேல சன்னதி, **சிதம்பரம்** - 608001. **✆:230069**

31, சிங்கர் தெரு, பாரிமுனை, **சென்னை** - 600108. **✆:25361039**

6, சிவஞானம் தெரு, **தி. நகர், சென்னை** - 600017. **✆:24357832**

110, வடக்கு ஆவணி மூல வீதி, **மதுரை** - 625001. **✆:2622853**

15, ராஜ வீதி, **கோயமுத்தூர்** - 641001. **✆:2397155**


78, செரி சாலை, **சேலம்**-636001. **✆:3207722**

28, நந்தி கோயில் தெரு, **திருச்சி** - 620002. **✆:2706450**

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,

சென்னை – 600 021, தொலைபேசி : 25954528

1/5



பதிப்புச்செம்மல்

ச. மெய்யப்பனார்

அவர்கட்கு

இன்று உருவாய் நம்மிடையே இல்லையிவர் எனினும், அருவாய் விளங்கி அனைவர் நெஞ்சங்களிலும் நீங்காத நினைவாய் வாழ்பவரே, பேராசிரியப் பெருந்தகை திருமிகு. **ச. மெய்யப்பனார்.** தில்லையம்பதியைத் தேர்ந்து தெளிந்தவர்; மணிவாசகரை மனவாசகமாகப் பதித்துக்கொண்டவர். அதன் காரணமாகவே, மணிவாசகர் பெயரில் பதிப்பகத்தை நிறுவியவர். இவரது பணி, தொய்வின்றித் தொடர்கிறது. அந்தவகையில், திருவாசகத் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகத்தின் வாயிலாக வெளிவருவது சாலவும் பொருத்தமானதே.

மதிப்புரை

சைவத் தமிழ் மக்கள், திருவாசகத்தைத் தம் உயிரினும் மேலான தெய்வத் திருமறையாக மதித்துப் பேரன்புடன் ஓதிப் போற்றுகின்றனர். சிவபிரான் உள்நின்று உணர்த்த அதன் பிரதிபலிப்பாக உண்டான வாக்கே திருவாசகம். ஊனையும், உள்ளத்தையும் உருக்குகிற தெள்ளு தமிழ்த் தெய்வ நூல். மற்ற அடியார்களுக்கு இறைவன் அடியெடுத்துக் கொடுக்க அதைக் கொண்டு அவர்க்ள் பாடினார்கள். ஆனால், மாணிக்கவாசகப் பெருந்தகை மொழிய அதைக் கேட்டு இறைவனே எழுதியது திருவாசகம். ஐம்பத்தோரு திருப்பதிகங்கள் கொண்ட திருவாசகத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை இதில் 661 ஆகக் காணப்படுகிறது. படிப்பவர், பாடுபவர் உள்ளத்தையும், உணர்வையும், உயிரையும் உருக்கிப் புனிதப் படுத்தும் சிறந்த பக்தி இலக்கியம் திருவாசகம். அதனால், 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' எனும் பழமொழி உண்டாயிற்று. திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் மணிவாசகருக்குக் குரு வடிவில் காட்சி தந்து மெய்ப்பொருளை உணர்த்தியபோது, பாடியதே சிவபுராணம். திருப்பெருந்துறை, தில்லை, திருஉத்தரகோசமங்கை, திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை, சீர்காழி, திருவாரூர் ஆகிய தலங்களிலும் பாடியுள்ளார் மணிவாசகர்.

மணிவாசகருக்குக் கணக்கிலா கோலம் காட்டிய கழுக்குன்றத்தில் பிறந்த இதன் உரையாசிரியர், திருவாசகத்தில் நன்கு ஊறித் திளைத்தவர் என்பதை, நூலைப் படிக்கும்போது உணர முடிகிறது. 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர்' என்று மணிவாசகர் அருளியது போல் திருவாசகத்தைப் பொருள் தெரிந்து படிப்பது சிவப் பரம்பொருளை நன்கு உணர வழி வகுக்கும். மணிவாசகர் பதிப்பகம், திருவாசக உரை நூலை வெளியிட்டிருப்பது பொருத்தமானது; பாராட்டுக்குரியதும் கூட.

சக்தி விகடன் — **ராகவிநோதன்**

பக்தி இலக்கியத்தின் இமயம்

ச.மெ. மீனாட்சி சோமசுந்தரம்

அன்னைத் தமிழின் அருமை பெருமைகளை – பண்பாட்டுக் கூறுகளைப் பறைசாற்றுவன சங்க இலக்கியங்களும் சமய இலக்கியங்களும். சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்பன. அவற்றைச் சார்ந்த பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் ஆகியனவும் அன்னைத் தமிழை அணிசெய்கின்றன. சமய இலக்கியங்களாகப் பன்னிரு திருமுறைகள் அமைந்துள்ளன. சங்க இலக்கியங்கள் இம்மை வாழ்விற்கும், சமய இலக்கியங்கள் மறுமை வாழ்விற்கும் வழிகாட்டுவன.

பொதுவாகக் கூறுமிடத்து, பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகளும் 'தேவாரம்'என்றே சுட்டப்படுவன. மூவர் அருளியமையால், 'மூவர் தேவாரம்' என்றும் கூறுவர். சிறப்பாகக் கூறுமிடத்து, முதல் மூன்று திருமுறைகள் – திருஞானசம்பந்தரின் 'திருக்கடைக்காப்பு'; அடுத்த மூன்று திருமுறைகள் – திருநாவுக்கரசரின் 'தேவாரம்'; ஏழாம் திருமுறை – சுந்தரரின் 'திருப்பாட்டு'. எட்டாம் திருமுறை – மாணிக்கவாசகரின் 'திருவாசகம்'; ஒன்பதாம் திருமுறையும் பதினோராம் திருமுறையும் – பலர்தம் படைப்புகளின் தொகுப்பு; பத்தாம் திருமுறை – திருமூலரின் 'திருமந்திரம்'; பன்னிரண்டாம் திருமுறை – சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் என்னும் 'பெரிய புராணம்'.

திருமுறைகள் பொதுவாக உள்ளத்து உணர்வில் கலப்பன எனினும், எட்டாம் திருமுறையாகிய திருவாசகமோ, ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்குவது. மேலைநாட்டு அறிஞர் போப்பையர், 'மாணிக்கவாசகரின் ஆன்ம அனுபவச் செழிப்பில் விளைந்த தம் அனுபவப் பாடல்களே திருவாசகம்'என்று புகழ்ந்துள்ளார். 'கற்பனைக் களஞ்சியம்'துறைமங்கலம் சிவப்பிரகாசர், 'திருவாசகத்தை ஓதினால், கருங்கல் மனமும் கசிந்துருகிக் கண்கள் நீரினைச் சொரியும்' என்கின்றார். திருவருட்பிரகாச வள்ளலார், 'திருவாசகத்தைச் செவிமடுப்பின், பறவைகளும் விலங்குகளும்கூட மெய்ஞ்ஞானம் பெறும்'என்கின்றார்.

இறையியல்பைக் கூறும் 'சிவபுராணம்', உயிரியல்பைக் கூறும்'கீர்த்தித் திருவகவல்', தடைகளைக் கூறும் 'திருவண்டப் பகுதி', தடைநீக்க வழிகளைக் கூறும் 'போற்றித் திருவகவல்' ஆகிய நான்கு பாடல்களையும் ஓதிச் சிந்திக்க

உயர்நலம் பெறலாம். 'திருச்சதகம்' – தொடாசிந்தனைகளின் தொகுப்பு; அந்தாதித் தொடையில் அமைந்துள்ள 'பத்துப்பதிகங்கள்', – அந்தத் தொகுப்புக்குத் துணைசெய்வன; 'திருவெம்பாவை'– தெவிட்டாத தேன்பாகு.


திருவாசகம், சிந்தையைச் சிலிர்க்கச் செய்வது; செவியில் செந்தேனைப் பாய்ச்சுவது; இரும்புமனத்தையும் இளகச் செய்வது; உவமையிலாக் கலைஞானம் பெறவும், உயர்வான் பேறுபெறவும் திருவாசகத்தினும் விஞ்சியதொரு மறுவாசகம் இல்லையெனலாம்.

மாணிக்கவாசகரின் திருப்பெயரைப் பெற்றுத் திகழும் 'மணிவாசகர் பதிப்பகம்', திருவாசக மூலத்தைக் கடந்த ஆறாண்டுகளில் ஒன்பது பதிப்புகளாகக் கொண்டுவந்துள்ளது. இதற்குக் காலந்தோறும் உரைகள் தோன்றியவாறு உள்ளன. பதிப்பகத்தின் குறிக்கோள்களில் ஒன்று, திருமுறைகளைப் பாதுகாத்தலும் பரப்புதலும். அந்த வகையில், எங்கள் பதிப்பகத்தின் வாயிலாக வெளிவருவதே இந்தத் 'திருவாசகம் – தெளிவுரை' என்னும் செம்பதிப்பு.

இந்நூலுக்கு மிகச்சிறந்த தெளிவுரையைத் திருக்கழுக்குன்றம் புலவர் **வ. சிவசங்கரன்** வகுத்துள்ளார். இதற்கு முன்னர்த் திருக்குறள், நாலடியார், பழமொழி, நானாற்பது ஆகிய சங்க இலக்கியங்களுக்குத் தெளிவுரை எழுதிப் பேரும் புகழும் பெற்றவர். 'வெற்றுச்சொற்களைத் தொகுக்காமல், வேண்டிய அளவு உரை வகுத்துள்ள திறம் பாராட்டுக்குரியது. பாடற்கருத்தினை உள்வாங்கிக்கொண்டு, மிகத்தெளிவாக வரைந்துள்ளார். இவரின் உரைநெறி எளியது; எல்லோர்க்கும் புரியும்நெறி; பொருளைப் புலப்படுத்தும் நெறி' என்னும் பதிப்புச்செம்மலின் பதிவினை, அப்படியே வழிமொழியலாம்.

இந்நூல், செம்பதிப்பாக வெளிவரத் துணைசெய்த பெரும்புலவர் **ச. சீனிவாசன்** அவர்களுக்கு நன்றி.

இந்நூலுக்கு, மிகச்சிறந்த அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த 'ஆன்மிக ஞாயிறு' **ஏ.எம். இராஜகோபாலன்** அவர்கட்கு, மணிவாசகர் பதிப்பகத்தின் நன்றி என்றும் உரியது. சமய உலகம் – சைவஉலகம் பெற்றுப் பயின்று, பயனுறுமாக!



அணிந்துரை

'ஆன்மிக ஞாயிறு'

ஏ.எம். இராஜகோபாலன்

ஆஸ்தான வித்வான்: 'அகோபில மடம்'

ஆசிரியர் : 'குமுதம் ஜோதிடம்'

உலக உயிர்கள் உயர்வுபெறும் வண்ணம், பக்திநெறியிலே நான்கு மார்க்கங்களை வகுத்துள்ளனர் நம் ஆன்மிகப் பெரியோர். அந்த வகையிலே ஞானமார்க்கத்தைக் கடைப்பிடித்து, ஞானமார்க்கத்தின் வாயிற்கதவுகளைத் திறந்துவைத்து, அருள் நிலைக்கு அழைத்துச்செல்லும் இனிய வாசகமாம் திருவாசகத்தைப் பக்தியுலகுக்குத் தந்து, பக்திவிதை விதைத்துப் பக்குவநிலை கொடுத்த அருளாளர் வாதவூரராம் மாணிக்கவாசகப் பெருமான்.

சிவபெருமானையே குருவாக ஏற்ற ஞானநிலையில், வந்து விழுந்த வாசகமே திருவாசகம் ஆகும். 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி, எளிய முறையிலே இன்பமென்னும் திருவடிப்பேற்று நிலையை அடையத் தேனினும் இனிய திருவாசகம் ஓது' என்பது ஆன்றோர் வாக்கு. ஓர் ஆலயம் சென்று வழிபடுகின்றோம் என்பதற்கும், அந்த ஆலயத்தின் தல அருமை பெருமைகளை அறிந்து வழிபடுகின்றோம் என்பதற்கும் வேறுபாடுகள் அதிகமுண்டு. முழுமையாக அறிந்து, முறையாக வழிபாடு செய்தால், குறைவிலா வாழ்வை இறைவன் நிறைவாக அருள்வான் என்பர். இந்த இறையருள் வாசகமாம் திருவாசகத்தின் சிறப்பை, 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்னும்

தொடர், எடுத்து இயம்புகின்றது. இதனால் திருவாசகத்தின் வலிவையும் பொலிவையும் உணரலாம்.

'பொருளை அறியாமலும் தெரியாமலும் படிப்பதைவிடப் பொருளை அறிந்து, அதன் செறிவை உணர்ந்து படிப்பதே சாலச் சிறந்தது' என்னும் கருத்தின் அடிப்படையில், பதிப்பக உலகில் மணியான முத்திரையினைப் பதித்துக்கொண்டிருக்கும் **'மணிவாசகர் பதிப்பகம்'**, மணிவாசகப் பதிகங்களுக்கு இனிய முறையில் – எளிய நடையில், 'திருவாசகம் தெளிவுரை' வெளியிடுவதை அறிந்து, மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்'

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் எண்ணமும், 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' என்னும் மாணிக்கவாசகரின் வண்ணமும் இங்கே நினைவுகொள்வது சாலச் சிறந்ததாகும். மணிவாசகரின் பதிகங்களை 'மணிவாசகர் பதிப்பகம்' வெளியிடுவதும், திருவாசகத்தில் இடம்பெறும் இனிய திருத்தலமாய் விளங்கும் திருக்கழுக்குன்றத்தின் செந்தமிழ் மன்றமாய்த் துலங்கும் புலவர் **வ. சிவசங்கரன்**, இனிய எளிய நடையில் உரை எழுதியிருப்பதும் பாராட்டத்தக்கன. இப்புலவர் பெருந்தகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சிலவற்றிற்கு உரை எழுதிப் புகழ்பெற்றவர். 'கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்று போற்றிப் பாடிப் பரவிய திருவூரில் வசிக்கும் புலவர் உரை எழுதியிருப்பதும், திருவாசகம் அருளிய அருளாளரின் பெயர்கொண்ட பதிப்பகம் வெளியிடுவதும் இறையருட் செயலே.

இந்தப் பதிப்பகத்தை நிறுவிய நிறுவனர் அமரர் **ச. மெய்யப்பனார்**, அதிக வாணிக நோக்கம் கருதாமல் அனைவரும் படித்துப் பயன்பெறவேண்டும் என்னும் எண்ணத்தில், அதிகநாட்டம் கொண்டவர். அதுபோலவே, அவர் விட்டுச்சென்ற பணியினை, அவரின் புதல்வர் **ச.மெ. மீனாட்சி சோமசுந்தரமும்** பாங்குறப் பல பதிப்புகளைப் பிற்காலச் சந்ததியினர் பயன்பெறும் வண்ணம், வாழ்க்கை நெறிமுறைகளுக்குத் தேவையான பல்லாயிரம் புத்தகங்களை வழங்கவேண்டும். இந்த இறைவாசகத்திற்கு இனிய உரையினை வழங்கிய புலவர், இன்னும் நிறைய உரைநூல்களை வழங்கவேண்டும். இந்தத் 'திருவாசகம் தெளிவுரை' நூல், ஒவ்வொரு வீட்டிலும் இருந்து, இறையொளி வீசிட, எம்பெருமானை வேண்டிப் பணிகின்றேன்.

முகவுரை

கற்பாந்த காலங் கடவாக் கடல்கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே – அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவா சகமென்னுந் தேன்.

சமுதாயப் பண்பாட்டிற்கும் பயன்பாட்டிற்கும் பயன்படும் பனுவல் 'திருக்குறள்'. சமயப் பண்பாட்டிற்கும் பயன்பாட்டிற்கும் பயன்படும் பனுவல் 'திருவாசகம்'. 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்று தொடங்கினார் திருவள்ளுவர்! 'நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க' என்று தொடங்கினார் மாணிக்கவாசகர்! இறைவனுடைய திருவடிகளைப் போற்றுவதில், வள்ளுவரும் வாதவூரரும் ஒன்றுபட்டனர்.

மேலை நாட்டினின்றும் சமயப்பணி ஆற்றிடத் தமிழ்நாட்டிற்கு வந்தார் போப்பையர். கடற்பயணம் மேற்கொண்ட எட்டுத் திங்கள்களிலேயே, நற்றமிழை நன்றாகக் கற்றறிந்தார். உயர்தமிழின் பெருமையை, உலகறியச் செய்யப் பெரிதும் முயன்றார். நாற்பதாண்டுகள் தமிழுக்கு நற்றொண்டு செய்தார். தாம் இயற்கை எய்தியவுடன், தம் கல்லறையின்மேல், 'ஒரு தமிழ் மாணவன்' என்று பொறிக்குமாறு சொன்னார். திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தார். திருவாசகத்தைத் 'தென்னிந்தியத் திருமறை' என்று குறிப்பிட்டார். 'திருவாசகத்தின் இன்பத்தை உணர்ந்து நுகரவேண்டுமானால், அது தமிழனால்தான் முடியும்' என்றும் குறிப்பிட்டார்.

மொழியையும் சமயத்தையும் இரண்டு கண்கள் எனலாம். மொழியின்பாலும் சமயத்தின்பாலும் பற்றுக் கொள்வதும், அவற்றைப் பற்றிக் கொள்வதும் மன்பதையின் இயல்பே. இரண்டு கண்களின் இணைந்த பார்வையே முழுப்பார்வை என்பது போல, மொழிப்பற்றும் சமயப்பற்றும் இணைந்து விளங்குவதே, சமுதாய வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படை.

அடியேன், திருக்குறளுக்குத் 'தெளிபொருள்' கண்டதுண்டு. திருவாசகத்திற்கும் 'தெளிவுரை' காணும் நல்வினைப் பயன் வாய்க்கப் பெற்றேன். வினையின்றி விளைவில்லை. திருவருளும் குருவருளும் இல்லாமல், வாழ்வின் நிகழ்வுகள் அமையப் பெறா. அந்த வகையில், திருவருளும் குருவருளுமே என்னைக் கூட்டுவித்தன என்பேன்.

மணிவாசகப் பெருந்தகையின் உளப்பாங்கின் வழியே உரை வகுத்துள்ளேன். அடைமொழி போன்ற சில சொற்சேர்க்கைகளைத் தவிரக் கருத்தளவில் அந்தப் பெருந்தகையின் கருத்து வட்டத்திற்குள்ளேயே நின்றுள்ளேன். குறிப்பிட்டுச் சொன்னால், மணிவாசகரே உரைநடையில் கூறுவதாகக் கொள்ளலாம். சமய இலக்கியமாகையால், பேரளவில் அச்சத்துடனேயே அணுகியுள்ளேன். அவனருளாலே அவன்தாள் வணங்கி, அவனுரை வரைந்தேன் எனலாம்.

தெளிவுரை என்பதால், உரையில் 'தெளிவு' துலங்குமாறு பார்த்துக் கொண்டேன்; நடையில் 'எளிமை' நிலவுமாறு கவனித்துக் கொண்டேன்; உரையின் அளவில் 'சுருக்கம்' இருக்குமாறு குறிக்கொண்டேன். மூலத்தை முழுமையாக உரைப்படுத்தியுள்ளேன். அடியோ சீரோ விடுபடாமல் பார்த்துக் கொண்டேன். அசையைக் கூட அசைய விடாமல் கண்காணித்துக் கொண்டேன். சமய உலகம் வரவேற்று மகிழுமானால், உய்வடைந்தேன் எனலாம்.

இந்த நூலுக்குத் தக்கதோர் 'அணிந்துரை' வழங்கியுதவிய, 'ஆன்மிக ஞாயிறு – சோதிடச் சக்கரவர்த்தி' **ஏ.எம். இராசகோபாலனார்க்கு,** எனது நன்றி என்றும் உரியது.

அடியேனையும் ஒரு பொருட்டாக எண்ணி, இந்த உரைப்பணிக்கு என்னை ஆற்றுப்படுத்திய மணிவாசகர் பதிப்பக உரிமையாளர் தமிழவேள் – செந்தமிழ்க் காவலர் – பதிப்புச்செம்மல் – பேராசிரியர் தெய்வத்திரு **ச. மெய்யப்பனார்** தம் அருமைத் திருமகனார் **திரு. ச.மெ. மீனாட்சிசோமசுந்தரம்,** பதிப்பக மேலாளர் **திரு. இராம. குருமூர்த்தி** ஆகியோர்க்கு, அடியேன் என்றென்றும் கடப்பாடுடையேன். 'கடைப்பட்டேனும் கடைத்தேறுமாறு' இவ்வரிய வாய்ப்பினை அடியேனுக்கு அளித்த அவ்விருவர்க்கும் நன்றிகூறி அமைவேன்.

திருவருள் போற்றி!

குருவருள் போற்றி!

தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

திருக்கழுக்குன்றம்,
14.04.2006.

அன்பன்,
வ. சிவசங்கரன்

உள்ளுறை

வாதவூரர் வாழ்வியல்

அருள்வாத வூரர்சொல் அம்பலவர் தாமெழுதும்
திருவா சகத்தைத் தெளிந்தால் – கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமரரு ளாலே
சிவகதியு முண்டாஞ் சிவம்.

திருக்கயிலாயத்தில், பூதகணங்கள் உமையொரு பாகனைச் சூழநின்று வணங்கியவாறு, "நீங்கள் அருளிச் செய்த ஆகம நூல்களின் கருத்துகளைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகின்றோம். அருட்பெருங்கடலாகிய நீங்கள், அவற்றைப் பற்றித் தெரிவிக்க வேண்டுகிறோம்" என்று பணிவுடன் வேண்டினர்.

உமையொரு பாகனும், "நீங்கள் உத்தரகோசமங்கைக்குச் சென்று, அங்கே எனக்காகக் காத்திருங்கள். அங்குவந்து நான் ஆகம நூல்களின் கருத்துகளை நீங்கள் தெரிந்து கொள்ளுமாறு கூறுவேன்" என்றான். சொன்னவாறே, வேதிய வடிவில் உத்தரகோசமங்கைக்குச் சென்றார்.

பூதகணங்கள் அனைத்தும், சிவபெருமானின் ஆகமக் கருத்துகளை அக்கறையுடன் செவிமடுத்தன. சிந்தையிலும் பதித்துக் கொண்டன. அப்போது தேவேந்திரன், விண்ணில் உலா வந்துகொண்டிருந்தான். பூதகணங்களின் கவனத்தைத் திசைதிருப்புவதற்கே தேவேந்திரன் அவ்வாறு அழகாக உலா வந்தான். அவனுடைய வஞ்சக வலையில், ஒரேயொரு சிவகணம் சிக்கிக் கொண்டது – சிந்தனையைச் சிதறவிட்டமையால்.

அந்தச் சிவணத்திடம் சிவபெருமான், "என்னுடைய உரையினைக் கவனிக்காமல், இந்திரன் உலா வந்ததைக் கண்டு களித்த நீ, இந்த மண்ணுலகில் மனிதனாய்ப் பிறந்து, உலக இன்பங்களில் இன்புற்று வாழ்வாயாக!" என்று கூறினான்.

இறைவன் அளித்த தண்டனைக்கு வருந்திய சிவகணம், "இறைவனே! எனது தவற்றினைப் பொறுத்தருள வேண்டும். மனிதப் பிறப்பெடுத்து, பந்த பாசங்களில் சிக்குண்டு, துன்பப்படப் போவதை எண்ண எனது உள்ளம் நடுங்குகிறது. உங்களை மறந்து வாழவும் என்னால் இயலுமா? அருள்கூர்ந்து அடியேனுக்கு இரக்கம் காட்ட வேண்டுகிறேன்!" என்றது.

அருளுருவான இறைவனும், "மனங்கலங்க வேண்டா. மண்ணுலகில் மனிதனாகப் பிறந்தாலும், எனது நினைவு உனக்கிருக்கும். உன்னையும் நான் ஆண்டுகொள்ள வருவேன்!" என்றான். சிவகணமும் சிந்தை மகிழ்ந்தது.

அவ்வாறிருக்கத் 'திருவாதவூர்' என்னும் திருத்தலத்தில், சம்புபாத சிருதர் என்னும் சிவனடியாரும், சிவஞானவதி என்னும் அவர்தம் துணைவியாரும்

வாழ்ந்து வந்தனர். அவரும், நீண்ட காலமாகக் குழந்தைப் பேறு இல்லாதவராய் இருந்து வந்தனர். அந்நிலையில், இறைவனும் அவர்பால் அருள்பாலித்து, முன்பு மண்ணுலகில் மனிதப் பிறப்பெடுக்குமாறு கூறிய தன்னுடைய சிவகணத்தை, அந்த இணையருக்கு மகனாகப் பிறக்க அருளினான்.

எல்லாம் வல்ல எம்பெருமானின் அருள்கனிந்து பிறப்பெடுத்த தம்முடைய மகனுக்கு, 'வாதவூரன்' என்னும் திருப்பெயரைப் பெற்றோர் இட்டு மகிழ்ந்தனர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த செல்வன் வாதவூரன், கல்வி, கேள்வி, அறிவு, அன்பு, பண்பு, ஒழுக்கம் ஆகியவற்றில் சிறந்து விளங்கினான். அவனைச் 'சான்றோன்' என்று நாடு புகழ்ந்தது.

அப்போது, பாண்டிய நாட்டை 'அரிமர்த்தனன்' என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு, வாதவூரனைப் பற்றிய செய்தி போயிற்று. உடனே அழைத்து வருமாறு ஆளையும் அனுப்பினான். அவ்வாறே வந்து சேர்ந்த வாதவூரனை, அன்புடன் எதிர்கொண்டான் அரிமர்த்தனன். வாதவூரனைத் தன்னுடைய அமைச்சரவையிலும் சேர்த்துக் கொண்டான். 'தென்னவன் பிரமராயன்' என்னும் சிறப்புப் பெயரையும் சூட்டினான். நாளடைவில் திறமைகளை மெச்சி, முதலமைச்சராகவும் ஆக்கினான்.

மன்னன், தன்னுடைய படைபலத்தைப் பெருக்க விரும்பினான். குறிப்பாகக் குதிரைப்படை வலுவிழந்து காணப்பட்டமையால், அதனை வலிவும் பொலிவும் உடையதாக்க முற்பட்டான். அதற்காகக் கருவூலத்திலிருந்து நிறைந்த அளவிற்குப் பொன்னை எடுத்துக்கொள்ளுமாறும், அரபு வாணிகர் கொணரும் குதிரைகள் அனைத்தையும் வாங்கி வருமாறும், மேற்கொண்டு தேவைப்பட்டால், கொண்டு வருவதற்கு முன்பணம் கொடுக்குமாறும் கூறினான்.

மன்னன் கூறியபடியே வாதவூரர், பொன்னை எடுத்துக்கொண்டு, அவனிடம் விடைபெற்றுக் கொண்டார். தம்முடைய பயணம் இனிதாக அமைய, மீனாட்சியம்மை உடனுறையும் சோமசுந்தரர் திருக்கோயிலுக்கு வழிபடச் சென்றார். அதன்பிறகு பயணப்பட்டார். வழியில் உள்ள திருக்கோயில்களை எல்லாம் வழிபட்டவாறே சென்றார். அவ்வகையில், திருப்பெருந்துறையை நோக்கிச் சென்றார். அதன் இன்றைய பெயர் ஆவுடையார் கோயில்.

திருப்பெருந்துறையை அடைந்ததும், திருக்கோயிலை நெருங்கினார். அங்குள்ள 'பிருகு தீர்த்தம்' எனப்படும் 'மொய்யார் தடம்பொய்கை' என்னும் திருக்குளத்தில் நீராடிப் பிற நியமங்களையும் செய்து கொண்டார். திருக்கோயிலை வலம் வரத் தொடங்கினார். அவ்வாறு வருகையில், அற்புதக் காட்சியொன்றினைக் கண்டார். திருச்சுற்றில் இருந்த குருந்த மரத்தின் கீழே, ஞானப்பழம் போலத் தோற்றமளித்த முதியவர் அமர்ந்திருந்ததையும், அடியவர் பலர் அவரைச் சூழ்ந்திருந்ததையும் கண்ணுற்றார். அண்ணலின் உள்ளத்தில், ஓர் உணர்வு மயமான உந்துதல் ஏற்பட்டது.

எம்பெருமானாகிய சிவபெருமான், சிவகணத்திற்கு அந்நாளில் வாக்களித்தபடி, வாதவூரரை இந்நாளில் ஆண்டுகொள்ளவே திருப்பெருந்துறைத்

திருக்கோயிலின் திருச்சுற்றில், குருந்த மரத்தடியில் குருநாதனாக எழுந்தருளினான். வாதவூரரையும் ஆண்டுகொண்டான். அவரை அருகில் அழைத்துத் தன்னுடைய பொன்னார் திருவடிகளை அவருடைய தலையின்மீது வைத்தான்.

மெய்ம்மறந்து நின்ற வாதவூரர், பேசவும் நாவெழாமல், சிவகுருநாதனையே நோக்கியவாறு இருந்தார். அப்போது சிவபெருமானாகிய குருநாதன் அவரைப் பார்த்து, "வாதவூரனே! நீ என்னுடைய அன்புக்குப் பாத்திரமானவன். அதனால்தான் உன்னுடைய ஞானக் கண்களால் என்னைக் காண முடிந்தது. ஊனக்கண்களை உடையவரால் அவ்வாறு காண முடியாது. மாணிக்க மணிகளைப் போன்று, உனது உள்ளத்தினின்றும் பாடல்கள் வெளிப்பட உள்ளமையால், இனிமேல் உன்னை, மக்கள் 'மாணிக்கவாசகர்' என்று அழைப்பர்" என்று கூறி மறைந்தான்.

வாதவூரரின் பத்திமையைப் பாண்டியனுக்கு உணர்த்தவும், அவனுக்கு முத்தியளிக்கவும் சிவபெருமான் தன்னுடைய திருவிளையாடலைத் தொடங்கினான். வாதவூரருக்கும் திருப்பெருந்துறையை விட்டு நீங்க மனமில்லை. அரச பணியினின்றும் தம்மை விடுவித்துக் கொள்ள விரும்பினார். தம்முடன் வந்த ஏவலரையும் காவலரையும் திரும்பிவிட உத்தரவிட்டார். பின்னர்த் தாமும் குதிரைகளுடன் வருவதாகக் கூறினார். அனைவரையும் அனுப்பிவிட்ட வாதவூரர், எப்போதும் இறைச் சிந்தனையிலேயே மூழ்கியிருந்தார்.

மதுரை மன்னன், பொறுமையை இழந்து கொண்டிருந்தான். அவன், அன்று வரை குதிரைகள் வராமைக்குக் காரணங்கேட்டு, மாணிக்கவாசகருக்கு ஓலை அனுப்பினான். ஓலையைப் படித்த வாதவூரர், ஒன்றும் புரியாமல் தவித்தார். கொண்டுவந்த பொருளையெல்லாம் ஆலய வழிபாட்டிற்காகவும், அடியார் பசிபோக்கவும் செலவழித்துவிட்டார். பெருந்துறைப் பெருமானே கதியென்று ஓடினார்! ஓலமிட்டுக் கதறினார். எம்பெருமான், "வாதவூரனே! வருத்தமடையாதே. யான் இருக்கவும் நீ வருந்தலாமோ? குதிரைகள் வருமென மன்னனுக்கு மறுவோலையை அனுப்பிவிடு!" என்றான்.

சிவபெருமான், அன்றிரவு மாணிக்கவாசகரின் கனவில் தோன்றினான். சற்றும் தாமதியாமல் மதுரைக்குப் போகுமாறும் கூறினான். தானே குதிரைகளோடு வருவதாகவும் கூறினான். மன்னனுக்கு நம்பிக்கை ஏற்பட, ஒப்பற்ற மாணிக்கக்கல் ஒன்றினைப் பரிசாக வழங்குமாறும் அவருடைய தலைப்பக்கம் வைத்துவிட்டுச் சென்றான். அவ்வாறே மாணிக்கவாசகர் மதுரைக்குச் சென்றார்; மன்னனிடம் செய்தியைக் கூறினார்; அவனும் மகிழ்ச்சியடைந்தான்.

காலம் கடந்ததே தவிரக் குதிரைகள் வந்தபாடில்லை. மன்னனும் நம்பிக்கை இழந்து, கடுங்கோபம் கொண்டான். அவரைத் தண்டிக்குமாறும் ஆணையிட்டான். காவலரும் அவருடைய தலையில் கல்சுமக்க வைத்தனர்; கால்களிலும் கைகளிலும் இரும்புத் தகடுகளைப் பிணைத்து நெரித்தனர். உடல் தளர்ந்தாலும், அவருடைய

உள்ளம் நிலைகுலையவில்லை. சிவனருட் செம்மையால், எந்தத் தண்டனையும் அவரை ஏதும் செய்வில்லை. மதுரைச் சோமசுந்தரனை மனமுருக வேண்டினார். குதிரைகளோடு வருவதாகச் சொன்ன கோமகன் வரவில்லையே என்று ஏங்கினார். கடுஞ்சினங் கொண்ட மன்னன், கட்டி வைத்துக் கசையடி கொடுக்கவும் ஆணையிட்டான். காவலரும் அதனை நிறைவேற்றினர். மணிவாசகர் மிகவும் துன்புற்றார். அந்த நிலையில் அவர் அருளியதே 'அடைக்கலப்பத்து' என்னும் திருப்பதிகம். மணிவாசகர் பதிகத்தைப் பாடி முடிக்கவும், குதிரைகள் வந்து தோன்றின. மன்னன், தன் செயலுக்கு வருந்தி, மன்னிப்புக் கோரினான்.

தன்னுடைய அடியவனாகிய வாதவூரனைத் துன்புறுத்திய பாண்டியனுக்கு அறிவூட்ட நினைத்தான் சிவன். அரண்மனைக்குள் இலாயத்திலிருந்த பரிகளையெல்லாம் நரிகளாக்கினான். அவை முன்னரே நரிகளாக இருந்தவை. வாதவூரர் மீண்டும் துன்பத்துக்கு ஆளானார். எம்பெருமான், மாணிக்க வாசகருக்காக வைகையாற்றில், வெள்ளப் பெருக்கை உண்டாக்கினான். அதன் மூலம் மாணிக்கவாசகரை உலகுக்கு உணர்த்தவும், அரிமர்த்தன பாண்டியனுக்கு முத்தியளிக்கவும், வந்தி மூதாட்டிக்குக் கருணை காட்டவும் திருவுளம் கொண்டான் சிவபெருமான்.

வைகையில் வெள்ளம் வடிவதாகத் தெரியவில்லை. மக்கள் பலவாறு பேசிக் கொண்டனர். உடைப்பெடுத்த கரைப்பகுதிகளை, ஆங்காங்கே மக்களே சரிசெய்யுமாறு ஆணையிட்டான் மன்னன். பகுதி பகுதியாகப் பிரித்தும் கொடுத்தான். கரையில், வந்தி என்னும் மூதாட்டி வசித்து வந்தாள். பிட்டு விற்று வயிற்றைக் கழுவி வந்தாள். அவளுக்குச் சொந்தபந்தம் ஏதும் இல்லை. அவளுக்கும் கரையின் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது. அவளால் கரையை அடைக்க முடியாது. ஆளும் கிடைக்கவில்லை. தனக்கு உதவுமாறு சோமசுந்தரக் கடவுளை மனமுருகி வேண்டிக் கொண்டாள். சோமசுந்தரனும், அவளுக்குத் தானே கூலியாளாக வேடமிட்டு உதவி செய்ய வந்துவிட்டான்.

வந்தவன் வந்தியிடம், "நான் நீரினைத் தாங்கியுள்ளேன்; விறகினைச் சுமந்து விற்றிருக்கிறேன்; மண்ணைச் சுமப்பது பெரிதோ? என்னுடைய வேலைக்கு என்ன கூலி தருவாய்?" என்றான். அதற்கு அவள், "நானோ ஏழை மூதாட்டி. என்னிடம் பொருள் ஏதும் இல்லை. பிட்டு விற்றுப் பிழைப்பவள். எனவே, உனக்குக் கூலியாகப் பிட்டினைத் தருவேன். பெற்றுக் கொள்ளச் சம்மதமா?" என்றாள். 'பாட்டி! எனக்கும் பிட்டு என்றால் ஆசைதான். நீ தரும் பிட்டுக்கு நானும் மண் சுமப்பேன்" என்றான் கூலியாளாக வந்த பெருமான்.

எல்லாப் பகுதிகளும் அடைபட்டு விட்டன. வந்திக் கிழவியின் பகுதி மட்டும் அடைக்கப்படவில்லை. எனவே மன்னன், "எங்கே அந்தக் கூலியாள்? இழுத்து வாருங்கள் அவனை!" என்று ஆணையிட்டான். கூலியாளும் வந்து சேர்ந்தான். அவனுடைய முதுகில், பிரம்படியும் கொடுத்தான் மன்னன். அப்போது பாண்டியனும் தன் முதுகில் அடி விழுந்ததுபோல் உணர்ந்தான்; பாண்டிமாதேவியும் அவ்வாறே உணர்ந்தாள். அத்துடன் இல்லாமல், அனைவருமே அடி விழுந்ததாக உணர்ந்தனர்.

உண்மையை உணர்ந்த பாண்டியன், உருக்குலைந்து போனான்; உள்ளமும் பதறினான். "ஐயோ! எம்பெருமானையா நான் அடித்தேன்? பாவி நானும் இன்னும் உலவுகின்றேனே?" என்று கதறிக் கண்ணீர் சிந்தினான். சிவபெருமானும் "திருக்கோவில் திருப்பணிக்காகவும், சிவனடியார் உணவுக்காகவும் உன் பொருளை நான்தான் செலவழிக்கச் செய்தேன், நீ வாதவூரனைத் துன்புறுத்தினாய். நரிகளைப் பரிகளாக்கினேன்; பரிகளை நரிகளாக்கினேன். கோபத்தில் மீண்டும் என் அன்பனைத் துன்புறுத்தினாய். வாதவூரனின் பெருமையை உலகுக்கு உணர்த்தவே வைகையில் வெள்ளம் பெருகச் செய்தேன். கூலியாளாக வந்ததும் நானே. வந்தியும் என் அன்புக்குப் பாத்திரமானவள். நீயும் என் அன்பனே" என்றான். பிறகு வாதவூரனை விடுதலை செய்யுமாறும், அமைச்சர் பதவியை இனியும் அவன் விரும்ப மாட்டான் என்றும் கூறினான் இறைவன்.

மணிவாசகரும் தமது தல யாத்திரையைத் தொடங்கினார். சிவபெருமான் குருவாகத் தோன்றித் தம்மை ஆண்டுகொண்ட திருப்பெருந்துறைக்கு முதலாவதாகச் சென்றார். அங்குச் சிவபுராணத்தை அருளினார். இறைவனும், திருவுத்தரகோசமங்கை, திருக்கழுக்குன்றம், தில்லையம்பதி ஆகிய தலங்களுக்கு வருமாறு கூறியருளினார். அவ்வாறே சென்றார். மீண்டும் திருவிடைமருதூர், திருவாரூர், கழுமலம். திருமுதுகுன்றம், திருவெண்ணெய்நல்லூர், திருவண்ணாமலை, கச்சியம்பதி ஆகிய தலங்களுக்குச் சென்றார். திருக்கழுக்குன்றத்தில், மீண்டும் குரு வடிவில் எழுந்தருளிக் காட்சிதர வேண்டுமென்று மறைமலையானை வேண்ட, அவ்வாறே பெருமானும் அருளினான். இவ்வாறு பல தலங்கட்கும் சென்று, பதிகங்கள் பாடினார்.

மணிவாசகர், பல அற்புதச் செயல்களையும் நிகழ்த்திக் காட்டினார். ஊமைப் பெண்ணைப் பேச வைத்தமை அவற்றுள் ஒன்று. மாணிக்கவாசகரைத் தன்னிடம் அழைத்துக் கொள்ளும் வேளை வந்துவிட்டதை அறிந்தான் எம்பெருமான். அந்தணர் வடிவில் தோன்றித் திருவாசகப் பாடல்கள் அனைத்தையும் தானே எழுதிக் கொண்டான் அவன். பின்னர் அகப்பொருள் கோவை பாடக் கேட்கவும், அதனையும் பாட எழுதிக் கொண்டான். அந்தணரும் மறைந்தார். மறைந்தவர் சிவபெருமானே என்பதை உணர்ந்தார் வாதவூரர்.

போதலர்ந்து தேன்சொரியும் பொன்னம் பலத்திலுறை
வாதவூர் எங்கோமான் வாசகத்தை – ஓதிப்
பிறவிப் பிணிநீக்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவுக்குள் செல்வர் சிறந்து.

திருவாசகத் திருவமுதம்

கற்பாந்த காலங் கடவாக் கடல்கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே – அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவா சகமென்னுந் தேன்.

திருவாசகம், ஐம்பத்தொரு திருப்பதிகங்களைக் கொண்டு திகழ்வது. அதில் அடங்கியுள்ள பாடல்களின் எண்ணிக்கையில், பதிப்புகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. சுவாமி சித்பவானந்தர், அறுநூற்று ஐம்பத்தாறு என்று குறிப்பிடுகின்றார்; சிலர், அறுநூற்று ஐம்பத்தெட்டு என்கின்றனர்; அறுநூற்று அறுபத்தொன்று என்பாரும் உளர். அடியேனும், இறுதியில் உள்ளவாறு எண்ணிக்கையைக் கொண்டுள்ளேன்.

இங்கே, திருவாசகத்தின் அமைப்பினைச் சற்றே கோடிட்டுக் காட்டுவதும் நலமே. பதிகங்களின் முறை வைப்பைப் பற்றிச் சுவாமி சித்பவானந்தர் கூறுவதை அப்படியே இங்குத் தரலாம். 'சிவபுராணம் முதன்மை பெறுவது முறையே. தத்துவ விளக்கத்தில் அது தலைசிறந்து நிற்கிறது. அதைத் தொடர்ந்து வரும் மூன்று அகவல்களும் முறையாக இடம்பெற்றிருக்கின்றன. சாதனங்களின் சீரிய பகுதிகள், திருச்சதகத்தில் அடங்கியிருக்கின்றன. அவை தத்துவ விளக்கத்தைத் தொடர்ந்து வருவது தகும். நீத்தல் விண்ணப்பம் அதன்பின் வருவதிலும் பொருள் புதைந்திருக்கிறது. ஏனைய பதிகங்களெல்லாம் எப்படி வேண்டுமானாலும் இடம் வகிக்கலாம். திருவாசகத்தின் அமைப்பை, ஓர் உயர்ந்த மலைத்தொடரின் முடி மீது நடந்து போவதோடு ஒப்பிடலாம். நீண்ட மலைத்தொடரின் முடி, ஒரே ஒப்பமாயிருப்பதில்லை. செங்குத்தான சிகரங்களும், தாழ்வுற்ற மலைப்பகுதிகளும் மாறிமாறி வந்து கொண்டிருக்கின்றன. மலையின் முதுகில் மேடும் பள்ளமும் பின்னிப் பின்னிப் பொலிவது இயற்கையின்கூறு எனலாம். திருவாசகத்தில் சிவபுராணம், மகாமேரு போன்று ஒரே செங்குத்தாய் இருக்கிறது. அதைப் பூலோகக் கயிலாயம் எனலாம். ஏறக்குறைய அதே உயரத்தில் இருக்கின்றன மற்ற மூன்று அகவல்களும். பின்பு மலைத்தொடர்பு, படிப்படியாகக் கீழே இறங்கி வருகிறது. அதில் மேலே ஏறுவதும் கீழே இறங்குவதும் மாறி மாறி நிகழ்கின்றன. மனிதனுடைய ஆன்ம சாதனமும் அங்ஙனம் நிகழ்கிறது. திருவாசகத்தின் இறுதிப் பகுதி, திரும்பவும் மேல்நோக்கிப் போகிறது.'

பாரதியார், 'சொல் புதிது; பொருள் புதிது; சோதிமிக்க நவகவிதை' என்பார். கவிதைக்குச் சொல்லழகும் வேண்டும்; பொருளழகும் வேண்டும். எல்லா வற்றுக்கும் மேலாக வாழ்வியலை வகுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும்.

அந்த வகையில் திருவாசகம், சொல்லழகோடும், பொருளழகோடும், வாழ்வியலின் தொகுப்போடும் விளங்குகின்றது. மறுமை வாழ்விற்கு நம்மை இட்டுச் செல்வதாகவும், இம்மை வாழ்வில் எவ்வாறு இருத்தல் வேண்டுமென்பதைக் காட்டுவதாகவும் உள்ளதெனலாம். இது தமிழ்மறையே என்பதில் ஐயமில்லை.

பேராசிரியர் அ. நாகலிங்கம் கூற்றினையும் இங்குக் காணல் தகும். 'மனித வாழ்க்கைக்கு இன்றியமையா நூல்கள் மூன்று. ஒன்று உலகியல் நூல்; மற்றொன்று பத்தி நூல்; இன்னொன்று சாத்திர நூல். தமிழராகிய நாம், இம்மூன்றுக்கும் முறையே திருக்குறள், திருவாசகம், சிவஞானபோதம் என்னும் மூன்றையும் உயிர்த் துணையாகக் கொண்டு நாளும் படித்து வந்தால், வாழ்க்கை முழுமையாகும். அம்முழுமைக்கு நடுநாயகமாகத் திகழ்வது திருவாசகம்.' எனவே, திருவாசகம் தெய்வத்தால் ஆகிய, தெய்வத்துக்குரிய நூலே. நாம் உய்வடைய உள்ளதொரு உயர்நூலே.

துறைமங்கலம் சிவப்பிரகாசர் அருளியதும், நால்வர் நான்மணி மாலையில் இடம் பெற்றதுமாகிய நேரிசை ஆசிரியப்பா ஒன்றினைக் காண்போம்:

வலமழு உயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல குவப்ப உகந்த மாணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
ஓதுவார் மனமெனும் ஒண்குளம் புகுந்து
நாஎனும் மதகின் நடந்து கேட்போர்
செவிஎனும் மடையில் செவ்விதிற் செல்லா
உளம்எனும் நிலம்புக ஊன்றிய அன்பாம்
வித்தில் சிவமெனும் மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே.

சிவபோகம் என்னும் பயிர் விளைய, மழை பொழியும் மாணிக்கவாசகன்; அந்த மழை மேகமோ, கங்கையைத் தலையில் தாங்கிய சிவபெருமானாகிய பெருங்கருணைக் கடலினின்றும் முகந்து உருவானது; அப்படிப் பொழிந்த மழை நீரால் உண்டாகிய பெருவெள்ளமே திருவாசகம்; அந்த வெள்ள நீர் பாய்வதோ, ஓதுவார் மனமாகிய ஒண்குளம்; அதன் பிறகும் நடப்பதோ நா என்னும் மதகு; செல்லும் கால்வாயோ கேட்போர் செவி; புகும் வயலோ உளம்; ஊன்றப்பட்டதோ அன்பெனும் வித்து; தோன்றிய மென் முளையோ சிவம்; வளர்ந்து மலர்ந்ததோ கருணை; விளைந்த மெய்ப்பயனோ முத்திப்பேறு. அடடா! எத்துணை அழகு! எத்துணை அழகு! நாமும் உருவகக் கடலில் மூழ்கித் திளைக்கலாம்.

கூனம்பட்டி ஆதீனம் – மாணிக்கவாசகர் மடாலய குருமகா சந்நிதானம் அருள்திரு இராசலிங்க மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவன காண்போம்.

'உலக உயிர்கள் உய்யும் வண்ணம் சைவநெறியில், நான்கு மார்க்கங்கள் உண்டு. அவை சரியை எனும் அடிமை மார்க்கம்; கிரியை எனும் புத்திர மார்க்கம்; யோகம் என்னும் தோழமை மார்க்கம்; ஞானம் என்னும் சன்மார்க்கம். சரியை மார்க்கத்தை அப்பரடிகளும், கிரியை மார்க்கத்தை ஆளுடைய பிள்ளையும், யோக மார்க்கத்தை வன்றொண்டரும், ஞான மார்க்கத்தை வாதவூரரும் காட்டிச் சென்றனர். இவற்றில் முதல் மூன்றும் புற வழிபாடு, அகப்புற வழிபாடு. இவற்றோடு நிற்கும் ஞான மார்க்கமே, அகவழிபாடாகும். அவ்வழியைக் காட்டியவர் மணிவாசகப் பெருந்தகை. அவர் அருளித் தந்தது திருவாசகம். திரு – வீடு பேறு; வாசகம் – முதிர்ந்த நிலையில் எழுந்த வாக்கு. இறைவன் உள்நின்று உணர்த்த, அதன் பிரதிபலிப்பாக உண்டான வாக்கே திருவாசகம். ஊனையும் உள்ளத்தையும் உருக்குகின்ற தெள்ளுதமிழ்த் தெய்வ நூலாகும். அடியார் பிறர்க்கு இறைவன் அடியெடுத்துக் கொடுக்க, அதனைக் கொண்டு அவரும் பாடினர்; ஆனால், மாணிக்கவாசகப் பெருந்தகை மொழிய, அதனைக் கேட்டு இறைவனே எழுதியது திருவாசகமாகும். இதற்குமேல் இதற்குப் பெருமை என்ன வேண்டும்? மேலும், திருவாசகத்திற்கு உருகாதார், ஒரு வாசகத்திற்கும் உருகார் எனப் பெருமையுற முன்னோர் பழமொழியாகக் கூறுவர். திருவாசகத்தைப் படிக்கப் படிக்கத் தேன்சொட்டும். தேன் உயரிய மருந்து. அது தானும் கெடாது; தன்னில் சேர்ந்த பொருளையும் கெட விடாது.'

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடாகிய 'திருக்கோயில்' திங்களிதழின் மேனாள் ஆசிரியரும், சைவப் பெரும்புலவருமாகிய சிவத்திரு. ந. ரா. முருகவேள், தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் நினைவு அறக்கட்டளை சார்பில், முதன்முதலில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த சொற்பொழிவின் முதல் நாளில் ஆற்றிய திருவாசகச் சொற்பொழிவின் சுருக்கத்தையும் நாம் இங்குக் காணலாம். தலைப்பே 'திருவாசகச் சிறப்பு' ஆகும்.

'அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ்மொழியின்கண் உள்ள அரும்பெறல் சிறப்பு நூல்களுள் திருவாசகமும் ஒன்றாகத் தலைசிறந்து முதன்மைமிக்குத் திகழ்கின்றது. சைவத் தமிழ் மக்கள், திருவாசகத்தினைத் தம் உயிரினும் விழுமிய தெய்வத் திருநூலாகப் பெரிதும் மதித்துப் பேரன்புடன் ஓதிப் போற்றி வருகின்றனர். மற்றும் இது ஒப்புயர்வற்ற மிக மேலான முதற் பெருமறை நூலாகவும் விளங்கி வருகின்றது. தமிழ் கூறும் நல்லுலகு இலக்கியம், மொழி, கவிதை, சமயம், ஞானம், அனுபவம், அருள் முதலிய பலதுறைகளிலும் மிகப் பெருஞ்சிறப்பு வாய்ந்த நூலாக இதனைப் பாராட்டி மகிழ்ந்தின்புறுகின்றது!'

'திருவாசகக் கவிதைகளைப் பொருளுணர்ந்து, நெஞ்சம் நெக்குருகி அன்போடு இசைநலமும் கெழுமத் தக்கோர் பாடக் கேட்குங்கால், விளையும் இன்பத்திற்கு இணையேது? எளிய, இனிய, தெளிவான செவ்விய நடையில் சிறந்துயர்ந்த செந்தமிழ்க் கவிதைகளாகத் திருவாசகம், கற்றார் கல்லார் என்னும் இருதிற மக்களும் விரும்பிப் போற்றித் திகழும் வண்ணம், இறைவனுடைய அருட்பெருந்திறன்களை விளக்கியும், அருள் நிகழ்ச்சிகளும், மெய் வரலாறுகளும் இடையே இணைத்துத் தந்திருப்பது, இத்தெய்வத் திருநூலுக்கு அழகும் சுவையும்

நல்கிச் சிறந்து விளங்குகின்றது. அளப்பரும் நலம்பல விளைக்கும் திருவாசகம், இயற்கைக் குரல் நூலாய்ச் சிறந்த பேரிலக்கிய முதல்நூல் எனலாம்.'

'திருவாசகம், தன்னை ஓதுவார் உள்ளத்தையும், உணர்வையும், உயிரையும் எல்லாம் உருக்கிப் புனிதப்படுத்தும் திறனில், பிறநூல்களினும் தலைசிறந்து திகழ்கின்றது என்பது, சான்றோர் அனைவரும் தம் அனுபவத்திற் கண்டுணர்ந்த உண்மையாகும். ஐம்பொறிகளின் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட கடவுட் பெரும்பொருளின் அருளனுபவ நலங்களை அறிந்தும் நுகர்ந்தும் அழகொழுகும் இனிய கவிதைகளில் திருவாசகமாக மணிவாசகப் பெருமான் அருளிச் செய்துள்ளார். பிறர்க்கு எடுத்துச் சொல்வதற்கும், எடுத்துக்காட்டுவதற்கும் ஒரு சிறிதும் இயலா இறையியல் பேரின்ப அருளனுபவ நலங்களை எல்லாம், நம்மனோர்க்கு இனிது எடுத்துச் சொல்லியும், அழகுற எழுதிக்காட்டியும் விளக்குவது, திருவாசகத்தின் கவிதைப் பெருஞ்சீர் எனலாம்.'

'தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான் சிவபெருமான் ஒப்ப, நம் அருமைத் திருவாசகமும் தப்பாமே ஓதுவார் நெஞ்சுருக்கும் தன்மை வாய்ந்தது. ஓதுவார் கன்னெஞ்சமெலாம் கரைந்துருகச் செய்யும் பெற்றிமை மிக்கது திருவாசகம். உள்ள நெகிழ்ச்சி உண்டாக்கி, உருக்கம் விளைவித்தற்கண் வேறுபிற எந்நூலும் திருவாசகத்திற்கு இணையாகாது என்பது, அறிஞர் அனைவரின் ஒப்ப முடிந்த முடிபு. திருவாசகத்தின்கண் காணப்படும் சிறப்பியல்புகளுள், அயரா அன்புத் திறனும் ஒன்றாகும். அன்பே உயிருணர்ச்சிகள் அனைத்திலும் தலைசிறந்ததும், தெய்வத்தன்மை வாய்ந்ததுமாகத் திகழ்கின்றது. இத்தகைய அன்புணர்ச்சியினையே முதலும், இடையும், முடிவுமாம் அடிப்படைப் பொருளாகக் கொண்ட நூல் திருவாசகம் எனத் திகழ்கின்றது.'

'திருவாசகத்தின் பொருள், அன்பே வடிவான சிவம்; திருவாசகத்தைப் பாடியவர், அன்பின் பிழம்பே எனத் தகையர் மாணிக்கவாசகர்; திருவாசகப் பாடல்கள், அன்புணர்ச்சி பெருக்கெடுத்தோடும் அரும்பெறல் கவிதை வெள்ளம். திருவாசகம் போல் அன்பினை வலியுறுத்திப் பலபடியாக எடுத்து மொழியும் நூலைக் காண்பதரிது. திருவாசகம் தோன்றிய காலந்தொட்டு, அதனைப் போற்றாச் சான்றோர் பெருமக்கள் இல்லை. பொருள் பொதிந்த கருத்துகளிலும், மன உணர்ச்சிகளை வெளியிடும் இயல்புண்மைத் திறனிலும், அயரா அன்பு கெழுமிய கள்ளமற்ற குழந்தை உள்ளத்திலும் திருவாசகத்திற் சிறந்த பிறிதொரு நூல், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை. உலக வாழ்வில் இடைவிடாது அனுபவிக்கும் துயர் அழுத்தத்தால் தடுமாறி நிற்கும் உயிர்கள், கடைசியாகத் தாம் துன்பம் நீங்கி இன்பம் ஓங்க அடையத்தகும் அரணாகத் திருவாசகம் திகழ்கின்றது. தமிழ் இலக்கியங்களில் தலைசிறந்ததாய், இறையருள் இன்ப அனுபவநலத்தின் மிகச்சிறந்த உயர்ந்த வெளிப்பாடாய், அரும்பெறற் கவிதை அமிழ்த இன்ப நூலாகத் திருவாசகம் மிளிர்கின்றது.'

'பாடல்களின் யாப்பமைப்பு, நம்மைப் பெரிதும் கவர்வனவாக உள்ளன. பாவும் பாவினங்களும் பரவி வந்துள்ளன. கலிவெண்பா, நிலைமண்டில ஆசிரியப்பா,

இணைக்குறள் ஆசிரியப்பா, கட்டளைக் கலித்துறை, எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், கலிநிலைத்துறை, கொச்சகக் கலிப்பா, தரவு கொச்சகக் கலிப்பா, நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா, கலித்தாழிசை, நேரிசை வெண்பா, கலவைப் பாட்டு, பன்னிருசீர் விருத்தம் ஆகியவை அமைந்துள்ளன. இவ்வாறாகச் சிவனையே பாடும் சித்தம் அழகியராக்க வல்லது திருவாசகம்.'

சிவநெறி வளர்வதற்கும், அவநெறி தளர்வதற்கும் உரிய நூல் திருவாசகம்; அருள் நிறையவும், தெருள் மறையவும் தெரிகின்ற நூல் திருவாசகம்; சிற்றின்பம் தவிர்த்துப் பேரின்பம் காணப் பெரிதும் உதவும் நூல் திருவாசகம்; மண்சுமந்த வரலாற்றைச் பண் சுமந்து காட்டும் நூல் திருவாசகம்; காலத்தை வீணாக்காமல், சீலமார் சிவத்தைச் சிந்திக்க வைப்பது திருவாசகம்; பொய்ப்பொருள் தூற்றியே மெய்ப்பொருள் போற்றிடச் செய்வது திருவாசகம்; இவன் அவன் எவன் என்றிடில், எல்லாம் சிவனே என்றிடும் திருவாசகம்.

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே.

இப்பாடல், வடலூர் வள்ளல் பெருமானாகிய இராமலிங்க அடிகளால் அருளப் பெற்றது. வான் கலந்தவர் மாணிக்கவாசகர்; இவர்தம் வாசகத்தைத் தாம் கலந்து பாடுகின்றார் வள்ளலார். அவ்வாறு பாடுகையில் அந்தப் பாடல் எவ்வாறு இருந்தது தெரியுமா? கரும்புச்சாற்றிலே தேன் கலந்தது; பால் கலந்தது; செழுமையான கனியின் இனிய சுவை கலந்தது. எல்லாம் கலந்ததோடு, அவர் உடலில் கலந்து, உயிரிலும் கலந்து, தெவிட்டாத தெள்ளமுதமாக விளங்கியதாம்.

இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம். 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!' என்றார் திருமூலர். வாதவூரண்ணலையும் இறைவன் நன்றாகப் படைத்தனன். அவரும் நன்றாகத் தமிழ் செய்தார். உருக்குமொரு வாசகத்தை நாமும் உருகி உருகி, அதன் சுவையைப் பருகிப் பருகிப் படித்துத் திளைப்போம். உய்வடைய உள்ள ஒரே வாசகம் 'திருவாசகம்' என்பதைத் தேர்ந்து தெளிவோம்.

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

திருவாசகம்

1. சிவபுராணம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

சிவனது அநாதி முறைமையான பழைமை

(கலிவெண்பா)

இன்றைய ஆவுடையார் கோயிலே அன்றைய திருப்பெருந்துறை. சிவபெருமான், இவ்வூர்க் குருந்தமர நிழலில் மாணிக்கவாசகருக்குக் குரு வடிவில் காட்சிதந்து, மெய்ப்பொருளை உணர்த்தினார். அதன் காரணமாகப் பெருமகிழ்வு கொண்ட மாணிக்கவாசகர், சிவபெருமானின் பெருஞ்சிறப்பைப் பத்திமை கொண்டு பாடியருளினார். அவ்வாறு அருளியதே தொண்ணூற்றைந்து அடிகளைக் கொண்ட சிவபுராணம்.

திருச்சிற்றம்பலம்

1

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க

ஐந்தெழுத்து மந்திரமாகிய 'நமசிவாய' என்பது, ஓயாமல் ஒலித்துவாழ்வதாகுக! ஒப்பற்ற தலைவனாகிய சிவபெருமானின் ஈடிலா இணையடிகள் என்றும் வாழ்வதாகுக! கண்ணிமைக்கும் நேரமும் எனது உள்ளத்திலிருந்து அகலாதவனுடைய திருவடிகள் வாழ்வதாகுக! 'திருக்கோகழி' என்னும் திருத்தலத்தினை ஆட்சி செய்து அருளிய சிவகுருநாதனின் மலரடிகள் வாழ்வதாகுக! சிவாகம நூற்பொருளாய் நிலைபெற்று, அவ்வாகம நெறியினைப் பின்பற்றும் அடியவரை அணுகி அருள் செய்பவனுடைய பொன்னடிகள் வாழ்வதாகுக! அந்தப் பரம்பொருள், தனக்குத்தானே ஒருவனாகவும் பலராகவும் விளங்குபவன். அவ்வாறு விளங்குபவன், குருவாகவும் கடவுளாகவும் இருப்பவனே. அந்தப் பொன்னார்மேனியனின் பூங்கழல்கள் வாழ்வதாகுக!

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

எனது வினைப்பயனால் தொடர்ந்து வரக்கூடிய உள்ளத்தின் ஆணவவேகத்தை முழுவதுமாக ஒழித்து, என்னை ஆட்கொண்டருளிய மன்னவனின் இணையடிகள் வெல்வதாகுக! பிறவாமைக்கு வழிசெய்யப் பிறப்பெனும் தன்மையைப் போக்குகின்ற சிவபெருமானின் சிலம்பணிந்த திருவடிகள் வெல்வதாகுக! தன்னிடம் அன்பில்லாதவராயும், தன்னை நெருங்காதவராயும் உள்ளவர்க்குத் தொலைவில் இருப்பவனுடைய மெல்லிய மலரடிகள் வெல்வதாகுக! தம்முடைய இரண்டு கைகளையும் குவித்துத் தன்னை வணங்கும் அடியவரின் அன்புகண்டு, உள்ளம் மகிழ்கின்ற தலைவனுடைய பொன்னடிகள் வெல்வதாகுக! தம்முடைய தலைகளால் தன்னைப் பணிவுடன் வணங்கும் அடியவரை உயர்வடையச் செய்யும் பெருமையுடையவனுடைய பூங்கழல்கள் கொண்ட பேரடிகள் வெல்வதாகுக!

ஈசனடி போற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி

எல்லாம் வல்ல – யாவர்க்கும் முதல்வனாகிய கடவுளின் திருவடிகளுக்கு வணக்கம். எமக்குத் தந்தையாக விளங்குபவனுடைய திருவடிகளுக்கு வணக்கம். ஒளிவடிவினனாகிய இறைவன் திருவடிகளுக்கு வணக்கம். நலஞ்செய்ப வனாம் சிவபெருமானின் சிவந்த திருவடிகளுக்கு வணக்கம். அடியவருடைய ஆழ்ந்த அன்பிலே நிலைபெற்று விளங்கும் தூயவனின் திருவடிகளுக்கு வணக்கம். மாயச் செயலால் உண்டாகின்ற பிறப்புப் பிணியைப் போக்குகின்ற மன்னவனின் திருவடிகளுக்கு வணக்கம். பெருமைமிக்க திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் விளங்கி, அருள்புரியும் நம்முடைய தெய்வத்தின் திருவடிகளுக்கு வணக்கம்.

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

எப்போதும் தெவிட்டுதல் இல்லாத பேரின்பப் பேற்றினைத் தன்னுடைய அடியவர்க்கு வழங்கிடும் மலைபோன்றவனுக்கு வணக்கம். சிவபெருமானாகிய அவன் என்னுடைய எண்ணத்தில் என்றும் நிலைபெற்றவன் என்பதனால், அந்தப்

பரம்பொருளின் திருவருள் பேற்றினாலே அவனுடைய திருவடிகளைப் பணிந்து, அந்தப் பேரருளாளனின் உள்ளம் இன்புறுமாறு 'சிவபுராணம்' என்னும் சிவனாரின் பழைய வரலாற்றை, என்னுடைய முன்னை வினைகள் யாவும் என்னைவிட்டு விலகுமாறு அடியேன் கூறப்புகுவேன்.

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

நெற்றிக்கண்ணனாகிய சிவபெருமானின் திருவருட் பார்வை எனக்கு வழிகாட்டவும், அந்த வழியே யானும் வந்தடைந்து, சிந்தித்துப் பார்ப்பதற்கு எட்டாத அழகுமிக்க அவனுடைய திருவடிகளை வணங்கி, விண்ணுலகம் யாவும் நிறைந்து, மண்ணுலகம் யாவும் நிறைந்து, அவற்றுக்கப்பாலும் பொருந்தி மேம்பட்டு விளங்குபவனே! பொலிகின்ற சுடரொளியாய் உள்ளவனே! அளவுகளை எல்லாம் கடந்து, எல்லை என்பது இல்லாதவனே! உன்னுடைய புகழ்ச் சிறப்பை, மிகக் கொடிய தீவினையுடைய அடியேன், புகழ்ந்து பேசும் வழியென்று ஒன்றினை அறிய மாட்டேன்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

புல்லாகியும், பூண்டாகியும், புழுவாகியும், மரமாகியும், பல்வேறு விலங்குகளாகியும், பறவையாகியும், பாம்பாகியும், கல்லாகியும், மனிதராகியும், பேயாகியும், பூதகணங்களாகியும், கொடிய அசுரராகியும், முனிவராகியும், தேவராகியும், நடவாநின்ற இந்த நிலைப்பொருள்களும் இயங்கு பொருள்களும் ஆகிய இருவகைப்பட்ட பொருள்களுக்குள்ளே,

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்தில் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

எல்லாப் பிறப்புகளிலும் அடியேன் பிறந்து, மிகவும் மெலிந்துவிட்டேன். எம்முடைய பெருமானே! மெய்யாகவே உன்னுடைய பொன்னார் திருவடிகளைக் கண்ணாரக் கண்டு, இப்பொழுது வீடுபேற்றினை அடைந்தேன். அடியேன் கடைத்தேற என்னுடைய மனத்துக்குள் பிரணவமாய் நிலைத்த மெய்ப்பொருளே! தூய்மையானவனே! வெள்ளேற்று வாகனனே! மறைகள் எல்லாம் 'ஐயா' என்றபடி வணங்க, உயர்ந்தும் ஆழ்ந்தும் அகன்றும் விளங்குவதான நுட்பமானவனே!

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

வெப்பமாய் விளங்குபவனே! தட்பமாய் விளங்குபவனே! ஆன்மவடிவினனாம் தூய்மையானவனே! இந்த மண்ணுலகில், பொய்யாகத் தோன்றியவை அனைத்தும் என்னை விட்டகன்று போகுமாறு எழுந்துவந்து அருள்செய்து, மெய்யறிவாகி ஒளிவீசுகின்ற மெய்யொளியானவனே! எவ்வித அறிவும் இல்லாதவனாகிய அடியேனுக்குப் பேரின்பப் பேருருவான பெருந்தலைவனே! அறியாமை தன்னை என்னுடைய உள்ளத்திலிருந்து அகற்றுவிக்கும் நல்லறிவின் வடிவே!

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

தோற்றம், எல்லை, முடிவு ஆகிய மூன்றும் இல்லாதவனே! உலகங்கள் எல்லாவற்றையும் படைப்பாய்; அவற்றைக் காப்பாய்; அவற்றை அழிப்பாய்; அவற்றுக்கு அருள்புரிவாய். பிறவிப் பெரும்பிணியைப் போக்குவாய்; அடியேனை உன்னுடைய அடியவர் கூட்டத்துள் புகச்செய்வாய். உன்னை அடைவதற்குரிய சிறந்தவழி காட்டுபவனே! உன்னை விரும்பி வணங்காதவர்க்குத் தொலைவில் இருப்பவனே! விரும்பி வணங்க வந்தவர்க்கு விரைவில் அருள்பவனே! மொழிக்கும் மனத்துக்கும் எட்டாமல் விளங்குகின்ற மறைபொருள் ஆனவனே!

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

கறந்த பாலில், கரும்புச் சாற்றையும் நெய்யையும் கலந்தது போல, மேலான அன்புடைய அடியவர்தம் எண்ணத்தில், தேன்போலக் கசிந்து விளங்கி, எடுத்த பிறப்புகளைக் கெடுக்கின்ற எங்களுடைய பெருமானே! ஐந்து தொழில்களுக்கு மாகிய ஐந்து உருவங்களைப் பெற்றவனே! வானவர் உன்னைப் போற்றிச் செய்தபோதும், அவர்க்குத் தோற்றமளிக்காமல் மறைவாய் நின்றவனே! எம்முடைய தலைவனே! கொடிய வினையுடையேனாகிய என்னை,

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

மறையுமாறு மூடிக்கொண்ட மாயமாம் இருட்டினை, நல்வினைப்பயனும் தீவினைப்பயனும் என்னும் அரிதான பெரும்பாசக் கயிற்றினால் பிணித்து, வெளியில் தோலினால் மூடி, உடல் முழுக்க உள்ளே புழுவையும் அழுக்கையும் மறைத்து, மலம் சொரிகின்ற ஓட்டைகளாம் ஒன்பது வழிகளைக் கொண்ட உடம்பாகிய குடிசையினைத் தந்து, அதுதான் வருந்துமாறு ஐந்து புலன்களும் அதற்கு வஞ்சகத்தைச் செய்ய,

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

அதன் காரணமாக யான்பெற்ற விலங்கின் தன்மைகொண்ட உள்ளத்தால், தூயவனே! உனக்காக உள்ளத்தில் அன்புகலந்து, நெஞ்சம் கரைந்து நெக்குருகும் நற்செயல்தான் இல்லாத சிறியேனாகிய என்பொருட்டு நீதான் மனங்கொண்டு அருள்செய்து, நிலவுலகின்மேல் எழுந்தருளி, உன்னுடைய நெடிய திருவடிகளை எனக்குக் காட்டி, நாயினும் இழிந்தவனாய் இருந்துவந்த அடியேனுக்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

தாயைக் காட்டிலும் மேலான கருணையுடையவனாகிய மெய்ப்பொருள் ஆனவனே! குற்றமற்ற ஒளிபடர்ந்த மிக்கொளி ஆனவனே! புகழார்ந்த பெருமானே! தேன்போன்ற சுவைமிக்க அமுதமானவனே! சிவபுரத்தை உறைவிடமாகக் கொண்டவனே! உலகத்துத் தொடர்பாகிய பந்தபாசம் என்னும் பற்றினை விலக்கி, ஆட்கொண்டு கடைத்தேற்றும் குருவானவனே! அன்புகொண்டு அருள்செய்து, எனது உள்ளத்திலுள்ள வஞ்சக எண்ணம் கெடுமாறு,

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

பெயராது நிலைபெற்ற அரும்பெரும் அருள்வடிவப் பேராறே! உண்ணத் தெவிட்டாத உயரமுதமே! எல்லையற்ற பெருமிதமுடைய பெருமானே! ஆராய்ந்தறியாதவரின் உள்ளத்தினுள், அவரறியாமல் மறைவாய் விளங்கிநிற்கும் ஒளிமயமானவனே! எனது உள்ளத்தை நீராக உருகச் செய்து, என்னுடைய அருமையான உயிரென நிலைபெற்றவனே! உனக்கென்று ஓர் இன்பமும் ஒரு துன்பமும் இல்லாதவனே! அன்புகாட்டும் அடியவர்க்காக அவ்விரண்டையும் உடையவனே!

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

மெய்யன்பருக்கு மெய்யன்பாய் உள்ளவனே! உலகின் அனைத்துப் பொருள்களுமாய் விளங்கி, அவையனைத்தும் அல்லாதவனுமாயும் விளங்கி நிற்கும் ஒளியுருவினனே! நெருங்கிய இருள் உருவினனே! யாவர்க்கும் எட்டாத பெருமிதம் உடையவனே! முதலானவனே! முடிவானவனே! நடுவானவனே! அவை மூன்றும் அல்லாதவனாய் உள்ளவனே! அடியேனை உன்பால் பிணித்து, ஆட்கொண்டருளிய எம்முடைய தந்தையாகிய பெருந்திருவே! கூரிய மெய்யறிவு கொண்டு தேர்ந்து தெளிந்து உணர்பவருடைய எண்ணத்தினாலும்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

நோக்குவதற்கு அரிதாகிய நோக்கானவனே! நுட்பமாய் உணர்வதற்கு அரிதாகிய மிகுநுட்ப உணர்வானவனே! மறைதலும் தோன்றுதலும் அவற்றின் தொடர்புகளும் இல்லாத அறத்தின் உருவானவனே! எல்லா வகைகளிலும் எம்மைக் காக்கின்ற இறைவனே! காண்பதற்கு அரிதாகிய பெருஞ்சுடரே! அன்பருக்கு அருள்கின்ற பேரின்பப் பேராறே! எம்முடைய தந்தையே! உயர்வாகி நிலைபெற்ற காட்சிதரும் ஒளிச்சுடராகி, நாவசைத்துக் கூறவியலாத நுட்ப உணர்வாகி,

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

மாறுபாடுகளைக் கொண்டதாம் இந்த மண்ணுலகில், வெவ்வேறு வடிவங்களாய் வந்து, மெய்ஞ்ஞானியரால் உணரக் கூடிய உறுதிப்பொருள் ஆனவனே! தெளிவுக்குள்ளும் தெளிவானவனே! எனது நெஞ்சின் நினைவில், ஊற்றுப் பெருக்கான உண்பதற்கினிய அமுதமானவனே! அடியேனை அடிமையெனக் கொண்டவனே! வேறுபட்ட விகாரங்களையுடைய ஊனெனும் இந்த உடம்பில், உறைந்து கிடப்பதற்கு யான் உள்ளம் பொறுக்கமாட்டேன். எம்முடைய ஐயனே! சிவபெருமானே! 'ஓ' என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே!
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

உன்னிடம் விண்ணப்பம் செய்து, உன்னைவணங்கிப் புகழ்பாடி இருந்ததன் பயனால், தம்மிடம் குடிகொண்டிருந்த பொய்ம்மைகள் அழிந்து, மெய்ஞ்ஞானம் பெற்று மெய்யடியார் ஆனவர், மீளவும் இந்த மண்ணுலகில் தோன்றி வினைப்பயன் காரணமாக வரும் பிறப்பைச் சாராமல், வஞ்சனைகளைச் செய்யும் ஐம்புலன்களுக்கு உறைவிடமாகிய உடம்பினால் உளவாகும் பாசத் தொடர்புகளை ஒழிக்க வல்லவனே! நள்ளிருளில் நடனம் தேர்ந்தாடும் தலைவனே! தில்லையம்பதியில் கூத்தாடுபவனே! தென்பாண்டி நாட்டை உடையவனே!

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

துன்பந்தரும் பிறவியை ஒழிப்பவனே! ஓவென்று கூக்குரலிட்டுக் கூறுவதற்கு அரியவனைப் புகழ்ந்து கூறி, அவனுடைய திருவடிகளில் சாற்றிய சிவபுராணத்தின் பொருளை உளமார உணர்ந்து கூறவல்லவர், சிவபுரத்தில் உறையும் சிவபெருமானின் திருவடியின்கீழ் திளைத்து, யாவரும் வணங்கிப் போற்றுமாறு சென்று சிறந்த வாழ்வினைப் பெறுவர்.

திருச்சிற்றம்பலம்

2. கீர்த்தித் திருவகவல்

(தில்லையில் அருளியது)

சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை

(நிலைமண்டில ஆசிரியப்பா)

மாணிக்கவாசகர், தம்மைத் தலைவியாகவும் சிவபெருமானைத் தலைவனாகவும் கொண்டு பாடியது. இதனை நாயகன் – நாயகி பாவனை என்பர். தோழி தலைவியிடம், "உன் தலைவன் பரத்தையரோடு தொடர்புடையவன்" என்கிறாள். அதனைக் கேட்ட தலைவி தோழியிடம், "என் தலைவன் இந்த இந்தப் பெருமைகளுக்கு உரியவன்" என்று எடுத்துரைக்கிறாள். அடியவர் பிறருடன் சிவபெருமான் கொண்ட தொடர்பே பரத்தையர் தொடர்பாக இங்குக் கூறப்பட்டுள்ளது. தில்லையுள் கூத்தன் திருவீதியுலா வந்தபோது, மாணிக்கவாசகர் இந்த அகவலைப் பாடியதாகக் கூறுவர். ஆசிரியப்பாவே அகவற்பா எனப்படும். அவ்வாறு அருளியதே, நூற்று நாற்பத்தாறு அடிகளைக் கொண்ட இந்தக் கீர்த்தித் திருஅகவல்.

திருச்சிற்றம்பலம்

2

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகும்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்

தில்லையம்பதி என்னும் தொன்மையான ஊரில், திருநடனம் ஆடிய திருவடிகளை உடையவன். உலகின் பலவகை உயிர்கள் அனைத்தினுள்ளும் நிறைந்தவனாகி, எல்லையற்ற பல்வேறு குணங்கள் அழகுற விளங்கி, இந்த மண்ணுலகிலும் அந்த விண்ணுலகிலும் மற்றுமுள்ள தேவருலகிலும் பொருந்திய கலைகளைப் படைத்தும், அவற்றை அழித்தும்,

என்னுடை இருளை ஏறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்

அடியேனுடைய மனவிருளை முற்றுமாக அகற்றியும், தொண்டர்தம் மனங்களில் அன்பு பொங்கக் குடியிருப்பெனக் கொண்டுள்ள இலக்கும், அந்த

இலக்கினால் உண்டாகும் பெருமையும் நிலைபெற்றதான பெருமலையாகிய மகேந்திரத்தில் இருந்துகொண்டு திருவாய் மலர்ந்தருளிய ஆகமங்கள் இருபத்தெட்டினை உண்டாக்கி அருள்செய்தும்,

கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புறவு எய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டும் இன்னருள் விளைத்தும்
இராத வேடமொடு கிஞ்சுக வாயவள்

திருக்கல்லாடம் என்னும் திருத்தலத்தில், பெண்ணின் நல்லாளாகிய பார்வதி யம்மையோடு ஒருமித்து, அடியவர் அனைவரும் ஆர்வமொடு வழிபட இனிதாக எழுந்தருளியும், பஞ்சசயனம் என்னும் திருத்தலத்தில், பால்போலும் இனிமையும் தூய்மையும் கொண்ட மொழியுடைய உமையாளொடும், குறையாது நாள்தோறும் பெருகுகின்ற தன் கருணை தோற்றியும், வேட்டுவ வடிவத்துடன் முள்முருக்க மலர் போன்றதாகிய சிவந்த வாயினை உடைய உமையவளின்

விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகிக் கெளிறது படுத்தும்
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்

ஒன்றையொன்று பொருந்துகின்ற மார்பகத்தின் அழகிய தடத்தில் மூழ்கியும், மீனவராகி வலைவீசிக் கெளிற்று மீன்களைப் பிடித்தும், பெருவிருப்பம் உடையதாகிய ஆகமங்களைக் கடலினின்று கண்டெடுத்தும், மேலும் அந்த ஆகமங்களை மகேந்திர மலையிலிருந்து கொண்டு தன்னுடைய ஐந்து முகங்களாலும் ஓதியும்,

நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அந்தமில் ஆரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பின தாகி
ஏறுடை ஈசனிப் புவனியை உய்யக்

நந்தம்பாடி என்னும் திருத்தலத்தில், நான்கு மறைகளின் நாயகனாகி, முடிவென்ப தில்லாத ஆசாரியனாய் விளங்கி அருள்புரிந்தும், மாறுபட்ட வடிவங்களும், மாறுபட்ட இயல்புகளும் ஒரு கோடித் தன்மைகளை உடையவனாகி, வெள்ளேற்றை ஊர்தியாகக் கொண்ட சிவபெருமான், இந்த நிலவுலகத்தைக் கடைத்தேற்றத்

கூறுடை மங்கையுந் தானும் வந்தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டேற் றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்

தன்னுடைய மேனியின் இடப்பக்கத்தை உடைய உமையம்மையாரும் தானுமாக எழுந்தருளி, மேலை நாட்டிலிருந்து பரிகளை ஓட்டிக்கொண்டு, அழகுபடப் பரி சாரதியாய்த் தான் எழுந்தருளி வந்தும், திருவேலம்புத்தூர் என்னும் திருத்தலத்தில், இடப வாகனனாய் விளங்கித் தனது திருமேனியின் திருப்பொலிவைக் காட்டிய தன்மையும்,

தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்

சாந்தம்புத்தூர் என்னும் திருத்தலத்தில், வில்லினால் போர் செய்த வேடன் ஒருவனுக்குக் கண்ணாடியில் திருக்காட்சி தந்த பயனும், முன்னை நாளில், மொக்கணீச்சுரம் என்னும் திருத்தலத்தில், முழுமையும் நெருப்பெனச் சிவந்த தனது திருமேனியை அழகு பொருந்தக் காட்டிய பழைமையும், திருமாலினாலும், நான்முகனாலும் அளந்தறிய முடியாத தன்மையும் கொண்டவன்.

நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டியன் தனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனகம் இசையப் பெறாஅது
ஆண்டான் எங்கோன் அருள்வழி யிருப்பத்

அடியேனுக்காகக் காட்டுநரிகளை நாட்டுப்பரிகளாகச் செய்தருளிய நலமும், தன்னுடைய அழகு பொருந்திய திருவடிகளின் மூலம் அன்று ஆட்கொண்டு அருள்செய்ய அரிமர்த்தன பாண்டிய மன்னனுக்குக் குதிரைகளை விற்று, அவற்றுக்கு ஈடாக மிகுபொன்னை அவன் தந்தபோது, அதனை விரும்பப் பெறாமல் அவனை அருள்வழியில் செலுத்துவதற்காக ஆண்டுகொண்ட எம் தலைவன்,

தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி ஆண்டுகொண் டருளி
இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்

பாண்டியனின் உள்ளத்தைத் தூண்டும் வகையில், சோதியுருவில் தோற்றமளித்த பழைமையும், அறவோன் ஆகி, என்னை ஆட்கொண்டவனாகி, இந்திரசாலம் என்னும் வித்தையினைக் காட்டியருளிய தன்மையும், திருவாலவாய் என்னும் திருத்தலமாகிய பெருமை வாய்ந்ததும் பெருநகரமாய் விளங்குவதுமாகிய மதுரை மாநகரிலிருந்து சுந்தர சாமந்தன் என்னும் படைத்தலைவனாகிய அடியவனுக்குக் குதிரைச் சேவகனாய் ஆகிய தன்மையும்,

ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய இயல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்

அந்த மதுரை மாநகரில், 'வந்தி' என்னும் அடியவளுக்காக உரிமையுடன், வையையாற்றின் கரையினை அடைப்பதற்காகத் தன் தலைமீது மண்ணைச் சுமந்த தன்மையும், 'திருவுத்தரகோசமங்கை' என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்து அறிவுத் திருக்கோலம் காட்டிய தன்மையும், 'திருப்பூவணம்' என்னும் திருத்தலத்தில் அழகுமிக்கு விளங்கி,

தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்

அங்குத் தூய திருமேனியைக் காட்டிய பழைமையும், திருவாதவூர் என்னும் திருத்தலத்தில், வந்து இனிதாக அருள் செய்து, திருவடிகளின் சிலம்பொலியைக் காட்டிய குணமும், செல்வம் நிரம்பிய திருப்பெருந்துறைக்குத் தலைவனாகி, மேலான ஒளியில் மறைந்த கள்ளத் தன்மையும்

பூவலம் அதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசுந்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகியு நன்மையும்
விருந்தின் னாகி வெண்கா டதனில்

திருப்பூவலம் என்னும் திருத்தலத்தில், அழகுடன் விளங்கி அடியவர்க்கு அருள்செய்து, அவர்தம் தீவினைகளைக் கெடுத்து நலஞ்செய்த பாங்கும், தண்ணீர்ப் பந்தலைப் போரில், இராசேந்திர பாண்டியனை வெற்றிபெறச் செய்து, நல்லநீர்த் தொண்டனாயிருந்த நலமும், திருவெண்காடு என்னும் திருத்தலத்தில், சிறுத்தொண்ட நாயனாருக்கு விருந்தினனாக விளங்கி,

குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி அருளிய அதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்

குருந்த மர நிழலில் முன்னை வீற்றிருந்த கருதுகோளும், திருப்பட்டமங்கை என்னும் திருத்தலத்தில், அழகு பொருந்தி இருந்தவாறு ஆங்கே எண்வகைச் சித்திகளையும் வெளிப்படுத்திய அந்நிலையும், வேடுவனாகி வந்து, விரும்பிய வடிவங்களைப் பெற்றுக் கானகத்தில் ஒளித்த வஞ்சகத் தன்மையும்,

மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரில் உகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்

தனது திருமேனியைப் பலவாறு காட்டியதுடன், விரும்பியவாறு வடிவங்கொண்டு, தகுதிமிக்க ஒருவனாக மாறிய விதமும், திருவோரியூர் என்னும் திருத்தலத்தில், மிகவும் விரும்பி இனிதாக எழுந்தருளி இந்தப் பூமியில் சிறுகுழந்தையாக வடிவெடுத்த தன்மையும், திருப்பாண்டூர் என்னும் திருத்தலத்தில், அடியவர் திருக்கூட்டம் நெருங்க வீற்றிருந்தும்,

தேவூர்த் தென்பால் திகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனில் ஈண்ட இருந்து

திருத்தேவூர் என்னும் திருத்தலத்தின் தென்பகுதியில் விளங்குகின்ற தீவில், பேரரச அழகுருவம் எடுத்தருளிய கருதுகோளும், தேன் சொரியும் மலர்ச்சோலைகளைக் கொண்ட 'திருவாரூர்' என்னும் திருப்பதியில், மெய்யறிவை வழங்கிய நலமும், 'திருவிடைமருதூர்' என்னும் திருத்தலத்தில், அடியவர் திருக்கூட்டத்துடன் நெருங்க இருந்து,

படிமப் பாதம் வைத்தஅப் பரிசும்
ஏகம் பத்தில் இயல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்

மெல்லிய பொன்னடிகளைச் சூட்டியருளிய அந்தத் தன்மையும், 'திருவேகம்பம்' என்னும் காஞ்சித் திருநகரில், இயற்கைத் திருவுருவாய் விளங்கி, இடப்பாகம் உமையம்மைக்கு என்றாகி, உமையொருபாகனாய் ஆகிய தன்மையும், 'திருவாஞ்சியம்' என்னும் திருத்தலத்தில், சிறப்புடன் விளங்கியவாறு மணம் மிகுந்த கூந்தலையுடைய உமையம்மையோடு எழுந்தருளி உள்ளம் உவகை கொண்ட பாங்கும்,

சேவக னாகித் திண்சிலை ஏந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியும்

போர்வீரனாக விளங்கிப் பலம் வாய்ந்த வில்லைக் கையிலேந்திப் பலவகையான பாவனைகளைக் காட்டிய தன்மையும், 'திருக்கடம்பூர்' என்னும் திருத்தலத்தில், அடியவர் அனைவரும் அருள்பெறுமாறு வீற்றிருந்தும், 'திருவீங்கோய் மலை' என்னும் திருத்தலத்தில், அழகிய காட்சி தந்தும், 'திருவையாறு' என்னும் திருத்தலத்தில், ஆதிசைவ அந்தணனாகத் திருக்கோலம் புரிந்தும்,

துருத்தி தன்னில் அருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனில் அறம்பல அருளியும்

'திருத்துருத்தி' என்னும் திருத்தலத்தில் விருப்பத்துடன் வீற்றிருந்தும், 'திருப்பனையூர்' என்னும் திருத்தலத்தின்மீது விருப்பமுடையவன் ஆகியும், 'திருக்கழுமலம்' என்னும் சீர்காழித் திருத்தலத்தில், திருக்காட்சி தந்தும், 'திருக்கழுக்குன்றம்' என்னும் திருத்தலத்தில் தவறாமல் விளங்கியும், 'திருப்புறம்பயம்' என்னும் திருத்தலத்தில், தருமங்கள் பலவற்றை அருளியும்,

குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்

'திருக்குற்றாலம்' என்னும் திருத்தலத்தில், குறுமுனி வேண்டச் சிவலிங்க அடையாளமாக விளங்கியும், முடிவென்பது இல்லாத சிறப்புடைய தணலுருவத்தை ஒளித்து, அழகுமிக்க கோலத்தையுடைய ஒப்பிலா முதன்மை வடிவம் பெற்று, இந்திர ஞாலம் போலத் தோன்றியருளி, எவரெவர் இயல்புகளையும் தனக்குள் அடக்கிக் கொண்டு,

தானே யாகிய தயாபரன் எம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்

தானாகிய அவனே முழுமுதற் கடவுளாகி, கருணை உடையவனாகிய எம்முடைய இறைவன், 'சந்திரதீபம்' என்னும் திருத்தலத்தில், நூலாசிரியனாக விளங்கி, விண்ணுலகத்திலிருந்து இறங்கியருளி, அழகு கொலு வீற்றிருக்கும் 'திருப்பாலைவனம்' என்னும் திருத்தலத்தில், அழகு பொருந்திய நிலையோடு நெருங்கியிருந்து அருள் வழங்கியும், மந்திரப் பெருமலையாகிய மகேந்திர மலையை இருப்பாகக் கொண்டவன்.

அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்
எந்தமை ஆண்ட பரிசது பகரின்
ஆற்றல் அதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை யொருங்குடன் அறுக்கும்

முடிவில்லாத சிறப்பும் அருளும் தன்மையும் உடைய பெருமிதமானவன். எம்மை ஆண்டு கொண்ட தன்மையைச் சொல்வதானால், பெருவலியுடைய அழகு பொருந்திய திருமேனி வடிவத்தைத் திருநீற்றுக் கோடுகளோடு உயர்வாகக் காட்டியும், பிறவியெனும் அந்த ஊனத்தை ஒருசேரப் போக்கும்

ஆனந் தம்மே ஆறா அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாமல் ஆண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்

பேரானந்தத்தையே பெருவெள்ளமாக அடியவர்க்கு அருளிச் செய்தும், தன்னுடைய உடலின் பாதியாகிய இடப்பாகத்தில் உமாதேவியைக் கொண்ட, மிகவும் உயரிய இரக்கமுடையவன். பிரணவப் பெருமுரசு முழங்கி ஒலிக்கவும், அடியவரின் உள்ளம் மாசுறாமல் ஆண்டுகொண்டு அருள்செய்பவன். சூலாயுதத்தைத் தன்னுடைய கையிலே ஏந்தியவாறு அருள்செய்தும்,

மூல மாகிய மும்மலம் அறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏல்வுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்

பிறவிப் பெரும்பிணிக்குக் காரணங்களாகிய ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் அழிக்கின்ற பரிசுத்தத் திருமேனியின் ஒளியைப் பாய்ச்சுகின்ற சுடரொளியானவன். செங்கழுநீர் மலர் மாலையில் பற்றுடையவனாகிப் பொருத்தமுடையதாக அதனை அழகுற அணிந்தும், திருமாலொடு நான்முகனுக்கு இன்ன தன்மையன் இவனென்று அளவிட்டு உணர முடியாதவன்.

பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் அடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்

குதிரையின்மேல் ஊர்ந்து வந்த தன்மையும், மறுபடியும் பிறப்பு வராமலிருக்க வழியதனைத் தன்னுடைய அடியவர்க்கு அருள் வழங்குபவனாகிய சிவபெருமான், பாண்டிப் பெருநாடே பழைமையாய் உறையும் ஊர் எனக் கொண்டும், தன் மீது பற்றுக் கொண்டு பரவும் அடியாரை, மேலான சொர்க்கத்தில் செலுத்துபவன். 'திருவுத்தரகோசமங்கை' என்னும் திருத்தலத்தைத் தன்னுடைய ஊராகவும்,

ஆதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை அருண்மலை யாகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்

இந்திரன் உள்ளிட்ட பதினொருவராகிய ஆதிமூர்த்திகட்குத் திருவருள் காட்டி அருள் செய்தவன் என்பதனால், 'மகாதேவன்' என்பதை அழகிய திருப்பெயராகவும், மாயமாம் இருட்டினைப் போக்கி அடியேனுக்கு அருள்புரிந்த பேரின்ப வாகனம். அருள் செய்த அந்தப் பெருமிதம் திருவருள் மலையாகவும், எவ்விதப் பெருந்தன்மையும், எவரெவர் திறத்தினையும்,

அப்பரி சதனால் ஆண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுள்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்

அத்தன்மை அதனால் ஆட்கொண்டு அருள்செய்து, நாய்போலும் கடையேனை நலங்கள் நிறைந்த தில்லைப்பதியின் அழகு நிரம்பிய பொன்னம்பலத்திற்கு வருகவென்று, ஏற்றுக்கொள்ள அடியேனை இவ்விடத்திலேயே விடுத்து அருள்செய்து, அன்றைய நாள் தன்னுடன் சென்ற திருவருளைப் பெற்ற அடியவர்தாம்

ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி

பொருந்தப் பொருந்த அவருடன் ஒன்று கலந்து அருள்செய்தும், அருட்பேற்றினை அடைய வாரா அடியவர் எரியில் மூழ்கவும், ஆசையின் வசமாகி மயக்கமடைந்தும், நிலத்தின்மேல் விழுந்து புரண்டு வாய்விட்டு அலறியும் கால்களால் விரைவு கொண்டு ஓடிச் சென்று கடலுக்குள் பாய்வதற்கு நெருங்கி,

நாத நாத என்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்று
இதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்
எழில்பெறும் இமயத் தியல்புடை யம்பொன் 140

'தலைவ! தலைவ!' என்றபடி அழுது புலம்பி, திருவடி அடைந்தவர் திருவடி அடையவும், 'பதஞ்சலி முனிவருக்குப் பரமபதம் வழங்கிய சிறந்த கூத்தனே!' என்று உள்ளம் சோர்வடைய நின்றபடி வருந்தினர். அவ்வாறு வருந்தவும், அழகினைப் பெற்ற இமயமலையின் தன்மையுடைய அழகிய பொன்னாய்

பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடம்நவில்
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கயிலை உயர்கிழ வோனே. 146

விளங்குகின்ற தில்லைப் பொதுமன்றில், ஆடல் புரிந்த, கொவ்வைப்பழம் போன்ற சிவந்த வாயினைக் கொண்ட உமையம்மையோடு காளி தேவிக்கும் திருவருள் புரிந்த திருமுகத்தில் அழகுபெறும் புன்னகை சிந்தும் சிவபெருமான், தன்னுடைய திருவடிகளை அடைக்கலம் என்று தன்னை நாடி வந்த அடியவருடன், ஒலிக்கின்ற உயர் கயிலை மலைக்கு உரியவன், விளங்குகின்ற 'திருப்புலியூர்' என்னும் திருத்தலத்தின் திருக்கோயிலினுள் இனிதாகப் புகுந்து அருள் செய்தனன்.

திருச்சிற்றம்பலம்

3. திருவண்டப் பகுதி

(தில்லையில் அருளியது)

சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(இணைக்குறள் ஆசிரியப்பா)

மேன்மை பொருந்திய ஐம்பெரும் இயற்கைக்கூறுகளை வியந்து போற்றும் பகுதி. விண், மண், நீர், நெருப்பு, காற்று ஆகியவையே அந்தக் கூறுகள். அவற்றைப் 'பஞ்சபூதங்கள்' என்பர். அண்டம் என்பது, பஞ்சபூதங்களின் கூட்டு. அண்டத்தைப் படைத்தவன் ஆண்டவன். அவனே காப்பவன்; அவனே அழிப்பவன். அந்த ஆண்டவன் சிவபெருமானே. அண்டமானது அளவிடற்கரியதும் அதிநுட்பமானதும் ஆகும். அத்தகைய அண்டத்தைப் போன்றவனே சிவபெருமான். அவனும் அளவிடற்கரியவன்; அதிநுட்பமானவன். அவனுடைய அரும்பெரும் சிறப்புகளை விவரிப்பதே இப்பகுதி. அவ்வாறு அருளியதே, நூற்று எண்பத்து இரண்டடிகளைக் கொண்ட திருவண்டப்பகுதி.

திருச்சிற்றம்பலம்

3

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்

பேரண்டம் என்னும் பஞ்சபூதங்களின் கூட்டாகிய பகுதியில் தோன்றிய கோளங்கள் பலவாகும். அவை அளந்தறிவதற்கு அரிய தன்மை உடையன; வளப்பம் மிகுந்த தோற்றத்தை உடையன. அவை ஒவ்வொன்றனுக்கும் உள்ள அழகினைச் சொல்லப் போனால், நூற்றொரு கோடிக்கும் மேலாக விரிவுடையன. பார்ப்போமானால்; மேற்கூரையின் சிறிய துளையின் வழியாக வீட்டுக்குள் நுழைகின்ற கதிரவனின் கதிரில் காணும் நெருங்கிய துகள்களை ஒப்பச்

சிறிய வாகப் பெரியோன் தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பே ரூழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து

சிறியனவாக இருக்கவும் தான் பெரியவனாக இருப்பவன். ஆராய்ந்து பார்த்தால், படைப்புக் கடவுளராம் நான்முகர் பலருடன், காக்கும் கடவுளராம் திருமால் பலரின் தோற்றத்திற்கும், அவர்தம் பெருமைக்கும் இறுதிக்கும் காரணனாகி, அவருடன் தொடர்புடைய பேரூழிக் காலத்தின் அழிவிற்கும், பின்னர் உண்டாகும் நிலைப்பாட்டிற்கும் காரணனாகி, இவ்வண்டத்து நுண்பொருள்களையும் பருப்பொருள்களையும் சூறைக்காற்றானது

எறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போன் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போன் காக்கும் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்

அடியொடு பெயர்ப்பதைப் போல, எவராலும் அறிய முடியாத தனது சூக்கும வடிவத்தினால் எல்லாவற்றையும் முழுமையாக அழிக்கவல்ல மிக்க அழகினை உடையவன். படைப்புக் கடவுளாகிய நான்முகனையும் படைக்கின்ற அநாதியானவன். படைத்த பொருள்கள் அனைத்தையும் காக்கின்ற காக்கும் கடவுளாம் திருமாலையும் காக்கின்ற தெய்வம். காக்கின்ற பொருள்களை அழிப்பவன். அழித்த பொருள்களை மீளவும் தோற்றுவிக்க நினையாத

கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோன் நாள்தொறும்
அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு

நல்ல எண்ணத்தைக் கொண்ட பரம்பொருள். அழகு பொருந்திய ஆறு வகையான சமயங்கட்கும் வீடுபேற்றினை வழங்கவல்ல நான்முகன், திருமால் உள்ளிட்ட கடவுளரை எல்லாம் தன்னுடைய சிறப்புக்குமுன் சிறிய புழுக்கள் என்று எண்ணத்தக்க மேன்மைக்குரியவன். நாள்தோறும் பகற்பொழுதை விளங்க வைக்கும் கதிரவனின் பேரொளியைப் படைத்தவன். அழகு பொருந்திய

மதியில் தண்மை வைத்தோன் திண்டிறல்
தீயில் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கங் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட

திங்களில் தட்பத்தை வைத்தவன்; பேராற்றல் வாய்ந்த கதிர்நெருப்பில் வெப்பத்தை உண்டாக்கியவன்; பொய்ம்மை நீங்கிய மெய்ம்மையான விண்ணில், இவையனைத்தையும் கலந்திருக்கச் செய்தவன்; மேவிச் சென்றிடும் காற்றுக்கு வேகத்தைக் கண்டவன்; நிழல் விளங்கும் நீரில், இனிய சுவையினை நிகழ்த்தியவன். அனைவரும் அறியுமாறு

மண்ணில் திண்மை வைத்தோன் என்றென்று
ஏனைப்பல கோடி எனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயின் அடைத்தோன் அஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் தானே காண்க

படைத்த எண்ணற்ற பொருள்களைத் தாங்கும் வலிமையைப் பூமிக்குப் படைத்தவன் என்று பலவாறு உள்ளவை எத்தனை பல கோடிகளோ, பலவாறு உள்ள பிறவிகள் எத்தனை எத்தனையோ அத்தனை அத்தனை பொருள்களையும், அவ்வவற்றுக்குரிய இடங்களில் பொருத்தமுற வைத்தவன். அதுவுமல்லாமல், அவன் அநாதியானவன் என்பதை நீ காண்பாயாக! அவனே அனைத்துலகுமாய் விளங்கும் முழுமுதலோன் என்பதை நீ காண்பாயாக! தனக்கு ஒப்பாவார் ஒருவரென எவரும் இல்லாதவராய் இருப்பவன் அவன் ஒருவனே என்பதை நீ காண்பாயாக!

ஏனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க

திருமால் வராக அவதாரம் எடுத்துச் சிவனின் அடி தேடிச் சென்றபோது, அந்த வராகத்தின் முதிர்ந்த பற்களை அணிகலனாக அணிந்தவன் என்பதை நீ காண்பாயாக! தாருகாவனத்து முனிவர் விடுத்த புலியினைக் கொன்று, அதன் தோலையுரித்து ஆடையாக உடுத்திக் கொண்ட இடையினை உடையவன் என்பதை நீ காண்பாயாக! வெண் திருநீற்றைப் பூசியிருப்பவன் என்பதை நீ காண்பாயாக! நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அவனது பிரிவினைப் பொறுத்துக் கொள்ள மாட்டேன் என்பதை நீ காண்பாயாக! அவ்வாறாயின், ஐயகோ நான் அழிவேன். செவிகுளிரும் இனிய நாதமென இசைக்கருவியாம் வீணையில் பொருந்தி இருப்பவன் என்பதை நீ காண்பாயாக!

அன்னதொன் றவ்வய்யின் அறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க

அத்தன்மை உடையதாகிய ஒன்றினை அவ்விடத்தில் அறிந்தவனை நீ காண்பாயாக! எல்லாவற்றுக்கும் மேலான கடவுள் என்பதை நீ காண்பாயாக! எல்லோருக்கும் முன்பேயுள்ள ஆதிப் பரம்பொருள் என்பதை நீ காண்பாயாக! படைப்புக் கடவுளாகிய நான்முகனும் காக்கும் கடவுளாகிய திருமாலும் காண்பதற்கரிய பெருமையுடையவன் என்பதை நீ காண்பாயாக! அதிசயமானவன்

என்பதை நீ காண்பாயாக! வடிவங்கள் பலவாக விளங்குபவன் என்பதை நீ காண்பாயாக! சொல்லின் எல்லை மீறிய பழைமையானவன் என்பதை நீ காண்பாயாக!

சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க

உள்ளமும் சென்றுணர முடியாத மிகுதொலைவில் இருப்பவன் என்பதை நீ காண்பாயாக! அடியவரின் அன்பு வலையில் சிக்கிக் கொள்பவன் என்பதை நீ காண்பாயாக! ஒப்பிலாப் பரம்பொருள் என்றே அனைவரும் புகழ்ந்தேற்கும் தனி முதலானவன் என்பதை நீ காண்பாயாக! அகன்ற அண்டம் முழுவதுமாகப் பரவி நிறைந்தவன் என்பதை நீ காண்பாயாக! அணுவின் நுட்பத் தன்மையினும் அதிநுட்பமான தலைவன் என்பதை நீ காண்பாயாக!

இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க

ஒப்புநோக்க, அரிய பெருமையில் அவனே முதல்வன் என்பதை நீ காண்பாயாக! அரிய பொருள்களில் மிகவும் அரிய பொருளானவன் அவன் என்பதை நீ காண்பாயாக! பொருந்திநின்று எந்தப் பொருளையும் வளர்க்கின்றவன் என்பதை நீ காண்பாயாக! நூலறிவாலும் அறியவியலாத நுட்பமானவன் அவன் என்பதை நீ காண்பாயாக! விண்ணொடு மண்ணாய் எல்லாவிடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் பரவியிருப்பவன் அவன் என்பதை நீ காண்பாயாக!

அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செய்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க

முடிவும் முதலும் ஆகிய இரண்டிலிருந்தும் நீங்கியவன் என்பதை நீ காண்பாயாக! அவரவரின் நல்வினை தீவினைகளுக்கு ஏற்றவாறு, வீடுபேற்றையும் பந்தபாசமாகிய பிறவிப் பேற்றையும் வகுப்பவன் என்பதை நீ காண்பாயாக! அசையாப் பொருள்களாகவும் அசையும் பொருள்களாகவும் விளங்கி நிற்பவன் என்பதை நீ காண்பாயாக! யுகங்களின் தோற்றங்களையும் அவற்றின் முடிவுகளையும் கண்டவன் என்பதை நீ காண்பாயாக! எவரெவரும் அவரவர் நினைக்கும் வண்ணம் அருளை வழங்கும் தலைவன் என்பதை நீ காண்பாயாக!

தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண்ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானுங் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க

அனைத்துக் கடவுளரும் முயன்றறியவியலாத தன்மையுடையவன் சிவபெருமானே என்பதை நீ காண்பாயாக! பெண்ணென்றும் ஆணென்றும் அலியென்றும் சொல்லப்படும் மூன்று பெருமைகளும் உடையவன் என்பதை நீ காண்பாயாக! என்னிரு கண்களால் நானும் கண்டேன் என்பதை நீ காண்பாயாக! அடியவர்க்குத் திருவருளை மிகவாகப் பொழியும் அமுதமானவனே என்பதை நீ காண்பாயாக! அவனது அருளின் சிறப்பினை அடியேன் கண்டுகொண்டேன் என்பதை நீ காண்பாயாக!

புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானும் உடனே காண்க

இந்த நிலவுலகில் தன்னுடைய செம்மைத் திருவடிகளைப் பொருந்தச் செய்தவன் என்பதை நீ காண்பாயாக! அத்தன்மை பெற்ற அவனைச் சிவன் என்று நானும் தெளிந்தேன் என்பதை நீ காண்பாயாக! அந்தச் சிவபெருமான் என்னை அடிமையாக்கி, ஆட்கொண்டு அருள்புரிந்தனன் என்பதை நீ காண்பாயாக! கருங்குவளை மலர் போன்ற கண்களை உடையவளாகிய உமையம்மையைத் தனது இடப்பாகத்தில், உடலின் சரி பாதியாகக் கொண்டவன் என்பதை நீ காண்பாயாக! அவ்வாறு அம்மையும் அப்பனுமாக ஒன்றியிருப்பதை நீ காண்பாயாக!

பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலில் தோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளரா விரிய

பேரானந்தப் பெரும்பழமை வாய்ந்த கடலென்பது, அவ்வாறு ஒன்றியிருப்பதுவே. அந்தக் கடலே கருநிறங்கொண்ட பெருமுகிலாய் எழுச்சிபெற்று, அழகு நிறைந்த திருப்பெருந்துறை மலையின்மேல் ஏறி, அழகு பொருந்து மின்னல் ஒளியாகித் திசைகள் அனைத்தும் பரவிட, ஐம்பொறிகளால் உண்டாகிற ஐம்புலன்களின் ஆசைகளாகிய ஒளியுடைய பாம்புகள் அஞ்சி ஓடவும்,

வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழில் தோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையில் முழங்கிப்
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட

கொடுந்துயர்க் கோடை வெப்பம், தன்னுடைய பெருந்தலையைக் காட்டாமல் மறைக்கவும், பேரழகுடைய செங்காந்தள் மலர்கள், மிகுந்த ஒளியை மிளிரச் செய்யவும், எங்கள் பிறவிகள் என்னும் இந்திர கோபப் பூச்சிகள் பெருகி, முரசினைப் போல அதிர்ந்து, மிகப் பெரிய அருளென முழக்கமிட்டு, தாமரைப் பூவின் குவிந்த தன்மையைப் போன்ற காந்தளின் அரும்புகள் காணப்படவும்,

எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணம்

குறையாத இனிய அருளென்னும் நுண்ணிய துளிகள் தோன்றவும், செம்மையான பேரொளி எல்லாத் திசைகளிலும் மிளிர்ந்திட, மலையென விளங்கும் துன்பமாகிய குளம் முற்றிலும் கரை உடைத்துக் கழிய, அறுவகைச் சமயங்களாகிய ஒப்பற்ற கானல் நீரை, நீர்வேட்கை உண்டாகவும் அதன் காரணமாக நீரை விரும்பி அதனை நாடிவந்த பெரிய கண்களைக் கொண்ட மான் கூட்டம்,

தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவையின்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்து

தவமென்னும் பெரிய வாயினைக் கொண்டு உண்டு தளர்ச்சியோடும், பயனற்றதாகிய பேரளவு நீர் வேட்கை நீங்கப் பெறாமல் மிகவும் வருந்தின; அப்பொழுது அவ்விடத்தில் வானப் பேராற்றின் உள்ளே பாய்ந்தெழுந்து, பேரின்பப் பெருநீர்ச் சுழிகளை ஒதுக்கிச் சுழற்சியை அடைந்து, எம்முடைய பற்றாகிய பெருங்கரையை முட்டி மோதி அசைத்திடித்து,

ஊழூழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித் தெழுந்து
உருவ அருள்நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்

அனைத்துப் பிறவிகளிலும் ஊழ்வினைகளின் காரணங்களால், வளர்ச்சி பெற்றதான நம்முடைய நல்வினை – தீவினை ஆகிய பெருமரங்களை வேருடன் களைந்தெழுந்து, நிறைந்த அருள் வெள்ளத்தைப் பாயச் செய்து, அரிய மலைகளில் தோன்றிய சந்தன மரங்களால் உயர்ந்த அணையைக் கட்டித் தேன் ஒழுகுகின்ற – நறுமணம் கொண்ட மலர்கள் மிகுந்தனவாய்க் குளங்களுக்குரிய இடங்களை அமைத்து, மனம் மிகுந்த அகிற்கட்டைகளின்

மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலில் நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவ ராரத் தந்த
அண்டத் தரும்பெறல் மேகன் வாழ்க

பேரளவு புகையோடு கூடிய கரைகளை அடைந்த வண்டுகளைக் கொண்ட குளத்தில், பெருகிட மேலும் மேலும் இன்புறுதலைப் போல நோக்கங் கொண்டு, அருச்சனை என்னும் விளைநிலத்தில், 'பத்திமை' என்னும் விதைவிதைத்து, அடியவராகிய உழவர் உண்டு பசியாறக் கொடுத்த ஞானப் பரவெளியிலுள்ள அரிய பெரிய கொண்டலைப் போன்றவன் வாழ்க!

கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளும் ஆதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க

கரியநிறப் படத்தினையுடைய பாம்பாகிய அரைப் பட்டிகையை இடையில் அணிந்த இறைவன் வாழ்க! அரிய புண்ணிய சீலர்க்கு அருள் செய்கின்ற பழைமையோன் வாழ்க! மறுபிறவியுண்டோ என்னும் பயத்தைப் போக்கியருளிய பெருவீரன் வாழ்க! அன்றாடம் அன்பு செலுத்தும் அடியவரைத் தானே தன்பால் இழுத்து ஆண்டுகொள்பவன் வாழ்க! சுற்றிச் சுழன்றுவரும் பிறவியாகிய பெருந்துன்பத்தை முற்றாக ஒழிப்பவன் வாழ்க!

எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க் கேதிலெம் இறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க

தன்னை விரும்பித் தேடி வந்தடைந்தவர்க்கு நிறைவாக அருளமுதத்தை வழங்குவோன் வாழ்க! நள்ளிரவுப் பொழுதின் பேரிருளில், ஆனந்தத் தாண்டவம் என்னும் ஆடல் புரிபவன் வாழ்க! பெரிய மூங்கிலின் அடியைப் போன்ற அழகிய தோள்களை உடைய உமையம்மையின் அன்புக்குரியவன் வாழ்க! தன்னை வணங்கா அயலவர்க்குத் தானும் அயலவனாய் விளங்கும் தலைவன் வாழ்க! அன்பர்க்கு வறுமைக்காலத்தில், உதவுகின்ற சேமநிதி போன்றவன் வாழ்க!

நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை ஏற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்

நஞ்சினைக் கொண்ட பாம்பினை ஆட்டிப் படைக்கும் கடவுளுக்கு வணக்கம். எமக்குத் தன் மீது பித்தினை உண்டாக்கிய பெரியோனுக்கு வணக்கம். உலகப் பொருள்கள் அனைத்தையும் தனது நெற்றிக்கண்ணால் சுட்டெரித்து, அவற்றின் சாம்பலாகிய திருநீறு பூசியவாறு தோற்றமளிக்க வல்லவனானோனுக்கு வணக்கம். நான்கு திசைகளிலும் நடப்பனவற்றை நடக்கச் செய்தும், கிடப்பனவற்றைக் கிடக்கச் செய்தும், நிற்பனவற்றை நிற்கச் செய்தும்

சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியும் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியும் இல்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவின் நாற்றம் போன்றுயர்த் தெங்கும்

சொல்லால் அளப்பதற்கரிய அநாதியானவன். அறிவினைக் கொண்டு, உள்ளத்துணர்வினால் அறிந்து கொள்ளவும் முடியாதவன். கண் முதலாகிய ஐந்து புலன்களினாலும் அறிந்து கொள்ளப்படும் இயல்பும் இல்லாதவன். விண் முதலாகிய ஐம்பெரும் பூதங்களும் தன்னுடைய பெருந்திருவருளால் தோன்றுமாறு வகைப்படுத்தியவன். மலரில் இரண்டறக் கலந்திருக்கும் மணத்தைப் போல ஓங்கிய நிலையில் எல்லாப் பொருள்களிலும் எல்லா இடங்களிலும்,

ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை ஒழியச் செய்த ஒண்பொருள்
இன்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி

நீக்கமறப் பரவி நின்ற மேலாந்தன்மை உடைய பெருமான், இப்பொழுது அடியேனுக்குக் குருமணியாய் எளிதாக எழுந்தருளித் திருவருள் செய்து, அழிவதற்குரிய இந்தப் பூதவுடல் மீண்டும் தோன்றாமல் செய்தருளிய உயர் பொருளானவன். இப்பொழுது அடியேனுக்கு எளிதாக வந்து அருள் செய்தனன்; அவனுக்கு வணக்கம். கனிந்திடும் உடம்பினைப் படைத்தவனுக்கு வணக்கம்.

ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தவை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்

அடியவரின் மனங்களில் ஊற்றாய் விளங்கி, அவர்க்கெலாம் திருவருளைப் பொழிந்து, அதன்பொருட்டு உள்ளம் மகிழ்பவனுக்கு வணக்கம். ஆற்றவொண்ணாத பேரின்பக் கடலானது பெருகி, அலைகள் வீசவும் அப்போது பாதுகாவலைச் செய்யாத உடலை வறிதே சுமத்தலைச் சரியென்று சொல்லமாட்டேன். மரகதக்கல்லின் குவியலும், மாணிக்கக்கல்லின் பெருக்கமும், மின்னலின் ஒளியைக் கொண்ட பொன்னின் ஒளியும் விளங்கி நிற்க,

திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி ஒற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்
துற்றவர் வருந்த உறைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்

திசைகள் நான்கிலும் சென்று தேடியவர்க்கு மறைந்தும், முறையாக வணங்கி முயன்றவர்க்கு மறைந்தும், ஒன்றிய நினைவு கொண்டு மனக்கண்களால் உற்று நோக்கும் உள்ளம் கொண்டவராய், கேட்டவர் தம்முடைய உள்ளம் வருந்துமாறு கடுமையாகப் பேசியவர்க்கு மறைந்தும், மறைகளின் நுண்பொருளை உற்று நோக்கி ஆராய்ந்தும் உணரவியலாமல் உள்ளம் வருந்தியவர்க்கு மறைந்தும்,

இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்கு
அத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாள்நுதற் பெண்ணென ஒளித்துச் சேண்வயின்

இந்த உபாயத்தைக் கொண்டு அவனைக் கண்டுவிடுவோம் என்று எண்ணி இருந்தவர்க்கு, அந்த உபாயத்தைக் கொண்டே அவர் நினைத்திருந்த இடத்திலேயே மறைந்தும், சினமானது நீங்குமாறு நோக்கி, மிகவும் வருவதற்குப் பற்றி, ஆண் என்று சொல்லுமாறு விளங்கி, அலி என்று சொல்லுமாறு இடம் பெயர்ந்து, ஒளி விளங்கும் நெற்றியினைக் கொண்ட பெண் என்று சொல்லுமாறு மறைந்தும் தொலைத் தூரத்தில்

ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருத்த ஒளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்

ஐந்து புலன்களையும் செல்லுமாறு விடுத்து, அரிய மலை தோறும் சென்று, உணவு முதலியன துறந்தபடியால் வெறுமை உயிரையும் வெறுமை உடலையும் உடைய அருமை வாய்ந்த அறவாணருடைய உள்ளுணர்வில் திருத்தமாக மறைந்தும், ஒரு பொருளானது உண்டென்றும் இல்லையென்றும் சொல்லுகிற அறிவுக்கு மறைந்தும், முன்னைப் பழங்கால முதலாகப் பழகுந்தோறும், பின்னை இப்பொழுது பழகுந்தோறும்

ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலில்
தாள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்றுமுற் றொளித்தும்

'மறைந்து கொள்ளும் தன்மையுடைய கள்ளனைப் பார்த்தோம். ஆரவாரம் செய்யுங்கள்; ஆரவாரம் செய்யுங்கள். அன்றலர்ந்த மலர்களைக் கொய்து, தொடுக்கப்பட்ட மாலையைக் கொண்டு அவனுடைய திருவடிகளைக் கட்டிப் போடுங்கள். அவனைச் சுற்றிக் கொள்ளுங்கள்; சூழ்ந்து கொள்ளுங்கள்; தொடர்ந்து பின் செல்லுங்கள்; விடாமல் இருங்கள்; இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்' என்று சொல்பவருடைய முயற்சிக்கும் எட்டாமல் தன்னை முழுவதுமாக மறைத்தும்,

தன்னே ரில்லோன் தானேயான தன்மை
என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி ஆட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உலையா அன்பென் புருக வோலமிட்டு

தனக்கு நிகரானவர் என்று வேறெவரும் இல்லாதவன். அவ்வாறு தனக்குத் தானேயாக இருந்த தன்மையை என் போன்றவர் கேட்குமாறு வந்து சொல்லி, ஓங்கிக் குரல் கொடுத்து அழைத்துத் தனக்கு அடிமை செய்தருளி, மறைவல்ல அந்தணர் கோலத்தைக் காட்டி அருள்செய்தலும், உள்ளம் வருந்தி ஆழ்ந்த அன்பினால் எலும்பும் உருகச் சத்தமிட்டு,

அலைகடற் றிரையின் ஆர்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண் டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவும்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்

அலையும் கடலின் அலைகளைப் போல ஆரவாரித்து ஆரவாரித்து உயர்ந்தெழுந்து, தலை தடுமாறித் தரையில் விழுந்து புரண்டு கூக்குரலிட்டுப் பித்தரைப் போல மயக்குற்று உன்மத்தம் கொண்டவரைப் போல மதித்து, நாட்டு மக்கள் மயங்கிடவும் கேட்டவர் வியந்திடவும் மதநீர் சொரிகின்ற ஆண்யானைகள் தாங்கப்பெறா மிகப்பெரிய மதத்தினால்

ஆற்றே னாக அவயவம் சுவைதரு
கோல்தேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூர் எழில்நகை எரியின்
வீழ்வித் தாங்கு அன்று
அருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்

அடியேன் பொறுத்துக் கொள்ளாதவனாய், இனிய சுவையுடைய கொம்புத்தேனைக் கொண்டு, உடலுறுப்புகளை நறுஞ்சுவை பெறச் செய்தனன். தன்னைப் பகைகொண்டு எதிர்த்தவருடைய பழைமை வாய்ந்த ஊரைத் தன்னுடைய அழகுமிக்கப் புன்னகைத் தீயினால் அழித்து விழச்செய்தது போலவே, அந்நாளில் அருமை வாய்ந்த திருவருள் என்னும் பெருநெருப்பினால், அவனுடைய அடிமைகளாகிய அவன் அடிமைக்குடிகளில்,

ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தானெனைச் செய்தது
தெரியேன் ஆஆ செத்தேன் அடியேற்கு

ஒருவரேனும் தவறிவிடாமல் தன்பால் ஒடுக்கிக் கொண்டனன். அகன்ற கையில் இருக்கும் நெல்லிக்கனியைப் போல, அடியவனுக்கு அவன் அமைந்துவிட்டனன். அந்த நிலையைப் பற்றிச் சொல்ல வேண்டியது யாதொன்றையும் அறியமாட்டேன். அவ்வாறு வாழ்தல் என்பது முறையாகுமோ? இனியும் உயிர் வாழேன். நாயேனாகிய எனக்குத் தானாகிய அவன் செய்த திருவருளின் திறப்பாட்டை என்னவென்று அறியேன். ஐயகோ! இறந்துபட்டேன். அடியேனுக்கு,

அருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து
உவர்க்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்

அவன் அருள் செய்த தன்மையை அறியேன். அந்தச் சுவையமுதை உண்டபின்னும் நிறைவடையேன். விழுங்கிய பின்னரும் அமைதியடையேன். செவ்விய தட்பமுடைய திருப்பாற்கடலின் நீரலைகளை ஒப்பாக்கி நிறைமதி தோன்றுகிற முழுமதி நாளில், பொங்கிப் பெருகும் கடலில் காணும் நீரினைப் போல, உள்ளத்தின் உள்ளே பொங்கிப் பெருகுமாறு சொல்லற்கரிய அருளமுதம் தன்னை மயிர்க்கால்தோறும்

தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது

சிலிர்க்கத் தேங்குமாறு செய்தனன். கொடியேனாகிய அடியேனின் பிண்டங்களாகிய முன்னைக் காலங்களில் எடுத்த உடல்கள் அனைத்தையும்விட, இம்மையில் இப்போது நாயேனாகிய அடியேனது இந்த உடம்பில், சிறுகுடிலாகக் கொண்டு நறுந்தேனைப் பாய வைத்து, நிறைவுபெற்ற புதுமையான அமுத தாரைகளை, எலும்புகளின் துளைதோறும் பரவுமாறு ஏற்றுவித்தனன். உருக்கமுடையதாகிய

உள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்கு
அள்ளூ றாக்கை யமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே.

மனத்தைக் கொண்டு, ஒரு வடிவத்தினைச் செய்வது போல, அடியேனுக்கு நிறைவாக உருகக் கூடிய உடலை உருவாக்கினன். ஒளிமயமான கரும்பையும் விளாங்கனியையும் நாடிச் செல்கின்ற மதங்கொண்ட ஆண் யானையைப் போல, வாழ்வின் இறுதிக்காலத்தில் அடியேனையும் அவ்வாறு இறுமாந்திருப்பவனாகப் படைத்தனன். இறுதியாக, என்னிடத்தில் அருளாகிய உயர்தேன் பரவிப் பாயுமாறு, அன்புடன் கூடிய அமுதமாக்கிக் கொண்டனன். படைப்போனாகிய நான்முகனும் காப்போனாகிய திருமாலும் தேடியும் காணாத – தேர்ந்தும் தெளியாத பெருமிதமுடைய பரம்பொருளாம் சிவபெருமானே!

திருச்சிற்றம்பலம்

4. போற்றித் திருவகவல்

(தில்லையில் அருளியது)

சகத்தின் உற்பத்தி

(நிலைமண்டில ஆசிரியப்பா)

சிவபெருமானின் பெருமைகளைப் போற்றி அகவற் பாவினால் (ஆசிரியப்பாவினால்) பாடப்பட்டதே 'போற்றித் திருவகவல்'. போற்றி என்பதற்கு வணக்கம், வாழ்த்து, நினைப்பு என்பன பொருள்களாவன. 'சகத்தின் உற்பத்தி' என்பதற்கு, 'இவ்வுலகத் தோற்றத்தின் முறைமை' என்பது பொருள். அடிகள் பலவாக உள்ள இப்பகுதியில், அடிகள் சிலவே உலகத் தோற்றம் பற்றிக் கூறுவன. ஆயினும், சிறப்புத் தன்மையைக் கருதி, இத்தலைப்புத் தரப்பட்டுள்ளது. பெரும்பாலான அடிகள், சிவபெருமானை வாழ்த்துவனவாகவே அமைந்துள்ளன. அவ்வாறு அருளியதே இருநூற்று இருபத்தைந்து அடிகளைக் கொண்ட 'போற்றித் திருவகவல்'.

திருச்சிற்றம்பலம்

4

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்று
அடிமுடி யறியும் ஆதர வதனிற்

படைப்புக் கடவுளாகிய நான்முகன் முதற்கொண்டு விண்ணவராகிய தேவர் அனைவரும் வணங்கி நிற்கத் தன்னுடைய இரண்டு திருவடிகளைக் கொண்டு விண், மண், பாதலம் என்னும் மூன்று உலகங்களை அளந்து, நான்கு திசைகளிலும் உள்ள முனிவரும் தம்முடைய ஐந்து பொறிகளும் மகிழுமாறு வணங்குகின்ற ஒளிவீசும் திருமுடி கொண்ட அழகிய காக்கும் கடவுளாகிய திருமால், முன்னை நாளில் உன்னுடைய திருவடியின் ஆழத்தையும் திருமுடியின் உயரத்தையும் அறிய வேண்டும் என்னும் விருப்பத்தில்,

கடுமுரண் ஏன மாகி முன்கலந்து
ஏழ்தலம் உருவ இடந்து பின்னெய்த்து
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கடல் உலகினில்

மிகுந்த வேகத்தையும் வலிமையையும் உடைய பன்றியாக உருவெடுத்து, முன்னேறி ஏழு உலகங்களும் ஊடுருவுமாறு பூமியைத் தோண்டிச் சென்று, பின்னர் இளைத்து, 'உலகத் தோற்றத்திற்கு முன்னவனே! நீ வெல்க! வெல்க!' என்றபடி வணங்கியும் காணப்பெறாத் தாமரை மலரொத்த திருவடிகள் இரண்டும், எம்மைப் போன்றவர் வணங்குதற்கு எளிமையுடையனவாகிப் பெருங்கடல்களால் சூழப்பட்ட இந்த நிலவுலகந்தன்னில்,

யானை முதலா எறும்பீ றாய
ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்

யானை முதலாக எறும்பு ஈறாக உள்ள ஊனம் என்பதில்லா எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களில், யான் செய்த வினைகளுக்கேற்பத் தங்கியிருந்து அவற்றிலிருந்து தப்பியும், இந்த மனிதப் பிறப்பில் தாயின் வயிற்றில் இருந்தபோது, குறைவில்லாப் பூச்சி புழுக்களின் போரிலிருந்து தப்பியும், கருவான ஒரு மாதத்தில் தான்றிக்காய் அளவாக இருந்த நான் இரண்டாகப் பிளவுபட்டு உருக்குலையாமல் தப்பியும்,

இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்

இரண்டாவது மாதத்தில் நிகழும் ஒருமைப்பாட்டில் தப்பியும், மூன்றாவது மாதத்தில் உண்டாகும் மதப் பெருக்குக்குத் தப்பியும், நான்காவது மாதத்தில் பேரிருளுக்குத் தப்பியும், ஐந்தாவது மாதத்தில் சாதலினின்று தப்பியும், ஆறாவது மாதத்தில் உண்டாகும் பெருந்துன்பத்துக்கும் பெரும்பழிக்கும் தப்பியும்,

ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்

ஏழாவது மாதத்தில் தாழ்ந்த உலகுக்குத் தப்பியும், எட்டாவது மாதத்தில் பெருமுயற்சியில் தப்பியும், ஒன்பதாவது மாதத்தில் வந்து சேர்கின்ற துன்பத்திற்குத் தப்பியும், பத்தாவது மாதத்தில் தாயுடன் தான் படுகின்ற துன்பக் கடலில் மூழ்குகின்ற துயரங்களிடையே தப்பியும்,

ஆண்டுகள் தோறும் அடைந்தஅக் காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்

ஒவ்வோராண்டும் வளர்ந்துவந்த அந்தச் சமயங்களில் எல்லாம் நெருக்கியும் அமர்த்தியும் என்றவாறு பலப்பல துன்பங்களிலிருந்து தப்பியும், காலைப் பொழுதில் பசியெடுக்கையிலும், இரவுப் பொழுதின் உறக்கத்திலும், அங்குமிங்குமாகச் சென்று வருவதிலும் உண்டாகின்ற துன்பங்கள் அனைத்திலிருந்து தப்பியும், கரிய கூந்தலையும், சிவந்த வாயையும், வெண்ணிறப் பற்களையும் உடைய – கார்காலம் வரக்கண்டு மகிழ்ந்தாடும் மயிலானது,

ஒருங்கிய சாயல் நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

ஒரு பக்கமாக ஒதுங்கியதான தோற்றத்தையும், இடைவெளி இல்லாமல் செறிந்து உள்ளிடம் கனத்து, மார்புச்சட்டையின் நூற்கயிறு அறும்படி நிமிர்ந்தனவாகி, ஒளியுடையவனாகி, முன்னே பருத்து இடையானது மெலிவுற்று வருந்துமாறு புடைத்தெழுந்து, பக்கங்களில் பரவி, ஓலையின் ஈர்க்கும் இடையில் நுழைய முடியாத இளமை பொருந்திய கொங்கைகளை உடைய மகளிரின் கூர்மையான கண்கள் என்னும் கூட்டத்திலிருந்து தப்பியும்,

பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்

மயக்கத்தைக் கொண்டதாகிய இந்த உலக மக்கள் வகுத்துத் தொகுத்த மிகவும் பரந்துபட்ட பற்பல துறைகளுள், பித்தம் பிடித்த ஆண்யானை எனப்படும் பேராசைக்குத் தப்பியும், பல கலைகளை உள்ளடக்கிய கல்வி எனப்படும் பல கடல்களிலிருந்து தப்பியும், பொருட்செல்வம் எனப்படும் துயரத்திலிருந்து தப்பியும், வறுமை எனப்படும் பழைமை வாய்ந்த கொடு நஞ்சிலிருந்து தப்பியும்,

புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சக்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின

கீழான ஒழுகலாறுகளை உடைய பல துறைகளிலிருந்து தப்பியும், பின்னர்த் தெய்வம் உண்டு என்பதாகிய ஒரு நினைவு தோன்றி, வெறுப்பென்பது இல்லாததாகிய ஒரு பொருள்தனை எண்ணுதலும், அந்தச் சமயத்தில், ஆறு கோடி அளவிலான மாயா சக்திகள் வெவ்வேறு வகைகளில் உள்ள தம்முடைய மாயங்களைக் காட்டத் தொடங்கின.

ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியரும்

நம்பிக்கையுடன் நட்பாய் இருந்தவரும், அயலவரும் ஒன்று சேர்ந்து பரம்பொருள் இல்லையெனும் கடவுள் மறுப்புக் கொள்கை பேசித் தங்கள் நாவினில் வடு உண்டாகப் பெற்றனர். உறவினர் எனப்படும் பழைமைப் பசுக்கூட்டங்கள், தொடர்ந்துபோய் அழைத்துப் பதறியவராய்ப் பலவகைப்பட்ட நோன்புகளையே மிகவும் மேலானவையாக அந்தணரும்,

சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னும்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து

மெய்யாகவே கலைகளைப் படைத்து வைத்தனர். சமய வாழ்க்கையே உயர்ந்ததென்று வாதிப்பவர், தத்தம் சமயங்களே மறுமையின்றிப் பேரின்பப் பெருவாழ்வளிக்க வல்லனவாகப் பலவாறு சொல்லி, ஒருவரோடொருவர் போர் செய்தனர். நெருங்கிய மாயா வாதம் எனப்படும் பெருங்காற்றுச் சுழன்று வீசி ஆரவாரம் செய்து,

உலோகா யதமெனும் ஒண்திறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை எனைப்பல சூழவும்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்

உலோகாயதம் எனப்படும் ஒளிபொருந்தி வலிமை வாய்ந்த பாம்பினுடைய நூல்வேறுபாடுற்ற கொடிய நஞ்சுதனை அடைந்து, அதன் காரணமாகப் பெருமாயங்கள் அடியேனைப் பலவாகச் சூழ்ந்து கொள்ளவும், அதற்காக மனந்தளர்ந்து தவறிவிடாமல், பற்றிக்கொண்ட கோட்பாட்டில் அந்த மனம் வெறுப்படையாமல், தீயினைத் தழுவிய மெழுகினைப் போல,

தொழுதுள முருகி அழுதுடல் கம்பித்
தாடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பில்
பசுமரத் தாணி அறைந்தாற் போலக்

வணங்கி உள்ளம் கசிந்து உடல்நடுக்கமுற்றுப் பேரின்பப் பெருங்கூத்தாடியும், அரற்றிக் கொண்டும், பாடிக்கொண்டும், துதித்துக்கொண்டும், 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்று வழங்கப்படும் பழமொழிக்கேற்ப விளங்கி, நன்முறையாய் இடையில் விட்டு விலகாத அன்புகொண்டு, பசுமையான மரத்தில் ஆணியை அடித்தாற்போல,

கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்

உள்ளத்தின் உருக்கமானது பெருகிக் கடல்போன்று மயக்குற்று, மனம் நெகிழ்ந்து அதற்குப் பொருந்துமாறு உடலானது நடுக்குற்று, இந்த உலக மக்கள் பேய் போன்றவனென்று தம்மைக் கண்டு நகையாடுமாறு வெட்கமானது விலகி, நாட்டுமக்கள் இழித்துக்கூறும் சொற்களை அணிகலனாக்க் கொண்டு உள்ளம் வளைதல் இல்லாமல்,

சதிரிழந் தறிமால் கொண்டு சாரும்
கதியது பரம அதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது
அருபரத் தொருவன் அவனியில் வந்து

வலிமையை இழந்தபடி அறியத்தக்கதென மயக்கத்தை அடைந்து, சாரத்தக்கதாகிய வீடுபேற்றினையே மிகவுயர்வான வியப்பெனக் கொண்டு, கன்றை உடைய பசுவின் மனத்தையொத்து ஓங்கிய குரலெடுத்துக் கூவியும், உடலானது நடுங்கியும் சிவபெருமானைத் தவிர்த்து மற்றையதொரு கடவுளைக் கனவு நிலையிலும் எண்ணாமல், அரும்பெரும் கடவுள்தன்மை கொண்ட ஒப்பிலாச் சிவபெருமான் உலகில் எழுந்தருளி வந்து,

குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி

மேன்மை பொருந்திய குருவாகி உறுதிப்பொருள் வழங்கிய சிறப்பினை அற்பத்தனம் என்று இகழ்ந்துரையாமல், அவனுடைய இரண்டு திருவடிகளை விட்டு நீங்குதலை எப்போதும் அறியாத நிழலினைப் போல, முன்னும் பின்னுமாய் விளங்கிச் சினமடையாமல், குருமணியாய் விளங்கி அருள் வழங்கியபோது, உடலின் எலும்பு உருகி, உள்ளம் இளகி இளகி இரங்கி,

அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்

அன்பு எனப்படும் நதியானது கரைபுரண்டுவர, நலஞ்செய் ஐம்புலன்கள் ஒன்றுபட்டு, 'தலைவனே!' என்று வாயூறிச் சொற்கள் தடுமாற்றமடைந்து, மயிர்கள் புளகிக்க, கைகள் என்னும் மலர்களை மொட்டெனக் குவித்து, நெஞ்சமானது உவகையால் விரிய, கண்கள் களிப்படைய, நுண்ணிய துளிகளென அவை ஆனந்தக்கண்ணீர் சொரிய,

சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே ஆகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி

தளராத உள்ளத்து அன்பினை நாள்தோறும் பெருகச் செய்யும் உன்னுடைய அடியவர்க்குத் தயைபுரியும் அன்னையே ஆகி, அவரை வளர்த்தாய் – உனக்கு வணக்கம். மெய்ப்பொருளை வழங்கியருளும் பார்ப்பனனாகி, என்னுடைய இருவினைகளும் கெடுமாறு கைகொடுத்து உதவவல்ல கடவுளானாய் – உனக்கு வணக்கம். கனகமென விளங்கும் மாநகர் மதுரைக்கு மன்னனாகிய சொக்கநாதப் பெருமானே! உனக்கு வணக்கம்.

கூடல் இலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி

மாநகர் மதுரையில் விளங்குகின்ற ஒளிவிளங்கும் மாணிக்கமணியே! வணக்கம். அழகிய தில்லையம்பதியில் விளங்குகின்ற பொன்னம்பலத்தில் ஆடல் புரிபவனே! வணக்கம். இப்பொழுது அடியேனுக்கு அமுதாகிய அமுதமானவனே! வணக்கம். அழிவிலா நான்கு மறைகளைத் தோற்றுவித்த நான்மறைத் தலைவா! வணக்கம். காளை உருக்கொண்ட வெல்லும் கொடிக்குரிய சிவபெருமானே! வணக்கம்.

மின்னா ருருவ விகிர்தா போற்றி
கல்நார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆஆ என்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி

ஒளிபொருந்திய வடிவுடைய வேறுபாட்டைக் கொண்டவனே! வணக்கம். கருங்கல்லில் நாருரித்த கனியாக விளங்குபவனே! வணக்கம். என்னைக் காத்தருள்வாய் பொன்மலையொத்தவனே! வணக்கம். 'ஐயோ பாவம்' என்று என்மீது அன்புகொண்டு, அருள்புரிவாய்! வணக்கம். உயிருள்ளன உயிரற்றன ஆகிய அனைத்துப் பொருள்களையும் படைப்பவனே! வணக்கம்.

இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி

துயரத்தை நீக்குகின்ற எம்முடைய தந்தையே! வணக்கம். முன்னைப் பரம்பொருளே மூத்தவனே! வணக்கம். எங்கும் பரவி நிலைத்தவனே, பரமகுருவே! வணக்கம். ஒளியுடைய பளிங்கின் தொகுப்பே! வணக்கம். மன்னவனே! வணக்கம். தித்திக்கும் அமுதமானவனே! வணக்கம். மணம் பொருந்திய மலரடிகளைப் பெற்றுள்ள பரம்பொருளே! வணக்கம்.

வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி

உள்ளமெனும் தாமரைப்பீடத்தில் வீற்றிருப்பவனே! வணக்கம். தூய மனம் கொண்டவனே! வணக்கம். முன்னைக்கும் முன்னையாகிய மூலவனே! வணக்கம். அறிவின் விளக்கமானவனே! வணக்கம். அண்டிவரும் அடியார் அடைய விரும்பும் புகலிடமானவனே! வணக்கம். தீஞ்சுவை தருகின்ற கனியாக இருப்பவனே! வணக்கம். புண்ணியக் கங்கையாறு பொருந்திய ஒளிவீசும் சிவந்த சடையையுடைய சிவபெருமானே! வணக்கம். எம்மை அடிமையாக உடையவனே! வணக்கம். எம்முடைய உள்ளத்து உணர்வானவனே! வணக்கம்.

கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி

இழிவுடையவனாகிய அடியேன் உன்னுடைய அடிமை என்பதைக் கண்டு கொண்டாய்! வணக்கம். தலைவா! வணக்கம். நுண்ணிய பொருளே! வணக்கம். சைவசமயக் கடவுளே! வணக்கம். ஐயா! வணக்கம். அடியவரால் காணப்படும் இலக்கே! வணக்கம். பண்பின் பேருருவே! வணக்கம். நன்னெறிப் பிழம்பே! வணக்கம். அன்பரின் நெஞ்சில் நிலைபெற்றுள்ள எண்ணமே! வணக்கம்.

வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி

விண்ணவராகிய தேவர்க்கும் காண்பதற்கரிய அருமை வாய்ந்த அமுதமே! வணக்கம். மற்றவர் காண்பதற்குரிய எளிமை வாய்ந்த தலைவனே! வணக்கம். இருபத்தொரு தலைமுறைகளைச் சேர்ந்த உறவினரும், கொடுமை வாய்ந்த நரகத்தில் மூழ்கிடாமலே அருள்பொழிந்த அரசனே! வணக்கம். நட்புக்கு நல்ல தோழனே! வணக்கம். உற்ற துணைவனே! வணக்கம்.

வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி

எம்முடைய பேரின்பப் பெருவாழ்வே! வணக்கம். யான் ஈட்டிய என்னுடைய சேமநிதியே! வணக்கம். எம்முடைய வீடுபேற்றின் விளக்கமே! வணக்கம். முதன்மையானவனே! வணக்கம். அன்புடைய அப்பனே! வணக்கம். அழித்தற் கடவுளாகிய சிவபெருமானே! வணக்கம். சொல்வதற்கும் உணர்வதற்கும் எல்லை கடந்த ஒப்பிலா ஒருவனே! வணக்கம். அகன்ற கடல்சூழ்ந்த இந்த நிலவுலக வாழ்வின் பயனே! வணக்கம்.

அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையும் ஒருவ னாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி

அருமையினுள்ளும் எளிமையான எழிலே! வணக்கம். மழைமேகமாகிய கருக்கொண்ட மேகமாகிய கண்ணே! வணக்கம். நிலைபெற்று விளங்குகின்ற திருவருட்பேறாகிய மாமலையே! வணக்கம். இழிந்தோனாகிய அடியேனையும் ஏற்றமுடைய் ஒரு மனிதனாக்கி, உன்னுடைய அரும்பெருந் திருவடிகளை என்னுடைய தலையின்மேல் வைத்தருள் செய்த பெருவீரனே! வணக்கம்.

தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி

வணங்கிய அன்பருடைய துயரத்தைப் போக்குபவனே! வணக்கம். அழிவில்லாத பேரானந்தப் பெருங்கடலே! வணக்கம். தளர்வதும் வளர்வதும் கடந்தவனே! வணக்கம். உலகப் பொருள்கள் முற்றிலுமாக அழிந்தகாலத்தும், அழிவைக் கடந்த முதன்மையானவனே! வணக்கம். மானின் பார்வையை நிகர்த்த கண்களையுடைய உமையம்மையின் தலைவனே! வணக்கம்.

வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி 140

விண்ணுலகத் தேவர்க்குத் தண்கருணைத் தாயே! வணக்கம். மண்ணுலகத்தில் ஐந்து தன்மைகளாய்ப் பரந்து பட்டவனே! வணக்கம். நீரில் நான்கு தன்மைகளாய் நிலவியவனே! வணக்கம். நெருப்பில் மூன்று தன்மைகளாய் விளங்கியவனே! வணக்கம். காற்றில் இரண்டு தன்மைகளாய்க் களித்தவனே! வணக்கம்.

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையும் எந்தாய் போற்றி 145

அண்டவெளியில், ஒருதன்மையாய்த் தோன்றியவனே! வணக்கம். மனமிரங்கித் தொழுகின்ற அடியவரின் உள்ளத்தில் அமுதமானவனே! வணக்கம். உறக்க நிலையின் கனவிலும்கூடத் தேவர்க்கு அருமையானவனே! வணக்கம். விழிப்புநிலையின் நனவில்கூட நாயேனாகிய அடியேனுக்கு அருள் பொழிந்தவனே! வணக்கம். திருவிடைமருதூர் என்னும் திருத்தலத்தில் வாழும் எம்முடைய தந்தையே! வணக்கம்.

சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி 150

மின்னுகின்ற செஞ்சடையில், கங்கை நதியைச் சுமந்தவனே! வணக்கம். திருவாரூர் என்னும் திருத்தலத்தில் விருப்புடன் எழுந்தருளிய மன்னவ! வணக்கம். சிறப்பு மிகுந்த திருவையாறு என்னும் திருத்தலத்தை உடையவனே! வணக்கம். திருவண்ணாமலை என்னும் திருத்தலத்தில் விளங்குகின்ற முன்னவனே! வணக்கம். பெருமை நிறைந்த அமுதமாகிய கடலே! வணக்கம்.

ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி

திருவேகம்பம் என்னும் திருத்தலத்தில் வாழ்கின்ற எம்முடைய தந்தையே! வணக்கம். திருமேனியின் இடப்பாகம் பெண் வடிவம் ஆனவனே! வணக்கம். திருப்பராய்த்துறை என்னும் திருத்தலத்தில் அமர்ந்த மேலானவனே! வணக்கம். திருச்சிராப்பள்ளி என்னும் திருத்தலத்தில் அமர்ந்த சிவபெருமானே! வணக்கம். யான் உன்னையன்றி வேறொரு பற்றினையும் இங்குணரேன்! வணக்கம்.

குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி

திருக்குற்றாலம் என்னும் திருத்தலத்தில் இருந்தவாறு அருளும் எம்முடைய ஆடல்வல்லானே! வணக்கம். திருவாவடுதுறை என்னும் திருத்தலத்தில் விருப்புடன் அமர்ந்த இறையே! வணக்கம். திருவீங்கோய் மலையினை உடைய எம்முடைய தந்தையே! வணக்கம். அழகு நிறைந்த திருப்பழனம் என்னும் திருத்தலத்தில் விளங்குகின்ற எழிலா! வணக்கம். திருக்கடம்பூர் என்னும் திருத்தலத்தில் விருப்புடன் அமர்ந்த சுயம்புருவானவனே! வணக்கம்.

அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்கு
அத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

உன்னுடைய திருவடிகளே அடைக்கலம் என்று உன்னை அடைந்தவர்க்கு அருள்புரியும் அப்பனே! வணக்கம். கல்லால மரத்தின்கீழ் அறுவர்க்கும் யானைக்கும் அருள்தந்த மன்னவ! வணக்கம். தென்பாண்டி நாட்டினை உடைய சிவபெருமானே! வணக்கம். எந்நாட்டு மக்களுக்கும் தலைவனே! வணக்கம்.

ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் தமியேன் போற்றி

பன்றிக்குட்டிக்குப் பாலூட்டி அருளியவனே! வணக்கம். பெருமைக்குரிய திருக்கயிலைத் திருமலையானே! வணக்கம். திருவருள் பொழிய வேண்டும் அழகிய தலைவனே! வணக்கம். அறியாமை இருள் கெடுமாறு அருள்புரிகின்ற கோவே! வணக்கம். தாங்குதலின்றித் தனியாய்ச் சோர்வடைந்துள்ள அடியேன் உன்னை வணங்குகின்றேன்.

களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி

உன்னுடைய இருப்பினைக் கண்டுகொள்ள எண்ணுகின்ற அருள்தருவாய் வணங்குகிறேன். 'அஞ்சவேண்டா' என்று இங்கு அருள்தருவாய் வணங்குகிறேன். நஞ்சினையே அமுதமாக விரும்பி உண்டாய் வணங்குகிறேன். அப்பனே வணங்குகிறேன். தலைவனே வணங்குகிறேன். நிலையானவனே வணங்குகிறேன். தூய்மையானவனே வணங்குகிறேன்.

பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி

பத்தனே வணங்குகிறேன். படைப்பவனே வணங்குகிறேன். பெரியோனே வணங்குகிறேன். தலைவனே வணங்குகிறேன். யாவர்க்கும் அரியோனே வணங்குகிறேன். மலமற்றவனே வணங்குகிறேன். அந்தணர் கோலத்து வந்து, அறியாமையை அகற்றிய அரிய நீதிமானே வணங்குகிறேன். எனது பிறவிப் பெரும்பிணியைப் போக்காதிருப்பது உனக்கு முறையாகுமோ? இனியும் உயிர் தாங்க மாட்டேன். உலக முதல்வனே! உயிர்க்குல முதல்வனே! உன்னை வணங்குகிறேன்.

உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி

சுற்றமானவனே வணங்குகிறேன். உயிரானவனே வணங்குகிறேன். சிவபரம்பொருளே வணங்குகிறேன். அழகனே வணங்குகிறேன். மணவாளனே வணங்குகிறேன். செம்பஞ்சுக் குழம்பு பூசிய அழகிய திருவடிகளையுடைய உமையம்மையைப் பாகமாக உடையவனே வணங்குகிறேன். துன்புற்றேன், நாயேனாகிய அடியேன் உன்னை வணங்குகிறேன்.

இலங்கு சுடரெம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி

விளங்குகின்ற ஒளிமயமாகிய எம்முடைய முன்னவனே! வணக்கம். கவைத்தலை என்னும் திருத்தலத்தில் விருப்புடன் அமர்ந்த கண்ணே – கண்ணின் மணியே! வணக்கம். குவைப்பதி என்னும் திருத்தலத்தில் எளிவந்த எம் அரசே! வணக்கம். மலைநாட்டை உறைவிடமாகக் கொண்ட மன்னவா! வணக்கம். கலைகள் நிறைந்த அரிகேசரி என்னும் திருத்தலத்தை வாழ்விடமாக உடையவனே! வணக்கம்.

திருக்கழுக் குன்றில் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி

திருக்கழுக்குன்றம் என்ற திருப்பதியில் விளங்குகின்ற செல்வனே! வணக்கம். மலைகள் சூழப்பெற்ற திருப்பூவணத் திருப்பதியில் எழுந்தருளிய சிவபெருமானே! வணக்கம். அருவமேனியாகவும் உருவமேனியாகவும் ஆனவனே! வணக்கம். பொருந்திய பெருங்கருணைப் பெருமலையே! வணக்கம். துரிய நிலையையும் கடந்த துரியாதீதப் பேரொளியே! வணக்கம்.

தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி

தெரிந்து கொள்ள அரிதாகிய விளக்கமே! வணக்கம். துளைக்கப்படாத முத்துமணியின் தூய ஒளியே! வணக்கம். அன்பு கொண்டு அடிமைப்பட்டவர்க்கு அன்பனே! வணக்கம். தெவிட்டாத அமுதமே! திருவருளே! வணக்கம். திருப்பெயர்கள் ஆயிரமாய்க் கொண்ட பெருமானே! வணக்கம்.

தாளி அறுகின் தாராய் போற்றி
நீள்ஒளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி

தாளிக்கொடி, அறுகம்புல் ஆகியவற்றால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்தவனே! வணக்கம். பேரொளியின் வடிவமாகிய பெருங்கூத்தனே! வணக்கம். சந்தனக் குழம்பைப் பூசிய திருமேனி அழகனே! வணக்கம். நினைவுக்கும் எட்டாத செம்பொருளே! வணக்கம். மறைகளை விளக்கியருள, மகேந்திர மலையில் வீற்றிருப்பவனே! வணக்கம்.

எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி

எங்களைக் கடைத்தேறுமாறு ஆண்டுகொள்பவா! வணக்கம். பாலினைப் பருகப் புலிமுலையினைக் கலைமான் கன்றுக்கு வழங்கியவனே! வணக்கம். அலையினை உடைய கடலின்மேல் நடந்தவனே! வணக்கம். முன்னை நாளில் கருங்குருவிக்கு அருள்புரிந்தவனே! வணக்கம். அரியனவும் பெரியனவுமாகிய ஐந்து புலன்களும் அடங்க, அருள்பொழிய ஒப்பியவனே! வணக்கம்.

படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி

என்னை ஆட்கொள்ளும் பொருட்டு, விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு இறங்கிவந்தும் தூய்மையானவனே! வணக்கம். முதல், நடு, முடிவு ஆகிய எல்லாமாய் இருப்பவனே! வணக்கம். நரகம், சுவர்க்கம், மண்ணுலகம் ஆகியவற்றுள் போய்ப் பிறவாமல், மேலான வீடுபேற்றை வரகுண பாண்டிய மன்னனுக்கு அருள் செய்தவனே! வணக்கம். நீக்கமற எல்லாவிடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் நிறைந்துள்ள ஒப்பற்றவனே! வணக்கம்.

செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி

செழுமையான மலர்கள் நிறைந்துள்ள சிவபுரத்துக்குத் தலைவனே! வணக்கம். செங்கழுநீர் மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்துள்ள கடவுளே! வணக்கம். வணங்கும் அடியவருடைய அறியாமை மயக்கத்தை அறுப்பவனே! வணக்கம். பிழை என்றும் சரி என்றும் ஏதும் அறியாத நாயடியேன், உள்ளம் நெகிழ்ந்து தொடுத்த சொல்லால் அமைந்த மாலையை ஏற்றுக் கொண்டருளும் தேவே! வணக்கம்.

புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதி பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி

முப்புரங்களைச் சுட்டெரித்த மிகவும் பழைமை வாய்ந்தவனே! வணங்குகிறேன். பாம்பினை அணிந்திருக்கும் பெருமானே! வணங்குகிறேன்; வணங்குகிறேன். எல்லாவற்றுக்கும் பழைமை வாய்ந்த காரணனே! வணங்குகிறேன்; வணங்குகிறேன். வெற்றியே! வெற்றியே! வணங்குகிறேன்; வணங்குகிறேன்; வணங்குகிறேன்.

திருச்சிற்றம்பலம்

5. திருச்சதகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

பத்தி வைராக்கிய விசித்திரம்

'சதகம்' என்பது, நூறு பாடல்களைக் கொண்டது. இறையைப்பற்றிய பாடல்கள் என்பதால், இது 'திருச்சதகம்' ஆயிற்று. இதில் பத்துப் பதிகங்கள் உள்ளன. பதிகம் என்பது, பத்துப் பாடல்களின் தொகுதி. அவை: (1) மெய்யுணர்தல், (2) அறிவுறுத்தல், (3) சுட்டறுத்தல், (4) ஆத்தும சுத்தி, (5) கைம்மாறு கொடுத்தல், (6) அநுபோக சுத்தி, (7) காருண்யத்திரங்கல், (8) ஆனந்தத் தழுத்தல், (9) ஆனந்த பரவசம் (10) ஆனந்தாதீதம். பதிகங்கள் பல்வேறு பாவினங்களில் பயின்று வந்துள்ளன. ஆயினும், பத்துப் பதிகங்களின் நூறு பாடல்களும் அந்தாதித் தொடையில் அமைந் துள்ளன. 'பத்தி வைராக்கிய விசித்திரம்' என்பது, மாணிக்கவாசகப் பெருந்தகை, எந்நாட்டுக்கும் இறைவனாகிய சிவபெருமான்மேல் வைத்திருந்த ஆழ்ந்த பத்திமையின் அற்புதம், தோடுடைய செவியன், தம்மை ஆட்கொண்டருளிய பட்டறிவினை, இச்சதகத்தின் பத்துப் பதிகங்களிலும் மாணிக்கவாசகப் பெருந்தகை, விரிவாக விளக்கியுள்ளார். தம்மை அடிமையாகவும், சிவபெருமானை ஆண்டவனாகவும் உருவகப்படுத்திக் கொண்டு பாடியுள்ளார்.

(1.) மெய்யுணர்தல்

(கட்டளைக் கலித்துறை)

பொய்ப் பொருள்கள் பலவாக இருக்க அவற்றைத் தள்ளி, மெய்ப்பொருளாகிய சிவபரம்பொருளை உணர்ந்து கொள்ளுதலே மெய்யுணர்தல் என்பது. அதாவது, உடல் முதலாய உலகத்தின் பருப்பொருள்களைக் கண்டு அவற்றினின்று நீங்குதல்.

திருச்சிற்றம்பலம்

5

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை
யாயென்னைக் கண்டுகொள்ளே. 1

என்னை ஆட்கொண்ட பெருமானே! உன்னுடைய நறுமணம் நிறைந்த திருவடிகளைப் பெறுவதற்கு, என் உடல் சிலிர்த்து, நடுநடுங்கிக் கைகளைத்

தலையின் மேல் வைத்துக் கண்களில் நீர்மிகுந்து, உள்ளம் வருந்தி, பொய்ம்மையை விலக்கி, மெய்ம்மையாகிய உன்னை நினைத்து, 'போற்றி! சயசய போற்றி!' என்று வழிபடும் முறையை என்னிடமிருந்து தளரவிடமாட்டேன். எனவே, என்னுடைய நிலைப்பாட்டை நீ கவனித்து, உன் அன்பருள் ஒருவனாக ஏற்றுக்கொள்வாயாக!

6

கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்
லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
இருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்
லாதெங்கள் உத்தமனே. 2

எங்கள் மேலானவனே! எங்கள் தலைவனே! உன்னுடைய திருவருளாலே அடியேன் இருக்கப் பெறுவேனாயின், இந்திரனும், மாலவனும், நான்முகனும் ஆகியவருடைய பதவிகளை ஒரு பொருட்டாக என் உள்ளத்தில் கொள்ள மாட்டேன். எனது குடியானது முற்றிலுமாக அழிந்தாலும், உன்னுடைய அடியவரோடு அல்லாமல் பிறர் எவரொடும் தொடர்புகொள்ள மாட்டேன். நரகத்திற்குச் சென்றாலும், அதனை இகழ்ந்து நகையாடேன். உன்னையல்லாமல் வேறு கடவுளரை உள்ளத்தாலும் எண்ண மாட்டேன்.

7

உத்தம னத்தன் உடையான்
அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ
னென்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட
ஊரூர் திரிந்தெவரும்
தத்தம் மனத்தன பேசஎஞ்
ஞான்றுகொல் சாவதுவே. 3

எல்லாவற்றுக்கும் மேலானவனும், எம்முடைய தந்தையும், என்னை ஆட்கொண்டவனும் ஆகிய தலைவனின் திருவடிகளையே எண்ணி, உள்ளம் கசிந்து, 'உன்மத்த மனங்கொண்ட பித்தனிவன்' என்று என்னைக் காண்பவர் பேசவும், அதனை அறியாமல் ஊர்தோறும் அலைந்து திரிந்து, அவரவரும் தங்கள் தங்கள் மனம்போன போக்கில் அவ்வாறே பலவாறு பேசவும், அப்படி நான் உன்னையே நினைந்து நினைந்து அவ்வாறு பேச, அதனைக் கேட்டவாறு என்னுடைய மனமானது இறக்கப்பெறுவது எந்த நாளோ?

தி.5.

8

சாவமுன் னாள்தக்கன் வேள்வித்
தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா
விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிரானொடும்
எண்ணிவிண் ணாண்டுமண்மேல்
தேவரென் றேஇறு மாந்தென்ன
பாவந் திரிதவரே. 4

முன்னை நாளில், தக்கன் நடத்திய யாகத்தில், சாவதற்குரியதாய்க் கொல்லப்பட்ட ஆட்டிறைச்சியை நான்முகனும் திருமாலும் உண்டனர். அதற்காக வீரபத்திரன் அடிக்க வந்தபோது, அலறியபடி ஓடினர். திருப்பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட நஞ்சினைக் கண்டு பயந்துபோய் உன்னை வந்தடைந்து, 'எம் தந்தையே! எம்மைக் காக்கவும்' என்று அபயக்குரல் கொடுத்தனர். அவ்விருவரும் எம்மைப் போன்றவரே. அத்தகையவரான எம்பிரானாகிய உன்னோடும் சேர்த்து, 'மும்மூர்த்திகள்' என்று சொல்வதற்கு உரியவரா? அவ்விருவரும் விண்ணுலகையாண்டு, மண்ணுலகில் தேவர் என்று சொல்லிக் கொண்டு செருக்குற்றுத் திரிகின்றனரே! அவ்வாறு செருக்குற்றுத் திரிவதற்கு அவர் செய்த என்ன பாவந்தான் காரணமோ?

9

தவமே புரிந்திலன் தண்மலர்
இட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை
யேன்உனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெருந்திரு வெய்திற்றி
லேன்நின் திருவடிக்காம்
பவமே யருளுகண் டாய்அடி
யேற்கெம் பரம்பரனே. 5

உன்னை அடைவதற்குரிய எவ்விதத் தவச்செயலையும் செய்திலேன்; குளிர்ச்சி பொருந்திய மலர்களைத் தூவி, எவ்விதக் குறைபாடுமின்றி உன்னைப் பரவேன். வீணெனவே பிறந்த கொடும்பாவச் செயலுடையேன். உனக்கு அன்பராயினவருடன் கூடிச் செம்மை நலத்தைப் பெறுவதற்குரிய செல்வத்தை அடையப் பெற்றிலேன், எம்முடைய மேலோர்க்கும் மேலான பரம்பொருளே! உன்னுடைய தொண்டனாகிய அடியேனுக்கு, உன்னுடைய திருவடிப் பேற்றை அருள்வாயாக!

10

பரந்துபல் லாய்மல ரிட்டுமுட்
டாதபடி யேயிறைஞ்சி
இரந்தவெல் லாமெமக் கேபெற
லாமென்னும் அன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன்
வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை
யேத்த முழுவதுமே. 6

பல இடங்களுக்கும் பரவிச் சென்று, பல வகைகளாக ஆராய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மலர்களை உன் பொன்னார் திருவடிகளில் தூவிக் குறையேதும் இல்லாமல் உன் திருவடிகளையே சிக்கெனப் பிடித்து வணங்கி, 'முறை செய்து வேண்டியன எல்லாம் எம்மால் பெறக்கூடும்' என்னும் அன்பு கொண்ட அடியவர் உள்ளத்தை ஒளித்து நில்லாத உள்ளங்கவர் கள்வனே! உன்னை வழிபடுவதற்கு அடியேனாகிய எனக்கும் உன்னுடைய நெடிய தண்டை யணிந்த திருவடிகளுக்குச் செய்ய வேண்டிய அன்பினை நிலைத்த தன்மையாய் அருள்வாயாக!

11

முழுவதுங் கண்டவ னைப்படைத்
தான்முடி சாய்த்துமுன்னாள்
செழுமலர் கொண்டெங்குந் தேடஅப்
பாலன்இப் பால்எம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடக
மாடிக் கதியிலியாய்
உழுவையின் தோலுடுத் துன்மத்த
மேல்கொண் டுழிதருமே. 7

எல்லா உலகங்களையும் உலகங்களின் எல்லாப் பொருள்களையும் படைத்தவனாகிய நான்முகனை உந்தித் தாமரையில் தோற்றுவித்த திருமாலும் தலைதாழ்த்தி, முன்னொரு நாள் செவ்விய மலர்களைக் கைக்கொண்டு, எல்லா இடங்களிலும் தேடவும், நீ அவனுக்கு அப்பாற்பட்டவனாய் இருந்தவாறு மறைத்துக்கொண்ட எம்பெருமான். என்றபோதும், சுடலையில் பேய்களோடு கூத்தாடி, ஏதமற்றவனாய்ப் புலித்தோலை இடையில் உடுத்திக்கொண்டு, பெரும்பித்தனாய் எங்கெங்கும் அலைவதென்னே!

12

உழிதரு காலுங் கனலும்
புனலொடு மண்ணும் விண்ணும்
இழிதரு காலமெக் காலம்
வருவது வந்ததற்பின்

உழிதரு காலத்த உன்னடி
யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை
காத்தெம்மைக் காப்பவனே. 8

வீசுகிற காற்றும், நெருப்பும், நீரொடு மண்ணும் விண்ணும் ஆகிய பஞ்சபூதங்களை எல்லாம் அழிக்கிற ஊழிக்காலம் எக்காலத்தில் வந்து சேரும்? அக்காலமானது வந்து சென்ற பின்னர், நிலைத்த தன்மையாய் விளங்குகின்ற கால தத்துவத்திற்குத் தலைவனே! உன்னுடைய அடியவனாகிய யான் செய்த தீயவினைகளைப் போக்கியருள்வாயாக! காலதத்துவங்களுமாகி, அவற்றைக் காப்பதோடு எம்மையும் காக்கின்ற இறையே!

13

பவனெம் பிரான்பனி மாமதிக்
கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவனெம் பிரான்என்னை ஆண்டுகொண்
டான்என் சிறுமைகண்டும்
அவனெம் பிரானென்ன நானடி
யேனென்ன இப்பரிசே
புவனெம் பிரான்தெரி யும்பரி
சாவ தியம்புகவே. 9

உலகின் எல்லாப் பொருள்களையும் தோற்றுவிப்பவன்; எமக்குத் தலைவன்; குளிர்ந்த பெருமிதம் வாய்ந்த சந்திரனைத் திருமுடியில் மாலையாகக் கொண்டவன்; தேவர்க்குத் தலைவன்; மங்களமானவன் – மங்களத்தைச் செய்பவன்; என்னுடைய சிறுமைக்குணம் கண்டும், என் தலைவன் என்னை ஆட்கொண்டான். அவன் ஆண்டானாகவும் நான் அடிமையாகவும் உள்ள இத்தன்மையே, சுயம்புவான அவனுடைய பெருமிதத் தன்மையென்று தெரியுமாறு சொல்லுகவே.

14

புகவே தகேன்உனக் கன்பருள்
யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட
தன்மையெப் புன்மையரை
மிகவே உயர்த்திவிண் ணோரைப்
பணித்திஅண் ணாவமுதே
நகவே தகும்எம் பிரானென்னை
நீசெய்த நாடகமே 10

பூரணனே! உன்னுடைய அடியவர் கூட்டத்தில் நுழைவதற்கே நான் சிறிதும் தகுதியில்லாதவன். அத்தகைய என்னையும் உனக்கு அடிமையாக்கிக் கொண்டது

உனக்கே தகுந்தது. கீழோரான மண்ணுலக மக்களை நீ மேலோராக மாற்றுகின்றாய்; விண்ணுலகத் தேவரை அவர் வணங்குமாறு செய்கின்றாய். அப்பனே! அமுதமே! இறைவனே! நீ செய்த கூத்தும் என்னே! நகைபுரிவதற்கே அது தகுந்ததாகும்.

(2) அறிவுறுத்தல்

(தரவு கொச்சகக் கலிப்பா)

அறிவுறுத்தல் என்பது, 'விண்ணப்பித்தல்' என்றும், 'தன்னுடைய நெஞ்சுக்குக் கூறுதல்' என்றும் பொருள்படுமாறு வழங்கப்பட்டுள்ளது. முதல் எட்டுப் பாடல்கள், விண்ணப்பித்தல் பற்றியன; இறுதி இரண்டு பாடல்கள், நெஞ்சுக்குக் கூறுதல் பற்றியன.

15

நாடகத்தா லுன்னடியார் போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் உடையானே 1

எம்மை அடிமையாக உள்ளவனே! உள்ளத்தில் மெய்யன்பு கொள்ளாத யான், பொய்யன்பு கொண்டு வேடமிட்டு, உன்னடியாருள் ஒருவனாக நாடகமாடி வருகின்றேன். கிடைத்தற்கரிய வீட்டுலகத்தைச் சென்றடைய, மிக விரைவாகவும் ஓடுகின்றேன். பசும்பொன்னும் சிறந்த மாணிக்கக்கல்லும் ஒன்று கலந்த மலை போன்றவனே! இடையில் நீங்கப் பெறாத மெய்யன்பினை உனக்குத் தந்திட, என்னுடைய உள்ளத்தில் தேக்கி, உன்னை எண்ணி எண்ணிக் கசிந்துருகத்தக்க அருளினை வழங்குவாயாக!

16

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் அருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே 2

தேன்சொரியும் கொன்றைமலர் மாலையணிந்த சிவபெருமானே! நான் ஒரு சிறிதும் பிறப்பைக் கண்டு பயப்படமாட்டேன். இறப்பைக் கண்டும் யாதொன்றும் செய்வதற்கில்லை. விண்ணுலகம் ஆளுகின்ற வாய்ப்பாயினும், அதனை விரும்ப மாட்டேன்; மண்ணுலகம் ஆளுகின்ற வாய்ப்பாயினும், அதனை மதித்திட மாட்டேன். ஆனால், எம்பெருமானே! எம் தலைவனே! உன்னுடைய திருவருளைப் பெறும் நாள் எந்த நாளோ என்றபடியே வருந்துவேனே.

17

வருந்துவன்நின் மலர்ப்பாத மவைகாண்பான் நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ஏத்தேன்நாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவனற் றமியேன்மற் றென்னேநான் ஆமாறே. 3

நாயடியேனாகிய யான், உன்னுடைய மலரடிகளைக் காண வேண்டி வருந்தி நிற்கின்றேனே அல்லாமல், மணம் பொருந்திய மலர்களை உன்னுடைய திருவடிகளுக்குச் சூட்டினேன் அல்லேன். என்னுடைய நாவில் வடு உண்டாகுமளவில் உன்னைப் புகழ்ந்து போற்றிப் பாடினேன் அல்லேன். பொன் மலையைப் பொருந்திய வில்லென வளைத்தவனே! நீ அடியேனுக்கு அருளாகிய அமுதத்தை வழங்காவிடில் நான் துணையின்றித் தன்னந்தனியனாய்த் துன்புறுவேன் என்பதல்லாமல், என்னால் மற்றபடி என்னதான் செய்ய இயலும்?

18

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நின் திருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே. 4

தேவர்தம் தலைவனே! உன்னுடைய திருவடிகட்கே அடிமை செய்யுமாறு உள்ளம் நெகிழ்ந்தேன் அல்லேன்; அன்பால் உருகினேன் அல்லேன்; மலர்மாலை தொடுத்துச் சூட்டி உன்னை வழிபட்டேன் அல்லேன்; உன்னைப் பலவாறு போற்றி செய்து, பாடினேன் அல்லேன்; உன்னுடைய திருக்கோயிலைத் தூயதாகச் செய்தேன் அல்லேன்; திருக்கோயிலில் நீ மகிழுமாறு யான் கூத்தாடினேன் அல்லேன். சதுரப்பாட்டினால் மெய்யறிவு சார்ந்தவனே! யான் சாகுமாறே விரைவாக ஓடுகின்றேன்.

19

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே. 5

விண்ணாகவும், மண்ணாகவும், காற்றாகவும், ஒளியாகவும், உடலாகவும், உயிராகவும், உண்டு என்பதுமாயும், இல்லை என்பதுமாயும், எல்லோருக்கும் தலைவனாகி, 'யான்' எனவும், 'எனது' எனவும் இறுமாந்திருப்பவரைக் கூத்தாடச் செய்பவனாகவும் நிலைபெற்று விளங்குகின்ற பெருமானே! உன்னை யான் என்னவெல்லாம் சொல்லி எவ்விதம் புகழ்ந்துரைப்பேனோ?

20

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்பாழ்த்தபிறப்
பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே. 6

சூழ்ந்தவாறு வண்டுகள் ஒலியெழுப்பும் மலர்மாலையைப் புனைந்தவனே! தாம் நல்ல நிலையில் வாழ்வதற்கு வேண்டியே விண்ணுலகத் தேவர் அனைவரும் உன்னைப் பரவுவதும், தாம் உயர்வடைந்து தம்மை அனைவரும் அடிப்பணிந்து வணங்க வேண்டியே அவரெல்லாம் உன்னை உள்ளத்தில் எண்ணுபவராகவும் உள்ளனர். நானேயாகிய அடியேனும், பாழாய்ப் போன எனது பிறப்பினை நீக்கவேண்டி உன்னை வணங்கிப் போற்றுவேன்.

21

பரவுவார் இமையோர்கள் பாடுவன நால்வேதம்
குரவுவார் குழல்மடவாள் கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள் மேன்மேலுன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ அரியானே. 7

காண்பதற்கு அரியவனே! விண்ணவர் உன்னை வணங்கியவாறே உள்ளனர்; நான்கு மறைகளும் உன் புகழைப் பாடியவாறே உள்ளன; குரவமலர்களைச் சூடிய கூந்தலையுடைய உமையம்மையோ, உன் மேனியின் இடப்பக்கமாக அமையப் பெற்றாள். மெய்யன்புடைய உன் அடியவரோ, வந்துன்னைத் தொழுதவாறே உள்ளனர் என்றபோதிலும், இழைத்து உருவாக்கப்பட்ட தண்டைகளை அணிந்துள்ள உன் திருவடிகள் இரண்டினையும் காணவியலுமோ?

22

அரியானே யாவர்க்கும் அம்பரவா அம்பலத்தெம்
பெரியோனே சிறியேனை ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறேன் நயந்துருகேன்
தரியேன்நான் ஆமாறென் சாவேன்நான் சாவேனே. 8

அரியவனே! யாவருக்கும் மேலானவனே! தில்லைச் சிற்றம்பலத்தில் விளங்குகின்ற எம்முடைய பெரியவனே! சிறியேனாகிய என்னை ஆட்கொண்ட தண்டையணிந்த உன் திருவடிகளுக்கு மணம் நிறைந்த மலர்களைத் தூவியறியேன்; உள்ளம் இரங்கி உருகியறியேன். எனவே, நான் உயிரோடிருக்கப் பொறுக்க மாட்டேன். ஆகும் வழிதான் யாது? நான் சாகத்தான் வேண்டும்; சாகவே வேண்டும் நானே.

23

வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலாம் நின்றுருகப் புகுந்தாண்டான் இன்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே. 9

வசந்தகாலத்து மன்மதனின் மலரம்புகளுக்கும், வெண்மையான பற்களையும், செம்மையான வாயினையும், கருமையான குவளை மலரின் தன்மை கொண்ட கண்களையும் கொண்ட மகளிர்க்கும் விரைந்து உருகுகின்ற என்னுடைய பாழ்பட்ட மனமே! நீ குடிகொண்டுள்ள உடம்பனைத்தும் உருகுமாறு உன்னுள் நுழைந்து, உன்னை ஆட்கொண்டவன் அல்லனோ நம் சிவன்? அவன் இன்று சென்று, விண்ணுலகில் உள்ளான் என்பதைக் காண மனமில்லாத நீ, இன்னும் சாகாமல் உயிர் வாழ்கின்றாயே!

24

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே. 10

சிவனின் திருவருளை எண்ணி வாழாமல், வீணாய் வாழ்கின்ற எனது மனமே! துன்பத்துள் மூழ்கிப் போகாமல் காக்கின்ற அவனைப் போற்றாமல், தீவினையில் மூழ்குகின்றாய்! உனக்குத் தீமைகளே உண்டாகுமாறு நீயே செய்து.

கொள்கின்றாய். நான் மீண்டும் மீண்டும் பல முறைகள் எடுத்துச் சொல்லியும், நீ துன்பக்கடலாகிய பெருவெள்ளத்தில் மூழ்குகின்றாயே! உனது செயல்தான் என்னே!

(3) சுட்டறுத்தல்
(எண்சீர் விருத்தம்)

ஐம்புலன்களும் ஐம்பொறிகளின் வாயிலாக உலகப் பொருள்களின்மேல் வைக்கின்ற பற்றினை நீக்குதலே 'சுட்டறுத்தல்' என்பது. பொருள்களின்மேல் வைக்கின்ற புறப்பற்றை நீக்கினால்தான், ஆண்டவன் மேல் வைக்கின்ற அகப்பற்று உண்டாகும். பற்றற்றான் பற்றினைப் பற்றுவதற்கே இங்கு அப்பற்று வலியுறுத்தப்படுகின்றது.

25

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாம்நீ வினையி னேற்கே. 1

'கங்கையைத் தாங்கிய தாழ்ந்து பரவிய சடையை உடையவனே! வெள்ளேற்றை உடையவனே! வானவர் தலைவனே!' என்றெல்லாம் உன் அன்பர் கூறக்கேட்டு, விருப்புற்ற மனத்தவனே! பள்ளத்தை நோக்கியவாறு விரைவாகச் செல்கின்ற நீரினைப் போலக் கீழானது மேலாகும்படி உடல் பதறி உள்ளம் கசிந்து நிற்பவராய் அவரெல்லாம் இருக்கவும், என்னை ஆண்டு கொண்டருளிய உனக்கு உள்ளங்கால் முதலாக உச்சித்தலை முடிவாக நெஞ்சாய் அமைந்து உருகாமையாலும், உடல் முழுக்கக் கண்களாக அமைந்து என் தந்தையே! உன்னை அணுகுமாறு நீர்பெருகிப் பாயாமலும், தீவினையேன் மனம் கல்லேயாகும். கண்ணிரண்டும் மரங்களேயாகும்.

26

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன்நான் என்றுன்னை அறிவித் தென்னை
ஆட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை
அனையநான் பாடேன்நின் றாடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோநான் ஆன வாறு
முடிவறியேன் முதலந்தம் ஆயி னானே. 2

இருவினைகளின் பயனாய்வரும் பாசத்தால் கட்டுண்டு கிடந்தேனாகிய என்னைத் தானே வந்து என் உள்ளத்தில் நுழைந்து நிலைபெற்று, 'நீ வா; நான் அடியவரின் வினைப்பயனை நீக்குபவன்' என்று கூறுவாய் போல, 'நான் இன்ன தன்மையுடையேன்' என்று எனக்கு உன்னை உணரச் செய்து, என்னை ஆட்

கொண்டு, எம்முடைய தலைவனாகிய உனக்காக இரும்பைக் கொண்டு செய்த பாவையைப் போன்ற அடியேன் உன்னைப் பாடுதல் செய்யேன்; ஐயோ! அரற்றுதல் செய்யேன்; உடல் வற்றிலேன்; உயிர் பிரியேன். முன்னவனே! முறையாகுமோ? நான் இவ்வாறான முறையின் முடிவறியேன். முதலும் முடிவுமாய் இருப்பவனே!

27

ஆயநான் மறையவனும் நீயே யாதல்
அறிந்துயான் யாவரினுங் கடைய னாய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோ ரன்ப னென்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார்தா மில்லையே அன்றி மற்றோர்
பேயனே இதுதான்நின் பெருமை யன்றே
எம்பெருமான் என்சொல்லிப் பேசு கேனே. 3

ஆராய்ந்து பார்க்கையில், நான்கு மறைகளின் நாயகனும் நீயே என்பதைத் தெரிந்துகொண்டு, அடியேன் யாவரைக் காட்டிலும் கீழானவனாகிய நாய் போன்றவனாய் இருத்தலையும் உற்றறிந்து கொண்டு, 'தலைவனே! நான் உனக்கு ஓர் அன்பன்' என்று சொல்பவனாயும் ஆயினேன். ஆகையினால் என்னை ஆண்டு கொண்டு அருளினாய். அடியேனைத் தவிர்த்து, நீ ஆண்டு கொண்டு அருள அடியவர் எவரும் இலரோ? மேலும், நான் மற்றும் ஒரு பேய் போன்றேன். அப்படியிருந்தும், என்னை அடிமை செய்து ஆட்கொண்ட இத்தன்மைதான் உனது பெருமை அன்றோ? எம்பெருமானே! உன் சிறப்பை எவ்வாறு கூறிப் புகழ்வேன்?

28

பேசிற்றாம் ஈசனே எந்தா யெந்தை
பெருமானே என்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றாம் திருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே என்று பின்றா
நேசத்தால் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவாவெள்ளக் கள்வ னேனை
மாசற்ற மணிக்குன்றே எந்தா யந்தோ
என்னைநீ ஆட்கொண்ட வண்ணந் தானே. 4

உன்னைப் பேசுவதென்றால் 'முன்னவனே!' என்றும், 'எம் தந்தையே!' என்றும், 'எம் தந்தைக்கும் பெரியோனே!' என்றும் பலவாறு பேசிப் பேசிப் புகழ்வர். பூசுவதென்றால், உடல் முழுவதுமாகத் தூய வெண்ணீற்றையே பூசிக் கொள்வர். அப்போது, 'எம்பெருமானே! உன்னை வணங்குகிறேன்' என்பர். குறையாத அன்பினால் அத்தகைய பிறப்பினையும் இறப்பினையும் வென்ற உன்னுடைய அடியவரை எல்லாம் ஆட்கொண்டவனே! பேராசை என்னும் பெருவெள்ளத்தில் மூழ்கித் திளைக்கும் வஞ்சகக் கள்வனேயாகிய அடியேனைக் குற்றமற்ற மாணிக்க மலையே! எம்முடைய தந்தையே! ஐயகோ! என்னையும் நீ ஆட்கொண்டருளிய தன்மையும் என்னே!

29

வண்ணம்தான் சேயதன்று வெளிதே யன்று
அநேகனேகன் அணுவணுவி லிறந்தா யென்றங்
கெண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமா றறியாத எந்தா யுன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க்கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணம்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்
எம்பெருமான் என்சொல்லிச் சிந்திக் கேனே. 5

பெருமானின் மேனிநிறமோ செம்மையுமில்லை; வெண்மையுமில்லை. அந்தப் பெருமான் பலவுருவானவன்; ஒருருவானவன். அவன் அணுவானவன்; அணுவினுள்ளும் அணுவானவன். இன்னவாறெல்லாம் நினைவு தடுமாற்ற மடைந்து, வானவர் கூட்டம் உன்னை வந்தடைகிற வழியறியாமல் வருந்தி நிற்கும். என் தந்தையே! எனக்கோ உன்னுடைய நிறமதனைக் காட்டி, வடிவதனைக் காட்டி, மென்மலர்த் திருவடிகளாம் அவற்றைக் காட்டி, வாழ்வில் வினைவெல்லும் நெறியறியாமல் தடுமாறி இருந்த அடியேனை, மீளவும் பிறவாதவாறு காத்துவிட்டாய். காத்ததோடு நில்லாமல், திருவடிப் பேற்றில் திளைக்கவும் செய்தாய். எம்பெருமானே! உன்னை என்னவெல்லாம் சொல்லிச் சொல்லிச் சிந்திப்பேனோ?

30

சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்க ளார
வந்தனைஆட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலிலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே. 6

அருஞ்செயலுடைய பேரமுதப் பெருங்கடலே! மாமலையே! நாயினேனாகிய அடியேனின் எண்ணத்தை உனக்கே உரியதாக்கி, என்னுடைய கண்கள் இரண்டினையும் உன்னுடைய திருவடிகளாம் மலர்களுக்காக்கி, வணக்கத்தையும் அந்தத் திருவடிகளாம் மலர்களுக்கே ஆக்கி, வாக்குதனை உன்னுடைய மாணிக்கச் சொல்லுக்காக்கி, என்னுடைய ஐந்து புலன்களும் நிறைவுற வந்தென்னை அடிமைகொண்டு, எனது உள்ளத்தின் உள்ளே நுழைந்து பொருத்தமுற அமைந்த பேரமுதப் பெருங்கடலே! கனகமாமலையே! செந்தாமரை மலர்க்காட்டை நிகர்த்த திருமேனியை உடைய ஒப்பிலா ஒளியே! இம்மை மறுமை என்னும் இரண்டுமில்லாத எளியேனுக்கு உன்னைக் கொடுத்தாய். உன்றன் பேரருள் இருந்தவாறு என்னே!

31

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே. 7

தனியனேன் ஆகிய அடியேன், பிறவி என்னும் பெருங்கடலில் சிக்குண்டு, துயரமென்னும் பேரலைகளால் இங்குமங்கும் அலைக்கழிக்கப்பட்டேன். பற்றுக்கோடு ஏதுமின்றிக் கொவ்வைக்கனியை நிகர்த்த சிவந்த இதழ்களையுடைய பெண்டிர் என்னும் சுறாமீனின் வாயிலும் அகப்பட்டேன். இத்தனைக்கு இடையிலும், இனி எவ்வாறு அந்தக் கடலின் கரை சேர்வது என்றெல்லாம் வழியறியாமல் பரிதவித்த அடியேனுக்கு, 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்துத் தோணி கிடைக்கப் பெற்று, அதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு, செயல் மறந்து கிடந்தேனாகிய என்னை, முன்னவனே! முதலும் முடிவும் இல்லாதவனாகிய நீ, 'வீடுபேறு' என்னும் கரையினைக் காட்டி என்னை ஆண்டுகொண்டாய். உன் பெருங்கருணைத் திறந்தான் என்னே!

32

கோட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே எல்லாங் கேட்டான்
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. 8

கேட்டவராலும் அறியவொண்ணாதான். அழிவென ஏதொன்றும் இல்லாதான். சுற்றம் என ஒருவரும் இல்லாதான். தன் செவிகளால் கேளாமலேயே எல்லாவற்றையும் கேட்டவன். நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் பார்த்திருக்க, உலகத்தில் நாயினுக்கு இருக்கை தந்து, நாயினேனுக்குக் காட்டத்தகாதனவற்றை எல்லாம் காட்டிப் பின்னரும் கேட்கத் தகாதனவற்றை எல்லாம் கேட்கச் செய்து, அடியேனாகிய என்னை மீளவும் பிறவாவண்ணம் காத்து, ஆண்டு கொண்டான். இவையனைத்தும் எம்பெருமான் எனக்குச் செய்தருளிய வித்தைகள்தாமே.

33

விச்சைதான் இதுவொப்ப துண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடிய னாக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டான் அமுத மூறி
அகம்நெகவே புகுந்தாண்டான் அன்பு கூர
அச்சன்ஆண் பெண்ணலிஆ காச மாகி
ஆரழலாய் அந்தமாய் அப்பால் நின்ற
செச்சைமா மலர்புரையும் மேனி யெங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர் கோவே. 9

வித்தைதான் இதனை நிகர்ப்பது ஒன்றென உலகத்தில் நடந்ததுண்டோ என்று கேட்பதாயின், மிக்க பேரன்பு கொண்ட தம்முடைய அடியவர்க்கு அடியவனாக்கிப் பிறவி என்னும் பயத்தைப் போக்கி, என்னை ஆட்கொண்டு விட்டான். தவிரவும், அமுதம் பெருக்கெடுத்து உள்ளம் உருகுமாறு தானே வந்து ஆண்டுகொண்டான். அன்பு மிகுந்தவராய்த் தேடுவோர்க்குச் சூக்குமமானவன். ஆணாகவும், பெண்ணாகவும், அலியாகவும், ஆகாயமாகவும் ஆகி, நிறைந்த நெருப்பாய், இறுதியாய், அப்பாலும் நிலைத்து விளங்கிய வெட்சிமலரை நிகர்க்கின்ற திருமேனியை உடையவன் எங்கள் சிவபெருமான். அவனே எங்கள் தலைவன். விண்ணுலகத் தேவர்க்கும் தலைவனே.

34

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கும் மற்றை
மூவர்கோன் ஆய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவனடியார் அடியா ரோடும்
மேன்மேலும் குடைந்தாடி யாடு வோமே. 10

தேவர்க்குத் தலைவனாகிய இந்திரனும் அறிய முடியாத மகாதேவன். வளமையான உலகங்களைப் படைத்தும், அவற்றைக் காத்தும், அழிக்கின்ற மற்றையோராகிய மும்மூர்த்திகளுக்கும் தலைவனாய் நின்ற, தனக்கு மேலான எவர் ஒருவரும் இல்லாத முன்னவன். அட்டமூர்த்தியாய் விளங்குபவன். எல்லாருக்கும் மூத்தவன். உமையம்மையால் ஆளப்படுகின்ற பாகத்தையுடைய எம்முடைய தந்தை. மற்றைய யாவருக்கும் தலைவன். என்னையும் தானே வந்து ஆண்டுகொண்டான். எனவே, இனிமேல் நாம் வேறு எவர்க்கும் குடிமையல்லோம். எதற்காகவும் பயப்பட மாட்டோம். அந்தப் பெருமானின் அடியவர்க்கு அடியவருடன் கூடிவிட்டோம். மேலும் மேலும் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கிக் கூத்தாடிக் கூத்தாடிக் களிப்படைவோம்.

(4) ஆத்தும சுத்தி
(அறுசீர் விருத்தம்)

ஆத்துமா என்பது, ஆன்மாவைக் குறிப்பதே. சுத்தி என்பது, தூய்மையைக் குறிப்பதே, எனவே, 'ஆத்தும சுத்தி' என்பதற்கு, 'ஆன்மாவின் தூய்மை' என்பது பொருள். இறைவனின் திருவடிகளே பேரின்பம் என்பதை ஆன்மா உணர்ந்து, அந்தப் பேரின்பத்திலேயே ஆன்மாவானது மூழ்கித் திளைத்திருப்பதை வலியுறுத்திக் கூறுவதே 'ஆத்தும சுத்தி' என்னும் இப்பகுதி.

35

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே. 1

எனக்கொரு துணை என்பதில்லாமல், உயிர் நீங்கிய உடல்போன்ற உள்ளமே! உன்னை ஆண்டுகொண்ட சிவபெருமானுடைய திருவடிகளே அடைக்கலமென்று, அன்புமிகக் கொண்டு, கூத்தாடுகின்றாயில்லை; அந்தக் கூத்தினை உடையவனாகிய அவனுடைய திருவடிகளின் மீதும் உனக்கன்பில்லை; அவனது புகழைப் பலவாறு எண்ணி எண்ணி, எலும்பும் கசிந்துருகப் பாடுகின்றாயில்லை; உணர்வு மேலிட்டு நீதான் பதறிடவுமில்லை; அந்தப் பரம்பொருளைப் பணிவதுமில்லை; அவன் திருவடித் தாமரைகளைத் தலை மீது சூடுகின்றதுமில்லை; திருவடித் தாமரைகளுக்கு மலர்மாலை சூட்டுகின்றது மில்லை; அவன் இருக்குமிடத்தைத் தேடுகின்றதுமில்லை; வீதிதோறும் வீறிட்டு அலறுகின்றா யில்லை. உன்னால் யான் செய்யப் போவதாக ஏதொன்றையும் அறியாமல் உள்ளேனே!

36

அறிவி லாத எனைப்புகுந் தாண்டுகொண்
டறிவதை யருளிமேல்
நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப்
பந்தனை யறுப்பானைப்
பிறவி லாதஇன் னருள்கள்பெற் றிருந்துமா
றாடுதி பிணநெஞ்சே
கிறியெ லாம்மிகக் கீழ்ப்படுத் தாய்கெடுத்
தாயென்னைக் கெடுமாறே. 2

பிணமாகிய எனது உள்ளமே! அறிவென்பது சற்றும் இல்லாத அடியேனைத் தானே வந்து ஆண்டுகொண்டு, அறிய வேண்டிய மெய்ஞ்ஞானத்தை அருளிச் செய்த, உயர் நெறிகளையெல்லாம் எனக்குப் புலப்படுத்திய எம்முடைய தந்தையை

– பிறவியெனும் கட்டினை நீக்குபவனை, விலகலிலாத் திருவருட்பேறுகள் பலவும் பெற்றிருந்தும், நீ தடுமாறுகின்றாயே! யான் மிகவும் கீழ்த்தரமான செயல்கள் செய்து, கெடவேண்டிய நிலைகளிலெல்லாம் கெட்டுக் கீழானவன் ஆகுமாறு சிறுமைப்படுத்தினாய். யான் முற்றிலுமாக அழியுமாறு, என்னை நீயும் அழித்து ஒழித்தே விட்டாய்.

37

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையெம்
மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றிலம் இனியுனைச் சிக்கெனச்
சிவனவன் திரள்தோள்மேல்
நீறு நின்றது கண்டனை யாயினும்
நெக்கிலை யிக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது
கேட்கவுங் கில்லேனே. 3

அறிவென்பது சிறிதுமில்லாத எமது பேதை நெஞ்சமே! எனக்கு எதிராய் நின்று, யான் அழியுமாறு உள்ளாய் போன்றாய்; உன்னை இனிமேலும் உறுதியெனத் தெளிகின்றேம் அல்லேம்; உமையொரு பாகனின் உயர்வான திரண்ட தோள்களின்மீது விளங்குகின்ற திருநீற்றுத் திருமேனியை நீ கண்டிருந்தும், நீதான் நெகிழ்வடைய வில்லையே! நிலையற்ற இந்த உடம்பினை நீயும் அழிக்கின்றா யில்லை. இத்தன்மைகளால், உனது இயல்பு கெடுவதாகின்றது. இவ்வாறு செவிமடுக்கவும் நான் ஒப்பமாட்டேன்.

38

கிற்ற வாமன மேகெடு வாயுடை
யான்டி நாயேனை
விற்றெ லாம்மிக ஆள்வதற் குரியவன்
விரைமலர்த் திருப்பாதம்
முற்றி லாஇளந் தளிர்பிரிந் திருந்தும் நீ
உண்டன எல்லாமுன்
அற்ற வாறும்நின் னறிவும்நின் பெருமையும்
அளவறுக் கில்லேனே. 4

அனைத்தையும் அடையத் துடிக்கும் ஆசை அறாத எனது நெஞ்சமே! நீ அழிந்து போவாயாக! என்னைத் தன்னுடைய அடிமையாகக் கொண்ட சிவபெருமான், அடியேனாகிய நாயேனை விலைகூறி, எல்லா வகைகளிலும் மிகவாக ஆண்டு கொண்டு, அருள் புரிவதற்கு உரிமையுடையவன். அவனுடைய மணம் மிகுந்த தாமரைத் திருவடிகளை, மூதிரா இளந்தளிர்களாம் திருவடிகளை அடையப் பெறாமல், நீண்ட காலம் பிரிந்திருந்தாய். அப்போது நீ சுவைத்தனவாகிய இன்பதுன்பங்கள் அனைத்தும், முன்னரே நீங்கிய தன்மையையும், உன்னுடைய அறிவையும், உன்னுடைய பெருமிதத்தையும் அளந்தறியும் வலிமையுடையேனல்லேன்.

39

அளவ றுப்பதற் கரியவன் இமையவர்க்
கடியவர்க் கெளியான்நம்
களவ றுத்துநின் றாண்டமை கருத்தினுட்
கசிந்துணர்ந் திருந்தேயும்
உளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன்
செய்தது மிலைநெஞ்சே
பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை
பரகதி புகுவானே. 5

எனது நெஞ்சமே! சிவபெருமான், வானவராலும் எத்தன்மையானவன் என்று அளவிட்டு அறிந்து கொள்வதற்கு மிகவும் அரியவன். ஆனால், அவனுடைய அடியவர்க்கோ மிகவும் எளியவன். நம்முடைய கள்ளத்தனம் அகற்றி, நிலைபெற்றவனாய் இருந்து ஆண்டுகொண்டமையை, உள்ளத்தில் நெகிழ்ந்தவாறு உணர்ந்திருந்தவாறும், உள்ள பொருள்கள் எல்லாவற்றையும் விலக்கி, உன்னையே எமக்குத் துணையென எண்ணியிருந்தோம். உனக்குப் பெரிதாக வஞ்சனை எதுவும் செய்ததும் இல்லை. மனமாசுகளின் நீங்கி, முத்திப் பேற்றினை அடைவதற்கு, உடையவனாகிய உமையொருபாகனின் திருவடிகளை நீ பணிவுடன் வணங்கினாயில்லை.

40

புகுவ தாவதும் போதர வில்லதும்
பொன்னகர் புகப்போதற்
குகுவ தாவதும் எந்தையெம் பிரானென்னை
யாண்டவன் கழற்கன்பு
நெகுவ தாவதும் நித்தலும் அமுதொடு
தேனொடு பால்கட்டி
மிகுவ தாவதும் இன்றெனின் மற்றிதற்
கென்செய்கேன் வினையேனே. 6

போவதற்குரியதும், போன பின்னர்த் திரும்பவும் வருவதில்லதாகியதும் பொன்னகராகிய சிவபுரமே. அதனை அடைவதற்கு உள்ளம் நெகிழ்ந்துருகுவதும், எம் தந்தையும், எம் தலைவனும், என்னை ஆண்டு கொண்டவனாகிய இறைவனின் திருவடிகளுக்காக அன்பு கொண்டு உள்ளம் இளகுதலும், அன்றாடமும் அமுதுடனும் தேனுடனும் கலந்த பால் கட்டியைவிட மேம்பட்டதாகியதும் ஆகிய பேரின்பப் பேறு எனக்குக் கிட்டவில்லையெனில், யான் என்னதான் செய்ய இயலும்? தீவினை உடையேன் என்றுதான் என்னால் சொல்ல இயலும்.

41

வினையென் போலுடை யார்பிற ராருடை
யானடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்
பன்றுமற் றதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்தும்நான்
முட்டிலேன் தலைகீறேன்
இனையன் பாவனை யிரும்புகல் மனஞ்செவி
இன்னதென் றறியேனே. 7

என்னைப் போலத் தீவினையை உடையவர் யார்தாம் பிறர்? உடையவனாகிய சிவபெருமான், அடியவனாகிய நாயேனைத் தினையளவு நேரமும் பிரிந்திருப்பதென்பது, அவனுடைய உள்ளக்குறிப்பன்று, அதன் காரணமாக அவனுடைய திருவடித் தாமரைகளை என் மனம் மறந்திருந்தும், யான் என் தலையைக் கல்லிலோ சுவரிலோ முட்டி மோதிக் கொள்ளேன்; அதனைப் பிளந்து கொள்ளேன். இத்தன்மையை உடையேனாகிய அடியேனுடைய எண்ணம் இரும்பாகும்; உள்ளம் கல்லாகும். செவியை இத்தன்மைத்து என்று உவமிக்க, யாதொரு பொருளையும் அறிந்திலேனே.

42

ஏனை யாவரும் எய்திட லுற்றுமற்
றின்னதென் றறியாத
தேனை ஆன்நெயைக் கரும்பின்இன் தேறலைச்
சிவனையென் சிவலோகக்
கோனை மான்அன நோக்கிதன் கூறனைக்
குறுகிலேன் நெடுங்காலம்
ஊனை யானிருந் தோம்புகின் றேன்கெடு
வேனுயி ரோயாதே. 8

அடியவரல்லாராகிய மற்றையரெல்லாரும் அடையுமா றெண்ணி, இன்ன தன்மையதென்று அறிய வொண்ணாத தேனை, நல்லாவினது நெய்யை, செங்கரும்பினது நறுஞ்சாற்றை, சிவபெருமானை, என்னுடைய சிவலோகத் தலைவனை, மானொத்த விழிநோக்கினை உடைய உமையம்மையின் பாகத்தைக் கொண்டவனை, நெடுங்காலமாக யான் அடையப் பெற்றிலேன். உயிர் தாங்கிய இந்த உடம்பினைப் பாதுகாத்து வருகின்றேன். இவ்வாறெல்லாம் அழிபவனாகிய என்னுடைய உயிர் ஓயமாட்டாதோ?

43

ஒய்வி லாதன உவமனில் இறந்தன
ஒண்மலர்த் தாள்தந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படும்
என்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய இன்னருள் புரிந்தஎன்
தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே. 9

சிவபெருமானின் திருவடிகள் அழிவற்றவை; உவமை கூறுவதற்கு அப்பாற்பட்டவை. அத்தகு ஒளிவீசும் தாமரை மலர் போன்ற திருவடிகளைக் காணும்படி எனக்கருளி, நாயின் குலத்தைவிடவும் கடைப்பட்ட அடியேனுக்கு நல்வழியைக் காணச் செய்து, தாயினைவிடவும் தண்ணருள் வழங்கிய என்னுடைய தலைவனை மிகவும் காணாதவனாகிய அடியேன், நெருப்பில் வீழ்கின்றேனல்லேன்; வலிய மலைப்பாறையிலிருந்து உருள்கின்றேனல்லேன்; செழுங்கடலில் பாய்ந்து, இறக்கவும் செய்கின்றிலேன்.

44

வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடும்
அதுதனை நினையாதே
மான்நி லாவிய நோக்கியர் படிறிடை
மத்திடு தயிராகித்
தேன்நி லாவிய திருவருள் புரிந்தவென்
சிவனகர் புக்போகேன்
ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டினும்
உண்டுடுத் திருந்தேனே. 10

வசந்தகாலத்து மன்மதனின் மலரம்பு, எனது உள்ளத் தடத்தினைப் பிளந்திட, விண்ணில் தவழும் திங்களும் என்னைத் தீய்ப்பதை எண்ணாமல், மான் போன்ற பார்வையையுடைய மகளிர்தம் வஞ்சனையில் சிக்குண்டு, மத்தினால் கடையப்பட்ட தயிரினைப் போலக் கலங்கினேன். தேனைப் போன்று இன்சுவை மலிந்த திருவருட்பேற்றினை எனக்கு வழங்கியருளிய என் சிவபெருமானின் சிவபுரத்திற்குள் புகப்போகின்றிலேன். ஆனால், என் உடம்பில் உயிரினைப் போற்றிப் பாதுகாக்கும் விதமாக இன்னமும் யான் உண்பதுமாகவும், உடுப்பதுமாகவும் இருந்து வருகின்றேனே.

(5) கைம்மாறு கொடுத்தல்
(கலி விருத்தம்)

கைம்மாறு என்பதற்குப் பதிலுதவி என்பது பொருள். தலைவனாகிய சிவபெருமான், அடியவராகிய மாணிக்க வாசகருக்குப் பேரின்பப் பெருவாழ்வை அளித்தான். அதற்குப் பதிலாக எவ்வித உதவியையும் தம்மால் இறைவனுக்குச் செய்ய இயலவில்லையே என்று, மாணிக்கவாசகர் ஏங்கித் தவிக்கிறார். பதிலுக்கு

81.6.

உதவி செய்யாமல் இருப்பினும், பெற்ற உதவியை மறவாமல் இருந்தாலே போதுமானது. அதனைச் 'செய்ந்நன்றியறிதல்' என்பர். அதுதான் இங்கே 'கைம்மாறு கொடுத்தல்' எனப்படுவது. அந்த வகையில், செய்ந்நன்றி மறவாமல் மாணிக்கவாசகர், கைம்மாறு கொடுக்கும் பகுதியே இஃது.

45

இருகை யானையை ஒத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்பன் உண்ணவே. 1

விண்ணில் உள்ள தேவர்க்கு ஒப்பிலாதவனே! யான் நெடுங்காலமாக இரண்டு தும்பிக்கைகளைக் கொண்ட யானையை நிகர்த்திருந்து, செருக்கின் காரணமாக எனது உள்ளத்தில் குடியிருக்கும் மாசற்ற மணிச்சுடரை யான் கண்டேனல்லேன். ஆனால், யான் கண்டது பெருந்துயரையே. ஆயினும், என்னை வரவழைத்து அருள்புரிந்தாய். உன்னை உணருமாற்றல் இல்லாதவன்; உணரும் பெருவிருப்பம் உள்ளவன்.

46

உண்டோர் ஒண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண்அலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலேன் என்னகண் மாயமே. 2

பரம்பொருளே! உலகில், அழகிய பொருளொன்று உள்ளதென்று உணர்பவர்க் கெல்லாமும், அந்த ஒரு பொருளானது பெண்ணா, ஆணா, அலியா என்று அறிய வொண்ணாது. ஆனால், உன்னுடைய அடியவனாகிய எனக்கு மட்டும் உனது உருக்காட்டினாய். அதனைக் கண்டபின்னும், திருவடிப்பேறு பெறும் முயற்சியைக் கைக்கொண்டேனல்லேன். எனக்குண்டானது எத்தகைய கண்மயக்கமோ யானறியேன்.

47

மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை ஆட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோம்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே. 3

மேலுலகத் தேவரும் அறியவொண்ணாத ஒப்பிலாத பேரழகே! என்னை ஆண்டுகொண்ட தில்லைத் திருத்தலத்துப் பெருங்கூத்தனே! மண்ணுலகே! விண்ணுலகே! இவை தோன்றவும் அழியவும் காரணமாக விளங்கும் காலத்தின் வடிவமே! உன்னைக் கண்ணாரக் கண்டு மகிழும் நாளும் எந்நாளோ?

48

காண லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கோர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே. 4

கண்ணால் காணத்தக்க திருவுருக் கொண்டு, திருவருள் புரிந்த மேலான பரம்பொருளே! திருமால், நான்முகன் ஆகியோரின் கண்களுக்குக் காணவியலாத ஒப்பற்ற ஒளிநின்ற பொருளே! இவ்வுலகில் ஒரு பறவைக் குஞ்செனப் பாழ்பட்டேனாகிய யான், பொய்யுடை நிலத்து மெய்ப்பொருளாகிய உன்னை அடையுமாறு உள்ள வழியினை அறியமாட்டாதேன். மெய்ப்பொருளில் உள்ளம் நாட்டம் கொள்ளாமல் தடுப்பதும் செய்ய மாட்டாதேன்.

49

போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்தும்நின்று
ஆற்றல் மிக்கஅன் பால்அழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறும்
கூற்ற மன்னதோர் கொள்கையென் கொள்கையே. 5

வணக்கம் என்று வாயாரச் சொல்லியும், தரையில் உடல் முழுமையும் தோயுமாறு புரண்டும், இறைவா உன்னைப் பலவாறு புகழ்ந்து பாடியும், அவ்வாறே உறுதியுடன் நிலைத்தபடி உரிமையோடு கூடிய உள்ளத்து அன்பினால், உன்னை அழைக்கின்றிலேன். முன்னர்ப் பகை கொண்டு வந்து, பின்னர்ப் பணிவுடன் உன்னுடைய தாமரைத் திருவடிக்களைச் சரணடைந்த கூற்றுவனைப் போன்றதாகிய ஒரு கோட்பாடே எனது கோட்பாடு.

50

கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே. 6

மதுவும் வண்டும் நீங்கப் பெறாக் கொன்றைமலர்களால் தொடுக்கப்பட்ட மாலையணிந்தவனாய், நடுவாகவும், கீழாகவும், மேலாகவும் உள்ள எல்லாப் பொருள்களிலும், எள்ளும் அந்த எள்ளினுள் நின்ற எண்ணெயும் போலப் பரவி விளங்குகின்ற எம்முடைய ஒப்பற்ற தந்தையே! உன்னை உணர்ந்து கொள்ளும் வலிமையற்ற அடியேனையும், உன்னடியார்தமைக் கூவியழைப்பது போன்றே, கூவியழைத்து, உன்னுடைய அடிமையாக்கிக் கொள்வாயாக!

51

எந்தை யாயெம் பிரான்மற்றும் யாவர்க்குந்
தந்தை தாய்தம் பிரான்தனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவருஞ்
சிந்தை யாலும் அறிவருஞ் செல்வனே. 7

அனைவரும் உள்ளத்தாலும் அறிந்து கொள்வதற்கு அரிதாகிய செல்வம் படைத்தவன்; அவன் எமக்குத் தந்தை; தாய்; எமக்குத் தலைவன்; மற்றுமுள அனைவர்க்கும் தந்தையாகவும், தாயாகவும், தலைவனாகவும் விளங்கித் தனக்கு

அதனை இல்லாதவன். அவன், என்னை ஆட்படுத்திக் கொள்ளும் தகுதி எனக்கு உண்டாகுமாறு முந்திக் கொண்டு, என் உள்ளத்தில் குடியேறிவிட்டனன்.

52

செல்வம் நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வரம் பின்றி யார்க்கும் அரும்பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே. 8

செழுமை எனவும் புழுவும் புல்லும் எனவும் உயர்வுதாழ்வு என்னும் எல்லைகள் இல்லாமல் அனைவர்க்கும் அரிய பொருளாய் விளங்கும் பரம்பொருளின் மேலான தன்மைக்கு ஓர் எல்லையென்பது இல்லாத் திருவடிகளைக் கண்ணுற்ற போதும், அவற்றை அடையப் பெறாமல் விலகினேன். பலவகைக் கற்களில் ஒருவகை என்னும்படியான வன்மனத்தையுடைய அடியேன் பட்ட துயரமோ எத்துணையளவு!

53

கட்ட றுத்தனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட அன்பரொ டியாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே. 9

அட்டமூர்த்தித் தத்துவத்தையும், அர்த்தநாரீசுவரத் தத்துவத்தையும் அறியாத என்னுடைய பிறவித்தளையினை உடைத்தெறிந்தாய்; என்னை ஆண்டு கொள்ளவும் செய்தாய்; உடல் முழுமையும் காணுமாறு என்னையும் ஒருவனாக உனது திருவோலக்க மண்டபத்தில் ஏற்றியருளினாய்; ஏற்றியருளினாய். என்னே உன் கருணை!

54

அறிவ னேயமு தேஅடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோஎனை ஆண்டது
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநாள்
அறிவ னோவல்ல னோஅரு ளீசனே. 10

அனைத்தையும் அறிந்தவனே! இன்னமுதாய் இருப்பவனே! அடிமையாகிய நாயினும் கீழ்ப்பட்டேனை, அனைத்தையும் அறிந்தவன் என்று எண்ணிக் கொண்டோ, வந்து நீயும் அந்நாளில் ஆட்கொண்டபோது, அறிவற்றவனாகவே இருந்தேன். என்னை ஆட்கொண்ட இந்நாளில், நான்தான் அறிவுடையேனோ அறிவில்லாதேனோ என்பதை அறியேன். அறிவித்தருள்வாய் பெருமானே!

(6) அனுபோக சுத்தி

(அறுசீர் விருத்தம்)

சுத்தி என்னும் சொல்லுக்குச் சுத்தம் அல்லது தூய்மை என்பது பொருள். ஆத்தும சுத்தியிலிருந்து அனுபவ சுத்தியும், அனுபவ சுத்தியிலிருந்து அனுபோக சுத்தியும் உண்டாகின்றன. ஆத்துமா என்பது மனம். எனவே, ஆத்தும சுத்தி என்பது மனத்தூய்மை. பொருள்களின் நுகர்ச்சியே அனுபவ சுத்தி. மனத்தூய்மையும் நுகர்ச்சித் தூய்மையும் வேண்டற்பாலன. மனத்தூய்மையே நுகர்ச்சித் தூய்மைக்கு அடிப்படை. இவ்விரண்டு தூய்மைகளின் அடிப்படையில், உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் சிவபரம்பொருளாக் காண்பதே அனுபோக சுத்தி. இதனை உணர்வதால் உண்டாவது, வீட்டுலகத் திறவுகோலாகிய பேரின்பத் தூய்மை.

55

ஈச னேயென் எம்மானே
எந்தை பெருமான் என்பிறவி
நாச னேநான் யாதுமொன்
றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை ஆண்டாய்க்கு
நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேஅம் பலவனே
செய்வ தொன்றும் அறியேனே. 1

முன்னைப் பரம்பொருளே! என்னுடைய தலைவனே! என்னுடைய தந்தையாகிய பெரியோனே! என்னுடைய பிறப்பறுக்க வல்லோனே! யான் எந்த ஒரு சிறிய பொருளுக்கும் ஈடில்லாத் தீய நாயாகிய தாழ்வினையுடையேனை, ஆட்கொண்டு அருள்செய்த உன்னை எண்ண மாட்டேன் என்பதை அறிந்தாயே! ஒளிவடிவானவனே! பொன்னம்பலமுடையவனே! யான் செய்யத் தகுந்தது யாதொன்றையும் அறியேன்.

56

செய்வ தறியாச் சிறுநாயேன்
செம்பொற் பாத மலர்காணப்
பொய்யர் பெறும்பே றத்தனையும்
பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
மேவக் கண்டும் கேட்டிருந்தும்
பொய்ய னேன்நான் உண்டுடுத்திங்
கிருப்ப தானேன் போரேறே. 2

போர் செய்யும் ஆண் சிங்கத்தைப் போன்றவனே! என்ன செய்யத் தகுவது என்பதை ஒரு சிறிதும் உணராத நாயினேன், செம்மை வாய்ந்த பொன்போலும்

விளங்கும் திருவடித் தாமரைகளைக் கண்டு தொழப் பெறாப் பொய்வாழ்க்கையர், அடையப் பெறும் பேறுகள் அனைத்தையும் அடைவதற்கு உரியவனாய் உள்ளேன். பொய்யில்லா மெய்வாழ்க்கையாகிய உன்னடியார், மணம் பொருந்திய தாமரைமலர் போன்ற உன்னுடைய திருவடிகளைக் கண்ணாரக் கண்டும், அவற்றைப் பற்றிச் செவியாரக் கேட்டும் பொய்யினையுடையேனாகிய யான், வயிற்றுக்குச் சுவையாக உண்டும், மெய்க்கு அழகாக உடுத்தும் பயனின்றி இவ்வுலகில் இருக்கலானேன்.

57

போரே றேநின் பொன்னகர்வாய்
  நீபோந் தருளி இருள்நீக்கி
வாரே றிளமென் முலையாளோ
  டுடன்வந் தருள அருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ்
  சேரக் கண்டுங் கண்கெட்ட
ஊரே றாயிங் குழல்வேனோ
  கொடியேன் உயிர்தான் உலவாதே. 3

போர் செய்யவல்ல ஆண் சிங்கத்தை ஒத்தவனே! உன்னுடைய சிவலோகப் பதியிலிருந்து நீ எழுந்தருளி வந்து, கச்சையணிந்த இளமையும் மென்மை யுமுடைய கொங்கைகளைக் கொண்ட உமையம்மையுடன் எழுந்தருளி வந்து, என்னுடைய உள்ளத்து அறியாமை இருளை அகற்றி, எனக்கு அருள் செய்ய முன்னரே உன்னுடைய திருவடிப் பேற்றினைப் பெற்ற சிறப்புமிக்க அடியவர், உன் திருவடிகளை அடையக்கண்டும், கண்களை இழந்த ஊர்ப்பன்றியெனக் கொடியவனாகிய அடியேன், உயிர் நீங்குதலன்றி இந்த மாயவுலகில் திரிவேனோ?

58

உலவாக் காலந் தவமெய்தி
  உறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
  பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை யிதுமாய்க்க
  மாட்டேன் மணியே உனைக்காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன்
  என்கொண் டெழுகேன் எம்மானே. 4

அளவிலாக் காலமாகத் தவத்தினை மேற்கொண்டு, உடலினைப் புறந்தள்ளி, இவ்விடத்தில் உன்னைக் கண்டு தொழப் பெருமுனிவர் பலரும் மிகவும் வாட்டமுற்றிருக்கக் கொடியேனாகிய என்னை அடிமை செய்துகொண்டாய். மலங்களின் தொடர்புடைய பெரிதாகிய இவ்வுடம்பினை அழித்துக்கொள்ள மாட்டேன். ஒளியுமிழும் மாணிக்கமே! உன்னைக் காண்பதற்காகத் துன்புறுகின்ற, உள்ளத்தில் உன்னிடத்துச் சிறிதும் அன்பில்லாத அடியேன், வேறு எந்த வழிமுறையைக் கைக்கொண்டு, உயர்வடைவேன் எம்முடைய தலைவனே!

59

மானேர் நோக்கி உமையாள்
பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே அமுதே கரும்பின்
தெளிவே சிவனே தென்தில்லைக்
கோனே உன்தன் திருக்குறிப்புக்
கூடு வார்நின் கழல்கூட
ஊனார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தானேன் உடையானே. 5

மானொத்த நோக்கினை உடையவளாகிய உமையம்மையை இடப்பாகம் கொண்டவனே! உன்னுடைய பொன்னகரை விட்டு இந்தப் பூவுலகில் எழுந்தருளி, அடியேனை ஆண்டுகொண்ட நறுந்தேனே! சுவையமுதமே! கருப்பஞ்சாற்றின் தெளிவே! சிவபெருமானே! தென்திசைத் தில்லைக்குத் தலைவனே! உன்னுடைய திருவுளத்தின் இயல்பறிந்து, அதற்கேற்பச் செயல்படுவார், முயன்றும் உன் திருவடிகளை அடையாதிருக்க, நிணம் பொருந்திய புழுக்கூடாகிய இவ்வுடலைக் காத்தவாறு இங்கும் காத்திருக்கலானேன். உடையவனே!

60

உடையா னேநின் றனையுள்கி
உள்ளம் உருகும் பெருங்காதல்
உடையா ருடையாய் நின்பாதஞ்
சேரக் கண்டிங் கூர்நாயிற்
கடையா னேன்நெஞ் சுருகாதேன்
கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தாக முடித்தாயே. 6

என்னை உடையவனே! உன்னை உள்ளத்தில் நினைந்து, உயர்வாக நெகிழ்ந்து, கசிந்துருகும் மிக்க அடியாரை அடிமை கொண்டவனே! உன்னுடைய பொன்னார் திருவடிகளைச் சேரக் காணப்பெற்றும், இவ்வுலகில் ஊர் நாயினைப் போலக் கடைப்பட்டேனாயினேன். உள்ளமோ சற்றும் உருகாதேன். கற்க வேண்டியன கல்லா மனத்தினேன். மனமும் முதிராதேன். புன்புலால் நாற்றமுடைய புழுக்கூடாகிய இந்த உடம்பினை இவ்வுலகில் வளர்த்துக் காத்துக் கொண்டிருக்குமாறு விதிசெய்தாயே!

61

முடித்த வாறும் என்றனக்கே
தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற்
சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே
சோர்ந்த வாறும் முகங்குறுவேர்
பொடித்த வாறு மிவையுணர்ந்து
கேடென் றனக்கே சூழ்ந்தேனே. 7

முடிவு செய்த வழிமுறையும் எனக்கு ஏற்றதே. முன்னரே உன்னுடைய அடியவரை நீயே வலிந்து பற்றிக்கொண்ட வழிமுறையும், என்னைக் கைநெகிழாமல் பிடித்தபோதும் கள்வனாகிய யான் இவ்வுலகில் ஒரு பெண்ணின் வாய் துடித்த வகையும், அவளுடைய ஆடையானது சற்றே சரிந்த விதமும், முகத்தில் வியர்வைத்துளிகள் அரும்பிய விதமும் ஆகிய இவற்றையெல்லாம் உணர்ந்தவனாய், எனக்கு நானே அழிவினைச் செய்துகொண்டேனே!

62

தேனைப் பாலைக் கன்னலின்
தெளியை ஒளியைத் தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை
உம்ப ரானை வம்பனேன்
நானின் னடியேன் நீயென்னை
ஆண்டா யென்றால் அடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந்
தன்மை யாமென் தன்மையே. 8

தேனை, பாலை, கருப்பஞ்சாற்றின் தெளிவை, ஒளியுருவைத் தேர்ந்து தெளிந்தவர்தம் உடலினை உருகச் செய்கின்ற எல்லா வகையான ஆற்றல்களையும் உடையவனை, தேவர்தம் தலைவனைத் தீயேனாகிய அடியேன், 'நான் உன்னுடைய அடியேன்; நீ என்னை ஆண்டுகொண்டாய்' என்றுரைத்தால், எனக்கு அந்நிலையானது என்னைக் கண்டு நீயுமே நகைபுரிதற்குரிய தன்மையாம் என்பதுவே.

63

தன்மை பிறரா லறியாத
தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை ஆண்டையா
புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே
என்நான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி
எந்தா யெங்குப் புகுவேனே. 9

உன்னுடைய இயல்பு இன்னதென்று மற்றவரால் அறியவொண்ணாத தலைவனே! பொல்லாத நாயினை நிகர்த்த சிறியேனாகிய என்னை, ஐயனே! ஆட்கொண்டருளிப் புறத்தேதான் போக விடுவாயோ? விடுவதாயின், என்னைக் கடைக்கண் கொண்டேனும் கனிவுடன் காப்பவர் யாரோ? நான் செய்யத்தக்கதுதான் என்ன? எம்முடைய பெருமானே! பொன்னெனவே விளங்குகின்ற செந்திருமேனி யுடைய எம் தந்தையே! எவ்விடம் சென்று, யாரிடம் அடைக்கலமாவேன்?

64

புகுவே னெனதே நின்பாதம்
போற்றும் அடியா ருள்நின்று
நகுவேன் பண்டு தோணோக்கி
நாண மில்லா நாயினேன்
நெகுமன் பில்லை நினைக்காண
நீயாண் டருள அடியேனும்
தகுவ னேயென் தன்மையே
எந்தாய் அந்தோ தரியேனே. 10

எம்முடைய தந்தையே! எனக்கே சொந்தமாகிய உன் பொன்னடிகளில் சரண்புகுவேன். உன்னைத் தொழுகின்ற அடியவருள் ஒருவனாக அடியேன் இருந்து, பழைமை வாய்ந்த உன் திருப்புயங்களை உற்றுநோக்கி, நகையாடல் புரிவேன். வெட்கம் இல்லாத நாயடியேன் உன்னைக் காண்பதற்கு, உருகுவதற்குக் காரணமான அன்பு ஒரு சிறிதும் இல்லை. என்னை நீதான் ஆட்கொண்டருள, அடியேனும் தகுந்தவனாவேனோ? இஃது என்னதான் இயல்போ? ஐயகோ! இவ்வுலகில் உயிரைத்தான் யானும் தாங்கியிரேனே!

(7) காருணியத்து இரங்கல்

(அறுசீர் விருத்தம்)

காருணியம் என்றால், கருணை என்பது பொருள்; இரங்கல் என்றால், உருக்கமுடன் வேண்டுதல் என்பது பொருள். எனவே, இறைவன் ஆண்டுகொண்டு அருளுமாறு, அடியவர் உருக்கமுடன் வேண்டுதல் என்பதே, 'காருணியத்து இரங்கல்' ஆகும். பிறவாமை வேண்டுமெனில், இறைவனை மறவாமை வேண்டும். இறைவனது கருணை மட்டுமே பிறவாமையை வழங்குவதாகும். மாணிக்கவாசகப் பெருந்தகை, தமக்குக் கருணை காட்டுமாறு இறைவனை உருக்கமுடன் வேண்டுவதே இப்பகுதி.

65

தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள்
விடலையே போற்றி ஒப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர்
தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள்
நின்மலா போற்றி போற்றி. 1

பொய்யுடலோடு சேர்ந்து வாழும் இவ்வுலக வாழ்வினை மெய்யென்று நம்பி, உயிர்வாழ மாட்டேன். அன்பர்க்கு நலமருளும் திருக்கரங்களை உடையவனே! வணக்கம். அண்டவெளியில் ஆனந்தக் கூத்தாடும் முன்னைப் பழம்பொருளே! வணக்கம். எங்களின் இளையவனே! வணக்கம். ஒப்பிலா உயர்வோனே! வணக்கம். விண்ணுலகத் தேவர்தம் தலைவனே! வணக்கம். தில்லைப் பொன்னம்பலத்தில் திருநடனம் புரிபவனே! வணக்கம். எம்முடைய மாசற்ற தூயவனே! வணக்கம். உன் பொன்னடிகட்கு எங்களின் வணக்கம். வணக்கம்.

66

போற்றியோ நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய
சயசய போற்றி போற்றி. 2

'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரமாய் உள்ளவனே! வணக்கம். பாம்பணிந்த பெருமானே! உலகப் பருப்பொருள்களில் பற்றுமிகக் கொண்டே யான் மருட்சியடைகின்றேன். 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரமாய் உள்ளவனே! வணக்கம். உன்னையன்றி எனக்கு அடைக்கலம் வேறொன்றிற்லை. 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரமாய் உள்ளவனே! வணக்கம். என்னைப் புறத்தே தள்ளிவிடாமல் காப்பாய். 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரமாய் உள்ளவனே! வணக்கம். வெற்றி வெற்றி என்று கூறி, அடியேன் உன்னை வணங்குகிறேன்; வணங்குகிறேன்.

67

போற்றியென் போலும் பொய்யர்
தம்மையாட் கொள்ளும் வள்ளல்
போற்றநின் பாதம் போற்றி
நாதனே போற்றி போற்றி
போற்றநின் கருணை வெள்ளப்
புதுமதுப் புவனம் நீர்தீக்
காற்றிய மானன் வானம்
இருசுடர்க் கடவு ளானே. 3

மண், நீர், நெருப்பு, காற்று, உயிர், விண், மற்றும் இருசுடர்களாகிய ஞாயிறு, திங்கள் ஆகிய வடிவங்களாகிய எல்லாம் வல்ல பரம்பொருளே! வணக்கம். என்னைப் போன்ற பொய்யடியாரை ஆண்டுகொள்ளும் வள்ளல் பெருமானே! வணக்கம். உன்னுடைய மலரடிகளுக்கு வணக்கம். ஒப்பற்ற தலைவனே! வணக்கம். வணக்கம். உன்னுடைய பெருங்கருணைப் பெருவெள்ளமாகிய புத்தம்புது நறுந்தேனுக்கு வணக்கம்.

68

கடவுளே போற்றி என்னைக்
கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே உருக்கி என்னை
ஆண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைத்திட் டொல்லை
உம்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி. 4

எல்லாவற்றையும் கடந்தவனே! வணக்கம். அடியேனின் நிலைமையைப் புரிந்துகொண்டு, என்னை ஆண்டுகொண்டு அருள்புரிவாயாக! வணக்கம். என்னுடைய உள்ளத்தை அனலிடு மெழுகாய் உருக வைத்து, அடியேனை அடிமை செய்திடல் வேண்டும். வணக்கம். அழியக்கூடிய இந்தப் புழுத்த உடம்பை நீக்கிவிட்டு, விரைவில் மேலாம் வீட்டுலகைத் தந்தருள்வாயாக! வணக்கம். மின்னுகின்ற செஞ்சடையில், புண்ணியக் கங்கையை வைத்தவனே! நலமருளும் திருக்கரங்களை உடையவனே! வணக்கம். வணக்கம்.

69

சங்கரா போற்றி மற்றோர்
சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா அல்குற் செவ்வாய்
வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி
மால்விடை யூர்தி போற்றி
இங்கிவாழ் வாற்ற கில்லேன்
எம்பிரான் இழித்திட் டேனே. 5

அருள் வழங்கும் கைகளையுடையவனே! வணக்கம். வேறோர் அடைக்கலம் இல்லாதேன். வணக்கம். சினங்கொண்டு சீறுகின்ற பாம்பின் படத்தையொத்த அல்குலையும், சிவந்த வாயினையும், வெண்ணிறப் பற்களையும், கருமை வாய்ந்த வீரிய வாளொத்த கண்களையும் உடைய உமையம்மையை ஒரு பாகமாக உடையவனே! வணக்கம். தூய்மையும் வெண்மையும் பொருந்திய பெருங்காளையினை வாகனமாகக் கொண்டவனே! வணக்கம். இவ்வுலகில், இந்தப் பொய்யுடல் கொண்டு வாழ்கின்ற இழிதகை வாழ்வினைப் பொறுத்திலேன். எம் தலைவனே! இதனை இழித்துப் பழித்திட்டேனே!

70

இழித்தனன் என்னை யானே
எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை
ஆளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை எல்லாம்
பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி
உம்பர்நாட் டெம்பி ரானே. 6

எம்பெருமானே! நானே என்னை இழிவுபடுத்திக் கொண்டேன். எம்முடைய தலைவனே! வணக்கம். வணக்கம். உன்னை நானும் பழிதூற்றவில்லை. என்னை அடிமையாக உடைய தாமரைத் திருவடிகட்கு வணக்கம். சிறியேனாய்ச் செய்த பிழைகள் அனைத்தையும் பொறுத்துக் கொள்ளுதல், சான்றாண்மை மிக்க பெரியவர்தம் பெருங்கடனே! வணக்கம். மண்ணுலகத்து வாழ்வினைப் போக்கிவிடு! வணக்கம். தேவருலகத்துத் தேவாதி தேவனே! வணங்குகிறேன்.

71

எம்பிரான் போற்றி வானத்
தவரவர் ஏறு போற்றி
கொம்பரார் மருங்குல் மங்கை
கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத்
திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி என்னை
ஆளுடை ஒருவ போற்றி. 7

எம்முடைய தலைவனே! வணக்கம். விண்ணுலகத் தலைவராகிய அந்த நான்முகன், திருமால் ஆகிய கடவுளர் மற்றும் இமையவர் ஆகியோர்க்கு ஆண் சிங்கம் போன்றவனே! வணக்கம். பூங்கொம்பையொத்த மெல்லிய இடையினை உடைய உமையம்மையை ஒரு கூறாக உடையவனே! வெண் திருநீற்றை உடையவனே! வணக்கம். செம்மைக் குணம் உடைய தலைவனே! வணக்கம். தில்லைத் திருத்தலத்தில், திருச்சிற்றம்பலத்தை உடையவனே! வணக்கம். மேலுலகத்தை உடையவனே! வணக்கம். அடியேனை அடிமையாக உடைய ஒப்பில்லாதவனே! வணக்கம்.

72

ஒருவனே போற்றி ஒப்பில்
அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள்
கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி
தமியனேன் தனிமை தீர்த்தே. 8

தனித்தன்மை உடையவனே! வணக்கம். ஒப்பில்லாத அப்பாவே! வணக்கம். தேவர்க்கும் குருவானவனே! வணக்கம். எங்களுடைய இளமையழகே! வணக்கம். 'வந்தடைக!' என்று சொல்லி, அடியேனை உன்னிடம் அழைத்துக்கொள்ள வேண்டும்! வணக்கம். தன்னந்தனியேனாகிய அடியேனின் தனிமையைப் போக்கி, உன் தேனார் திருவடிகளை எனக்குத் தந்தருள்வாயாக! வணக்கம்.

73

தீர்ந்தஅன் பாய அன்பர்க்
கவரினும் அன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்ம்மை யாட்கொண்
டருளிடும் பெருமை போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க்
கமுதம்ஈ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாதம் நாயேற்
கருளிட வேண்டும் போற்றி. 9

நிறைந்த அன்புடைய அடியவர்க்கு, அவரைவிட மேலான அன்பினை உடையவனே! வணக்கம். அடியேனின் பொய்ம்மைத் தன்மையையும் பொருட் படுத்தாமல், என்னை அடிமைகொண்டு அருளுகின்ற உனது பெருமிதத்துக்கு வணக்கம். திருப்பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட ஆலகால நஞ்சினை அருந்தி, அவ்விடத்தில் இருந்த விண்ணோர் அனைவர்க்கும், கடலிலே தோன்றிய சாவா மருந்தாகிய அமுதத்தைக் கொடுத்தருளிய வள்ளல் பெருந்தகையே! வணக்கம். எல்லா இடங்களிலும் பரவிப் பொருந்தியுள்ள உன் தண்ணார் திருவடிகளை நாயினேன் எனக்குக் காட்டியருள் செய்திட வேண்டும். வணக்கம்.

74

போற்றியிப் புவனம் நீர்தீக்
காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்றம்
ஆகிநீ தோற்ற மில்லாய்
போற்றியெல் லாவு யிர்க்கும்
ஈறாயீ றின்மை யானாய்
போற்றியைம் புலன்கள் நின்னைப்
புணர்கிலாப் புணர்க்கை யானே. 10

இந்த மண்ணும், நீரும், நெருப்பும், காற்றுடன் விண்ணும் ஆனவனே! வணக்கம்.எவ்வகை உயிர்க்கும் நீ தோன்றுமிடமாகி, உனக்கு அந்தத் தோன்றுமிடம் இல்லாதவனே! வணக்கம். எவ்வகை உயிர்க்கும் இறுதியாகி, உனக்கு அந்த இறுதி இல்லாதவனே! வணக்கம். ஐம்புலன்கள் உன்னை நெருங்கவியலா ஐம்புலன்களின் சேர்க்கையானவனே! வணக்கம்.

(8) ஆனந்தத்து அழுந்தல்
(எழுசீர் விருத்தம்)

ஆனந்தம் – பேரின்பம்; அழுந்தல் – மூழ்குதல். எனவே, ஆனந்தத்து அழுந்தல் என்பது, பேரின்ப வெள்ளத்தில் மூழ்குதல் எனப்படும். இறைவனின் திருவடிகளைச் சரண்புகுதலே, பேரின்பப் பெருவாழ்வாகும். அவ்வாறு சரண்புகுந்தவர், அந்த அருள்நிலையினின்றும் விலகார்; மாறாத இன்ப வெள்ளத்திலேயே மூழ்கித் திளைப்பர். மாணிக்கவாசகப் பெருந்தகை, அத்தகு மாறாத திருவடிப் பேற்று இன்பத்தில் மூழ்கித் திளைக்க வேண்டுமென இறைஞ்சுவதே இப்பகுதி.

75

புணர்ப்ப தொக்க எந்தை யென்னை
யாண்டு பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது
நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக அன்றி தாக
அன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக அங்க ணாள
புங்க மான போகமே. 1

அழகிய கண்களை உடையவனே! நீ என்னை வந்தடையும் சமயமும், நான் உன் திருவடிகளைப் பற்றும் சமயமும் ஒன்றுபட, நீ என்னை ஆட்கொள்ள உனது திருப்பார்வையைச் செலுத்தினாய். ஆட்கொள்ளும் தகுதியற்றது இவ்வுடல் என்றறிந்தபோது, இந்த உடலினால் யாது பயன்? இஃது கெடுவதாகுக! எம்முடைய தந்தையே! நீ என்னை ஆட்கொண்டாலும் ஆட்கொள்ளாவிட்டாலும், உன் திருவடிகளின்மேல் அடியேன் வைத்திருக்கும் அன்பானது, உன்னிடம் எனைக் கொண்டுவந்து சேர்ப்பதாகுக! உயரிய சிவானந்தப் பெரும்பேற்றினை, அந்த அன்பானது என்பால் கூட்டுவிக்குமாக.

76

போகம் வேண்டி வேண்டி லேன்பு
ரந்த ராதி யின்பமும்
ஏக நின்க ழல்லி ணைய
லாதி லேனென் எம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து
குஞ்சி யஞ்ச லிக்கணே
ஆக என்கை கண்கள் தாரை
யாற தாக ஐயனே. 2

என்னுடைய தலைவனே! சிவானந்தப் பேற்றினை விரும்பித் தேவேந்திரன் உள்ளிட்ட தேவர்தம் இன்பங்களையும் யான் உன்னிடம் வேண்டவில்லை. ஏகனே! உன் திருவடிகள் இரண்டல்லாமல், வேறொரு துணையுமில்லேன். என்னுடைய பெருமானே! உடல் பிளந்து வேறாகி, நடுக்குற்று, என் கைகள் தலைமேல் கூப்புதலைச் செய்வதாகுக! என் கண்களிலிருந்து வீழ்கின்ற நீர்த்தாரைகள், ஆறெனப் பெருகுவதாகுக!

77

ஐய நின்ன தல்ல தில்லை
மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை
பொய்ம்மை யேனென் எம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க
வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த அன்ப ரன்பெ
னக்கு மாக வேண்டுமே. 3

ஐய! உன்னுடைய திருவருளைப் பெறவேண்டும் என்னும் பற்றேயல்லாமல், வேறொரு பற்றும் என் உள்ளத்தில் இல்லை. வஞ்சகனாகிய என் உள்ளத்தில் பொய் கலந்திருந்ததே தவிர மெய் கலந்ததில்லை. பொய்ம்மையுடையேன். எம்பிரானே! மை தீட்டிய கண்களையுடைய உமையம்மை விளங்குகின்ற இடப்பாகம் உடையவனே! உன்னுடைய திருவடிகளிடத்து மெய்யன்பு செலுத்திக் கலந்த அடியவரை நிகர்த்த மெய்யன்பானது அடியேனுக்கும் உண்டாக வேண்டும்.

78

வேண்டும் நின் கழற்க ணன்பு
பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயி னேனை
ஆவ வென்ற ருளுநீ
பூண்டுகொண் டடிய னேனும் போற்றி
போற்றி யென்று மென்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின்வ ணங்கவே. 4

தலைவனே! அடியேன் எண்ணற்ற முறைகளாக இறந்து இறந்து, பிறந்து பிறந்து துன்புறுவேனாயினும், உன்னுடைய அடிமை பூண்டு எப்போதும் வணக்கம் வணக்கம் என்று உன் திருவடிகளை வணங்கிட வேண்டும். அவ்வாறு உன் திருவடிகளை வணங்கிட, அதற்கும் என்னுள்ளத்தில் அன்பினை உண்டாகச் செய்தல் வேண்டும். என்னிடத்துள்ள பொய்ம்மையைப் போக்க வேண்டும்; நாயினேனை மெய்ம்மையாகவே ஆட்கொண்டு, ஐயோ பாவம் என்று என்பால் இரக்கப்பட்டு அருள் செய்யவேண்டும்.

79

வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும்
வேதம் நான்கும் ஓலமிட்
டுணங்கும் நின்னை எய்த லுற்று
மற்றோ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன
வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க
என்கொ லோநி னைப்பதே. 5

செறிந்த கொங்கைகளையுடைய உமையம்மையின் ஒரு பாகனே! உன்னை இந்த மண்ணகமும் அந்த விண்ணகமும் துதிக்கும். உன்னைத் தவிரப் பிறிதொரு மெய்ப்பொருள் இன்மையால், மறைகள் நான்கும் உன்னை அடைக்கலம் புகவேண்டி, அபயமிட்டு வாடி நிற்கும். யாங்கள் உன்னைத் துதித்து, உன் திருவடிகளை விடாமல் பற்றிக்கொண்டு, விடமாட்டோம் என் கையில், எமக்கு முன்னே வந்து நின்று, அருள் செய்வதற்கு யோசிப்பதன் காரணம் என்னவோ?

80

நினைப்ப தாக சிந்தை செல்லு
மெல்லை யேய வாக்கினால்
திணைத்த னையு மாவ தில்லை
சொல்ல லாவ கேட்பவே
அனைத்துலகு மாய நின்னை
ஐம்பு லன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்பு றத்த
தெந்தை பாத மெய்தவே. 6

எம் தந்தையே! உன்னைப் பற்றி மனம் எந்த அளவு நினைக்கிறதோ, அந்த அளவு நாவினால் உரைக்க முடிவதில்லை. அப்படி உரைத்தல், தினையளவும் பொருந்துவதாயில்லை. அந்தோ எல்லா உலகங்களுமாகப் பரவிநின்ற உன்னை, ஐம்புலன்களாலும் உணர முடிவதில்லை. உன் திருவடிகளை அடைவதற்கு, அவை எவ்வெவ்வளவின? எவ்வெவ்விடத்தன?

81

எய்த லாவ தென்று நின்னை
எம்பி ரானிவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி
மற்றோ ருண்மை யின்மையிற்
பைத லாவ தென்று பாது
காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்க ணொன்றும்
வண்ண மில்லை ஈசனே. 7

எம்முடைய தலைவனே! உன்னை நானும் அடையப் பெறுவதுதான் எந்நாளோ? நெஞ்சகத்தில் வஞ்சகத்தை உடைய இவ்வடியேனுக்கு, உன்னைச் சரண் புகுந்தாலன்றிப் பிழைப்பதற்கு மற்றொரு மெய்ந்நெறி இல்லாமையால், 'இவன் துன்பமடைவான்' என்று கருதி, அடியேனைப் பாதுகாத்தற்காக இரங்கியருள வேண்டும். பாவியேனுக்கு உன்னை அடையும்வழி, உன் திருவுளம் இரங்கி யருளுதலைத் தவிரவும் வேறொன்றும் இல்லை. முன்னைப் பழம்பொருளே!

82

ஈச னேநீ அல்ல தில்லை
இங்கும் அங்கு மென்பதும்
பேசி னேனோர் பேத மின்மை
பேதை யேனென் எம்பிரான்
நீச னேனை ஆண்டு கொண்ட
நின்ம லாவோர் நின்னலால்
தேச னேயோர் தேவ ருண்மை
சிந்தி யாது சிந்தையே. 8

முன்னைப் பரம்பொருளே! இவ்வுலகத்தும், அவ்வுலகத்தும், எவ்வுலகத்தும் நீயல்லாமல் வேறெவரும் இலர் என்பதாக அறிவிலியாகிய யான், எவ்வித வேறுபாடும் இல்லாமல் உன்னிடத்தில் முறையிட்டுக் கொண்டேன். எம்முடைய தலைவனே! கடைப்பட்ட புலையனேனை ஆண்டுகொண்ட மாசற்றவனே! ஒளிமயமானவனே! உன்னைத் தவிர வேறொரு தெய்வத்தை, என் உள்ளமானது இருப்பதாக எண்ணாது.

83

சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீரில் ஐம்பு லன்களான்
முந்தை யான காலம் நின்னை
எய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி முந்தி லேனென்
உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை யின்னம்
எய்த லுற்றி ருப்பனே. 9

தலைவனே! மனத்தாலும், அந்த மனம் எண்ணுவதால் நிகழும் செயலாலும், சான்றோர் உரைக்கச் செவிமடுக்கும் கேள்வியாலும், வாக்காலும், சிறப்பில்லா ஐந்து புலன்களாலும் முந்தைய நாளில் உன் திருவடிகளைச் சரணடையாத மூர்க்கனே ஆகிய யான், வெந்து மடிந்தேனில்லை. எனது மனம் வெட்கப்பட்டு, அலறினேனில்லை. எம்முடைய தந்தையாகிய உன்னை, இன்னமும்கூட அடைதலை எண்ணி இருக்கின்றேன்.

84

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை
ஆண்டு கொண்ட நின்னதாள்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ
னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டு யானு முண்டி
ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்கண் என்கண்
என்ப தென்ன விச்சையே. 10

இரும்பு நெஞ்ச வஞ்சகனாகிய என்னை, உன் திருவடிகள் ஆட்கொண்டன. அந்தத் திருவடிகளாகிய கருப்பஞ்சாறோ, எனக்குப் பேரின்பத்தைத் தந்தும், யான் விலகலானேன். உலகத்தில் நெருப்பும் உண்டு. யானும் இருக்கின்றேன். தீக்குளித்தல் என்னும் வழக்காறு உலகத்தில் உண்டெனினும், யான் அவ்வாறு செய்தேனில்லை. உன்னிடத்தில் செய்யத்தக்கதோர் அன்பெனும் பெருவிருப்பம் என்னிடத்தில் இருப்பதென்பது, மயக்க வித்தையே.

(9) ஆனந்த பரவசம்
(கலிநிலைத்துறை)

ஆனந்தம் – பேரின்பம்; பரவசம் – பெருமகிழ்ச்சி. எனவே, ஆனந்த பரவசம் என்பது பேரின்பப் பெருமகிழ்ச்சி எனப்படும். சிவானந்தத்தில் மூழ்கித் திளைப்பது – சிவானந்தத்தை எண்ணியெண்ணி, அந்நிலையினை அடைய முயல்வது

சீவன்அழியக்கூடியது; சிவம் நிலைபேறுடையது. சீவன் அழிந்து, சிவானந்த பரவசம் உண்டாவதை விரித்துரைப்பதே இப்பகுதி.

85

விச்சுக் கேடு பொய்க்காகா
தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானா ரெல்லாரும்
வந்துன் தாள்சேர்ந்தார்
அச்சத் தாலே ஆழ்ந்திடு
கின்றே னாரூரெம்
பிச்சைத் தேவா என்நான்
செய்கேன் பேசாயே. 1

பொய் என்னும் விதைக்கு அழிவு நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே, இவ்வுலகில் என்னை வைத்துவிட்டாய். உன்னுடைய விருப்பத்துக்கு ஆளானவர் அனைவரும், வந்தே உன் திருவடிகளை அடைந்துவிட்டனர். யானோ பிறப்பெனும் பெரும்பயத்தால் துயரில் மூழ்கியுள்ளேன். திருவாரூர் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளிப் பிச்சைக் கோலம் கொண்ட எம்முடைய தலைவனே! என்னதான் இந்த அடியேன் செய்யக்கடவது? அதுகுறித்து நீயும் வாய்திறந்து கூறுவாயாக!

86

பேசப் பட்டேன் நின்னடி
யாரில் திருநீறே
பூசப் பட்டேன் பூதல
ராலுன் அடியானென்று
ஏசப் பட்டேன் இனிப்படு
கின்ற தமையாதால்
ஆசைப் பட்டேன் ஆட்பட்
டேனுன் அடியேனே. 2

உன்னடிமையாகிய யான், உன்னடியாருள் ஒருவனென்றே பிறரால் கூறப்பட்டேன். என்னுடல் முழுமையும் எப்போதும் திருவெண்ணீறே பூசப்பட்டேன். உலக மக்களால் உன்னுடைய அடியவனென்றே பழிக்கப்பட்டேன். இனிமேலும் யான் துன்பப்படும் நிலையைத் தாங்க இயலாமையால், உன்னடி சேர்வதற்கே உன்மேல் பெருவிருப்புக் கொண்டேன். அடியேன் உன்னிடத்தில் அடிமை நிலைக்கு ஆளானேன்.

87

அடியேன் அல்லேன் கொல்லோதானெனை
ஆட்கொண் டிலைகொல்லோ
அடியா ரானா ரெல்லாரும்
வந்துன் தாள்சேர்ந்தார்
செடிசேர் உடலமிது நீக்கமாட்டேன்
எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக்
காணுமாறு காணேனே. 3

நாயடியேன் உனக்குத் தொண்டனல்லேனோ? நீயும் அடியேனை ஆட்கொண்ட தில்லையோ? உனக்குத் தொண்டரானார் அவைனரும் வந்தே, உன்னுடைய திருவடிக்களைச் சரண்புகுந்தனர். இழவுடையதும் பாவப் பட்டதுமாகிய உடலாகிய இதனைப் போக்கிக் கொள்ளவும் மாட்டேன். எங்கள் சிவபுரத்தானே! வன்மனம் கொண்டவனாகிய அடியேன், உன்னை என் இரண்டு கண்களாலும் குளிருமாறு கண்டு, களிப்படையும் வழியினைக் கண்டிலேனே.

88

காணு மாறு காணேன்உன்னை
அந்நாள் கண்டேனும்
பாணே பேசி என்தன்னைப்
படுத்ததென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆரமுதே
அத்தாசெத்தே போயினேன்
ஏணா ணில்லா நாயினேன்
என்கொண்டெழுகேன் எம்மானே. 4

பாண்டியனுக்காக அந்த நாளில் குதிரை வாங்க வந்தபோது, அடியேன் உன்னைக் கண்டிருந்தாலும், இந்த நாளில் அடியேன் உன்னைக் காணும் வழி கண்டிலேன். பயனிலவே பேசி, என்னை நானே தாழ்த்திக் கொண்டதன் காரணம் என்னவோ? என் அறிவின்மையோ, மேலான ஒளியே! ஆணுருவே! பெண்ணுருவே! அருமை வாய்ந்த அமுதமே! அப்பா! யான் மடிந்தே ஒழிந்தேன். பெருமைக்குரிய நாணம் என்பது இல்லாத நாயடியேன், எதனைக் கொண்டு உயர்வேன்? எம்பெருமானே!

89

மானேர் நோக்கி யுடையாள்பங்கா
மறையீறறியா மறையோனே
தேனே அமுதே சிந்தைக்கரியாய்
சிறியேன் பிழைபொறுக்குங்
கோனே சிறிதே கொடுமைபறைந்தேன்
சிவமா நகர்குறுகப்
போனா ரடியார் யானும்பொய்யும்
புறமே போந்தோமே. 5

மானை நிகர்த்த பார்வையினை உடையவளும், அனைத்துலகங்களையும் பாதுகாத்தருளும் உமையம்மையின் ஒரு பாகனே! மறைகளின் இறுதியும் அறியவொண்ணாத மறைநாயகனே! தித்திக்கும் தேனே! தெவிட்டாத அமுதமே! நெஞ்சில் நினைப்பதற்கும் அரியவனே! சிறியேனின் தவற்றைப் பொறுத்துக் கொள்ளும் தலைவனே! உன்னைப் பற்றிச் சில வன்சொற்களைக் கூறினேன். உன்னடியார் அனைவரும், சிவபுரம் சென்றடைந்தனர். ஆனால், யானும் எனது பொய்யும் புறமாகவே போய்விட்டோம்.

90

புறமே போந்தோம் பொய்யும்
யானும் மெய்யன்பு
பெறவே வல்லேன் அல்லா
வண்ணம் பெற்றேன்யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார்
மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழுவாதுசிவனே
நின்தாள் சேர்ந்தாரே. 6

எனது பொய்யும் யானும் புறமாகவே போய்விட்டோம். மெய்யான அன்பினைப் பெறுவதற்கே வல்லமையுடையேன் அல்லாத தன்மையைப் பெற்றேன். 'யான்' என்னும் ஆணவம் நீங்குமாறு உன்னை வந்தடைந்த அடியார், வேறொன்றினை அறியாதவராய், சிறப்பான செயல்களையே செய்து, நெறியுடன் வந்து, சிவபெருமானே! உன் திருவடிகளை அடைந்தனர்.

91

தாராய் உடையாய் அடியேற்
குன்தா ளிணையன்பு
பேரா வுலகம் புக்காரடியார்
புறமே போந்தேன்யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தாங்
குன்தா ளிணையன்புக்
காரா அடியேன் அயலே
மயல்கொண் டழுகேனே. 7

என்னை அடிமையாக உடையவனே! அடியேனுக்கு உன்னுடைய திருவடிகள் இரண்டுக்கும், அன்பு செலுத்த அருளினை வழங்குவாயாக! உன்னடியார் அனைவரும், வீட்டுலகத்தைச் சென்றடைந்தனர். அடியேனோ, புறத்தே நீங்கினேன். ஊருக்குள் உள்ள நல்ல பசுக்கள் புல்லை மேய, அவற்றோடு கலந்த குருட்டுப் பசுவும் மேய்ந்தாற்போல, உன்னுடைய திருவடிகள் இரண்டின் அன்புக்கு, ஏங்கும் அடியேன், புறத்தே மயக்கங்கொண்டு அழுது புலம்புகின்றேனே.

92

அழுகேன் நின்பால் அன்பாம்
மனமாய் அழல் சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார்
பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா
ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண்
டுன்னைப் பணிகேனே. 8

அனலிலிட்டப்பட்ட மெழுகினைப் போல் உருகுகின்றவராய், ஒளியுடைய, பொன்போல் அழகிய உன் திருவடிகளைக் கண்டு, வணங்கியவாறே உன்னைப் பின்பற்றித் தொடர்ந்த மெய்யடியாரோடும் நானும் பின்பற்றித் தொடர்ந்து செல்லாமல், உன்னிடத்தில் அன்புடையவனாய் மனங்கொண்டு, அழுது நின்றேன். பாழாய்ப் பிறந்தவனாகிய யான், எதைக் கொண்டு உன்னை வணங்குவேன்?

93

பணிவார் பிணிதீர்த் தருளிப்
பழைய அடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி
அதுவும் அரிதென்றால்
திணியார் மூங்கி லனையேன்
வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை
தாராய் பொய்தீர் மெய்யானே. 9

பொய்நீங்கிய மெய்யானே! உன்னைப் பணிவுடன் தொழுகின்ற பழைமையுடைய அடியவர்க்குப் பிறவிநோயைப் போக்கியருளி, உன்னுடைய அழகு மிகுந்த திருவடிகளைத் தருகின்றாய். அவ்வாறு தருவதும் அரிதென்றால், செறிந்த மூங்கிலை நிகர்த்தவனாகிய அடியேனின் தீவினைகளைத் தூளாக்கி, விரைவாக வந்தே, குளிர்ச்சி நிறைந்த உன் திருவடிகளைத் தந்தருள்வாயாக!

94

யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெற லாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந் துறுமாறே. 10

யானே பொய்ம்மையுடையேன்; எனது நெஞ்சமும் பொய்ம்மையுடையது; என்னுடைய அன்பும் பொய்ம்மையுடையது. இனிக்கின்ற தேனே! சுவைமிகுந்த அமுதமே! கருப்பஞ்சாற்றின் தெளிவே! அடியவர்க்கு இனிக்கின்ற பெரியோனே! பொய்யனே ஆனாலும், தீவினையேன் நெஞ்சுருகி, கண்கள் நீர்சொரிய அழுதால் ஒருகால் உன்னை அடையலாமோ? நாய்டியேன் அவ்வாறே உன்னை வந்தடையுமாறு அருள்புரிவாயாக!

(10) ஆனந்தாதீதம்

(எண்சீர் விருத்தம்)

ஆனந்தாதீதம் – ஆனந்தம் + அதீதம். ஆனந்தம் – பேரின்பம்; அதீதம் – பெருக்கம். எனவே, ஆனந்தாதீதம் என்பதற்குப் பேரின்பப் பெருக்கம் என்று பொருள் கூறலாம். பேரின்பத்தை அறியவியலாது; அது உணரவியன்றது. பேரின்பத்தை முழுமையாகச் சொல்ல முடியாது. ஏனெனில், அஃது உணர்ந்து சுவைக்கத்தக்கது. அத்தகைய பேரின்பத்தினை இயன்ற மட்டும் சொல்லில் வடித்துக் காட்டுவதே இந்தப் பகுதி.

95

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
 வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
 மெய்ம்மை அன்பருன் மெய்ம்மை மேவினார்
ஈறி லாதநீ எளியை யாகிவந்
 தொளிசெய் மானுட மாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
 கடைய னாயினேன் பட்ட கீழ்மையே. 1

மாறுபாடில்லாத பெருங்கருணைப் பெருவெள்ளமே! முந்திக் கொண்டு வந்து உன்னுடைய தாமரை மலரின் தன்மையைக் கொண்ட திருவடிகள் இரண்டிடத்தும் வேறுபாடில்லாத பரிபக்குவமடைந்த உன்னுடைய மெய்ம்மை அடியார், உனது மெய்ம்மைத்தன்மையை அடைந்தனர். இறுதி என்பது இல்லாத நீ எளிமையுடையவனாய் எழுந்தருளி, ஒளி செய்கின்ற மானுட உருவாக வந்து, கண்ணோட்டம் செலுத்தியும், உடையாத உள்ளத்தை உடைய நாயேன் இழிந்தவனாயினேன். அதற்குக் காரணமாவது, யான் உற்ற தீவினையே.

96

மையி லங்குநற் கண்ணி பங்கனே
 வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலால்
 அரியை என்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
 மெய்ம்மை அன்பருள் மெய்ம்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
 போவ தோசொலாய் பொருத்த மாவதே. 2

மையிட்டு விளங்குகின்ற அழகிய கண்களைக் கொண்ட உமையம்மையைப் பாகமாக உடையவனே! வந்தென்னை அடிமை கொண்ட பின்னர், இளமையும் மென்மையும் கொண்ட கையில் விளங்குகின்ற பொன்னால் செய்யப்பட்ட கிண்ணமென்று நினைப்பதைத் தவிர, நீ மிகவும் அருமை யுடையவன் என்று உன்னை நினைக்கின்றிலேன். திருமேனியில் விளங்குகின்ற திருவெண்ணீற்று மேலவனே! உன் மெய்யடியார், உனது மெய்த்தன்மையை அடைந்தனர். பொய் விளங்கும் இவ்வுலகில், பொய்யனேனை இருத்திவிட்டு, நீ அங்குப் போய்விடுவதோ? பொருத்தமான ஒன்றை நீ சொல்வாயாக!

97

பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போத என்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி இங்கெனை
இருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே. 3

அடியேன் உன்னருள் பெறப் பொருத்தமில்லாதவன். உள்ளத்தில் பொய்ம்மையை உடையவன். வருகவென அருள்பொழிந்து நோக்கியபோதும், வருத்தம் இல்லாதவன். நெஞ்சகத்தில் வஞ்சகத்தை உடையவன். செத்தொழிந்து போகாதவன். தாமரை மலர்த் திருவடிகளை உடையவனே! செவ்வரக்கின் சிவந்த திருமேனியை உடையவனே! நீ அருளிய அடியவரும் நீயும் சிவபுரத்திற்கு எழுந்தருளவும், இங்கு அடியேனை இருக்கச் செய்தாய். இவ்வாறு நீ செய்தது முறையாகுமோ? என்னுடைய தலைவனே! வம்பனேனின் கெடுவினைக்கு முடிவென்பதுதான் இல்லையோ?

98

இல்லை நின்கழற் கன்ப தென்கணே
ஏலம் ஏலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை எம்பிரான்
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னும் உன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே. 4

உன் திருவடிகட்குச் செய்வதாகிய மெய்யான அன்பானது என்னிடத்தில் சிறிதுமில்லை. மயிர்ச்சாந்து பொருந்திய அழகிய கூந்தலையுடைய உமையம்மையைப் பாகமாகக் கொண்டவனே! வன்மையான கல்லை மென்மையான கனியாக்கும் வித்தையினால், என்னையும் உன் திருவடிகட்கு அன்பனாக்கினாய். எம் தலைவனே! எதனைக் கருவியாகக் கொண்டு, நான் எந்தச் செயலைச் செய்தாலும், உன் பெருங்கருணைக்கு வரம்பில்லை. மாசற்ற பரவெளியானே! இனியேனும் அடியேனுக்கு உன்னுடைய திருவடிகளைக் காண்பித்து, இன்னல் பிறப்பறுத்து அருள்புரிய வல்லமை உடையாயே.

99

வான நாடரும் அறியொ ணாதநீ
மறையி லீறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
என்னை யின்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே. 5

விண்ணுலகத் தேவராலும் அறியவொண்ணப்படாத நீ, மறைகளின் இறுதியானாலும் தொன்மையாகவே உணரப்படாத நீ, மற்றைய உலகத்தவராலும் தெரிந்து கொள்ளப்படாத நீ, அடியேனை இனிமையுடன் ஆண்டு கொண்டாய். எனது ஊனுடம்பைக் கூத்தாடச் செய்தாய். அடியேன் உள்ளம் நெகிழ்ந்து, உன்னைச் சுவைக்கச் செய்தாய். மெய்ஞ்ஞானத்தால் உண்டாகிய பேரானந்தத்தால், கூத்தாடச் செய்தாய். உலகப் பற்றால் என்னிடமிருந்த அஞ்ஞானம் நீங்கி, மெய்ஞ்ஞானம் தோன்றியது.

100

விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலிற்
பிச்ச னாக்கினாய் பெரிய அன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே. 6

என்னை அடிமையாக உடைய தலைவனே! வானுலகம், நிலவுலகம் ஆகியவற்றை முழுமையாகவும், விதை என்பதொன்று இல்லாமலே உண்டாக்குவாய். உண்டாக்கியதைக் காத்திடுவாய்; அழித்திடுவாய். நெஞ்சகத்தில் வஞ்சகத்தை உடைய பேரிழிவுடையேனாகிய என்னை, உன் திருக்கோவிலின் முன்னிலையில், உழன்று திரியும் பெரும் பித்தனாக்கினாய். உன்னிடம் பேரன்பு கொண்ட அடியவருக்கு உரியவனாகச் செய்தாய். ஒருவர் தாம் வளர்த்தது, எதற்கும் பயன்படாத மரமேயானாலும், அதனை வெட்டிவிட மாட்டார். அடியேனும் அத்தகைய் மரத்தைப் போன்றவனே!

101

உடைய நாதனே போற்றி நின்னலால்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னோபணி போற்றி உம்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினுங்
கடைய னாயினேன் போற்றி என்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
அடிய னாக்கினாய் போற்றி ஆதியும்
அந்த மாயினாய் போற்றி யப்பனே. 7

என்னை அடிமை கொண்ட தலைவனே! உன்னை வணங்குகிறேன். உன்னைத் தவிர அடியேனுக்குப் பற்றுக்கோடென வேறொரு பொருள்தான் இனியும் வாய்க்கப் பெறுவதுண்டோ? அவ்வாறு இருப்பதாயின், அதை எனக்குக் கூறுவாயாக! வணங்குகிறேன். விண்ணுலகத் தேவர்க்கும் மேலான தேவாதி தேவனே! வணங்குகிறேன். யானோ, யாவரேயாயினும் அவரினும் கடைப்பட்டவனாயினேன். வணங்குகிறேன். என்னுடைய மிகப் பெரிய அருட்கடலே! வணங்குகிறேன். என்னை உன்னுடைய அடித்தொண்டன் ஆக்கினாய். வணங்குகிறேன். என் அப்பனே! முதலும் முடிவுமாகி நின்றாய். உன்னை வணங்குகிறேன்.

102

அப்ப னேயெனக் கமுத னேஆ
னந்த னேஅகம் நெகஅள் ளூறுதேன்
ஒப்ப னேஉனக் குரிய அன்பரில்
உரிய னாயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே. 8

எனக்கு அப்பனே! அமுதமானவனே! பேரின்ப வடிவினனே! என்னுடைய உள்ளம் உருகுமாறு நிறைவாகச் சொரிகின்ற நறுந்தேனை ஒத்தவனே! உனக்குரிய அடியவருள் நானும் ஓர் உரிமையுடையவனாய் உன்னைச் சுவைக்குமாறு நிலைத்ததாகிய ஒப்பற்ற அறிவு வடிவினனே! மின்னுகின்ற செஞ்சடையினை உடையவனே! உற்ற துணையாளனே! அடியவர்தம் நலிவுக் காலத்தில், உறுபயனாக விளங்கும் சேமநிதியானே! எங்கள் அரசனே! துன்பங்களே மிகுந்த இவ்வுலகில், வருந்துமாறு என்னை வைப்பதோ? எனக்கு அதனைக் கூறுவாயாக!

103

மன்ன எம்பிரான் வருக என்னெனை
மாலும் நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன எம்பிரான் வருக என்னெனை
முழுதும் யாவையும் இறுதி யுற்றநாள்
பின்ன எம்பிரான் வருக என்னெனைப்
பெய்க ழற்கண்அன் பாயென் நாவினாற்
பன்ன எம்பிரான் வருக என்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே. 9

எம்முடைய தலைவனே! நிலைபெற்றவனே! உன்னுடைய அடியேனாகிய என்னை, 'வருக' என்று உன்னிடம் அழைத்துக் கொள்வாயாக! திருமாலும், நான்கு முகங்களைக் கொண்ட ஒருவனாகிய பிரமனும் ஆகிய யாவருக்கும் முன்னவனே! எம்முடைய தலைவனே! உன்னுடைய அடியேனாகிய என்னை, 'வருக' என்று உன்னிடம் அழைத்துக் கொள்வாயாக! உன் திருவடிகளுக்கு அன்புடையவனாய், எனது நாவினைக் கொண்டு உனது புகழைப் பேசவும், உன்னுடைய சிறப்புகளைப் பாடவும் தீவினையை அழிப்பவனே! எம்முடைய தலைவனே! உன்னுடைய அடியேனாகிய என்னை, 'வருக' என்று உன்னிடம் அழைத்துக் கொள்வாயாக!

104

பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும்நான் போற்றி அம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
கூடு நீர்க்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

நான் உன்னைப் பாடுதல் வேண்டும்; உன்னை வணங்குகிறேன். நான் உன்னையே பாடி, உள்ளம் அழிந்து அழிந்து, கரைந்து, உடல் நெகிழ்ந்து நெகிழ்ந்து கூத்தாட வேண்டும்; உன்னை வணங்குகிறேன். தில்லைப் பொன்மன்றில் ஆனந்த தாண்டவம் ஆடுகின்ற உன் திருவடித் தாமரைகளை நாயடியேன் வந்தடைதல் வேண்டும்; உன்னை வணங்குகிறேன். இந்தப் பாழும் புழுக்கூடாகிய உடலினின்றும் என்னைப் பிரித்திடு; உன்னை வணங்குகிறேன். பொய்ம்மைகள் எல்லாவற்றையும் அடியேன் விட்டிடல் வேண்டும்; உன்னை வணங்குகிறேன் உன்னுடைய மெய்யடியார் அனைவர்க்கும் மெய்யாய் விளங்குபவனே! எனக்கு வீடு பேற்றைத் தந்தருள்வாயாக! உன்னை வணங்குகிறேன்.

திருச்சிற்றம்பலம்

6. நீத்தல் விண்ணப்பம்

(உத்தரகோசமங்கையில் அருளியது)

பிரபஞ்ச வைராக்கியம்

(கட்டளைக் கலித்துறை)

நீத்தல் – நீக்கல், ஒழித்தல், துறத்தல்; விண்ணப்பம் – வேண்டுகோள், முறையீடு. எனவே, நீத்தல் விண்ணப்பம் என்பது, உலகப் பற்றினை நீக்க, இறைவனிடம் வைக்கும் வேண்டுகோள் ஆகும். பற்று விடற்குப் பற்றற்றான் பற்றினைப் பற்றுதல் வேண்டும். பற்றினை நீக்கினாலே, பரஞானம் கிடைக்கும். உலகப் பொருள்களிடம் தாம் வைத்திருந்த பற்றினை நீக்கியருளுமாறு, சிவபெருமானிடம் மாணிக்கவாசகப் பெருந்தகை வேண்டுகோள் விடுவதே, நீத்தல் விண்ணப்பம். இப்பகுதியில் ஐம்பது பாடல்கள் உள்ளன. அனைத்தும் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

105

கடையவ னேனைக் கருணையி
னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்
பிரான்என்னைத் தாங்கிக்கொள்ளே. 1

கடைப்பட்டவனாகிய அடியேனைப் பெருங்கருணையினால் தானே வந்து, ஆட்கொண்டு அருளிய இடப வாகனனே! மீளவும் என்னைக் கைவிட்டு விடுவாயோ? வலிமையுடைய வேங்கைப் புலியின் தோலை ஆடையாகக் கொண்டவனே! நிலைபெற்று விளங்குகின்ற உத்தரகோசமங்கை என்னும் திருத்தலத்துக்கு மன்னனே! மின்னுகின்ற செஞ்சடை உடையானே! நான் மிகவும் தளர்ச்சியடைந்து விட்டேன். எம்முடைய தலைவனே! என்னை வீழுமாறு செய்யாமல் தாங்கிக் கொள்வாயாக!

106

கொள்ளேர் பிளவக லாத்தடங்
கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளேன் எனினும் விடுதிகண்
டாய்நின் விழுத்தொழும்பின்
உள்ளேன் புறமல்லேன் உத்தர
கோசமங் கைக்கரசே
கள்ளே ஒழியவும் கண்டுகொண்
டாண்டதெக் காரணமே. 2

உத்தரகோசமங்கை என்னும் திருத்தலத்தை அருளாட்சி செய்யும் மன்னவனே! உள்ளத்தில் கள்ளத்தைக் கொண்டவனாகிய யான் உன்னைவிட்டு விலகியிருக்கவும், அந்நிலையை நீதான் பார்த்தபடி என்னை ஆட்கொண்டதுதான் எந்தக் காரணத்தைக் கொண்டோ? மேலான உனதடிமையென உள்ளேனாயினேன்; புறத்தே உள்ளேனல்லேன். அழகுடைய பிளவுபடாப் பெருங்கொங்கைகளையுடைய மகளிரின் கொவ்வைப்பழ உதடுகளின் மேலுள்ள பற்றினை விடேன் என்றாலும், என்னை நீதான் கைவிட்டு விடுவாயோ?

107

காருறு கண்ணியர் ஐம்புலன்
ஆற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண்
டாய்விளங் குந்திருவா
ரூருறை வாய்மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க
என்னை வளர்ப்பவனே. 3

தலப்பெருமையில் சிறந்து விளங்கும் திருவாரூரில் உறைகின்றவனே! நிலைபெற்று விளங்கும் உத்தரகோச மங்கைக்கு மன்னவனே! கச்சினை உடைய, அணிகலன்களை அணிந்த கொங்கைகளைக் கொண்ட உமையம்மையின் ஒரு பாகனே! அடியேனை அன்புடன் வளர்ப்பவனே! கருமை நிறமுடைய கண்களைக் கொண்ட கன்னியரின், ஐம்புலன்கள் ஆகிய நதிக்கரையில், வேரூன்றி நிற்கின்ற மரமாக உள்ள அடியேனைக் கைவிட்டுவிடுவாயோ?

108

வளர்கின்ற நின்கரு ணைக்கையில்
வாங்கவும் நீங்கியிப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதிகண்
டாய்வெண் மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்ற நீள்முடி உத்தர
கோசமங் கைக்கரசே
தெளிகின்ற பொன்னுமின் னுமன்ன
தோற்றச் செழுஞ்சுடரே. 4

வெண்மை நிறம் பொருந்திய சந்திரப்பிறை ஒன்று ஒளிவீசுகின்ற, நெடிய சடைமுடியை உடைய உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! மாசற்ற பொன்னையும், மின்னலையும் நிகர்த்த தோற்றத்தையுடைய செம்மையான ஒளிவடிவே! வளர்ந்துவரும் உன் அருட்கரங்களினால் என்னைச் சேர்த்தணைக்கவும் அகன்று, இவ்வுலக வாழ்வில் மிளிர்ந்து வரும் என்னை விட்டுவிடுவாயோ?

109

செழிகின்ற தீப்புகு விட்டிலிற்
சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற என்னை விடுதிகண்
டாய்வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி உத்தர
கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு
தூட்ட மறுத்தனனே. 5

மணம் பொருந்திய வாயையும், ஆறு கால்களையும் உடைய வண்டுகள் கிண்டுகின்ற அன்றலர்ந்த மலர்களைத் திருமுடியில் அணிந்திருக்கும் உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! எனது வழியில் நின்று, உனது அருளாகிய அரிய அமுதத்தை நீ என்றனுக்கு உண்பிக்க, யான் அதனை உண்ண மறுத்து விட்டேனே. பெருகி எரிகின்ற பெருநெருப்பில் வீழ்கின்ற விட்டில் பூச்சியைப் போலக் களிப்பூட்டும் மொழிகளைப் பேசும் கன்னியர்பால் பன்னாட்களும் வீழ்கின்ற பாவியேனைக் கைவிட்டு விடுவாயோ?

110

மறுத்தனன் யானுன் அருளறி
யாமையில் என்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண்
டாய்வினை யின்தொகுதி
ஒறுத்தெனை ஆண்டுகொள் உத்தர
கோசமங் கைக்கரசே
பொறுப்ப ரன்றேபெரி யோர்சிறு
நாய்கள்தம் பொய்யினையே. 6

உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! சிறுமை படைத்த நாய்களை நிகர்த்தவரின் பொய்ம்மைகொள் ஒழுகலாறுகளைச் சான்றோர் பெருமக்கள் பொறுத்துக்கொள்வர் அல்லரோ? யான் எனது அறியாமையால், உனது திருவருளை மறுத்துவிட்டேன். என்னுடைய மாணிக்கமே! நீ என்னை வெறுத்தொதுக்கிக் கைவிட்டுவிடுவாயோ? அடியேனின் தீவினைகளை ஒழித்து, என்னை ஆட்கொள்ள வேண்டும்.

111

பொய்யவ னேனைப் பொருளென
ஆண்டொன்று பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண்
டாய்விட முண்மிடற்று
மையவ னேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி
யேன்பவந் தீர்ப்பவனே. 7

நஞ்சினை உண்டு, கண்டத்தில் கருமை நிறம் கொண்டவனே! நிலைபெற்று விளங்குகின்ற உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! செந்நிறம் வாய்ந்தவனே! சிவபெருமானே! சிறியேனின் பிறவிப் பெரும்பிணியைப் போக்குபவனே! பொய்யவனாகிய அடியேனை ஒரு பொருளாகக் கருதி ஆண்டுகொண்டு, என்னுடைய தீவினையாகிய ஒன்றை மறைத்துக்கொண்ட மெய்ம்மை யானவனே! நீ என்னைக் கைவிட்டுவிடுவாயோ?

112

தீர்க்கின்ற வாறென் பிழையைநின்
சீரருள் என்கொலென்று
வேர்க்கின்ற என்னை விடுதிகண்
டாய்விர வார்வெருவ
ஆர்க்கின்ற தார்விடை உத்தர
கோசமங் கைக்கரசே
ஈர்க்கின்ற அஞ்சொடச் சம்வினை
யேனை இருதலையே. 8

பகைவர் அஞ்சுமாறு ஒலிக்கின்ற கிண்கிணி மாலையை அணிந்த இடபவாகனனே! உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! ஐம்பொறிகளும், அவற்றால் உண்டாகும் புலன் நுகர்வுகளின் அச்சமும் தீவினையேனை இருபக்கங்களும் எதிரெதிராக இழுக்கின்றன. உன்னுடைய சிறந்த அருளானது, என்னுடைய குற்றங்களைப் பொறுப்பதும் எவ்வாறோ என்று, உள்ளம் நடுங்குகின்ற அடியேனை நீயும் கைவிட்டுவிடுவாயோ?

113

இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்
பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண்
டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வலன்
ஏந்திப் பொலிபவனே. 9

பெருமையுடைய மூன்று உலகங்களுக்கும் ஒப்பற்ற ஒரே தலைவனே! நிலைபெற்று விளங்குகின்ற உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! போர் செய்வதற்குரிய, கூரிய முனைகளோடு கூடிய, மூன்று இலைகளின் வடிவத்தைக் கொண்ட சூலாயுதத்தை, வலப்பக்கத்தில் தாங்கி அழகொழுகுபவனே! இருபக்கங்களின் எரியினிடை அகப்பட்ட எறும்பினைப் போல, உன்னைவிட்டு நீங்கிய தலைவிரி கோலனேனைக் கைவிட்டுவிடுவாயோ?

114

பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற்
றாக்கையைப் போக்கப்பெற்று
மெலிகின்ற என்னை விடுதிகண்
டாய்அளி தேர்விளரி
ஒலிநின்ற பூம்பொழில் உத்தர
கோசமங் கைக்கரசே
வலிநின்ற திண்சிலை யாலெரித்
தாய்புரம் மாறுபட்டே. 10

தேன் சுவைக்கும் வண்டுகள், தெரிந்து தெளிந்து எழுப்புகின்ற விளரிப்பண்ணின் ஒலியானது நிலைபெற்று விளங்குகின்ற மலர்ச்சோலைகள் நிறைந்த உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! வலிமை நிலைபெற்ற, செறிவுற்ற வில்லினால், பகைகொண்டு முப்புரங்களை அழித்தவனே! அழகுடன் விளங்குகின்ற உன்னுடைய திருவடிகளில் சரண்புகப் பெற்றும், பெற்ற உடலின் பயன்பெறாமல் விட்டபடி, தளர்வடைகின்ற அடியேனைக் கைவிட்டுவிடுவாயோ?

115

மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப
யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண்
டாய்வினை யேன்மனத்தே
ஊறுமட் டேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும்பொன்
மேனி நெடுந்தகையே. 11

தீவினையுடைய அடியேனின் உள்ளத்தில், உள்ளதாகி நிலைபெற்ற உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! திருநீறு பூசப்பட்டே, ஒளி வீசுகின்ற பெருமிதத்தை உடையவனே! என்னோடு மாறுகொண்டு, என்னை ஐம்பொறிகளும் வஞ்சிக்க, அடியேன் உன்னுடைய ஒளிரும் தாமரைத் திருவடிகட்கு, அந்நியனானேன். இத்தகைய என்னைக் கைவிட்டுவிடுவாயோ?

116

நெடுந்தகை நீயென்னை ஆட்கொள்ள
யான்ஐம் புலன்கள்கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண்
டாய்விர வார்வெருவ
அடுந்தகை வேல்வல்ல உத்தர
கோசமங் கைக்கரசே
கடுந்தகை யேன்உண்ணுந் தெண்ணீர்
அமுதப் பெருங்கடலே. 12

பகைவர் அஞ்சிடத்தக்க, கொல்லுந் தகையாயுள்ள வேல் வீசுவதில் வல்லவனாகிய உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! வன்மனத்தையுடைய அடியேன், பருகிச் சுவைக்கத் தெளிவடைந்த நீராகிய அமுதமென்னும் பெருங்கடலே! நற்பண்புகளின் உறைவிடமாகிய நீ, என்னை ஆண்டுகொண்டு அருள்செய்யவும், என்னுடைய ஐம்புலன்களின் நுகர்வுகளில் பற்றுக்கொண்டு, அவற்றுள் மூழ்கியிருக்கும் அடியேனைக் கைவிட்டுவிடுவாயோ?

117

கடலினுள் நாய்நக்கி யாங்குன்
கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண்
டாய்விட வில்லடியார்
உடலில மேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
மடலின்மட் டேமணி யேஅமு
தேயென் மதுவெள்ளமே. 13

பற்றியுள்ள உன் திருவடிகளை நெகிழவிடல் இல்லா உன் அடியவரின் உள்ளமெனும் இல்லத்தில் நிரந்தரமாய்க் குடியிருப்பவனே! நிலைபெற்று விளங்குகின்ற உத்தரகோச மங்கைக்கு மன்னவனே! மலரிதழ்களில் ஊறிநிற்கும் தேனே! மாணிக்கமணியே! தெவிட்டாத அமுதமே! என்னுடைய தேனின் பெருக்கமே! கடல்நீரை நாயானது நக்கியதைப் போல, உன்னுடைய பேரின்பப் பெருங்கடலில் இரண்டறக் கலந்த உள்ளமானது, விடுவதற்கரிய என்னைக் கைவிட்டுவிடுவாயோ?

118

வெள்ளத்துள் நாவற் றியாங்குன்
அருள்பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக்கி லேனை விடுதிகண்
டாய்விரும் பும்அடியார்
உள்ளத்துள் ளாய்மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களி
யான களியெனக்கே. 14

உன்னை உளமார நேசிக்கும் அடியவர்தம்மின் மனத்துக்குள் நிலைபெற்று விளங்குபவனே! நிலைபெற்றதாகிய உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! வஞ்சகனாய் உள்ள அடியேனுக்கு, இதுவரை யான் பெறவியலாத பேரின்பத்தை, இப்போது பெறும்வகையில் நீ எனக்கு அத்தகைய பேரின்பத்தை வழங்குவாயாக! நீர்ப்பெருக்கில் இருந்துகொண்டு, நா வறட்சிக்கு அந்நீரைப் பருகத் தெரியாமல் நாயானது இருப்பதைப் போன்ற, நாயடியேன் உன்னுடைய பேரருளைப் பெற்றிருந்தும், துயரிலிருந்து நீங்கத் தெரியாத அடியேனைக் கைவிட்டு விடுவாயோ?

119

களிவந்த சிந்தையொ டுன்கழல்
கண்டுங் கலந்தருள
வெளிவந்தி லேனை விடுதிகண்
டாய்மெய்ச் சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழல் உத்தர
கோசமங் கைக்கரசே
எளிவந்த எந்தைபி ரான்என்னை
ஆளுடை என்னப்பனே. 15

மெய்யொளிகள் அனைத்துக்கும் மேலான ஒளிவழங்கும் அழகிய சிலம்பணிந்த திருவடிகளை உடைய உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! எனக்கு எளிதாக வந்தருளிய எம்முடைய தந்தையே! தலைவனே!என்னை அடிமையெனச் செய்துகொண்ட என்றன் அன்புடைய அப்பனே! பெருமகிழ்வோடு கூடிய எனது எண்ணத்தோடு உன்னுடைய திருவடிப்பேறு கிடைக்கப்பெற்றும், வெளிப் பட்டிலேனைக் கைவிட்டுவிடுவாயோ?

120

என்னைஅப் பாஅஞ்சல் என்பவர்
இன்றிநின் றெய்த்தலைந்தேன்
மின்னையொப் ப்ாய்விட் டிடுதிகண்
டாயுவ மிக்கின்மெய்யே
உன்னையொப் பாய்மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
அன்னையொப் பாய்எனக் கத்தனொப்
பாய்என் அரும்பொருளே. 16

உவமை கூறினால், உன்னை நிகர்ப்பாய் நீயே என்பது மெய்யே! நிலைபெற்று விளங்குகின்ற உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! எனக்கு நீதான் என் தாய்க்கு நிகரானவனே! தந்தைக்கு நிகரானவனே! எனக்குத் தேடியும் கிடைக்காத அரியபொருளே! என்னிடம் அன்புகொண்டு, 'அப்பா! பயப்பட வேண்டா!' என்று கூறுபவர் எவரும் இல்லாமல், உள்ளம் ஓங்கியிருந்து, உடல் இளைத்துத் திரிந்தேன். ஒளியுமிழும் மின்னலை நிகர்த்தவனே! கைவிட்டுவிடுவாயோ?

121

பொருளே தமியேன் புகலிட
மேநின் புகழிகழ்வார்
வெருளே எனைவிட் டிடுதிகண்
டாய்மெய்ம்மை யார்விழுங்கும்
அருளே அணிபொழில் உத்தர
கோசமங் கைக்கரசே
இருளே வெளியே இகபர
மாகி இருந்தவனே. 17

தி. 8.

உன்னுடைய மெய்யடியார் சுவைத்துண்ணும் அருட்கனியே! அழகிய சோலைகள் நிறைந்த உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! இருள்மயமே! ஒளிமயமே! கீழுலகும் மேலுலகும் ஆகி இருந்தவனே! மெய்ப்பொருள் ஆனவனே! தனியேன் சரண்புகும் இடமே! உனது புகழைப் பழிப்பார்க்கு அச்சம் விளைவிப்பவனே! என்னைக் கைவிட்டுவிடுவாயோ?

122

இருந்தென்னை ஆண்டுகொள் விற்றுக்கொள்
ஒற்றிவை என்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண்
டாய்மிக்க நஞ்சமுதா
அருந்தின னேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப்
பட்டு மடங்கினர்க்கே. 18

மிகவும் கொடிய நஞ்சினை, மேலான அமுதமாக உண்டவனே! நிலைபெற்று விளங்குகின்ற உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! பிறவியெனும் பெரும்பிணியில் அகப்பட்டுச் செயலற்றுக் கிடப்பவர்க்கே, அந்நோயைப் போக்குகின்ற அருமருந்தாய் இருப்பவனே! என்னிடம் இருந்தவாறு என்னை நீதான் அடிமை செய்துகொள்ளலாம்; ஒற்றி வைக்கலாம். என்றவாறு சொல்வதல்லாமல் வேறில்லை. புதியவனான அடியேனைக் கைவிட்டுவிடுவாயோ?

123

மடங்கஎன் வல்வினைக் காட்டைநின்
மன்னருள் தீக்கொளுவும்
விடங்கஎன் தன்னை விடுதிகண்
டாய்என் பிறவியைவே
ரொடுங்களைந் தாண்டுகொள் உத்தர
கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித்
தாய்வஞ்சிக் கொம்பினையே 19

உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! மிகவும் கொடுமை வாய்ந்த, யானையாகிய மலையின் தோலினை உரித்து, வஞ்சிக்கொடியாகிய உமையம்மையைப் பயமுறுத்தியவனே! என்னுடைய தீவினைக்காட்டை அழியுமாறு உன்னுடைய நிலைபெற்ற திருவருள் நெருப்பினால் சுட்டெரிக்கின்ற அழகிய வீரனே! எனது பிறப்பினை வேருடன் களைந்து என்னை ஆட்கொள்வாயாக! என்னைக் கைவிட்டுவிடுவாயோ?

124

கொம்பரில் லாக்கொடி போல்அல
மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண்
டாய்விண்ணர் நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
அம்பர மேநில னேஅனல்
காலொடப் பானவனே. 20

வானோரும் அடைதற்கில்லா மேலான வெளியில் விளங்குபவனே! நிலைபெற்று விளங்குகின்ற உத்தரகோசமங்கைக்கு மன்னவனே! விண்ணே! மண்ணே! நெருப்பே! காற்றோடு நீருமாய் ஆனவனே! பற்றிட ஒரு கொழுகொம்பு இல்லாத கொடியினைப் போல அலைவுற்றேன். அழகுருவே! உள்ளம் வேகின்றேனைக் கைவிட்டுவிடுவாயோ?

125

ஆனைவெம் போரிற் குறுந்தூ
றெனப்புல னால்அலைப் புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண்
டாய்வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலை
யும்அமு தத்தையுமொத்
தூனையும் என்பினை யும்உருக்
காநின்ற ஒண்மையனே. 21

தீவினையேனாகிய என்னுடைய உள்ளத்தில் நறுந்தேனையும், நனிசுவைப் பாலையும், நற்கருப்பஞ்சாற்றையும், தெவிட்டாத அமுதத்தையும் நிகர்த்து, உடல் தசையினையும், தசைக்குள்ளிருக்கும் எலும்பையும் இளகச் செய்கின்ற அழகுடையவனே! ஆண்யானைகள் செய்யும் கடும்போரில் சிக்கிய சிறு புல்பூண்டுகள் சிதைவனபோல், ஐம்புலன்களால் அலைக்கழிக்கப்பட்டேனை, எம்முடைய தந்தையே! கைவிட்டுவிடுவாயோ?

126

ஒண்மைய னேதிரு நீற்றையுத்
தூளித் தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண்
டாய்மெய் யடியவர்கட்
கண்மைய னேயென்றுஞ் சேயாய்
பிறர்க்கறி தற்கரிதாம்
பெண்மைய னேதொன்மை ஆண்மைய
னேஅலிப் பெற்றியனே. 22

அழகுடையவனே! திருநீற்றைத் திருமேனியில் பூசிக்கொண்டு, அதனால் ஒளிவீசுகின்ற வெண்மை நிறத்தை உடையவனே! உன்னுடைய மெய்யடியார் தமக்கு அவர்தம் அருகில் இருப்பவனே! அடியவர் அல்லாதார்க்கு, என்றென்றும் தொலைவில் இருப்பவனே! ஏனையோர்க்கு, அறிவதற்கு அரியதாகிய பெண்மைத்தன்மை உடையவனே! பழைமையான ஆண்மைத்தன்மை உடையவனே! அலியாந் தன்மை உடையவனே! கைவிட்டுவிடுவாயோ?

127

பெற்றது கொண்டு பிழையே
பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண்
டாய்விடி லோகெடுவேன்
மற்றடி யேன்தன்னைத் தாங்குநர்
இல்லையென் வாழ்முதலே
உற்றடி யேன்மிகத் தேறிநின்
றேனெனக் குள்ளவனே. 23

என்னுடைய வாழ்வின் முதலானவனே! உன்னை அடையப்பெற்று, அடியேன் மிகவும் தெளிவடைந்து நிலைத்தேன். எனக்கென்று உள்ளவனே! பெற்ற இந்த உடம்பைக்கொண்டு, தவறான செயல்களையே பெருகச்செய்து, சுருங்கச் செய்த அன்பின் காரணமாகப் பொய்யடியேனைக் கைவிட்டுவிடுவாயோ? அவ்வாறு கைவிட்டு விட்டாலோ, அழிந்தொழிவேன். அடியேனைத் தாங்குபவர் வேறு எவரும் இலர்.

128

உள்ளன வேநிற்க இல்லன
செய்யுமை யல்துழனி
வெள்ளன லேனை விடுதிகண்
டாய்வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய்
புலனின்கட் போதலொட்டா
மெள்ளெனவே மொய்க்கும் நெய்க்குடந்
தன்னை எறும்பெனவே. 24

மிகப் பெரிய நெடிய தும்பிக்கையில் துளையினை உடைய அழகிய யானையின் உரித்த தோலினை உடுத்தியிருப்பவனே! நெய்க்குடத்தை மெதுமெதுவாக மொய்த்துக் கொள்ளும் எறும்புகளைப் போல, ஐம்புலன்களும் உன்னிடம் சென்றடையா வண்ணம், என்னுடைய ஆசைகளாகிய எறும்புகள் மொய்த்துக் கொண்டன. எனவே, நல்லன இருக்க அல்லன செய்யும் மருட்சியையும், வெற்றுரை பேசுதலையும் உடைய பொய்யனைக் கைவிட்டு விடுவாயோ?

129

எறும்பிடை நாங்கூ ழெனப்புல
னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண்
டாய்வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர்
வுற்றவர் உம்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய
ராத பெருமையனே. 25

கொடிய யமன் நடுங்குமாறு அவனை இடற்றிய மணமிகு மலரடிகளை நினைத்துணர்ந்து போற்றித் துதித்த மெய்யடியார், விண்ணவராலும் அடையவியலாத மோட்ச பதத்தை அடைந்தனர். அத்தகு அடியவரால் நீங்கப்பெறாத சிறப்பினை உடையவனே! எறும்புகளிடம் சிக்குண்ட மண்புழுவினைப்போல், ஐம்புலன்களின் ஆசைகளால் அலைப்புண்டு, வாட்டமுற்ற தனியேனைக் கைவிட்டுவிடுவாயோ?

130

பெருநீ ரறச்சிறு மீன்துவண்
டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதிகண்
டாய்வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு
தோணி வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை
வானக் கொழுமணியே. 26

பேருருவாகிய கங்கையாறு பெருக்கெடுத்து வருகின்ற நீரைக் கொண்ட மடுவில், தடுமாறுகின்ற சிறிய தோணியின் வடிவத்தைப் போல, வெண்மை நிறமுடையதும், தன்னைப் பொருந்தியதுமாகிய சந்திரப்பிறை தவழ்கின்ற சடையினையுடைய, வான்வெளியிலுள்ள கொழுமையான மாணிக்கமே! நீரானது மிகுதியாக வற்றிவிட, அவ்விடத்துச் சிறுமீன்கள் துடித்தனபோல, உன்னைப் பிரிந்த அஞ்சுந் தன்மை யுடையேனைக் கைவிட்டுவிடுவாயோ?

131

கொழுமணி யேர்நகை யார்கொங்கைக்
குன்றிடைச் சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண்
டாய்மெய்ம் முழுதும்கம்பித்து
அழுமடி யாரிடை யார்த்துவைத்
தாட்கொண் டருளியென்னைக்
கழுமணி யேயின்னுங் காட்டுகண்
டாய்நின் புலன்கழலே. 27

கடைந்து தூய்மை செய்யப்பட்ட மாணிக்கமே! உடல் முழுமையும் நடுங்கி, அழுது வணங்குகின்ற உன்னுடைய அடியவர் குழாத்துள் என்னையும் சேர்த்து வைத்து அருள் புரிந்தவனே! மேற்கொண்டும் உன்னுடைய அறிவுருவாகிய திருவடிகளை எனக்குக் காட்டியருள்வாயாக! கொழுத்த முத்துப் போன்ற பற்களையுடைய மகளிரின் கொங்கை என்னும் குன்றுகளுக்கிடையில், சென்று தளர்ந்து விழ்கின்ற அடியேனைக் கைவிட்டுவிடுவாயோ?

132

புலன்கள் திகைப்பிக்க யானுந்
திகைத்திங்கோர் பொய்ந்நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண்
டாய்விண்ணும் மண்ணுமெல்லாங்
கலங்கமுந் நீர்தஞ் சமுதுசெய்
தாய்கரு ணாகரனே
துலங்குநின் றேனடி யேனுடை
யாயென் தொழுகுலமே. 28

விண்ணுலகத் தேவரும் மண்ணுலக மக்களும் ஆகிய எல்லாரும் உள்ளம் நடுங்க, கடலினின்றும் வெளிப்பட்ட நஞ்சினைத் தெவிட்டாத அமுதமாக உண்டவனே! அருட்கரம் உடையவனே! உன்னுடைய அடியேன் கலங்குகின்றேன். என்னை அடிமையாக உடையவனே! என்னுடைய குலதெய்வமே! என் ஐம்புலன்களும் என்னைத் திகைப்படையச் செய்ய, யானும் திகைப்படைந்து, இங்கு ஒப்பிலாப் பொய்வழியிலே செல்கின்ற என்னைக் கைவிட்டுவிடுவாயோ?

133

குலங்களைந் தாய்களைந் தாய்என்னைக்
குற்றங்கொற் றச்சிலையாம்
விலங்கலெந் தாய்விட் டிடுதிகண்
டாய்பொன்னின் மின்னுகொன்றை
அலங்கலந் தாமரை மேனியப்
பாவொப்பி லாதவனே
மலங்களைந் தாற்கழல் வன்தயி
ரிற்பொரு மத்துறவே. 29

பொன்னென மின்னுகின்ற கொன்றைமலர் மாலையினை அணிந்துள்ள, அழகிய தாமரை மலரெனும் திருமேனியை உடைய அப்பனே! ஒப்பிலாதவனே! மலங்கள் ஐந்தினால், மத்திடைப்பட்ட தயிரினைப் போல் அலைக்கழிக்கப் படுகின்றேன். பாசங்களினின்றும் நீங்கியவனே! என் குற்றங்களை நீக்கினாய். வெற்றிதரும் வில்லாகிய மேருமலையினை உடைய எம்முடைய தந்தையே! என்னைக் கைவிட்டுவிடுவாயோ?

134

மத்துறு தண்தயி ரிற்புலன்
தீக்கது வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண்
டாய்வெண் டலைமிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்து
குடர்நெடு மாலைசுற்றித்
தத்துறு நீறுட னாரச்செஞ்
சாந்தணி சச்சையனே. 30

வெண்மையான மண்டையோட்டு மாலையினை அணிந்தவனே! கொத்தாக உள்ள கொன்றைமலர் மாலையினைச் சூடியவனே! குடலாகிய நீண்ட மாலையைச் சுற்றி இருப்பவனே! திருநீற்றுடன் செஞ்சந்தனத்தை அணிந்தவனே! எல்லாவற்றுக்கும் அடிப்படையானவனே! ஐம்புலன்களும் நெருப்புப் பற்ற, மத்திடைப்பட்ட குளிர்தயிரெனக் கலங்கித் தீவினைக்கு விதையானேனைக் காக்காமல் கைவிட்டுவிடுவாயோ?

135

சச்சைய னேமிக்க தண்புனல்
விண்கால் நிலம்நெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண்
டாய்வெளி யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய
னேயொண் படஅரவக்
கச்சைய னேமிக்க தண்புனல்
தாள அடற்கரியே. 31

வெண்மையானவனே! கருமையானவனே! பசுமையானவனே! சிவந்த மேனியனே! ஒளிவீசும் படத்தையுடைய பாம்பினைக் கச்சையாக உடையவனே! பெரிய அடிகளையுடைய வலிமை வாய்ந்த யானையை வென்றவனே! எல்லாவற்றுக்கும் அடிப்படையானவனே! மிகக் குளிர்ந்த நீர், வானம், காற்று, நிலம், நெருப்பு ஆகிய பஞ்சபூதங்களின் வடிவாய் நிற்கும் வித்தையை உடையவனே! என்னைக் கைவிட்டுவிடுவாயோ?

136

அடற்கரி போல்ஐம் புலன்களுக்
கஞ்சி அழிந்தஎன்னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண்
டாய்விழுத் தொண்டர்க்கல்லால்
தொடற்கரி யாய்சுடர் மாமணி
யேசுடு தீச்சுழலக்
கடற்கரி தாயெழு நஞ்சமு
தாக்குங் கறைக்கண்டனே. 32

மேலான உன்னுடைய அடியவர்க்காக வல்லாமல் பிறரால் நெருங்கவியலாத அரியபொருளே! ஒளிசிந்துகின்ற உயரிய மாணிக்கமணியே! சுடுகின்ற நெருப்புச் சுழலக் கடலில் அரிதாகத் தோன்றிய நஞ்சினைத் தெவிட்டாத அமுதமாக உண்டதனால் உளதாகிய நீலகண்டனே! வலிகொண்ட யானையினை நிகர்த்த ஐம்புலன்களுக்கும் பயந்து, கெட்டுவிட்ட அடியேனை விடுவதற்கு அரியவனே! கைவிட்டுவிடுவாயோ?

137

கண்டது செய்து கருணைமட்
டுப்பரு கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண்
டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப்
பணிசெயக் கூவித்தென்னைக்
கொண்டெனெந் தாய்களை யாய்கள்ள
யாய் குதுகுதுப்பே. 33

எம்முடைய தந்தையே! மனம் போனவாறு கண்டனவெல்லாம் செய்து, உனது அருள்தேனை உண்டுகளித்து, மிதக்கின்றேனைக் கைவிட்டுவிடுவாயோ? உன் மணம் மிகுந்த தாமரைத் திருவடிகளை முன்னர் அருளியது போல் இப்போதும் அளித்தருளி, உனக்குத் தொண்டுகள் செய்ய அழைத்து, என்னை அடிமையாக்கிக் கொண்டு, தீயவை செய்வதால் உண்டாகும் சிற்றின்பத்தை முற்றிலும் நீக்குவாயாக!

138

குதுகுதுப் பின்றிநின் றென்குறிப்
பேசெய்து நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண்
டாய்விரை யார்ந்தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப்
பழத்தின் மனங்கனிவித்து
எதிர்வதெப் போது பயில்விக்
கயிலைப் பரம்பரனே. 34

செறிந்த மலர்ச்சோலைகள் நிறைந்த திருக்கயிலையில் விளங்குகின்ற முன்னைப் பழம்பொருளே! உன்மேல் ஆவல் கொள்ளாமல், என் மனம் எண்ணிய வாறெல்லாம் நடந்துகொண்டு, உன் மன மகிழ்வுக்கு ஆசைப்படுவேனைக் கைவிட்டுவிடுவாயோ? மணம் மிகுந்து, இனிதாகிய நிறைதேன் போன்று, கனிந்த வாழைப்பழத்தைப் போல அடியேனின் மனத்தைப் பக்குவப்படுத்தி, என்னை நீ எதிர்கொள்வது எப்போது?

139

பரம்பர னேநின் பழஅடி
யாரொடும் என்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண்
டாய்மென் முயற்கறையின்
அரும்பர நேர்வைத் தணிந்தாய்
பிறவிஐ வாயரவம்
பொரும்பெரு மான்வினை யேன்மனம்
அஞ்சிப் பொதும்புறவே. 35

மெல்லிய முயல் போன்ற களங்கத்தையுடைய சந்திரப் பிறையினையும், பாம்பையும் ஒப்பவைத்து அணிந்தவனே! எம்பெருமானே! தீவினையேனாகிய யான், உள்ளம் நடுங்கி உன்னிடம் சரண்புகுமாறு, பிறவியாகிய ஐந்துதலைப் பாம்பு சீறுகின்றது. பழம்பொருளே! உன்னுடைய பழைய அடியவருடன், என்னுடைய வஞ்சகத்தையும் விரும்புகின்ற சிவபெருமானே! என்னைக் கைவிட்டுவிடுவாயோ?

140

பொதும்புறு தீப்போற் புகைந்தெரி
யப்புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண்
டாய்விரை யார்நறவம்
ததும்புமந் தாரத்தில் தாரம்
பயின்றுமந் தம்முரல்வண்
டுதும்புங் கொழுந்தேன் அவிர்சடை
வானத் தடலரைசே. 36

நறுமணம் நிறைந்து தேன் ஒழுகும் மந்தார மலரில், 'எடுத்தலோசை' என்னும் இசையைப் பாடி அழகாக ஒலிக்கின்ற வண்டுகள், பின்னர்த் தாழ்ந்தொலித்துச் சென்று மகிழ்வதற்குரிய, செழுந்தேனுடன் விளங்குகின்ற, ஒளிவீசும் சடையினை யுடைய வானுலகத்து வல்லரசனே! மரப்பொந்தில் பிடித்த தீயினைப் போல, மிகுந்த புகைமண்டி எரிகின்ற அந்தப் புலன்களாகிய நெருப்புப் பற்றிக் கொள்வதால், உள்ளம் என்னும் மரமானது எரியுண்டு, வேகின்ற அடியேனை நீயும் கைவிட்டுவிடுவாயோ?

141

அரைசே அறியாச் சிறியேன்
பிழைக்கஞ்ச லென்னினல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண்
டாய்வெண் ணகைக்கருங்கண்
திரைசேர் மடந்தை மணந்த
திருப்பொற் பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை
தான்வந் தயர்வனவே. 37

வெண்ணிறப் பற்களையும், கருநிறக் கண்ணாகிய கடலையும் கொண்டவளாகிய உமையம்மை தழுவிய சிறந்த பொன்னடிகளை உடையவனே! பாம்பை யணிந்தவனே! என்னுடைய தீவினைகள், மலைகள் இரண்டு சேர்ந்து வந்து தாக்குவன போல வந்தென்னைத் தாக்குகின்றன. மன்னவனே! ஏதுமறியாச் சிறியேன், செய்த பிழைக்காக 'நீ அஞ்ச வேண்டா!' என்று சொன்னால் அல்லாமல், நறுமண மலர்களைக் சூடிய முடியினை உடையவனே! என்னைக் கைவிட்டு விடுவாயோ?

142

அடர்புல னால்நிற் பிரிந்தஞ்சி
அஞ்சொல்நல் லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண்
டாய்விரிந் தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டர
சேதொழும் பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்தனி
நீக்குந் தனித்துணையே. 38

விரிந்தவாறே எரிகின்ற நெருப்பை நிகர்த்தவனே! சுடலையில் நடம்பயிலும் மன்னவனே! அடியவர் தமக்குத் தெவிட்டாத அமுதமானவனே! அன்பரல்லார் தொடர்வதற்கு அரியவனே! தனியேனின் தனித்துயர் போக்கும் ஒப்பற்ற துணையே! வருத்தும் புலன்களால் உன்னைப் பிரிந்து, பயந்து, அழகிய சொற்களை உடைய மெல்லியலார் தம்முடைய கொடுங்கானகத்தைவிட்டு, நீங்குதற்கரியேனைக் கைவிட்டு விடுவாயோ?

143

தனித்துணை நீநிற்க யான்தருக்
கித்தலை யால்நடந்த
வினைத்துணை யேனை விடுதிகண்
டாய்வினை யேனுடைய
மனத்துணை யேஎன்தன் வாழ்முத
லேஎனக் கெய்ப்பில்வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்
துயராக்கையின் திண்வலையே. 39

தீவினையேனுடைய உள்ளத்திற்கு உறுதுணையே! என்னுடைய வாழ்வினுக் குரிய முதற்பொருளே! என் வறுமைக்காலத்தில் பயன்படும் சேமநிதியே! துன்பத்திற்குரிய உடலாகிய கடின வலையில் சிக்குண்டு. இனித் தினையளவே ஆயினும், பொறுத்துக்கொள்ள மாட்டேன். ஒப்பற்ற துணையாக எனக்கு நீயிருக்க, யான் செருக்குற்றுத் தலையால் நடந்த தீவினையின் துணையேனாகிய அடியேனைக் கைவிட்டுவிடுவாயோ?

144

வலைத்தலை மானன்ன நோக்கியர்
நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண்
டாய்வெண் மதியின்ஒற்றைக்
கலைத்தலை யாய்கரு ணாகர
னேகயி லாயமென்னும்
மலைத்தலை வாமலை யாள்மண
வாளஎன் வாழ்முதலே. 40

வெண்ணிறச் சந்திரனின் ஒரு கலையைத் தலையில் அணிந்தவனே! அருட்கரம் உடையவனே! திருக்கயிலாயம் என்று சொல்லப்படும் மலைக்குத் தலைவனே! மலைமகளாகிய பார்வதியம்மையின் மணவாளனே! என்னுடைய வாழ்வின் முதற்பொருளே! வேடன் விரித்த வலையில் அகப்பட்ட மானொத்த மகளிரின் பார்வையாகிய வலையில் சிக்குண்டு வருந்தித் திரிந்தேனைக் கைவிட்டு விடுவாயோ?

145

முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந்
நீரிற் கடிப்பமூழ்கி
விதலைச்செய் வேனை விடுதிகண்
டாய்விடக் கூன்மிடைந்த
சிதலைச்செய் காயம் பொறேன்சிவ
னேமுறை யோமுறையோ
திதலைச்செய் பூண்முலை மங்கைபங்
காஎன் சிவகதியே. 41

படர்ந்த தேமலையும், இழைத்துச் செய்த அணிகலன்களையும் உடைய கொங்கைகளைக் கொண்ட உமையம்மையின் ஒரு பாகனே! என்னுடைய சிவகதியே! கெட்ட நாற்றத்தை உடையதும், புலால் பொருந்தியதும்,பல பிணிகட்கு இடங்கொடுப்பதுமாகிய இந்த உடலைப் பொறுத்துக்கொள்ள மாட்டேன். சிவபெருமானே! அவ்வாறு பொறுத்தல் முறையோ? முறையோ? ஆசையாகிய வெந்நீரில், செவ்வாய் உடைய மகளிராகிய முதலைகள் கடிக்க மூழ்கி, நடுக்குறும் அடியேனைக் கைவிட்டுவிடுவாயோ?

146

கதியடி யேற்குன் கழல்தந்
தருளவும் ஊன்கழியா
விதியடி யேனை விடுதிகண்
டாய்வெண் தலைமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை
வைத்துச் சுருங்கஅஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக்
குஞ்சடை மன்னவனே 42

வெண்ணிறத்தலை எனப்படும் புற்றில் தங்கியிருத்தலை உடைய ஒளிபொருந்திய பாம்பானது உற்றுநோக்கிப் படத்தினை விரித்துச் சுருக்கிக் கொள்ளவும், அதைக் கண்டு அஞ்சிய சந்திரன், ஆழநீர்க் கங்கையில் மூழ்கி மறைந்துகொள்ளும் சடைக் கற்றையை உடைய அரசே! நீயே கதியென்றிருக்கிற அடியேனுக்கு, உன்னுடைய திருவடிப் பேற்றினை வழங்கியருளவும், உடம்பழியாத ஊழினையுடைய அடியேனைக் கைவிட்டுவிடுவாயோ?

147

மன்னவ னேயொன்று மாறறி
யாச்சிறி யேன்மகிழ்ச்சி
மின்னவ னேவிட் டிடுதிகண்
டாய்மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ
னேகழி யாத்தொழும்பர்
முன்னவ னேபின்னும் ஆனவ
னேயிம் முழுதையுமே. 43

மேலான 'மறை' எனப்படும் மெய்ந்நூலை உரைத்தவனே! சொல்லைக் கடந்த தூயவனே! உன்னைவிட்டு அகலா மெய்யடியார்முன் வந்து நிற்பவனே! தொண்டர்க்குத் தோன்றாத் துணையாய் இருந்தபடி காப்பவனே! எல்லாமாய் ஆனவனே! என்னை ஆளுகின்ற அரசே! உன்னோடு இரண்டறக் கலந்திடும் வகையறியாச் சிறியேனின் இன்பத்துக்குச் சுடரொளியானவனே! என்னைக் கைவிட்டுவிடுவாயோ?

148

முழுதயில் வேற்கண் ணியரென்னும்
மூரித் தழல்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண்
டாய்நின் வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வானத் தொழும்பரிற்
கூட்டிடு சோத்தம்பிரான்
பழுதுசெய் வேனை விடேலுடை
யாய்உன்னைப் பாடுவனே. 44

எம்பிரானே! உன்னுடைய மணம் பொருந்திய தாமரைத் திருவடிகளை வணங்குவதற்காக, நல்ல தொண்டர்குழாத்துள் என்னைச் சேர்த்திடு! உன்னை வணங்குகிறேன். தவறு செய்வேனாகிய அடியேனைக் கைவிடாதே! என்னை அடிமையாக உடையவனே! உன்னை நெஞ்சார நினைத்து, வாயாரப் போற்றிப் பாடுவேன். முற்றிலும் கூர்வேல் போன்ற கண்களையுடைய மகளிரென்னும் பெருநெருப்பில் சிக்கி உருகிடும் வெண்ணெயை நிகர்த்தேனைக் கைவிட்டு விடுவாயோ?

149

பாடிற்றி லேன்பணி யேன்மணி
நீயொளித் தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண்
டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்விடத்
தான்எவர் கண்டனரென்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுரு
கேன்நின் றுழைத்தனனே. 45

அவ்விடத்தில் வியப்புற்றலறித் தேடுதல் செய்யேன். சிவபெருமான் எவ்விடத்தைச் சேர்ந்தவன்? எவர் பார்த்தனர்? என்றபடிப் பலவிடங்களிலும் ஓடுதல் செய்யேன். தரையில் விழுந்து வணங்கி உள்ளம் உருகுதல் செய்யேன். ஒளிவிடும் மாணிக்கமாகிய உன்னைக் காட்டி மறைத்துக் கொண்டாய். பச்சைத் தசையாலாகிய இவ்வுடலை விட்டு நீங்கேனைக் கைவிட்டுவிடுவாயோ?

150

உழைதரு நோக்கியர் கொங்கைப்
பலாப்பழத் தீயினொப்பாய்
விழைதரு வேனை விடுதிகண்
டாய்விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி
மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபர னென்றென்
றறைவன் பழிப்பினையே. 46

மான்போன்ற பார்வையுடைய மங்கையரின் கொங்கைகளைப் பலாக்கனியில் மொய்க்கின்ற ஈயினைப் போல விரும்புகின்றேனைக் கைவிட்டுவிடுவாயோ? அவ்வாறு விடுவாயாயின், கடலில் தோன்றிய நஞ்சையுண்ட நீலகண்டன் என்றும், தேய்ந்த அறிவினன் என்றும், பழைமையைக் கைக்கொண்ட பெரும்பரதேசி என்றும் எப்போதும் உன் பழிகளையே எடுத்துரைப்பேன்.

151

பழிப்பில்நின் பாதப் பழந்தொழும்
பெய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண்
டாய்வெண் மணிப்பணிலம்
கொழித்துமந் தாரமந் தாகினி
நுந்தும்பந் தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ்
சேர்தரு தாரவனே. 47

முத்துகளைக் கொண்ட சங்குகளை எறிந்து, தூய்மை பொருந்திய கங்கை நதியானது, மந்தார மலர்களைக் கரைசேர்க்கும். மிகுந்த அழகுடன் பெருகிவரும் ஆற்றின் வேகத்தை மட்டுப்படுத்திய நீரில், சந்திரப் பிறையானது ஒரு தோணியைப் போல விளங்கும் தன்மையனே! கொன்றைமலர்த் தாரானே! நிந்தனை இல்லாத உன்னுடைய திருவடிகளின் பழைய தொண்டு அடையப் பெற்று வீழப் பெறுதலால், உன்னைப் பழித்தபடி வெருட்சியோடு இருந்தேனைக் கைவிட்டுவிடுவாயோ?

152

தாரகை போலும் தலைத்தலை
மாலை தழலரப்பூண்
வீரஎன் தன்னை விடுதிகண்
டாய்விடி லென்னைமிக்கார்
ஆரடி யானென்னின் உத்தர
கோசமங் கைக்கரசின்
சீரடி யாரடி யானென்று
நின்னைச் சிரிப்பிப்பனே. 48

விண்மீன் போலத் தலையில் தலைமாலையையும், நச்சுத்தீயினை உடைய பாம்பாகிய அணிகலனையும் அணிந்துள்ள வீரனே! என்னை நீதான் கைவிட்டுவிடுவாயோ? அவ்வாறு விடுவாயேல், என்னைப் பார்த்துப் பெரியோர், 'நீ யாருடைய அடியவன்?' என்று கேட்டால், 'நான் உத்தரகோச மங்கைக்குத் தலைவனுடைய சிறப்புப் பொருந்திய அடியவர்க்கும் அடியவன்' என்று கூறி, உன்னை அவரெலாம் நகைக்குமாறு செய்வேன்.

153

சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்
தொழும்பையும் ஈசற்கென்று
விரிப்பிப்ப னென்னை விடுதிகண்
டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சன்நஞ்
சூண்பிச்சன் ஊர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப்
பிச்சனென் றேசுவனே 49

வெறுப்பதற்குரிய எனது வாழ்வினைச் சிரிக்க வைப்பேன். எனது தொண்டும் சிவனுக்கென்ற செய்தியைப் பரவச்செய்வேன். என்னை நீயும் கைவிட்டுவிடுவாயோ? அவ்வாறு விடுவாயானால், 'கோபங்கொண்ட யானைத்தோலை உடுத்திக்கொண்ட பித்தன், புலித்தோலை ஆடையாகக் கொண்ட பித்தன், திருப்பாற்கடலில் தோன்றிய நஞ்சை அமுதமாக உண்ட பித்தன், ஊரிலுள்ள சுடுகாட்டில் நெருப்போடு விளையாடும் பித்தன், அடியேனையும் அடிமைகொண்ட பித்தன்' என்று திட்டுவேன்.

154

ஏசினும் யானுன்னை யேத்தினும்
என்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண்
டாய்செம் பவளவெற்பின்
தேசுடை யாயென்னை ஆளுடை
யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண் டாய்அமு
துண்ணக் கடையவனே 50

சிவந்த பவளத்தின் மலைபோன்ற ஒளியை உடையவனே! என்னை அடிமையாக உடையவனே! சிறிய உயிர்கட்கு இரக்கப்பட்டுத் திருப்பாற்கடலைக் கடைந்த திருமால் அமுதத்தை உண்ணவும், கடுங்கோபத்து நஞ்சினை உண்டவனே! நான் உன்னை ஏளனப்படுத்தினாலும், ஏத்திப் புகழ்ந்தாலும் என் தவற்றுக்கு உளம் நெகிழ்ந்து நலிவேனை நீயும் கைவிட்டுவிடுவாயோ?

திருச்சிற்றம்பலம்

7. திருவெம்பாவை

(திருவண்ணாமலையில் அருளியது)

சத்தியை வியந்தது

(கொச்சகக் கலிப்பா)

திரு+எம்+பாவை – திருவெம்பாவை. திரு – மேலான; எம் – எம்முடைய; பாவை – பதுமை. எனவே, மேலான எம்முடைய தெய்வப் பதுமை என்று பொருள்படும்.

மாதங்களில் சிறந்தது மார்கழி என்பர். அத்தகு மாதத்தில் மகளிர் ஒருவரையொருவர் துயில்நீக்கிக் குழுவாகச் சென்று, நீராடியபின் இறையைப் போற்றிப் புகழ்வது 'திருவெம்பாவை'. இதனைப் 'பாவைப் பாட்டு' என்றும் கூறுவர்.

'சத்தியை வியந்தது' என்பதற்கு, உமையம்மையைப் பாவை வடிவில் கண்டு, அம்மையின் பண்புகளை வியந்து போற்றுவது என்பது பொருள். அம்மையே மகளிர்க்கு நலங்கள் பயப்பவள். மகளிரை வழிநடத்துபவளும் அவளே. இப்பகுதியில், இருபது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியும், 'எம்பாவாய்' என்னும் சீராக அமையப் பெற்றது.

திருச்சிற்றம்பலம்

155

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய் 1

துயில்நீங்கி நீராடச் செல்லும் மகளிர், தம்முடைய தோழி ஒருத்தியின் துயில்நீக்கி, அவளைத் தம்முடன் அழைத்துச் செல்ல அவளுடைய வீட்டிற்கு வருகின்றனர். அந்தத் தோழிப் பெண்ணோ, நன்றாகத் உறங்கிக்கொண்டு இருக்கின்றாள். அழைத்துச் செல்ல வந்த மகளிருள் ஒருத்தி, 'அருணைப்பதியில் கோவில் கொண்டுள்ள நம்முடைய இறைவன், முதலும் முடிவும் இல்லாதவன்; அருமை வாய்ந்த பேரொளிப் பிழம்பானவன். அத்தன்மையினை உன்னுடைய வீட்டின்முன் இருந்தவாறு, நாங்கள் பாடிக் கொண்டிருக்கின்றோம். நீயோ அதனைக் கேட்டபோதும், வாள்போலும் கூரிய பெருங்கண்களை உடைய பெண்ணே! துயில் நீங்கி எழவில்லை. இன்னும் ஏனோ உறங்குகின்றாய். உன்னுடைய காதுகள் இரண்டும் கொடுமையான காதுகளோ?' என்று கேட்டவுடன், உறங்கியவள் எழுந்தாள்; உயிர்த் தோழியருடன் இணைந்தாள்.

மகளிர், அடுத்த வீட்டிற்குச் செல்கின்றனர். அந்த வீட்டுப் பெண்ணோ, மலர்ப் படுக்கையினின்றும் புரண்டு உருண்டு, தரையில் விழுந்து கிடக்கின்றாள். ஏன் தெரியுமா? வந்தவருள் ஒருத்தி, 'எம்பெருமானாகிய மகாதேவனின் திருவடிகளை நாங்கள் போற்றிப் புகழ்ந்து பாடிய பாட்டொலியானது வீதியில் கேட்டவுடனே, அவளுடைய நெஞ்சம் விம்மிவிம்மி, மெய்ம்மறந்து, மலர்ப் படுக்கையினின்றும் புரண்டு உருண்டு, தரையில் விழுந்து கிடக்கின்றாள். அவளுக்கு நம்முடைய பெருமானைத் தவிர, வேறு எந்தவிதச் சிந்தனையும் இல்லை. தன்னை மறந்ததனால், விழுந்தவளால் எழவே இயலவில்லை' என்றாள். வந்தவருள் மற்றொருத்தி, 'எம்பெருமானிடத்தில் இவள் கொண்டுள்ள பற்றின் தன்மைதான் என்னே! என்னே! பாவை போன்ற எம்முடைய தோழியே! இத்தகு மெய்சிலிர்க்கும் நிலைகுறித்துக் காது கொடுத்துக் கேள்! இதனை எண்ணிப் பார்! பின்னர் நீயும் அவளைப் போலப் பேரானந்தப் பெருநிலையைப் பெறுவதற்கு முயல்வாயாக!' என்றாள்.

156

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோ ரெம்பாவாய் 2

அடுத்தொரு தோழியின் வீடு. அவளும் படுக்கையினின்றும் எழவில்லை — உறக்கத்தைத் தொடர்ந்திருந்தாள். வந்தவள் ஒருத்திக்கு, உறங்குபவள் மேனாள் சொன்னது நினைவுக்கு வந்தது. அவள் சொன்னது இதுதான்: 'ஒளிவடிவமாகிய பெருமானைக் குறித்து, நாம் இரவென்றும் பகலென்றும் பேசியபோதெல்லாம், உன்னுடைய பற்றானது, பிறையணிந்த பெருமானுக்கே உரியதென்றாய். அழகிய ஆபரணம் அணிந்தவளே! இப்பொழுதோ, உனக்கு மலர்சொரிந்த படுக்கையின் மேல் பெரும்பற்று வந்துவிட்டதோ?'

இவ்வாறு கேட்டவுடன், எழாமல் படுத்திருந்தவள் எழுந்து வந்தாள். அவளோ, அங்குக் கூடியிருந்த அனைவரையும் பார்த்துப் பேசினாள் பின்வருமாறு: 'அழகிய ஆபரணங்களை அணிந்திருக்கும் மகளிரே! சீச்சீ! இவையெல்லாம் பேச்சுகளோ? விளையாட்டுத்தனமாகத் திட்டுமிடம் இதுவோ? நேரமும் இதுவோ? மேலான விண்ணவரே எம்பெருமானைப் போற்றிப் புகழத் தாம் தகுதியற்றுக் கூசியபடி உள்ளனர். அத்தகையவனோ, தாமரைத் திருவடிகளைத் தந்தருளும் ஒளிமயமானவன் சிவலோகநாதன், தில்லைச் சிற்றம்பலத்து ஈசன், நம்மைக் காத்தருளக் காத்திருக்கின்றான். அவனைப் பற்றிய உணர்வு சிறிதுமின்றி, மேலோட்டமான அன்புடைய நாம், அவனைப் போற்ற வல்லவரோ? பாவை போன்ற தோழியே! எண்ணிப் பார்!'

தி.9.

157

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய் 3

மகளிர் அனைவரும் அடுத்த இல்லத்திற்குச் செல்கின்றனர். உள்ளே இருப்பவள், உறங்காமல் விழித்துக்கொண்டுதான் இருக்கின்றாள். உள்ளே இருப்பவளைப் பற்றி வெளியே இருப்பவர்க்குத் தெரியாது. அந்த நிலையில், அவளும் உறங்குகின்றவளே என்று எண்ணி, நகையாடத் தொடங்கினர்: 'முத்துப் போன்ற வெண்மையான பற்களை உடையவளே! முன்னரெல்லாம் நாங்கள் பாடி வருவதைக் கேட்டதும், விரைவாக எழுந்து வந்து, எங்கள் முன்பாக நின்று, 'என் அப்பன்! இன்பமயமானவன்! தெவிட்டாத அமுதமாக விளங்குபவன்!' என்று நம்பெருமானைப் பற்றி நாவில் உமிழ்நீர் சுரக்குமாறு இனிக்க இனிக்கப் பேசுவாய். அத்தகையவளாகிய நீ, இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறாயே! எழுந்து வந்து உனது வீட்டுக் கதவினைத் திறப்பாயாக!'

வெளியிலிருப்பவர் இவ்வாறு நகையாடல் புரிவதைக் கேட்ட உள்ளே இருப்பவள், பின்வருமாறு மறுமொழி கூறுகின்றாள்: 'நீவிர், பத்திமை உடையீர்!. சிவனாரின் பழைமையான அடியீர்! ஒழுங்குமுறையினை நன்குடையீர்! நாங்கள் புத்தம் புதிதாக அடிமை பூண்டோம். பழைமையான அடியோம் அல்லோம். எங்கள் சிறுமைகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு, எங்களை உங்களோடு சேர்த்துக் கொண்டால், தீங்கானதோ?' இவ்வாறு எழுந்து வந்தவள் கேட்கவும், எழுப்ப வந்தவள் ஒருத்தி, பின்வருமாறு உரைக்கின்றாள்: 'தோழியே! நீ சிவபெருமானிடம் வைத்திருக்கும் அன்பு எத்தகையது என்பதை நாங்கள் அறிவோமே!' என்றாள். 'தூய உள்ளம் கொண்டவர், நம் சிவபெருமானை வைகறைப் பொழுதில் பாடித் தொழ எழ மாட்டாரா? உம் போன்றவர் சொல்லித்தான் தெரிவதாமோ?' என்று வீட்டில் இருந்தவள் கேட்கவும், 'உன்னிடம் வந்த எங்களுக்கு, இதுவும் வேண்டும் – இன்னமும் வேண்டும்' என்றாள்.

158

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

நீராடச் செல்லும் நங்கையர், அடுத்த இல்லத்திற்குச் செல்கின்றனர். சென்றவருள் ஒருத்தி, 'ஒளி பொருந்திய முத்தினையொத்த பற்களையுடையவளே! உனக்கு இன்னும் பொழுது புலரவில்லையோ?' என்றாள். உள்ளிருந்தவள், 'அழகிய கிளியின் மொழியுடையார் எல்லாரும் வந்து விட்டாரோ?' என்றாள். வந்தவள் ஒருத்தி, 'எண்ணிக் கொண்டு வந்து, உள்ளதை உள்ளவாறு சொல்கின்றோம். அதுவரையில், கண்ணுறங்கிக் காலத்தை வீணாகக் கழிக்காதே. விண்ணுலகத் தேவர்க்கு ஒப்பற்ற அமுதமாய் இருப்பவனை, மறைகளின் உயரிய பொருளினை, காண்பதற்கு இனியவனைப் புகழ்ந்து பாடி, உள்ளம் உட்குழைந்து, நெகிழ்ந்து நின்று உருகுவாயாக!' என்றாள்.

அதனைச் செவிமடுக்காமல் உள்ளே உறங்கியவள், மீண்டும் உறங்கச் சென்றாள். அதனைக் கவனித்து வந்தவள், 'வந்திருப்பவரை எல்லாம் கணக்கிட்டுக் காலத்தை நாங்கள் வீணாக்க மாட்டோம். நீயே வந்து கணக்கிட்டுக் கொள். ஒன்றுகூடி இங்கே வந்திருப்பவரின் எண்ணிக்கை குறையுமாயின், நீதான் மீண்டும் சென்று, உறங்கலாம். பாவை போன்ற தோழியே, செய்யத் தக்கதை மேற்கொள். அதை நன்கு எண்ணிப்பார்!'

159

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

திருமால், நான்முகன் போன்ற தெய்வங்களே கண்டு கொள்ளவியலாத சிவபெருமான் என்னும் பெருமலையை, மானிடராகிய நம்மைப் போன்றவர் எவ்வாறு அறியவியலும்? அவ்வாறு அறியவியலும் என்றால், நம்முடைய அந்தப் பேச்சு, முழுமையான பொய்ம்மைப் பேச்சுகளே ஆவன. பால் சொரிவதைப் போலவும் இனிமையான சொற்களைப் பேசுகின்ற, பொய்ம்மையான பத்திமை கொண்ட வஞ்சக எண்ணமுடையவளே! உனது வீட்டுக் கதவினைத் திறப்பாயாக! இந்த மண்ணுலகும், அந்த விண்ணுலகும் வேறு பலவாய உலகங்களும் அவனை முழுவதுமாக அறியமாட்டா. அவன் அறிவதற்கும் உணர்வதற்கும் அப்பாற்பட்டவன். அவ்வாறாகிய அருமை வாய்ந்த, பெருமை வாய்ந்த பரம்பொருளின் பேரழகை, நாம் நம்முடைய அறிவுக்கு எட்டியவரை பாடிப் பரவுவோம். அவன் நம்மை ஆட்கொண்ட தன்மையினைப் பற்றியும், நம்மைப் பாதுகாக்கும் தன்மையினைப் பற்றியும் போற்றிப் பாடுவோம். நறுமணச் சாந்து பூசிக் கூந்தலை அழகுப்படுத்திக் கொண்டு, நன்றாக உறங்குபவளே! நாங்கள் அனைவரும் சேர்ந்து, சிவனே சிவனே என்று உரத்துக் கூவினாலும், உணராதவளே! உணராதவளே! உறக்கம் கலையாதவளே! படுக்கையினின்றும் எழமாட்டாதவளே! பாவையென்னும் பெண்ணே! சிவனை ஏற்றுக் கொள்ளச் சிந்திப்பாயே!

160

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6

மானொத்த மருண்ட பார்வையை உடையவளே! நாளைக்கு நானே வந்து, உங்களைத் துயில் எழுப்புவேன் என்றபடி, நேற்று நீயும் சொன்ன சொல்லைச் சற்றும் நாணமில்லாமல் எந்தத் திசையில் போக விட்டாய்? உனக்கு இன்னமும் பொழுது புலரவில்லையா? இந்த மண்ணுலகும், அந்த விண்ணுலகும் வேறு பலவாய உலகங்களும் அவனை முழுவதுமாக அறியமாட்டா. அவன் அறிவதற்கும் உணர்வதற்கும் அப்பாற்பட்டவன். அவ்வாறாகிய அருமை வாய்ந்த, பெருமை வாய்ந்த பரம்பொருள், தானே முன்வந்து எம்மைக் காத்து அடிமை செய்து அருளியது. அந்தச் சிவபரம்பொருளின் வானுயர்ந்த அழகிய திருவடிகளை, நாங்கள் வாயெடுத்துச் செவிமடுக்கப் பாடி வருகின்றோம். அப்படிப்பட்ட எங்களிடம் உன் வாயைத் திறந்து ஒன்றும் பேச மாட்டாயா? உன்னுடைய உடலானது, உள்ளத்து அன்பின் காரணமாக நெகிழ்ந்து உருகாதோ? இவ்வாறெல்லாம் இருப்பதென்பது, உனக்கே உரியது. உன்னை நாடி வந்திருக்கும் எங்களுக்கேனும் மற்றவர்க்கேனும் நம்முடைய தலைவனைப் பாடு. பாவை போன்ற பாங்கியே! இவ்வாறு இருப்பதென்பது பொருந்தாது என்பதை உள்ளத்தில் கொள்! இதனை எண்ணிப்பார்!

161

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோரும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

அன்னையே! எங்களுக்குரிய இதுபோன்ற கடமைகளும் சிலவோ? அவை பலவாக உள்ளன. தேவராலும் தம் நெஞ்சத்தால் அறிந்துணர முடியாத அருமை வாய்ந்தவனாக, பெருமை வாய்ந்தவனாக ஒருவன் இருக்கின்றான். அவனே சிவபெருமான். அவன் எழுந்தருளி வருவதற்கு அறிகுறிகளாகிய திருச்சின்னங்களின் ஒலி கேட்கவும், 'சிவனே!' என்று நீ வாய் திறப்பாயே! 'தென்னாட்டவனே' என்று அவன் திருப்பெயரைச் சொல்லுமுன்பே, நெருப்பி விட்ட மெழுகென உள்ளம் உருகுவாயே! அத்தகைய சிறப்புக்குரியவளாகிய உன்னிடம், 'எனக்கு மிகவும் இனிமையானவன்; எனக்கு மேலான மன்னவன்;

இனிய அமுதமானவன்' என்றெல்லாம் நாங்கள் அனைவரும் தனித்தனியாகச் சொன்னோம். அவற்றையெல்லாம் கேட்ட பின்னரும், நீதான் உறங்கிக் கொண்டிருக்கிறாயோ? கொடுமனம் படைத்த அறிவிலிகளைப் போல நீயும் வெறுமையாய்க் கிடக்கின்றாயோ? என்னே உறக்கத்தின் தன்மைதான். நாங்கள் உரைப்பவனவற்றை, உள்ளத்தில் பதிய வைக்க எண்ணிப் பார்!

162

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

கோழிகள் கூவுகின்றன; பறவைகள் எல்லாம் ஒலியெழுப்பி, ஏழிசைகள் போன்று ஒலிக்கின்றன. வெண்ணிறச் சங்குகள் எங்கும் முழங்குகின்றன. ஒப்பற்ற மேன்மையொளி, ஒப்பற்ற பெருங்கருணை, ஒப்பற்ற உயர்ந்த பொருள்கள் ஆக விளங்குகின்ற சிவபரம்பொருளை நாங்கள் பாடிப் பரவுகின்றோம். இவற்றையெல்லாம் நீயும் கேட்கவில்லையோ? நீ வாழ்வாயாக! இவ்வாறானது எப்படிப்பட்ட உறக்கமோ? வாய் திறந்து நீயும் அதுகுறித்துக் கூறுவாயாக! நாங்களும் கேட்டுக் கொள்வோம். சக்கரப் படையினனாகிய திருமால், நம் சிவபெருமானிடம் மிகுந்த அன்புடையவனாய் இருப்பதற்குக் காரணம், யுக முடிவுக் காலத்திலும், தான் அழியாமல் நிலைபெற்று விளங்கும் ஒப்பற்றவனை, உமையம்மையின் ஒரு பாகனை உயர்வாகப் பாடுகின்றோம். தோழியே! நீயும் ஏற்றுக்கொள்! எண்ணிப்பார்!

163

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய் 9

முந்தைய பழைய பொருள்களுக்கும் முந்தைய பழைய பொருளே! பிந்தைய புதியவற்றுக்கும் மிகவும் பிந்தைய புதிய தன்மையுடையவனே! உன்னைத் தலைவனாகப் பெற்றுள்ள உன்னுடைய சிறப்புக்குரிய அடிமைகளாகிய நாங்கள், உன்னுடைய அடியவரின் அடிகளைப் பர்வுவோம்; அவ்விடத்து அன்னவர்க்கே அணுக்கத் தொண்டராவோம். அப்படிப்பட்டவரே எங்களுக்குக் கணவராவார். அவர் விரும்பிச் சொன்னவாறே அவர்க்கு அடிமை செய்து வாழ்வோம். இந்த வண்ணமே எங்களுக்கு எங்கள் தலைவனே! அருள்புரிவாயாக! அவ்வாறு அருள்புரிவாயாயின், எவ்விதக் குறைபாடும் இல்லாதவராவோம். இத்தகு நெறியினைத் தோழியே! நீ ஏற்றுச் செயல்படு! இதனை எண்ணிப் பார்!

164

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

சொற்களால் விளக்கவியலாதவாறு, சிவபெருமானுடைய திருவடிகள், பாதாள உலகங்கள் ஏழினையும் கடந்து, அதன்கீழும் செல்லக் கூடியன. மணமுடைய மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை சூடிய அவனது திருமுடியோ, எல்லாப் பொருள்களின் முடிவுகளுக்கும் முடிவானதே. உமையம்மையை ஒருபக்கம் உடையவனாகையால், அவன் திருமேனி ஒன்றுடையவன் அல்லன். மறைகள் முதலாக, விண்ணுலகத் தேவரும் மண்ணுலக மாந்தரும் பாடிப் பரவினாலும், முற்றும் விளக்கவியலாத, சொற்களுள் அடக்கவியலாத அருமையும் பெருமையும் வாய்ந்த ஒப்பற்ற தோழன். அடியவரின் உளக்கோவிலில் குடியிருப்பவன். குற்றம் சிறிதுமில்லாத குலத்தைச் சேர்ந்த அரன் அவனே! அவனுடைய ஆலயத்தின்கண் உள்ள பெண் பிள்ளைகளே! அத்தகையவனுடைய ஊர்தான் எது? பெயர்தான் எது? அவனுக்கு வேண்டியவர்தாம் யாவர்? வேண்டாதவர்தாம் யாவர்? அவனைப் பாடித் துதிக்கும் வகைதான் யாது? எம்முடைய பாவையே! அவனுடைய சிறப்பினை ஏற்றுக்கொள்! எண்ணிப் பார்!

165

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய் 11

மார்கழி நீராடக் கூடியுள்ள மங்கையராகிய நாங்கள், ஆழ்ந்தகன்ற சுனையில் இறங்கி, 'முகேர்' என்னும் ஒசை உண்டாகுமாறு, கைகளால் குடைந்து குடைந்து, மூழ்கி எழுந்து மூழ்கி எழுந்து, உன்னுடைய திருவடிகளைப் புகழ்ந்து பாடினோம். தலைவனே! நாங்கள் வழிவழியாக உனக்கு அடிமைப்பட்டோம். உன்னுடைய அருளைக் கொண்டு வாழ்ந்து வருகின்றோம். நிறைவாக எரிகின்ற நெருப்பினைப் போன்ற செந்நிறத் திருமேனியை உடையவனே! திருநீற்றைத் தரித்தவனே! திருவருட்செல்வனே! அழகிய சிற்றிடையினையும், மைதீட்டிய அகன்ற கண்களையும் உடைய மங்கைநல்லாளாகிய உமையம்மையின் மணவாளனே! தலைவனே! நீ ஆட்கொண்டருளும் திருவிளையாடல் புரிபவன். அவ்விளையாடலால், உன்னடியார் கடைத்தேறுவர். நாங்கள் அவ்வாறு கடைத்தேற, எவ்வகைகள் எல்லாம் செய்யவியலுமோ, அவ்வகைகள் அனைத்தையும் செய்துவிட்டோம். எங்களை மீளவும் பிறவிப் பெருங்கடலில் எறியாமல் காப்பாயாக! எம்முடைய அன்புத் தோழியே! சொன்னவற்றை ஏற்றுக்கொள்! எண்ணிப்பார்!

166

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

நம்மைப் பிணைத்துள்ள பிறப்புத்துன்பமானது அழியுமாறு, நாம் குடைந்து குடைந்து, மூழ்கி எழுந்து மூழ்கி எழுந்து, நீராடுவதற்கேற்ற, நல்ல நீர்நிலையாய் விளங்குபவன் அவன். நலம் பொருந்திய தில்லைப் பொன்மன்றில், நெருப்பினைக் கையிலேந்தி நடம் பயின்றாடும் கூத்தன் அவன். இந்த வானமும், மண்ணுலகும், மற்றுமுள்ள நீர், நெருப்பு, காற்று ஆகிய பஞ்சபூதங்கள் எல்லாவற்றையும் காத்தும், படைத்தும், மறைத்தும் அளவற்ற திருவிளையாடல்களைப் புரிபவன் அவன். அத்தகையவனின் அரும்பெருஞ் செயல்களை வியந்து பேசி, அவனுடைய தாமரைத் திருவடிகளை வாழ்த்தி வணங்கியபடி, நம்முடைய கரங்களில் விளங்கும் வளைகள் ஓசை எழுப்பிட, இடையில் விளங்கும் மேகலாபரணம் மிகுந்த ஆரவாரம் செய்திட, மலரணிந்துள்ள கூந்தலின்மேல் வண்டுகள் ஓசை செய்திட, நன்னீரால் நிரம்பப் பெற்றிருக்கும் மலர்கள் நிறைந்த பொய்கையில் குடைந்தாடி, நம்மை அடிமைகளாக உடையவனாகிய சிவபெருமானின் பொன்னார் திருவடிகளைப் புகழ்ந்து பாடி, பெரிய சுனை நீரில் நாம் நீராடுவோம். எம்முடைய அன்புக்குரிய பாவையே! இக்கருத்துகளை ஏற்றுக்கொள்ள எண்ணிப் பார்!

167

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

நீர்நிறைந்த மடுவில், அழகிய கருங்குவளை மலர்கள் மலர்ந்துள்ளன. செந்தாமரை மலர்களும் நிறைவாக உள்ளன. அழகு மிகுந்த நீர்ப்பறவைகள், ஆங்கு ஓங்கிக் குரல் கொடுக்கின்றன. பாம்புகள் பின்னலிடுகின்றன. தங்கள் அழுக்குகளை நீக்கிக் கொள்பவர் அனைவரும் அந்தப் பொய்கையை நாடி வருகின்றனர். எனவே, எங்கள் தலைவியாகிய உமையம்மையைப் போலவும் எங்கள் தலைவனாகிய சிவபெருமானைப் போலவும் உமையொரு பாகனாக அந்தப் பொய்கை தோற்றமளிக்கின்றது. நீரானது பொங்குகின்ற பொய்கையில் புகுந்து மூழ்கிமூழ்கி, நம்முடைய கைகளில் விளங்குகின்ற சங்கு வளைகள் ஓசை செய்ய, அவற்றுடன் சேர்ந்து கலந்து நம்முடைய கால்களில் விளங்குகின்ற சிலம்புகள் பேரொலி செய்ய, நம்முடைய கொங்கைகள் மிகுந்த மகிழ்ச்சியால் பூரித்துப் புடைத்திட, நாம் நீரானது மேலெழும்புமாறு தாமரை பூத்த மென்புனலில் மூழ்கி நீராடுவோமாக! எம்முடைய பூம்பாவையே! எண்ணிப்பார்!

168

காதார் குழையாட பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14

நம்முடைய காதுகளில் அணிந்துள்ள குழைகள் ஆடவும், பசிய பொன்னாலான பிற அணிகலன்கள் ஆங்காங்கே ஆடவும், மலர் சூடிய கூந்தல் ஆடவும், அந்தக் கூந்தலின்மேல் உள்ள வண்டினங்கள் ஆடவும் குளிர்நீரில் நாம் குளித்தெழுவோம். அச்சமயத்தில் திருச்சிற்றம்பலத்தைப் பாடுவோம்; மறைபொருளைப் பாடுவோம்; அந்தப் பொருள் நமக்கே ஆகுமாறு பாடுவோம்; ஒளிமயமானவனின் ஒப்பற்ற ஆற்றல்களைப் பாடுவோம்; அவன் அணிந்திருக்கும் கொன்றை மாலையினைப் பாடுவோம். முன்னவனாம் முக்கண்ணனின் ஆற்றலைப் பாடுவோம்; ஊழிக்காலத்து முடிவிலும், ஒப்பற்ற ஒருவனாய் விளங்கும் சிவனது ஆற்றலைப் பாடுவோம். வெவ்வேறாய்ப் பிரிந்து நம்மைப் பேணியும், பாதுகாத்தும் வந்த வளையணிந்த கைகளையுடைய உமையம்மையின் திருவடிகளின் ஆற்றலைப் பாடுவோம். இவ்வாறாக நாம் குடைந்து குடைந்து நீராடுவோமாக! எம்முடைய பெண்ணே! எண்ணிப்பார்!

169

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

ஒருசமயம் எம்பெருமான் என்றே சொல்லிக் கொண்டிருப்பாள்; மற்றொரு சமயம் நம்பெருமானது பெருமையை ஓயாமல் சொல்லிக் கொண்டிருப்பாள். உள்ளத்தில் மகிழ்ச்சி பெருக்கெடுக்க, மற்றொரு சமயத்தில் கண்ணீர் உகுத்தவாறு இருப்பாள். பிறிதொரு சமயத்தில், தரையில் விழுந்து கிடப்பாள். விண்ணுலகத் தேவரேயானாலும், தான் வணங்காதவள். பெருமன்னனாகிய நம்முடைய சிவபெருமான்மேல் இவ்வாறாகப் பித்துடையவராக ஒருவர், இந்நிலையைத்தான் அடைவாரோ? தன்மீது அன்புகொண்டவரை இவ்வாறு ஆட்கொள்ளும் பெருமான் சிவபெருமானையன்றி வேறு எவர்தாம் உள்ளார்? இவ்வகையில் ஆட்கொள்ளும் வித்தகரின் திருவடிகளைக் கச்சினையும் பூணையும் அணிந்த கொங்கைகளை உடைய மகளீர்! நாம் நம்முடைய இறைவனை நெஞ்சார நினைந்து, வாயாரப் பாடி, அழகுமிகு மலர்கள் நிறைந்த பொய்கையில் குடைந்து குடைந்து நீராடி மகிழ்வோம். எம்முடைய பெண்ணே! இவற்றை எல்லாம் ஏற்றுக் கொள்! எண்ணிப்பார்!

170

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 6

மழைமேகமே! நீதான் கடல்நீரை முகந்துகொண்டு, அதன் பெருக்கத்தைச் சுருக்கி, மேல்நோக்கிச் சென்று, உமையம்மையாரின் கரிய நிறத்தைப் பெற்றாய். மேலும், எம்மை அடிமைகொண்ட அம்மையின் சிற்றிடையை ஒத்ததாக மின்னலிட்டாய். அதற்குமேலும் விளக்கமுற்று, எம்முடைய பிராட்டியாரின் திருவடிகளில் திகழ்கின்ற அழகிய பொற்சிலம்புகள் ஒலித்தன போன்றிருந்தது உன்னுடைய இடிமுழக்கம். அம்மையின் வளைந்த புருவத்தை ஒத்திருந்தது நீ வளைத்த வானவில். உம்மை அடிமை கொண்ட உமையம்மையின் பாகனாகிய சிவபெருமானின் அடியவர்க்கு முன்னர் அருள்புரிந்து, பின்னர் எமக்கும் அருள்மழையைப் பொழிவாயாக! எம்முடைய பெண்ணே! இதனை ஏற்றுக் கொள்! எண்ணிப்பார்!

171

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

செந்தாமரைக் கண்களையுடைய திருமாலிடத்தும், திசைக்கொரு முகமாக நான்கு முகங்களையுடைய நான்முகனிடத்தும், விண்ணவராகிய தேவரிடத்தும், எவ்விடத்தும் இல்லாத ஒப்பற்ற பேரின்பத்தை நமக்குத் தந்தவன் அவன். செழுந்தாது பரவிக்கிடக்கும் கரிய கூந்தலையுடையவளாகிய உமையம்மை, நம்மிடையே உள்ள குற்றங்களை நீக்கியவள். அத்தகைய அம்மையினை, இங்கு நம்முடைய வீடுதோறும் எழுந்தருளச் செய்து, தேவர்க்கும் அரிதான செந்தாமரை மலரடிகளை நமக்குக் காட்டியருள்பவன் அவன். அருள் வழங்கும் அழகிய கண்களையுடைய மன்னவன் அவன். அடியவராகிய நம் அனைவர்க்கும் தெவிட்டாத அமுதமாக விளங்குபவன் அவன். எம்முடைய இனிய தோழியே! நம்முடைய பெருமானாகிய தென்னாடுடையானைப் போற்றிப் புகழ்ந்து பாடி, நன்மை விளைய இந்தச் செந்தாமரைத் தடாகத்தில் மூழ்கித் திளைத்து நீராடுவோமாக! இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்! எண்ணிப்பார்!

172

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18

நெருப்புத் தலமாகிய திருவண்ணாமலை என்னும் திருத்தலத்தில் விளங்குகின்ற சிவபெருமானின் திருவடித் தாமரைகளை நாடித் தேடிச் சென்று, வணங்குகின்ற தேவர்தம் முடிகளில் உள்ள மாணிக்கக் கற்களும் தம்முடைய ஒளி மழுங்கித் தோன்றுவனபோலப் பெருஞ்சிறப்புடைய கதிரவனின் ஒளியின் முன்னர்ப் புறவிருள் நீங்கியது; மின்னிக் கொண்டிருந்த விண்மீன்கள் தாமும் எங்கோ விலகிச் சென்றன. இந்த இளங்காலைப் பொழுதில், பெண்ணாகவும், ஆணாகவும், அலியாகவும், ஒளிவீசும் விண்ணாகவும், மண்ணாகவும், இவையனைத்துக்கும் வேறாகி மிகச் சிறந்த அமுதமாகவும் நிலைத்திருப் பவனாகிய சிவபெருமானின் பொன்னார் திருவடிகளைப் புகழ்ந்து பாடியபடி, இந்தப் பூம்பொய்கையில் நீராடுவோமாக! இக்கருத்தை ஏற்றுக் கொள்வதுடன் எண்ணிப்பார்!

173

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். 19

'இதோ உன்னுடைய கையில் உள்ள பிள்ளை, உனக்கே அடைக்கலம்' என்னும் அந்தப் பழமொழியை நாங்கள் புதுப்பிக்க அஞ்சி, எல்லாம் வல்ல எங்கள் எம்பெருமானே! உனக்காக ஒன்றினைச் சொல்வோம். நீ அதனைக் கேட்பாயாக! எம்முடைய கொங்கைகள், உன்னுடைய அடியவரல்லாதாரின் தோள்களைச் சேராதிருப்பனவாக! எம்முடைய கைகள், உனக்கல்லாமல் வேறெந்தப் பணியும் செய்யாதிருக்குமாக! இரவெனினும் பகலெனினும் எம்முடைய கண்கள், வேறெந்தப் பொருளையும் காணாதிருக்குமாக! எங்கள் தலைவனே! இங்கு எங்களுக்கு நாங்கள் வேண்டியவாறு நீ அளிப்பாயானால், கதிரவன் எந்தத் திசையில் தோன்றினால்தான் என்ன? எமக்கு எந்தக் கவலையும் இல்லை. ஏற்றுக் கொள்க! எண்ணுக! எம்முடைய பெண்ணே!

174

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 20

எல்லாம் வல்லவனாகிய எங்கள் சிவபெருமானே! உன்னுடைய முன்னைப் பழைமைக்கும் பழைமையாகிய திருவடித் தாமரைகளை வணங்குகின்றோம். எங்களுக்கு அருள்புரிவாயாக! உன்னுடைய பின்னைப் பழைமைக்கும் பழைமை யாகிய மென்மையும் நன்மையும் பொருந்திய திருவடிகளை வணங்குகின்றோம். உலக உயிர்களின் தோற்றமாய் விளங்கும் உன்னுடைய பொன்னார் திருவடிகளை வணங்குகின்றோம். உலகத்தின் அனைத்து உயிர்கட்கும் பேரின்பமாய் விளங்கும் மென்மை வாய்ந்த திருவடிகளை வணங்குகின்றோம். உலகத்தின் அனைத்து உயிர்கட்கும் முடிவிடமாக விளங்கும் உன்னுடைய இரண்டு திருவடிகளை வணங்குகின்றோம். திருமாலும் நான்முகனும் காணவியலா உன்னுடைய செந்தாமரை போன்ற திருவடிகளை வணங்குகின்றோம். நாங்கள் திருவடிப் பேற்றினை அடைய, எங்களைக் கடைத்தேற்றி ஆண்டு கொண்டருளும் பொன்னார் திருவடிகளை வணங்குகின்றோம். இன்றைய இந்த நீராடும் மார்கழி நோன்பினை வணங்குகின்றோம். எம்முடைய அன்புத் தோழியே! இக்கூற்றினை ஏற்றுக் கொள்! நன்றாக எண்ணிப்பார்!

திருச்சிற்றம்பலம்

8. திருவம்மானை

(திருவண்ணாமலையில் அருளியது)

ஆனந்தக் களிப்பு

(தரவு கொச்சகக் கலிப்பா)

திரு + (வ்) + அம்மானை – திருவம்மானை. அம்மானை என்பது, பழந்தமிழகச் சிறுமியரின் விளையாட்டுகளுள் ஒன்று. இதனை அம்மனை என்பதும் உண்டு. பாடிக்கொண்டு ஆடுவது, இதனுடைய பாங்காகும். இவ்வகைப் பாடலில் கட்டுண்ட மாணிக்கவாசகர், இறைவனுடைய பேரானந்தப் பெருமிதத்தை வெளிக்கொணர, அவ்வகைப் பாடல்களையே வடிவமைத்துக் கொண்டார். அவர் தம்மையே அம்மானை ஆடும் சிறுமியாகப் பாவித்துக் கொண்டார். ஆனந்தக் களிப்பு என்பது, இறைவனுடைய பேரானந்தத்தை நினைந்து, களிப்புடன் கூறுவது. 'அம்மானாய்' என்று, ஈற்றடியின் இறுதிச்சீர் அமைவது. இப்பகுதியில், இருபது பாடல்கள் அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

175

செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். 1

மூன்று உலகங்களையும் தன்னுடைய இரண்டடிகளால் அளந்த செந்தாமரை போன்ற கண்களையுடைய திருமாலே, பன்றியாய் உருவெடுத்துப் பூமியை அகழ்ந்து சென்றபோதும், காண முடியாதவை எம்பெருமானின் தாமரைத் திருவடிகள். அத்தகைய அவனுடைய திருவடிகளை இம்மண்ணுலகிற்கே வந்து, எமக்கு எளிதாகக் காட்டியருளினான்; எங்கள் பிறவியை நீக்கினான். தென்னை மரங்களின் செறிந்த சோலைகள் சூழ்ந்துள்ள, அழகும் நலமும் பொருந்தியுள்ள திருப்பெருந்துறை என்னும் ஊரினைச் சேர்ந்தவன். அறிவுக் கண்ணைக் கொண்ட அந்தணன் அவன். அரிய கருணையுள்ளம் கொண்டவன். அறைகூவி அழைத்து, வீடுபேற்றை வழங்குபவன். அவனுடைய கருணை வாய்ந்த நெடிய திருவடிகளையே பாடிப் புகழ்வோமாக! அம்மானை!

176

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலும் காண்டற் கரியான் எமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையின் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய். 2

மண்ணுலகத்தினர், விண்ணுலகத்தினர், பாதாள உலகத்தினர், மற்ற உலகங்களிலும் விளங்குகின்றவர்க்கெல்லாம் காட்சிக்கு எட்டாதவன். ஆனால், எளிவந்த பிரானாகிய சிவபெருமான், எமக்கு எளிதாகக் காட்சி தந்த பெருமிதத்துக்கு உரியவன். அன்னவன், திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தினை வாழ்விடமாகக் கொண்டவன். எமக்குப் பித்தத்தை உண்டாக்கியவன். மீண்டும் பிறவாத நெறியினை வழங்கியவன். என்னிடம் வந்து, என்னுடைய உள்ளத்தில் புகுந்த தெவிட்டாத அமுதமாகி இனிப்பவன். மீனவர் தலைவனுக்காக, ஒரு மீனைப் பிடிக்கக் கடலில் வலையினை வீசியவன். தம்முடைய அடியவரின் அன்புக்குக் கட்டுப்பட்டவன். அவனே ஒரு பெருங்கடல். அத்தகையவனை நாம் பாடுவோமாக! அம்மானை!

177

இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய். 3

தேவர்தம் தலைவனாகிய இந்திரனையும், காக்கும் தெய்வமாகிய திருமாலையும், படைப்புக் கடவுளாகிய நான்முகனையும், ஏனைய கடவுளரையும், விண்ணுலகத் தேவரையும் வானுலகத்திலேயே நிலைக்கச் செய்துவிட்டு, எமக்காக இந்த மண்ணுலகிற்கு வந்து, எமக்குக் காட்சிதந்த பெருமைக்குரியவன் எங்கள் சிவபெருமான். எம்மைப் போன்ற அடியவரையும் ஆண்டுகொண்டு, தன்னுடைய திருத்தோள்களில் திருநீற்றுக் கோடுகளை உடையவனாய் மனங்களைக் கசிந்துருகச் செய்தவன். சீர்மிகுந்த திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தினை வாழ்விடமாகக் கொண்டவன். எம்முடைய பிறப்புப் பிணியை நீக்குவதற்காகப் பரியின்மேல் பயணப்பட்டவன். அன்னவன் தந்த இறுதியிலாப் பேரின்பத்தை எண்ணி நாமும் பாடுவோமாக! அம்மானை!

178

வான்தந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனும்
கான்நின்று வற்றியும் புற்றெழுந்தும் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்
டூன்வந் துரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் தெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். 4

விண்ணுலகத் தேவரும், திருமால், நான்முகன் ஆகியவரோடு தேவேந்திரனும் கானகத்தில் நின்று மெய்யுலர்ந்தும், தங்கள்மேல் புற்றானது வளரப்பெற்று நெடுநாளாகத் தவமிருந்தும், அவரெல்லாம் காண்பதற்கு அரிதாக விளங்கியவன் எம்பெருமானாகிய சிவபெருமான். அன்னவன், தானாகவே என்னிடம் வந்து, நாயடியேனைத் தாயைப் போலத் தண்ணருள் செய்து காத்தான். உடலில் உள்ள மயிர்க்கால்கள் சிலிர்த்து, உள்ளத்தின் உள்ளே நெட்டுயிர்ப்பு அடைவதற்குரிய, தேனொத்த அமுதத்தின் தெளிவினைப் போல், ஒளிவடிவமாய் மேலாம் தன்மை கொண்ட, நெடிய திருவடிகளையே நாம் பாடுவோமாக! அம்மானை!

179

கல்லாம் மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்என்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய். 5

பேராற்றல் கொண்டவனும், அழகு மிகுந்த திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தை வாழ்விடமாகக் கொண்டவனுமாகிய சிவபெருமான், மெய்யறிவு நூல்களைக் கல்லாத மனம் படைத்த இழிபிறவிக்குட்பட்ட நாயேனாகிய என்னைச் சிவஞானச் செந்நெறியின்பால் பித்தமடையச் செய்துவிட்டான். கடினமான கல்லை இளகச் செய்து கனியாக்குவதைப் போல, அடியேனின் கல்நெஞ்சை நெகிழ வைத்துப் பக்குவப்படுத்தித் தன்னுடைய அருள்வெள்ளத்தில் முழுக்காட்டினான். அடியேனின் தீவினைகளை அகற்றிய மறைகளின் நாயகனை – மகாதேவனாகிய சிவபெருமானைத் தில்லை என்னும் திருநகரினுள் புகுந்து, சிற்றம்பலத்தில் நிலைபெற்று விளங்கும் கடுகிச் செல்லும் காளை வாகனனை நாமிணைந்து பாடி மகிழ்வோமாக! அம்மானை!

180

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாம் காட்டிச் சிவங்காட்டித்
தாள்தா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆள்தான்கொண் டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய். 6

ஒப்பிலா மணியாகிய ஒண்பொருளாம் சிவபெருமானும் எம்முன்னர்ச் செய்துகாட்டிய மாமாயச் செயல்களைக் குறித்து நீயும் கேட்டதுண்டோ தோழியே! சுண்ணமும் வண்ணமும் தீட்டப்பட்ட அழகு மிகுந்த நாற்றிசை மதில்கள் சூழப்பெற்ற திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தை உறைவிடமாகக் கொண்ட சிவபெருமான், இதுவரை காட்டக்கூடாதனவற்றை எல்லாம் இன்றோ காட்டிவிட்டான்; தானே 'சிவபரம் பொருள்' என்பதையும் காட்டிவிட்டான். அவனுடைய திருவடித் தாமரைகளைக் காட்டினான்; தன்னுடைய திருவருளாகிய தேனைக் காட்டினான். நாட்டு மக்கள் நகைத்திடுமாறு, நாம் மேலான வீடுபேற்றினை அடைந்திடவும், அடிமை செய்து ஆண்டுகொண்டவன். அத்தகையனவற்றை எல்லாம் எண்ணியவாறு நாம் இப்போது பாடி மகிழ்வோமாக! அம்மானை!

181

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய். 7

சிவபெருமான், சற்றும் இடைவிடாமல் நினைவாரின் நெஞ்சில், நீக்கமற நிறைந்திருப்பவன். அவ்வாறு நினையாதவர்க்கோ, மிகவும் சேய்மையில் இருப்பவன். தம்முடைய அடியவர்க்குத் தொண்டனாய் இருப்பவன். திருவும் உருவும் அமையப்பெற்ற திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தை வாழ்விடமாகக் கொண்டவன். மறைகளின் வடிவமாகத் திகழ்பவன். உமையம்மையை ஒரு பாகமாக உடையவன். நாயான நம்மையெல்லாம் ஆண்டுகொண்ட பெருந்தலைவன். தாயென்னும் தத்துவப் பொருளாய்த் திகழ்பவன். தான் ஒருவனே உலகங்கள் ஏழுமாக ஆனவன். அவற்றை நன்முறையில் ஆண்டுகொண்டு வருபவன். அத்தகைய் பெருமிதப் பண்புகளை உடைய சிவபெருமானை, இப்போது நாம் பாடி மகிழ்வோமாக! அம்மானை!

182

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய். 8

பேசப்படும் பெருமானாகிய சிவபெருமானோ, பண்கள் தாங்கிய பாடல்களைப் படைத்தருள்கின்ற பாங்கினை உடையவன். உமையம்மையைத் தன்னுடைய இடப்பாகத்தில் தாங்கியவன். பெருங்குணங்களையுடைய பெருந்தலைவன். திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தைச் சேர்ந்தவன். வானுலகம் தாங்கிய வான்புகழ் கொண்டவன். அகன்ற இடங்கொண்ட அனைத்து மண்டலங்களுக்கும் அவன் முன்னைப் பழம்பொருள். 'ஞானக்கண்' என்னும் நெற்றிக்கண்ணை உடைய தனிப்பெருங் கடவுள். ஆரவாரம் மிகுந்த மாநகர் மதுரையில், மண்ணைத் தோளில் சுமந்து, மூதாட்டி வந்தியிடம் கூலி பெற்றவன். மதுரையை அரசாண்ட மாமன்னன் அரிமர்த்தன பாண்டியனால் அப்போது பிரம்படி பட்டவன். அதனால் ஏற்பட்ட புண்ணைத் தாங்கிக்கொண்ட பொன்னார் மேனியனை நாம் இப்போது பாடி மகிழ்வோமாக! அம்மானை!

183

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
அண்டமுத லாயினான் அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய். 9

பிறைச்சந்திரனைத் தன்னுடைய செஞ்சடையில் அணிந்திருப்பவன். மறைநாயகன். திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தைத் தன்னுடைய உறைவிடமாகக் கொண்டவன். மூன்று புரிகளைக் கொண்டதாகிய பூணூலை, மார்பில் அணிந்திருப்பவன். பேரழகு கொண்ட வெள்ளேற்றினை வாகனமாக உடையவன். ஆலகால நஞ்சினை உண்டமையால், கரிய தொண்டையினைப் பெற்றிருப்பவன். அதனால் நீலகண்டன் எனவும் வழங்கப்படுபவன். செந்நிறத் திருமேனியினை உடையவன். திருவெண்ணீற்றினைத் திருமேனி முழுமையும்

பூசியிருப்பவன். அண்டங்கள் அனைத்திற்கும் முதல்வனாக விளங்கியவன். முடிவு என்பது இல்லாத பேரானந்தப் பெருக்கினைத் தம்முடைய பழைமையான அடியவர்க்கு அந்நாள் வழங்கியது போன்றே, இந்நாளும் வாங்கி வருபவன். எனவே, அத்தகைய பெருமானுடைய அத்தனை சிறப்புகளையும் அண்டங்கள் அனைத்தும் வியந்து போற்றுமாறு நாம் இந்தச் சமயத்தில் பாடி மகிழ்வோமாக! அம்மானை!

184

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய். 10

வானுலகத்தை ஆளுகின்ற தேவர்க்கும் மேலாகிய மறைகளின் உட்பொருளாக விளங்குபவன் அவன். நிலவுலகத்தை ஆளுகின்ற அரசர்க்கும் மாட்சிமைப் பொருளாக நிலைபெற்றவன். குளிர்ச்சி மிகுந்த தமிழினை வளர்க்கின்ற, வளம் செறிந்த பாண்டிய நாட்டிற்கு உரியவன் அவன். உமையம்மை ஆட்சி செய்யும் தனது மேனியின் இடப்பாகத்தை உடையவனும் அவன். அனைவராலும் விரும்பப்படும் திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில், கண்கள் நிறைந்த திருவடிகளைக் காட்டி, நாயேனாகிய அடியேனை ஆண்டு கொண்ட திருவண்ணாமலைத் தெய்வமும் அவன். அத்தகையவனை நாம் மகிழ்ந்து இப்போது பாடுவோமாக! அம்மானை!

185

செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய். 11

செப்பினையொத்த திரண்ட கொங்கைகளை உடைய உமையம்மையைத் தன்னுடைய திருமேனியின் ஒரு பாகத்தில் உடையவன் அவன். அழகுமிக்க திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தை உறைவிடமாகக் கொண்டவன் அவன். சற்றுந் தவறாமல் தன்னுடைய திருவடிகளைச் சேர்ந்தவரின் நெஞ்சத்தை உருக வைக்கின்ற தன்மை படைத்தவன் அவன். அந்தப் பாண்டி நாட்டினையே சிவலோகபதியாக ஆக்குவித்தவன் அவன். நீர் நிரம்பிய கங்கை நதியினைத் தன்னுடைய செஞ்சடையில் உடையவன் அவன். பேரானந்தப் பேருருவாக விளங்குகின்ற, தன்னுடைய நெடிய திருவடிகளுக்கு அடிமை செய்ய ஒப்புக் கொண்டவரின் உள்ளத்தினுள்ளே விளங்குபவன் அவன். அப்பாலுக்கு அப்பாலாகவும் விளங்குபவன் அவன். அத்தகைய பெருஞ்சிறப்புக்குரிய சிவபெருமானை நாம் இப்போது பாடி மிகவும் மகிழ்வோமாக! அம்மானை!

186

மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனும்
எப்பிறவி யுந்தேட என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண்டு இனிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நஞ்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய். 12

கருஞ்சாந்து பூசியதால் அழகுற விளங்கும் கண்களை உடையவளே! கேட்பாயாக! எம்முடைய பெருமானாகிய சிவபெருமானோ, திருமால், நான்முகன், இந்திரன் ஆகிய மூவரும் தத்தமக்குரிய எல்லாப் பிறப்புகளிலும் தேடினாலும், புலப்படாமல் மறைந்து நின்றவன் அவன். அடியேனையும் தன்னுடைய இனிமையான அருளினால் இப்பிறவியில் ஆண்டுகொண்டவன் அவன். இனிமேலும் பிறவாமல் காத்து, மெய்ப்பொருளின் தோற்றமாய் விளங்கியவன் அவன். மெய்யையே நிலைபேறாக் கொண்டவன் அவன். எல்லாப் பொருள்களுக்கும் தானே முதல்வனாக விளங்குபவன் அவன். அனைத்து உயிரினங்களுக்கும் தானே வீடுபேறாகவும் இருப்பவன் அவன். அத்தகைய மெய்ப்பொருளாம் நம்முடைய சிவபெருமானை நாம் அனைவரும் பாடி மகிழ்வோமாக! அம்மானை!

187

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்குஞ் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய். 13

கைகளில் அணிந்துள்ள வளைகள் ஒலித்திடவும், காதுகளில் அணிந்துள்ள குழைகள் அசைந்தாடிடவும் கரியநிறக் கூந்தல் புரளவும், அந்தக் கூந்தலில் சூட்டிய மலர்களினின்றும் தேன் சொரியவும், அதனால் வண்டுகள் மலர்விட்டு மலர் சென்று வருகையில் ஓசையிடவும், செம்மேனி உடையவனை, திருவெண் ணீற்றைத் திருமேனியில் அணிந்தவனை, ஆன்மாக்கள் முழுவதுமாக அறிந்து கொள்ளவியலாதவாறு, மேலான இயற்கை ஒழுகலாற்றை உடையவனை, அங்கு இங்கு என்று சொல்ல இயலாதபடி எங்கெங்கும் நிறைந்திருப்பவனை, தன்னுடைய மெய்யடியார்க்கு மெய்ப்பொருள் ஆனவனை, மெய்யடியார் அல்லாதார்க்குத் தானும் மெய்யன்பன் ஆகாத மறைபொருளாக உள்ளவனை, திருவையாறு என்னும் திருத்தலத்தில் அழகுற அமர்ந்தவனாகிய நம்முடைய சிவபெருமானை, நாம் இப்போது பாடி மகிழ்வோமாக! அம்மானை!

188

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பிற் கொண்டருளும்
வானவன் பூங்குழலே பாடுதுங்காண் அம்மானாய். 14

பேருருக் கொண்ட யானையாகவும், சிற்றுருக் கொண்ட புழுவாகவும், பகுத்தறிவு கொண்ட மனிதராயும், உயர்ஞானம் பெற்றும் உருவமற்றும் விளங்கும் தேவராயும், இவைபோல் இன்னுமுள்ள வேறு வேறு உயிர்களாகவும் பிறந்து பிறந்து இறந்து இறந்து மிகவும் களைத்துவிட்ட அடியேனைத் தன்னுடைய பொன்னார் திருவடிகளைக் காட்டி, ஆண்டு கொண்டவனும் அவன். என்னுடைய உள்ளத்தை உருகச் செய்து, உடலையும் ஒடுங்கச் செய்தவன் அவன். என் தீவினைகளை விரட்டிட விருப்புடன் வந்தவனும் அவனே. எனக்குத் தேனையும் பாலையும் கருப்பஞ்சாற்றையும் ஒத்தவனாய் விளங்கிடும் தலைவனும் அவன். என்னைத் தன்னுடைய தொண்டர் குழாத்துள் ஒருவனாய்ச் சேர்த்துக் கொண்டு அருள்புரிந்த மேலானவனும் அவன். அத்தகையவனின் மெல்லிய மலரடிகளையே நாம் இப்போது பாடி மகிழ்வோமாக! அம்மானை!

189

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்
தந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய். 15

தக்கன் செய்த வேள்வியில், நம் சிவபெருமான் சந்திரனைத் தேய்த்தழித்து, அருள் பொழிந்தவன்; தேவர்தம் தலைவனாகிய இந்திரனைத் தோள்கள் நெரியத் தாக்கியவன்; யாகத் தலைவனின் தலையினை அரிந்தெடுத்தவன்; விண்ணில் தவழ்ந்து செல்லும் ஒளியுமிழும் கதிரவனின் பற்களை நொறுக்கியவன்; ஏனைய தேவர் அனைவரையும், நாற்றிசைகளிலும் தலைதெறிக்க ஓடுமாறு செய்தவன்; வளப்பம் மிகுந்து, எல்லாப் பக்கங்களிலும் சோலைகள் சூழ்ந்திருக்கும் அழகு மிகுந்த திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தின் இறைவனும் அவன். அத்தகையவனுடைய திருமார்பில் திகழ்கின்ற மந்தார மாலையினையே இப்போது நாம் பாடி மகிழ்வோமாக! அம்மானை!

190

ஊனாய் உயிராய் உணர்வாய் என் உட்கலந்து
தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய். 16

தசை, எலும்புகளாய் ஆகிய ஊனுடம்பாகவும், அந்த உடல் இயங்க, உடலுக்குள்ளேயே இருக்கின்ற உயிராகவும், உடல் – உயிர் ஆகிய இரண்டின் சேர்க்கையால் உளதாகும் உணர்வாகவும் எனக்குள் இரண்டறக் கலந்து நிற்பவன் அவன். தித்திக்கும் தேனாகவும், தெவிட்டாத அமுதமாகவும், சுவை மிகுந்த வெல்லக் கட்டியாகவும் எனக்கு இனிமையானவன் அவன். விண்ணவரும் அறியவியலாத வீடுபேற்று நெறியினை எமக்கு வழங்கியருளியவன் அவன். வண்டுகள் ஆர்ப்பரித்து, மொய்த்துக் கொண்டிருக்கும் கொன்றை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையினைச் சூடிக் கொண்டிருக்கும் தொண்டன் அவன். சிறப்பமைந்ததும் மேலானதுமாகிய பேரறிவு வடிவினனாக விளங்குபவன் அவன். அளவினைக் கடந்த பலவகை உயிரினங்களுக்கும் தலைவனாகி நிற்பவன் அவன். அத்தகைய நம் சிவபெருமானை இப்போது நாம் பாடி மகிழ்வோமாக! அம்மானை!

191

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய். 17

மெல்லிய கொன்றைமலர் மாலையினைத் தலையில் சூடிக்கொண்டு, சிவபெருமானின் திரண்ட தோளினைத் தழுவிக் கொள்வேன். அவனைத் தழுவிக் கொண்டதும், இன்பத்தின் எல்லை கடந்து மயங்கி நிற்பேன். அவ்வாறு மயங்கி நின்றதும், பின்னர்த் தெளிவடைந்து ஊடல் கொள்வேன். பின்னர் அவனுடைய கொவ்வைச் செவ்வாயின் இதழிடை ஊறுகின்ற தெள்ளமுதைச் சுவைக்க உருகி நிற்பேன். உள்ளம் உருகியவாறு அவனைத் தேடித் தேடி அலைந்து திரிவேன். அவ்வாறு அவனைத் தேடுகின்ற போதெல்லாம், அவனுடைய பொன்னார் திருவடிகளையே சிந்தித்து நிற்பேன். அவனைச் சேராத நிலையில், மிகவும் வாட்டமுற்று நிற்பேன். பின்னர்ச் சேர்ந்தபோதோ, அளவற்ற மகிழ்ச்சியினைக் கொள்வேன். சுடலைக்கானில், கைகளில் நெருப்புச்சட்டியினை ஏந்தியவாறு ஆடுகின்ற அந்தச் செம்மேனி அம்மானின் சிவந்த திருவடிகளையே நாம் பாடி மகிழ்வோமாக! அம்மானை!

192

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனும் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்தென் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய். 18

கிளியினைப் போன்று இனிமையும் மென்மையும் கொண்ட மொழியினைப் பேசும் உமையம்மையைத் தனது மேனியின் சரிபாதியாக உடையவன் அவன். வெளிப்பட்டு வந்த திருமாலும் நான்முகனும் காண்பதற்கரியவனாய் விளங்கும் பேரறிவாளன் அவன். தெளிவடைந்த நறுந்தேனாக இருப்பவன் அவன். சிறப்புமிக்க திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில், எளிவந்த பிரானாக என்மேல் பரிவுகொண்டு அருள்பொழிந்தவன் அவன். எண்ணுவதற்கரிய இனிய கருணையினால் ஒளியுருவாய்த் தோன்றியவன் அவன். என்னுடைய உள்ளத்தின் உள்ளே மெய்ஞ்ஞான மேலொளி திகழுமாறு அருள் வழங்கிய மறையவன் அவன். அத்தகைய தன்மைகள் வாய்ந்த சிவபெருமானை இப்போது நாம் பாடி மகிழ்வோமாக! அம்மானை!

193

முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய். 19

மூன்று பெருந்தேவர்க்கும் முன்னர்த் தோன்றிய முதல்வனை, அனைத்துப் பொருள்களுமாய் உலக முடிவுக்குப் பின்னரும் நிலைநிற்பவனை, பொன்னிறம் உடையவனை, அனைவரும் விரும்புகின்ற திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் திகழ்பவனை, விண்ணுலகமுடையவனை, உமையம்மை விரும்பித் தங்கத் தனது திருமேனியில் பாதியைத் தந்தவனை, அழகிய தென் திருவானைக்கா என்னும் திருத்தலத்தில் கோவில் கொண்டவனை, தென்பாண்டி நாட்டவனை, 'என்னுடையவன்; என்னப்பன்' என்று சொல்பவர்க்கு இனிய அமுதத்தைப் போன்றவனை, அத்தகு பெரியோனை, நாம் உளமார நினைந்தும், வாயாரப் போற்றிப் புகழ்ந்தும், மெய்யார வணங்கியும் பாடி மகிழ்வோமாக! அம்மானை!

194

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய். 20

தன்னுடைய தன்மை இத்தகையதென்று தன் அடியவரல்லாமல், பிறர் எவரும் அறிந்து கொள்வதற்கு அருமை வாய்ந்த பெருமான். அவன், திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தை உறைவிடமாக உடையவன். வெற்றிப்பரி ஊர்ந்து வந்து, தன்னுடைய அடியவரின் குற்றங்குறைகளைப் போக்கி, அவர்தம் குணநலங்களைப் பாராட்டிச் சீராட்டிச் சூழ்ந்துள்ள உறவுமுறையினரின் பந்தபாசம் என்னும் தொடர்பினைத் துண்டிப்பவன். அந்தப் பெருமானின் பழைய புகழினையே பற்றிக்கொண்டு, இவ்வுலகத்தில் பாசம் என்னும் பற்றினை நாம் முற்றிலுமாக நீக்கிக் கொள்வோம். அதற்காக நம்மைச் சிக்கெனப் பற்றிக்கொண்ட பேரானந்தப் பெருமான் அவன். அத்தகைய பெருமானை இப்போது நாம் போற்றிப் புகழ்ந்து பாடி மகிழ்வோமாக! அம்மானை!

திருச்சிற்றம்பலம்

9. திருப்பொற்சுண்ணம்

(தில்லையில் அருளியது)

ஆனந்த மனோலயம்

(அறுசீர் விருத்தம்)

திரு + பொன் + சுண்ணம் – திருப்பொற்சுண்ணம். 'சுண்ணம்' என்பது மகளிர் தலைதேய்த்துக் குளிப்பதற்குப் பயன்படுத்தும் ஒருவகை நறுமணப்பொடி. பொன்னைக் கலப்புதால், 'பொற்சுண்ணம்' ஆயிற்று. பொதுவாக நாட்டுப்புற மகளிர், வேலை செய்கையில், பாடுவது வழக்கம். அந்த வகையில், சுண்ணம் இடிக்கையிலும் பாடுவது மரபாயிற்று. இவ்வகைப் பாடல்களில், சொல்லழகு மிஞ்சும்; சந்தநயம் கொஞ்சும்; பொருளழகு விஞ்சும். 'திருப்பொற்சுண்ணம்' என்பது, சிவபெருமானைப் பற்றியது. அவனுக்கு மகளிரெலாம் ஒன்றுசேர்ந்து, திருப்பொற்சுண்ணம் இடிப்பதாகவும், அவனைப் போற்றிப் புகழ்வதாகவும் அமையப்பெற்றது. இப்பகுதியில், இருபது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலின் ஈற்றடியின் இறுதி இரண்டு சீர்கள், அதாவது ஐந்தாம் ஆறாம் சீர்கள், 'சுண்ணம் இடித்து நாமே' என்று அமையப் பெற்றவை.

திருச்சிற்றம்பலம்

195

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

அழகியதாகிய முத்துமணி மாலைகளையும், அன்றலர்ந்த மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளையும் ஆங்காங்குத் தொங்கவிடுங்கள். முளைப்பாலிகைக் குடத்தையும், தூபகலசத்தையும், சிறந்த திருவிளக்குகளையும் வையுங்கள். மலைமகளும், திருமகளும், நிலமகளும் கலைமகளோடு கூடிப் பல்லாண்டு பாடுங்கள். சித்தியும், கௌரியும், பார்வதியும், கங்கையும் சேர்ந்துவந்து வெண்சாமரம் வீசுங்கள். எம்முடைய தந்தையும், திருவையாற்றை உடையவனுமாகிய எம்முடைய தலைவனைப் பாடியாட நாம் திருப்பொற்சுண்ணத்தை இடிப்போமாக!

196

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கண் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

அழகு வாய்ந்த நீண்ட சடையினை உடைய எம்பெருமானுக்காக நயம் வாய்ந்த திருப்பொற்சுண்ணம் இடிக்க வேண்டும். மாம்பிஞ்சின் பிளவினையொத்த கண்களை உடைய மகளிரே! விரைவாக வந்து சேருங்கள்; வந்து சேர்ந்து, எம்முடன் ஒன்றுகூடிப் பாடுங்கள். நலம் வாய்ந்த தொண்டர் என்போர், வெளியே காத்திராதபடி அவரையெல்லாம் வாயெடுத்துக் கூவி அழையுங்கள்; கூடி நின்று கூத்தாடுங்கள்; புகழ்ந்து பேசிப் போற்றுங்கள்; எம்முடைய தலைவனும், எம்முடைய கூத்தனுமாகிய தில்லைப் பெருமான், உமையம்மையும் தானுமாகச் சேர்ந்து வந்து, எம்மை ஆண்டுகொள்வதற்காகச் செம்பொன் நிறமுடைய சுண்ணப்பொடியினை நாம் இடிப்போமாக!

197

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 3

அழகிய திருவெண்ணீற்றினை அணிந்தும், தரையை மெழுகித் தூய்மையான பொற்றுகளைத் தூவி, நவநிதிகளைப் பரப்பித் தேவேந்திரனுடைய கற்பக மரத்தை நிலைநிறுத்தி, எல்லா இடங்களிலும் அழகிய தீபங்களை ஏற்றி வைத்து, அதன் பின்னர் இடபக்கொடியினை உயர்த்துங்கள். இந்திரனுக்குக் கோமானாகவும், நான்முகன் தனக்குப் பெருமானாகவும், திருமாலுக்குத் தலைவனாகவும், நல்ல வேலினைக் கைக்கொண்டுள்ள முருகப்பெருமானுக்குத் தந்தையாகவும், எம்மைப் போன்றவரை எல்லாம் ஆட்கொள்ளும் அன்னையாகிய உமையம்மைக்கு ஏற்ற கணவனாக விளங்கும் எம்பெருமானாகிய சிவபெருமானுக்காகப் பொருந்திய பொற்சுண்ணம் இடிப்போமாக!

198

காசணி மின்களு லக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவி னையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

உலக்கைகளுக்குக் காசு மாலையினைச் சூட்டுங்கள். கருங்காலி மரத்தினால் செய்த உரல்களுக்குப் பட்டுத் துணியைச் சுற்றுங்கள். சிவபெருமானிடம் உள்ளத்து அன்பினைச் செலுத்தும் அடியவரெல்லாம் 'நிலைபெற்று வாழ்க!' என்றவாறு வாழ்த்தினைக் கூறுங்கள். எல்லா உலகங்களும் ஏற்றிப் போற்றுகின்ற கச்சியம்பதியில் விளங்குகின்ற திருவேகம்பனுடைய பசும்பொற் கோவிலதனைப் புகழ்ந்து பாடுங்கள். அவ்வாறு பாடி, நம்மிடத்துள்ள பாசவினைகளைக் களைந்து நின்று, பாடியவாறே தொடர்ந்து நாம் அவனுக்காகப் பொற்சுண்ணத்தை இடிப்போமாக!

199

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

நான்முகனும் திருமாலும், முதலாவதாகக் குடவிளக்கினை ஏந்துவர். அவரல்லாதாராகிய அமரர்கோன் இந்திரனும், கூடிய தேவகணத்தினர் அனைவரும் நமக்குப் பின்னரே குடவிளக்கினை ஏந்திக்கொண்டு வருவர். இவருள் எவரும் நமக்கு முன்னர்ச் செல்ல விடமாட்டோம். செறிவுற்ற மதில்களையுடைய முப்புரங்களை அம்பெய்து அழித்த வில்லினனாகிய திருவேகம்பப் பெருமானுடைய பசும்பொற் கோவிலைப் புகழ்ந்து பாடுங்கள். அவ்வாறு பாடப் புன்னகை முகத்தையும், செவ்வாயிதழ்களையும் கொண்ட மகளிரே! வாருங்கள். மூன்று கண்களைக் கொண்ட நம்முடைய அப்பனுக்காக ஆடுதற்குரிய பொற்சுண்ணம் இடிப்போமாக!

200

உலக்கை பலஓச்சு வார்பெரியோர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6

எந்தை பெருமானுக்குப் பொற்சுண்ணம் இடித்தலாகிய சிவத்தொண்டில் பங்குபெற, எண்ணிறந்த பெரியோர் வந்து கூடினர். அவர் அனைவரும் உயர்த்திப் பிடித்த உலக்கைகளுக்கு, இந்த உலகம் என்னும் உரல் போதவில்லை. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கண்டுமகிழ வந்த அடியவர் தமக்கோ, நிற்கவும் இந்த உலகமானது போதவில்லை. அடியவராகிய நமக்கு நலம் உண்டாவதற்காக, எம்பெருமான் நம்மை ஆண்டுகொண்டு, அன்றலர்ந்த மலர்களைப் போன்றனவாகிய திருவடிகளை நாம் அணிந்து கொள்ளுமாறு நமக்கு வழங்கியருளினான். அவனோ மலையரசனாகிய இமவானுக்கு மருகன். அத்தகையவனைப் பாடிப் பாடி இன்புற்றுப் பொற்சுண்ணம் இடிப்போமாக!

201

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்னகோவுக்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 7

கைகளில் அணிந்துள்ள வளைகளும், தோள்களில் பூட்டியுள்ள வளைகளும் ஆரவாரிக்கின்றன. ஆங்குக் குழுமியுள்ள தொண்டர்குழாம் எல்லாம் எழுந்து நின்று ஆரவாரிக்கின்றன. நாட்டினர் நம்மைப் பார்த்து, இவை அனைத்தும் பயன்படாச் செயல்கள் என்று பரிகசிக்கவும், நாமும் அவர் நம்மைப் பரிகசிப்பது அறியாமை என்று ஆரவாரிக்கின்றோம். பாடகம் என்னும் அணியினைத் தன்னுடைய மெல்லிய திருவடிகளில் அணிந்திருக்கும் உமையம்மைக்கு ஒரு பாகத்தைத் தன்னுடைய திருமேனியில் அளித்தவனுக்கு, பெருமைமிக்க பொன்மலையினைப் போன்ற பரம்பொருளாகிய சிவபெருமானுக்கு, அவன் நீராடப் பொற்சுண்ணம் இடிப்போமாக!

202

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிடு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

ஒளியுமிழும் பெரிய கண்களையும், இளமையும் கொண்ட மங்கைப் பருவ நன்மகளிர்! கோடுகளைக் கொண்ட வளைகள் ஒலிக்கவும், பருத்த கொங்கைகள் விம்மிப் புடைக்கவும், உயர்த்திய தோள்கள் தலையுடன் ஒட்டி உறவாடவும் நாம் மீண்டும் மீண்டும் அஞ்சலிப்போம். அன்றலர்ந்த தாமரை மலர் போன்ற திருவடிகளைக் காட்டி, நாயினும் கடைப்பட்ட நம்மையெல்லாம் இந்தப் பிறவியிலே ஆண்டுகொண்டவன் அவன். அத்தகையவனுடைய அரும்பண்புகளைப் போற்றிப் பாடிப் பாடி, அவன் நீராட வேண்டி நாமும் பொற்சுண்ணம் இடிப்போமாக!

203

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

இந்த மண்ணுலகம் முழுவதையுமே உரல் என்று கொள்வோம். 'மாமேரு' என்னும் பெருமலையை உலக்கை என்று நிறுத்தி வைப்போம். 'மெய்ம்மை' என்னும் மஞ்சளை அந்த உரலில் நிறைய இடுவோம். மேன்மையும் அழகுமுடைய திருப்பெருந்துறையுறை இறைவனாகிய எம்பெருமானின் சிவந்த திருவடிகளைப் புகழ்ந்து பாடிப் பாடி மகிழ்வோம். நம்முடைய தலைவனும், அழகு மிகுந்த தில்லைத் திருநகரில் உறைபவனாகிய சிவபெருமான் நீராடி மகிழ்வதற்காக, இடக்கைப் பொன்னுலக்கையினை வலக்கையில் பற்றியவாறு பொற்சுண்ணம் இடிப்போமாக!

204

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

முத்துமாலைகள் அணிந்திருக்கும் நம்முடைய கொங்கைகள் குலுங்கக் குலுங்க, செறிந்த கூந்தலில் வண்டினங்கள் ஆர்ப்பரிக்க ஆர்ப்பரிக்க, நமது மனமானது சிவபெருமானோடு சேர்ந்து கூத்தாடவும், சிவந்த கெண்டைமீன் போன்ற கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் சொரியவும், பித்தராகிய நாமெல்லாம் நம்முடைய பெருமானோடு ஆடிடவும், அன்பர் அல்லாதார் பிறவிப் பிணியில் அழுந்தியவாறு துன்புறவும், அப்பன் அவனின் பெருங்கருணையினால் அடியவர் மகிழ்ந்து ஆடிடவும், நம்முடைய பெருமான் நீராடத் தேவையான பொற்சுண்ணத்தை இடிப்போமாக!

205

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

சிரிப்பதனால் பக்கத்தில் ஒளிரும் நிலவைப் போன்று, பற்கள்-பளிச்சிடவும், வாய்திறந்து பாடுகையில், அழகிய சிவந்த உதடுகள் துடித்திடவும், நம்மையெல்லாம் அவன் ஆண்டுகொண்ட வகைபற்றிப் பாடுங்கள்; அடிமை கொண்ட தன்மையினையும் பாடிப்பாடித் தேடுங்கள். எம்பெருமானைத் தேடி உள்ளம் களியுங்கள். திகைப்படைந்து பின்னர்த் தெளிவடைந்து கூத்தாடுங்கள். தில்லைப் பொன்னம்பலத்தில் திருநடனம் ஆடிய சிவபெருமானுக்கு, அவன் நீராடி மகிழப் பொற்சுண்ணத்தை இடிப்போமாக!

206

மையமர் கண்டனை வானநாடர்
 மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
 அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
 போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
 பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

கரிய நிறம் வாய்ந்த கழுத்தினைக் கொண்டவனும், விண்ணுலகினராகிய தேவர்தம் மருந்தானவனும், மாணிக்கம் போன்று ஒளிவீசிக் கூத்தாடுபவனும் ஆகிய சிவபெருமானை, நம் தலைவனை, தெய்வங்களின் தலைவனை, நம்மையெல்லாம் தன்னுடைய திருவருளுக்கு உட்படுத்தி ஆண்டுகொண்டு, தன்னுடைய அரும்பெரும் பண்புகளைக் காட்டுகின்ற, பொய்யர்க்குப் பொய்யனாய் விளங்கி, மெய்யர்க்கு மெய்யனாய் விளங்குபவன் அவன், செவ்வரி படர்ந்த செந்தாமரை போலும் கண்களையும், பொன்வளையை அணிந்த தோள்களையும், நல்ல பாம்பின் படத்தையொத்த அல்குல் தடத்தையும் கொண்ட அழகுடைய மகளிரே! இத்தகைய தகுதிகளைக் கொண்ட நம்முடைய பெருமானைப் பாடிப் பாடி, அவன் நீராடி மகிழ்வதற்குத் தேவையான பொற்சுண்ணத்தினை இடிப்போமாக!

207

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
 வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு தெங்களப்பன்
 எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
 தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
 பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

மின்னலைப் போன்ற இடையினையும், செம்பவளம் போன்ற உதடுகளையும், கருமைநிறக் கண்களையும், வெண்மைநிறப் பற்களையும், இன்னிசையை ஒத்த மெல்லிய மொழிகளையும் உடைய பேச்சினையும், பொன்னால் புனைந்த அணிகலன்கள் விளங்குகின்ற கொங்கைகளை உடைய மங்கைப் பருவத்து நல்லீரே! என்னுடைய தெவிட்டாத அமுதமாக விளங்குபவன் எங்கள் அப்பன்; எங்கள் பெருமான்; இமவான் மகளாகிய பார்வதியம்மைக்குத் தன்னுடைய கணவனாகவும், மகனாகவும், தகப்பனாகவும், தமையனாகவும், எம்முடைய தலைவனாகவும் விளங்கக்கூடிய சிவபெருமானுடைய திருவடிகளைப் போற்றிப் புகழ்ந்து பாடி, அவனுடைய நீராட்டுக்கு வேண்டிய பொற்சுண்ணத்தை இடிப்போமாக!

208

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

நம்முடைய கைகளில் உள்ள சங்கு வளைகள் ஓசையிட, கால்களில் உள்ள சிலம்புகள் ஒலித்திட, மிகவும் நீண்ட கூந்தலில் உள்ள மாலை அசைந்திட, வாயின் கொவ்வைக்கனி போன்ற சிவந்த உதடுகள் துடித்திட விளங்குகின்ற சிறந்த பொன்னணிகளை உடைய மகளிரே! நாம் சிவலோகத்தைப் புகழ்ந்து பாடுவோம். கங்கைநதி சலசலக்கக் கண்டு, அதன் அணித்தேயுள்ள பாம்பும் ஓசையிடும் செறிந்த சடைமுடியை உடையவனாகிய சிவபெருமானின் பொன்னார் திருவடிகளுக்கே பெருக்கெடுக்கும் காதலில் நம்முடைய கொங்கைகள் பூரித்து விம்மிட, அவனுடைய நீராடலுடக்கு வேண்டிய பொற்சுண்ணத்தை இடிப்போமாக!

209

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

மெய்ஞ்ஞானம் என்னும் கருப்பஞ்சாற்றின் தெளிவை, அந்தத் தெளிவினின்றும் தோன்றிய இன்சுவைப் பாகை, தேடி அடைவதற்குரிய நன்மையை, சுவையில் கெடாத தேனை, முக்கனிகளின் முழுச்சுவையுமாய் ஆனவனை, உள்ளத்தினுள்ளே ஊடுருவி நின்று இனிக்கக் கூடிய இறைவனை, பிறவியென்னும் பெரும்பிணியைத் துணித்து, நம்மையெல்லாம் ஆண்டுகொண்ட ஆனந்தக்கூத்தனை, நாவில் வடு உண்டாகுமளவிலும் வாழ்த்திப் பாடி வணங்குவோம். நல்ல கருங்குவளைமலர் போன்ற அகன்ற கண்களை உடைய மடந்தைப் பருவ மகளிரே! அவனைப் பாடியபடியே அவன் நீராடத் தேவையான பொற்சுண்ணத்தை இடிப்போமாக!

210

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

கடைத்தேறும் பொருட்டு நாமும் வந்து, அடியவர் தம்முடன் ஒன்றுகலந்து, அவன் நம்மை ஆட்கொள்ளச் செய்யும் தன்மையினைப் பாடுவோம். வானுலகத்துத் தேவர்தம் கனவினாலும் கண்டறியவியலாச் சிறப்புடையவை, அவனுடைய செந்தாமரை மலரினையொத்த திருவடிகள். அவன் அவற்றை நமக்கு நனவில் காட்டியவன். ஆக்கத்தின் அடையாளமாக விளங்கும் இடபம் தாங்கிய வெற்றிக்கொடியினை ஏந்தியுள்ள சிவபெருமான் அவன். முப்புரங்களையும் எரித்தழித்த வெற்றிவீரன் அவன். அவனுடைய பல்வேறு திருப்பெயர்களைச் சொல்லிச் சொல்லி, அவனுடைய நீராடலுக்குரிய பொற்சுண்ணத்தைத் நாம் இடிப்போமாக!

211

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடிவ லக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

தன்னிடத்தில் தேனைக் கொண்டிருக்கும் சிறந்த மலராகிய கொன்றையினைப் பாடுவோம். ஐயன் உறைகின்ற சீரார் சிவபுரத்தைப் பாடுவோம். அவனுடைய மிளிரும் செந்திருச்சடையில் விளங்குகின்ற சந்திரப்பிறையினைப் பாடுவோம். அவனுடைய ஊர்தியாக விளங்குகின்ற வெள்ளேற்றைப் பாடுவோம். அவனுடைய வலக்கை ஏந்தியுள்ள, புலால் ஒட்டிக்கொண்டிருக்கும் பெரிய மழுவாயுதத்தையும் திரிசூலத்தையும் பாடுவோம். விண்ணகத் தேவரும் மண்ணக மாந்தரும் கடைத்தேறும் பொருட்டு, முன்னை நாளில் ஆலகால நஞ்சினை அறுசுவை உணவாக உண்ட அந்த அருட்செயலைப் பாடுவோம். அவ்வாறு பாடியவாறே, அவனுடைய நீராடலுக்குத் தேவையான பொற்சுண்ணப் பொடியினை இடிப்போமாக!

212

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

நான்முகனது தலையினைக் கிள்ளியெடுத்து, அதனைப் பந்தாகப் பாவித்து, அவன் ஆடிய அழகினைப் பாடுவோம். தக்கனுடைய வேள்வியில் கலந்து கொண்ட கதிரவனுடைய பல்லை உடைத்த அவன் செயலைப் பாடுவோம். 'கயந்தன்' என்னும் கரியைக் கொன்று, அதன் தோலினைப் போர்வையெனக் கொண்ட அவன்

வீரத்தைப் பாடுவோம். கூற்றுவனைக் காலால் எட்டியுதைத்த அவன் தன்மையைப் பாடுவோம். பொருந்தியனவான முப்புரங்களையும் அம்பெய்து வீழ்த்திய அவன் அழகினைப் பாடுவோம். ஏழையராகிய அடியவராம் நம்மையெல்லாம் ஆண்டு கொண்ட அருமையினைப் பாடுவோம். இவ்வகைகளில் எல்லாம் அவனுடைய பண்புகளைப் பாடிப்பாடி, ஆடியாடி அவனுடைய நீராடலுக்குரிய திருப்பொற் சுண்ணத்தை நாம் இடிப்போமாக!

213

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

சிவபெருமான் வட்ட வடிவில் அணிந்திருக்கின்ற மிளிர்கொன்றை மலர்மாலையினைப் பாடுவோம்.அவனிடமுள்ள ஊமத்தம்பூவினையும் பாடுவோம். செஞ்சடையில் சூடிக்கொண்டிருக்கும் சந்திரப்பிறையினைப் பாடுவோம். சான்றோர் வாழ்கின்ற அழகிய தில்லைத் திருநகரைப் பாடுவோம். ஆங்குள்ள சிற்றம்பலத்தில் உறைகின்ற எங்கள் திருவினைப் பாடுவோம். அவன் இறுகக் கட்டியிருக்கும் பாம்புக் கச்சையினைப் பாடுவோம். அவன் கங்கணமாகக் கட்டிக் கொண்டிருக்கும் பாம்பினையும், கவிந்துள்ள கையின்மேல் இருந்துகொண்டு ஆடுகின்ற பாம்பினையும் பாடுவோம். இவ்வாறு பலவற்றையும் புகழ்ந்து பாடியவாறு, முன்னவனாகிய சிவபெருமானுக்கு, அவன் நீராடுவதற்குரிய பொற்சுண்ணம் இடிப்போமாக!

214

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இருள் ஆயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்
காதியும் அந்தமும் ஆயினார்க்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

மறைகளும் அவற்றின் பயன்களும், வேள்விகளும் அவற்றின் விளைவுகளும் ஆகியவன் நம்முடைய சிவபெருமான். மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆகிய பண்புகளாக விளங்குபவன் அவன். பகலும் இரவுமென ஆகியவன். துன்பமும் இன்பமுமென ஆகியவன். பாதியும் முழுமையுமென ஆகியவன். பாசபந்தமும் பற்றறுத்த வீடுமாகவும் ஆகியவன். முதலும் முடிவுமென ஆகியவன். இவ்வாறாகிய அவனுடைய தன்மைகளைப் பாடி, அவனுடைய நீராடலுக்குரிய திருப்பொற் சுண்ணத்தை இடிப்போமாக!

திருச்சிற்றம்பலம்

10. திருக்கோத்தும்பி

(தில்லையில் அருளியது)

சிவனோடு ஐக்கியம்

(தரவு கொச்சகக் கலிப்பா)

திரு + கோ + தும்பி – திருக்கோத்தும்பி. கோ – அரசன்; தும்பி – வண்டு. அதாவது, அரசவண்டு. வண்டினங்களுள் மிகவும் பெரியது, அரச வண்டு அல்லது கோத்தும்பி. சீவான்மாக்களுள் மானுட வடிவம் கொண்டவன், கோத்தும்பி என்று உருவகப்படுத்தப்படுகின்றான். மலரிலுள்ள நறுமணத்தையும் நறுந்தேனையும் தும்பியானது விரும்புவதைப் போல, மனிதனாய்ப் பிறந்தவன் பரம்பொருளையே எண்ணியும், பேசியும், பணிசெயவும் கடன்பட்டவன். இப்பகுதியில், பாடல்கள் அனைத்தும் எம்பெருமானின் திருவடிகளாகிய மலர்களில் சென்று நுகருமாறு அரசவண்டினை அல்லது கோத்தும்பியைப் பார்த்து உரைப்பன போல் அமைந்துள்ளன. சிவனோடு ஐக்கியம் என்பது, அடியவர் தம்முடைய மனங்களைச் சிவபெருமானோடு இரண்டறக் கலக்கச் செய்வது. இங்கு இருபது பாடல்கள் அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

215

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 1

செந்தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் படைப்புக் கடவுளாகிய நான்முகனும், தேவேந்திரனும், அழகு பொருந்திய நாமகளும், திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் காக்கும் கடவுளாம் திருமாலும், நான்கு மறைகளும், சந்திரன், கதிரவன், நெருப்பு ஆகிய பெருமைமிக்க முச்சுடர்களும், மற்றுமுள்ள தேவரும் தாம் அறியவியலா, வெள்ளேற்றின்மேல் ஏறுகின்ற சிவபெருமானின் திருவடி மலர்களில் சென்று, அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

216

நானாரென் உள்ளமார் ஞானங்களார் என்னையாரறிவார்
வானோர் பிரானென்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடையதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ. 2

வானவர்தம் தலைவனாகிய சிவபெருமான், என்னை ஆட்கொள்ளாமல் விட்டிருப்பானேயாகில், நான்தான் யாரோ? எனது உள்ளந்தான் எப்படிப்பட்டதோ? என் அறிவுக்கூறுகள்தாம் எப்படிப்பட்டனவோ? என்னையுமே யாரறிவார்? என்னை மதிப்பவரும் எவருமில்லை. புலால் பொருந்திய உடைபட்ட மண்டையோட்டில் பிச்சை எடுக்கச் செல்கின்ற, பொன்னம்பலத்தில் உறைபவனாகிய சிவபெருமானின் தேன்சொரிகின்ற தாமரைத் திருவடிகளில் சென்று, அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

217

தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறு மெப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 3

தினையளவாகிய மிகவும் சிறிய மலருக்குள் நுழைந்து, இனிமேலும் தேன் பருகாதே! நினைக்கும்போதும், காணும்போதும், பேசும்போதும், எந்நேரமும் உடலில் உள்ள எல்லா எலும்புகளும் உள்ளே நெகிழ்ச்சி அடையுமாறு ஆனந்தத் தேனைச் சிந்தும் கூத்தினை உடையவனாகிய சிவபெருமானின் திருவடி மலர்களுக்கே சென்று, அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

218

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 4

திண்ணனாகிய கண்ணப்பனையொத்த அன்பெனும் பண்பானது என்னிடத்தில் இல்லாமை என்பதைக் கண்ட பின்னரும், என்னுடைய அப்பனாகிய சிவபெருமான் என்னையும் ஒப்பி, என்னையும் தன் அடிமையாக்கிக் கொண்டான்.அருள் வழங்கி, நன்னெறியில் செல்லப் பணித்தான். என்னைத் தன்னிடம் வருகவென்று அழைத்துக் கொண்டான். மேலான கருணையுள்ளம் கொண்டவன் அவன். திருநீற்று மேனியனாய்த் திகழ்பவன் அவன். அத்தகையவனின் திருவடி மலர்களைச் சென்றடைந்து, அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

219

அத்தேவர் தேவர் அவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 5

'அந்தத் தேய்வமே தெய்வம்! அவரே தெய்வம்!' என்று இவ்வாறெல்லாம் பொய்த் தெய்வங்களைப் பேசிப் புலம்புகின்ற நிலவுலகில், நானோ

இத்தெய்வங்களிடத்தே சிறிதும் பற்றுக் கொள்ளாமல், என் பற்றுகள் அனைத்தும் விலகிட, நான் பற்றிநின்ற மெய்த்தெய்வம், மேலான தெய்வம் சிவபெருமானின் திருவடி மலர்களில் சென்று, அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

220

வைத்த நிதிபெண்டிர் மக்கள்குலங் கல்வியென்னும்
பித்த உலகிற் பிறப்போ டிறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 6

சேர்த்து வைத்த செல்வம், கொண்ட மனையாள், மக்கட்செல்வம், கருதிய குலம், கற்ற கல்வி என்னும் இவை யாவும் மருண்ட இவ்வுலகில், பிறப்போடு சிறப்பென்னும் மனக்கலக்கத்தினைத் தெளிவுறுத்திய மெய்ஞ்ஞான வடிவினனாகிய சிவபெருமானிடம் சென்று, அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

221

சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரைநாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 7

உள்ளத்திற்குத் தெவிட்டாத அமுதமாம் நலஞ்செய்கின்ற கரத்தானாகிய சிவபெருமானை எண்ணிட, எனக்குத்தான் இழப்பும் உண்டோ?தீயேனாகிய அடியேன், அவனுடைய அழிவற்ற திருவடிகளை மறக்கத்தான் கூடுமோ? அந்தச் செம்மானாகிய பெம்மானோடு பொருந்தாப் பாவியராகிய அடியவர்தம் உருவங்களைத்தான் நானும் பார்க்கக் கூடுமோ? எனவே, மேலானவர்க்கும் மேலானவனாகிய சிவபெருமானின் திருவடி மலர்களைச் சென்றடைந்து அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

222

ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்தாதை தாதைக்கும் எம்மனைக்குந் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 8

பரம்பொருள், தானே ஒரு பொருளாய் முளைத்து நின்று, எண்ணில் பல கிளைகள் விட்டு, எங்கெங்கும் பரவி நிலைத்தவன். என்னை நன்றாக நிலைபெறச் செய்தவன். நாயைப் பல்லக்கில் ஏற்றுவித்ததைப் போன்று, நல்லடியார் நடுவுள் என்னை இருக்கச் செய்தவன். அவன் எனக்குத் தந்தை; என் தந்தைக்கும் தாய்க்கும் தந்தை. அந்தப் பெருமான், குறைவிலாத செல்வம் உடையவன். அத்தகையவனுக்கே, அவனிடம் சென்று அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

223

கரணங்கள் எல்லாம் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தானென்க்கு
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 9

கரணங்கள் எல்லாவற்றையும் கடந்துநின்ற கண்டம் கறுத்தவன் அவன். அவனுடைய பொன்னார் திருவடிகளைச் சென்றடைந்த பின்னரேதான், எனக்கு இறப்பு – பிறப்பு என்னும் இவை இரண்டைப் பற்றிய பிணக்கம் தீர்ந்தது. எனது பிணக்கத்தைத் தீர்த்த கருணைக் கடலாகிய எம்பெருமானின் திருவடி மலர்களை அடைந்து அரசவண்டே! நீயும் ஊதுவாயாக!

224

நோயுற்று மூத்துநான் நுந்துகன்றா யிங்கிருந்து
நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 10

நோய்வாய்ப்பட்டு, முதுமையடைந்து, நடக்கவியலாமல் தாய்ப்பசுவால் தள்ளப் படுகின்ற கன்றினைப் போல, நான் இவ்விடத்தில் இருந்தேன். நாயானது தான்பெற்ற பொருட்செல்வத்தை அறிந்துகொண்டு விரும்புவதில்லை. அதைப்போன்றே அருட்செல்வத்தின் அருமையை அறிந்து விரும்பாதவனாக அடியேன் இருந்து வந்தேன். அத்தகைய நாயடியேனைத் தாயின் தண்ணருள் கொண்டபடி என்னை வந்து ஆண்டுகொண்டான். அந்தச் செல்வன் சிவபுரத்தானின் திருவடிகளைச் சென்றடைந்து தும்பியரசே! நீயும் ஒலியெழுப்பிப் பாடுவாயாக!

225

வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட
அன்னந் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 11

'கொடுமனம் படைத்த கள்வன் இவன்; மனவலிமையினையும் படைத்தவன்!' என்று என்னை வெறுத்தொதுங்கிச் செல்லாமல், என்னுடைய கல்நெஞ்சினையும் உருக்கிக் கருணைகொண்டு என்னை ஆண்டுகொண்டவன் எம்பெருமான். அன்னங்கள் மகிழ்ந்துறையும் அழகு வாய்ந்த தில்லைத் திருநகரின்கண் உள்ள அம்பலவாணன் அவன். அத்தகைய பொற்கழல் அணிந்த அவனுடைய திருவடி மலர்களைச் சென்றடைந்து தும்பியரசே! நீயும் ஒலியெழுப்பிப் பாடுவாயாக!

தி.11.

226

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையினைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 12

நாயடியேனைத் தன்னுடைய திருவடிகளைப் பாடச்செய்த தலைவன் அவன். பேயினேனுடைய மனமாசுகளை எல்லாம் பொறுத்துக்கொள்ளும் பெருமைக் குரியவன். என்னுடைய பணிவிடைகளைப் பழிக்காமல் ஏற்றுக்கொள்ளும் தாய்போன்றவன் அவன். அத்தகைய முன்னவனான சிவபெருமானின் திருவடி மலர்களைச் சென்றடைந்து தும்பியரசே! நீயும் ஒலியெழுப்பிப் பாடுவாயாக!

227

நான்தனக் கன்பின்மை நானுந்தா னும்அறிவோம்
தானென்ன ஆட்கொண்ட தெல்லாருந் தாமறிவார்
ஆன கருணையும் அங்குற்றே தானவனே
கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. 13

சிவபெருமானிடத்து எனக்கு அன்பில்லை என்பதை, நானும் அவரும் அறிவோம். ஆனால், அவன் என்மீது அன்புகொண்டு, என்னை ஆண்டுகொண்டமை அனைவரும் அறிவர். அவனுடைய பெருங்கருணையையும் அவ்விடத்தில் உண்டாகி, அப்படிப்பட்டவனே என்னுடைய தலைவனாகி, வந்தென்னைக் கூடினான். அத்தகையவனுடைய தாமரைத் திருவடிகளைச் சென்றடைந்து, நீயும் ஒலியெழுப்பிப் பாடுவாயாக!

228

கருவாய் உலகினுக் கப்புறமாய் இப்புறத்தே
மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 14

எல்லா உலகங்களின் தோற்றத்திற்கும் அவன் வித்தாக விளங்கியவன். அந்த உலகங்களுக்கும் அப்பாற்பட்டவன். இவ்விடத்தில், மணம் மிகுந்த மலர்சூடிய கூந்தலையுடைய உமையம்மையோடும் எழுந்தருளி வந்து, என்னை ஆட்கொண்டவனும் அவன். அருவுருவாக மறைகளைப் பயில்கின்ற வேதியனாய் வந்து, என்னை ஆண்டுகொண்டவனும் அவன். அப்படிப்பட்ட அழகிய உருவினையுடைய அந்தத் தேவனின் திருவடி மலர்களைச் சென்றடைந்து தும்பியரசே! நீயும் ஒலியெழுப்பிப் பாடுவாயாக!

229

நானும்என் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானும்தன் தையுலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானும் திசைகளும் மாகடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 15

தாழ்ந்த சடைமுடியினை உடையவனாகிய சிவபெருமான், தானும், தன் துணைவியுமாகிய உமையம்மையோடு வந்தென்னை ஆட்கொள்ளவில்லையென்றால், நானும் என் உள்ளமும் என் தலைவனுக்கு எவ்விடத்தில் இருப்போமோ? விண்ணாகவும், திசைகளாகவும், பெருங்கடல்களாகவும் விளங்குகின்ற எம்பெருமான் அவன். எனவே, அவனுடைய தேன்சொரியும் திருவடித் தாமரைகளைச் சென்றடைந்து தும்பியரசே! நீயும் ஒலியெழுப்பிப் பாடுவாயாக!

230

உள்ளப் படாத திருவுருவை உள்ளுதலும்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரான்எம் பிரான்என்னை வேறேஆட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 16

மனத்தால் எண்ணிப் பார்க்க இயலாத, பேரழகுப் பேருருவை உடையவன் அவன். ஆனாலும், சிந்தித்துப் பார்க்கின்ற அளவில், பொய்ம்மையற்ற பேரின்பப் பெருங்கடலாக விளங்குபவன் அவன். முன்பொரு நாள், என்னை அவனும் ஆண்டுகொண்டான். அத்தகைய சிவபெருமானின் திருவடி மலர்களைச் சென்றடைந்து தும்பியரசே! நீயும் ஒலியெழுப்பிப் பாடுவாயாக!

231

பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயாவென் ஆருயிரே அம்பலவா என்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 17

பொய்யான செல்வத்தை மெய்யான செல்வமெனக் கருதி, அதனுள் மூழ்கி அன்றாடம் கிடந்துழன்ற அடியேனை, அவன் ஆட்கொண்டான். எனவே, நீ அவனிடத்தில் சென்று, 'தலைவா! என்னுடைய அருமையான உயிரே! அம்பலவாணா!' என்று சொல்லி, அவனுடைய திருவடிச் செந்தாமரை மலர்களைச் சென்றடைந்து தும்பியரசே! நீயும் ஒலியெழுப்பிப் பாடுவாயாக!

232

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ. 18

அரையில் புலித்தோலையும், செவிகளில் குண்டலங்களையும், நெற்றியில் பால்வெண்ணீற்றையும், கையில் சூலத்தையும் உடைய அப்பனாகவும், இடையில் மெல்லிய ஆடையினையும், காதுகளில் வளைந்த தோடுகளையும், மேனியில் நறுமணச்சாந்தினையும், கையில் கிளியினையும், முன் கையில் வளைகளையும்

உடைய அம்மையாகவும் விளங்குபவன் அவன். இவ்வாறாகிய அவனுடைய பழைமைக் கோலத்தைக் கண்டு, அவனுடைய திருவடிமலர்களில் அமர்ந்து தும்பியரசே! நீயும் குளிர்ச்சியுடன் ஊதுவாயாக!

233

கள்வன் கடியன் கலதியிவன் என்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தான் என் மனத்தே
உள்ளத் துறுதுய ரொன்றழியா வண்ணமெல்லாம்
தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 19

'இவன் திருடன்; மிகக் கொடூரன்; கேடுடையன்!' என்று சொல்லி, என்னைத் தன்பால் ஈர்த்துக் கொள்ளாமல், வெறுத்தொதுக்கி விடவில்லை. பெருங்கருணைப் பெருவள்ளலாகிய எம்பெருமான், நாள்தோறும் கொஞ்சம் கொஞ்சமாக என் உள்ளத்தில் ஊடுருவி நிலைத்து நின்றான்; அதில் மறைந்தவனாகவும் ஆனான். என்னுடைய உள்ளத்தின்கண் உறைந்திருந்த துன்பங்கள் அனைத்தையும், ஒன்றுவிடாமல் ஒழித்துவிட்டான். முறைப்படி நல்ல தெளிவினையும் எனக்குத் தந்தான். அத்தகையவனுடைய திருவடி மலர்களைச் சென்றடைந்து தும்பியரசே! நீயும் ஒலியெழுப்பிப் பாடுவாயாக!

234

பூமேல் அயனோடு மாலும் புகலரிதென்று
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ. 20

செந்தாமரை மலர்மேல் சிறந்து விளங்குகின்ற நான்முகனோடு திருமாலும் எம்பெருமான், 'இவ்வண்ணத்தன், இப்பெற்றியன்' என்று கூறவியலாமல் உள்ளம் தடுமாறி நிற்க, அடியேனோ அவனுடைய பண்பு நலங்களைப் பேசி, இறுமாந்து நிற்கின்றேன். ஏனென்றால், நாய்க்கு இருக்கை தந்து, அதனைச் சிறப்பித்ததைப் போல் எனக்கும் அவன் உள்ளத்தில் இடமளித்து, பெருங்கருணைத் திறங்காட்டி, அடியேனை ஆண்டுகொண்டான். அத்தகைய தீப்பிழம்பின் திருமேனியைக் கொண்டவனாகிய சிவபெருமானின் திருவடி மலர்களைச் சென்றடைந்து தும்பியரசே! நீயும் ஒலியெழுப்பிப் பாடுவாயாக!

திருச்சிற்றம்பலம்

11. திருத்தெள்ளேணம்

(தில்லையில் அருளியது)

சிவனோடு அடைவு

(தரவு கொச்சகக் கலிப்பா)

திரு + தெள்ளேணம் – திருத்தெள்ளேணம். தெள்ளேணம் என்பது, முந்தைய அம்மானை போன்றதொரு பண்டைத் தமிழக மகளிர் விளையாடல்களுள் ஒன்றே. இதன் ஒவ்வொரு பாடலின் இறுதியும் 'கொட்டாமோ!' என்று முடிவதால், கைகொட்டி விளையாடுவது எனலாம். இரண்டு கோல்களைக் கொண்டு தட்டுவது 'கோலாட்டம்' எனப்படும். இரண்டு கைகளைக் கொண்டு கொட்டுவது 'கும்மியாட்டம்' எனப்படும். தெள்ளேணம் என்பதும் கும்மியைப் போன்றதே. 'அடைவு' என்பது, 'அடைதல்' எனப்படும். 'சிவனோடு அடைவு' என்பது, சிவபெருமானை அடைவதற்காக, அவனுடைய மேலாம் தன்மைகளை எடுத்துக் கூறுவது எனப்படும். இப்பகுதியில், இருபது பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

235

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 1

திருமாலும் பன்றியாய்ப் பிறப்பெடுத்துப் பாதாளம் நேர்க்கிச் சென்றபோதும், அந்தப் பொன்னார் மேனியனின் திருவடிகளைக் காணவியலவில்லை. ஆனால், அந்தத் திருவடிகளை நாம் காண, ஓர் அந்தண வடிவினனாய்த் தோன்றியதோடு, நம்மையும் அன்றே ஆட்கொண்டான், ஒரு பெயர், ஓர் உருவம் என்று ஏதொன்றும் இல்லாதவனுக்கு, ஆயிரம் அழகிய பெயர்களைச் சூட்டி, நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

236

திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை
அருவாய் உருவமும் ஆயபிரான் அவன்மருவுந்
திருவாரூர் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ. 2

எல்லா வகைகளாலும் சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் உறைகின்ற பெருமான் அவன். எனது பிறவியின் மூலவேரை அறுத்தெறிந்தவன். அதன் பின்னர் அவனைத் தவிர, வேறு எவரையுமே யான் கண்டதில்லை. அருவத் திருமேனி கொண்டவனாகவும், உருவத் திருமேனி

கொண்டவனாகவும் ஆகிய எம்பெருமான் அவன். அத்தகைய சிவபெருமான் மகிழ்ந்து உறைகின்ற, திருவாரூர் என்னும் திருத்தலத்தைப் பாடியபடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

237

அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட் டுலகமெல்லாம்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 3

திருமாலுக்கும், நான்முகனுக்கும், அவரல்லாத் தேவர் பிறர்க்கும், தன்னுடைய வடிவம் நன்றாகத் தெரியுமாறு இல்லாமல் நின்றவனே சிவபெருமான். அப்பேர்ப்பட்ட அவனே தானாக நம்மை நாடிவந்து, நம்முடைய உள்ளத்தை உருக்கி, ஆண்டுகொள்ளவும் செய்தான் என்பதைக் கேட்டு, உலகங்கள் எல்லாம் சிரிக்கவே செய்யும். அத்தகைய அவனது அருளை வியந்து பாடி, நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

238

அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம்ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 4

பயனற்றவராகிய தேவரைத் தொழுவதால், கேடு என்னும் பெருவெள்ளத்தில் மூழ்கிவிடாமல், பிறவியாகிய பெருமாயையினின்றும் என்னைக் காத்து, ஆண்டுகொண்டவன், ஒப்பற்ற ஒளிவடிவினனாகிய சிவபெருமான். அத்தகையவன், புதுமையாகிய செவ்வொளியை என்பால் வழங்கியவுடன், என்னிடத்தில் குடிகொண்டிருந்த 'நான்' என்னும் அகந்தை முற்றிலுமாக அழிந்தது. 'சிவமயம்' என்னும் நிலையே உயர்ந்தோங்கி நிலைத்தது. எனவே, அதனைப் புகழ்ந்து பாடியபடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

239

அருமந்த தேவர் அயன்திருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்தென் உளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 5

அரிய மருந்தென விளங்கும் தேவர், நான்முகன், திருமால் ஆகியவர்க்கும் காண்பதற்கு அரிதாக இருக்கின்ற ஒன்று சிவபரம்பொருள். அப்பொருள், ஓர் உருக்கொண்டு வந்து, மண்ணுலகினர் மகிழ்வடையுமாறு, அன்றொருநாள் காட்சிதந்து அருளியது. என்னை ஆண்டுகொண்டதோடு, பிறவிக்குரிய வித்தினை வெந்துபோகுமாறும் செய்தது. என்னைத் தன்னுடைய கடைக்கண்ணால் பார்த்து, என் உள்ளத்திலும் புகுந்து, உயர்வைத் தந்தது. அத்தகைய சிவஞானச் செல்வமாகிய சிவபெருமானைப் பாடி நாம், தெள்ளேணம் கொட்டுவோமாக!

240

அரையாடு நாகம் அசைத்தபிரான் அவனியின்மேல்
வரையாடும் மங்கைதன் பங்கொடுவந் தாண்டதிறம்
உரையாட உள்ளொளியாட ஒண்மாமலர்க் கண்களில்நீர்த்
திரையாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 6

தன்னுடைய இடுப்பிலே, படமெடுத்து ஆடுகின்ற நாகப்பாம்பினை விருப்பமுடன் கட்டிக் கொண்டிருப்பவன். மலைமகளாகிய பார்வதியம்மையைத் தன்னுடைய பாகமாகக் கொண்டிருப்பவன். அவன் இவ்வுலகில் எழுந்தருளி, எம்மை ஆண்டு கொண்ட பெருமான். அவ்வாறு அவன் ஆண்டுகொண்ட தன்மையினை உரையாடச் சொற்கள் தடுமாறுகின்றன; உள்ளத்தின் ஒளியோ பெருக்கெடுக்கின்றது; ஒளி வீசுகின்ற பெரிய மலர்போன்ற கண்களில், நீரானது அலைவீசுகின்றது. அந்நிலையில், அவனைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

241

ஆவா அரிஅயன்இந் திரன்வானோர்க் கரியசிவன்
வாவாவென் றென்னையும் பூதலத்தேவலித் தாண்டுகொண்டான்
பூவார் அடிச்சுவ டென்தலைமேற் பொறித்தலுமே
தேவான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 7

திருமால், நான்முகன், இந்திரன் மற்றுமுள்ள தேவர் ஆகிய அனைவர்க்கும், அறிந்துகொள்ள இயலாதவாறு இருப்பவன் எம்பெருமான். அத்தகைய அருமைவாய்ந்த சிவபெருமான், தன்னிடம் வருமாறு என்னையும் இவ்வுலகத்தில் தானே வலிந்து ஆட்கொண்டான். அவனுடைய மலரொத்த திருவடிகளின் அடையாளங்கள் என்னுடைய தலையின்மேல் பதித்தலுமே, கடைப்பட்டேனாகிய அடியேன் தெய்வத்தன்மை அடைந்தேன். அத்தகைய நிலையினை நாம் பாடியவாறு தெள்ளேணம் கொட்டுவோமாக!

242

கறங்கோலை போல்வதோர் காயப்பிறப்போ டிறப்பென்னும்
அறம்பாவமென் றிரண்டச்சந் தவிர்த்தென்னை ஆண்டு கொண்டான்
மறந்தேயுந் தன்கழல்நான் மறவாவண்ணம் நல்கியஅத்
திறம்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 8

சுழல்கின்ற ஓலைக்காற்றாடி போன்றது இந்த உடம்பின் பிறப்பும் இறப்பும். பிறப்பிற்குக் காரணமாகிய புண்ணியமும், இறப்பிற்குக் காரணமாகிய பாவமும் ஆகிய இரண்டின் அச்சத்தையும் என்னிடமிருந்து விலகச் செய்து, அவன் என்னை ஆண்டுகொண்டான். மறந்தும்கூட அவனுடைய திருவடிகளை நான் மறவாதபடி அருள்செய்த அத்தகைய தன்மைகுறித்த பாடலைப் பாடி நாம், தெள்ளேணம் கொட்டுவோமாக!

243

கன்னா ருரித்தென்ன என்னையுந்தன் கருணையினால்
பொன்னார் கழல்பணித் தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச் செந்துவர்வாய் வெண்ணகையீர்
தென்னா தென்னாவென்று தெள்ளேணம் கொட்டாமோ. 9

மின்னலை ஒத்த துவளுகின்ற இடையினையும், செம்பவளத்தை ஒத்த வாயின் இதழ்களையும், முல்லையினை ஒத்த வெண்ணிறப் பற்களையும் உடைய மகளிரே! எம்பெருமான், கல்லில் நாரினை உரிப்பதைப்போல, வன்மனத்தனாகிய என்னையும் நெகிழ வைத்து ஆண்டுகொண்டவன். எனவே, 'அழகா! அழகா! தென்னாடு உடையவனே!' என்று புகழ்ந்து பாடி நாம், தெள்ளேணம் கொட்டுவோமாக!

244

கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப்பிடித்தாட் கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேற்கண் நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ. 10

தேவர்தம் கனவிலும் காண்பதற்கு அரிய ஒலிக்கின்ற சிலம்பினை அணிந்த திருவடிகளை உடையவன். காட்டு மூங்கிலையொத்த தோள்களையும், அவற்றில் அழகுற அமைந்த வளைகளையும் அணிந்து கொண்டிருக்கும் உமையம்மையோடு எழுந்தருளி, நனவிலேயே என்னைப பிடித்து ஆட்கொண்டவன் அவன். அத்தகையவனுடைய தன்மையினை, நம்முடைய நெஞ்சமானது விரும்பிச் சினம் மிக்க வேலொத்த நம் கண்களில், இன்பக்கண்ணீர் மிகுமாறு நாம் பாடியவாறு தெள்ளேணம் கொட்டுவோமாக!

245

கயல்மாண்ட கண்ணிதன் பங்கன்எனைக்கலந் தாண்டலுமே
அயல்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 11

கெண்டை மீனைக்காட்டிலும் மாட்சிமை பொருந்திய கண்களை உடையவளாகிய உமையம்மையைத் தன்னுடைய இடப்பாகத்தில் கொண்டவன் எம்பெருமான். அவன் என்னைச் சேர்ந்து ஆண்டுகொண்டதும், எனக்கும் அவனுக்கும் இடையே இருந்த இடைவெளி ஒழிந்தது. அரிய வினைப்பயனின் சுற்றமும் ஒழிந்தது. இந்த உலகத்தில் உள்ள பொருள்களின்மேல் கொண்டிருந்த ஆசையும் மாறப்பெற்றது. என்னிடமிருந்த வெறும் பேச்சுகளும் விலகின. எனக்கென்று நான் மேற்கொண்டிருந்த என் செய்கைகளும் நீங்கின. அவனுடைய அந்தத் தன்மையினைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

246

முத்திக் குழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக் கருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 12

முத்தியைப் பெறுவதற்காக முனிவர் கூட்டம் மிகவும் துன்புற்று வாடியிருந்தபோது, அவர்க்கு அருள் வழங்காமல் அத்தி என்னும் யானைக்கு அருள் வழங்கிய பெருமான் அவன். அதைப்போல் அடியேனையும் ஆண்டுகொண்டவன் அவன். பத்தி என்னும் பேரானந்தக் கடலுள் என்னை மூழ்கச் செய்த மேலாம் ஒளிவடிவினன் அவன். அத்தகையவனுடைய இனிக்கும் இந்தத் தன்மைகளை எல்லாம் பாடியவாறு நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

247

பார்பாடும் பாதாளர் பாடும்விண் ணோர் தம்பாடும்
ஆர்பாடுஞ் சாரா வகையருளி ஆண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 13

நான் இந்த மண்ணுலகில் பிறவாமலும், கீழுள்ள பாதாள உலகில் பிறவாமலும், மேலுள்ள அந்த விண்ணுலகில் பிறவாமலும், வேறுள்ள எவ்வுலகிலும் பிறவாமலும் எனக்கு வினைநேரா வகைசெய்து, என்னை ஆட்கொண்டு அருள்புரிந்தவன் எம்பெருமான். அவனுடைய அத்தன்மையதாகிய, நேரிய திருவிளையாட்ல்களைப் பாடியவாறும், நினைப்பதற்கரிய ஒப்பிலாப் பெரியோனாகிய அவனுடைய சிறப்புக்குரிய பாடல்களைப் பாடியும் மகிழ்வுடன் நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

248

மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரியான் நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தால்
சேலேர்கண் நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ. 14

திருமாலேயானாலும், நான்முகனேயானாலும், அவர் நீங்கிய மற்றையத் தேவரேயானாலும், மறைகள் மற்றும் சார்ந்த நூல்களேயானாலும் உள்சென்று உணர்வறியா நுட்பமான தன்மையன் அவன். ஆனால், என்னிடம் அவனே வந்து, எனக்குள் ஊடுருவிக் கருணை கொண்டு, உருக்கும் இயல்பினால் என்னை ஆட்கொண்டான். அத்தகு தன்மைகளைக் கெண்டை மீன்போலும் நம்முடைய கண்களில் இன்பக் கண்ணீர் பெருகுமாறு அவனைப் பாடி நாமும் தெள்ளேணம் கொட்டுவோமாக!

249

உருகிப் பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 15

சிவபரம்பொருளில் உள்ளம் உருகிடவும், உணர்வு விரிவடையவும், உவகை குளிர்ந்திடவும் பருகிடற்கரிய தூய அருள்வெள்ளத்தினைச் சுமந்து வருகின்ற ஆழ்ந்தகன்ற பேரானந்தப் பெருங்கடலாக விளங்குபவன் சிவபெருமான். அவனை நாம் சென்றடைந்து, அவனது அழகு பொருந்திய நீண்ட திருவடிகளையே மறவாமல் நினைத்திருப்போம். அடியவராம் நம்முடைய மேலான செல்வமாக விளங்குபவன் அவன். அத்தகைய சிவபுரத்தண்ணலைப் பாடியும் பரவியும் நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

250

புத்தன் புரந்தராதி யர்அயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
அத்தன் அணிதில்லை அம்பலவன் அருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ 16

தேவேந்திரன் முதலான தேவரும், நான்முகனும், திருமாலும் புகழ்ந்து போற்றத்தக்க புதுமையானவன் அவன். அடியவரிடத்தில் தன்மீது பற்றுதலை உண்டாகச் செய்வதில் பித்தனாய் விளங்கக்கூடியவன் அவன். திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் மனம் விரும்பி உறைந்திருப்பவன் அவன். எம்முடைய பிறவியெனும் பெரும்பிணியை அகற்றிய அப்பன் அவன். அழகு மிகுந்த தில்லைத் திருநகரில் விளங்கும் அம்பலவாணன் அவன். அவனுடைய அருள் மிகுந்த திருவடிகள் எமது மனத்தில் குடிகொண்ட பாங்கினைப் பாடியவாறு நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

251

உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளும்
செயலைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ. 17

இவ்வுலகில் பொய்ச்சமயங்கள் பலவுள; அவற்றுள் ஒன்றோடொன்று பொருந்தாவகையில், சமயநூல்களும் பலவுள. அந்தச் சாத்திரம் என்னும் மெலிவுற்ற கடலுள் சிக்கியவனாய் இருந்து, ஏதும் புரியாமல் தடுமாறிக் கிடந்தேன். அதனால் துன்புற்றுக் கிடந்த அடியேனின் துன்பத்தைத் துடைத்துத் திருவடிகள் இரண்டினையும் காட்டி, அடியேனை அன்புடன் ஆட்கொண்டான். அவனது அத்தகைய அரிய செயலைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

252

வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல்நீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 18

விண்ணழிந்து, காற்றழிந்து, நெருப்பு, நீர், மண் ஆகிய பூதங்கள் அனைத்துமே அழிந்தாலும், தான் ஒரு சிறிதும் அழிதல் இல்லாமலும் அசைதல் இல்லாமலும் இருப்பவன் எம்பெருமானாகிய சிவபெருமான். அவன் என்னைச் சேர்ந்தமையால், என்னுடைய உடல் அழிந்தது; உயிர் அழிந்தது; உணர்வு கெட்டது; உள்ளம் கெட்டது; 'நான்' என்னும் ஆணவமும் அழிந்தது. அவ்விதமாக என்னைக் காத்துக் கடைத்தேற்றிய அவனது தன்மையினைப் புகழ்ந்து பாடியவாறு நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

253

விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோம்
கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ. 19

வானவர்க்கு முழுமுதலாக விளங்குபவன் அவன். பாதாளர்த்தவர்க்கு விதையாக இருப்பவன் அவன். நிலவுலக மாந்தர்க்கு அரிய மருந்தாக இருப்பவன் அவன். நான்முகன், திருமால் ஆகியவர்க்குச் சேமநிதியாக இருப்பவன். அவனுக்கு நாமெல்லாம் அடிமைப்பட்டவரே. நாம் நம்முடைய கண்களைக் கொண்டு அவனைக் கண்டுகளிக்க நம் எதிரில் வந்து நின்றான். அருள் நிறைந்த அவனுடைய திருவடிகளைப் பாடி, 'தென்னாடுடைய சிவனே! தென்னாடுடைய சிவனே!' என்று உரத்த குரல் கொடுத்து, அருகழைத்து நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

254

குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல்வளையான்
நலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாள்தோறும்
அலம்பார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ. 20

சிவபெருமானுடைய குலப்பெருமையைப் பாடுவோம். அவன் சூடிக் கொண்டிருக்கும் கொக்கின் இறகினையும் பாடுவோம். அழகிய வளைகளை அணிந்துள்ள உமையம்மையின் சிறப்புகள் அனைத்தையும் பாடுவோம். அவன் நஞ்சினை உட்கொண்டு, நலஞ்செய்த தன்மையினைப் பாடுவோம். பொங்கிப் பெருகுகின்ற நீர்வளம் மிகுந்த தில்லைத் திருத்தலத்திலுள்ள பொன்னம்பலத்தே, அன்றாடம் ஆடுகின்ற அவனுடைய சிலம்பாட்டத்தினையும் பாடியவாறு நாம் உள்ளம் களிகூரத் தெள்ளேணம் கொட்டுவோமாக!

திருச்சிற்றம்பலம்

12. திருச்சாழல்

(தில்லையில் அருளியது)

சிவனுடைய காருணியம்

(நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா)

திரு + சாழல் – திருச்சாழல். முந்தைய அம்மானை, தெள்ளேணம் போன்றே சாழல் என்பதும் பண்டைத் தமிழக மகளிர் விளையாட்டுகளில் ஒன்று. தடையும் தடைக்கு ஏற்ற விடையும் பாடுவது இதில் இடம்பெறும். முதலில் ஒருத்தி, நகைச்சுவை உணர்வுடன் வினாவினைத் தொடுப்பாள்; அடுத்தவள் அதற்கு விடை கூறுவதைப் போல் அமைவது சாழல் எனப்படும். திருச்சாழல் பற்றிய கதையொன்றும் உண்டு. புத்த மதத்தைச் சார்ந்த இலங்கை நாட்டு இளவரசி ஒருத்தி, நீண்ட காலம் ஊமையாய் இருந்தாள். சிவபெருமானை வணங்கிப் பேசும் ஆற்றலைப் பெற்றாளாம். அதையறிந்த புத்தன் ஒருவன், அவளிடம் வினாக்கள் தொடுத்தானாம். அவளும் விடைகளைக் கூறினாளாம். அந்த வினாக்களும் விடைகளுமே இதில் அமைந்துள்ளனவாம். இக்கதை இடைச்செருகல் என்றும், யுக்திக்கோ சமய வாதத்துக்கோ பொருந்தாது என்றும், கடவுள் உண்டு என்றோ இல்லை என்றோ வாதிப்பது புத்தமதக் கொள்கையன்று என்றும் கூறுகின்றார் **சுவாமி சித்பவானந்தர்**. இப்பதிகம் இருபது பாடல்களைக் கொண்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

255

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. 1

அடியே பெண்ணே! உங்கள் சிவபெருமான் நெற்றியில் பூசுவதும் வெண்ணீறு; அணிந்து கொள்வதும் சீறுகின்ற பாம்பு; அழகிய வாயால் பேசுவதும் மறை. இஃதென்ன விந்தையடி? அன்புத் தோழியே! எம்முடைய இறைவன் பூசுவதையும், பேசுவதையும், அணிந்து கொள்வதையும் குறித்து விந்தையாக நினைக்காதே! எல்லா உயிர்கட்கும் அவனே மூலமுதல்வனாக இருப்பதுடன், இயற்கைத் தன்மையனாகவும் இருக்கின்றான். எனவே, அவன் தன்மைகள் இங்கே சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

256

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. 2

அடியே பெண்ணே! உங்கள் சிவபெருமானோ, 'என் அப்பன், எம்பெருமான், எல்லார்க்கும் அவனே கடவுள்' என்றெல்லாம் சொல்லப்படுபவன். அவ்வாறாயிருக்க, அவன் தைத்தலை உடைய கோவணத்தையே அணிந்து கொள்வது எதற்காக? அன்புத் தோழியே! இவ்வுலகில் அவனுக்குரிய நிலைபெற்ற கலைகளாகவும், செறிந்த பொருள்களாகவும் உடையன நான்கு மறைகளே! அவற்றையே முறுக்கிய பெரிய நூலாகவும், அவற்றின் பொருள்களையே துணியாக்வும் கொண்டு, கோவணமாக அணிந்துள்ளான் என்பதை நீ அறிவாயாக!

257

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. 3

அடியே பெண்ணே! உங்கள் சிவபெருமானுக்குச் சுடுகாடே கோயில்; கொல்லும் புலியின் தோலே, நல்லாடை; அவன் தாயில்லாதவன், தந்தையில்லாதவன், தான் மட்டுமே தன்னந்தனியாக உள்ளவன். இந்த விந்தையினை நீ எவ்வாறு விளக்கப் போகின்றாய்? அன்புத் தோழியே! அவன் தாயில்லாதவன்; தந்தையும் இல்லாதவன்தான். தான் மட்டுமே தனியாகவும் இருப்பவன்தான். என்றாலும், அவன் சினங்கொள்வானேயாகில், இந்த உலகம் முழுவதும் கற்பொடியாக ஆகிவிடும் என்பதை நீ அறிவாயாக!

258

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. 4

அடியே பெண்ணே! நான்முகனையும், மன்மதனையும், கூற்றுவனையும், சந்திரனையும் உங்கள் சிவபெருமான் தாக்கிச் சிதைத்து, அவர்க்கெல்லாம் என்றும் மாறாத் தழும்புகளை உண்டாக்கினான். அதனால் ஏற்பட்ட பழிச்சொற்களுக்கு நீ என்ன சொல்லப் போகிறாய்? தாழ்ந்து தொங்குகின்ற நீண்ட கூந்தலை உடைய தோழியே! எங்களுடைய பெருமானின் மூன்றாவதாகிய நெற்றிக்கண், 'ஞானக்கண்' எனப்படுவது. தேவர்தம் குற்றங்குறைகளை அவர்க்குணர்த்தவே, அவரையெலாம் தண்டித்தான். அவன் தண்டித்தமையால், தேவரெலாம் திருந்தினர் என்பதுவே அவர் பெற்ற வெற்றிதானே!

259

தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள் கொடுத்தாங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ. 5

அடியே பெண்ணே! உங்கள் பெருமான் தக்கன் மற்றும் வேள்வி நாயகனாகிய எச்சன் ஆகியோரின் தலைகளைக் கொய்தவன் என்றும், மொத்தமாக ஓடிவந்த தேவர் கூட்டத்தை எல்லாம் ஒழித்துவிட்டான் என்றும் கூறுவன குறித்துக் கூறுவாயா? அன்புத் தோழியே! மொத்தமாக ஓடிவந்த தேவர் கூட்டத்தை எல்லாம் அழித்து ஒழித்துவிட்டவன்தான் எம்பெருமான். ஆயினும், மீளவும் அன்னவர்க்கெல்லாம் அருளை வழங்கியவன் என்பதோடு, வேள்வி நாயகனாகிய எச்சனுக்கோ, மேலும் ஒரு தலையை – மாறுபட்ட ஆட்டுத் தலையை வழங்கியவன் என்பதையும் அறிந்து கொள்வாயாக!

260

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரந் தவிரார்காண் சாழலோ. 6

அடியே பெண்ணே! மலர்மேல் உறைகின்ற நான்முகனும், நீர்மேல் உறைகின்ற திருமாலும் தாம் அறிந்து கொள்ள இயலாதவாறு, நிலவுலகத்தின் கீழுள்ள பாதாள உலகம் முதல், மேலுள்ள அண்டப் பெருவெளியின் முடிவுவரை உங்கள் சிவபெருமான், நெருப்புப் பிழம்பாக நின்றதுவும் எதற்காக? அன்புத் தோழியே! அவ்வாறு எங்கள் பெருமான் பாதாள உலகம் முதல் அண்ட வெளியின் முடிவுவரை நிற்கவில்லை என்றால், நான்முகனும் திருமாலும் தம்முடைய உள்ளங்களில் கொண்டிருந்த அகந்தையினை முற்றிலுமாக விட்டிருக்க மாட்டார் என்பதை நீயும் அறிவாயாக!

261

மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையில் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையில் பாய்ந்திலளேல் தரணி யெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ. 7

அடியே பெண்ணே! உன்னுடைய சிவபெருமான், மலைமகளாகிய பார்வதியம்மையைத் தன்னுடைய ஒரு பாகத்தில் வைத்துக்கொண்ட பிறகும், இன்னொருத்தியாகிய கங்காதேவி, நீர் உருவத்துடன் அவனுடைய செஞ்சடையில் புகுந்து கொண்டதற்குரிய காரணந்தான் யாதோ? அன்புத் தோழியே! கங்காதேவி நீர் உருவத்துடன் எம்முடைய பெருமானின் சடையில் புகுந்துகொள்ளவில்லை என்றால், இந்த உலகங்கள் யாவும் பாதாள உலகத்தைச் சென்றடையுமாறு பேரழிவு ஏற்படுமாம் என்பதை அறிவாயாக!

262

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெலாம் வீடுவர்காண் சாழலோ. 8

அடியே பெண்ணே! உன்னுடைய சிவபெருமான், அன்றொரு நாள் பெரிய ஆரவாரத்தோடு ஒலிக்கின்ற கடலில் தோன்றிய ஆலகாலம் என்னும் கொடிய நஞ்சினை உண்டான். அவ்வாறு உண்டு, அவனும் தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்திய காரணம் என்னவோ? அன்புத் தோழியே! ஆலகாலம் என்னும்

கொடிய நஞ்சினை அவன் அன்றொரு நாள் உண்டு, தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்தவில்லையென்றால், நான்முகன், திருமால் உள்ளிட்ட விண்ணுலகத் தேவரெல்லாம் அன்றே அழிந்திருப்பர் என்பதை நீயும் அறிவாயாக!

263

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதாய்இரு நிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ. 9

அடியே பெண்ணே! தென்திசையில் இருக்கின்ற தில்லைச் சிற்றம்பலத்தில் மனமுவந்து திருநடனம் செய்கின்ற சிவபெருமான், உமையம்மையைத் தன்னுடைய மேனியின் ஒரு பாகத்தில் கொண்டிருப்பதால், அவனை மிகப்பெரிய பெண்பித்தன் எனலாமோ? அன்புத் தோழியே! பேதை மகளே! அவன் அவ்வாறு உமையம்மையைத் தன்னுடைய திருமேனியின் ஒரு பாகத்தில் கொண்டிருக்கவில்லை என்றால், பரந்து விளங்குகின்ற மண்ணுலகத்தவர் யோக நிலையை அடைந்து, வீடுபேற்றைப் பெற்றுத் தமது முந்தைய நிலையினின்றும் மறைவர்.

264

தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. 10

அடியே பெண்ணே! தனக்கென இறுதி என்பது இல்லாதவன் உன்னுடைய சிவபெருமான். அவனோ, தன்னையடைந்த நாயேனாகிய அடியேனுக்கு ஓர் இறுதியினை வழங்கிப் பேரின்பப் பெருவெள்ளத்துள் மூழ்குவித்தான். அவனது இந்தச் செயல்தான் விந்தையானது இல்லையா? அன்புத் தோழியே! உன்னைப் பேரின்பப் பெருவெள்ளத்தில் மூழ்குவித்த அவனுடைய பொன்னார் திருவடிகள், விண்ணுலகத்தில் வாழ்கின்ற தேவருக்கும் மேலான பொருள்களாம் என்பதை நீதான் அறிவாயாக!

265

நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமேகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. 11

என்னடி பெண்ணே! உன்னுடைய தலைவன் கழுத்தில் நரம்பினையும் எலும்பினையும் தரித்துள்ளான். அத்துடன் தோளின்மேல் முழு எலும்புக்கூட்டினையும் விரும்பிச் சுமந்துள்ளான். இவ்வாறு செய்யும் அவனுடைய தவத்திற்கு என்னதான் காரணமோ? அருமைத் தோழியே! தோளின்மேல் முழு எலும்புக்கூட்டையும் விரும்பிச் சுமந்துள்ள காரணத்தைச் சொல்வேன் கேள். யுக முடிவுக் காலத்தில், நான்முகன், திருமால் ஆகிய இருவரின் காலத்தையும் முடிவுக்குக் கொண்டுவர எண்ணியவன், அந்த இருவரின் எலும்புக்கூடுகளையும் அவ்வாறு சுமந்துள்ளான் என்பதை நீயும் அறிவாயாக!

266

கானார் புலித்தோல் உடைதலைஊண் காடுபதி
ஆனா லவனுக்கிங் காட்படுவார் ஆரேடி
ஆனாலும் கேளாய் அயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. 12

என்னடி பெண்ணே! உன்னுடைய தலைவனுக்குக் காட்டில் வாழ்கின்ற புலியின் தோலே உடுத்தும் ஆடை; உடைந்த மண்டையோடே உண்ணும் கலம்; சுடலைக்கானே உறையுமிடம். அவ்வாறானால், அவனுக்கு இங்கேதான் அடிமையாவாரும் எவர்தாம்? அருமைத் தோழியே! என்னுடைய தலைவன் அப்படிப்பட்டவன்தான். ஆனாலும், நான்முகனும், திருமாலும், இந்திரனும் அவனுக்கு முன்னைக்காலம் முதற்கொண்டே அடியவராய் இருந்து வருகின்றனர் என்பதை நீயும் கேட்டறிந்து கொள்வாயாக!

267

மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ. 13

என்னடி பெண்ணே! மலையரசன் மாமகளும், பொன்னின் பாவை போன்றவளும், ஒளிபொருந்திய நெற்றியை உடையவளும், பெண்ணாகிய செல்வம் போன்றவளும் ஆகிய உமையம்மையை உன்னுடைய தலைவன், உலக மக்கள் அனைவரும் அறியுமாறு தீயினை வலம் வந்து, திருமணம் செய்து கொண்டமைக்குக் காரணந்தான் யாதோ? அருமைத் தோழியே! அவ்வாறு அவன் தீயினை வலம் வந்து, திருமணம் செய்து கொள்ளவில்லை என்றாலோ, அனைத்துலகங்களிலும் உள்ள நூல்களில் கூறப்படும் பொருள்கள் எல்லாம், தத்தம் நிலைகளில் நிலைக்காமல் தடுமாறிவிடும் என்பதை நீயும் அறிவாயாக!

268

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ. 14

என்னடி பெண்ணே! தேன் பாய்கின்ற, நீர் நிறைந்த, வயல்கள் சூழ்ந்துள்ளது தில்லை. அங்கு விளங்குகின்ற சிற்றம்பலத்தில் புகுந்தவாறு உன்னுடைய தலைவன், திருநடனம் பயில்கின்றான் என்பதுதான் என்ன? அருமைத் தோழியே! அங்கு அவன் அவ்வாறு புகுந்து திருநடனம் பயிலவில்லை என்றால், உலகமெல்லாம் புலால் பொருந்திய சூலாயுதத்தைக் கொண்டிருக்கும் காளிதேவிக்கு உண்ணும் பொருளாகிவிடும் என்பதை நீயும் அறிவாயாக!

269

கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ. 15

என்னடி பெண்ணே! மதநீர் சிந்தும் யானையின்மேலும், விரைவாகச் செல்லும் குதிரையின்மேலும் உன்னுடைய தலைவன் உள்ளம் விரும்பி ஊர்ந்து செல்லாமல், இடபமாகிய காளையின்மேல் மிகவும் விரும்பி ஏறிச் செல்வதன் காரணம்தான் என்னவோ? அதனை நீயும் எனக்கு விளம்புவாயாக! அருமைத் தோழியே! முன்னையொரு நாளில், அகன்ற மதில்கள் சூழ்ந்த முப்புரங்களையும் தணல்கொண்டு எரித்தபோது, எம்பெருமானை இடபமாய் வந்து, திருமாலே தாங்கிக்கொண்டான். அதனால்தான் இடபத்தைத் தனக்கு வாகனமாக்கிக் கொண்டான் சிவன் என்பதை நீயும் அறிந்து கொள்வாயாக!

270

நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறமுறைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண் புரமூன்றும் கூட்டோடே சாழலோ. 16

என்னடி பெண்ணே! அன்றொருநாள் உன்னுடைய பெருமான், கல்லால மரத்தின் கீழ் இருந்தவாறே, நான்கு துறவியர்க்கும் நான்கு மறைகளின் நுண்பொருள்களை எடுத்துரைத்தான் என்பதன் பயன்தான் என்ன? அருமைத் தோழியே! அன்றொருநாள் என்னுடைய பெருமான், கல்லால மரத்தின்கீழ் இருந்தவாறே, நான்கு மறைகளின் நுண்பொருள்களை எடுத்துரைத்தவனே. ஆயினும், அறநெறிக்கு அப்பாற்பட்டதாகிய புரங்கள் மூன்றின் கோட்டைகளைக் கூண்டோடு அழித்து ஒழித்தவன் அவனே என்பதை நீயும் அறிவாயாக!

271

அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாவென் றேத்தினகாண் சாழலோ. 17

என்னடி பெண்ணே! தில்லையம்பலத்தில் கூத்தாடிக் கொண்டும், உண்ணும் உணவிற்காகப் பிச்சை எடுத்தும் அலைந்து திரிகின்ற சிவபெருமானையும் ஒரு தெய்வமென்று எல்லாரும் சென்றடைய விரும்புவதன் காரணம்தான் என்ன? அருமைத் தோழியே! நான்கு மறைகளும் அவனை அறிந்துகொள்ள இயலாமல், 'எம்பெருமானே!' என்றும், 'எம் ஈசனே!' என்றும் போற்றிப் புகழ்ந்து வருவதை நீயும் காணவில்லையா? எனவே, இத்தகையவன் ஒப்பற்ற தெய்வம்தான் என்பதை நீயும் அறிந்துகொள்வாயாக!

272

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ. 18

என்னடி பெண்ணே! தணியாத கோபமுடைய சலந்தரன் என்னும் அசுரனின் உடலினைக் கிழித்த சக்கரப் படையினை, உன்னுடைய இறைவன், நலப் பண்பினை உடைய திருமாலுக்கு அன்றொருநாள் தந்தருளிய காரணமும் யாதோ? அருமைத்தோழியே! நலப்பண்பினை உடையவனாகிய திருமால், தன்னுடைய விழிகளைத் தோண்டியெடுத்து, எம்பெருமானுடைய திருவடிகளின்கீழ், மலர்களென வைத்து வழிபட்ட காரணத்தால், அவன் சச்கரப் படையினைத் தந்தருளினான் என்பதை நீயும் அறிவாயாக!

273

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுடுத்தங் கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. 19

என்னடி பெண்ணே! உன்னுடைய இறைவனுக்குப் புள்ளிகளைக் கொண்ட புலியின் தோலே உடுத்துகின்ற ஆடையாகும். ஆலகாலம் என்னும் கொடிய நஞ்சோ, உண்ணுகின்ற உணவாகும். அவனுடைய இந்தச் சதுரப்பாட்டினை நான் அறிந்து கொள்ளுமாறு நீயும் கூறுவாயோ? அருமைத் தோழியே! எம்பெருமான் எதனை உடுத்திக் கொண்டாலும், எதனை உண்டாலும் தன்னுடைய சிறப்பினைத் தான் அறிந்து கொள்ளாத தன்மையினை உடையவன் என்பதைத் தெரிந்துகொள்வாயாக!

274

அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கனையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக் கறமுதல்நான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ. 20

என்னடி பெண்ணே! அருமை வாய்ந்த தவத்தினை இயற்றிய நான்கு முனிவர்க்கும், கல்லால மரத்தின்கீழ் இருந்தவாறு, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் உணர்த்திய காரணத்தை நானும் அறியுமாறு என்னிடம் கூறுவாயோ? அருமைத் தோழியே! அருமை வாய்ந்த தவத்தினை இயற்றிய அந்த நான்கு முனிவர்க்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் உணர்த்தியவன் எம்பெருமான். அந்தப் பெருமான் அவ்வாறு செய்யவில்லை என்றால், திருந்திய தன்மையுடைய அந்த நால்வருக்கும் இந்த உலகத்தின் இயல்பானது தெரியாமல் போய்விடும் என்பதனை நீயும் தெரிந்து கொள்வாயாக!

திருச்சிற்றம்பலம்

13. திருப்பூவல்லி

(தில்லையில் அருளியது)

மாயா விசயம் நீக்குதல்

(நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா)

திரு + பூ + அல்லி – திருப்பூவல்லி.. பூவல்லி என்பது, அம்மானை, தெள்ளேணம் என்பன போலவே, பண்டைத் தமிழக மகளிர் விளையாட்டுகளில் ஒன்று. அல்லிமலர் கொண்டு ஆடிப்பாடுவதாக அமைவது இந்த விளையாட்டு. அல்லி, மாலையில் சந்திரனைக் கண்டு மலர்வது. எனவே, இதனை மாலை நேர விளையாட்டாகக் கொள்வர். மாயா விசயம் நீக்குதல் என்பது, ஆன்மாவின் ஈடேற்றம். அதாவது, உலகப்பற்றுகள் எனனும் மாய வலைகளில் மனம் செல்லாமல், தடுத்து நிறுத்தி, இறைவனோடு இரண்டறக் கலக்கச் செய்தல், இப்பகுதியில், இருபது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலும், 'பூவல்லி கொய்யாமோ?' என்று முடிவது.

திருச்சிற்றம்பலம்

275

இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 1

எம்பெருமான், தன்னுடைய ஒப்பிலாதனவும், அழகுமிக்கனவுமாகிய திருவடிகள் இரண்டினையும் என் தலைமேல் வைத்தவுடன், அந்தச் சமயம்வரை எனக்கு உற்ற துணையாக விளங்கிய உற்றார் உறவினர் ஆகிய சொந்தங்கள் அனைத்தையும் விட்டு நீங்கினேன். கரை கட்டித் தேக்கப்பட்ட அணைகளில் நீர் நிறைந்திருக்கும் அழகிய அம்பலத்தில் திருநடனம் செய்கின்ற மிதவையைப் போன்றவன் அவன். அவனுடைய சீர்மிகுந்த சிறப்புகளைப் பாடியவாறு, நாம் அல்லிமலர்களைக் கொய்து ஆடுவோமாக!

276

எந்தையெந் தாய்சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ. 2

என்னுடைய தந்தை, என்னுடைய தாய், என் சுற்றத்தினருடன் மற்றுமுள்ள உறவினர் ஆகியோரோடு எனக்கிருந்த தொடர்பினைத் துண்டித்தவன் அவன். என்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான் அவன். அந்தத் திருவிடைமருதூர்

என்னும் திருத்தலத்தில், பேரானந்தம் என்னும் பொந்துத்தேன் இருக்கப் பெற்ற மரப்பொந்தினைப் போன்றவன் அவன். அத்தகையவனுடைய புகழைப் பலவாறு சொல்லிச் சொல்லிப் போற்றியவாறு பாடி நாம், அல்லிமலர்களைக் கொய்து ஆடுவோமாக!

277

நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டான்என் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ. 3

எம்பெருமான், நாயினும் கீழ்ப்பட்ட நம்மையும் ஒரு பொருளாக மதித்து, நம்மிடம் பெற்றதாயைக் காட்டிலும் பெருங்கருணை காட்டினான். அத்தகு பெருமான், மாயமாகிய நம்முடைய பிறவியென்னும் பெரும்பிணியைப் போக்கி, நம்மை ஆண்டுகொள்ளவும் செய்தான். என்னுடைய கொடிய தீவினையின் நுழைவாயிலில், மண்ணை அள்ளிப் போட்டான். அப்படிப்பட்ட அவனுடைய தன்மைகளை எல்லாம் பலவாறு புகழ்ந்து பாடியவாறு நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

278

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கன்எச்சன் இந்துஅனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரரால்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 4

எம்பெருமான், அணிசெய்யப் பெற்ற தில்லை என்னும் திருநகருக்கு மன்னன். கீழோராகிய தக்கன், கதிரவன், வேள்வித்தலைவன் எச்சன், சந்திரன், அக்கினி ஆகியோர், அவனை உயர்வாக மதித்துப் போற்றிப் புகழ்வதற்கு மாறாக அவனிடம் ஆணவத்துடன் நடந்து கொண்டனர். அதனைத் தெரிந்து கொண்ட வீரபத்திரன், வானளவு கொண்ட தனது பூதப்படையினால், அவரையெல்லாம் புண்படுமாறு செய்தான். அப்படிப்பட்ட செயலினைப் புகழ்ந்து பாடி நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

279

தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊனாடி நாடிவந் துள்புகுந்தான் உலகர்முன்னே
நானாடி ஆடிநின் றோலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ. 5

சிவபெருமான், வண்டுகள் மொய்க்கின்ற கொன்றை மலர் மாலையினைத் தனது சடைமுடியில் அணிந்திருப்பவன். அவன், மனித உடலினை விரும்பிப் பெற்றுக்கொண்டு, என்னையும் நாடி வந்தான். உலக மாந்தர் அனைவரும் காணுமாறு என்னுடைய உள்ளத்திலும் குடிபுகுந்தான். அந்த நிலையில், எனக்கு அருள் செய்யுமாறு என்னை மறந்தநிலையில், ஓலமிட்டுக் கதறியும் அவன் பொருட்படுத்தாமல், தில்லையில் திருநடனம் செய்பவனானான். அத்தகு விண்ணுலகத் தேவர்தம் தலைவனாக விளங்கும் மகாதேவனின் செயலைப் புகழ்ந்து பாடி நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

280

எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறத்தன் திருப்புருவம் நெரித்தருளி
உருமூன்று மாகி உணர்வரிதாம் ஒருவனுமே
புரமூன் றெரித்தவா பூவல்லி கொய்யாமோ. 6

எரியினைக் கொண்ட கதிரவன், சந்திரன், அக்கினி ஆகிய தேவர் மூவர்க்கும் எம்பெருமான், கருணையுள்ளத்துடன் அருள் புரிந்தான். ஆயினும் அவனே, கடுங்கோபத்தால் தன்னுடைய திருப்புருவங்களை நெரித்தபடி, அந்த மூவரின் தலைகளையும் கொய்து தண்டித்தான். பின்னர்த் தானே அந்த மூவரின் உருவங்களையும் தாங்கி நின்றான். எவராலுமே உணர்ந்து கொள்வதற்கு அரிதாகிய தன்மைகொண்ட, ஒப்பற்ற ஒருவனாகவும் விளங்கினான். அத்தகையவனே முப்புரங்களை எரித்தழித்தான். அதனைப் புகழ்ந்து பாடி நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

281

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்
திணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கோ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 7

அழகுருவாகிய உமையம்மையோடு கலந்து, அழகுமிக்க தில்லையம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் எம்பெருமான், தன்னைத் தாழ்ந்து வணங்கிடவே தலையினைப் படைத்தான்; வீரக்கழல் அணிந்த தன்னுடைய நெடிய திருவடிகளை வாழ்த்திடவே வாயினைப் படைத்தான். தன்னுடைய பெருமைவாய்ந்த அடியவர் திருக்கூட்டத்தை, என்னுடன் கூடியிருப்பதற்காகவே படைத்தான். அத்தகு சிறப்புகளைப் பாடி நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

282

நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை ஆண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 8

சிவபெருமான், நன்னெறியில் செல்வதற்கு எனக்கு அருள்புரிந்தவன். தன்னுடைய சிறப்புமிகுந்த அடியவர்தம் பொன்னார் திருவடிகளுக்கே திருத்தொண்டு புரியுமாறு என்னை ஆண்டுகொண்டவன். அவனே என் தலைவன். அந்தப் பொன்னார் மேனியனுடைய பண்பு நலங்களைப் போற்றுவோம். நம்மை அடிமையாக்கி, நம்மை அலைக்கழித்துக் கொண்டிருந்த பழைய வினைகளை முற்றிலுமாக இல்லாமல் செய்தவன் அவனே என்று புகழ்வோம். அவ்வாறெல்லாம் அவனைப் போற்றிப் பாடி நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

283

பன்னாள் பரவிப் பணிசெய்யப் பாதமலர்
என்ஆகம் துன்னவைத்த பெரியோன் எழிற்சுடராய்க்
கல்நா ருரித்தென்னை யாண்டுகொண்டான் கழலிணைகள்
பொன்னான வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 9

நான், பல நாள்களாக வணங்கிப் போற்றிடவும், திருத்தொண்டுகள் பலவும் செய்திடவும், தன்னுடைய தாமரைமலர் போன்ற திருவடிகள் இரண்டினையும் என்னுடைய நெஞ்சில் நிலைநிறுத்திய பெருஞ்சிறப்புக்குரியவன் அவன். அழகு வாய்ந்த பேரொளி வடிவினனாய்த் தோன்றி, அரிதாகிய கல்லில் நாரினை உரிப்பதைப் போல், என்னை ஆட்கொண்டவனும் அவன். அத்தகைய பெருமானின் திருவடிகள் இரண்டும் பொன்னென விளங்குகின்ற தன்மையினைப் பாடி நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

284

பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடி யென்தலைமேல் வைத்தபிரான்
காரார் கடல்நஞ்சை உண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 10

திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் கோவில் கொண்டிருக்கும் எம்பெருமான், பேராசைக்கு ஆட்பட்ட இந்தப் பிண்டமாகிய உடலானது கடைத்தேறுமாறு, தன்னுடைய சிறப்புமிக்க திருவடிகளை என்னுடைய தலையின்மேல் எடுத்துவைத்து அருள் புரிந்த தலைவனாவான். மேலும், கருமை நிறம் வாய்ந்ததும், கொடிய தன்மை உடையதுமாகிய கடல்நஞ்சினை விருப்பமுடன் உண்டு, மண்டையோட்டினையும் பிச்சைப் பாத்திரமாகக் கைகளில் ஏந்திக் கொண்டவன். அத்தகையவனே போர் எதிர்ந்து முப்புரங்களை அழித்தொழித்த தன்மையினைப் போற்றிப் பாடி நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

285

பாலும் அமுதமும் தேனுடனாம் பராபரமாய்க்
கோலம் குளிர்ந்துள்ளம் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 11

நறுந்தேனுடன் நல்லாவின் பாலும், தெவிட்டாத தெள்ளமுதமும் இரண்டறக் கலந்து விளங்குகின்ற தன்மையினைப் போல, உயர்ந்த பொருளாக விளங்கி நிற்பவன் அவன். தண்மைக் கோலத்துடன் தனிக்காட்சி தந்தவன் அவன். என்னுடைய உள்ளத்தைக் கவர்ந்து கொண்ட தலைவனும் அவனே. ஒலிக்கின்ற கழல்களைப் புனைந்த அவனுடைய பொன்னார் திருவடிகளைப் போற்றுகின்ற இவ்வுலக மாந்தர்க்கு நல்வழி பிறக்கும். அந்த நல்வழியைப் போன்றதாகிய அந்தப் பெருமானுடைய புகழினைப் போற்றிப் பாடியவாறு நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

286

வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்கும்
கோனவ னாய்நின்று கூடலிலாக் குணக்குறியோன்
ஆன நெடுங்கடல் ஆலாலம் அமுதுசெய்யப்
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ. 12

விண்ணவர்கோனாகிய இந்திரன், திருமால், நான்முகன் மற்றுமுள்ள தேவரென்பார் அனைவர்க்கும் தலைவன் அவனாகி நிலைத்து நின்றவன். அவரெல்லாமும் அவனைச் சேரவியலாதவாறு, பண்புகளையும் பல்வேறு அடையாளங்களையும் கொண்டவன் அவன். நெடிய கடலில் அந்நாள் தோன்றிய ஆலகாலம் என்னும் கொடிய நஞ்சினை, அரிய அமுதெனவே உண்டவன் அவன். அத்தகைய அவனுடைய அருஞ்செயலைப் புகழ்ந்து பாடியவாறு நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

287

அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாள்தோறும்
நின்றார ஏத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்தாது மாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 13

முன்னையொருநாள், கல்லால மரத்து நிழலின்கீழ் விளங்கியவாறு, நான்கு முனிவர்க்கும் அரிய மறைகள் உரைத்த பொருள்களையெல்லாம் உணர்த்தியவன் அவன். விண்ணவர், ஒப்பற்ற முனிவர் ஆகியோர், அன்றாடம் அவன் முன் நின்றவாறு நன்றாகப் போற்றிப் புகழ்கின்ற நிறைவான திருவடிகளைப் பெற்றவன் அவன். அவன் தன்னுடைய மேனியில் புனைந்திருக்கின்ற கொன்றைமலரில் பொருந்தியிருக்கும் பொன்னிறம் வாய்ந்த மகரந்தப்பொடிகளைப் பாடியவாறு நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

288

படமாக என்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்திங்
கிடமாகக் கொண்டிருந் தேகம்பம் மேயபிரான்
தடமார் மதில்தில்லை அம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 14

தன்னுடைய தாமரைத் திருவடிகள் இரண்டினையும், என்னுடைய மனத்தில் படமாக நிலைகொள்ளுமாறு அருள்புரிந்தவன். இவ்விடத்தில், அவன் தங்கியிருக்கும் இடமாக என்னுடைய உள்ளத்தையே கொண்டிருந்த போதிலும், திருவேகம்பம் என்னும் திருவிடத்திலும் தங்கியிருப்பவன். அகன்ற மதில்கள் நிறைந்த தில்லைத் திருநகரின் பொன்னம்பலத்தையே தன்னுடைய நடனமாடும் இடமாகக் கொண்டிருப்பவன். அப்படிப்பட்ட எம்பெருமானுடைய சிறப்புகளைப் புகழ்ந்து பாடியவாறு நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

289

அங்கி அருக்கன் இராவணன்அந் தகன்கூற்றன்
செங்கண் அரிஅயன் இந்திரனும் சந்திரனும்
பங்கமில் தக்கனும் எச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 15

அக்கினி, கதிரவன், இராவணன், அரக்கன், கொடுங்கூற்றுவன், சிவந்த கண்களையுடைய திருமால், நான்முகன், இந்திரன், சந்திரன், குற்றமற்ற தக்கன், எச்சன் ஆகியோரின் உடல்கள் இழிவடையுமாறு, கொதித்தெழுந்து அவரை யெல்லாம் அழித்தவன் சிவபெருமான். அத்தகையவனுடைய சீற்றச் சிறப்பினை வியந்து பாடி நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

290

திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 16

கடும்போர் செய்யவல்ல வலிமை வாய்ந்த வெள்ளேற்றினை ஊர்தியாகக் கொண்டவன். சீர்மிகுந்த சிவபுரத்தாரைப் போரிட்டுக் காக்கின்ற ஆண்சிங்கத்தை நிகர்த்தவன். மதுரையில், வைகைக்கரை மண்ணைச் சுமந்ததற்குக் கூலியாக, வந்தி என்னும் மூதாட்டி வழங்கிய பிட்டினை அமுதமென உண்டவன். அந்த மூதாட்டிக்கும் அருள் வழங்கிய வள்ளல் அவன். வேலை செய்யுமாறு தூண்டப் பாண்டிய மன்னன் பிரம்பால் அடித்தபோது, புண்பட்ட உடலோடு நின்றவன். அந்த எம்பெருமானின் தகைசான்ற தன்மையினைப் புகழ்ந்து பாடியவாறு நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

291

முன்னாய மாலயனும் வானவரும் தானவரும்
பொன்னார் திருவடி தாமறியார் போற்றுவதே
என்னாகம் உள்புகுந் தாண்டுகொண்டான் இலங்கணியாம்
பன்னாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 17

மற்றைய உயிர்கள் தோன்றுவதற்கு முன்னர்த் தோன்றிய திருமாலும், நான்முகனும், தேவரும், அசுரரும் எம்பெருமானுடைய பொன்னொத்த திருவடிகளைத் தாம் அறியவே இல்லை. அவற்றை அறிந்து கொள்வதற்காகவே, அவரெல்லாம் அன்றாடம் அவனைப் போற்றிப் புகழ்ந்து பணிந்து வழிபடுகின்றனர். ஆயினும், அவனோ என்னுடைய மனத்தினுள்ளே புகுந்து கொண்டான். என்னைத் தன்னுடைய அடிமையாகவும் செய்துகொண்டான். அத்தகையவனுடைய மேலாம் திருமேனி முழுவதும், விளங்குகின்ற அணிகலன்களாக நாகங்களைக் கொண்டுள்ளான். அவற்றைப் புகழ்ந்து பாடி நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

292

சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 18

எம்பெருமானின் சிறப்புப் பொருந்திய திருவடிகளில், திண்மையுடைய சிலம்புகள் எழுப்புகின்ற இனிமையான ஒலியினைக் கேட்க, என் மனத்தில் தீராத பேராசை உடையவனானேன். நெடுந்தேரானது நேரியதாய்ச் செல்கின்ற அகன்ற வீதிகளைக் கொண்ட திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் உறைபவன் அவன். அடியேனாகிய யான், உள்ளம் மகிழுமாறு ஆனந்தத் திருநடனம் செய்தருளினான் அவன். அந்த நடனம் தந்த பேரானந்தப் பெருஞ்சிறப்பினைப் பாடியவாறு நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

293

அத்தி யுரித்தது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாம்
முத்தி முழுமுதலுத் தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ. 19

திருப்பெருந்துறை என்னும் திருப்பதியை உடையவனாகிய எம்பெருமான், யானையைக் கொன்று, அதன் தோலினை உரித்து, அதனை ஆடையாகப் போர்த்திக் கொண்டு, அந்த யானைக்கு அருளையும் தந்தவன். இந்த உலகத்தில் பித்தனாய் உருக்கொண்டு திரிந்ததோடு, அடியவர் தமக்குப் பிள்ளையாயும் விளங்கியவன். முத்திக்கு முழுமுதற் காரணமாய் விளங்கும் உத்தரகோசமங்கை என்னும் ஊரின் வள்ளலாய்த் திகழ்பவன். அத்தகையவன், என் அறிவில் கலந்துகொண்ட தன்மையினைப் புகழ்ந்து பாடி நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

294

மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ. 20

குதிரையின்மேல் அழகாக ஊர்ந்து, மாநகர் மதுரையில் புகுந்தவன். தன்னுடைய தெய்வத் திருவடிவத்தைப் பாண்டிய மன்னனுக்குக் காட்டியவன். தேனார்ந்த பொழிற்சோலை திருப்பெருந்துறையினை உடையவன். தலைவனாக எழுந்தருளி வந்து, எம்மைக் குற்றேவல் கொண்டவன். தன்னை மறவாமல் எண்ணுவார் அனைவர்க்கும், ஏற்றதோர் அருள்பொழியும் அவனுடைய மலரொத்த மெல்லடிகளைப் போற்றிப் புகழ்ந்து பாடி நாம், அல்லிமலர் கொய்து ஆடுவோமாக!

திருச்சிற்றம்பலம்

14. திருவுந்தியார்

(தில்லையில் அருளியது)

ஞான வெற்றி

(கலித்தாழிசை)

திரு + (வ்) + உந்தி + (ய்) + ஆர் – திருவுந்தியார். அம்மானை, தெள்ளேணம், சாழல், பூவல்லி ஆகிய பண்டைத் தமிழக மகளிர் விளையாட்டுகளைப் போன்றதே, இந்த உந்தி என்பதும். நாலடி – நாலடியார், திருக்கோவை – திருக்கோவையார் போலவே, இந்த உந்தியும் உந்தியார் ஆயிற்று. ஆர் என்பது சிறப்பு விகுதி. பலர் கூடி நின்று பாடி ஆடுவது என்றும், இருவர் எதிர்எதிராக அமர்ந்துகொண்டு, பந்தினை உந்தச் செய்து ஆடுவது என்றும் இருவகைப்படும் என்பர். ஞான வெற்றி என்பது, மெய்ஞ்ஞானத்தின் வெற்றி எனப்படும். இப்பகுதியில், இருபது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் மூன்றடிப் பாடல்கள். ஒவ்வொரு பாடலின் பின்னிரண்டு அடிகளின் இறுதிச் சீர்கள், 'உந்தீபற' என்று அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

295

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற. 1

மகாமேரு மலை, வில்லென வளைந்தது; போர் தொடங்கியது. எதிர்கொள்ள இயலாமல் முப்புரங்களும் வருந்தி ஒடுங்கின என்று சொல்லி உந்தீபற! அவை ஒன்றாகவே தீயில் கருகிய தன்மையினைக் கருதி உந்தீபற!

296

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற. 2

காஞ்சியின் தலைவராகிய ஏகாம்பரநாதரின் திருக்கரத்தில், இரண்டு அம்புகள் உள்ளனவாக நாம் காணவில்லை. ஓர் அம்பினைக் கொண்டே அவர் முப்புரங்களையும் அழித்துவிட்டார் என்று உந்தீபற! அவருக்கு அந்த ஓர் அம்பேகூட மிகவும் அதிகமே என்று சொல்லி உந்தீபற!

297

தச்சு விடுத்தலும் தாமடி யிட்டலும்
அச்சு முறித்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற. 3

தேவரும் தேரினைச் செய்து விட்டவுடன், எம்பெருமான் அதில் தம்முடைய திருவடிகளை எடுத்து வைத்ததும், அதன் அச்சு முறிந்ததென உந்தீபற! ஆயினும், முப்புரங்களும் தவறாமல் அப்பொழுதே அழிந்தன என்று சொல்லி உந்தீபற.

298

உய்யவல் லாரொடு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே உந்தீபற
இளமுலை பங்கனென் றுந்தீபற. 4

முப்புரங்களை அழித்தபோது, பிழைக்க வல்லாராகிய மூவரைப் பாதுகாத்து, அவரைத் தம்முடைய வாயிற்காவலராகக் கொண்டவன் எம்பெருமான். அழிக்குமிடமாயினும், அழியக்கூடாதவரை அழியாமல் காக்கும் ஆற்றல் உடையவன் அவன் என்று உந்தீபற! இளங்கொங்கைகளை உடைய உமையம்மைக்குத் தனது திருமேனியில் ஒரு பாகம் தந்தவன் என்று சொல்லி உந்தீபற!

299

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீபற
உருத்திர நாதனுக் குந்தீபற. 5

தன்னுடைய பூதப்படையோடு வீரபத்திரன் தாக்கியபோது, தக்கனுடைய வேள்விக்கூடம் அழியவும், தம்முடைய உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தேவர் அனைவரும் விரைந்தோடியதைச் சொல்லி உந்தீபற! கோடி உருத்திரர்க்கும் தலைவனாகிய சிவபெருமானின் பெயரைச் சொல்லி உந்தீபற!

300

ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் தாதையென் றுந்தீபற. 6

தக்கன் வேள்வியில், தனக்குரிய அவிர்ப்பாகத்தைத் திருமால் ஏற்றுக்கொண்டான். அவனை வீரபத்திரன் நெஞ்சில் உதைத்தும், சிவனருளால் சாகாமல் இருந்தான் என்று சொல்லி உந்தீபற! அவனோ நான்முகனின் தந்தை என்று சொல்லி உந்தீபற!

301

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற. 7

வெப்பத்தையுடைய அக்கினித்தேவன், வேள்வியின் அவிர்ப்பாகத்தை அன்றைய நாள் அள்ளி விழுங்கித் திரட்டியபோது, வீரபத்திரன் அவனுடைய கையைத் துண்டித்துவிட்டான் என்று உந்தீபற! அதனால் வேள்விக்கூடமே கலக்கமுற்றது என்றே உந்தீபற!

302

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேஏடி யுந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற. 8

தாட்சாயணியம்மையைப் பகையெனச் சொல்லி, இழித்துப் பழித்தவன் தக்கன். சிவனோ அவனை இன்றளவும் அவளுடைய தந்தையென்றே பார்ப்பதன் காரணமும் என்னவென்று கேட்டு உந்தீபற! அந்தக் காரணமோ, பருத்த கொங்கைகளைக் கொண்ட அம்மைக்குத் தனது மேனியில் பாகத்தினை வழங்கிய அப்பனுக்குத் தெரியும் என்று சொல்லி உந்தீபற!

303

புரந்தர னாரொடு பூங்குயி லாகி
மரந்தனி லேறினார் உந்தீபற
வானவர் கோனென்றே உந்தீபற. 9

முன்னையொருநாள், தேவேந்திரன் தப்பிப் பிழைப்பதற்காக, ஒரு பூங்குயிலின் உருவெடுத்து, மரமொன்றில் ஏறிக்கொண்டான் என்றே உந்தீபற! அவனும் விண்ணவர் தலைவனென்றே உந்தீபற!

304

வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற. 10

அன்றைய நாள், வீரபத்திரனின் கடுங்கோபத்தால், வேள்வித் தலைவனாகிய வியாத்திரனின் தலையானது வெட்டுண்டு வீழ்ந்ததைப் பாடி உந்தீபற! தொடர்கின்ற நம்முடைய பிறப்பு நீங்குமாறு பாடி உந்தீபற!

305

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற. 11

அன்றைக்கு, ஆட்டின் தலையினைத் தக்கனுக்குத் தலையெனச் சேர்த்து வைத்த அந்தத் தன்மையினை வியந்து பாடி உந்தீபற! தனங்கள் குலுங்குமாறு குதித்துநின்று உந்தீபற!

306

உண்ணப் புகுந்த பகன்ஒளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெலாம் உந்தீபற. 12

தக்கன் வேள்வியில், பகன் என்பவன் தன்னுடைய அவிர்ப்பாகத்தை உண்ணப் புகுந்தபோது, அவன் மறைந்து ஓடிவிடாமல் எம்பெருமான் அவனுடைய கண்கள் இரண்டினையும் பறித்த தன்மையினை வியந்துபாடி உந்தீபற! நம்முடைய பிறவிகள் ஒழிய வேண்டுமெனச் சொல்லி உந்தீபற!

307

நாமகள்நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகன்நெரித் துந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற. 13

கலைமகளின் மூக்கும், நான்முகனின் தலையும் அறுபட்டதையும், சந்திரனின் முகம் தேய்க்கப் பெற்றதையும் சொல்லி உந்தீபற. நம்முடைய பழைய வினைகள் யாவும் அழிந்துவிட வேண்டும் என்று சொல்லி உந்தீபற.

308

நான்மறை யோனும் மகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியி லுந்தீபற. 14

தக்கன் வேள்வியின்போது, நான்முகன் தானும் தப்பிப் பிழைக்கும் வழியினைத் தேடுகின்ற அலைச்சலைப் பாடி உந்தீபற! தேவேந்திரன் தானும் தப்பியோடுகின்ற வழியினைத் தேடும் தன்மையினைச் சொல்லி உந்தீபற!

309

சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற. 15

கதிரவனாரின் கொவ்வைக்கனி போன்று சிவந்த வாயிலிருந்த பற்களையெல்லாம் உதிர்த்த தன்மையினை எண்ணி உந்தீபற! வேள்வியானது அப்போது கலக்கமுற்றது என்று சொல்லி உந்தீபற!

310

தக்கனா ரென்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற. 16

அன்றைக்குத் தக்கன் தன்னுடைய மக்களால் தான் சூழப் பெற்றிருந்த போதும், தன்னுடைய தலையினை இழந்துவிட்டான் என்று சொல்லி உந்தீபற! அப்போது அந்த வேள்வியும் அழிந்ததென்று சொல்லி உந்தீபற!

311

பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே யுந்தீபற
குமரன்தன் தாதைக்கே உந்தீபற. 17

வியாக்கிரபாதரின் மகனாகிய குழந்தை உபமன்யுவிற்கு, அந்நாளில் உண்பதற்குப் பாற்கடலைத் தந்தருளிய அழகிய சடைமுடியினை உடைய சிவபெருமானின் பெருமைகளைச் சொல்லி உந்தீபற! அவன், முருகப் பெருமானின் தந்தை என்றே சொல்லி உந்தீபற!

312

நல்ல மலரின்மேல் நான்முக னார்தலை
ஒல்லை யரிந்ததென் றுந்தீபற
உகிரால் அரிந்ததென் றுந்தீபற. 18

நல்ல தாமரைப் பூவின்மேல் தங்கி இருக்கக்கூடிய நான்முகனுடைய தலையொன்றை, விரைவாகக் கொய்த செயலை எண்ணி உந்தீபற! அதுவும்கூட நகத்தால் கொய்தது என்று சொல்லி உந்தீபற!

313

தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்
ஈரைந்தும் இற்றவா றுந்தீபற
இருபதும் இற்றதென் றுந்தீபற. 19

தன்னுடைய தேரினைத் தடுத்ததற்காகக் கயிலாய மலையினைப் பெயர்த்தெடுத்த இலங்கையர்கோன் இராவணனுடைய பத்துத் தலைகளும் அறுபட்டு வீழ்ந்த தன்மையினைப் பாடி உந்தீபற! அவனுடைய இருபது தோள்களும்கூட அறுபட்டன என்று சொல்லி உந்தீபற!

314

ஏகாச மிட்ட இருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென் றுந்தீபற
அதற்கப்பாலுங் காவலென் றுந்தீபற. 20

கதிரவனுடைய வெப்பத்தைத் தாங்குவதற்கு அஞ்சி, உடம்பின்மேல் போர்வைகொண்டு செல்லும் இருடிகள், ஆகாயத்தில் அழிந்துவிடாமல் அவரையெல்லாம் பாதுகாப்பவன் எம்பெருமான் என்று சொல்லி உந்தீபற! அவன் அந்த ஆகாயத்திற்கு அப்பாலும் பாதுகாக்கக் கூடியவன் என்று சொல்லி உந்தீபற!

திருச்சிற்றம்பலம்

15. திருத்தோணோக்கம்

(தில்லையில் அருளியது)

பிரபஞ்ச சுத்தி

(நாலடித் தரவு கொச்சகக் கலிப்பா)

திரு + தோள் + நோக்கம் – திருத்தோணோக்கம். இதுவும் முந்தைய அம்மானை, தெள்ளேணம், சாழல், பூவல்லி, உந்தீபற போன்றதொரு பண்டைத் தமிழ் மகளிரின் விளையாட்டே. ஒருத்தியின் தோளைப் பார்த்து, மற்றொருத்தி பாடியவாறு ஆடுவதால், 'தோள் நோக்கம்' என்பது பெயராயிற்று. இது இன்னொரு வகையாகவும் கூறப்படுவதுண்டு. அதாவது மன்னனின் வெற்றியைக் குறித்துத் தேவதாசியர் தம் கைகளை அசைத்து, நகைச்சுவையுடன் பாடியவாறு ஆடும் விளையாட்டு. மன்னனின் வெற்றியானது, அவனது தோள் வலிமையினால் உண்டாவதால், காரணக் கருத்தாயிற்று. மங்கையே ஆயினும், மன்னனே ஆயினும், தோள்நோக்கமே முதன்மை ஆயிற்று. பிரபஞ்ச சுத்தி என்பது, ஆன்மாக்களை அல்லது உயிர்களைத் தூய்மைப்படுத்துதல் எனப்படும். இப்பகுதியில், பதினான்கு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், 'தோணோக்கம்' அமைந்துள்ளது.

திருச்சிற்றம்பலம்

315

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே எனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை அம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா உன்சேவடி கூடும்வண்ணம் தோணோக்கம். 1

விளங்குகின்ற தில்லையம்பலத்திலே திருநடனம் செய்தருள்கின்ற எம்முடைய நடராசப் பெருமானே! பெருகிப் பொங்கும் சுவைமிகுந்த பொய்கைநீர் இதுதான் என்று கருதிப் பொய்த்தோற்றம் அளிக்கின்ற கானல்நீரை முகப்பதற்குச் செல்கின்ற அறிவிலியைப் போல நான் ஆகாமல், என்னுள்ளத்தில் குடிகொண்டிருக்கும் அறியாமையினைப் போக்கினாய்; அறிவுடைமையினைத் தேக்கினாய். எனவே, உன்னுடைய நலமளிக்கும் வண்ணம் தோள்நோக்கம் ஆடுவோம்!

316

என்றும் பிறந்திறந் தாழாமே ஆண்டுகொண்டான்
கன்றால் விளவெறித் தான்பிரமன் காண்பரிய
குன்றாத சீர்த்தில்லை அம்பலவன் குணம்பரவித்
துன்றார் குழலினீர் தோணோக்கம் ஆடாமோ. 2

இடைவெளி இல்லாமல் இவ்வுலகில் தோன்றியும் மறைந்தும், அவற்றின் காரணமாகத் துன்புற்று அழுது புலம்பியவாறு துயர்க்கடலுள் மூழ்கிவிடாமல் ஆட்கொண்டவன் அவன். கன்றினால் விளாங்கனியை எறிந்தவனாகிய திருமாலும், நான்முகனும் காண்பதற்கு அரியவனாகிய, குறையாத சிறப்பினைப் பெற்றுள்ள, அழகிய தில்லைத் திருநகரின் அம்பலவாணனும் அவனே. செறிந்த கூந்தலையுடைய மகளிரே! வந்து சேருங்கள்! அத்தகையவனுடைய நற்குணங்களைப் பாடியவாறு தோள்நோக்கம் ஆடுவோம்.

317

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடெறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ. 3

வேடர்குலத்துத் தோன்றிய திண்ணனாராகிய கண்ணப்பர், செருப்பணிந்த கால்களைக் கொண்டும், நீர்கொண்ட வாயாகிய கலசத்தைக் கொண்டும், நெருப்பில் வதக்கிய பன்றியின் தசையாகிய அமுதத்தைக் கொண்டும், மங்கலப் பொருள்களைக் கொண்டு செய்கின்ற, சடங்குகளோடு கூடிய வழிபாட்டினைப் போலவே, பெருவியப்போடு ஈசனார்க்குத் தாமும் வழிபாட்டினைச் செய்து வந்தார். அதனால் எம்பெருமான் தன் மேனி குளிர்ந்து, உள்ளம் நிறைந்து, கண்ணப்பர்க்கு அருள் செய்ததோடு, அவர் பெருமையை உலகறியவும் செய்தான். வாருங்கள்! அவன் சிறப்பைச் சொல்லி, நாமும் தோள்நோக்கம் ஆடுவோம்!

318

கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால்
நிற்பானைப் போலஎன் நெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙன்
சொற்பால தானவா தோணோக்கம் ஆடாமோ. 4

கருங்கல்லைப் போன்றதாகிய எனது நெஞ்சினை எம்பெருமான் நெகிழ்ந்துருகச் செய்தான். அருளுருவாய் எழுந்தருளி என் முன்னர் நிற்பவனைப்போல், எனது நெஞ்சினுள்ளே குடிபுகுந்தான். தவிரவும் என்னை நன்னெறியில் புகுத்தினான். நாட்டு மக்கள் அறிந்துகொள்ளுமாறும் செய்தான். அடியவர் புகழ்ச்சிக்கும் என்னை ஆளாக்கினான். அத்தகு பெருமைக்குரியவனின் சிறப்புகளைச் சொல்லி நாமும் தோள்நோக்கம் ஆடுவோமாக!

319

நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ. 5

எம்பெருமான், மண், நீர், நெருப்பு, உயிர், நெடிய ஆகாயம், சந்திரன், கதிரவன், அறிவுமயமான மைந்தன் ஆகிய எட்டினுடன் எட்டுவகைகளாகக் கலந்து நிலைபெற்றவன். தான் ஒரு வடிவம் கொண்டு, தான் ஒருவன் மட்டுமே என்று கருதத்தக்க அவனே, உலகங்கள் ஏழாகவும், திசைகள் பத்தாகவும் நின்று, தானே பலவாகியவன் என்று சொல்லத் தக்கவனாக நின்றான். அவ்வாறு ஒருவனே பலவாகி நின்ற அவனுடைய பெருமைகளைச் சொல்லி நாமும் தோள்நோக்கம் ஆடுவோமாக!

320

புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினால் தோணோக்கம் ஆடாமோ. 6

இவ்வுலகில், பௌத்தம் முதலாகிய சிற்றறிவினையுடைய சமயங்களோ பற்பல உள்ளன. அத்தனை சமயங்களைச் சார்ந்தவரும், அவரவர் மதங்களைப் பற்றி உணரவியலாமல், உள்ளங்கள் தடுமாறி நிற்கின்றனர். அவ்வாறு இருக்கின்ற நிலையில், சிவனையே வணங்கிய என்னை என் அப்பன், என் உள்ளத்தைச் சிவமாக ஆக்கினான். நான் மேற்கொண்ட செயல்கள் அனைத்தையும், தவமாகவும் ஆக்கினான். அவனது கருணையினை எண்ணி நாமும் தோள்நோக்கம் ஆடுவோமாக!

321

தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம். 7

தீமை என்பது இலாதவரும், மாட்சிமை என்பது இருப்பவருமாகிய சண்டீசர் சிவபூசை செய்கையில், அந்தணனும் அவருடைய தந்தையுமாகிய எச்சதத்தன் என்பவன், அப்பூசையினைச் சிதைத்தான். சண்டீசர் பெருங்கோபங்கொண்டு, அவருடைய கால்களைத் துண்டித்தார். அவ்வாறு சண்டீசர் செய்த பாவச்செயலை, எம்பெருமான் புண்ணியச் செயலாக்கினான். சண்டீசரைத் தேவரும் வணங்குமாறு எம்பெருமான் அருளினான். அன்னவன் செயலை வியந்து பாடியவாறு நாமும் தோள்நோக்கம் ஆடுவோமாக!

322

மானம் அவிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்வீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில்நாம் அவ்வணமே
ஆனந்த மாகிநின் றாடாமோ தோணோக்கம். 8

மங்கை நல்லீரே! விண்ணவர் வணங்குகின்ற எம்பெருமானின் பொன்னார் திருவடிகளையே நாமும் நினைந்திருந்தோம். அதனால் தன்மானம் கெட்டோம்; ஆணவத்தை அகற்றினோம். அந்த ஆனந்தக் கூத்தனுடைய அடியவராகிய நாம், அவனுடைய அருளைப் பெற்றுவிடுவோமானால், நாமும் அவ்வாறே ஆனந்தமயமாகி நின்று, தோள்நோக்கம் ஆடமாட்டோமோ?

323

எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதல் எந்தை கடைத்தலைமுன் நின்றதற்பின்
எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணோக்கம். 9

நெற்றிக்கண்ணை உடையவனாகிய எம்முடைய தந்தை, முப்புரங்களை எரித்து அழித்தபோது, தன்மீது பற்றுடைய மூன்று அசுரரை மட்டும் பாதுகாத்து, அவரைத் தன்னுடைய வாயிற்காவலராக வைத்துக் கொண்டான். அதன் பின்னர் எண்ணற்ற இந்திரர், எத்தனையோ பிரமர், திருமால் பலர் என்று மண்ணுலகில் தோன்றினர். அவரெல்லாம் பெருமானின் அருளைப் பெறாமல் அழிவுற்றனர். அப்படிப்பட்ட விந்தையினை மகிழ்ந்து பாடி நாமும் தோள்நோக்கம் ஆடுவோமாக!

324

பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம்மாற் கருளியவா
றெங்கும் பரவிநாம் தோணோக்கம் ஆடாமோ. 10

ஆயிரம் தாமரை மலர்களில், ஒரு தாமரைமலர் குறையவும், திருமால் தம்முடைய கண்களில் ஒன்றினைப் பெயர்த்தெடுத்து, அதனைச் சிவபெருமானின் திருவடி மலரில் இட்டுத் தன்னுடைய வழிபாட்டினை முடித்தான். அதனைக் கண்ணுற்ற சங்கரனாகிய எம்பெருமான், வியப்புற்றான். திருமாலுக்குச் சக்கரப்படையினையும் தந்தருளினான். அவ்வாறுள்ள அருட்செயலை நாம் எல்லா இடங்களிலும் எடுத்துரைத்துத் தோள்நோக்கம் ஆடுவோமாக!

325

காம னுடலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம் பிரமன் கரம்எரியைச்
சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையுந்
தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ. 11

மன்மதனின் உடல், கூற்றுவனின் உயிர், கதிரவனின் பற்கள், கலைமகளின் மூக்கு, நான்முகனின் தலை, அக்கினி பகவானின் கை, சந்திரனின் கலை, தக்கன், எச்சன் ஆகியவரின் தலைகள் ஆகியவற்றை அகற்றி, அவரையெல்லாம் எம்பெருமான் தூய்மைப்படுத்தி அருள் புரிந்தான். அவ்வாறு செய்தருளிய அன்னவனின் பண்பு நலங்களைச் சொல்லியவாறு நாமும் தோள்நோக்கம் ஆடுவோமாக!

326

பிரமன் அரியென் றிருவருந்தம் பேதைமையால்
பரமம் யாம்பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ. 12

நான்முகன், திருமால் என்னும் இருவரும் தம்முடைய அறிவின்மையால், 'பரம்பொருள்! யாமே பரம்பொருள்!' என்று கூறிவந்தனர். அவ்வாறு கூறிவந்த அவ்விருவர்தம் செருக்கும் ஒடுங்குமாறு எம்பெருமானாகிய சிவபெருமான், தானே எல்லையற்ற பரம்பொருளாய்ச் சுடர்வடிவில் தோன்றி நிலைபெற்று விளங்கினான். அந்தச் சிறப்பினைக் கூறியவாறு நாமும் தோள்நோக்கம் ஆடுவோமாக!

327

ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்கம் ஆடாமோ. 13

ஏதுமறியாத அடியவனாகிய நான், எத்தனையோ காலங்களாக மேலான பரம்பொருளைப் போற்றி வணங்காமல், விளையாத நிலத்திற்கு வீணாக நீர் இறைப்பதைப் போல, விளைபயன் ஏதுமின்றி வீணுக்கு உழைத்து வந்தேன். யுகமுடிவுக்காலத்திலும் அழியாமல் நின்றவனும், நல்ல மாணிக்கமணியாய் உள்ளவனுமாகிய சிவபெருமான், தேடிவந்து என்னை ஆட்கொண்டு, என்னுடைய பிறவியின் மூலத்தை அறுத்தெறிந்தான். அவனது அந்தத் தன்மையினைச் சொல்லி நாமும் தோள்நோக்கம் ஆடுவோமாக!

328

உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்கம் ஆடாமோ. 14

சொல்லவியலாத, சொல்லில் அடங்காத உள்ளொளியாக உத்தமன் சிவபெருமான், என்னுடைய உள்ளத்தின் உள்ளே வந்து புகுந்துகொள்ளவும், கரைகாணவியலாத, கரைக்குள் அடங்காத காமப் பெருங்கடலை அடியேன் கடந்தேன். இரைகாண வியலாமல் இன்னலுற்ற புலன்கள் என்னும் ஐந்து பறவைகளும், என்னைவிட்டு எங்கோ பறந்தோடிச் சென்றுவிட்டன. பெருமைமிக்க எம்பெருமானின் பேரருளைப் பாடியவாறு நாமும் தோள்நோக்கம் ஆடுவோமாக!

திருச்சிற்றம்பலம்

16. திருப்பொன்னூசல்

(தில்லையில் அருளியது)

அருட்சுத்தி

(ஆறடித் தரவு கொச்சகக் கலிப்பா)

திரு + பொன் + ஊசல் – திருப்பொன்னூசல். பொன்னூசல் – பொன்னாலாகிய ஊசல். ஊசல் – ஊஞ்சல். பண்டைத் தமிழக மகளிர், பாடியவாறு ஊஞ்சலாடுவது மரபு. அப்போது பாடக்கூடிய பாடலை, 'ஊசல்வரி' என்று நூல்கள் கூறுகின்றன. அருட்சுத்தி என்பது, பெருமானின் தூய்மையான அருள். அந்த அருளைப் பெறுதல் அல்லது அதனுடன் கலத்தல் என்பதே 'அருட்சுத்தி'. இப்பகுதியில், ஒன்பது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், 'பொன்னூசல் ஆடாமோ!' என்று அமைந்திருக்கும்.

திருச்சிற்றம்பலம்

329

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன்அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ. 1

போரினைச் செய்கின்ற கூரிய வேலினைப் போன்ற கண்களையுடைய காரிகையரே! சிறப்புமிக்க பவளத்தினால் ஆகிய தூண்களையும், நன்முத்துகளால் ஆகிய கயிறுகளையும், அழகுமிக்க நற்கனகத்தால்ஆகிய பலகையையும் கொண்டு உருவாக்கப்பட்ட ஊஞ்சலில் நாம் ஏறி இனிதாக அமர்வோம். உத்தரகோசமங்கை என்னும் திருப்பதியில் தெவிட்டாத தெள்ளமுதம் போன்றவனாகிய சிவபெருமான், திருமாலும் அறிந்துகொள்ளவியலாத் தன்னுடைய அன்றலர்ந்த தாமரை போன்ற திருவடிகளை, நாயடியேன் அறிந்து கொள்ளுமாறு காட்டியதுடன், நான் தங்கிக் கொள்ளும் இடமும் அவையே ஆகுமாறு அருள்புரிந்தான். அத்தகைய அருள்நிறைந்த திருவடிகள் இரண்டினையும் நாம் பாடிப் பொன்னூசல் ஆடுவோமாக!

330

மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களும் காணா மலரடிகள்
தேன்தங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்
கூன்தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங்கிடை மருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூசல் ஆடாமோ. 2

அழகிய மயில்போன்ற சாயலையும், நல்ல அன்னம் போன்ற நடையினையும் கொண்ட மகளிரே! விளக்கமுற்ற மூன்று கண்களை உடையவன் எம்முடைய சிவபெருமான். மூப்பில்லா விண்ணுறையும் தேவருமே காணவியலாத் தாமரைத் திருவடிகள் கொண்டவன். அந்தத் திருவடிகள், தேன் உறைபவை; இனிப்பவை; அமுதம் ஊறுபவை; தெளிவுடன் விளங்கக் கூடியவை; உடம்பில் தங்கியிருப்பவை; உள்ளத்தை உருக்கக் கூடியவை. அத்தகைய திருவடிகளை உடையவனாகிய உத்தரகோசமங்கை மன்னன் தங்கியுள்ள திருவிடைமருதூரின் சீர்பாடிப் பொன்னூசல் ஆடுவோமாக!

331

முன்னீறும் ஆதியு மில்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்நீ றெனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி யுத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 3

பொன்னிறம் வாய்ந்த தழும்புகளையே அணிகலன்களாகப் பெற்றிருக்கும் அழகிய கொங்கைகளையுடைய மகளிரே! முடிவென்பதும் முதலென்பதும் இல்லாதவனே எம்பெருமான். பல நூறு கோடி முனிவரும், தேவரும் அவனுடைய வெண்ணீற்றைப் பெறுவதற்குக் கூட்டமாகக் கூடி நிற்கும்போது, அவருக்கெல்லாம் அதனை வழங்காமல், எனக்கு மட்டுமே வழங்கியவன் அவன். அவனுடைய பெருங்கருணைப் பெருவெள்ளத்தால், நிலைத்த தன்மையுடன் எழில்பெற்று விளங்குவதே உத்தரகோசமங்கை. அங்கு, ஒளிமிகுந்த மாடங்களைக் கொண்டிருக்கும் அவனுடைய மாளிகையினை நாம் பாடிப் பொன்னூசல் ஆடுவோமாக!

332

நஞ்சமார் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடுங்கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ. 4

திரட்சியாகச் சங்குவளைகளை அணிந்துள்ள மகளிரே! நம்முடைய பெருமான், நஞ்சினை ஏந்தியுள்ள கழுத்தினைக் கொண்டவன். அண்டங்கள் அனைத்திலும் உள்ளவர்தம் தலைவனாக விளங்கக் கூடியவன். மேகங்கள் தவழ்கின்ற மாடமாளிகைகளை உடைய உத்தரகோசமங்கை என்னும் பதியில், அழகிய சொற்களை உடைய உமையம்மையோடு கூடியிருப்பவன். அடியவர்தம் உள்ளங்களில் நிலைத்துநின்றவன். அமுதமாகப் பெருக்கெடுத்து, அருள் வழங்குபவன். இறப்பு, பிறப்பு ஆகிய இருவகைத் துன்பங்களையும் போக்கக் கூடியவன். அத்தகையவனுடைய தூய்மையான புகழினைப் பாடி நாம், பொன்னூசல் ஆடுவோமாக!

333

ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ. 5

அணிகலன்கள் விளங்குகின்ற அழகிய கொங்கைகளை உடைய மகளிரே! நான்முகனாலும், திருமாலாலும், அவன் ஆணா, அலியா, பெண்ணா என்று அறியமுடியாமல், சோதிச் சுடர்வடிவமாய்க் காட்சிதந்தவன் எம்பெருமான். அவனோ, அன்றையநாள் கடலில் தோன்றிய கொடுநஞ்சினை உணவென உண்டு, தேவர் கூட்டம் அஞ்சாதவாறு தனது பெருங்கருணையினால் வாழ்வித்து அருளியவன். உத்தரகோசமங்கை என்னும் திருத்தலத்தில், வளைந்த சந்திரப்பிறையினைச் சூடிய ஆடல்வல்லானாகத் திருக்காட்சி வழங்குபவன். அவனுடைய பண்புகளையெல்லாம் பலவாறு புகழ்ந்து பாடி நாம், பொன்னூசல் ஆடுவோமாக!

334

மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 6

தாமரை மொட்டுகளைப் போல் அசைந்தாடுகின்ற, அணிகலன்களைச் சூடியுள்ள கொங்கைகளைக் கொண்ட மகளிரே! உமையம்மையைத் தனது மேனியின் ஒருபால் உடையவன்; உத்தரகோசமங்கை என்னும் பதியை உடையவன்; மகரந்தப்பொடி சிந்துகின்ற அழகிய கொன்றை மாலையினை அணிந்த சடையினை உடையவன்; தன்னுடைய அடியவருள் ஒருவனாக நாயேனையும் அன்புகாட்டி அரவணைத்துக் கொண்டவன்; என்னுடைய பழைமையான பிறவித் தீமையினைத் தொடரச் செய்யாமல் துண்டித்தவன்; அவனே எம் சிவபெருமான். அவனுடைய செவிகளிலே அசைகின்ற குழைகளைப் புகழ்ந்து, நெகிழ்ந்த அன்புடன் பாடி நாம், பொன்னூசல் ஆடுவோமாக!

335

உன்னற் கரியதிரு உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடுமணி மயில்போல்
என்னத்தன் என்னையும்ஆட் கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 7

அழகு வாய்ந்த அணிகலன்களைக் கொண்ட கொங்கைகளையும், திருமகளைப் போன்ற பேரழகினையும் உடைய மகளிரே! திருவுத்தரகோசமங்கை என்னும் திருத்தலம், உள்ளத்தாலும் நினைத்துப் பார்க்கவியலாத பெருமிதம் உடையது. அப்பதியில், மறைகளின் நாயகனாகிய எம்பெருமான், நிலைபெற்ற பேரழகுத் திருவுருவாக விளங்குகின்றான். அவனுடைய மேலான தன்மைகளையெல்லாம் புகழ்ந்து பணிவுடன் வணங்க, நம்முடைய தீவினைகளையெல்லாம் முற்றிலுமாகப் போக்கிவிடுவான். என் அப்பனாகிய அவன், என்னுடைய பாவ வினைகளையும் போக்கி, என்னையும் ஆண்டுகொண்டான். நடையழகு கொண்ட அன்னப் பறவையின்மேல் ஏறிநின்று நடனம் ஆடுகின்ற அழகிய வண்ணமயிலைப் போல, நாமும் இந்தப் பொன்னூசலின்மேல் ஏறிநின்று, எம்பெருமானின் அழகையெல்லாம் புகழ்ந்து பாடிப் பொன்னூசல் ஆடுவோமாக!

336

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூசல் ஆடாமோ. 8

எம்பெருமானாகிய சிவபெருமான், அழகு மிகுந்த கயிலைமலையின் சிகரத்தினின்றும் இவ்வுலகில் எழுந்தருளி வந்தவன். இந்த நிலவுலகில், மிகுந்த அளவிலான அமுதத்தை உண்டவன். ஆழமான கடலின்மேல் பொங்கி எழுகின்ற அலையினைப் போலக் கடுவேகங்கொண்ட குதிரையின்மேல் ஏறிவந்து, எம்மை ஆண்டுகொண்டவன் எம்பெருமான். சீர்மிகுந்த உத்தரகோசமங்கை என்னும் பதி யினை உடையவன். திருமாலும் திருவடிகளைக் காணவியலாத அருஞ்சிறப்பினை உடையவன். அத்தகைய எம்பெருமானின் மேலான பண்புகளை, உடல் சிலிர்த்து உள்ளம் நெகிழ்ந்து வாய்மணக்கப் பாடி நாமும், பொன்னூசல் ஆடுவோமாக!

337

தெங்குலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையும் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. 9

அணிகலன்கள் விளங்குகின்ற அழகான கொங்கைகளை உடைய மகளிரே! தென்னை மரங்கள் நிறைந்துள்ள குளிர்சோலைகளைக் கொண்டது திருவுத்தரகோசமங்கை. அவ்விடத்தில், ஒப்பற்ற தணலுருவில் நிலையாகத் தங்கியிருப்பவன் எம்பெருமான். அவன், தானாகவே முன்வந்து, எம்முடைய பிறவித்தளையினை அறுத்தெறிந்தான். தன்னுடைய திருமேனியில் பாகங்கொண்ட உமையம்மையும் தானுமாக வந்தருளி, எம்மைப் போன்றவரையும் தனக்கு அடிமை செய்துகொண்டான். தேன் சொரியும் கொன்றைமலர் மாலையினை அணிந்துள்ள, செஞ்சடையானாகிய சிவபரம்பொருளின் நற்பண்பு நலங்களைப் பலவாறாகப் புகழ்ந்து பாடி நாமும், பொன்னூசல் ஆடுவோமாக!

திருச்சிற்றம்பலம்

17. அன்னைப் பத்து

(தில்லையில் அருளியது)

ஆத்தும பூரணம்

(கலிவிருத்தம்)

அன்னை + பத்து – அன்னைப் பத்து. அன்னையை முன்னிலைப்படுத்திப் பாடும் பத்துப் பாடல்களின் தொகுப்பு. இதுவும் பண்டைத் தமிழக மகளிர் விளையாட்டுகளுள் ஒன்றே. அனைத்தும் அகத்துறைப் பாடல்கள். அன்னையின் கூற்றென்றும், தோழியின் கூற்றென்றும் கூறுவர். எல்லாம் வல்ல இறைவனே தன்னுடைய காதலன் என்னும் மகளின் தன்மையை வியந்து; அன்னை உரைப்பது போல் அமையப்பெற்றது என்பது ஒரு சார்பு; தன்னுடைய காதலனை நினைத்து, அன்னையிடம் புலம்பியழுததைத் தோழி மற்றவளிடம் உரைப்பதுபோல் அமையப் பெற்றது என்பது மற்றொரு சார்பு. பாடல்கள் பத்தும், இருசார்புகளுக்கும் பொருந்துவனவாகவே உள்ளன. ஆத்தும பூரணம் என்பது, உயிரானது இறைவனோடு இரண்டறக் கலந்து, நிறைவுபெறுவது என்பதேயாகும். தலைப்பில் உள்ளதுபோலவே, இப்பகுதியில் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நாற்சீரடிகள் நான்கினைக் கொண்ட பாடல்கள். நான்கடிகளில், இரண்டு மற்றும் மூன்று ஆகிய அடிகளின் முதலிரண்டு சீர்களும் ஒன்றாகவே அமைந்திருப்பன; இரண்டு மற்றும் நான்கு ஆகிய அடிகளின் இறுதியிரண்டு சீர்களும் ஒன்றாகவே அமைந்திருப்பன.

திருச்சிற்றம்பலம்

338

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதரிந் நாதனார் அன்னே என்னும். 1

'அன்னையே! எம்பெருமான் மறைபொருளாய் ஆனவர்; திருமேனியில் திருவெண்ணீற்றினைப் பூசியிருப்பவர்; செந்நிற மேனியினைக் கொண்டிருப்பவர்; நாத தத்துவப் பறையினைக் கொண்டிருப்பவர்' என்பாள். 'அன்னையே! நாத தத்துவப் பறையினைக் கொண்டிருக்கும் அன்னவரே, நான்முகனுக்கும், திருமாலுக்கும் தலைவராம்; எனக்கும் அவரே தலைவராவார்!' என்பாள்,

339

கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உள்நின் றுருக்குவர் அன்னே என்னும்
உள்நின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும். 2

'அன்னையே! அவருடைய கண்களில், கருஞ்சாந்தினைப் பூசியிருப்பவர்; பேரருட் பெருங்கடலாக விளங்குபவர்; என்னுடைய உள்ளத்தின் உள்ளே புகுந்து கொண்டு, என்னை நெகிழ வைப்பவர்!' என்பாள். 'என்னுடைய உள்ளத்தின் உள்ளே புகுந்துகொண்டு என்னை நெகிழ வைத்து, அழிவிலாத ஆனந்தக் கண்ணீரைச் சொரியச் செய்பவரும் அவரே!' என்பாள்.

340

நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர்ஆ னந்தரால் அன்னே என்னும். 3

'அன்னையே! அவர் நாள்தோறும் மணமகனாராகவே இருப்பவர்; நிறைந்த அழகுடையவர்; என்னுடைய நெஞ்சத்தில் குடியிருப்பவர்' என்பாள். 'அன்னையே! என்னுடைய நெஞ்சத்தில் குடியிருப்பவரே, அழகுமிக்க திருப்பெருந்துறையின் அப்பராவார்; பேரானந்தமயப் பெருமானும் அவரே!' என்பாள்.

341

ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவா றன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடும் இதுவன்னே அன்னே என்னும். 4

'அன்னையே! அவர், படமெடுத்து ஆடுகின்ற பாம்பினை அணிகலனாக அணிந்தவர்; இடையில், புலித்தோலைக் கட்டிக் கொண்டவர்; திருமேனியில், திருவெண்ணீற்றினைப் பூசியிருப்பவர்; அவருடைய புனைவுதான் என்னே!' என்பாள். 'அன்னையே! அவருடைய புனைவினை உள்ளவாறு பார்த்துப் பார்த்து, என்னுடைய மனம் அவர்பால் பித்தாகி அலையும்! இதுவும் யாது காரணமோ? யானறியேன்!' என்பாள்.

342

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும். 5

'அன்னையே! அவர் நெடிய கைகளை உடையவர்; செறிந்த சடைத்தொகுதியினை உடையவர்; நலமிகு பாண்டிய நாட்டிற்கு உரிமை உடையவர்!' என்பாள். 'அன்னையே! நலமிகு பாண்டிய நாட்டிற்கு உரிமை உடைய அவர், பலவாறு அலைபாய்ந்து கொண்டிருந்த என்னுடைய மனத்தை, ஒருமுகப்படுத்தித் தமக்கே அடிமைப்படுத்திக் கொண்டவர்; என்னை ஆண்டு கொண்டதோடு, அன்பும் பாராட்டக்கூடியவர்!' என்றாள்.

343

உன்னற் கரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவ தென்நெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவ தென்நெஞ்சில் மாலயன் காண்கிலா
என்ன அதிசயம் அன்னே என்னும். 6

'அன்னையே! அவர், உள்ளத்தால் நினைத்துப் பார்ப்பதற்கும் அரியவர்; சிறப்புடைய உத்தரகோசமங்கைக்கு உரிமையுடையவர்; அத்தகையவர் என்னுடைய நெஞ்சத்தில் நிலைத்து நிற்பவர்!' என்பாள். 'அன்னையே! திருமால், நான்முகன் ஆகியோரால் காண முடியாத தன்மையினை உடைய அவரோ, என்னுடைய நெஞ்சத்தில் நிலைத்து நிற்பவரான்மைதான் என்ன அதிசயமோ?' என்பாள்.

344

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்திரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேற்கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும். 7

'அன்னையே! அவர், வெள்ளைநிறப் பட்டாடையினை அணிந்திருப்பவர்; திருநீற்றினைப் பூசியிருக்கும் நெற்றியினை உடையவர்; பள்ளிகொள்ளப் பயனுறும் மேலாடையினை உடுத்திக்கொண்டு, பாய்ந்துசெல்லும் குதிரையின் மேல் ஏறியவாறு என்னுடைய உள்ளம் கவர்ந்த கள்வரும் அவரே!' என்பாள்.

345

தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆளெம்மை ஆளும் அடிகளார் தங்கையில்
தாள மிருந்தவா றன்னே என்னும். 8

'அன்னையே! அவர், தாளிக் கொடியினையும், அறுகம்புல்லினையும் பெற்றிருப்பவர்; சந்தனக் கலவையினைப் பூசியிருப்பவர்; அவரே எம்மை ஆண்டுகொள்பவர்!' என்பாள். 'அன்னையே! எம்மை அடிமையாக ஆண்டுகொள்ளும் அந்த அடிகளாரின் கைகளில் தாளம் இருந்ததற்கும் என்னதான் காரணமோ?' என்பாள்.

346

தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
நையுமிது வென்னே அன்னே என்னும். 9

'அன்னையே! அவர், அழகுமிக்க உமையம்மையை ஒரு பாகத்தில் உடையவர்; தவ ஒழுக்க வேடத்தையும் கொண்டிருப்பவர்; உண்பதற்குப் பிச்சையும் எடுக்கச் செல்பவர்!' என்பாள். 'அன்னையே!-அவ்வாறு உண்பதற்குப் பிச்சையும் எடுக்க வந்தவர், அங்கிருந்து நீங்கிச் சென்றவுடன், என்னுடைய உள்ளமும் துன்புறக் காரணந்தான் என்னவோ?' என்பாள்.

347

கொன்றை மதியமுங் கூவின மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும். 10

'அன்னையே! அவர், கொன்றைமலர் மாலை, சந்திரப் பிறை, ஊமத்தை மலர் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் தலையினை உடையவர்!' என்பாள். 'அன்னையே! அவருடைய தலையில் தாங்கியுள்ள ஊமத்தை மலரே, இந்நாள் எனக்கு உன்மத்தத்தைக் கொடுத்ததே! அதற்குக் காரணந்தான் என்னவோ?' என்பாள்.

18. குயிற் பத்து

(தில்லையில் அருளியது)

ஆத்தும இரக்கம்

(அறுசீர் விருத்தம்)

குயில் + பத்து – குயிற்பத்து. முந்தைய பகுதியில், அன்னையை முன்னிலைப் படுத்தியது போலவே, குயிலை முன்னிலைப்படுத்திக் கூறுவதுபோல் அமைந்த பத்துப் பாடல்களின் தொகுப்பு. தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டதனால் வருத்தம் மிக அடைந்த தலைவி, மரத்தின் மீதிருக்கும் குயிலைப் பார்த்து, 'ஏ, குயிலே! என்னைவிட்டுப் பிரிந்துசென்ற தலைவன், மீண்டும் என்னை வந்து கூடுமாறு கூவுவாயாக!' என்று கேட்பதாக அமைவது. ஆத்தும இரக்கம் என்பது, ஆன்மாவானது இறைவனோடு சேராதிருக்கின்ற நிலையினை எண்ணி, அதற்காக இரங்குவது. ஆன்மாவைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் கொள்ளவேண்டும். இந்தப் பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

348

கீத மினிய குயிலே
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவில்
பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற்
சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதிகுண மொன்று மில்லான்
அந்தமி லான்வரக் கூவாய். 1

இன்னிசையினைப் போலக் கூவுகின்ற குயிலே! யான் கூறப் போவதைச் சற்றே செவி கொடுத்துக் கேட்பாயாக! எங்கள் பெருமானாகிய சிவபெருமானின் திருவடிகள் இரண்டின் தன்மையினைப் பற்றி நீயும் வினவுவாயெனில், அவை பாதாளங்கள் ஏழினுக்கு அப்பாலும் சென்றவை; அவனுடைய சுடர்விடும் மணிமுடியைப் பற்றிச் சொல்வதானால் அந்நிலை, சொல்லின் அளவினையும் கடந்துநிற்கும் மிகப்பழைமை வாய்ந்தது; அவனுடைய பண்பினைப் பற்றிச்

சொல்வதானால் அந்நிலை, தனக்கென ஒரு முதலும் இல்லாதவன்; முடிவென்பதும் இல்லாதவன். அத்தகையவன் என்னை வந்து கூடுமாறு, குயிலே நீ ஒய்யாரக் குரலெழுப்பிக் கூவுவாயாக!

349

ஏர்தரும் ஏழுல கேத்த
  எவ்வுரு வுந்தன் னுருவாய்
ஆர்கலி சூழ்தென் னிலங்கை
  அழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த
  பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே
  தென்பாண்டி நாடனைக் கூவாய். 2

குயிலே! எழில் பொருந்திய ஏழுலகங்களும் வெகுவாகப் போற்றக் கூடியது தென்னிலங்கை. எந்த உருவையும் தன்னுருவாய்க் கொள்ளக் கூடியது. ஆர்ப்பரிக்கும் கடலால் சூழப்பட்டது. அந்த இலங்கையில் அழகுடன் விளங்கிய வண்டோதரிக்குப் பேரருட் பேரின்பம் வழங்கியவன், சீரார் பெருந்துறை என்னும் திருத்தலத்தில் கோவில் கொண்டிருக்கும் எம்பெருமானாகிய சிவபெருமான். அத்தகைய தலைவனாகிய தென்பாண்டி நாட்டானை, உன்னுடைய சிறந்த வாயினால் ஒய்யாரக் குரலெழுப்பி, என்னை வந்து கூடுமாறு குயிலே நீ கூவுவாயாக!

350

நீல உருவிற் குயிலே
  நீள்மணி மாடம் நிலாவுங்
கோல அழகில் திகழுங்
  கொடிமங்கை உள்ளுறை கோயில்
சீலம் பெரிதும் இனிய
  திருவுத் தரகோச மங்கை
ஞாலம் விளங்க இருந்த
  நாயக னைவரக் கூவாய். 3

நீல வண்ணத்தில் உள்ள குயிலே! மணிகள் பதித்து உருவாக்கப்பட்ட நெடிய மாடமாளிகைகளைப் பெற்றிருப்பதும், இனிய பண்புகளுடன் விளங்கக் கூடியதும், மிகுந்த அழகு தவழக் கூடியதும், பூங்கொடியினையொத்தவளாகிய உமையம்மை உறைகின்ற கோவிலை உடையதுமாகியது உத்தரகோசமங்கை. இந்த உலகமானது விளக்கமுற, எம்முடைய தலைவனாகிய சிவபெருமான், தானும் அங்கே எழுந்தருளியுள்ளான். அந்தத் தலைவன் என்னை வந்து கூடுமாறு, உன்னுடைய வாயால் ஒய்யாரக் குரலெழுப்பிக் குயிலே நீ கூவுவாயாக!

351

தேன்பழச் சோலை பயிலுஞ்
சிறுகுயி லேயிது கேள்நீ
வான்பழித் திம்மண் புகுந்து
மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித் துள்ளம் புகுந்தென்
உணர்வது வாய ஒருத்தன்
மான்பழித் தாண்டமெல் நோக்கி
மணாளனை நீவரக் கூவாய். 4

தேன்போலும் சுவைமிக்க கனிகளைத் தரும் சோலைகள் யாவிலும் சுற்றி வருகின்ற சின்னஞ்சிறுகுயிலே! நான் இப்போது உன்னிடம் சொல்லப் போவதை, உனது காது கொடுத்துக் கேட்பாயாக! விண்ணுலகத் தேவரெனினும் அவரையெல்லாம் ஆண்டுகொள்ளாமல் பழித்து நீக்கிவிட்டு, மண்ணுலக மாந்தரெனினும் அவரையெல்லாம் ஆண்டுகொண்ட அருள் வள்ளல் அவன்! என்னுடைய உடலினைப் புறந்தள்ளிவிட்டு, என்னுடைய உள்ளத்தினுள்ளே புகுந்து கொண்டவன் அவன். என்னுடைய அறிவுக்கும் அப்பாற்பட்ட உணர்வினில், இரண்டறக் கலந்துநின்ற ஒப்பற்ற ஒருவன் அவன். மருளும் தன்மைகொண்ட மானின் பார்வையைவிடப் பன்மடங்கு மெல்லிய பார்வையினை உடைய உமையம்மையின் மணவாளனும் அவன். அத்தகைய தலைவன் என்னை வந்து கூடுமாறு, உன்னுடைய வாயால் ஒய்யாரக் குரலெழுப்பிக் கூவுவாயாக!

352

சுந்தரத் தின்பக் குயிலே
சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத் தேநின் றிழிந்திங்
கடியவ ராசை அறுப்பான்
முந்தும் நடுவும் முடிவு
மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச்
சேவக னைவரக் கூவாய். 5

இன்பந்தரும் அழகிய இன்னிசை பாடும் என் குயிலே! உலகைப் பற்றிப் படரும் ஒளியினை வழங்குகின்ற கதிரவனைப் போல, விண்ணிலிருந்து மண்ணுக்கு எழுந்தருளி வந்தவன் எல்லாம் வல்ல பெருமான். அடியவர்தம் ஆசையினை அறுத்தொழிப்பவன் அவன். முதலாகவும், நடுவாகவும், முடிவாகவும் இருப்பவன் அவன். நான்முகன், திருமால், உருத்திரன் ஆகிய மூவராலும் அறியவியலாதவன் அவன். தொண்டர்தமைக் காப்பதில் நிகரற்றவன் அவன். அத்தகையவன் என்னை வந்து கூடுமாறு, உன்னுடைய வாயால் ஒய்யாரக் குரலெழுப்பிக் கூவுவாயாக!

353

இன்பந் தருவன் குயிலே
ஏழுல கும்முழு தாளி
அன்பன் அமுதளித் தூறும்
ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த
நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே
கோகழி நாதனைக் கூவாய். 6

கொம்பின்மேல் இருந்துகொண்டு, மெல்லிய குரலெடுத்துப் பாடுகின்ற குயிலே! என் சொற்படி நீயும் நடந்து கொண்டால், உனக்கு நானும் இன்பத்தைத் தருவேன். எம்முடைய பெருமானாகிய சிவபெருமான், ஏழுலகங்களையும் முழுமையாக ஆண்டுகொண்டு வருபவன். எல்லாரிடத்திலும் அன்புடையவன் அவன். சிவஞான அமுதத்தினை அனைவருக்கும் அளிப்பவன். அடியவரின் உள்ளங்களில், ஆனந்தப் பெருக்காய் ஊற்றெடுப்பவன். விண்ணுலகத்தினின்றும் மண்ணுலகத்திற்கு வந்த தலைவன், நல்ல பொன் போன்று அழகிய தோற்றமுடைய புள்ளிகளைக் கொண்ட குதிரையின் மேல் ஊர்ந்து வருபவன். கோகழி என்னும் திருத்தலத்தின் தலைவனாய் உள்ளவன். அத்தகைய பெருமான், என்னை வந்து கூடுமாறு உன் வாயால் ஒய்யாரக் குரலெழுப்பிக் கூவுவாயாக!

354

உன்னை உகப்பன் குயிலே
உன்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்தநன் மேனிப்
புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப்புயங் கன்வரக் கூவாய். 7

குயிலே! நான் உன்னை விரும்புவேன். உன்னுடைய இணைபிரியாத தோழியாகவும் ஆவேன். என்னைப் பிரிந்த தலைவன் எப்படிப்பட்டவன் தெரியுமா? பொன்னையும் வென்றுவிட்ட திருமேனியினை உடையவன். புகழில் மிதக்கின்ற பேரழகன். அனைவர்க்கும் அரசன். குதிரையின்மேல் ஊர்ந்து வந்த கருணை வள்ளல். திருப்பெருந்துறை என்னும் பதியில் எழுந்தருளி இருப்பவன். தென்னாடுடைய சிவபெருமான், பாண்டியன், சேரன், சோழன் ஆகியோர் போற்றுமாறு, சிறப்புடைய புயங்கக் கூத்தினை ஆடியவன். அத்தகைய தலைவன், என்னை நாடி வந்து கூடுமாறு, உன் வாயால் ஒய்யாரக் குரலெழுப்பிக் கூவுவாயாக!

355

வாஇங்கே நீகுயிற் பிள்ளாய்
மாலொடு நான்முகன் தேடி
ஓவியவ ருன்னி நிற்ப
ஒண்தழல் விண்பிளந் தோங்கி
மேவிஅன் றண்டங் கடந்து
விரிசுட ராய்நின்ற மெய்யன்
தாவி விரும்பரிப் பாகன்
தாழ்சடை யோன்வரக் கூவாய். 8

சின்னஞ்சிறு குயிலே! நீ என்னருகில் வா! என்னுடைய தலைவன் எத்தகையன் என்பதைச் சொல்வேன் கேள். திருமாலும் நான்முகனும் சேர்ந்து, அவனுடைய அடிமுடிகளைத் தேடியலைந்தும் காண முடியவில்லை. எனவே, அவ்விருவரும் அவனை வியந்து நினைந்து நிற்கவும், அவன் ஒளியுமிழும் தணல் உருவாய் விண்ணைப் பிளந்து, அதற்கப்பாலும் சென்றவனாய், அண்டங்கள் அனைத்தையும் கடந்து, எல்லா இடங்களிலும் பரவிநின்ற ஒப்பற்ற ஒளிவடிவினனாகக் காட்சிதந்த மெய்ப்பொருளானவன். விரைந்து பாயும் குதிரைக்குப் பாகனாக விளங்கியவன். தொங்குகின்ற நீண்ட சடைமுடியினை உடையவன். அத்தகைய தலைவன் என்னை வந்து கூடுமாறு, உனது வாயால் ஒய்யாரக் குரலெழுப்பிக் கூவுவாயாக!

356

காருடைப் பொன்திகழ் மேனிக்
கடிபொழில் வாழுங் குயிலே
சீருடைச் செங்கம லத்தில்
திகழுரு வாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப்
பாசம் அறுத்தெனை யாண்ட
ஆருடை அம்பொனின் மேனி
அமுதினை நீவரக் கூவாய். 9

மணம் வீசுகின்ற மலர்ச்சோலையில், கரும்பொன்னைப் போன்று விளங்குகின்ற உடலழகோடு பறந்து திரிகின்ற குயிலே! என்னுடைய உள்ளம் கவர்ந்த தலைவனோ, சிறந்த செந்தாமரை மலரைப் போன்ற திருமேனியைப் பெற்ற செல்வன். விண்ணிலிருந்து மண்ணில் வந்து, தன்னுடைய பொன்னார் திருவடிகளைக் காட்டியவன். என்னிடம் குடிகொண்டிருந்த பந்த பாசத்தினை அகற்றி, என்னை ஆண்டுகொள்ளவும் செய்தான். அவன் ஆத்திமாலையினை அணிந்தவன். அழகிய பொன்னொத்த திருமேனியைக் கொண்டவன். தெவிட்டாத தெள்ளமுதமாய் இனித்தவன். அத்தகைய தலைவன் என்னை வந்து கூடுமாறு, நீயும் உன் வாயால் ஒய்யாரக் குரலெழுப்பிக் கூவுவாயாக!

357

கொந்தண வும்பொழிற் சோலைக்
கூங்குயி லேயிது கேள்நீ
அந்தண னாகிவந் திங்கே
அழகிய சேவடி காட்டி
எந்தம ராம்இவ னென்றிங்
கென்னையும் ஆட்கொண் டருளும்
செந்தழல் போல்திரு மேனித்
தேவர்பி ரான்வரக் கூவாய். 10

கொத்துகளாகப் பொருந்தி நிறைந்துள்ள மலர்ச்சோலையில் கூவித் திரிகின்ற குயிலே! நான் சொல்லப் போவதை நீயும் கேட்பாயாக! என்னுடைய நெஞ்சம் குடிபுகுந்த நாயகனோ, ஒருநாள் அந்தணக் கோலத்தில் இவ்வுலகில் எழுந்தருளி, அழகுவாய்ந்த தன்னுடைய சிவந்த திருவடிகளை எனக்குக் காட்டினான். 'எம்முடைய அடியவருள், இவனும் ஒருவன்' என்றெண்ணி, அடியேனையும் ஆண்டுகொண்டான். அடியேன்பால் அருளையும் வழங்கினான். சிவந்த தணலையொத்த திருமேனி படைத்த தலைவன் அவன். தேவர்க்கும் தலைவன் அவன். அத்தகைய தலைவன், என்னை வந்து கூடுமாறு, உன் வாயால் ஒய்யாரக் குரலெழுப்பிக் கூவுவாயாக!

திருச்சிற்றம்பலம்

19. திருத்தசாங்கம்

(தில்லையில் அருளியது)

அடிமைகொண்ட முறைமை

(நேரிசை வெண்பா)

திரு + தசம் + அங்கம் – திருத்தசாங்கம். திரு – அரசன் (சிவன்); தசம் – பத்து; அங்கம் – உறுப்பு. அரசனுடைய பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி ஆகிய பத்து உறுப்புகளையும் போற்றிப் புகழ்ந்து பாடுவது மரபு. அவ்வாறே உலகப் பேரரசனாக விளங்கும் ஒப்பிலா மணியாம் சிவபெருமானுக்குரிய பத்து உறுப்புகளையும் போற்றிப் புகழ்ந்து பாடுகின்றார் வாதவூரண்ணல். அடிமை கொண்ட முறைமை என்பது, இறைவன் ஆட்கொண்ட தன்மையினை எடுத்தியம்புவது. இங்குப் பத்து வகைகளாக ஆண்டுகொண்ட தன்மைகள் கூறப்படுகின்றன. இப்பகுதியில் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. தலைவி ஒருத்தி, தன்னைக் கூடியிருந்து பிரிந்து சென்ற தலைவனிடத்தில் கிளியைத் தூதாக விடுப்பதுபோலப் பாடல்கள் அமையப் பெற்றுள்ளன. இங்கே தலைவனாகச் சிவபெருமானையும், தலைவியாக வாதவூரண்ணலையும் கொள்ளவேண்டும்.

திருச்சிற்றம்பலம்

பெயர்

358

ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய் – ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று. 1

அழகு மிகுந்த இளங்கிளியே! எங்கள் திருப்பெருந்துறையுறை தலைவனின் திருப்பெயரை, வெள்ளைத் தாமரைப் பூவில் விளங்குகின்ற நான்முகனும், திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளும் பெருமானாகிய திருமாலும் 'ஆரூரன்' எனவும், 'எம்பெருமான்' எனவும் போற்றி உரைப்பர். அதைப் போலவே நீயும் அந்தப் பெருமானை, 'எம்பெருமான்' எனவும், 'தேவர் பிரான்' எனவும் சொல்லிப் போற்றி உரைப்பாயாக!

நாடு

359

ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதன்நமை ஆளுடையான் நாடுரையாய் - காதலவர்க்
கன்பாண்டு மீளா அருள்புரிவான் நாடென்றும்
தென்பாண்டி நாடே தெளி. 2

குற்றமில்லாத இன்சொல் பேசுகின்ற பச்சை வண்ணப் பைங்கிளியே! ஏழு உலகங்களுக்கும் தலைவனாக விளங்குபவனும், நம்மையெல்லாம் ஆண்டு கொள்பவனுமாகிய எம்பெருமானின் நாட்டைப் பற்றியும் நீ கூறுவாயாக! தன்னுடைய அடியவரையெல்லாம் அன்பால் ஆண்டுகொண்டு, அவர்க்கெல்லாம் மீளவும் பிறவாத பேற்றினை அருள்பவனாகிய எம்பெருமானது நாடு, என்றென்றும் தென்பாண்டி நாடுதான் என்று நீ தெளிவாகக் கூறுவாயாக!

ஊர்

360

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதியென் - கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தர கோசமங்கை யூர். 3

மகரந்தப் பொடிகள் சொரிகின்ற மலர்கள் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையில் பறந்து திரிகின்ற இளங்கிளியே! உமையம்மையைத் தன்னுடைய திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டவனும், நம்மையெல்லாம் ஆண்டு கொள்பவனுமாகிய எம்பெருமான் உறைகின்ற ஊரும் எதுவென்று நீயும் கேட்பா யானால், அடியவரெல்லாம் பாராட்டிச் சீராட்டும் இந்த நிலவுலகில் உள்ள சிவபுரம் என்னும் உத்தரகோசமங்கை ஆகும்.

ஆறு

361

செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறுரையாய் - தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் காணுடையான் ஆறு. 4

செந்நிற வாயினையும், பச்சை நிறச் சிறகுகளையும் கொண்ட செல்வியே! நம்முடைய நெஞ்சத்தில் குடிபுகுந்த தலைவனும், திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் வாழ்பவனுமாகிய எம்பெருமானின் ஆற்றின் பெயரினையும் நீ கூறு வாயாக! பைங்கிளியே! அவனுடைய ஆறுதான் எதுவெனில், உயர்ந்த நெஞ்சத்தில் வந்து சேர்ந்துள்ள ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மூவகைப்பட்ட மலங்களையும் கழுவித் தூய்மைப்படுத்தப் பாய்ந்து வருகின்ற 'பேரானந்தப் பெருவெள்ளம்' என்னும் ஆறே, அவனுடைய ஆறாகும்.

மலை

362

கிஞ்சுகவாய் அஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சு மருவும் மலைபகராய் – நெஞ்சத்
திருளகல வாள்வீசி இன்பமரும் முத்தி
அருளுமலை என்பதுகாண் ஆய்ந்து. 5

முள்முருக்கம் பூவினைப் போன்ற செந்நிற வாயினையுடைய அழகிய இளங்கிளியே! அழிவில்லாத திருப்பெருந்துறையின் தலைவனும், அழகனும் ஆகிய எம்பெருமான் குடியிருக்கின்ற மலையினைப் பற்றியும் கூறுவாயாக! நம்முடைய நெஞ்சத்தில் உள்ள அறியாமை இருள் அகல, அறிவொளியினைப் பாய்ச்சி, இனிமையைத் தரக்கூடிய முத்திப் பேரின்பத்தை வழங்கக்கூடிய மலை, 'மகேந்திரம்' என்னும் மலையே என்பதை நீதான் ஆராய்ந்து கொள்வாயாக!

புரவி

363

இப்பாடே வந்தியம்பு கூடுபுகல் என்கிளியே
ஒப்பாடாச் சீருடையான் ஊர்வதென்னே – எப்போதும்
தேன்புரையும் சிந்தையராய்த் தெய்வப்பெண் ணேத்திசைப்ப
வான்புரவி யூரும் மகிழ்ந்து. 6

எனது அன்பிற்குரிய கிளியே! நீ உன்னுடைய கூட்டுக்குள் புகுந்து கொள்ளாதே. இங்கே என்னிடம் நீயும் வந்து, நான் கேட்பதைச் சொல்வாயாக! நிகரிலாச் சிறப்பினையுடைய நம்முடைய எம்பெருமான் ஏறிச் செல்லும் ஊர்திதான் என்ன? எந்நேரமும் தேனைப் போன்று இனிமை கொண்ட உள்ளமுடைய தெய்வ மகளிர் போற்றிப் புகழ்ந்து பாடும் 'வானம்' என்னும் புரவியே, அவன் ஏறிச் செல்லும் ஊர்தி என்பதை நீயும் அறிவாயாக!

படை

364

கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகராய் – ஏற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை. 7

கொம்புத்தேனைப் போன்று இனிமையாகப் பேசும் இளங்கிளியே! குற்றமில்லாத திருப்பெருந்துறை மன்னனாகிய எம்பெருமான், தன்னுடைய பகைவரை வெல்லும் படையினைப் பற்றியும் கூறுவாயாக! அவனை எதிர்ப்பவரின் மனங்களிலே இருக்கின்ற ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்களையும் போக்கக் கூடியதும், மீண்டும் அவை சேராமல் பாதுகாக்கக்கூடியதுமாகிய சூலப்படையே, அவனுடைய கையில் உள்ள படையாகும் என்பதை நீயும் நன்றாக அறிவாயாக!

முரசு

365

இன்பால் மொழிக்கிள்ளாய் எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசியம்பாய் - அன்பாற்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை. 8

இனிய சுவைதரும் பாலைப் போலப் பேசுகின்ற இளங்கிளியே! எங்கள் திருப்பெருந்துறைத் தலைவனாகிய எம்பெருமானின் முன்னர் முழங்கக்கூடிய முரசினைப் பற்றியும் நீ மொழிவாயாக! அவன் உயிர்களின்மேல் கொண்டுள்ள அன்பினால், பிறவி என்னும் பெரும்பகையானது கலங்கி ஓடவும், பேரின்பப் பெரு வெள்ளமானது உயர்ந்தோங்கி நின்றிடவும் செய்கின்ற பெருமிதம் மிக்கதாகிய 'நாதம்' என்னும் முரசமே, அவன் திருமுன்னர் ஒலிக்கின்ற முரசமாகும்.

தார்

366

ஆய மொழிக்கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தாரென் - தீயவினை
நாளுமணு காவண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளிஅறு கார்உவந்த தார். 9

ஆய்ந்தறிந்து பேசுகின்ற, மொழியறிவு மிகுந்த கிளியே! ஊனுருக உளமுருக அன்புசெய்யும் அடியவர்பால் பொருந்தியிருக்கக் கூடியவன். திருப்பெருந் துறையுறை எம்பெருமான். அவனுடைய திருமார்பில் தவழ்கின்ற மாலைதான் என்னவென்று நீ கூறுவாயா? நாய் போன்றவனாகிய அடியேனைக் கொடிய வினைகள் எந்நாளும் நெருங்காதவாறு ஆண்டுகொண்டவன் அவன். அத்தகைய பெருமான் விருப்புடன் அணியும் தார் தாளியும் அறுகும் ஆகும்.

கொடி

367

சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய் - சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறாம் கொடி. 10

குளிர்சோலைகளில் சுற்றித் திரிகின்ற பச்சைக் கிளியே! தூய்மையான தன்மையினை உடையவன் திருப்பெருந்துறையில் உறைகின்ற தலைவன். அவனுடைய அழகு தவழும் கொடியினைக் குறித்தும் நீ கூறுவாயாக! மிகுதியான பகைவரும் மிகவும் பயந்து நடுங்கும்படியாக, அவர்க்கு மேலாகத் தோன்றி, அழகினைக் காட்டும் குற்றமில்லாத இடபக்கொடியே அவனுடைய கொடியாகும்.

திருச்சிற்றம்பலம்

20. திருப்பள்ளியெழுச்சி

(திருப்பெருந்துறையில் அருளியது)

திரோதான சுத்தி

(எண்சீர் விருத்தம்)

திரு + பள்ளி + (ய்) + எழுச்சி – திருப்பள்ளியெழுச்சி. பள்ளி எழுச்சி என்பது, படுக்கையிலிருந்து எழுந்தருளுமாறு வேண்டுதல் எனப்படும். இறைவனை அவ்வாறு வேண்டுவதால், திருப்பள்ளியெழுச்சி ஆயிற்று. திரோதான சுத்தி என்பது, மறைப்புநீக்கம் என்பதாகும். இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலின் ஈற்றடியின் இறுதி அரையடியானது, 'எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!' என்று முடிந்துள்ளது.

திருச்சிற்றம்பலம்

368

போற்றியென்வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெமை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

என்னுடைய வாழ்விற்குத் தேவையான அனைத்திற்கும் முதன்மையாய் விளங்குகின்ற ஒப்பற்ற பொருளே! உன்னை வணங்குகின்றேன். பொழுதும் நன்றாகப் புலர்ந்துவிட்டது. உன்னுடைய மெல்லிய திருவடிகளுக்குப் பொருந்திய மலர்களைக் கொய்தெடுத்துக் கொண்டுவந்து, அவற்றை உன் இணையடிகளில் தூவி நின்று வணங்குகின்றோம். உன் திருமுகத்தில் எமக்கு அருள் வழங்கத்தக்கபடி மலர்கின்ற அழகிய புன்னகை கண்டு நாங்கள், உன் பொன்னார் திருவடிகளைப் பணிகின்றோம். சேறு நிறைந்த நீர்வளம் மிகுந்த வயல்களி லெல்லாம் அழகிய இதழ்களையுடைய செந்தாமரை மலர்கள் மலர்கின்ற திருப்பெருந்துறை என்னும் திருவூரில் உறைகின்ற சிவபெருமானே! உயர்ந்தோங்கி விளங்குகின்ற இடபக் கொடியினை உடையவனே! எம்மையும் தொண்டராய்க் கொண்டவனே! எம்பெருமானே! திருப்பள்ளியினின்றும் திருக்கண்கள் மலர்ந்தபடி எழுந்தருள்வாயாக!

369

அருணன்இந் திரன்திசைஅணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

காலைக் கதிரவனோ, இந்திரனுக்குரிய கிழக்குத் திசையில் தோன்றி யுள்ளான். படர்ந்திருந்த இருளும் விலகிவிட்டது; வெளிச்சம் பரவியது. செந்தாமரை மலரினையொத்த உனது திருமுகத்தில் தோன்றும் அருளினைப் பெற்ற கதிரவன், மேலெழுந்து உயர உயரக் கண்களையொத்த நறுமண மலர்களெல்லாம் மலரத் தொடங்கின.மேலும், மேலோனின் அழகிய கண்களைப் போன்ற வண்டினங்களும், இரவெல்லாம் மலர்களில் கிடந்து மதுவினைச் சுவைத்துவிட்டு, இப்போது பறக்கத் துடித்துச் சிறகுகளை விரித்தபடி ஓசையிடுகின்றன. எம் பெருமானே! இவற்றையெல்லாம் எண்ணிப் பார்! திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் உறைகின்ற சிவபெருமானே! அருட்செல்வத்தினை வாரி வழங்க வருகின்ற பேரானந்தப் பெருமலையே! ஆழ்ந்தும் அகன்றும் விளங்குகின்ற எல்லையற்ற பெருங்கடலே! திருப்பள்ளியினின்றும் திருக்கண்கள் மலர்ந்தபடி எழுந்தருள்வாயாக!

370

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

பூங்குயில்கள் கூவின; கோழிகள் கூவின; பிற பறவையினங்களும் ஓசை யெழுப்பின; சங்குகள் முழக்கமிட்டன; கீழை வானில், விண்மீன்கள் மறைந்தன; கதிரவன் தோன்றிவிட்டான் என்பதன் அறிகுறியே அந்நிலைகள் வானத்தில் தெரிந்து கொண்டிருந்த விண்மீன்களும் படிப்படியாக மறையத் தொடங்கின. எம்முடைய பெருமானே! எப்படிப்பட்டவராயினும் அறிந்து கொள்வதற்கு அரிதாக உள்ளவனே! அடியவராகிய யாம் அறிந்து கொள்வதற்கு எளிதாக உள்ளவனே! திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் உறைகின்ற சிவபெருமானே! அருள்கொண்டு எமக்கு உன்னுடைய மேலான நன்மை தரக்கூடிய, வீரக் கழலணிந்துள்ள திருவடிகளைக் காட்டுவாயாக! நீ கொண்டுள்ள திருப்பள்ளி யினின்றும் திருக்கண்கள் மலர்ந்தபடி எழுந்தருள்வாயாக!

371

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

எம்பெருமானே! நீதான் அடிமை கொண்ட உன்னுடைய அடியவரெல்லாம், உன்னையும் எவ்வெவ்வாறெல்லாம் பரவி நிற்கின்றனர் தெரியுமா? இனிய இசையினை எழுப்புகின்ற வீணையினையும் யாழினையும் மீட்டியவாறு உள்ளனர் ஒருபக்கம்; இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு மறைகளிலும் உள்ள வழிபாட்டுப் பாடல்களைப் பாடியவாறு உள்ளனர் ஒருபக்கம்; பொருந்திய அன்றலர்ந்த மலர்களைக் கொய்து, தொடுக்கப்பட்ட மாலைகளைத் தங்கள் கையில் கொண்டவராய் உள்ளனர் ஒருபக்கம்; உனது பெருமை கருதி வணங்கக்கூடியவரும், உனது ஆற்றல் கருதி மருளக் கூடியவரும், உனது உயர்வு கருதித் தலைமேல் கைகளைக் கூப்புபவருமாய் உள்ளனர் ஒருபக்கம். திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! என்னையும் ஆண்டுகொண்டு, இன்னருள் புரிவாயாக! உன்னுடைய திருப்பள்ளியினின்றும் திருக்கண்கள் மலர்ந்தபடி எழுந்தருள்வாயாக!

372

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்
தேதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

எம்பெருமானே! விண், மண், நீர், நெருப்பு, காற்று எனப்படும் ஐந்து பெரும் இயற்கைக் கூறுகளாய் நிலைத்தவன் நீ என்பதல்லால், உனக்கென்று போக்கென்பதும் வரவென்பதும் இல்லாதவன் என்று சொல்லிப் புலவரெல்லாம் பண்ணிசையோடு பாடல்களைப் பாடினர்; பரவசமடைந்து ஆடினர். அவற்றையல்லாமல், உன்னை முழுமையாகக் கண்டுணர்ந்தனர் என்று சொல்லுமளவில், இதுகாறும் ஒருவரையேனும் நாங்கள் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. ஏனென்றால், உள்ளத்தாலும் எண்ணிப் பார்ப்பதற்கு அரிய பொருளாக விளங்குபவன் நீ! குளிர்ச்சியுடைய நீர் நிறைந்திருக்கும் நன்செய்

வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறை என்னும் திருவூரின் மன்னவனே! எங்கள் கண்முன் காட்சிதந்து, எங்களிடமுள்ள குற்றங்குறைகளை அகற்றி, எங்களை ஆட்கொண்டு அருள்புரிவாயாக! கற்பகமே! கண்மலர்ந்து பள்ளி எழுந்தருள்வாயாக!

373

ப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

எம்பெருமானே! உமையம்மையின் மணவாளனே! செந்நிறம் வாய்ந்த தாமரை மலர்கள் மலர்கின்ற, நீர் நிறைந்த வயல்கள் சூழ்ந்துள்ள திருபெருந் துறையில் உறைகின்ற சிவபெருமானே! மன உளைச்சலைக் குறைத்துக் கொண்டு, பேரின்ப நிலைகொண்டு, உன்னை உணர்கின்ற உன்னடியார் பலர் தம்முடைய பிறவிப் பெருந்தளையினை அறுத்தெரிய உன்னை வந்து தொழு கின்றனர். மைதீட்டிய கண்களையுடைய மகளிர் சிலரும், மனிதத்தன்மையின் இயற்கையென உன்னை வந்து தொழுகின்றனர். இவ்வாறு ஆடவர் பலராகவும், மகளிர் சிலராகவும் என்று அனைவரும் உன்னை வந்து வணங்குகின்றனர். எங்களுடைய இந்தப் பிறப்பென்னும் கொடுந்தளையினை அறுத்தெறிந்து, எம்மை ஆண்டுகொள்வாயாக! பொழுது புலர்ந்தது! திருப்பள்ளி எழுந்தருள்வாயாக!

374

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 7

எம்பெருமானே! தேன் சொரிகின்ற மலர்கள் பூத்துக்குலுங்கும் சோலைகள் சூழ்ந்துள்ள உத்தரகோசமங்கை என்னும் திருத்தலத்தில் உள்ளவனே! திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தின் மன்னவனே! சிவபரம்பொருளானது, பழத்தின் நறுஞ்சுவையெனவும், தெவிட்டாத தெள்ளமுதமெனவும், அறிந்து கொள்வதற்கு அரிதாக உள்ளதெனவும், அன்பர்தம்மால் அறிந்து கொள்வதற்கு எளிதாக உள்ளதெனவும், என்று பலவாறு எண்ணி, ஒரு முடிவுக்கும் வரவியலாமல்

வானவரும் மயங்குவர். 'இதுதான் அவனுடைய திருவுருவம்; இவன்தான் சிவபெருமான்!' என்று நாங்கள் உணர்ந்துகொள்ள, எங்கள் முன்வந்து எங்களை ஆண்டுகொண்டு, இவ்விடத்தில் எழுந்தருளியுள்ள எங்கள் பெருமானே! எங்களை நீதான் ஏவுகின்ற பணியும் யாதோ? அதனைக் கேட்பதற்கென்றே உனது திருமுன்னர்க் கூடியுள்ளோம். உன்னுடைய மெல்லிய இமைகளை மெதுவாகத் திறந்து, திருப்பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக!

375

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 8

எம்பெருமானே! நீதான் உலகத் தோற்றத்தின் முதலாகவும், நடுவாகவும், முடிவாகவும் விளங்குகின்றாய். மும்மூர்த்தியோராகிய நான்முகன், திருமால், உருத்திரன் ஆகியவரும் உன்னை முழுமையாக அறிந்தவரல்லர். அவ்வாறிருக்கையில், வேறு யாவர்தாம் உன்னை அறிவார்? பந்தினைப் பற்றியுள்ள மெல்விரல்களையுடைய உமையம்மையோடு நீயும், உன் அடியவரின் பழைமை வாய்ந்த இல்லந்தோறும் எழுந்தருளிய பரம்பொருளே! செந்தணலையொத்த உன்னுடைய திருமேனியின் அழகினைக் காட்டினாய். நீ குடிகொண்டிருக்கும் திருப்பெருந்துறைத் திருக்கோவிலையும் காட்டினாய். அங்கு வேதியன் வடிவில் வந்து, திருக்காட்சி தந்ததுடன், குருவாக விளங்கியும் என்னை ஆண்டுகொண்டாய். தெவிட்டாத அமுதமாக விளங்குபவனே! திருப்பள்ளியினின்றும் எழுந்தருள்வாயாக!

376

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 9

எம்பெருமானே! வானுலகத் தேவரும் நெருங்கவியலாத மேலான பொருளாக விளங்குபவனே! உனக்குப் பணிவிடை செய்யும் அடியவராகிய எங்களை, இந்த நிலவுலகத்திற்கு எழுந்தருளி வந்து, நன்றாக வாழச் செய்தவனே! வளப்பம்

நிறைந்த திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் உறைபவனே! உன்றனுக்கு! வழிமுறையாய் அடிமை செய்துவரும் எங்களின் கண்களுக்குள் நிலைத்தவாறு களிப்பினைத் தருகின்ற நறுந்தேனாக விளங்குபவனே! திருப்பாற்கடலில் திரண்ட தெவிட்டாத அமுதமே! செங்கரும்பின் தீஞ்சுவையே! உன்னை விரும்புகின்ற அடியவரின் உள்ளத்தே நீ விரும்பியபடி எழுந்தருள்பவனே! உலக உயிர்களுக்கெல்லாம் உயிரானவனே! புலரும் வைகறையில் பூங்கண்கள் நீ திறந்தே, திருப்பள்ளிதன்னை விட்டுத் திருவே! எழுந்தருள்வாயாக!

377

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10

தெவிட்டாத தெள்ளமுதமாக விளங்குபவனே! திருப்பெருந்துறையில் உறைபவனே! 'இந்தப் பூமியானது, நாம் கடைத்தேறுவதற்கென்றே படைக்கப்பட்டது. அவ்வாறிருக்கவும், நாம் அங்குச் சென்று பிறவாமல், வாழ்நாள்களையெல்லாம் வீழ்நாள்களாகக் கழித்துக் கொண்டுள்ளோம்!' என்றவாறு எண்ணிக்கொண்டு, பூமியில் பிறக்கத் திருமால் விரும்புகின்றான். நான்முகன் விரும்புகின்றான், உன்னுடைய ஆழ்ந்தகன்ற மெய்யான கருணையுடன், இந்த நிலவுலகில் எழுந்தருளி, அடியவராகிய எங்களையெல்லாம் ஆண்டுகொள்ள வல்லவனே! பூக்கள் மலர்ந்தன! புள்ளினங்கள் ஆர்த்தன! புரிச்சங்கு ஒலித்தது! பொழுதும் புலர்ந்தது! புண்ணியனே துயில் நீக்கு! பூவுலகின் துயர் போக்கு! திருப்பள்ளி எழுந்தருள்வாயாக!

திருச்சிற்றம்பலம்

21. கோயில் மூத்த திருப்பதிகம்

(தில்லையில் அருளியது)

அநாதியாகிய சற்காரியம்

(அறுசீர் விருத்தம்)

திரு + பதிகம் – திருப்பதிகம். பதிகம் என்பது, பத்துப் பாடல்களின் தொகுப்பு. சைவர்க்குக் கோயில் என்றாலே தில்லை. விண்தலமாக விளங்குவது. மூத்த திருப்பதிகம் என்பது, முதல்முதலாக அருளிய பத்துப் பாடல்களின் தொகுப்பு. அப்படியானால், கோயில் மூத்த திருப்பதிகம் என்பது, தில்லையில் முதல்முதலாக அருளிய பத்துப் பாடல்களின் தொகுப்பு எனலாம். அநாதியாகிய சற்காரியம் என்பது, எஞ்ஞான்றும் நிலைபெற்று விளங்கக் கூடிய இறையருட்செயலை வியந்து போற்றுதல். இப்பகுதியில் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அந்தாதித் தொடையிலும் அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

378

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே. 1

தில்லைப் பொன்னம்பலத்தில் திருநடனம் செய்கின்ற எம்முடைய அழிவிலாத முதற்பொருளே! உன்னை உடையவளாகிய உமையம்மையோ, உன்னுடைய உள்ளத்தின் நடுவில் உள்ளாள்; அந்த உமையம்மையின் உள்ளத்தின் நடுவிலோ, அவளை உடையவனாகிய நீ உள்ளாய்; அடியேனாகிய என்னுடைய உள்ளத்தின் நடுவிலோ, நீவிர் இருவீரும் உள்ளீர். அவ்வாறு இருப்பதும் மெய்யானால், அடியேனாகிய யானும் உன்னுடைய அடியவர் குழாத்தின் நடுவில் இருப்பதாகிய அருளைத் தருவாயாக!

379

முன்னின் றாண்டாய் எனைமுன்னம்
யானும் அதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன்
பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
என்னின் றருளி வரநின்று
போந்தி டென்னா விடில்அடியார்
உன்னின் றிவனார் என்னாரோ
பொன்னம் பலக்கூத் துகந்தானே. 2

தில்லைப் பொன்னம்பலத்தே திருநடனம் செய்வதில் பெருவிருப்புடைய பெருமானே! என்னை முன்னையொரு நாளில், என்முன் காட்சிதந்து ஆண்டுகொண்டாய். யான் மீண்டும் மீண்டும் உன்னுடைய அருளைப் பெற்று வீடுபேறடையப் பலவாறு உனக்குத் தொண்டுகள் செய்துவந்தேன். அவற்றையும் யான் சரிவரச் செய்யவில்லை. அதனால் யான் பின்னடைந்து கிடக்கின்றேன். பெருமானே! இவ்வமயம் நீயும் 'என்னுடன் வா!' என்று என்னை அழையாமற்போனால், உன்னுடைய அடியவர்தாம் உன்னிடம்வந்து, 'இவன் யாவன்?' என வினவி, என்னையும் புறந்தள்ளாரோ?

380

உகந்தா னேஅன் புடைஅடிமைக்
குருகா உள்ளத் துணர்விலியேன்
சகந்தான் அறிய முறையிட்டால்
தக்க வாறன் றென்னாரோ
மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தாய் அடியேற்குன்
முகந்தான் தாரா விடின்முடிவேன்
பொன்னம் பலத்தெம் முழுமுதலே. 3

தில்லைப் பொன்னம்பலத்தே திருநடனம் செய்கின்ற எம்முடைய முழுமுதற் பொருளே! உன்மேல் அன்புகொண்ட அடியவரை விரும்புகின்ற தலைவனே! யானோ, அந்த அன்புகொண்டு உருகாத உள்ளத்தையுடைய உணர்வில்லாதவன். உலகை அறிய முறையிட்டால், உன்னை அடைவதற்குரிய வழி அஃதன்று என்று சொல்லாரோ? தக்க வேள்விகள் இயற்றி, உன்னை வழிபட்ட முனிவரையெல்லாம் வாழச் செய்து, அவர்தம் உள்ளங்களிலும் நீதான் வாழ்ந்து வந்தாய். அடியேனுக்கு உன்னுடைய திருமுகத்தின் அருளைத்தான் தாராவிடில், நான் அழிந்தே போவேன்.

381

முழுமுத லேஐம் புலனுக்கும்
மூவருக் கும்என்த னக்கும்
வழிமுத லேநின் பழவடி
யார்தி ரள்வான் குழுமிக்
கெழுமுத லேயருள் தந்திருக்க
இரங்குங் கொல்லோ என்று
அழுமது வேயன்றி மற்றென்
செய்கேன் பொன்னம் பலத்தரசே. 4

முழுமுதற்பொருளே! தில்லைப் பொன்னம்பலத்து மன்னவனே! ஐந்து புலன்களுக்கும், மனம் – புத்தி – சித்தம் என்னும் மூன்று அகக்கருவிகளுக்கும், அடியேனாகிய என்றனுக்கும், நெறிப்பட்ட காரணப் பொருளாய் உள்ளவனே! பழைமையான அடியவர் திருக்கூட்டத்தில் சேர்ந்துள்ள மூத்தவனே! எனக்கும் உன்னுடைய திருவருளை வழங்கி, என்னுடைய உள்ளத்திலும் நீதான் தங்கியிருப்பாயோ என்று, ஏக்கம் மிகக்கொண்டு அழுது புலம்பி அரற்றிக் கொள்வதேயன்றி, மற்றபடி வேறுள வழியேதும் அறியேனே!

382

அரைசே பொன்னம் பலத்தாடும்
அமுதே என்றுன் அருள்நோக்கி
இரைதேர் கொக்கொத் திரவுபகல்
ஏசற் றிருந்தே வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் னடியேன்பால்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசா திருந்தால் ஏசாரோ. 5

'மன்னவனே! தில்லைப் பொன்னம்பலத்தே திருநடம் புரிகின்ற தெவிட்டாத தெள்ளமுதம் போன்றவனே!' என்று போற்றி, இரையினை எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற கொக்கினைப் போல், இரவும் பகலுமாக உன்னுடைய அருளினை எதிர்பார்த்துக் காத்திருந்து, அடியேனும் உடல்மிக நலிந்தேன். பிறவிக்கடலினின்றும் கரையினைச் சேர்கின்ற உன்னுடைய அடியவர் இன்புறுமாறு காட்சிதந்தாய். ஆனால், உன்னுடைய அடியேனாகிய என்னிடத்தில் மட்டும், பிரைகலந்த பாலில் ஒளிந்திருக்கும் நெய்போல், எதுவும் பேசாமல் இருந்தால், உன்னை 'இரக்கமென்பது சிறிதும் இல்லாதவன்' என்று கடுமொழி கூறமாட்டாரோ?

383

ஏசா நிற்பர் என்னையுனக்
கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்பர் யான்தானும்
பேணா நிற்பேன் நின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந்
திருவோ லக்கஞ் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்தாடும்
எந்தாய் இனித்தான் இரங்காயே. 6

மூத்தவனே! தில்லைப் பொன்னம்பலத்தே திருக்கூத்தினை ஆடுகின்ற எம்முடைய தந்தையே! உன்னுடைய அடியவரோ, என்னை உன்னிடம் அன்பற்றவன் என்று சொல்லிப் பரிகசிப்பர். பிறரோ, என்னை உன்னுடைய அடியவன் என்று சொல்லிப் புகழ்வர். யானோ, உன்னுடைய அருள் ஒன்றினையே விரும்பி நிற்பேன். ஒளியான ஒரு பொருளே! அடியவர் சூழ்ந்திருக்கும் உன்னுடைய திருவோலக்கக் காட்சியினை நான் கண்டுகளிக்கவும், உன்னுடைய தாமரைத் திருவடிகளை வணங்கவும் எம் தந்தையே! இனியேனும் என்மேல் கருணையினைக் காட்டுவாயாக!

384

இரங்கும் நமக்கம் பலக்கூத்தன்
என்றென் றேமாந் திருப்பேனை
அருங்கற் பனைகற் பித்தாண்டாய்
ஆள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கும் அடியார் களும்நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரஎங்கள்
வாழ்வே வாவென் றருளாயே. 7

எங்களின் வாழ்வாக விளங்குகின்ற பெருமானே! 'தில்லைப் பொன்னம்பலக் கூத்தன் நம்மிடம் இரக்கம் காட்டுவான்' என்று காத்திருந்து காத்திருந்து நான் ஏமாற்றமடைந்தேன். அவ்வாறு ஏமாற்றமடைந்த என்னிடத்தில், அரிதாகிய கற்பனைக் கூற்று ஒன்றைக் கற்பித்து, என்னை ஆண்டுகொண்டாய். இனிமேலும் யான், பாதுகாவலர் இல்லாத மாட்டினைப்போல் ஆவேனோ? உன்னை நெருங்கிய அடியவரும் நீயும் நின்று நிலைத்து, மகிழ்வுடன் விளையாடுகின்ற அந்தப் பக்கமாக, என்னையும் வாவென்று அழைத்துக் கொள்வாயாக!

385

அருளா தொழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளா மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல்
செத்தே போனாற் சிரியாரோ. 8

அடியேனையும் ஒரு பொருளாக எண்ணி, என்னுடைய உள்ளத்தில் புகுந்துகொண்டு, என்னை ஆண்டுகொண்ட பொன்னையொத்தவனே! தில்லைப் பொன்னம்பலத்தே நட்டம் பயில்கின்ற திருக்கூத்தனே! நீதான் எனக்கு அருள்புரியாமல் என்னைக் கைவிட்டுவிட்டாயானால், 'நீயும் அஞ்சாதே!' என்று சொல்லி, என்னைத் தேற்றக் கூடியவர் என்பவர், இவ்விடத்தில் எவருமிலர். உன்னை நானும் பிரிந்தமையால், மருண்ட மனத்தோடு அலைந்து திரிகின்றேன். அத்தகைய அடியேனை வா என்று சொல்லி, உன்னுடைய தெளிவடைந்த அடியவர் கூட்டத்தை எனக்குக் காட்டு. அவ்வாறு நீதான் காட்டவில்லையானால், நான் மடிந்தே போய்விடுவேன். அப்படி நிகழுமானால், உன்னைக் கண்டு ஏனையோரும் இகழ்ந்து நகையாட மாட்டாரோ?

386

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும்
தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே. 9

சிறந்தோனே! உன்னுடைய அடியார் உன்னை அடைந்தமையால், இன்புற்றுச் சிரிப்பார்; உள்ளம் உவகை கொள்வார்; மௌனம் காத்து வழிபாடு செய்வார்; ஒன்றுகூடி ஒன்றுகூடி உன்னுடைய திருவார்த்தைகள் நாவாரச் சொல்வார்; அவ்வாறு சொல்லப்படுவனவற்றைக் காதாரக் கேட்பார்; அவற்றைப் புகழ்ந்து பேசுவார்; தனித்தனியே இருந்தபடி, உன்னுடைய திருப்பெயரை உச்சரித்து மகிழ்வார்; 'தில்லைப் பொன்னம்பலத்தே திருநடனம் புரிகின்ற தலைவனே!' என்று விளித்து, உன்னைப் போற்றுவார். அத்தகையவர் முன்பாக நாயடியேனாகிய யான், நகைப்பிற்கிடமாகிவிடுவேனோ? அவ்வாறாயின், அதுவும் முறையாமோ? இனியேனும் அடியேனுக்கு அருள்செய்வாயாக!

11.15.

387

நல்கா தொழியான் நமக்கென்றுன்
நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா
வணங்கா மனத்தால் நினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம் பலமென்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கிரங்கி
அருளாய் என்னை உடையானே. 10

என்னை அடிமையாக உடையவனே! 'நமக்கு அருள் வழங்காமல் இருக்க மாட்டான்!' என்று உன்னுடைய திருப்பெயரைப் பிதற்றினேன்; கண்களினின்றும் நீர் பெருகிட உன்னை வாழ்த்தினேன்; வாயும் குழறிட உன்னை வணங்கினேன்; உள்ளத்தாலும் நினைந்து உருகினேன்; பலமுறைகளும் உன்னை எண்ணிப் போற்றினேன்; 'பொன்னம்பலம்!' என்றே சொல்லித் தளர்ந்து நின்றேன். எனவே, ஏழையேனின் உயிரைக் காக்கும்பொருட்டுக் கருணைகொண்டு அருள்புரிவாயாக!

திருச்சிற்றம்பலம்

22. கோயில் திருப்பதிகம்

(தில்லையில் அருளியது)

அனுபோக இலக்கணம்

(எழுசீர் விருத்தம்)

கோயில் + திரு + பதிகம் – கோயிற்றிருப்பதிகம். பதிகம் என்பது, முன்னரே கூறியது போலப் பத்துப் பாடல்களின் தொகுப்பு, கோயில் என்பது, சிறப்பாகத் தில்லைத் திருத்தலத்தையே குறிப்பதாகும். ஆயினும் இந்தப் பகுதியில், திருப்பெருந்துறைச் சிவபெருமானுடைய பெருமைகளே பேசப்படுவதால், இங்குக் கோயில் என்பதைத் திருப்பெருந்துறை என்று கொள்ளவேண்டும். அனுபோக இலக்கணம் என்பது, எல்லையற்ற பரம்பொருளின் ஈடிலாப் பேரின்பப் பேரருளில் மூழ்கித் திளைத்த பட்டறிவின் தன்மையினை விவரித்துக் காட்டுவது. இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அனைத்துப் பாடல்களும் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

388

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே. 1

தேனின் தெளிவினைப் போன்றவனே! சிவபெருமானே! திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் உறைகின்ற சிவபெருமானே! முடிவற்ற எல்லாப் பதவிகளையும் கடந்துவிட்ட பேரின்பமயமானவனே! என்னுடைய அன்பாக உள்ளவனே! என்னுடைய எண்ணத்திற்கு மாறாக நின்று, என்னை மயங்கச் செய்யும் வஞ்சக ஐம்புலன்களின் வழியினை அடைப்பவனே! தெள்ளிய அமுதமாய் ஊற்றெடுத்து நிற்பவனே! என்னுடைய உள்ளத்தினுள்ளே எழுந்து நிற்கின்ற மேலான சுடரொளியே! உன்னை உள்ளவாறு யானும் கண்டுகளிக்கக் கண்முன்னர் வந்தருள்வாயக!

389

அன்பினா லடியே னாவியோ டாக்கை
யானந்த மாய்க்கசிந் துருக
என்பர மல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே. 2

முன்னைப் பொருள்களுக்கும் முன்னைத் தோன்றியவனே!பின்னைத் தோன்றிய பொருள்கள் அனைத்திலும் இரண்டறக் கலந்து நிற்கும் இறைவனே! முடிவென்பதிலா முழுமுதலே! அழகிய திருப்பெருந்துறையில் உறைபவனே! சிவபெருமானே! சிறப்புமிக்க சிவபுரத்தின் மன்னவனே! அடியேன் உம்மிடம் கொண்ட அன்பின் காரணமாக, என்னுடைய உயிரும் உடலும் பேரானந்தப் பெருவெள்ளமாய் நைந்துருக, உனது இன்னருளை என்னிடம் வழங்கினாய். அதனைப் பெறுவதற்கு, அடியேன் சிறிதும் தகுதியிலாதேன் எனக்கண்டும், அதனை நீயும் எனக்கு வழங்கினாய். அதற்காக யான் உனக்குச் செய்யும் கைம்மாறு ஏதுமிலையே!

390

அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர்வு இறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே. 3

அன்பரென்பார் அனைவர்க்கும் மன்னவனே! அடியேனுடைய அப்பனே! உயிரோடு உடம்பிலும் ஊடுருவி நின்று, அவற்றை முறையே கனியச் செய்தவனே! பொய்ம்மை இருளினை விரட்டிய மெய்ம்மைச்சுடரே! அலைகள் புரள்கின்ற நிலைபெற்றதாகிய, அமுதமென்னும் தெள்ளிய கடலே! திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் விளங்குகின்ற சிவபெருமானே! உரையினையும் உணர்வினையும் கடந்து, உணரக்கூடிய உணர்வின் வடிவமே! நான் உன்னை எவ்வாறு புகழ்ந்துரைப்பது என்பதை எனக்கு உணர்த்துவாயாக!

391

உணர்ந்த மாமுனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள் தாமில்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே. 4

முற்றும் உணர்ந்த பெருமுனிவர், தேவர் மற்றும் ஏனையோர் ஆகியோரின் உணர்வுக்கும் எட்டாத அரும்பொருளே! ஒப்பிலாதவனே! உலக உயிரினங்களுக்கெல்லாம் உயிராக உள்ளவனே! எனது பிறவிப் பிணியைப் போக்கக்கூடிய என்னுடைய அரிய மருந்தே! செறிந்த இருளிலும் தெளிவாக விளங்கும் தூய வானமே! திருப்பெருந்துறை என்னும் திருத்தலத்தில் உறைகின்ற சிவபெருமானே! உனக்கெனத் தனிக்குணங்கள் இல்லாப் பேரின்பமே! உன்னை வந்தடைந்த அடியேனுக்கு, இனிமேல் எத்தகு குறையுமில்லை.

392

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின்பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே. 5

குறைவற்ற நிறைபொருளே! குற்றமற்ற அமுதமே! முடிவற்ற பேரொளிக் குன்றமே! மறைகளாகவும், மறைகளின் பொருள்களாகவும் வந்து, என்னுடைய உள்ளத்தில் நிலையாகத் தங்கிவிட்ட உயர்பொருளே! அணைகடந்த வெள்ளம்போல் என் நெஞ்சத்தில் பாய்கின்ற அருள்வெள்ளமே! திருப்பெருந்துறையில் வாழ்ந்து வரும் சிவபெருமானே! இறைவனே! நீ என்னுடைய உடலையே உறைவிடமாகக் கொண்டாய் இனிமேலும் உன்னிடம், யான் எதனை வேண்டப் போகின்றேன்? யாதொன்றும் இல்லை.

393.

இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே. 6

பெருமானே! உன்னை நினைந்து நினைந்து நெகிழவும், என்னுடைய உள்ளத்தின் உள்ளே வெளிப்படுகின்ற சுடரொளியே! வானவர்தம் திருமுடிகளின்மேல் அழகுடன் விளங்குகின்ற, செந்தாமரை போன்ற திருவடிகளை உடையவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! பரந்துபட்ட ஆகாயமாகவும், நீர், நிலம், நெருப்பு, காற்று ஆகியவையாகவும் தோன்றுபவனே! அவையுமல்லாமல் வேற்று வடிவத்திலும் காட்சி தருபவனே! மறைந்து விளங்குகின்ற அருவத்தோற்றம் உடையவனே! இந்நாள் நான் உன்னை, என்னிரு கண்களால் கண்டுகொண்டு களிப்படைந்தேனே!

394

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும் நீயல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே. 7

திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! இன்று எனக்கு அருள் புரிந்தாய். மேலெழுந்து வருகின்ற கதிரவனைப் போல், என்னுடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்த அறியாமை இருளைப் போக்கினாய். அவ்வாறு நிலைத்த உனது தன்மையினை நினைக்கவும் மறந்தேன். பின்னரோ நினைந்தேன். உன்னைத் தவிர வேறொரு பொருள்தான் இவ்வுலகில் இல்லை. ஒவ்வொரு பொருளிலும் அணுவணுவாய்ச் சென்று சென்று விளங்கினாய். அந்தப் பொருள்களினின்றும் விலகி, ஒரே பொருளாகவும் ஆனாய். உன்னையே ஒரு பொருளென்றும் கொள்ளவியலாது. நீயன்றி உலகில் எப்பொருளும் இல்லை. உன்னை முழுமையாக அறிபவர், உலகில் எவரே? எவருமில்லை.

395

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளார்
ஆனந்தம் ஆக்குமென் சோதீ. 8

நிலவுலகம், சொர்க்க உலகம், அண்டங்கள், மற்றுமுள்ள எல்லாமாய்த் தோன்றி, எல்லா இடங்களிலும் பரவிப் படர்ந்துள்ள ஒளிப்பரப்பே! நீரில் நிலவுகின்ற நெருப்பே! உள்ளத்தில் நினைப்பதற்கியலாத குற்றமற்றவனே! உன்னுடைய அருள்வெள்ளத்தால் அமையப்பெற்ற சிறப்புமிக்க நெஞ்சத்தில் ஊற்றெடுத்த நறுந்தேனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! பேரின்பத்தை உண்டாக்கும் பெருஞ்சுடரே! இவ்வுலகில், யார்தாம் எனக்கு உறவினர்? யார்தாம் அயலவராக உள்ளார்? எனக்கு எல்லாமே நீயே ஆனாய்.

396

சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மை திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே. 9

ஒளிவடிவாய்க் காட்சிதரும் வடிவத்தை உடையவனே! உருவமற்ற அருவ வடிவத்தை உடைய ஒப்பற்ற ஒருவனே! சொற்கொண்டு உரைக்கவியலாத முதலே! நடுவே! முடிவே! பந்த பாசத்தை அறுக்கின்ற பேரானந்தப் பெருங்கடலே! தீமை இல்லாத நன்மையினைத் தருகின்ற திருவருட்குன்றமே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! என்னையும் தேடிவந்து, உன்னுடைய் திருவடிகள் இரண்டினையும் எனக்குத் தந்தபின், என்னைவிட்டு நீயுந்தான் போகும்வகை என்னவென்று கூறுவாயாக!

397

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில்கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே. 10

சங்கரா! எம்பெருமானே! எம்முடைய தந்தையே! என்னிடத்தில் உன்னைக் கொடுத்துவிட்டாய்; உன்னிடத்தில் என்னை ஏற்றுக் கொண்டாய். இவ்வாறு கொடுத்தும் எடுத்தும் கொண்ட நம்மில், திறனுடையார் யாரோ? முடிவென்பது ஒன்றில்லாத பேரானந்தப் பெருவாழ்வு பெற்றேன். ஆனால், என்னை நீயும் ஏற்றுக் கொண்டதால், உனக்குக் கிடைத்ததுதான் என்னவோ? நெஞ்சத்தையே கோவிலாகக் கொண்டவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! மூத்தவனே! என்னுடலைத் தங்குமிடமாகக் கொண்டவனே! இதற்கென யான் செய்யும் கைம்மாறு யாதொன்றும் இல்லையே!

திருச்சிற்றம்பலம்

23. செத்திலாப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)
சிவானந்தம் அளவறுக்க ஒண்ணாமை

(எண்சீர் விருத்தம்)

செத்து + இலா + பத்து – செத்திலாப்பத்து. 'இன்னும் நான் சாகாமல் இருக்கின்றேனே!' என்று, மாணிக்கவாசகப் பெருந்தகை, உள்ளம் நைந்து பாடுகின்ற பத்துப் பாடல்களின் தொகுப்பு. உயிர் அழியாதது; உடல் அழியக் கூடியது. உடலில் உயிர் உள்ளபோதே உடல் அழிந்துவிட்டதாகக் கருதுபவர்க்கே, ஞானம் பிறக்கும் என்பது முறைமை. உயிரை முன்னிலைப்படுத்தி, உடலைப் பின்னிலைப்படுத்துவதே ஆன்ம சாதனை. சிவானந்தம் அளவறுக்க ஒண்ணாமை என்பது, திருப்பெருந்துறையில் சிவானந்த வெள்ளத்தில் மூழ்கிய மாணிக்கவாசகப் பெருந்தகை, அந்தப் பட்டறிவு அறுவறுத்துக் கூற முடியாதது என்று வியந்து கூறுவது. இந்தப் பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. முதல் ஒன்பது பாடல்கள், 'சிவனே!' என்று முடிவன; பத்தாவது பாடல், 'கடலே!' என்று முடிவது.

திருச்சிற்றம்பலம்

398

பொய்யனேன் அகம்நெகப் புகுந்தமு தூறும்
புதும லர்க்கழ லினையடி பிரிந்துங்
கையனேன் இன்னுஞ் செத்திலேன் அந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருட்பெருங் கடலே
அத்த னேஅயன் மாற்கறி யொண்ணாச்
செய்யமே னியனே செய்வகை அறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 1

தலைவனே! மன்னவனே! அருளாகிய பெருங்கடலே! அப்பனே! நான்முகன், திருமால் ஆகியோர்க்கும் உணரவியலாதவனே! செந்நிறத் திருமேனியினை உடையவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! அடியேனோ பொய்யன். ஆயினும், என்னுடைய உள்ளம் உருகுமாறு உட்புகுந்து, அமுதம் ஊறுகின்ற புத்தம்புதிய உன் தாமரைத் திருவடிகள் இரண்டினையும் நான் பிரிந்தபோதும், சிறியேன் இன்னும் சாகாமல் இருக்கின்றேனே! ஐயகோ! விழித்திருந்தபோதும், மனக்கருத்தினை இழந்துவிட்டேனே! இனிமேலும் நான் செய்யப் போகும் செயல்தான் யாதோ? ஏதும் அறியேனே!

399

புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
உண்டியாய் அண்ட வாணரும் பிறரும்
மற்று யாரும்நின் மலரடி காணா
மன்ன என்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றினாய் பதையேன் மனம்மிக உருகேன்
பரிகி லேன்பரி யாவுடல் தன்னைச்
செற்றிலேன் இன்னும் திரிதரு கின்றேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 2

திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! விண்ணுலகில் வாழ்கின்ற தேவரும், மற்றையோரும் உன் செந்தாமரைத் திருவடிகளைக் காண்பதற்கு, நீரையும் காற்றையுமே உணவாகக் கொண்டு, புற்றெனவும் மரமெனவும் விளங்கிநின்று, வற்றியுலர்ந்து கடுமையான தவத்தினைச் செய்தனர். ஆயினும், அவர் எவராலும் உன் திருவடிகளைக் காணவியலவில்லை. என்னுடைய அரசனே! ஒரேயொரு சொல்லினால், என்னையும் உன் அடியவர் குழாத்துள் சேர்த்துக் கொண்டாய். அப்படியிருந்தும், உன்பொருட்டு எனது நெஞ்சம் பதறவில்லையே! உள்ளமும் மிகவாக உருகவில்லையே! நினைந்து நினைந்து வருத்தமும் கொள்ளவில்லையே! பாரமாகச் சுமக்கவியலாத இந்த ஊனுடலை இன்னமும் நான் சுமந்து திரிகின்றேனே! அழித்துக் கொள்ளாமல் இருக்கின்றேனே!

400

புலைய னேனையும் பொருளென நினைந்துன்
அருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னால்நடந் தேன்விடைப் பாகா
சங்கரா எண்ணில் வானவர்க் கெல்லாம்
நிலைய னேஅலை நீர்விட முண்ட
நித்த னேஅடை யார்புர மெரித்த
சிலைய னேயெனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே! 3

திருபெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! இடபவாகனத்தை உடையவனே! சங்கரனே! எண்ணிலாத் தேவர்க்கெல்லாம் தலைவனாக விளங்குபவனே! அலைகடலினின்றும் தோன்றிய கொடுநஞ்சினை உண்ட போதும், அழியாமல் உள்ளவனே! பகைவர்தம் முப்புரங்களை எரித்தழித்த வில்லை உடையவனே! கீழ்மகனாகிய அடியேனையும் ஒரு பொருளாக எண்ணி, உன்னுடைய அருளினை வழங்கினாய். அதன் காரணமாக மிகவும் செருக் கடைந்து, தலைகால் புரியாமல் நடந்துகொண்டேன். இனியும் இருந்தென்ன என்னுடைய இறைவனே! நானும் செத்து மடியுமாறு நீயும் அருள் செய்வாயாக!

401

அன்ப ராகிமற் றருந்தவம் முயல்வார்
அயனும் மாலுமற் றழலுறு மெழுகாம்
என்ப ராய்நினை வார்எ னைப்பலர்
நிற்க இங்கெனை எற்றினுங் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்கும்என் சிந்தை
மரக்கண் என்செவி இரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 4

அழகிய திருப்பராய்த்துறை என்னும் திருத்தலத்தை உடையவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! சிவபுரத்திற்கு உரியவனே! நான்முகனும் திருமாலும் உன்மீது பேரன்பு கொண்டனர்; மற்றும் அருந்தவத்தினையும் செய்தனர்; மேலும், தணலில் இட்ட மெழுகினைப் போல் உள்ளம் உருகியும் உடல் மெலிந்தும் எலும்புருவாய் நின்றனர். அவரொத்த ஏனையோர் பலரும், உன்னைக் காண்பதற்காக அங்ஙனமே விளங்கினர். அவரையெல்லாம் நீ ஆண்டுகொள்ளாமல், என்னை மட்டும் எதன் பொருட்டு நீயும் ஆண்டுகொண்டாய்? என்னுடைய நெஞ்சமோ, வன்மை கொண்ட பராய் மரத்தினுடைய கணுவினைப் போல, வலியதாக உள்ளதே! என்னுடைய கண்களோ, மரத்தினைப் போன்றவையே! என்னுடைய செவிகளோ, இரும்பினும் வன்மையானவையாக இருக்கின்றனவே! யாது செய்வேன் இறைவனே!

402

ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பால்
ஐயனே என்றுன் அருள்வழி யிருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாத னேஉனைப் பிரிவுறா அருளைக்
காட்டித் தேவநின் கழலிணை காட்டிக்
காயமா யத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர்பி ரானே
திருப்பெருந் துறையுறை மேவிய சிவனே. 5

திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! பெருமைக்குரிய தேவர்தம் தலைவனே! நாட்டுத் தேவரெனும் வேதியராலும் நெருங்கமுடியாத அரும்பொருளே! எம்முடைய தலைவனே! என்னை அலைக்கழிக்கின்ற விண்ணுலகத் தேவர்க்கும் அடங்கிவிடாமல், உன்னிடத்தில் மட்டுமே அன்புகொள்வேன். 'தலைவனே!' என்று சொல்லி, உன்னுடைய அருள் வழியிலேயே நடைபயில்வேன். எனவே, அடியேன் உன்னை விட்டுப் பிரிந்துசெல்லாமல் இருக்குமாறு, ஈடிலாக் கருணையினையும், உன் திருவடிகள் இரண்டினையும் எனக்குக் காட்டுவாயாக! அந்நிலையால் யான் எனது மாயமாய உடலினை ஒழித்திட இன்னருள் செய்வாயாக!

403

அறுக்கி லேன்உடல் துணிபடத் தீப்புக்
கார்கி லேன்திரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேன்உடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
இறக்கி லேன்உனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேன்இது செய்கஎன் றருளாய்
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 6

வயல்களின் வரப்புகளுக்கிடையே நீர்தேங்கி இருக்கின்ற, வளப்பம் மிகுந்த திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! உன்னைப் 'போற்றி! போற்றி!' என்று புகழக்கூடிய அடியவர்க்குக் காளை வாகனத்தில் காட்சியளிப்பவனே! எனது உடலினைத் துண்டித்துக் கொள்ளவும் இல்லை; துடிக்கும் வகையில் தீயில் பாய்ந்து தங்கவும் இல்லை; இந்த உடலினைத் தாங்கியிருக்கவும் இயலவில்லை. உனது திருவருளின் திறத்தினையும் அறிந்துகொள்ள இயலவில்லை. வேறுள்ள போக்கிடமும் காணவில்லை. உன்பொருட்டுச் செத்து மடியவும் இல்லை. அதற்குரிய துணிவுமில்லை. இறைவனே! இனிமேலும் இன்பமுடன் இருப்பதற்கு நான் என்னதான் செய்யவேண்டும்? எனவே, என்பால் நீயும் கருணைகொண்டு, 'இதனை இவ்வாறு செய்!' என்று ஆணையிட்டு அருள்செய்வாயாக!

404

மாய னேமறி கடல்விடம் உண்ட
வான வாமணி கண்டத்தெம் அமுதே
நாயி னேன்உனை நினையவும் மாட்டேன்
நமச்சி வாயஎன் றுன்னடி பணியாப்
பேயன் ஆகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகிநின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 7

திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! சந்திரப்பிறையானது தங்கி மகிழ்கின்ற சடையினை உடைய சிவபெருமானே! மாயம் புரிவதில் வல்லவனே! அலைகள் புரள்கின்ற கடல்நஞ்சினை அருந்திய வானவனே! நீலநிறக் கண்டத்தை உடைய எம்முடைய அமுதமே! நாயினேனாகிய யான், உனதருமையை நினைக்கவும் மாட்டேன். 'நமச்சிவாயனே!' என்று சொல்லி, உன்னுடைய மலரடிகளை வணங்கவும் மாட்டேன், பேயனாகவே இருந்துவிட்டேன். ஆயினும், உன்னுடைய பெருமித நெறியினைக் காட்டி, என்னைத்தான் ஆண்டு கொள்வாயாக! இன்னுமே நான், உனக்குச் சேயனாக இருந்தபடி, அழுது புலம்பிக் கொண்டிருப்பதுதான் உனக்கு அழகாகுமோ?

405

போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிகள் நிற்கமற் றென்னைக்
கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள் கென்றுநின் தொண்டரிற் கூட்டாய்
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
அடிய னேன்இடர்ப் படுவதும் இனிதோ
சீத வார்புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 8

குளிர்ச்சி பொருந்திய நீர் நிரம்பியிருக்கின்ற வயல்கள் சூழ்ந்திருக்கும் திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! தாமரைப் பூவில் தங்கியிருக்கக் கூடிய நான்முகன், அலைகடலில் இருக்கக் கூடியவனாகிய திருமால், இந்திரன் முதலானோர் உன்னுடைய அருள்வேண்டிக் காத்துக் கிடக்கின்றனர். என்றாலும், உன்னுடைய் ஒலிக்கின்ற திருவடிகளை எனக்குக் காட்டி, என்னுடைய மனமாசுகளைப் போக்குவாயாக! மேலும், 'அந்தக் குறிக்கோளிலேயே நிலைத்து நிற்பாயாக!' என்று சொல்லி, உன்னுடைய அடியவர் கூட்டத்துடன் என்னையும் சேர்த்துக் கொள்வாயாக! உளப்பிணி போக்கும் உயர்மருந்தே! இந்நாள்வரை என்னதான் செய்வதென்றே தெரியாமல் இருந்துவிட்டேன். உன்னுடைய அடியவனாகிய அடியேன், இவ்வாறு துன்புற்றுக் கிடப்பது உனக்குத்தான் அழகாகுமோ?

406

ஞாலம் இந்திரன் நான்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
காலன் ஆர்உயிர் கொண்டபூங் கழலாய்
கங்கை யாய்அங்கி தங்கிய கையாய்
மாலும் ஓலமிட் டலறும்அம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே. 9

கயல்மீன்களும், குவளை மலர்களும் நிரம்பியுள்ள வயல்கள் சூழ்ந்துள்ள திருப்பெருந்துறையில் விளங்குகின்ற சிவபெருமானே! கூற்றுவனின் அரிய உயிரினையும் கவர்ந்துகொண்ட மெல்லிய திருவடிகளை உடையவனே! கங்கையாற்றினைச் சடைமுடியில் தாங்கியிருப்பவனே! நெருப்புத் தாங்கி யிருக்கும் கைகளை உடையவனே! மண்ணுலக மாந்தரும், இந்திரனும், நான் முகனும் ஏனைய தேவரும் ஏங்கி நிற்கையில், என்னை மட்டும் ஆண்டு கொண்டாய்! உன்னுடைய திருவடி மலர்களைக் காண்பதற்குத் திருமாலும், அழுது புலம்பி அலறியவாறுள்ளான். பார்வைப் புலனற்ற மரக்கண்களை உடைய அடியேனுக்கும், அந்தத் திருவடிப் பேறு கிடைக்குமாறு அருள்வாயாக!

407

அளித்து வந்தெனக் காவஎன் றருளி
அச்சந் தீர்த்தநின் அருட்பெருங் கடலுள்
திளைத்துந் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவன் அறியா
வான மாமலை மாதொரு பாகா
களிப்பெ லாம்மிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே. 10

திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! சங்கினை ஏந்திய கையினை உடைய திருமாலும் நான்முகனும் அறியவியலாத பெருமிதம் படைத்த தலைவனே! உமையம்மைக்கு மேனியின் ஒரு பாகம் அளித்தவனே! திருக்கயிலை மலையில் வீற்றிருக்கும் அருட்கடலே! முன்னை என்பால் வந்து, அருள் செய்தாய். எளியவன் என்று நினைந்து, என்பால் கருணையும் கொண்டு, என்னுடைய பிறவியெனும் பேரச்சத்தினையும் போக்கினாய். உன்னுடைய பேரருட் பெருங்கடலில் மூழ்கித் திளைத்தேன்; உள்ளம் உவகை கொண்டேன்; இன்னமுதம் பருகினேன். ஆயினும், உன்னை எண்ணியெண்ணி உருகாத நெஞ்சத்தைப் படைத்தவனாக இருந்துவிட்டேன். அதன் காரணமாக இந்நாள் வரை அடியேன் பெற்றிருந்த இன்பங்கள் அனைத்தும், துன்பங்களாகித் தவிக்கின்ற உள்ளத்தைப் பெற்றவனானேன். இறைவனே! ஏற்றதைச் செய்வாயாக!

திருச்சிற்றம்பலம்

24. அடைக்கலப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

பக்குவ நிண்ணயம்

வசனம்

(கலவைப் பாட்டு)

அடைக்கலம் + பத்து – அடைக்கலப்பத்து. மாணிக்கவாசகப் பெருந்தகை, தம்மைச் சிவபெருமானின் திருவடித் தாமரைகளுக்கு அடைக்கலப்படுத்திய வகையினைக் கூறுகின்ற பத்துப் பாடல்களின் தொகுப்பு. பக்குவ நிண்ணயம் என்பது, உயிரானது மன்மாசுகள் நீங்கப் பெற்று, இறைவனுடைய பேரின்பப் பேற்றினை அடைவதற்குரிய பரிபக்குவத்தைப் பெற்றுவிட்டது என்பதை உறுதிப்படுத்துவது. இப்பகுதியில் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியும், 'அடைக்கலமே!' என்று முடிவடைந்துள்ளன. ஒரே வகையான விருத்தப்பாவாக அமையாமல், வெவ்வேறு வகையான விருத்தப்பாக்களாக அமைந்துள்ளமையால், தனிவகை விருத்தமாகச் சுட்டப்படாமல், 'கலவைப் பாட்டு' என்று சுட்டப்பட்டது.

திருச்சிற்றம்பலம்

408

செழுக்கமலத் திரளனநின்
வெறுப்பன வேசெய்யும் என்சிறு
மைய்யைநின் பெருமையினால்
சேவடிசேர்ந் தமைந்த
பழுத்த மனத்தடியருடன்
போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப்
பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன்
உடையாய்உன் அடைக்கலமே. 1

என்னை அடிமையாக உடையவனே! உன்னுடைய திருவடிகள், செந்தாமரை மலர்களைப் போன்றன. பக்குவப்பட்ட மனங்களையுடைய அடியவர் அனைவரும், அந்தத் திருவடிகளைச் சேர்ந்து அமையப் பெற்றனர். அதனால் அவரெல்லாரும் உன்னுடன் வீடுபேற்றை அடைந்தனர். யானோ கொடும்பாவியேன். புழுக்கள் புரள்கின்ற இழிந்த உடலினையும், பொல்லாத கல்வியையும், அறிவில்லாத அழுக்கு மனத்தையும் பெற்றுள்ளேன். எவ்வாறாயினும், அடியேனும் உன்னுடைய அடைக்கலப் பொருளே! ஏற்றுக் கொள்வாயாக!

409

வெறுப்பன வேசெய்யும் என்சிறு
மையைநின் பெருமையினால்
பொறுப்பவ னேஅராப் பூண்பவ
னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு
ளால்என் பிறவியைவேர்
அறுப்பவ னேஉடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 2

என்னை உன்னுடைய அடிமையாக உடையவனே! நீ என்னை வெறுக்குமளவில் உள்ள செயல்களையே செய்துவரும் என் சிறுமையினை, உனது பெருந்தன்மையினால் பொறுத்துக் கொள்பவனே! பாம்பணிந்த பெருமானே! பொங்கி வருகின்ற கங்கையாற்றினை உனது சடைமுடியில் தாங்கியிருப்பவனே! உனது திருவருளால் எனது பிறவி என்னும் வேரினை அறுக்கக் கூடியவனே! நானும் உன் அடைக்கலப் பொருளே! ஏற்றருள் செய்வாயாக!

410

பெரும்பெரு மான்என் பிறவியை
வேரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெரு மான்சது ரப்பெரு
மான்என் மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோன்நெடு
மாலறி யாமல்நின்ற
அரும்பெரு மான்உடை யாய்அடி
யேன் உன் அடைக்கலமே. 3

என்னை உன்னுடைய அடிமையாக உடையவனே! மிகப் பெரிய தெய்வமே! எனது பிறவி வேரினை அறுத்துப் பெரும்பித்தினைத் தருகின்ற பெருமானே! அனைத்துச் சக்திகளையும் படைத்தவனே! எனது உள்ளத்தினுள்ளே குடியமர வருகின்ற பெருமானே! நான்முகனும் திருமாலும் அறியவியலாத வண்ணம் நின்ற அரிய பெருமானே! அடியேனாகிய நானும் உன் அடைக்கலப் பொருளே! ஏற்றருள்வாயாக!

411

பொழிகின்ற துன்பப் புயல்வெள்
ளத்தில்நின் கழற்புணைகொண்
டிழிகின்ற அன்பர்கள் ஏறினர்
வான்யான் இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக்
காமச் சுறவெறிய
அழிகின் றனன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 4

என்னை உடையவனே! பொழிகின்ற துன்பம் என்னும் புயலிலும் வெள்ளத்திலும், உன்னுடைய திருவடிகள் என்னும் புணையினைப் பற்றிக் கொண்ட அடியவரெல்லாம், வானுலகம் புகுந்தனர். நானோ, பெருந்துன்பப் பெருங்கடலில் சிக்கிக்கொண்டேன். மகளிராகிய அலைகள் என்னை அலைக்கழிக்கவும், காமமாகிய சுறாமீன் என்னைத் தாக்கவும் செய்கின்றன. அவற்றையெல்லாம் எதிர்கொள்ள முடியாமல், அழிந்து கொண்டுள்ளேன். அடியேனாகிய நானும் உன்னுடைய அடைக்கலப் பொருளே. இறைவனே! என்னை ஏற்றருள்வாயாக!

412

சுருள்புரி கூழையர் சூழலிற்
 பட்டுன் திறம்மறந்திங்
இருள்புரி யாக்கையி லேகிடந்
 தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன்
 பங்கவிண் ணோர்பெருமான்
அருள்புரி யாய்உடை யாய்அடி
 யேன்உன் அடைக்கலமே. 5

என்னை உனக்கு அடிமையாக உடையவனே! மைபூசிய அகன்ற கண்களையும், மருட்சியடைகின்ற மான்போன்ற பார்வையினையும் கொண்ட உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்டவனே! தேவர்தம் பெருமானே! சுருண்ட கூந்தலினை உடைய மகளிருக்கிடையே அகப்பட்டுக் கொண்டேன். உன்னுடைய பெருமிதப் பேராற்றலை மறந்துவிட்டேன். இவ்வுலகில், அறியாமைக்கு இடமாகிய அழியும் உடலின்மேல் ஆசை வைத்தேன். அதனால் மெலிவுற்றேன். இறைவா! நானும் உன்னுடைய அடைக்கலப் பொருளே! என்னை ஏற்றுக்கொள்ள அருள்வாயாக!

413

மாழைமைப் பாவிய கண்ணியர்
 வன்மத் திட்வுடைந்து
தாழியைப் பரவு தயிர்போல்
 தளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள்
 வணங்குவன் வல்வினையேன்
ஆழியப் பாவுடை யாய்அடி
 யேன்உன் அடைக்கலமே. 6

ஆழமும் அகலமும் உடைய கடலினைப் போல விளங்கும் என்னுடைய அப்பனே! என்னை அடிமையாக உடையவனே! மாவடுவினைப் பிளந்தன்ன கண்களையுடைய மகளிர், மத்தினை இட்டுக் கடைகின்றபோது, உடைந்தும் சிதறியும் தாழியில் பரவி ஒட்டிக் கொள்ளும் தயிரின் துளிகளைப் போல், இங்கு

நானும் மிகவாகத் தளர்ச்சியுற்றேன். கொடிய பாவச் செயல்களைச் செய்த நான், உன்னைத் தேடி எந்நாள் வருவேன்? உன்னுடைய மேலான மலரடிகளை எந்நாள் வணங்குவேன்? அடியேனாகிய நானும் உன்னுடைய அடைக்கலப் பொருளே! என்னையும் இறைவா! காத்தருள்வாய்.

414

மின்கணினார் நுடங்கும் இடையார்
வெகுளிவலையில் அகப்பட்டுப்
புன்கண னாய்ப்புரள் வேனைப்
புரளாமற் புகுந்தருளி
என்கணி லேஅமு தூறித்
தித்தித்தென் பிழைக்கிரங்கும்
அங்கண னேஉடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 7

என்னை உன்னுடைய ஆளாக உடையவனே! மின்னுகின்ற கண்களையும், அசைகின்ற இடையினையும் உடைய மகளிரின் சினம் என்னும் வலையில் சிக்கிக் கொண்டேன். அவ்வகையில் துன்பம் அடைந்தவனாய்த் துடிக்கின்றேன். அவ்வாறு துன்புற்றுப் புரளாமல் என்னுடைய உள்ளத்தில் புகுந்தருள்வாய். என்னிடத்தே அமுதமாக ஊறித் தித்திப்பைத் தருவாய். என்னுடைய தவறுகளைப் பொறுத்துக் கருணை காட்டுவாயாக! அழகிய கண்ணோட்டம் உடையவனே! அடியேனாகிய நானும் உன் அடைக்கலமே! ஏற்பாயாக!

415

மாவடு வகிரன்ன கண்ணி
பங்காநின் மலரடிக்கே
கூவிடு வாய்கும்பிக் கேயிடு
வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற்
கரந்து பரந்துள்ளம்
ஆகெடு வேன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 8

என்னை அடிமையாக உள்ளவனே! மாவடுவினைப் பிளந்தது போன்ற அழகிய கண்களை உடைய உமையம்மைக்குத் தனது மேனியின் ஒரு பாகத்தைக் கொடுத்தவனே! என்னை உன்னுடைய மலரடிகளை அடையுமாறு ஓங்கிக் குரல் கொடுப்பாயாக! அவ்வாறில்லையானால், கொடுநரகிலாவது அடியேனைத் தள்ளி விடுவாயாக! உன்னுடைய உள்ளத்தில் இருக்கின்ற குறிப்புத்தான் என்னவென்று யான் அறியமாட்டேன். தறியில் நெய்யும் பாவினிடையே ஊடாடுகின்ற குழலினைப் போல், எனது உள்ளம் உலகப்பொருள்களில் மூழ்கி மறைந்து கிடக்கின்றது. எனவே, யான் அழிந்து போனேன். உன்னுடைய அடிமையாகிய என்னையும் உன் அடைக்கலப் பொருளாகக் கொள்வாயாக!

416

பிறிவறி யாஅன்பர் நின்அருட்
பெய்கழல் தாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற்
றார்உன்னை வந்திப்பதோர்
நெறியறி-யேன்நின்னை யேஅறி
யேன்நின் னையேஅறியும்
அறிவறி யேன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 9

என்னை உடையவனே! உன்னுடைய அடியவர், உன்னை விட்டுப் பிரிதலை அறியாதவர். அவரெல்லாம் உன்னுடைய அருட்கழல் அணிந்த திருவடிகளை அடைந்தனர். தடையில்லாத செல்வமாகிய வீடுபேற்றினையும் பெற்றனர். ஆனால் நானோ, உன்னை வழிப்படுகின்ற நெறிமுறையினை அறியாதவன். அவ்வளவு ஏன்? உன்னையே நான் அறியேன். உன்னையே அறியக்கூடிய மெய்யறிவினையும் அறியேன். ஆனாலும், அடியவனாகிய நானும் உன்னுடைய அடைக்கலப் பொருளே! எனவே, என்னையும் காப்பாயாக!

417

வழங்குகின் றாய்க்குன் அருளார்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை
யேன்என் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர்
பருகத்தந் துய்யக் கொள்ளாய்
அழுங்குகின் றேன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 10

என்னை உடையவனே! நீயோ உன்னுடைய அருள்நிறைந்த அமுதத்தினை அளவின்றி வாரி வழங்குகின்றாய். அடியேனும் அதனை நிறைவாக வாரியெடுத்து உண்கின்றேன். நல்வினையின்றித் தீவினைப்பயன் காரணமாக, அவ்வாறு விழுங்கிய அமுதம், எனது தொண்டையில் சிக்குகின்றது. ஒலிக்கின்ற தேனொத்த நீரினை எனக்குத் தந்தால், தொண்டையில் சிக்குண்ட அமுதமானது உள்ளே சென்றுவிடும். ஆகவே, அத்தகு நீரை எனக்குத் தந்து, என்னை ஆண்டுகொள்வாய். பெருமானே! வருந்தும் உன் அடியேனாகிய நானும் உன் அடைக்கலமே! என்னையும் ஆட்கொள்வாயாக!

25. ஆசைப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)
ஆத்தும இலக்கணம்

(அறுசீர் விருத்தம்)

ஆசை + பத்து – ஆசைப் பத்து. இறைவனின் திருவருளின்மேல் தாம் வைத்துள்ள ஆசையினை நிறைவேற்றுமாறு, திருப்பெருந்துறையில் உறைகின்ற பெருமானிடம், மாணிக்கவாசகப் பெருந்தகை வேண்டுகின்ற பத்துப் பாடல்களின் தொகுப்பு. ஆத்தும இலக்கணம் என்பது, ஆன்மாவை உணர்வதற்குரிய இலக்கணம். ஆன்மாவானது, அருள்கனிந்து சிவபரம்பொருளைப் பொருந்தவேண்டும். அவ்வாறு பொருந்தாவிடில், சிவானந்தப்பேறு வாய்ப்பதில்லை என்று தெரிவிப்பதால், இஃது 'ஆத்தும இலக்கணம்' ஆயிற்று. 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்' என்பது மரபு. எனவே, 'சிவானந்தப் பேறு' என்பது முன்னர்த் தோன்றிய இலக்கிய மானால், 'ஆன்மா அருளோடு கலத்தல்' என்பது பின்னர்த் தோன்றிய இலக்கண மாகும். இப்பகுதியில் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியடியிலும், 'ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே!' என்று முடிந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

418

கருடக் கொடியோன் காண
மாட்டா கழற்சே வடியென்னும்
பொருளைத் தந்திங் கென்னை
யாண்ட பொல்லா மணியேயோ
இருளைத் துரந்திட் டிங்கே
வாவென் றங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே. 1

துளையிடப்படாத மாணிக்கமே! கருடக் கொடியினை உடைய திருமாலும் காணவியலாக் கழலணிந்த திருவடிகளாகிய அழிவற்ற செல்வத்தை எனக்களித்தாய்; என்னையும் ஆண்டுகொண்டாய். 'அறியாமையாகிய காரிருளிலிருந்து விடுபட்டு, நீ இங்கே வந்துவிடு!' என்று என்னை ஆங்கே வீட்டுலகத்திற்கு அழைக்கவேண்டும். அத்தகைய அருளைப் பெறவே அடியேன் ஆசைப்பட்டேன். அம்மானே! அதனை நீயும் அறிவாயாக!

419

மொய்ப்பால் நரம்பு கயிறாக
மூளை என்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்ககில்லேன்
கூவிக் கொள்ளாய் கோவேயோ
எப்பா லவர்க்கும் அப்பாலாம்
சிவனே என்னா ரமுதேயோ
அப்பா காண ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே. 2

என்னுடைய தலைவனே! எத்தன்மையர்க்கும் அப்பாற்பட்ட என் ஆரமுதே! என் அப்பனே! மொய்த்திருக்கும் நரம்புகளே கயிறாகவும், மூளை, எலும்பு, தோல் ஆகியவற்றைப் போர்த்தியுள்ள ஒரு சட்டையாகவும் விளங்கும் இந்த உடம்பைத் தாங்கியிருக்க இனியும் என்னால் இயலாது. எனவே, என்னை உன்னிடம் கூவி யழைத்துக் கொள்வாயாக! அம்மானே! உன்னைக் காண்பதற்கே ஆசைப்பட்டேன் என்பதையும் நீ அறிவாயாக!

420

சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு
திரியுஞ் சிறுகுடி லிதுசிதையக்
கூவாய் கோவே கூத்தா
காத்தாட் கொள்ளும் குருமணியே
தேவா தேவர்க் கரியானே
சிவனே சிறிதென் முகநோக்கி
ஆவா என்ன ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே. 3

என்னுடைய தலைவனே! தில்லைக் கூத்தனே! என்னைப் பாதுகாத்து ஆண்டுகொள்ளும் குருமணியே! தேவனே! தேவர்க்கும் அரியவனே! சிவ பெருமானே! சீழ்வடிந்து, ஈக்கள் மொய்த்து, அழுக்கொடு அலைகின்ற இந்த உடம்பு என்னும் சிறுகுடிலை இனிமேலும் அடியேன் சுமந்துகொண்டிருக்க இயலாது. எனவே, இந்த உடம்பானது அழியுமாறு அடியேனை உன்னிடம் குரலெடுத்துக் கூவி அழைத்துக் கொள்வாயாக! அம்மானே! என்னுடைய முகத்தினைச் சிறிதளவாவது நோக்கி, 'ஐயோ!' என்று கருணை காட்ட வேண்டும் என்று அடியேன் ஆசைப்பட்டேன் என்பதையும் அறிவாயாக!

421

மிடைந்தெலும் பூத்தை மிக்கழுக்
கூறல் வீறிலி நடைக்கூடம்
தொடர்ந்தென்னை நலியத் துயருறு
கின்றேன் சோத்தம்எம் பெருமானே
உடைந்து நைந்துருகி உள்ளொளி
நோக்கி உன்திரு மலர்ப்பாதம்
அடைந்து நின்றிடுவான் ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே. 4

எம்முடைய பெருமானே! எலும்புகளால் நெருங்கி இருக்கக்கூடியதும், அழுக்கு ஊறக்கூடியதும், பெருமையற்றதுமாகிய நடைக்கூடமாக விளங்குவது இந்த உடம்பு. அவ்வாறாகிய இது என்னைத் தொடர்ந்து துன்புறுத்துவதால், மனவேதனைப் படுகின்றேன். இதனைக் களையவேண்டி, உன்னை வணங்குகின்றேன். உள்ளம் உடைந்து, நெகிழ்ந்துருகி, உள்ளொளியினை நோக்கி உன்னுடைய திருமலரடிகளை அடைவதற்காக ஆசைப்பட்டேன். நீதான் அறிந்துகொள்வாயாக!

422

அளிபுண் ணகத்துப் புறந்தோல்
மூடி அடியே னுடையாக்கை
புளியம் பழமொத் திருந்தேன்
இருந்தும் விடையாய் பொடியாடீ
எளிவந் தென்னை ஆண்டு
கொண்ட என்னா ரமுதேயோ
அளியன் என்ன ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே. 5

வெள்ளேற்றை வாகனமாக உடையவனே! வெண்ணீற்றைப் பூசியவனே! என்னுடைய தெவிட்டாத தெள்ளமுதமே! என்னுடைய உடம்பின் உள்ளேயோ, சீழ் வடியும் புண்கள் உள்ளன; வெளியேயோ, தோல் மூடியுள்ளது. அடியேனோ புளியம்பழத்தை ஒத்தவனாக உள்ளேன். என்னையும் எளிமையுடன் வந்து ஆண்டுகொண்டனை! அம்மானே! நான் உன்னுடைய அருளினைப் பெறுவதற்கு, அருகதை உடையவன் என்று சொல்லிக் கொள்ள மிகவும் ஆசைப்பட்டேன். நீதான் அறிவாயாக!

423

எய்த்தேன் நாயேன் இனியிங்
கிருக்க கில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர்
அறியா மலர்ச்சே வடியானே
முத்தா உன்தன் முகவொளி
நோக்கி முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே. 6

விண்ணோரும் அறியவியலாச் செந்தாமரை மலரையொத்த திருவடிகளை உடையவனே! முத்திப் பேற்றினை வழங்குபவனே! என்னுடைய அப்பனே! இந்தப் புழுத்த உடம்பினைச் சுமக்கவியலாமல் நான் மிகவும் இளைத்துவிட்டேன். நாயினும் கடைப்பட்டேனாகிய அடியேன், இனிமேலும் இவ்வுலகில் இருக்க மாட்டேன். நீதானே என்னுடைய இந்த வாழ்க்கையை அமைத்து வைத்தாய். அவ்வாறு அமைத்து வைத்த நீயே அதனை எடுத்துக் கொள்வாயாக! அம்மானே! உன்னுடைய முகத்தில் தோன்றும் ஒளியினைக் காணவும், அந்த ஒளியினிடையில் தோன்றும் புன்முறுவலைக் காணவே நான் மிகவும் ஆசைப்பட்டேன் என்பதை நீதான் அறிந்துகொள்வாயாக!

424

பாரோர் விண்ணோர் பரவி
ஏத்தும் பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா உலகந்
தந்து வந்தாட் கொள்வோனே
பேரா யிரமும் பரவித்
திரிந்தெம் பெருமான் எனஏத்த
ஆரா அமுதே ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே. 7

மண்ணுலக மாந்தரும், விண்ணுலக வேந்தரும் பலவாறாகப் புகழ்ந்து போற்றும் மேலானவனே! மேலான சுடரொளியே! தெவிட்டாத தெள்ளமுதமே! மீளவும் பிறந்து வாராத உலகத்தை எனக்களித்து, என்னை ஆண்டுகொள்பவனே! என்னிடம் நோக்கி வருவாயாக! உனக்குரிய ஆயிரம் பெயர்களையும் சொல்லித் தொழவேண்டும். எல்லா இடங்களுக்கும் சென்று சென்று, 'எம்பெருமானே!' என்று சொல்லிச் சொல்லி உன்னைப் போற்றிப் புகழவேண்டும். அம்மானே! அதற்காகவே நான் மிகவும் ஆசைப்பட்டேன் என்பதை நீதான் அறிந்துகொள்வாயாக!

425

கையால் தொழுதுன் கழற்சே
வடிகள் கழுமத் தழுவிக்கொண்
டெய்யா தென்றன் தலைமேல்
வைத்தெம் பெருமான் பெருமானென்
றையா என்றன் வாயா
லரற்றி அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே. 8

திருவையாற்றில் கோயில் கொண்டுள்ள மன்னவனே! உன்னுடைய ஒளிகழல்கள் புனைந்த திருவடிகளை, யான் என்னுடைய கைகளால் வணங்கவேண்டும்; அவற்றைப் பொருந்தித் தழுவிக்கொள்ள வேண்டும்; என் தலையின்மேலும் வைத்துக்கொள்ள வேண்டும். 'எம்பெருமானே! பெருமானே!' என்றும், 'தலைவா!' என்றும் என்னுடைய வாயால் நாவும் சோருமாறு அரற்ற வேண்டும். நெருப்பில் விழுந்த மெழுகென எனது உள்ளம் உருகவேண்டும். அம்மானே! அதற்காகவே நான் மிகவும் ஆசைப்பட்டேன் என்பதை நீதான் அறிந்து கொள்வாயாக!

426

செடியா ராக்கைத் திறமற
வீசிச் சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு
கொண்டென் கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர
னேஉன் பழஅடி யார்கூட்டம்
அடியேன் காண ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே. 9

மிகவும் மேலானவனே! குற்றங்களே நிறைந்த இந்த உடலினை, நான் முற்றாக நீக்கவேண்டும். சீரார்ந்த சிவபுரத்தை அடையவேண்டும். அடைந்துமே, பெருஞ்சுடர்ப் பேருருக் கண்டு, என்னுடைய கண்கள் இரண்டும் களிப்படைய வேண்டும். உருவம் என்று ஒன்றுதான் இல்லாதவனே! உன்னுடைய பழைய அடியார் திருக்கூட்டத்தைக் கண்டு, அவரோடு ஒன்றிவிட வேண்டும். அம்மானே! அதற்காகவே நான் ஆசைப்பட்டேன் என்பதை நீதான் அறிந்துகொள்வாயாக!

427

வெஞ்சே லனைய கண்ணார்தம்
வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச்
சுடரே நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத்
தொருவா பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே. 10

செம்பஞ்சுக் குழம்பு தீட்டப்பட்ட திருவடிகளைக் கொண்ட உமையம்மையை, உன்னுடைய மேனியின் ஒரு பாகத்தில் உடைய ஒப்பற்றவனே! கெண்டை மீனொத்த கண்களையுடைய மகளிரின் சினமென்னும் வலையில் சிக்கிக் கொண்டேன். நாயினும் கடைப்பட்டேனாகிய நான், அதன் காரணமாகக் கெட்டொழிந்தேன். மெய்ஞ்ஞானச் சுடரொளியே! உன்னைத் தவிரவும் எனக்கு வேறொரு துணையை நான் காணவில்லை. ஒப்பற்றவனே! உன்னுடைய பவளத் திருவாய் மலர்ந்து, 'அஞ்சாதே!' என்று ஒரு சொல்லைச் சொல்லி, என்னை ஏற்றருள்வாயாக! அம்மானே! இதற்காகவே நான் ஆசைப்பட்டேன் என்பதை நீதான் அறிந்து கொள்வாயாக!

திருச்சிற்றம்பலம்

26. அதிசயப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)
முத்தி இலக்கணம்

(அறுசீர் விருத்தம்)

அதிசயம் + பத்து – அதிசயப் பத்து. அதிசயம் என்பதற்குப் புதுமை அல்லது வியப்பு என்பது பொருள். தமக்குத் திருவருளை வழங்கிய திருப்பெருந்துறைப் பெருமானின் புதுமைக் கோலத்தையும், வியப்புத் தன்மையினையும் குறித்து, மணிவாசகப் பெருந்தகை புதுமை நோக்கில் வியந்து பாடும் பத்துப் பாடல்களின் தொகுப்பு. முத்தி இலக்கணம் என்பது, வீடுபேற்றுக்குக் காட்டும் வழி; திருவடிப் பேற்றுக்கு வகுக்கும் நெறி. முன்னர்ச் சொன்னது போலவே, இப்பகுதி இலக்கணம் என்று சுட்டப்படுவதால், இலக்கியம் என்பது இதற்கு முன்னர்ச் சுட்டப்பட வேண்டும். இலக்கியம் – முன்னைப் பழைமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பேர்சொல்லும் பெற்றியதாகிய சிவபரம்பொருள். இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பத்துப் பாடல்களும், 'அதிசயம் கண்டோமே!' என்று முடிந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

428

வைப்புமா டென்றும் மாணிக்கத்
தொளியென்றும் மனத்திடை உருகாதே
செப்பு நேர்முலை மடவர
லியர்தங்கள் திறத்திடை நைவேனை
ஒப்பி லாதன உவமனி
லிறந்தன ஒண்மலர்த் திருப்பாதத்
தப்பன் ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டோமே. 1

ஈட்டிச் சேமித்து வைத்த பெருஞ்செல்வம் எனவும், மாணிக்கத்தினின்றும் வீசுகின்ற பேரொளி எனவும் அந்தச் சிவனை எண்ணி நைந்துருகாமல், செப்பினையொத்த கொங்கைகளை உடைய மகளிரின் அழகினில் நான் நலிவடைந்துவிட்டேன். அத்தகைய அடியேனை, நிகரற்றனவும், உவமை கடந்தனவுமாகிய ஒளிபொருந்திய அவனுடைய மலரடிகளைக் காட்டி, என்னை ஆண்டுகொண்டான். அப்பனாகிய அவன், தன்னுடைய அடியவரோடும் என்னைச் சேர்த்து வைத்தான். அத்தகு வியப்பினை அடியேன் கண்டுகொண்டேன்!

429

நீதி யாவன யாவையும்
நினைக்கிலேன் நினைப்பவ ரொடுங்கூடேன்
ஏத மேபிறந் திறந்துழல்
வேன்தனை என்னடி யானென்று
பாதி மாதொடுங் கூடிய
பரம்பரன் நிரந்தர மாய்நின்ற
ஆதி ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டோமே. 2

நீதி நெறிமுறைகள் என்று சொல்லத்தக்கனவாகிய எவற்றையும் நான் உள்ளத்தாலும் எண்ணவில்லை. அவற்றை எண்ணுபவரோடும் நான் சேரவில்லை. குற்றமெனவே பிறப்பதும் இறப்பதுமாய், இவ்வுலகில் உழன்று வருகின்றேன். அப்படியிருந்தும் உமையொரு பாகனாகிய மேலான பெருமான், என்றும் நிலைபெற்று விளங்கும் முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமான், 'இவன், என்னுடைய அடியவன்!' என்று சொல்லி, என்னையும் ஆண்டுகொண்டான். அம்மட்டோ! தம்முடைய அடியார் பலருள் என்னையும் ஒருவனாகச் சேர்த்துக் கொண்டான். அத்தகு வாய்ப்பினை அடியேன் கண்டுகொண்டேனே!

430

முன்னை என்னுடைய வல்வினை
போயிட முக்கண துடையெந்தை
தன்னை யாவரும் அறிவதற்
கரியவன் எளியவன் அடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடை
முடிதனில் இளமதி யதுவைத்த
அன்னை ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டோமே. 3

மூன்று கண்களை உடையவனாகிய எம்முடைய தந்தை, தன்னை எவர் ஒருவரும் அறிந்துகொள்ள இயலாதவாறு அரிதாக விளங்குபவன். ஆனால், தன்னுடைய அடியவர்க்கோ, அறிந்துகொள்ள இயலுமாறு எளிதாக விளங்குபவன். மிளிரும் பொன்னையும் வென்றதாகிய சடைமுடியைக் கொண்டவன். அந்தச் சடைமுடியில், இளம்பிறையினைச் சூடியிருப்பவன். அத்தகைய பெருமான், முன்னைய என்னுடைய தீவினைகள் அகலும் வண்ணம், என்னையும் ஆண்டுகொண்டான். அதுமட்டுமா? அவனுடைய அடியவர் பலருள் என்னையும் ஒருவனாகச் சேர்த்து வைத்தான். அத்தகைய வியப்பினை அடியேன் கண்டுகொண்டேனே!

431

பித்த னென்றெனை உலகவர்
  பகர்வதோர் காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருள்
  கூடிடும் உபாயம தறியாமே
செத்துப் போய்அரு நரகிடை
  வீழ்வதற் கொருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரிற்
  கூட்டிய அதிசயங் கண்டோமே. 4

மண்ணுலக மாந்தர் என்னைப் பித்தம் பிடித்தவன் என்றே சொல்வதற்குரிய காரணத்தை அடியேன் சொல்லக் கேட்பாயாக! சிவபெருமானோடு நெருக்கமாகப் பொருந்திச் சென்று, அவனுடைய திருவடிகளைப் பெறுகின்ற வழியதனை அறியாமல், இறந்துபட்டுக் கொடிய நரகத்தில் போய் வீழ்வதற்கு ஆசைப்படுகின்றேனைப் பித்தன் என்பது தவறா? அப்படிப்பட்ட அடியேனையும் அப்பனவன் ஆண்டுகொண்டான். அம்மட்டோ? அவனுடைய எண்ணிலா அடியவருள் ஒருவனாக என்னையும் சேர்த்துக் கொண்டான். அத்தகைய வியப்பினை அடியேன் கண்டுகொண்டேனே!

432

பரவு வாரவர் பாடுசென்
  றணைகிலேன் பன்மலர் பறித்தேத்தேன்
குரவு வார்குழ லார்திறத்
  தேநின்று குடிகெடு கின்றேனை
இரவு நின்றெரி யாடிய
  எம்மிறை எரிசடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டுதன் அடியரிற்
  கூட்டிய அதிசயங் கண்டோமே. 5

தென்னாடுடையானைத் தொழுது வணங்குகின்ற அடியவரோடு, நான் இணங்கிச் சென்று சேர்ந்தேனும் அல்லேன். பல்வகை நறுமலர்களைக் கொய்து சென்று, அவனைப் போற்றி வணங்கினேன் அல்லேன். குரவமலர்களைக் கூந்தலில் சூடிக்கொண்ட மகளிரையே நாடியும் தேடியும் சென்று, அவர்பால் நிலைத்து, நான் கெட்டழிந்தே போனேன். அப்படிப்பட்ட என்னையும், இரவில் நெருப்பிடை நின்றபடி ஆடியவனும், நெருப்பினையொத்த சிவந்த சடைமுடியினை உடையவனும், அந்தச் சடைமுடியில் மின்னுகின்ற பாம்பினை அணிந்தவனுமாகிய எம்முடைய சிவபெருமான், ஆண்டுகொண்டான். அதுமட்டுமா? அவனுடைய அளவற்ற அடியவருள் ஒருவனாக என்னையும் சேர்த்துக் கொண்டான். அத்தகைய வியப்பினை அடியேன் கண்டுகொண்டேனே!

433

எண்ணி லேன்திரு நாமவஞ்
செழுத்தும்என் ஏழைமை யதனாலே
நண்ணி லேன்கலை ஞானிகள்
தம்மொடு நல்வினை நயவாதே
மண்ணி லேபிறந் திறந்துமண்
ணாவதற் கொருப்படு கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டோமே. 6

என்னுடைய அறியாமையினாலே, அவனுக்குரிய திருப்பெயராகிய 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்தினையும் நான் நினைத்திலேன். ஆய கலைகளையும் கற்றறிந்த சான்றோரோடு நான் சேர்ந்தேனல்லேன். நற்செயல்களைச் செய்வதற்கும் நான் விரும்பினேனல்லேன். ஆனால், இந்த மண்ணகத்தில் பிறந்திடவும், இறந்திடவும், மண்ணாகப் போவதற்கும் விரும்புகின்றேன். அப்படிப்பட்ட என்னை, அண்ணலாகிய சிவபெருமான், வலிய ஆண்டுகொண்டான். அம்மட்டோ? தன்னுடைய அடியவருள் ஒருவனாக என்னையும் சேர்த்துக் கொண்டான். அத்தகைய புதுமையினை, அடியேன் கண்டுகொண்டேனே!

434

பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந்
துளுத்தசும் பொழுகிய பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின்
றிடர்க்கடற் சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணி மாணிக்க
வயிரத்த பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டோமே. 7

துவாரங்கள் நிறைந்த தசைச்சுவரால் உண்டானதும், புழுக்கள் நெளிந்துகொண்டு இருக்கக் கூடியதும், பொய்யாகிய மேற்கூரை வேயப்பட்டதுமாகிய இந்தப் பொய்யுடலை மெய்யென நினைத்திருந்தேன். துன்பக்கடலின் கடுஞ்சுழியில் சிக்கித் துன்புற்றேன். அத்தகைய அடியேனை, முத்துமணி, மாணிக்கம், வயிரம், பவளம் ஆகியவற்றின் முழுச்சுடரும் கலந்தது போல விளங்கும் எம்முடைய அப்பனாகிய எம்பெருமான், என்னை ஆண்டுகொண்டான். அதுமட்டுமா? என்னைத் தன்னுடைய அடியவர் கூட்டத்தில் ஒருவனாகவும் சேர்த்து வைத்தான். அத்தகைய புதுமையினை அடியேன் கண்டு கொண்டேனே!

435

நீக்கி முன்னெனைத் தன்னோடு
நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன
சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத்
துகளறுத் தெழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டோமே. 8

முன்னை என்னை அவன், தன்னைச் சேராதவாறு நீக்கினான். உடலாகிய குடிலில் என்னைப் புகவைத்தான். இம்மையில் என்னைத் தன்னுடைய திருக்கண்களால் நோக்கி, நுட்பமானதும் நொடியில் சொல்லவியலாததுமாகிய ஒரு சொல்லையும் கூறினான். நுகத்தடி இல்லாமல் நிலத்தினை உழுவதுபோல், என்னைத் தனது வடிவத்தால் தூக்கிவிட்டான். யான் முன்னர்ச் செய்த பொய்யானவை அனைத்தையும் போக்கினான். என்னுடைய குற்றங்களையும் நீக்கினான். அந்த எழுச்சி மிகுந்த சுடரொளியாகிய எம்பெருமான், என்னையும் அடிமையாக்கி ஆட்கொண்டான். அம்மட்டோ! தன்னுடைய அடியவரோடு என்னையும் ஒருவனாகச் சேர்த்துவிட்டான். அத்தகைய புதுமையினை அடியேன் கண்டுகொண்டேனே!

436

உற்ற ஆக்கையின் உறுபொருள்
நறுமலர் எழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப்
பரம்பொருள் அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயனது
நுகர்ந்திடும் பித்தர்சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டோமே. 9

கிடைக்கப்பெற்றுள்ள இந்த உடம்பினையே மேலான பொருளென்று கருதுவர் பலர். நல்ல மலரில் வீசுகின்ற மணத்தைப் போலப் பற்றிக் கொள்ளக் கூடிய ஒரு பொருளே பரம்பொருள். அந்தப் பொருளோ, நிலையில்லாதது. அதனை அவரெலாம் எண்ணிப் பாரார். வாய்க்கப் பெற்றவற்றையே வாழ்க்கையின் பயன்களெனச் சுவைத்துக் கொண்டிருப்பர். அத்தகைய பித்தர்தம் சொற்களின்மேல் தெளிவுகொள்ளாமல், என்னுடைய அப்பனாகிய சிவபெருமான் என்னை ஆண்டுகொண்டான். அத்துடன், என்னைத் தன்னுடைய அடியவர் குழாத்துள் ஒருவனாகவும் சேர்த்துவிட்டான். அத்தகைய புதுமையினை அடியேன் கண்டுகொண்டேனே!

437

இருள்தி ணிந்தெழுந் திட்டதோர்
வல்வினைச் சிறுகுடில் இதுஇத்தைப்
பொருளெ னக்களித் தருநர
கத்திடை விழப்புகு கின்றேனைத்
தெருளும் மும்மதில் நொடிவரை
இடிதரச் சினப்பதத் தொடுசெந்தீ
அருளும் மெய்ந்நெறி பொய்ந்நெறி
நீக்கிய அதிசயங் கண்டோமே. 10

கிடைக்கப்பெற்றுள்ள இந்த உடம்போ, அறியாமை என்னும் இருள் செறிந்ததும், தீவினைகளுக்குக் காரணமாய் அமைந்திருப்பதுமாகிய சிறுகுடில். இத்தன்மையதாகிய இந்த உடம்பையே, கிடைத்தற்கரிய அரும்பொருளென எண்ணிக் களித்துக் கொடுநரகில் விழுவதற்கே சென்று கொண்டுள்ளேன். அத்தகைய அடியேனை, நொடிப்பொழுதில் முப்புரங்களை எரித்தழித்த மெய்ப்பொருளாகிய சிவபெருமான், தன்னுடைய சினத்தின் அறிகுறியுடன் செந்தீயினையும் அருளிச்செய்து, என்னிடம் குடிகொண்டிருந்த பொய்ந்நெறிகளையும் போக்கி ஆண்டுகொண்டான். அதுமட்டும் இல்லாமல், தன்னுடைய அடியவர் கூட்டத்துள் என்னையும் ஓர் அடியவனாகச் சேர்த்துவிட்டான். அத்தகைய புதுமையினை, அடியேன் கண்டுகொண்டேனே!

திருச்சிற்றம்பலம்

27. புணர்ச்சிப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)
அத்துவித இலக்கணம்

(எழுசீர் விருத்தம்)

புணர்ச்சி + பத்து – புணர்ச்சிப் பத்து. புணர்தல் – சேர்தல்; புணர்ச்சி – சேர்க்கை. மாணிக்கவாசகப் பெருந்தகை, திருப்பெருந்துறை மேவிய சிவபெருமானிடம் சேர்க்கை கொள்ளும் பேரின்பப் பெருநிலையை விரும்பி வேண்டிப் பாடிய பத்துப் பாடல்களின் தொகுப்பு. அத்துவித இலக்கணம் என்பது, 'இரண்டல்ல ஒன்றே' என்று உணர்வது. துவைதம் – ஆண்டவன் வேறு, ஆன்மா வேறு என்னும் இரண்டு. அத்துவைதம் – ஆண்டவன் வேறு; ஆன்மா வேறு என்னும் இரண்டல்லாமல், இரண்டும் ஒன்றே என்பது. நிலைபேறுடைய ஆண்டவனும் ஆன்மாவும் இலக்கியங்கள் என்றால், அவை இரண்டும் ஒன்றே என்று உணர்வதற்குரிய இலக்கணமே அத்துவித இலக்கணம். இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. எல்லாப் பாடல்களும், 'என்பொல்லாமணியைப் புணர்ந்தே' என்று முடிந்துள்ளன.

438

சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை
வாளா தொழும்பு கந்து
கடைப்பட் டேனை ஆண்டு கொண்ட
கருணா லயனைக் கருமால்பிரமன்
தடைபட் டின்னுஞ் சார மாட்டாத்
தன்னைத் தந்தஎன் ஆரமுதைப்
புடைபட் டிருப்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 1

எந்தை பிரான், ஒளிவிடும் பொன்மலையைப் போன்றவன்; துளையிடப்படாத முத்தினை ஒத்தவன்; பயனற்ற என்னுடைய தொண்டினையும் மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டவன்; கடைப்பட்ட அடியேனையும் ஆண்டுகொண்ட அருளின் இருப்பிடமாய் விளங்குபவன். கரிய நிறத் திருமாலும், நான்முகனும் தன்னை வந்து சேர முடியாமல் தடைப்பட்டிருந்த போதும், எனக்கு மட்டும் திருக்காட்சி தந்த, என்னுடைய தெவிட்டாத தெள்ளமுதம் போன்றவன். துளையிடாத மாணிக்கத்தை நிகர்த்தவன். அத்தகையவனை அடியேனும் சேர்கின்ற நாளும் எந்த நாளோ?

439

ஆற்ற கில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்தைம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தை செய்து
சிவனெம் பெருமான் என்றேத்தி
ஊற்று மணல்போல் நெக்குநெக்கு
உள்ளே உருகி ஓலமிட்டுப்
போற்றி நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 2

மன்னவனே! இதற்குமேலும் அடியேனால் பொறுத்துக்கொள்ள இயலாது. இந்த மண்ணுலகில், ஐந்து புலன்களாகிய சகதியில் அழுந்திவிடாமல், உன்னையே நினைந்திருக்க வேண்டும், 'சிவபெருமானே! எம்முடைய பெருமானே!' என்று சொல்லிச் சொல்லி, உன்னைத் தொழுது வணங்கவேண்டும். ஊற்றுநீர் சுரக்கின்ற மணலைப் போன்று, என்னுடைய உள்ளமானது நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகவேண்டும். வாய்விட்டு அலறியவாறு உன்னை அழைக்க வேண்டும். எனது துளைபடாத மாணிக்கமே! உன்னைச் சேர்ந்து நின்று, போற்றிப் புகழும் நாளும் எந்த நாளோ?

440

நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை
ஆண்டு கொண்ட என்ஆ ரமுதை
அள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையா ரும்மலர் தூவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 3

நெடியோனாகிய திருமாலும், நான்முகனும் அச்சம் கொள்கின்ற அளவில், நெடிய நெருப்புச்சுடராக விளங்குபவன் எம்பெருமானாகிய சிவபெருமான். அவனைச் சிறிதளவும் விரும்பாதேன் ஆயினும், என்னை அவன் ஆண்டுகொண்டான். அத்தகைய என்னுடைய தெவிட்டாத தெள்ளமுதை, இனிக்கும் உள்ளத்தைப் படைத்த மெய்யடியாரின் முன்னர், மனம் விரும்புகின்ற அளவிற்கு, வாய்விட்டு நாத்தழும்பேற அலறவேண்டும். அத்துடன் அவனுடைய திருவடிகளில் மணம் நிரம்பிய மலர்களைப் பெய்து, என்றென்றும் பணி செய்து கிடப்பதென்பதும் எந்த நாளோ? என்னுடைய துளைபடாத மாணிக்கத்தைச் சேர்வதும் எந்த நாளோ?

441

அல்லிக் கமலத் தயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமு தைஅமு தின்சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 4

அகவிதழ்களை உடைய தாமரையில் இருப்பவனாகிய நான்முகன், நெடியமால், அவரல்லாதவராகிய மண்ணுலக மாந்தர், தேவர் தலைவனாகிய இந்திரன் ஆகியோரால் சொல்லித் தொழக்கூடிய பெயர்களை உடையவன் அவன். சொல்லையும் பொருளையும் கடந்த சுடர்ப்பிழம்பாக விளங்குபவன். அரிய நெல்லிக்கனியைப் போன்றவனை, தித்திக்கும் தேனைப் போன்றவனை, நல்லாவின் பால் போன்றவனை, நிறைவான அமுதத்தைப் போன்றவனை, துளைபடாத மாணிக்கத்தைப் போன்றவனை நானும் இறுக்கமாகப் பற்றிக் கொண்டு அவனிடம் சேர்கின்ற நாளும் எந்த நாளோ?

442

திகழத் திகழும் அடியும் முடியும்
காண்பான் கீழ்மேல் அயனும் மாலும்
அகழப் பறந்தும் காணமாட்டா
அம்மான் இம்மா நிலம்முழுதும்
நிகழப் பணிகொண் டென்னை ஆட்கொண்
டாவா, என்ற நீர்மையெல்லாம்
புகழப் பெறுவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 5

இத்தன்மையன, இவண்ணத்தன என்று அறிய முடியாமல் விளங்குகின்ற எம்பெருமானின் திருமுடியையும் திருவடிகளையும் தேடி நான்முகன் விண்ணை நோக்கியும், திருமால் மண்ணை நோக்கியும் முறையே வானத்தில் பறந்தும், மண்ணில் அகழ்ந்தும் சென்று அவரால் காண முடியவில்லை. ஆயினும், அந்த மண்ணுலகம் முழுமையும் தெரிந்துகொள்ளுமாறு, என்னை அடிமையாக்கி ஆண்டுகொண்டான். துளைபடாத மாணிக்கத்தைப் போல விளங்கும் அத்தகையவனின் தன்மைகளையெல்லாம் போற்றிப் புகழ்வதும், அவனைச் சேர்ந்து மகிழ்வதுவும் எந்த நாளோ?

443

பரிந்து வந்து பரமா னந்தம்
பண்டே அடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமா லுற்றேன் என்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
உரோமஞ் சிலிர்ப்ப உகந்தன்பாய்ப்
புரிந்து நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 6

'அவன் வலிய வந்து, முன்னமே அடியேனுக்குப் பேரின்பத்தை வழங்கினான். ஆனால், நானோ அன்னவனை விட்டு நீங்கினேன். இந்த மண்ணுலகில், அடையக் கூடாத துன்பத்தினை அடைந்தேன்' என்றெல்லாம் சொல்லிச் சொல்லிக் கண்களினின்றும் சொரிகின்ற நீர் சொரிந்துகொண்டே இருக்கவும், உள்ளம் நெகிழ்ந்து, மயிர்க்கால்கள் சிலிர்க்கவும், விரும்பும் அன்பு மலரவும் என்னுடைய துளைபடாத மாணிக்கமாகிய அந்தச் சிவபெருமானைச் சேர்ந்திட வேண்டும். அவனையடைந்து, போற்றி வணங்கி நிற்கும் நாளும் எந்த நாளோ?

444

நினையப் பிறருக் கரிய நெருப்பை
நீரைக் காலை நிலன்விசும்பைத்
தனையொப் பாரை யில்லாத் தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்தகண்டம்
கனையக் கண்ணீர் அருவி பாயக்
கையுங் கூப்பிக் கடிமலரால்
புனையப் பெறுவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 7

நெஞ்சில் நினைத்துப் பார்ப்பதற்கும் பிறர்க்குஅரிதாக விளங்குகின்ற நெருப்பாக உள்ளவனை, நீராக உள்ளவனை, காற்றாக உள்ளவனை, நிலமாக உள்ளவனை, விண்ணாக உள்ளவனை, தனக்கு நிகரானவர் எவருமே இல்லாத தனித்தன்மையனை நான் காணவேண்டும்; உள்ளம் களிப்படைய வேண்டும்; தழுதழுத்த தொண்டை, வறண்டு போகுமளவில் அவனைக் கூவி அழைக்க வேண்டும்; கண்ணீர் அருவியெனப் பாயவேண்டும்; இரண்டு கைகளையும் தலைக்குமேல் தூக்கிக் குவித்து வணங்கவேண்டும்; நறுமண மலர்களைக் கொண்டு, அவனை அழகுறச் செய்யவேண்டும். துளைபடாத என்னுடைய மாணிக்கத்தை, அடியேன் சென்று சேர்வதும் எந்த நாளோ?

445

நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்துமெழுந்தும்
நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்தும்நவிற்றிச்
செக்கர் போலும் திருமேனிதிகழ
நோக்கிச் சிலிர்சி லிர்த்துப்
புக்கு நிற்ப தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 8

என்னுடைய உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து, உருகி உருகி, நின்றும், இருந்தும், கிடந்தும், எழுந்தும், நகைத்தும், அழுதும், தொழுதும் வாழ்த்தியும் பலவிதங்களில் கூத்தாடியும் போற்றிப் பரவிட வேண்டும். செவ்வானம் போன்ற திருமேனி அழகுகண்டு மெய்சிலிர்க்க வேண்டும். என்னுடைய துளைபடாத மாணிக்கத்தைச் சென்று புகுந்து, நிலைபெறுவதும் எந்த நாளோ?

446

தாதாய் மூவே ழுலகி னுக்குந்
தாயே நாயேன் தனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போதும்
ஏதாம் மணியே என்றென் றேத்தி
இரவும் பகலும்எழி லார்பாதப்
போதாய்ந் தணைவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 9

'என் தந்தையே! மூவேழ் உலகங்கட்கும் தாயே! நாயடியேனை ஆண்டுகொண்ட பெரியோனே! எனது பிறவியெனும் பெருநோய்க்கு ஒப்பற்ற மருந்தே! எப்போதும் பேரின்பத்தைச் சிந்திக்கும் ஞானமாமணியே!' என்றெல்லாம் சொல்லிச் சொல்லிப் புகழ்ந்து, இரவும் பகலுமாய் அவனுடைய அழகொளிரும் திருவடி மலர்களைப் பற்றி நிற்கவேண்டும். என் துளைபடாத மாணிக்கமாகிய அவனைச் சேர்ந்தணைவதும் எந்த நாளோ?

447

காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதுங்
கண்ணார் விசும்பின்விண் ணோர்க்கெல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனையாண்ட
பார்ப்பா னேஎம் பரமா என்று
பாடிப் பாடிப் பணிந்துபாதப்
பூப்போ தணைவ தென்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

உலகப் பொருள்களைப் படைப்பவனே! அவற்றைக் காப்பவனே! படைத்துக் காப்பவற்றை அழிப்பவனே! அகன்றதொரு விண்ணுலகத்தில் உள்ள தேவர்க்கெல்லாம் மூத்தவனே! மூப்படையாத முதலாக நின்ற முதல்வனே! முன்னை என்னை ஆண்டு கொண்ட அறவோனே! என் மேலானவனே! என்றெல்லாம் மனமார நினைத்து, வாயாரப் பாடிப் பாடி அவனைப் பணிய வேண்டும்; அவனுடைய மலரடிகளில் நான் பொருந்த வேண்டும். துளைபடாத என் மாணிக்கத்தை நான் சேர்கின்ற நாளும் எந்த நாளோ?

திருச்சிற்றம்பலம்

28. வாழாப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)
முத்தி உபாயம்

(எழுசீர் விருத்தம்)

வாழா + பத்து – வாழாப்பத்து. வாழ் விரும்பாமையைப் பற்றிய பத்துப் பாடல்களின் தொகுப்பு. வாதவூரண்ணல், இவ்வுலகில் வாழ விரும்பாமையை வெளிப்படுத்துகிற பத்துப் பாடல்களே 'வாழாப்பத்து'. திருப்பெருந்துறைப் பெருமானிடம், 'என்னை நீ கூவிக் கொண்டருளே!' என்று உள்ளம் மிகநொந்து முறையிடுவது. முத்தி உபாயம் என்பது, உலகப் பற்றினை அறுக்கும் வழி. இரண்டாம் பாடல் தவிரப் பிற பாடல்கள், 'அருள் புரிவாயே!' என்று முடிவன. இரண்டாம் பாடல், 'கூவிக் கொண்டருளே!' என்று முடிவது. இப்பகுதியில் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

448

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 1

மண்ணுலகமாகவும், விண்ணுலகமாகவும் பரந்து விளங்குகின்ற எம்முடைய பரம்பொருளே! சிறப்புடன் திகழ்பவனே! சிவபுரத்து மன்னவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! அடியேன் உன்பால் வைத்துள்ள பற்றினைத் தவிர, வேறொரு பற்றும் இல்லாதேன் என்பதை நீயறிவாய். என்னை ஆட்கொண்டருளிய நீயே என்னிடத்தில் அருளோடு இல்லையானால், நான் யாரை நொந்து கொள்வேன்? யாரிடத்தில்தான் எடுத்துச் சொல்வேன்? கடல் சூழ்ந்த இந்த நிலவுலகில், இனிமேலும் நான் வாழ மாட்டேன் என்பதை நீயும் அறிவாய். எனவே, 'என்னிடம் வந்து விடுக!' என்று எனக்கு அருள்புரிவாயாக!

449

வம்பனேன் தன்னை ஆண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவும்
செம்பெரு மானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எம்பெரு மானே என்னையாள் வானே
என்னைநீ கூவிக்கொண் டருளே. 2

வம்பு செய்வேனாகிய அடியேனையும் ஆண்டுகொண்ட சிறந்த மாணிக்கமே! தேவரும் அறிய முடியாத ஒப்பற்றவனே! நான்முகனுக்கும் திருமாலுக்கும் அறிவிற்கும் எட்டாமல், உலகத்தை ஊடுருவிச் சென்ற செவ்விய பெருமானே! சிவபுரத்தின் மன்னவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! எம்பெருமானே! என்னை ஆள்பவனே! அடியேன் உன்பால் வைத்துள்ள பற்றினைத் த்விர, வேறொரு பற்றும் இல்லாதேன் என்பதை நீ அறிவாய். எனவே, என்னை நீ கூவியழைத்துக் கொண்டருள்வாயாக!

450

பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஊடுவ துன்னோ டுவப்பதும் உன்னை
உணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 3

நெடிய மாலும் பாடிப் புகழ்கின்ற உன்னுடைய திருவடிகளைத் தவிர, வேறெதன் மேலும் நான் பற்றிலேன் என்பதை நீயறிவாய். ஆகவே, என்னைத் தேடிவந்து வலிய ஆண்டுகொண்டாய். சிவபுரத்தின் மன்னவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! ஊடல் கொள்வதும் உன்னோடுதான்; உவகை கொள்வதும் உன்னோடுதான். எனது நிலைப்பாட்டினை உனக்கு உணர்த்தவும் செய்கிறேன். எனினும், எனக்கு உறுதிப்பொருள் கிடைக்கவில்லை. அதனால் வாடுகிறேன். இனிமேல் இங்கு வாழவும் விரும்பவில்லை என்பதை நீயறிவாய். 'என்னிடம் வந்துவிடுக!' என்று எனக்கு அருள்புரிவாயாக!

451

வல்லைவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எல்லைமூ வுலகும் உருவியன் றிருவர்
காணும்நாள் ஆதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 4

கொடுவாளேந்திய அரக்கரின் முப்புரங்களை எரித்தழித்தவனே!தில்லைத் திருநகரில் வாழ்கின்ற ஆடல்வல்லானே! சிவபுரத்தின் மன்னவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! நான்முகனும் திருமாலும் உன் திருமுடியையும் திருவடியையும் காண முயன்ற நாளில், முதலும் முடிவும் இல்லா நிலையில் அவர் காணாதவாறு வல்லமையுடன் வளர்ந்து ,நின்றவனே! இனியும் இவ்வுலகில் வாழ விரும்பேன் என்பதை நீயறிவாய். 'என்னிடம் வந்துவிடுக!' என்று எனக்கு அருள்புரிவாயாக!

452

பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 5

இன்னிசையொத்த மொழிகளைப் பேசும் உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனே! உன்னையல்லாமல் எனக்கு வேறொரு பற்றும் இல்லை என்பதை நீயறிவாய். அதனால் என்னை உறுதியுடன் ஆண்டுகொண்டாய். சிவபுரத்தின் மன்னவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! என்னுடைய எண்ணம், வாய், மூக்கு, செவி, கண் என்னும் இவற்றை உன்னிடம் வைத்துவிட்டேன். இவ்வுலகில் அடியேன் வாழ விரும்பவில்லை என்பதை நீயறிவாய். 'என்னிடம் வந்துவிடுக!' என்று எனக்கு அருள்புரிவாயாக!

453

பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 6

செம்பஞ்சுக்குழம்பு தடவிய மெல்லடிகளை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனே! எனக்கு நீயல்லாமல் வேறொரு பற்றும் இல்லாதேன் என்பதை நீயறிவாய். என்னை நல்ல முறையிலேயே ஆண்டுகொண்டாய். சிவபுரத்தின் மன்னவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! அன்று நீ வழங்கிய அருளினை, மயக்கத்தினால் மறந்துபோன வஞ்சகன் நான். அதனால் பயந்தும் போனேன். நாய் போன்ற அடியேன், இவ்வுலகில் இனியும் வாழ விரும்பவில்லை என்பதை நீயறிவாய். 'என்னிடம் வந்துவிடுக!' என்று எனக்கு அருள்புரிவாயாக!

454

பருதிவாழ் ஒளியாய் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 7

கதிரவனில் விளங்குகின்ற ஒளிபோன்றவனே! உன்னுடைய திருவடிகளே அல்லாமல், வேறொன்றிலும் பற்றிலேன் என்பதை நீயறிவாய். செல்வம் மிகுந்த சிவபுரத்தின் மன்னவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! உன்னுடைய திருவடிகளே அல்லாமல், வேறொன்றிலும் பற்றிலேன் என்பதை நீயறிவாய். செல்வம் மிகுந்த சிவபுரத்தின் மன்னவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! உன்னுடைய அருளினையே எதிர்பார்த்து, உள்ளம் கசிந்துருகி, உன்னுடன் இரண்டறக் கலந்து நான் வாழும் விதத்தை அறிந்து கொள்ளாத மயக்கத்தை உடையேன் ஆயினேன். உலகில் இனியும் வாழ விரும்பவில்லை என்பதை நீயறிவாய். எனவே, 'என்னிடம் வந்துவிடுக!' என்று எனக்கு அருள்புரிவாயாக!

455

பந்தணை விரலாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
அந்தமில் அமுதே அரும்பெரும் பொருளே
ஆரமு தேஅடி யேனை
வந்துய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 8

பந்தினை அணைத்துக் கொண்டிருக்கும் விரல்களை உடையவளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனே! சிவந்த நெருப்பினையொத்த மேனியினை உடையவனே! சிவபுரத்தின் மன்னவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! அழிவில்லாத அமுதமே! அரியவும் பெரியவுமான பொருளே! தெவிட்டாத அமுதமே! நீயல்லால் எனக்கு வேறொரு பற்றுமில்லை என்பதை நீயறிவாய். அன்றைய நாளில் என்னை வந்து ஆண்டுகொண்டாய். இனியும் நான் இவ்வுலகில் வாழ விரும்பவில்லை என்பதையும் நீயறிவாய். எனவே, 'என்னிடம் வந்துவிடுக!' என்று எனக்கு அருள்புரிவாயாக!

456

பாவநா சாஉன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 9

பாவத்தை அழிப்பவனே! தேவர்க்குத் தலைவனே! சிவபுரத்தின் மன்னவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! திருவடியையும் திருமுடியையும் தேடித் திருமாலும் நான்முகனும் முறையே பாதாளம் நோக்கியும் ஆகாயம் நோக்கியும் சென்றபோது, மூன்று உலகங்களிலும் பரவி ஒலித்த தணல்வடிவாய் நிமிர்ந்து நின்றவனே! யானையின் தோலை ஆடையாக உடுத்தியிருப்பவனே! உன் திருவடிகளே அல்லாமல் வேறெதன் மேலும் பற்றிலாதேன் என்பதை நீயறிவாய். இனியும் என்னால் இவ்வுலகில் வாழவியலாது என்பதையும் நீயறிவாய். ஆதலால், 'என்பால் வந்துவிடுக!' என்று எனக்கு அருள்புரிவாயாக!

457

பழுதில்தொல் புகழாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி அணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே. 10

பழுதில்லாத தொன்மைப் புகழை உடையவளாகிய உமையம்மையை ஒ(பாகமாக உடையவனே! செழுமையான சந்திரனைச் சடையில் அணிந்தவனே சிவபுரத்தின் மன்னவனே! திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே உன்மீது கொண்டிருக்கும் பற்றினைத் தவிர வேறெதன் மேலும் பற்றிலாதே என்பதை நீயறிவாய். அத்னால் பிறரைத் தொழுவனோ? துதிப்பனோ? எனக்(ஒப்பற்ற துணையெனவும் நினைவனோ? நீயே கூறுவாயாக! இளங்காளை வா னனே! இவ்வுலகில் இனியும் நான் வாழேன் என்பதையும் நீயறிவாய். 'என்பா வந்துவிடுக!' என்று என்னை அழைத்து அருள்புரிவாயாக!

திருச்சிற்றம்பலம்

29. அருட் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)
மகாமாயா சுத்தி

(எழுசீர் விருத்தம்)

அருள் + பத்து – அருட்பத்து. எல்லையற்ற பரம்பொருளின் ஏரார்ந்த திருவருளை விரும்பிப் போற்றிப் பாடிய பத்துப் பாடல்களின் தொகுப்பு. மகாமாயா சுத்தி என்பது, மாயையைச் சுத்தம் செய்தல். அதாவது, பரம்பொருளின் திருவருளை வேண்டுகையில், அதற்கு இடையூறாக உள்ள மாயையைத் தூய்மை செய்துகொள்ளல். இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பத்துப் பாடல்களுமே, 'அதெந்துவே என்றருளாயே!' என்று முடிந்துள்ளன. 'அதெந்துவே' என்பதைக் கன்னடமாகக் கொண்டால், 'அஞ்சற்க!' என்பது பொருளாகும்; அதனையே மலையாளமாகக் கொண்டால், 'அஃது எதற்கு?' அல்லது 'அஃது என்ன?' என்பது பொருளாகும்.

458

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தம்மே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே 1

சோதியே! சுடரே! ஒளிதரும் விளக்கே! சுருண்ட கூந்தலையும், பருத்த கொங்கைகளையும் உடைய உமையம்மைக்கு ஒரு பாகத்தைக் கொடுத்தவனே! உயர்ந்தோனே! பாலொத்த வெண்ணீற்றை அணிந்து கொண்டிருப்பவனே! தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகனும் திருமாலும் தேடியும் காணாத நீதிமானே! செல்வம் மிகுந்த திருப்பெருந்துறையில், மலர்மிகுந்த குருந்தமரத்தின் கீழே விளங்குகின்ற சிறந்த முதல்வனே! அடியேன் உன்னை அன்புகாட்டி அழைத்தால், 'அஞ்சற்க' என்று சொல்லி அல்லது 'அழைப்பது எதற்காக?' என்று கேட்டு, எனக்கு நீயும் அருள் செய்வாயாக!

459

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட் டலறி
உலகெலாந் தேடியும் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அருத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே 2

ஆடல் வல்லானே! குற்றமில்லாதவனே! திருநீற்றை அணிந்தவனே! நெற்றிக் கண்ணை உடையவனே! விண்ணுலகத் தேவரின் தலைவனே! ஒப்பிலாதவனே! வாய்விட்டு அலறியவாறே உன்னை உலகமெங்கும் தேடியும் காணவில்லை. திருந்திய பொய்கையினைக் கொண்ட திருப்பெருந்துறையில் செழுமையான, மலர்களைக்கொண்ட குருந்தமரத்தின் கீழே விளங்குகின்ற மெய்ப்பொருளே! அடியேன் உன்னை அன்புகாட்டி அழைத்தால், 'அஞ்சற்க!' என்று சொல்லி அல்லது 'அழைப்பது எதற்காக?' என்று கேட்டு, எனக்கு நீயும் அருள்செய்வாயாக!

460

எங்கள் நாயகனே என்னுயிர்த் தலைவா
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கள்நா யகனே தக்கநற் காமன்
தனதுடல் தழலெழ விழித்த
செங்கண்நா யகனே திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அங்கணா அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 3

எங்கள் முதல்வனே! என்னுயிர்த் தலைவனே! நறுமணச் சாந்துபூசிய கூந்தலையுடைய உமையம்மைக்கும் கங்கையன்னைக்கும் மணவாளனே! தகுந்த மன்மதனின் அழகிய உடம்பு எரியுண்ணுமாறு சினங்கொண்டு விழித்த சிவந்த கண்களை உடைய முதல்வனே! திருப்பெருந்துறையில், செழுமையான மலர்களைக் கொண்ட குருந்தமரத்தின் கீழே விளங்குகின்ற சிறப்புடன் அழகிய கண்ணோட்டத்தை உடையவனே! அடியேன் உன்னை அன்புகாட்டி அழைத்தால், 'அஞ்சற்க' என்று சொல்லி அல்லது 'அழைப்பது எதற்காக?' என்று கேட்டு, எனக்கு நீயும் அருள் செய்வாயாக!

461

கமலநான் முகனுங் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற் கரிய
விமலனே எமக்கு வெளிப்படாய் என்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அமலனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 4

தாமரைச் செல்வனாகிய நான்முகனும், கார்முகில் வண்ணக் கண்ணபிரானாகிய திருமாலும், முறையே திருமுடியையும் திருவடியையும் சென்றடைய முடியாத குற்றமற்றவனே! அவ்விருவரும், 'உன்னுடைய திருவுருவை வெளிப்படுத்தி எமக்குக் காட்டுவாயாக!' என்று கேட்டபோது, பரந்துபட்ட செந்தணல் உருவாக வெளிப்பட்டுக் காட்சியளித்த எம்முடைய தந்தையே! நான்மறைகளும் ஒலித்துக்கொண்டிருக்கும் திருப்பெருந்துறையில், செழுமையான மலர்களைக் கொண்ட குருந்தமரத்தின் கீழே விளங்குகின்ற குற்றமற்றவனே! அடியேன் உன்னை அன்பு காட்டி அழைத்தால், 'அஞ்சற்க' என்று சொல்லி அல்லது 'அழைப்பது எதற்காக?' என்று கேட்டு, எனக்கு நீயும் அருள் செய்வாயாக!

462

துடிகொள்நே ரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 5

உடுக்கையின்னையொத்த இடையினையும், சுருண்ட கூந்தலையும் உடைய உமையம்மையின் கொங்கைகளின் கண்கள் படிந்த சுவடுகள் இரண்டும், நீறுபூத்த நெருப்பில் இரண்டு புள்ளிகளைப் போல விளங்குகின்ற அழகிய மார்பினை உடையவனே! செடிகள் நிரம்பிய சோலைகள் சூழ்ந்திருக்கும் திருப்பெருந் துறையில், செழுமையான மலர்களைக் கொண்ட குருந்தமரத்தின் கீழே விளங்குகின்ற சிறப்புமிக்க கடவுளே! அடியேன் உன்னை அன்புகாட்டி அழைத்தால், 'அஞ்சற்க' என்று சொல்லி, அல்லது 'அழைப்பது எதற்காக?' என்று கேட்டு, எனக்கு நீயும் அருள் செய்வாயாக!

463

துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்து
ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தில்
உறுசுவை யளிக்கும் ஆரமுதே
செப்பமாம் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அப்பனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 6

எல்லாம் வல்லவனே! தூய்மையானவனே! வயிரத்திலிருந்து மிகுந்து எழுகின்ற ஒளியினை உடையவனே! உன்னை நினைப்பவருடைய மனங்களில் எல்லாம் மிகுந்த சுவையினைத் தரக்கூடிய தெவிட்டாத அமுதமே! சிறப்புடன் அமைப் பெற்ற மறைகள் சேர்ந்திருக்கும் திருப்பெருந்துறையில், செழுமையான மலர்களைக் கொண்ட குருந்தமரத்தின் கீழே விளங்குகின்ற என்னுடைய அப்பனே! அடியேன் உன்னை அன்புகாட்டி அழைத்தால், 'அஞ்சற்க' என்று சொல்லி அல்லது 'அழைப்பது எதற்காக?' என்று கேட்டு, எனக்கு நீயும் அருள் செய்வாயாக!

464

மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள்மூன் றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
ஐயனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே 7

மெய்ப்பொருள் ஆனவனே! கடவுளே! பகைவர்தம் முப்புரங்களையும் எரிப்பதற்கு மகாமேரு மலையினையே வில்லாக ஏந்திய கையினை உடையவனே! கூற்றுவனைக் காலால் இடறிய கொடுநெருப்புப் பிழம்பையொத்த செம்மேனிப் பெம்மானே! செல்வம் மலிந்த திருப்பெருந்துறையில், செழுமையான மலர்களைக் கொண்ட குருந்த மரத்தின்கீழே விளங்குகின்ற தலைவனே! அடியேன் உன்னை அன்புகாட்டி அழைத்தால், 'அஞ்சற்க' என்று சொல்லி அல்லது 'அழைப்பது எதற்காக?' என்று கேட்டு, எனக்கு நீயும் அருள் செய்வாயாக!

465

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 8

முத்தியைத் தருபவனே! முன்னைப் பழம்பொருளே! முக்கண்ணனே! பற்றறுத்த பரம்பொருளே! மொட்டு அவிழா மலர்களைக் கொய்துவந்து, பத்திப் பெருக்குடன் உன்னை நெஞ்சார நினைந்து வணங்குபவர்க்கு வீடுபேற்றினை வழங்கி அருள்செய்யும் சித்தனே! செல்வம் கொழிக்கும் திருப்பெருந்துறையில், செழுமையான மலர்களைக் கொண்ட குருந்தமரத்தின் கீழே விளங்குகின்ற என்னுடைய அப்பனே! அடியேன் உன்னை அன்புகாட்டி அழைத்தால், 'அஞ்சற்க' என்று சொல்லி அல்லது 'அழைப்பது எதற்காக?' என்று கேட்டு, எனக்கு நீயும் அருள் செய்வாயாக!

466

மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவங்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அருளனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே. 9

அறியாமை மய்க்கங்கொண்ட அடியேனின் மனத்தில், அந்த மயக்கம் நீங்குமாறு என்னை நோக்கியவனே! என்னுடைய அடுத்த பிறவியையும் இந்தப் பிறவியையும் அழித்த மெய்ப்பொருளே! தூய்மையானவனே! சீறுகின்ற பாம்பினையும், கங்கை நீரினையும் தாங்குகின்ற சடைமுடியினை உடையவனே! மனத்தெளிவை உண்டாக்கும் நான்கு மறைகளும் சேர்ந்துள்ள திருப்பெருந்துறையில், செழுமையான மலர்களைக் கொண்ட குருந்தமரத்தின் கீழே விளங்குகின்ற அருளுருவானவனே! அடியேன் உன்னை அன்புகாட்டி அழைத்தால், 'அஞ்சற்க' என்று சொல்லி அல்லது 'அழைப்பது எதற்காக?' என்று கேட்டு, எனக்கு நீயும் அருள் செய்வாயாக!

467

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
இருந்தவா றெண்ணி ஏசறா நினைந்திட்
டென்னுடை யெம்பிரான் என்றென்று
அருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்
அலைகடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
போதராய் என்றரு ளாயே. 10

செப்பமுடன் அமைந்த சோலைகள் சூழ்ந்திருக்கும் திருப்பெருந்துறையில், செழுமையான மலர்களைக் கொண்ட குருந்தமரத்தின் கீழே விளங்குகின்றவாறு எழுந்தருளியுள்ள எம்பெருமானே! உன்னை நெஞ்சார நினைந்து; இடைவிடாமல் எண்ணியெண்ணி, 'என்னுடையவன் எம்பிரான்!' என்று சொல்லிச் சொல்லி வணங்குகின்றேன். அருந்தவத்தவனே! உன்னை அவ்வாறு நினைந்தபடியே அன்பு காட்டி அழைத்தால், 'பிறவிப் பெருங்கடலை விட்டு நீங்கி, என்னுடன் கலக்க வந்துவிடு! கயிலைக்குச் சென்று சேரும் வழியும் இதுதான்! இங்கே வருவாயாக!' என்று, எனக்கு நீயும் அருள்செய்வாயாக!

திருச்சிற்றம்பலம்

30. திருக்கழுக்குன்றப் பதிகம்

(திருக்கழுக்குன்றத்தில் அருளியது)

சற்குரு தரிசனம்

(எழுசீர் விருத்தம்)

திரு + கழு + குன்றம் + பதிகம் - திருக்கழுக்குன்றப் பதிகம். திருக்கழுக்குன்றத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள, மறைகளின் நாயகனாக விளங்கும் எம்பெருமான் மீது பாடப்பெற்ற பதிகம் என்பது பொருள். பதிகம் என்பதற்குப் பத்துப் பாடல்கள் என்பதே பொதுப் பொருள். தேவாரப் பதிகங்களில் ஒன்றிரண்டு பாடல்கள் கூடுதலாக இருப்பனபோல், இந்தப் பதிகத்தில் மூன்று பாடல்கள் குறைவாக உள்ளன. அவை கிடைக்காமற் போயினவா, புனையப்படவே இல்லையா என்பன பற்றித் தெரியவில்லை. குரு தரிசனம் என்பது, திருப்பெருந் துறையில் எம்பெருமானைக் குருவாகக் கண்டுகளித்த மாணிக்கவாசகப் பெருந்தகை, திருக்கழுக்குன்றத்திலும் குருவாகக் கண்டுகளித்து வியந்து போற்றுவது. இப்பகுதியில், ஏழு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பாடல்கள் அனைத்துமே 'காட்டினாய் கழுக்குன்றிலே!' என்று முடிந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

468

பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மான்உன் நாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோர் இன்ப மேவருந்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 1

எத்தகைய மாறுபாடும் இல்லாத திருப்பெருந்துறையில் உறைகின்ற பெருமானே! உன்னுடைய திருப்பெயர்களைப் போற்றிப் புகழ்ந்து பேசுபவர்க்கு, இணையில்லாத இன்பமே உண்டாகும்; துன்பத்தைத் துடைப்பாய். எம்பிரானே! வாட்டமில்லாததொரு பிறவி விதை, மீண்டும் என்னைத் தொடராதபடி தடுத்தாய். என்னுடைய இருவகை வினைகளையும் ஒழித்தாய். திருக்கழுக்குன்றத் திருத்தலத்திலே, எண்ணிலாத் திருக்கோலங்களை நீ வந்து எனக்குக் காட்டியருளினாய்! உன் பெருமிதமும் என்னே!

469

பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சுழக்க னேன்உனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையும் ஆட்கொள் வான்வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 2

மதுரை வைகைக்கரையில் பிட்டுக்காக மண் சுமந்த, திருப்பெருந்துறையில் உறைகின்ற பெரும்பித்தனே! உன்னுடைய கட்டளையினை ஏற்றபடி ஒழுகாத அறிவிலியாகிய யான், உன்னை வந்து சார்ந்தேனல்லேன். சீலனே! சிவபுரத்தனே! சிறிய நாயினுங் கடைப்பட்டேனாகிய யான், மிகவும் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கின்றேன். அப்படிப்பட்ட அடியேனையும் ஆண்டுகொள்வதற்காகத் திருக்கழுக்குன்றத் திருத்தலத்திலே, நீ வந்து உனது திருக்கோலத்தை எனக்குக் காட்டியருளினாய்! என்னே உனது பெருமிதம்!

470

மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றி
மலங்கெ டுத்தபெ ருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி
மேல்வி ளைவத றிந்திலேன்
இலங்கு கின்ற நின்சே வடிகள்
இரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 3

நான் பிறவிப் பெருங்கடலில் சிக்குண்டு தவித்தேன். எனது துன்பக் கண்ணீரைத் துடைத்ததோடு, என்னிடம் இருந்த பாசப்பற்றுகளையும் அறுத்தெறிந்த திருப்பெருந்துறையினின்றும் அடியேன் நீங்கினேன். மிகவும் பாவியானேன். இனிமேல் நடக்கப் போகும் எதையுமே அறிந்திலேன். விளங்குகின்ற உன்னுடைய பொன்னார் திருவடிகள் இரண்டினையும், வைப்பதற்குரிய இடமொன்று இல்லாமலேயே உள்ளம் கலங்குகிறேன். எம்பெருமானே! நீயோ எவ்விதக் கலக்கமும் இல்லாமலே திருக்கழுக்குன்றத் திருத்தலத்திலே வந்து, உனது திருக்கோலத்தை எனக்குக் காட்டியருளினாய். உனது பெருமிதந்தான் என்னே!

471

பூணொ ணாததோ ரன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாணொ ணாததோர் நாணம் எய்தி
நடுக்கட லுள்அ ழுந்திநான்
பேணொ ணாதபெ ருந்து றைப்பெருந்
தோணி பற்றி யுகைத்தலும்
காணொ ணாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 4

பிறரால் காட்டவியலாத பேரன்பினைக் காட்டி, உன்னுடைய அடியவர் உன்னைப் பலவாறு நாள்தோறும் போற்றிப் புகழ்ந்து வந்தனர். ஆனால் நானோ, தயங்கக் கூடாத அளவினையும் கடந்தவனாய்த் தயக்கமடைந்து, உன்னை அவ்வாறு போற்றிப் புகழாமல் பிறவிப் பெருங்கடலுள் மூழ்கி, மிகவும் துன்புற்றேன். அப்போது, அந்தப் பிறவிப் பெருங்கடலினின்றும் நீந்திக் கரைசேருமாறு, கிடைத்தற்கரிய திருப்பெருந்துறைத் தோணியாகிய உன்னைப் பற்றிக் கொண்டேன். நீயும் மனங்கொண்டு, யாவரும் காணவியலாத உன்னுடைய திருக்கோலத்தைத் திருக்கழுக்குன்றத் திருத்தலத்திலே எழுந்தருளிவந்து, எனக்குக் காட்டியருளினாய்! உன்னுடைய பெருமிதமும் என்னே!

472

கோல மேனிவ ராக மேகுண
மாம்பெ ருந்துறைக் கொண்டலே
சீல மேதும் அறிந்தி லாதஎன்
சிந்தை வைத்த சிகாமணி
ஞால மேகரி யான நானுனை
நச்சி நச்சிட வந்திடும்
கால மேஉனை ஓதநீ வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 5

அழகிய திருமேனியினைக் கொண்டவனே! நல்லவற்றையே குணங்களாகக் கொண்ட திருப்பெருந்துறையில் உறைகின்ற மழைமேகமே! நல்ல ஒழுகலாறு எதனையுமே அறிந்தில்லாத என் உள்ளத்தில் குடிபுகுந்த சிகாமணியே! நான் உன்னை வெகுவாக விரும்பியதற்கு, இந்த உலகமே தக்க சான்றாகும். தொடர்ந்து வருகின்ற காலங்களை வகுத்துக் காலதத்துவமாக விளங்குகின்ற பெருமானே! உன்னை நெஞ்சார நினைந்து, வாயாரப் போற்றிப் புகழ்ந்து பாட, நீயும் திருக்கழுக்குன்றத் திருத்தலத்திலே எழுந்தருளி வந்து, எனக்குக் காட்சி தந்தாய்! என்னே உனது பெருமிதம்!

473

பேதம் இல்ல தோர்கற் பளித்த
பெருந் துறைப்பெரு வெள்ளமே
ஏத மேபல பேச நீஎனை
ஏதி லார்முனம் என்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமை யற்ற
தனிச்ச ரண்சர ணாமெனக்
காத லால்உனை ஓத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 6

வேறுபாடு இல்லாத ஒப்பற்ற கல்வியறிவினை அளித்த, திருப்பெருந் துறையில் விளங்குகின்ற அருட்பெரு வெள்ளமே! அயலவர், முன்னர் என்னைப் பற்றிக் குற்றங்கூறிப் பேச, நீ என்னை என்னதான் செய்தாய்? 'மடிதல்' என்னும் தீமையற்றவையாகிய உன்னுடைய திருவடிகளே என்னுடைய அடைக்கலம். அவ்வாறே மிக்க காதலால் உன்னைப் புகழ்ந்து பாடவும், திருக்கழுக்குன்றத்திலே, நீ வந்து உன்னுடைய திருக்கோலத்தைக் காட்டியருளினாய். என்னே உனது பெருமிதம்!

474

இயக்கி மாரறு பத்து நால்வரை
எண்குணம் செய்த ஈசனே
மயக்க மாயதோர் மும்ம லப்பழ
வல்வி னைக்குள் அழுந்தவும்
துயக்க றுத்தெனை ஆண்டு கொண்டுநின்
தூய்மலர்க் கழல் தந்தெனைக்
கயக்க வைத்தடி யார்மு னேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 7

இயக்கிமாராகிய மகளிர் அறுபத்துநால்வரையும், உன்னுடைய எண்குணத்தால் உன்வயம் செய்துகொண்ட முன்னவனே! அறியாமை மயக்கத்தால் உண்டாகும் மும்மலங்களின் தொடர்புடைய பழைய கொடுவினைக்குள், என்னை மூழ்கவிடாமல் இருக்கச் செய்து, என்னுடைய சோர்வினைப் போக்கி, என்னை ஆண்டுகொண்டாய். உன்னுடைய தூய்மையான தாமரைத் திருவடிகளைக் காட்டினாய். பின்னர் உன்னையும் விட்டுப் பிரிந்தமையால், வாட்டமுறவும் செய்தாய். திருக்கழுக்குன்றத் திருத்தலத்திலே, அடியவர் முன்பாக வந்து, உன்னுடைய திருக்கோலத்தையும் அடியேனுக்குக் காட்டியருளினாய். எம்பெருமானே! என்னே உனது பெருமிதம்!

திருச்சிற்றம்பலம்

31. கண்ட பத்து

(தில்லையில் அருளியது)
நிருத்த தரிசனம்

(தரவு கொச்சகக் கலிப்பா)

கண்ட + பத்து – கண்டபத்து. தில்லைப் பொன்னம்பலத்தில், திருநடனம் செய்தருளிய ஆடல்வல்லான், மாணிக்கவாசகப் பெருந்தகைக்குக் குருமணியாகக் காட்சி தந்து, அருள் புரிந்தான். அந்தக் காட்சியினைக் கண்ணாரக் கண்ட வாதவூரண்ணல், பேரின்பக் கண்ணீரைச் சொரிந்தபடி பாடிய பத்துப் பாடல்களின் தொகுப்பு. நிருத்தம் – நடனம்; தரிசனம் – காட்சி. எனவே, 'நிருத்த தரிசனம்' என்பது, எம்பெருமான் தில்லையம்பலத்தில் ஆடிய ஆனந்தக் கூத்தினைக் கண்டு, மணிவாசகர் ஆனந்தம் அடைந்தார். ஒவ்வொரு பாடலின் இறுதியும் 'கண்டேனே!' என்று முடிவன.

திருச்சிற்றம்பலம்

475

இந்திரிய வயமயங்கி
இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய்
அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம்
அணிகொள்தில்லை கண்டேனே. 1

ஐம்புலன்களின் வயப்பட்டு, மனமும் மயங்கி, செத்து மடிவதற்கே காரணமாய் இருந்து, அறியாமை இருளில் அலைந்து திரிந்தேன். கொடிய நரகத்திலும் வீழ்வதற்கு இருந்தேன். அப்படிப்பட்ட அடியேனுக்கு, அன்புகொண்டு சிந்தனையைத் தெளிவடையச் செய்தான். அத்துடன், சிவமாக்கியும் என்னை ஆண்டுகொண்டான். அவ்வாறு ஆண்டுகொண்ட அவனுடைய முடிவற்ற பேரானந்தப் பேருருவை, அழகுமிக்க தில்லையம்பலத்திலே திகழக் கண்டேன் நானே!

476

வினைப்பிறவி என்கின்ற
வேதனையால் அகப்பட்டுப்
தனைச்சிறிதும் நினையாதே
தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென்
பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை
அம்பலத்தே கண்டேனே. 2

தொடர்ந்து வருகின்ற, வினைப்பயனின் காரணமாக விளைகின்ற, பிறவி என்னும் பெருந்துயரில் சிக்கிக் கொண்டேன். அந்தப் பரம்பொருளைப் பற்றி ஒரு சிறிதும் நினையாமல், மிகவும் வாட்டமுற்றுக் கிடந்தேன். அப்படிக் கிடந்த அடியேனை, மிகப்பெரிய அளவில் அன்புகொண்டு ஆண்டுகொண்டான். என்னுடைய பிறப்பை நீக்கிய ஒப்பிலாதவனை, அனைத்து உலகங்களும் போற்றித் தொழுகின்ற தில்லையம்பலத்திலே திகழக் கண்டேன் நானே!

477

உருத்தெறியாக் காலத்தே
உள்புகுந்தென் உளமன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன்
அணிகொள்தில்லை கண்டேனே. 3

அவனுடைய உருவத்தை என்னால் தெரிந்துகொள்ள முடியாத காலத்திலேயே, என்னுடைய உள்ளத்தில் வந்துபுகுந்து, குடியேறியதோடு அங்கேயே நிலைபெற்றும் விட்டான். என்னுடைய பிறவியைத் திருத்தியதோடு, எனது உடலிலும் புகுந்துகொண்டு, எல்லையற்ற கருணைத்திறத்தினால், என்னை ஆண்டுகொள்ளவும் செய்தான். திருத்துருத்தி என்னும் திருத்தலத்தில் விளங்குபவனை, அவனுடைய இனிய திருவடிகளை நாயடியேன், அழகுமிக்க தில்லையம்பலத்திலே கண்டு கொண்டேனே!

478

கல்லாத புல்லறிவிற்
கடைப்பட்ட நாயேனை
வல்லாள னாய்வந்து
வனப்பெய்தி இருக்கும்வண்ணம்
பல்லோரும் காணஎன்றன்
பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சுதில்லை
அம்பலத்தே கண்டேனே. 4

ஒரு சிறிதும் கல்லாததனால் உண்டாகிய அறியாமையின் காரணமாகக் கடைப்பட்டேனாகிய நாயடியேனை, கல்விக்கும் மேலான அறிவுத் திறனாளனாகவும், அருளைப் பெற்றவனாகவும் இருக்கும் வண்ணம், பலரும் காணுமாறு என்னுடைய பசு பாசப் பற்றுகளை நீக்கி அருள் செய்தவனை, எல்லோரும் போற்றி வணங்குகின்ற தில்லையம்பலத்திலே வந்து கண்டு கொண்டேன் நானே!

479

சாதிகுலம் பிறப்பென்னும்
சுழிபட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை
அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம்
யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக்
குலாவுதில்லை கண்டேனே. 5

சாதியென்றும், குலமென்றும், குடிப்பிறப்பென்றும் உள்ள சுழற்சிகளில் சிக்கித் தடுமாறிய ஆதரவு இல்லாத நாய் போன்ற அடியேனை, இடையூறு தவிர்த்து என்னையும் அன்புகாட்டி ஆண்டுகொண்டான் அவன். அத்துடன் அமையாமல், என்னுடைய அறியாமைப் பண்புகளையும், கடவுளர் பிறரின் தோற்றங்களையும், யான் – எனது என்னும் என்னுடைய ஆணவப் போக்கினையும் அழித்துவிட்டான். அப்படிப்பட்ட குற்றமில்லாத தெவிட்டாத தெள்ளமுதம் போன்றவனை, அருள் நிறைந்த தில்லையம்பலத்திலே திகழக் கண்டேன் நானே!

480

பிறவிதனை அறமாற்றிப்
பிணிமூப்பென் றிவையிரண்டும்
உறவினொடும் ஒழியச்சென்
றுலகுடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த்
திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும்
வணங்கிடநான் கண்டேனே. 6

என்னுடைய பிறவிப் பிணியினை முழுவதுமாகப் போக்கியவன் அவன். பிணி, மூப்பு என்னும் இரண்டு நிலைகளையும், உறவு என்னும் பற்றினையும் முற்றிலுமாக நீக்கியவனும் அவனே. இந்த உலகத்தையே தன்னுடைய உரிமையாகக் கொண்ட ஒப்பற்ற முதலானவன் அவன். அப்படிப்பட்டவனை, செறிந்த சோலைகள் சூழ்ந்துள்ள தில்லைத் திருநகரிலே உள்ள திருச்சிற்றம்பலத்திலே நிலைபெற்று விளங்கிட, அந்தணரும் விண்ணவரும் வணங்கிக் கொண்டிருக்கும் திருக்காட்சியினைக் கண்ணாரக் கண்டேன் நானே!

481

பத்திமையும் பரிசுமிலாப்
பசுபாசம் அறுத்தருளிப்
பித்தனிவன் எனஎன்னை
ஆக்குவித்துப் பேராமே
சித்தமெனும் திண்கயிற்றால்
திருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல்
விளங்குதில்லை கண்டேனே. 7

என்னுடைய பற்றுதலில்லாத பத்தித்தன்மையினையும், பெருமிதமில்லாப் பசு – பாசம் ஆகிய பற்றுகளையும் முற்றிலுமாக நீக்கியவன் அவன். அத்துடன் நில்லாமல், 'இவன் ஒரு பித்தன்!' என்று என்னைப் பலரும் இகழ்வாகப் பேசுமாறு செய்தவனும் அவனே! ஆயினும், என்னை விட்டு நீங்காமல், மனமாகிய வன்கயிற்றினால் தன்னுடைய திருவடிகளைக் கட்டிக்கொண்ட மெய்ஞ்ஞானியும் அவன். அப்படிப்பட்டவனுடைய அருமைத் திருவிளையாடல் காட்சிகளைத் தில்லையம்பலத்திலே திகழக் கண்டேன் நான்!

482

அளவிலாப் பாவகத்தால்
அமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்றும் அறியாதே
வெறுவியனாய்க் கிடப்பேனுக்
களவிலா ஆனந்தம்
அளித்தென்னை ஆண்டானைக்
களவிலா வானவருந்
தொழுந்தில்லை கண்டேனே. 8

இவ்வுலகில், அளவில்லா அறியாமை எண்ணங்களால், மாசடைந்த மனஅழுத்தத்தில் சிக்கிக்கொண்டு, அறிவற்ற நிலையில், நிகழப்போகும் ஏதொன்றையும் அறியாதவனாய் உணர்விழந்து கிடந்தேன். அத்தகு அடியேனுக்கு, அளவில்லாத பேரின்பப் பெருவாழ்வை அளித்து, அன்புடன் என்னை ஆண்டுகொள்ளவும் செய்தான் அவன். அப்படிப்பட்டவனை, நெஞ்சில் வஞ்சனையில்லாத் தேவரும் போற்றித் தொழுகின்ற தில்லையம்பலத்திலே கண்ணாரக் கண்டு கொண்டேன் நானே!

483

பாங்கினொடு பரிசொன்றும்
அறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர
உல்ப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலம்அறுத்து
வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை
அம்பலத்தே கண்டேனே. 9

சிறந்த ஒழுக்கத்தோடு பெருமிதப் பண்பினையும அறிந்து கொள்ளாத நாயடியேனையும் உளங்கொண்டு, என்னுடைய உள்ளொளியைப் பெருகச் செய்தான்; அழிதல் இல்லாத அன்பினை வழங்கினான். என்பால் குடிகொண்டிருந்த தீவினைகளாகிய பாவங்களையெல்லாம் போக்கினான். வானளவான கருணையினையும் வழங்கினான். அப்படிப்பட்டவனை, நான்கு மறைகளும் நாள்தோறும் ஒலிக்கின்ற தில்லையம்பலத்திலே கண்ணாரக் கண்டு மகிழ்ந்தேன் நானே!

484

பூதங்கள் ஐந்தாகிப்
புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப்
பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட
கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும்
விளங்குதில்லை கண்டேனே. 10

பூதங்கள் ஐந்தாகவும், புலன்கள் ஐந்தாகவும், தோன்றிய பொருள்களாகவும் விளங்குபவன் அவன். வேறுபட்டவையாக விளங்குகின்ற அனைத்துமாகவும், வேறுபாடில்லாதவாறு விளங்குகின்ற பெருமைக்கும் உரியவன் அவன். உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்கும் ஒப்பற்ற ஒளியானை, மரகதமணியானை, நான்கு மறைகளும் நாள்தோறும் போற்றித் தொழுகின்ற தில்லையம்பலத்திலே திகழும் திருக்காட்சியினைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தேன் நானே!

திருச்சிற்றம்பலம்

32. பிரார்த்தனைப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)
சதாமுத்தி

(அறுசீர் விருத்தம்)

பிரார்த்தனை + பத்து = பிரார்த்தனைப் பத்து. பிரார்த்தனை என்பது வேண்டுதல் அல்லது வழிபாடு. அதாவது, பிறவிப் பெருங்கடலை நீந்தச் செய்து, பேரின்பப் பெருவாழ்வளித்து, இறையருட்பேற்றில் இரண்டறக் கலக்கச் செய்து முழுமையாகத் தம்மை ஆண்டுகொள்ளுமாறு திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானிடம் மாணிக்கவாசகப் பெருந்தகை வேண்டிக் கொள்ளுதல். பதிகம் என்னும் பெயரைப் பெற்றுள்ளபோதிலும் இப்பகுதியில் பதினொரு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. முன்னர் அமைந்துள்ள பதிகங்களில், கூடுதலாகப் பாடல் எதுவும் இடம்பெறவில்லை. இதில் மட்டும் ஒரு பாடல் கூடுதலாக இடம்பெற்றுள்ளது. இதுகுறித்து முன்பகுதியிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 'சதாமுத்தி' என்பது, பசுக்களாகிய ஆன்மாக்களுக்குரிய முத்திப்பேற்றினை உறுதிப்படுத்துதல். அனைத்துப் பாடல்களுமே அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

485

கலந்து நின்னடியா ரோடன்று
வாளா களித்தி ருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
புகுந்து நின்ற திடர்பின்னாள்
உலர்ந்து போனேன் உடையானே
உலவா இன்பச் சுடர்காண்பான்
அலந்து போனேன் அருள்செய்யாய்
ஆர்வங் கூர அடியேற்கே. 1

என்னை அடிமையாக உடையவனே! என்னை வந்து ஆண்டுகொண்டபோது, உன்னுடைய அடியவருடன் கலந்திருந்த நான், அப்போதெல்லாம் வறிதே மகிழ்வில் திளைத்திருந்தேன். காலங்கள் பலவும் வீணில் கழிந்தன. பின்னர்த் துன்பங்கள் என்னைச் சூழ்ந்து கொண்டன. பின்னாளில் உடல்மெலிந்து உள்ளமும் வாடினேன். அழிவற்ற பேரின்பப்

பேரொளியாகிய உன்னைக் காண்பதற்காகப் பலவாறு முயன்று தோல்வியுற்றேன். எனவே, உன்மேல் மிக்க காதல் உண்டாகுமாறு எம்பெருமானே! அடியேனாகிய எனக்கு அருளினைச் செய்வாயாக!

486

அடியார் சிலருன் அருள்பெற்றார்
ஆர்வங் கூர யான்அவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி
முனிவால் அடியேன் மூக்கின்றேன்
கடியே னுடைய கடுவினையைக்
களைந்துன் கருணைக் கடல்பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே
ஓவா துருக அருளாயே. 2

என்னை அடிமையாக உடையவனே! உன்மேல் கொண்ட மிகுந்த அன்பின் காரணமாக, உன்னுடைய அடியவருள் சிலர், உனது அருளினைப் பெற்றனர். நானோ, அவ்வாறில்லாமல் வீணாய்க் கிடந்தேன். முடிவில்லாத கோபத்தால் முடைநாற்றம் வீசும் பிணத்தைப் போல் நின்றேன். கொடுமனம் படைத்த என்னுடைய கடுவினைகளை எல்லாம் நீதான் நீக்குவாயாக! உன்னுடைய பெருங்கருணைப் பெருங்கடல் என்மேல் பொங்கிப் பாயவேண்டும். அடியேனுடைய உள்ளத்தில், உன்னை இடையறாமல் எண்ணியெண்ணி உருகிட வேண்டும். எம்பெருமானே! அவ்வாறே நீயும் என்பால் கருணை கொண்டு அருள்புரிவாயாக!

487

அருளா ரமுதப் பெருங்கடல்வாய்
அடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளா ராக்கை இதுபொறுத்தே
எய்த்தேன் கண்டாய் எம்மானே
மருளார் மனத்தோர் உன்மத்தன்
வருமால் என்றிங் கென்னைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்பை
உடையாய் பெறநான் வேண்டுமே. 3

எம்பெருமானே! உன்னுடைய பொய்யடிமை பூணா மெய்யடியார் அனைவருமே, உன்னுடைய அருள்நிறைந்த பேரமுதப் பெருங்கடலுள் மூழ்கித் திளைத்தனர். அடியேனோ, அறியாமை இருள் நிறைந்த மெய்யுடலிலாப் பொய்யுடலைச் சுமந்து சுமந்து மிகவும் மெலிந்துவிட்டேன். அதனை நீயும் நன்கறிவாய். என்னைக் கண்டவரெல்லாரும், 'மயக்கம் நிரம்பிய மனத்தைக் கொண்ட பித்தன் ஒருவன் இதோ வருகின்றான்!' என்று பயந்து நடுங்குகின்றனர். என்னை அடிமையாக உடையவனே! அவர் அவ்வாறு பயந்து நடுங்காமல் இருக்குமாறு, உன்னுடைய மெய்யன்பினை நான் பெறவேண்டும். அதற்கு நீதான் அருள்புரிய வேண்டும்.

488

வேண்டும் வேண்டும் மெய்யடியா
ருள்ளே விரும்பி எனைஅருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த
அமுதே அருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்ட னேற்கும் உண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே. 4

அடியேனுடைய துன்பங்களைப் போக்கிய தூய்மையான அமுதமே! அருமையான மாணிக்கமணியே! முத்துமணியே! உன்னை வேண்டி வேண்டி விரும்புகின்ற உன்னுடைய மெய்யடியார் குழாத்துள் என்னையும் விரும்பி ஒருவனாகச் சேர்த்துக் கொண்டு அருளினாய். என்னையும் ஆண்டுகொண்டாய். தூண்டாமணிவிளக்கின் சுடரினைப் போன்றவனே! உன்னையும் அடைவதற்கு, வேண்டாத எதனையும் நான் வேண்டாமல், உன்னை அடைவதற்குரிய மிகுந்த அன்பு ஒன்றினை மட்டுமே நான் வேண்டுகின்றேன். அடியேனுக்கு அந்த அன்புதான் கிடைக்குமோ?

489

மேவும் உன்றன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள்
பங்கா உன்தன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ
பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்து
ஆவி யாக்கை யானென்தென்
றியாது மின்றி அறுதலே. 5

கருங்குவளை மலர் போலவும், கயல்மீனைப் போலவும் கண்களை உடையவளாகிய உமையம்மையின் ஒரு பாகனே! உன்னுடைய அடியவர் கூட்டத்தில் யானும் ஒருவனாகச் சேர விரும்பி, உன்னையே மெய்யாகத் தொழுதுவந்தேன். என்னுடைய உயிர், உடல், யான் எனது என்னும் ஆணவங்கள் அனைத்தையும் போக்கிவிட்டு, உன்னுடைய பேரானந்தப் பெருங்கடலில் சேர்கின்ற நிலைதான், உன்னுடைய பெருங்கருணையினால் பாவியேனாகிய அடியேனுக்குக் கிடைக்கப் பெறுமோ?

490

அறவே பெற்றார் நின்னன்பர்
அந்த மின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாப் பிரிவில்லா
மறவா நினையா அளவில்லா
மாளா இன்ப மாகடலே. 6

என்னை அடிமையாக உடையவனே! நிலைத்த தன்மையால் மாறாமலும், அழியாமலும், பிரிவில்லாமலும், மறவாமலும், நினையாமலும், அளவற்றும், குறைவற்றும் உளதாகிய பேரின்பப் பெருங்கடலே! உன்னுடைய மேலான அடியவர், உன்மேல் அன்பினைப் பொழிந்தனர்; முடிவில்லாமல் உள்ளமும் உருகினர். அதன் காரணமாக உன்னுடைய அடியவர், உன் திருவடிப் பேற்றினை நிறைவாகப் பெற்றனர், நானோ, புலைநாயை ஒத்தவனாகிப் புலம்புகின்றேன். பெருமானே! நானும் உன்னுடைய அடியவர் பெற்றுள்ள திருவடிப் பேற்றினைப் பெறவேண்டும். நான் வேண்டுவதும் அஃதொன்றே.

491

கடலே அனைய ஆனந்தங்
கண்டா ரெல்லாங் கவர்ந்துண்ண
இடரே பெருக்கி ஏசற்றிங்
கிருத்த லழகோ அடிநாயேன்
உடையாய் நீயே அருளுதியென்
றுணர்த்தா தொழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடரார் அருளால் இருள்நீங்கச்
சோதீ இனித்தான் துணியாயே. 7

பேரானந்தக் கடலில் தோன்றிய பேரமுதத்தைப் போன்ற உன்னுடைய பேரானந்தத்தைக் கண்ட உன்னுடைய அடியவரெல்லாம், அதனைக் கவர்ந்தே உண்டனர். நாயடியேனாகிய நானோ, நாள்தோறும் துன்பத்தையே பெருக்கிக் கொண்டேன்; குற்றமே தாங்கி நின்றேன். அந்த நிலையில் நானும் இருப்பது, உனக்குத்தான் அழகாகுமா? 'என்னை அடிமையாக உடையவனே! நீயே எனக்கு அருள்புரிவாயாக!' என்று, அன்றைய நாளிலேயே உனக்கு நானும் உணர்த்தாமலே இருந்துவிட்டேன். காலத்தையும் கழித்துவிட்டேன். உன்னிடமிருந்து வெகுதொலைவு விலகியும் சென்றுவிட்டேன். ஒளிநிரம்பிய உனது அருளால், எனது அறியாமை இருள் விலகியோட வேண்டும். சோதியே! இனிமேலாவது எனக்கு அருளினைச் செய்வாயாக! வேண்டுவதும் அதுவே!

492

துணியா உருகா அருள்பெருகத்
தோன்றுந் தொண்டர் இடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன்
சிவனே நின்று தேய்கின்றேன்
அணியா ரடியா ருனக்குள்ள
அன்புந் தாராய் அருளளியத்
தணியா தொல்லை வந்தருளித்
தளிர்பொற் பாதந் தாராயே. 8

சிவபெருமானே! உன்னுடைய அடியவரெல்லாரும் நீயே கதியென்று துணிந்தனர்; உள்ளமும் உருகினர்; உன் அருளினையும் நிறைவாகப் பெற்றனர். நானோ, வலிமைகொண்ட மூங்கிலை ஒத்த உள்ளம் கொண்டவன். உன்னுடைய அடியவர் குழாத்திடையில் நுழைந்தும். உலக வாழ்க்கையில் நிலைபெற்றும் தேய்ந்து அழிகின்றேன். அழகு நிறைந்த உன்னுடைய அடியவர், உன்னிடம் செலுத்துகின்ற அன்பினைப் போலவே, அடியேனும் செலுத்துமாறு உனதருளை எனக்குத் தருவாயாக! என்னுடைய துன்பங்கள் அனைத்தையும் நீக்குகின்ற உன்னுடைய மெல்லிய தளிர்போன்ற திருவடிகளை எனக்குத் தந்தருள்வாயாக!

493

தாரா அருளொன் றின்றியே
தந்தாய் என்றுன் தமரெல்லாம்
ஆரா நின்றார் அடியேனும்
அயலார் போல அயர்வேனோ
சீரார் அருளாற் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை
வைக்க வேண்டும் பெருமானே. 9

உன்னுடைய சிறப்புமிக்க அருளால், என்னுடைய எண்ணத்தினைச் செம்மைப்படுத்தி, என்னையும் ஆண்டுகொண்ட சிவபுரத்தானே! இனிமேலும் தரவேண்டிய அருள் யாதொன்றுமே இல்லையெனச் சொல்லத்தக்க அளவிற்கு, அனைத்தையுமே உன்னுடைய அடியவர்க்குத் தந்துவிட்டாய். அத்தகு பேற்றினை எண்ணியவாறே அவரெல்லாம் குறைவின்றி நிற்கும்போது, அடியேன் மட்டுமே அயலாரைப் போன்று தளர்ந்து போவது உனக்குத்தான் அழகாமோ? எம்பெருமானே! உன்னுடைய பேரானந்தப் பேரமுதமானது, என்னிடமிருந்து விலகிச் செல்லாமல் நிலைத்திருக்க, நீதான் எனக்கு அருள்புரிய வேண்டுகிறேன். அவ்வாறே அருள் செய்வாயாக!

494

மானோர் பங்கா வந்திப்பார்
மதுரக் கனியே மனநெகா
நானோர் தோளாச் சுரையொத்தால்
நம்பி இத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனையுணர்ந்தே
உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளுங் காலந்தான்
கொடியேற் கென்றோ கூடுவதே. 10

மானொத்த கண்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாக உடையவனே! உன்னைப் போற்றி வணங்கும் அடியவர்க்கு, இனிக்கின்ற கனியே! நான், உன்மேல் உள்ளம் நெகிழாமல், துளைபடாச் சுரைக்காயெனவே பயனின்றி இருந்துவிட்டேன். சிறந்தவனே! இதனால் நீயும் நன்றாக வாழ்ந்தாய் போலும். என்னுடைய உடலில் புகுந்துவிட்ட உன்னையும், என் உள்ளத்தால் உணர வேண்டும். அதற்கேற்றவாறே, என் உள்ளமும் அன்பால் உருகிப் பெருக வேண்டும். என்னுடைய மன்னவனே! கொடியேனாகிய அடியேன், அவ்வாறே உன்னை அடையவும், அடைந்து உணரவும் என்னுடைய உள்ளந்தான் உருகிட நீயும் அருளும் நாள்தான் எந்த நாளோ?

495

கூடிக் கூடி உன்னடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடி வாடி வழியற்றேன்
வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு
கலந்துள் ளுருகிப் பெருகிநெக்கு
ஆடி ஆடி ஆனந்தம்
அதுவே யாக அருள்கலந்தே. 11

உன்னுடைய அடியார், ஒருவரோடு ஒருவர் கலந்து கலந்து மகிழ்ச்சிப் பெருக்குடன் ஆடுவார்; வாய் விட்டுச் சிரிப்பார்; மனமார மகிழ்வார். அவரெல்லாம் அவ்வாறிருக்கவும், வழியேதுமற்றேனாகிய அடியேன் மட்டும், மிகவும் வாடி வாடிக் காய்ந்த மரத்தைப் போல நிற்பேனோ? என்னை ஆண்டுகொண்ட உன்னோடு, நானும் ஊடல் கொண்டு, ஊடல் கொண்டு, அதன்பின்னர் உள்ளம் ஒன்று கலந்து உருகி, அன்பு பெருகி, நெகிழ்ந்து கூத்தாடிக் கூத்தாடிப் பேரானந்தம் பெற வேண்டும். அவ்வாறாகவே அடியேனுக்கும் நீ அருள் செய்வாயாக!

திருச்சிற்றம்பலம்

33. குழைத்த பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

ஆத்தும நிவேதனம்

(அறுசீர் விருத்தம்)

குழைத்த + பத்து – குழைத்தபத்து. குழைத்தபத்து என்பது, மனம் வருந்திக் கூறும் பத்துப் பாடல்களின் தொகுப்பு. அதாவது, பழைய வினைகள் யாவும் தம்மைத் துன்புறுத்தலுக்குப் பொறுத்துக் கொள்ளாத மாணிக்கவாசகப் பெருந்தகை, தம்முடைய பிழைகளை எண்ணியெண்ணி மனமிரங்கித் தம்மைத் தீவினைகளினின்றும் விடுவித்து அருள் செய்யுமாறு, திருப்பெருந்துறையில் உறைபவனாகிய சிவபெருமானிடம் வாய்விட்டு அலறியவாறு முறையிடுவதாகும். 'ஆத்தும நிவேதனம்' என்பது, 'நேயத்தோடு ஒன்றுதல்' ஆகும். அதாவது, ஆன்மாவைச் சிவமாக்கிச் சிவனின் திருவடிகளுக்குத் தானம் செய்தல். இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அனைத்துப் பாடல்களும், அந்தாதியாக அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

496

குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தா லுறுதி யுண்டோதான்
உமையாள் கணவா எனையாள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோவென்
றழைத்தால் அருளா தொழிவதே
அம்மா னேஉன் னடியேற்கே. 1

என்னை ஆளாக உடையவனே! உமையம்மையின் கணவனே! என் தந்தையே! யான் முன்னர்ச் செய்தனவாகிய கொடிய தீவினைகளினின்றும் என்னைக் காப்பாயாக! உன்னை அடைந்திட உளமார முயன்றால், எனக்கும் உன்னருள் கிடைத்திட வழியும் உண்டோ? நான் பிழைகளைச் செய்திருந்தாலும், அவற்றை நீயும் பொறுத்துக்கொள்ள வேண்டாவோ? என்னை ஆண்டுகொள்ளவும் கூடாதோ? உன்னுடைய அடியேனாகிய யான்,

ரீ19.

'பிறையணிந்த நீள்சடை கொண்ட நாயகனே! உன் செயலும் முறையாமோ?' என்று முறையிட்டு அழைத்தால், எனக்கு அருள் செய்யாமல் ஒதுங்கிக் கொள்வதோ? பெருமானே! உன்னுடைய பெருமிதப் பண்புக்கு இதுவும் அழகாகுமோ?

497

அடியேன் அல்லல் எல்லாம்முன்
அகல ஆண்டாய் என்றிருந்தேன்
கொடியே ரிடையாள் கூறாஎங்
கோவே ஆஆ என்றருளிச்
செடிசேர் உடலைச் சிதையாத
தெத்துக் கெங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணிகொள்ளா
தொறுத்தால் ஒன்றும் போதுமே. 2

கொடி போன்ற மெல்லிடை உடையவளாகிய உமையம்மையை ஒரு பாகத்தில் உடையவனே! எம்முடைய தலைவனே! எங்கள் சிவலோகனே! என்மை ஆளாக உடையவனே! அடியேனின் துன்பங்களையெல்லாம் நீதான் முன்னரே அகற்றிவிட்டாய் என்று நினைத்திருந்தேன். 'ஐயோ!' என்றே மனமிரங்கி, எனக்கு அருள் செய்யாமல், பாவங்கள் சேர்கின்ற இந்த உடலை அழித்தொழிக்காமல் விட்டதுதான் எதன் பொருட்டு? பெருமானே! கூவியழைத்து ஏவல் கொள்ளாமல், நீயே இவ்வாறு தண்டித்தால், அந்தத் தண்டனை ஒன்றே போதுமே! இதுவும் நன்மைக்கே.

498

ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோதான்
ஏழை பங்கா எங்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணமா மென்றே நீகொண்டால்
என்தான் கெட்ட திரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே. 3

ஏழை பங்காளனே! எம்முடைய அரசனே! எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் கொண்ட எங்கள் தந்தையே! ஒன்றுக்குமே உதவாத நாயேனாகிய என்னையும் முன்னர்க் கருணையினால் நீதான் ஆண்டுகொண்டாய். அந்தக் கருணை, இன்றுதான் எனக்குப் போய்விட்டதோ? குன்றினை ஒத்த குற்றங்களை எல்லாம் குணங்களே என்று நீயும் கொண்டால், என்னதான் கெட்டுவிடும்? எனவே, எனக்கு அருளினைச் செய்வாயாக!

499

மானேர் நோக்கி மணவாளா
மன்னே நின்சீர் மறப்பித்திவ்
வூனே புகஎன் தனைநூக்கி
உழலப் பண்ணு வித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள்செய்து
கோனே கூவிக் கொள்ளுநாள்
என்றென் றுன்னைக் கூறுவதே. 4

மானை நிகர்த்த பார்வையினை உடைய உமையம்மையின் மணவாளனே! நிலைத்த உன் சிறப்புகளை எல்லாம் என்னையும் மறக்குமாறு செய்து, இந்த ஊன் செறிந்த உடலில் புகுந்துகொள்ளுமாறு என்னைத் தள்ளிவிட்டுத் துன்புறுமாறு செய்துவிட்டாய். எம்முடைய தலைவனே! எவ்வாறாயினும், என்னுடைய அறியாமையினை அறிந்துகொண்டுள்ள நீயே என்னைக் கூவியழைத்துக் கொள்வாயாக! அவ்வாறு என்மீது அன்புகொண்டு, அருள்செய்து அடியேனை அழைத்துக்கொள்ளும் அந்த நாளும் எந்த நாளோ? என்று கேட்டு, உன்னை நான் வேண்டுகின்றேன்.

500

கூறும் நாவே முதலாகக்
கூறுங் கரணம் எல்லாம்நீ
தேறும் வகைநீ திகைப்புநீ
தீமை நன்மை முழுதும்நீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை
மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில்
தேறும் வகைஎன் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ. 5

சிவபுரத்தானே! உரையாடும் நாக்கு முதற்கொண்டு, குறிப்பிடும் கரணம் முடிவாக உள்ள எல்லாமும் நீயே! நான் தேர்ந்து தெளிகின்ற வகையும் நீயே! என்னுடைய பிரமிப்பும் நீயே! தீமையும் நன்மையும் ஆகிய அனைத்தும் நீயே! உன்னைத் தவிரவும் எனக்கென்று தனியாக ஏதுமில்லை! மெய்ப்பொருளாகிய உன்னை விரிவாகச் சொல்வதற்கு, எனக்குத் தெரியும் வகைதான் யாதோ? யாதொன்றும் தெரியவில்லை. தெரியாத எனக்கு நீதான் அதனைத் தெளிவுபடுத்த வேண்டாவோ?

501

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானுமதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே. 6

பெருந்துறைப் பெருமானே! யான் உன்னிடம் விரும்பி வேண்டத் தகுந்தது எது என்பதை அறிபவன்நீ! அவ்வாறே அதனை யான் வேண்டவும், அதனை முழுமையாகத் தருபவன் நீ! உன்னைப் பணிவுடன் வேண்டும் நான்முகன், திருமால் ஆகியோர்க்கு அரியவனாகிய நீ, விரும்பி என்னை அடிமைசெய்து கொண்டாய். நீ விரும்பியவாறு யானும் அதனையே விரும்பி வேண்டுவேன் அல்லாமல், நீயாக எதனை எனக்கு அருள்செய்தாய்? யான் உன்னிடம் விரும்பி வேண்டும் பரிசொன்று உண்டென்றால், அதுவும் உன்னுடைய விருப்பம் அன்றோ?

502

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமுங்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே 7

எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் உடைய எம்முடைய தந்தையே! குன்றினை ஒத்தவனே! அன்றைய நாளில் நீயும் என்னை ஆண்டு கொண்டபோது என்னுடைய உயிரையும் உடலையும் உடைமைகள் அனைத்தையும் உன்னுடையவையாக ஆக்கிக் கொள்ளவில்லையா? அவ்வாறு ஆக்கிக் கொண்டிருந்தால், இன்றைய நாளில் ஓர் இடையூறுதான் எனக்கு உண்டாகி இருக்குமோ? நீ நல்லவற்றையே செய்வாயே! அல்லவற்றையும் செய்வாயோ? தலைவனே! இதற்கென்று நானா கிடைத்தேன்?

503

நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்ன தோஇங் கதிகாரம்
காயத் திடுவாய் உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே. 8

நெற்றிக்கண்ணை உடையவனே! நாயினும் கடைப்பட்ட நாயடியேனை, அன்றைய நாளில் மிகவும் விரும்பி ஆண்டுகொண்டாய். என்னுடைய மாயப்பிறவியினை உன்னிடமே ஒப்புக் கொடுத்துவிட்டு உள்ளேன். அப்படி உள்ளதைத் தவிர, வேறெதனையும் ஆராய்ந்தறியும் ஆற்றல் இல்லாதேன். இங்கோ எனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. எனக்குப் பிறப்பாகிய உடலைக் கொடுத்து, இவ்வுலகில் திரிய விடுவாயோ? உன்னுடைய திருவடிகளின்கீழ்த் திளைக்கச் செய்வாயோ?

504

கண்ணார் நுதலோய் கழலிணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணா திரவும் பகலும்நான்
அவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ
அடிமை சால அழகுடைத்தே. 9

நெற்றிக்கண்ணை உடையவனே! உன்னுடைய திருவடிகள் இரண்டினையும் என்னுடைய இரண்டு கண்களும் களிப்படையுமாறு கண்டு மகிழ்வுற்றேன். வேறெந்தச் சிந்தனையும் இல்லாமல், இரவும் பகலுமாக நான் அவற்றைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தேன். அவ்வாறு எண்ணுவதல்லாமல் இந்த மண்ணுலகத்தில் என் உடலை விட்டுவிடும் வழியினையும், உன்னுடைய திருவடிகளில் வந்து சேர்கின்ற வழியினையும் என்னால் எண்ணக் கூடுமோ? அண்ணலே! அவ்வாறு எண்ணக் கூடுமாயின். அதுவும் மிகுந்த அழகினை உடையதே.

505

அழகே புரிந்திட் டடிநாயேன்
அரற்று கின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம்எனக்குப்
புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே
கோனே என்னைக் குழைத்தாயே. 10

என்னை ஆளாக உடையவனே! என்றும் இளமையோனே! அழகிய அந்தணனே! தலைவனே! உன் அடியேனாகிய நான், உன் அழகினையே காண்பதற்கு ஓலமிட்டு அலறுகின்றேன். அந்நாளில், திகழும் உனது திருமேனியினைக் காட்டி, என்னை அடிமை எனக்கொண்டாய். பழம்பொருளே! புகழுக்குக் காரணமாக விளங்கும் உன் திருவடிகளை எனக்குக் காட்டியருளாமல், என் மனத்தைக் குழைத்துவிட்டாயே!

திருச்சிற்றம்பலம்

வசனம்

34. உயிருண்ணிப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)
சிவானந்தம் மேலிடுதல்

(கலி விருத்தம்)

உயிர் + உண்ணி + பத்து – உயிருண்ணிப் பத்து. 'உண்ணி' என்பதற்கு 'உண்பது' என்று அஃறிணையாகவும், 'உண்பவர்' என்று உயர்திண்ணயாகவும் இருவகைப் பொருள்களையும் கொள்கின்றனர். 'உயிருண்ணிப் பத்து' என்பது, உயிரானது தன்னுடைய பண்புகெட்டு, இன்பமயமாய் இருப்பது. சிவான்ந்தம் மேலிடுதல் என்பது, சிவானந்த வெள்ளமானது, உயிரைத் தன்வயப்படுத்தி மேலிடுதல். உயிரானது தனித்து நிற்காமல், சிவானந்த வெள்ளத்தில் கலந்து விடுதல். இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

506

பைந்நாப்பட அரவேரல்குல்
உமைபாகம தாய்என்
மெய்ந்நாள்தொறும் பிரியாவினைக்
கேடாவிடைப் பாகா
செந்நாவலர் பரசும்புகழ்த்
திருப்பெருந்துறை உறைவாய்
எந்நாள்களித் தெந்நாள்இறு
மாக்கேன் இனியானே. 1

பசிய நாவினையுடைய பாம்பின் படம் போன்ற அல்குலைக் கொண்டவளாகிய உமையம்மையை மேனியின் ஒரு பாகமாக உடையவனே! என்னுடைய உடலைவிட்டு என்றும் நீங்காமல் இருக்கின்ற தீவினையை வேரறுப்பவனே! இடப வாகனனே! செவ்விய நாவலரெல்லாம் போற்றிப் புகழும் திருப்பெருந்துறையில் உறைபவனே! இனிமேலும் நான் எந்த நாளில் மகிழ்ந்து, எந்த நாளில் இறுமாந்து இருப்பேனோ?

507

நானாரடி யணைவானொரு
நாய்க்குத் தவிசிட்டிங்கு
ஊனாருடல் புகுந்தான்உயிர்
கலந்தான்உளம் பிரியான்
தேனார்சடை முடியான்மன்னு
திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாததோர்
வளம்ஈந்தனன் எனக்கே. 2

வண்டுகள் மொய்க்கின்ற சடைமுடியினை உடையவனும், திருப்பெருந்துறையில் நிலைபெற்று விளங்குபவனுமாகிய சிவபெருமானின் திருவடிகளை நான் சேருவதற்காக, நாயடியேனுக்கு இருக்கையினைத் தந்தான். புலால் நிறைந்த என்னுடைய உடலிலும் அவன் புகுந்துகொண்டான்; என்னுடைய உயிரிலும் கலந்துகொண்டான். என்னுடைய உள்ளத்தினின்றும் பிரியாமல் நின்றான். விண்ணவரும் அறியாத ஒப்பற்ற பேரின்பப் பெருவெள்ளத்தினையும் வழங்கினான். அந்த வளத்தினை அடைவதற்கு எனக்குள்ள தகுதியும் யாதோ?

508

எனைநானென்ப தறியேன்பகல்
இரவாவதும் அறியேன்
மனவாசகங் கடந்தான்எனை
மத்தோன்மத்த னாக்கிச்
சினமால்விடை உடையான்மன்னு
திருப்பெருந்துறை உறையும்
பனவன்எனைச் செய்தபடி
றறியேன்பரஞ் சுடரே. 3

மனம், வாக்கு ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டவனும், செவ்விய திருமாலையே காளை வாகனமாகக் கொண்டவனும், திருப்பெருந்துறையில் உறைகின்ற பார்ப்பனனும், மேலான ஒளியுருவாய்த் திகழ்பவனும் ஆகிய சிவபெருமான், என்னை மிகுந்த களிப்புடையவனாக்கிவிட்டான். அந்தச் சூழ்ச்சியினை, அப்போது நான் அறியவில்லை. அதன் காரணமாக என்னை நான் என்பதையே அறியேன்; பகலென்பதையும், இரவென்பதையும்கூட அறியேன்.

509

வினைக்கேடரும் உளரோபிறர்
சொல்லீர்விய னுலகில்
எனைத்தான்புகுந் தாண்டான்என
தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லேபெருந்
துறையில்உறை பெம்மான்
மனத்தான்கண்ணின் அகத்தான்மறு
மாற்றத்திடை யானே. 4

திருப்பெருந்துறையில் உறைகின்ற பெரியோனாகிய சிவபெருமான், என்னுடைய உடலிலே புகுந்துகொண்டு, என்னை ஆண்டுகொண்டான். என்னுடைய எலும்புகளின் உள்ளிருக்கும் துளைகளையும் உருகச் செய்தான். பின்னர் அவன் மனத்திலும், கண்களிலும், பேசும் சொற்களிலும் புகுந்து கொண்டான். இந்தப் பரந்துபட்ட உலகில், இவனைப் போல வினைகளை ஒழிப்பவர் பிறர் எவரும் உள்ளனரோ? இருந்தால் அவரைச் சொல்வீராக!

510

பற்றாங்கவை அற்றீர்பற்றும்
பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி அடைவோமெனிற்
கெடுவீரோடி வம்மின்
தெற்றார்சடை முடியான்மன்னு
திருப்பெருந்துறை இறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின
ரொடுங்கூடுமின் கலந்தே. 5

இறைப்பற்றுக் கொள்ளாமல், இவ்வுலகில் இன்னல் அடைபவரே! இறையருள் இல்லாமல், இன்பம் பெறவொரு வழியுமில்லை. நீங்கள் உலகப் பொருள்களில் கொண்டுள்ள பற்றுகளை விட்டொழித்தீர் என்றாலும், வீடுபேற்றை அடைய வேண்டுமெனில், எம்பெருமானின் திருவடிகளே கதியெனக்கொண்டு, அவற்றின்மேல் பற்றினை வைக்கவேண்டும். ஆகவே, இங்கு ஓடிவாருங்கள்! அழகிய சடைமுடியைக் கொண்டவனும், நிலைபெற்று விளங்குகின்றவனுமாகிய திருப்பெருந்துறை இறைவனின் சிறப்புகளையெல்லாம் கற்றறிந்து, அவனுடைய திருவடிகளை வழிபடுகின்ற அடியாரொடும் ஒன்று கலந்து கூடுவீராக!

511

கடலின்திரை யதுபோல்வரு
கலக்கம்மலம் அறுத்தென்
உடலும்என துயிரும்புகுந்
தொழியாவண்ணம் நிறைந்தான்
சுடருஞ்சுடர் மதிசூடிய
திருப்பெருந்துறை உறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள்
பரன்தான் செய்தபடிறே. 6

கடலின் அலையினைப் போலத் தொடர்ந்து வருகின்ற, கலக்கத்தினை உண்டாக்கும் என்னுடைய குற்றங்களையெல்லாம் அவன் போக்கிவிட்டான். என்னுடைய உடலிலும் உயிரிலும் இரண்டறக் கலந்துவிட்டான்; என்னைவிட்டு நீங்காதவாறு நிறைந்தவனும் ஆனான். இவையெல்லாம், ஒளிவிடும் பிறையினைச் சூடியவனும், திருப்பெருந்துறையில் உறைபவனும், விரிசடையினை மகுடமாகக் கொண்டிருப்பவனுமாகிய எங்கள் பரம்பொருள், எனக்குச் செய்த வஞ்சகச் செயல்களே!

512

வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும்விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம்
வேண்டார்தமை நாளுந்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு
திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன்புறம் போகேன்இனிப்
புறம்போகலொட் டேனே. 7

நான், புகழை விரும்பமாட்டேன்; செல்வத்தை விரும்பமாட்டேன்; மண்ணுலக வாழ்வையும், விண்ணுலக வாழ்வையும் விரும்பமாட்டேன்; தொடரும் பிறப்பினையும் இறப்பினையும்கூட விரும்பமாட்டேன். சிவபரம்பொருளை விரும்பாத் தீயர்தம்மை, ஒருநாளும் தீண்டமாட்டேன். திருப்பெருந்துறையில் என்றும் நிலைபெற்று விளங்குகின்ற இறைவனின் திருவடிகளிலே அடைக்கலம் புகுந்துவிட்டேன். அவற்றை விட்டுவிட்டு, ஒருநாளும் வெளிவர மாட்டேன். அவை என்னைவிட்டு வெளிச் செல்லவும் விடமாட்டேன்.

513

கோற்றேன்எனக் கென்கோகுரை
கடல்வாய்அமு தென்கோ
ஆற்றேன்எங்கள் அரனேஅரு
மருந்தேஎன தரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு
திருப்பெருந்துறை உறையும்
நீற்றார்தரு திருமேனிநின்
மலனேஉனை யானே. 8

எங்கள் சிவபெருமானே! தெவிட்டாத அமுதமே! என்னுடைய மன்னவனே சேற்றுச் சகதி நிறைந்த வயல்கள் சூழ்ந்திருக்கும் திருப்பெருந்துறையில் உறைபவனே! திருவெண்ணீறு பூசிய திருமேனியை உடையவனே! குற்ற மற்றவனே! நீ எனக்கு வழங்கியருளிய பேரின்பப் பேற்றினை அடியேன் கொம்புத் தேன் என்பேனா? ஒலிக்கும் அலைகளை உடைய திருப்பாற்கடலில் திரண்டுவந்த தெவிட்டாத தேனமுதம் என்பேனா? இவற்றில் எதனைச் சொல்வதற்கும் என்னால் இயலவில்லையே! என் செய்வேன்?

514

எச்சம்அறி வேன்நான்எனக்
கிருக்கின்றதை அறியேன்
அச்சோஎங்கள் அரனேஅரு
மருந்தேஎன தமுதே
செச்சைமலர் புரைமேனியன்
திருப்பெருந்துறை உறைவான்
நிச்சம்என நெஞ்சில்மன்னி
யானாகிநின் றானே. 9

எங்கள் சிவபெருமானே! அருமையான மருந்தே! என்னுடைய தெள்ளமுதமே! வெட்சி மலரினை ஒத்த திருமேனியினை உடையவனே! திருப்பெருந்துறையில் விருப்புடன் உறைபவனே! என்னுடைய உள்ளத்தின் உள்ளே, நீயே நானாகி என்றும் நிலைபெற்று நிற்பவனே! உன்னிடமிருந்து என்னுடைய தேவைகளை அறிந்துள்ள நான், என்னிடம் குடிகொண்டுள்ள தீவினைகளைப் பற்றி, யாதொன்றையும் அறியாமல் இருக்கின்றேன். இஃது வியப்பன்றோ?

515

வான்பாவிய உலகத்தவர்
தவமேசெய அவமே
ஊன்பாவிய உடலைச்சுமந்
தடவிமர மானேன்
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு
திருப்பெருந்துறை உறைவாய்
நான்பாவியன் ஆனால்உனை
நல்காயென லாமே.

தேன் சொரியும் கொன்றை மலர்கள் நிலைபெற்று விளங்கக்கூடிய திருப்பெருந்துறையில் உறைபவனே! உன்னுடைய திருவருளைப் பெறுவதற்காக, மேன்மை தங்கிய உலகமாந்தர் அனைவரும், தவத்தையே செய்துகொண்டிருந்தனர். ஆனால் நானோ, புலால் தங்கிய இந்த உடலைச் சுமந்துகொண்டு, காட்டுமரமென இருந்துவிட்டேன். நான் பாவியேதான். ஆயினும், உன்னை என்பால் தருவாயாக என்று கூறலாமே! பெருமானே! அப்படிக் கூறுவதில் எந்தத் தவறும் இல்லையே!

திருச்சிற்றம்பலம்

35. அச்சப் பத்து

(தில்லையில் அருளியது)
ஆனந்தம் உறுதல்

(அறுசீர் விருத்தம்)

அச்சம் + பத்து – அச்சப்பத்து. எல்லாம் வல்ல பரம்பொருளிடம் அன்பு செலுத்தாதவரைக் கண்டு, அஞ்சுதல் வேண்டும் என்று கூறும் பத்துப் பாடல்களின் தொகுப்பு. இந்தப் பத்தில், அஞ்சத்தக்கன பற்றியும், அஞ்சத்தகாதன பற்றியும் கூறப்படுகின்றன. ஆனந்தம் உறுதல் என்புது; இறைவனிடம் சேர்கின்றவாறு அன்பினால் உள்ளமொன்றி, உறுதிப்பாட்டுடன் இறுக்கமடையும்போது ஏற்படும் பேரின்பம் பெறுதல். இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலின் முதலடியின் இறுதிச்சீர், 'அஞ்சேன்!' என்றும், ஈற்றடியின் இறுதிச்சீர் 'அஞ்சும்!' என்றும் முரண்தொடையில் அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

516

புற்றில்வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன்
கற்றைவார் சடைஎம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும்ஓர் தெய்வந் தன்னை
உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 1

புற்றில் வாழும் கூர்மையான பற்களையுடைய பாம்பினைக் கண்டும் நான் அஞ்சமாட்டேன்; பொய்யர்தம்மின் மெய்யுரையினைக் கேட்கும்போதும் நான் அஞ்சமாட்டேன். ஆனால், திரண்ட சடைமுடியினை உடையவனும், எம்முடைய பெரியோனாகியவனும் நெற்றிக்கண்ணை உடையவனுமாகிய சிவபெருமானின் திருவடிகளை அடைந்த பின்னரும், இவ்வுலகில் வேறொரு தெய்வம் இருப்பதென நினைக்கக்கூடியவரைக் கண்டால் மட்டுமே நான் அஞ்சுவேன். அந்தோ! அத்தகையவர்தாம்,எம்பெருமானைக் குறித்துச் சிறிதளவும் அறியாதவர் அல்லரோ!

517

வெருவரேன் வேட்கை வந்தால்
வினைக்கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா
எம்பிரான் தம்பி ரானாம்
திருவுரு அன்றி மற்றோர்
தேவரெத் தேவ ரென்ன
அருவரா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 2

பேராசை வந்தென்னை ஆட்கொள்ளும்போதும், நான் அதற்காக அஞ்ச மாட்டேன்; தீவினைக்கடலானது பொங்கியெழுந்து வந்தென்னைச் சூழ்ந்து கொள்ளும்போதும், நான் அதற்காக அஞ்சமாட்டேன். ஆனால், நான்முகனாலும் திருமாலினாலும், முறையே முடியையும் அடியையும் கண்டறிய முடியாதவனும், தனக்குத்தானே தலைவனாக விளங்கக் கூடியவனும் ஆகிய எம்பெருமானின் திருவுருவத்தைத் தவிர, இவ்வுலகில் மற்றையத் தெய்வமும் என்னதான் தெய்வமோ என்று, அருவருப்பு அடையாதவரைக் கண்டால் மட்டுமே நான் அஞ்சு வேன்.

518

வன்புலால் வேலும் அஞ்சேன்
வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்
என்பெல்லாம் உருக நோக்கி
அம்பலத் தாடு கின்ற
என்பொலா மணியை ஏத்தி
இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 3

புன்புலால் மணம்வீசும் கூரிய வேலினைக் காணும்போதும், நான் அதற்காக அஞ்சமாட்டேன்; வளையணிந்த மெல்லியலார் கடைக்கண் பார்வையினைக் காணும்போதும், நான் அதற்காக அஞ்சமாட்டேன். ஆனால், தில்லைப் பொன்னம்பலத்தில் திருநடனம் திளைத்தாடும் என்னுடைய துளைபடாத மாணிக்கத்தைப் பலவாறு புகழ்ந்துபாடி, எலும்புகளெல்லாம் உருகுமாறு இரக்கத்துடன் பார்த்து, அவனுடைய இன்னருளைப் பருகமாட்டா அன்பில் லாதவரைக் கண்டால் மட்டுமே நான் அஞ்சுவேன்.

519

கிளியனார் கிளவி அஞ்சேன்
அவர்கிறி முறுவல் அஞ்சேன்
வெளியநீ றாடும் மேனி
வேதியன் பாதம் நண்ணித்
துளியுலாம் கண்ண ராகித்
தொழுதழு துள்ளம் நெக்கிங்
களியிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 4

கிளியினையொத்த மகளிரின் மயக்கும் மொழியினைக் கேட்கும்போதும், நான் அதற்காக அஞ்சமாட்டேன்; அவர்தம் வஞ்சகப் புன்னகையைக் காணும்போதும், நான் அதற்காக அஞ்ச மாட்டேன். ஆனால், வெண்ணீறணிந்த திருமேனியினை உடைய அந்தணனுடைய திருவடிகளை அடைந்து, நீர்த்துளிகள் சிந்தும் கண்கள் கொண்டவராகி, அழுது தொழுது உள்ளம் நெகிழ்ந்து அருளாதவரைக் கண்டால் மட்டுமே நான் அஞ்சுவேன்.

520

பிணியெலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னான்தன்
தொழும்ப ரோடழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 5

எனக்கு எல்லா வகையான நோய்கள் வருமென்றாலும், நான் அதற்காக அஞ்ச மாட்டேன். வினைகள் காரணமாகத் தொடரும் பிறப்புக்கும் இறப்புக்கும் நான் அஞ்ச மாட்டேன். ஆனால், பிறைச்சந்திரனை அணிந்தவனாகிய எம்பெருமானின் அடியவரோடு சேராமலும், அந்தத் திருமால் இந்தச் செறிந்த பூமியைப் பிளந்தவாறு வராக வடிவில் சென்றும் காணமுடியாத அவனுடைய திருவடிகளைப் போற்றாமலும், நெற்றியில் திருநீற்றை அணியாமலும் உள்ளவரைக் கண்டால் மட்டுமே நான் அஞ்சுவேன்.

521

வாளுலாம் எரியும் அஞ்சேன்
வரைபுரண் டிடினும் அஞ்சேன்
தோளுலா நீற்றன் ஏற்றன்
சொற்பதம் கடந்த அப்பன்
தாளதா மரைக ளேத்தித்
தடமலர் புனைந்து நையும்
ஆளலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 6

சுடர்விடும் நெருப்பிற்கும் நான் அஞ்ச மாட்டேன். மலையே புரண்டுருண்டு வந்தாலும் நான் அஞ்ச மாட்டேன். ஆனால், திருநீற்றினை அணிந்த தோள்களை உடையவனும், காளையை வாகனமாகக் கொண்டவனும், சொல்லின் வரம்பினைக் கடந்தவனும், எம்முடைய அப்பனுமாகிய சிவபெருமானின் திருவடித் தாமரைகளைப் புகழ்ந்துபாடி, நறுமண மலர்களைக் கொண்டு வழிபட்டு, உள்ளம் கசிந்துருகி, எம்பெருமானுக்கு அடிமையாகாதவரைக் கண்டால் மட்டுமே நான் அஞ்சுவேன்.

522

தகைவிலாப் பழியும் அஞ்சேன்
சாதலை முன்னம் அஞ்சேன்
புகைமுகந் தெரிகை வீசிப்
பொலிந்தஅம் பலத்து ளாடும்
முகைநகைக் கொன்றை மாலை
முன்னவன் பாத மேத்தி
அகம்நெகா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 7

வரக்கூடாத பழிபாவம் எனக்கு வந்தபோதும், நான் அதற்காக அஞ்ச மாட்டேன். செத்து மடிவதாயினும், நான் அதற்காகச் சிறிதும் அஞ்சமாட்டேன். ஆனால், புகைகொண்ட நெருப்பினைக் கையில் ஏந்தியவாறு, தில்லைப் பொன்னம்பலத்துள் திருநடனம் ஆடுபவனும், நகையினை ஒத்த கொன்றை அரும்புகளை மாலையாகச் சூடியிருப்பவனும், மூத்தவனுமாகிய சிவபெருமானின் திருவடிகளைத் தொழுது, உள்ளம் உருகாதவரைக் கண்டால் மட்டுமே நான் அஞ்சுவேன்.

523

தறிசெறி களிறும் அஞ்சேன்
தழல்விழி உழுவை அஞ்சேன்
வெறிகமழ் சடையன் அப்பன்
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்க ளேத்திச்
சிறந்தினி திருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 8

கற்கம்பத்தில் கட்டப்பட்டிருக்கும் ஆண்யானையைக்கண்டும், நான் அதற்காக அஞ்சமாட்டேன்; நெருப்பினை ஒத்த சிவந்த கண்களையுடைய புலிக்குக்கூட நான் அஞ்சமாட்டேன். ஆனால், நறுமணம் கமழ்கின்ற சடையினை உடையவனும், எம்முடைய அப்பனும், வானவரும் காணவியலாதவனும் ஆகிய சிவபெருமானின் திருவடிகளைப் போற்றித் துதிபாடிச் சிறப்புடன் இனிதாக இருக்கமாட்டா அறிவில்லாதவரைக் கண்டால் மட்டுமே நான் அஞ்சுவேன்.

524

மஞ்சுலாம் உருமும் அஞ்சேன்
மன்னரோ டுறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுத மாக்கும்
நம்பிரான் எம்பி ரானாய்ச்
செஞ்சவே ஆண்டு கொண்டான்
திருமுண்டம் தீட்ட மாட்டா
தஞ்சுவா ரவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 9

கார்முகிலின் உரசலால் உண்டாகும் இடிமுழக்கத்துக்கும் நான் அஞ்ச மாட்டேன். அரசரோடு உண்டாகும் உறவிற்கும் கூட நான் அஞ்சமாட்டேன். ஆனால், ஆலகால நஞ்சினையே ஆரமுதாக்கி உண்டவனும், நம்முடைய தலைவனும், எம்முடைய இறைவனும், செம்மையாக என்னை ஆண்டுகொண்டவனும் ஆகிய சிவபெருமானின் திருநீற்றினை நெற்றியில் தீட்டிக் கொள்ள அஞ்சுபவர் எவரோ, அவரைக் கண்டால் மட்டுமே நான் அஞ்சுவேன்.

525

கோணிலா வாளி அஞ்சேன்
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியி னானை
நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர
வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே. 10

வளையாமல் பாய்கின்ற கூரிய அம்பினைக் காணும்போதும், நான் அதற்காக அஞ்ச மாட்டேன். கூற்றுவனுடைய கடுங்கோபத்தைக் காணும்போதும், சற்றுமே நான் அதற்காக அஞ்சமாட்டேன். ஆனால், நீண்ட பிறைநிலவினைத் தனது சடை முடியில் அணிந்திருப்பவனாகிய எம்பிரானை நினைந்து நினைந்து, நைந்து நைந்து, உருகி உருகிக் கண்ணீரைச் சிந்தி, உடலும் சோர்வடைய வாழ்த்திநின்று, போற்றமாட்டா ஆற்றலற்றவரைக் கண்டால் மட்டுமே நான் அஞ்சுவேன்.

திருச்சிற்றம்பலம்

தி. 20

36. திருப்பாண்டிப் பதிகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

சிவானந்த விளைவு

(கட்டளைக் கலித்துறை)

திரு + பாண்டி + பதிகம் – திருப்பாண்டிப் பதிகம். தென்பாண்டி நாடுடையான் சிவபெருமான். அந்தப் பெருமான், புரவியின்மேல் எழுந்தருளி வந்து, மாணிக்கவாசகப் பெருந்தகையை ஆண்டுகொண்டான். அத்தகைய அருளிப்பாட்டினை வியந்து, மாணிக்கவாசகர் பாடியருளிய பத்துப் பாடல்களின் தொகுப்பு. சிவானந்த விளைவு என்பது, சிவபெருமான் பாண்டிப்பிரானாக வந்தபோது, தமக்குத் தோன்றிய சிவானந்தப் பேரின்பத்தை மாணிக்கவாசகர் விவரிப்பது. இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

526

பருவரை மங்கைதன் பங்கரைப்
பாண்டியற் காரமுதாம்
ஒருவரை ஒன்று மிலாதவரைக்
கழற்போ திறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி
மேற்கொண்ட சேவகனார்
ஒருவரை யன்றி உருவறி
யாதென்றன் உள்ளமதே. 1

மலையத்துவச மாமன்னன் பெற்றெடுத்த மலைமகளாம் உமையம்மையைத் தன்னுடைய ஒரு பாகத்தில் வைத்திருப்பவன்; பாண்டியர்க்குத் தெவிட்டாத தெள்ளமுதமாய்த் திகழும் ஒப்பற்ற ஒருவன்; தனக்கெனக் குணமொன்றும் இல்லாதவன்; குறியும் இல்லாதவன்; அவனுடைய திருவடிகளாகிய மலர்களை நான் போற்றி வணங்கிட எனக்குத் தெளிவான காட்சி தந்தவன். எனது உள்ளத்தை உருக்கியவன்; எனக்கென்று புரவியின் மீதேறி வந்தவன். அந்த வீரன் ஒருவனைத் தவிர, வேறு எந்தத் தெய்வத்தின் வடிவத்தையும், என்னுடைய உள்ளமானது சிறிதும் எண்ணிப் பார்க்காது.

527

சதுரை மறந்தறி மால்கொள்வர்
சார்ந்தவர் சாற்றிச்சொன்னோம்
கதிரை மறைத்தன்ன சோதி
கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடு
மேற்குடி கேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப்
போட மறித்திடுமே. 2

எம்பெருமான், கதிரவனையும் மறைக்கின்ற சோதிப் பிழம்பானவன்; மதுரையர் மன்னனின் மறுபிறவியைப் போக்கியவன்; அத்தகையவன், சூலத்தைக் கையிலேந்திக் குதிரையின்மேல் வந்து, நம்மையும் கூடுவானாகில், நம்முடைய பிறவிப் பிணியும் நீங்கிவிடும். அவனைச் சார்ந்த அடியார் எல்லாம் தம்முடைய ஆற்றலை மறந்தபடி மனமயக்கம் கொள்வர். இதனை வலியுறுத்திக் கூறுவேன்.

528

நீரின்ப வெள்ளத்துள் நீந்திக்
குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர்
பாரின்ப வெள்ளங் கொளப்பரி
மேற்கொண்ட பாண்டியனார்
ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு
தொண்டரை உள்ளங்கொண்டார்
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழ
லேசென்று பேணுமினே. 3

நீங்கள் பேரின்ப வெள்ளத்தினுள் பாய்ந்து மூழ்கியும், நீந்தியும் குளிக்க வேண்டும் என்னும் நெஞ்சத்தைப் பெற்றவராயின், சொல்வதைக் கேட்பீராக! பேரின்ப வடிவினனாகிய பாண்டிப்பிரான், மண்ணுலக மாந்தர் யாவரும் அவ்வின்பத்தை அடையுமாறு, குதிரையின் மீதேறி வந்தவன். அவன் மெய்யடியாரின் உள்ளங்களில் எல்லாம் மேலான ஆட்சிசெய்து வருபவன். பேரின்பமயமாய் விளங்குகின்ற அவனுடைய திருவடிகளிலே அடைக்கலம் புகுந்து, வழிபாடியற்றி வாருங்கள்.

529

செறியும் பிறவிக்கு நல்லவர்
செல்லன்மின் தென்னன்நன்னாட்
டிறைவன் கிளர்கின்ற காலமிக்
காலம்எக் காலத்துள்ளும்
அறிவொண் கதிர்வாள் உறைகழித்
தானந்த மாக்கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார்
புரள இருநிலத்தே. 4

பாண்டிய நாட்டின் நல்லவரே! நீங்கள், வினைப்பயனால் தொடர்கின்ற பிறவிக்குக் காரணமான செயல்களைச் செய்கின்ற வழிகளில் செல்லாதீர். எக்காலங்களிலும் அறிவு ஒளிவீசும் வாளினை உறையினின்றும் எடுத்துக் கொண்டு, பேரின்பக் குதிரையின்மேல் ஏறிக்கொண்டு, பிறவியைப் போக்குபவன் நம்முடைய பெருமான். இடமகன்ற இவ்வுலகில், அத்தகைய இறைவன் ஆட்சி செய்ய வருகின்ற காலமும் இக்காலமே.

530

காலமுண் டாகவே காதல்செய்
துய்ம்மின் கருதரிய
ஞாலமுண் டதனொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டான்எங்கள் பாண்டிப்
பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே. 5

தென்பாண்டி நாட்டின் தேசுடையீர்! வாய்ப்பான காலமும் உண்டானால், அதனை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எம்பெருமானிடம் கனிந்த அன்பினைச் செய்து, கடைத்தேறுங்கள். எண்ணிப் பார்க்கவும் முடியாத அளவிற்கு, மண்ணுலகினையே உண்ட மாலவனையும், நான்முகனையும், விண்ணவரையும் காப்பதற்கு ஆலகால நஞ்சினையே அள்ளியெடுத்து உண்டவன் எங்கள் பாண்டிப்பிரான். அவன் தம்முடைய அடியவர்க்காக முத்திப் பெருஞ்செல்வத்தை வாரி வழங்கிக் கொண்டுள்ளான். பெற்றுக்கொள்ள முந்திக்கொண்டு வருகவே!

531

ஈண்டிய மாயா இருள்கெட
எப்பொரு ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ
னுஞ்சொல்ல வல்லனல்லன்
வேண்டிய போதே விலக்கிலை
வாய்தல் விரும்புமின்தாள்
பாண்டிய னாரருள் செய்கின்ற
முத்திப் பரிசிதுவே. 6

நெருங்கிய மாயை என்னும் இருள் விலகவும், உலகப் பொருள்கள் யாவும் நன்கு விளக்கமுறவும், உள்ளத்தில் ஒளியேற்றிய சுடரை, இன்ன தன்மைகளை உடையவன் என்று பாண்டிய மன்னனும் சொல்லவல்லவன் அல்லன். அவனுடைய திருவடிகளை வேண்டுவோர், வேண்டும்போதே வழிபட எந்தத் தடையும் இல்லை. எனவே, அத்தகைய அரிய வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென விரும்புங்கள். தென்பாண்டி நாட்டானாகிய எம்பெருமான், உங்களுக்கெல்லாம் அருள் செய்யக்கூடிய முத்திப் பரிசு இதுவேயாகும்.

532

மாயவ னப்பரி மேல்கொண்டு
மற்றவர் கைக்கொளலும்
போயறும் இப்பிறப் பென்னும்
பகைகள் புகுந்தவருக்
காய அரும்பெருஞ் சீருடைத்
தன்னரு ளேஅருளுஞ்
சேய நெடுங்கொடைத் தென்னவன்
சேவடி சேர்மின்களே. 7

எம்பெருமான், 'மாயம்' என்னும் அழகிய குதிரையின்மேல் ஏறிவரக் கூடியவன். அவ்வாறு வருகையில், அவன் நம்மைக் கைப்பற்றியவுடனே, பிறவிகள் என்னும் நம்முடைய பகைகள் எல்லாமும் நம்மைவிட்டு விலகிவிடும்.தன்னை அடைந்த அடியவர்க்கெல்லாம், அருமையும் பெருமையும் வாய்ந்த தன்னுடைய அருளையே பெருங்கொடையென வழங்குபவன் அவன். எனவே, அந்தத் தென்பாண்டி நாட்டானின் சிவந்த திருவடிகளை விரைவில் சென்றடைவீராக!

533

அழிவின்றி நின்றதோர் ஆனந்த
வெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக்
கடிய வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன்
பாண்டிப் பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடை
யேசென்று முந்துமினே. 8

எம்பெருமான், அழிவில்லாமல் நிலைத்து நிற்பவன்; நம்மையெல்லாம் பேரின்பப் பெருவெள்ளத்தில் மூழ்கச் செய்பவன்; நீங்காத கருணையினைக் காட்டுபவன்; வல்வினைகள் அனைத்தையும் அகற்றுபவன்; பழைய மலங்களின் பாசத் தளையினை அறுப்பவன்; பாண்டிப் பெருநாட்டினை ஆள்பவன்; உலகம் முழுவதையுமே நமக்களிப்பான். எனவே, அவனுடைய பெருங்கொடையாகிய முத்திச் செல்வத்தினைப் பெறுவதற்கு, விரைவாக முந்திச் செல்லுங்கள்.

534

விரவிய தீவினை மேலைப்
பிறப்புமுந் நீர்கடக்கப்
பரவிய அன்பரை என்புருக்
கும்பரம் பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்திகொ
ளப்பட்ட பூங்கொடியார்
மரவியன் மேல்கொண்டு தம்மையுந்
தாம்அறி யார்மறந்தே. 9

உயிரோடு பொருந்தியுள்ள தீவினையின் காரணமாக உண்டாகின்ற பிறப்பு என்னும் பெருங்கடலைக் கடப்பதற்குப் போற்றி வணங்கிய அடியவரின் எலும்புகளை உருக்குபவனே பாண்டிப்பிரான். அவன் குதிரையின் மேலேறி வருவதைக் கண்ட மகளிரெல்லாம் தம்மைத் தாமே உணராமல், மரத்தினைப் போன்று உணர்வற்ற நிலையில் நின்று கொண்டிருந்தனர் என்பதை அறிவீராக!

535

கூற்றைவென் றாங்கைவர் கோக்களை
யும்வென் றிருந்தழகால்
வீற்றிருந் தான்பெருந் தேவியுந்
தானும்ஓர் மீனவன்பால்
ஏற்றுவந் தாருயி ருண்ட
திறலொற்றைச் சேவகனே
தேற்றமி லாதவர் சேவடி
சிக்கெனச் சேர்மின்களே. 10

எம்பெருமான், கூற்றுவனை வென்றதோடு, ஐம்புலன்களாகிய அரசரையும் வென்றவன். மிகுந்த அழகால் சிறப்புடன் விளங்கியவன். பெருந்தேவியாகிய உமையம்மையும் தானுமாகப் பாண்டிய மன்னனிடம் விருப்பமுடன் வந்து தங்கியவன். தன்னை எதிர்த்து வந்தவரின் உயிர்களை உண்ட ஒப்பற்ற வீரன். எனவே, மனத்தெளிவு இல்லாதவர் யாவராயினும், அவனுடைய சிவந்த திருவடிகளை இந்தக் கணமே சிக்கெனப் பற்றிக் கொள்வதற்கு, விரைவாகச் சென்று சேருங்கள்.

திருச்சிற்றம்பலம்

37. பிடித்த பத்து

(திருத்தோணிபுரத்தில் அருளியது)

முத்திக் கலப்புரைத்தல்

(எழுசீர் விருத்தம்)

பிடித்த +. பத்து – பிடித்தபத்து. இறைவனின் திருவடிகளைப் பற்றிக் கொண்டமை குறித்து, மாணிக்கவாசகப் பெருந்தகை பாடியருளிய பத்துப் பாடல்களின் தொகுப்பு. தோணிபுரம் என்பது சீர்காழி. திரு என்பது சிறப்பு அடைமொழி. முத்திக் கலப்புரைத்தல் என்பது, ஆன்மாக்களுக்கு முத்திப் பேற்றின் சுகத்தைக் கூறுதல். இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. எல்லாப் பாடல்களுமே 'உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே!' என்று முடிவன.

திருச்சிற்றம்பலம்

536

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 1

தேவர்தம் தலைவனே! அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நீக்கமற நிறைந்துள்ள நற்பயனே! உடலில் அழுக்கினையும் உள்ளத்தில் மலமாசினையும் கொண்ட அடியேனுக்குப் புதுமையெனப் பழுத்த பழமே! என்னுடைய குலத்தை முழுமையாக ஆண்டுகொண்டதுடன், மண்ணுலக வாழ்வு நீங்கவும் விண்ணுலக வாழ்வு ஓங்கவும் செய்த அரிய மருந்தே! மெய்ந்நூல்களின் முடிவே! சிறப்பினை உடைய திருவடிகளைக் கொண்டவனே! என்னுடைய பெருஞ்செல்வமே! சிவபெருமானே! யான் கடைத்தேறும் பொருட்டு, உன்னைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். இனிமேலும் நீதான் என்னை விடுவித்துக்கொண்டு, எங்கே செல்லவியலும்?

537

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணம் காத்தெனை ஆண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 2

வெள்ளேற்று வாகனத்தை நீங்காமல் விரும்பிய வானவர் தலைவனே! தீவினையேனாகிய அடியேனின் மெய்ப்பொருளே! புலால் நாற்றம் வீசுகின்ற இந்த உடலின்மேல் பற்று மிகக்கொண்டு, நான் மண்ணாய்ப் போகாமலும், புழுக்கள் நெளிகின்ற உடற்குடிசையில் அடியேன் கிடந்துழன்று கெடாதவாறு என்னைப் பாதுகாத்து ஆண்டுகொண்ட பரம்பொருளே! கருணைப் பெருங்கடலே! இடைவிடாமல் உன்னைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். இனிமேலும் நீதான், என்னை விடுவித்துக் கொண்டு எங்கே செல்லவியலும்?

538

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 3

என்னுடைய அன்னையே! அப்பாவே! ஒப்பில்லாத மாணிக்கமே! அன்புக்கடலில் திரண்டெழுந்த தெவிட்டாத அருளமுதமே! வாழ்க்கையில், பொய்ம்மைச் செயல்களையே மிகுதியாக்கி, வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருக்கும் மிகவும் இழிந்தேனாகிய எனக்கு, நன்மையே ஆகிய சிவஞானப் பேற்றினை வழங்கிய செல்வமே! சிவபெருமானே! இப்பிறவியிலேயே உன்னைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டேன். இனிமேலும் நீதான், என்னை விடுவித்துக் கொண்டு, எங்கே செல்லவியலும்?

539

அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே
பெருந்திறல் அருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 4

அருள்கொண்ட அரசே! கனிந்ததொரு பழமே! பெருவலிமை படைத்த தவயோகியரின் மன்னவனே! மெய்ப்பொருள் கொண்ட தத்துவமே! புகழ்ச்சியினைக் கடந்ததொரு பேரின்பமே! நற்பயனின் எழுச்சியே! மனந்தெளிந்த அடியாரின் நெஞ்சத்தில் குடிபுகுந்த பெருஞ்செல்வமே! சிவபெருமானே! அறியாமை இருளில் மூழ்கியுள்ள அடியேன், உன்னைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். இனிமேலும் நீதான், என்னை விடுவித்துக் கொண்டு, எங்கே செல்லவியலும்?

540

ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப்பதம் அறியா வீறிலி யேற்கு
விழுமிய தனித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 5

ஒப்புமை கூறுவதற்கு எப்பொருளும் இல்லாத ஒப்பற்றவனே! என்னுடைய உள்ளத்தினுள்ளே ஒளிபரப்பும் ஒளியே! மெய்ம்மொழியினை அறியவியலாத உணர்வினேனுக்கு, மேலான மெய்ப்பொருளை வழங்கிய உயரன்பே! சொல்வதற்கரிய சுடர்மூர்த்தமே! செல்வமே! சிவபெருமானே! இளைத்துச் சலித்தபோது, உன்னைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். இனிமேலும் நீதான், என்னை விடுவித்துக் கொண்டு, எங்கே செல்ல முடியும்?

541

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா ஆனந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழுதாண்ட
பிஞ்ஞகா பெரியஎம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 6

ஆதரவற்றேனாகிய என்னுடைய உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு, என்னை ஆண்டுகொண்டவனும் நீயே! அளவற்ற பேரின்பத்தை அருளியவனும் நீயே! என்னுடைய பிறப்பு வேரினை அறுத்தெறிந்து, எனது குலம் முழுவதையும் ஆட்கொண்ட சிவபெருமானே! இறுதி வாய்ப்பாக உன்னைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். இனிமேலும் நீதான், என்னை விடுவித்துக் கொண்டு, எங்கே செல்ல முடியும்?

542

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 7

பாசமாம் பற்றின் வேரினை அறுக்கின்ற பழம்பொருளினைப் பற்றிக் கொள்ளுமாறு அடியேனுக்கு அருள்செய்தவனே! எனது பூசனையை விரும்பி, எனது நெஞ்சத்திலும் குடிகொண்டதோடு, பூவினையொத்த மெல்லடிகளையும் காட்டியருளிய மெய்ப்பொருளே! ஒளியினை வழங்கும் திருவிளக்கே! செம்மைச் சுடர்விடும் மூர்த்தமே! இணையற்ற செல்வமே! சிவபெருமானே! முன்னவனே! உன்னைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். இனிமேலும் நீதான், என்னை விடுவித்துக் கொண்டு, எங்கே செல்ல முடியும்?

543

அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதும் ஈறில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 8

அப்பனே! உலகங்களும் உலகப் படைப்புகளுமாய் நின்ற முதற்பொருளே! எவ்வகையானும் முடிவில்லாத அறிவுருவானவனே! அடியவரெல்லாம் சிக்கெனப் பிடித்துக்கொண்ட செல்வமே! சிவபெருமானே! பித்தனே! உலகத்தின் எல்லா உயிரினங்களுமாய்ப் பெருகியும், பிழைத்தவாறும், பின்னர் அவை அனைத்துமே அல்லாதனவாய் அழித்தவாறும் வினைகள் புரியும் எத்தனே! அடியேன் உன்னைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன். இனிமேலும் நீதான், என்னை விடுவித்துக் கொண்டு, எங்கே செல்ல முடியும்?

544

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 9

தன் குழந்தைக்குப் பசியெடுக்கும் நேரத்தைச் சரியாக நெஞ்சில் நினைவு கொண்டு, பாலூட்டும் தாயைவிடவும் என்மேல் அளவிலாப் பாசத்தைக் காட்டிய பெருமானே! பெரும்பாவியேனாகிய அடியேனின் உடலினை உருக்கியவனே! உள்ளத்தின் ஒளியைப் பெருக்கியவனே! அழிவில்லாத பேரானந்தம் என்னும் நறுந்தேனைச் சொரிந்தவனே! எனது பார்வையில் படாமல், பல்வேறு வெளியிடங்களில் திரிந்த செல்வமே! சிவபெருமானே! அடியேன் உன்னைத் தொடர்ந்தவாறு சிக்கெனப் பிடித்துக்கொண்டேன். இனிமேலும் நீதான், என்னை விடுவித்துக் கொண்டு, எங்கே செல்ல முடியும்?

545

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்
தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 10

புலால் மணங்கொண்ட புல்லிய என் உடலின் ஒவ்வோர் அணுவையும் கனிய வைத்தவனே! அந்த உடலினையே பொற்கோயிலாய் எண்ணிப் புகுந்தவனே! என் எலும்புகளை உருகச் செய்து, எளிமையாய் ஆண்டுகொண்ட முன்னவனே! மாசு மருவற்ற மாணிக்கமே! பிறப்பு, இறப்பு, மயக்கம் என்று தொடங்கித் தொடர்கின்ற எல்லாத் துன்பங்களையும் அறுத்தெறிந்த நல்லொளியே! என் பேரின்பமே! உன்னைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டேன். இனிமேலும் நீதான், என்னை விடுவித்துக் கொண்டு, எங்கே செல்ல முடியும்?

திருச்சிற்றம்பலம்

38. திருவேசறவு

(திருப்பெருந்துறையில் அருளியது)
சுட்டறிவு ஒழித்தல்

(கொச்சகக் கலிப்பா)

திரு + வேசறவு – திருவேசறவு. வேசறவு – மனச்சோர்வு. மனச்சோர்வு நீங்க, மனம் நெகிழ்ந்து இரங்குதல். மாணிக்கவாசகப் பெருந்தகை, திருப்பெருந்துறைப் பெருமானிடம், தம்முடைய மனச்சோர்வு நீங்க, மனம் நெகிழ்ந்து இரங்கி வேண்டிக் கொள்வது. இதனை ஏசறவு என்பாரும் உளர். சுட்டறிவு ஒழித்தல் என்பது, தனது செயலற நிற்றல். அதாவது ஆன்மாவானது இறையருள் வண்ணமாய் அடங்கப் பெற்றுத் தான் ஏதொன்றையும் சுட்டி அறிய முடியாத நிலையினை வெளிப்படுத்துதல். இப்பகுதியில் பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

546

இரும்புதரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினைஉன் கழலிணைகள்
ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவா றன்றேஉன் பேரருளே. 1

ஒருசேர அலைகள் தவழ்கின்ற கங்கையாற்றைத் தனது சடைமுடியில் உடையவனே! இரும்பினைப் போன்ற இறுகிய மனம் படைத்த என்னை, உன்பால் கவர்ந்து கொண்டாய். என்னுடைய எலும்புகளை இறுகச் செய்தாய். கரும்பினைப் போன்ற நறுஞ்சுவையினைத் தருகின்ற உன்னுடைய திருவடிகளை எனக்குக் காட்டினாய். உனது பேரருளினால், அந்நாளில் சிறிய நரிகளையெல்லாம் என்பொருட்டுப் பெரிய பரிகளாக மாற்றியருளினாய்.

547

பண்ணார்ந்த மொழிமங்கை பங்காநின் ஆளானார்க்
குண்ணார்ந்த ஆரமுதே உடையானே அடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்நீ வாவென்னக்
கண்ணார உய்ந்தவா றன்றேஉன் கழல்கண்டே. 2

இசை பொருந்திய மொழியினைப் பேசுகின்ற உமையம்மையை ஒரு பாகமாக உடையவனே! உன்னுடைய அடியவர்க்கு உண்ணத்தகுந்த தெவிட்டாத அமுதமாக விளங்குபவனே! என்னை அடிமையாக உடையவனே! அடியேனை மண்ணுலகில் பிறவாமல் பிறப்பினை அறுத்தெறிந்து, ஆண்டுகொள்பவனே! அன்றொருநாள் 'நீ வருக!' என்று என்னை அழைக்கவும், அப்போது உன்னுடைய திருவடிகளை என் கண்கள் நிறைந்தவாறு கண்டே, நான் கடைத்தேறினேன்.

548

ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற்கு ஆஆவென்று
ஓதமலி நஞ்சுண்ட உடையானே அடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேஎம் கழல்கண்டே. 3

எம்முடைய மேலான இறைவனே! என்னை அடிமையாக உடையவனே! நான், எவ்வித ஆதரவும் இல்லாதவன். பிறப்பு, இறப்பு என்னும் கொடிய நரகத்தில், உறவினர் என்று சொல்லிக்கொள்ள எவர் ஒருவரும் இல்லாமல், துன்பத்தில் மூழ்கியிருந்தேன். திருப்பாற்கடலில் திரண்டெழுந்த ஆலகால நஞ்சினை அமுதமாக உண்டவனே! அன்றொரு நாள் 'ஐயோ!' என்று என்மீது இரக்கங்கொண்டு, உன்னுடைய திருவடி மலர்களைக் காட்டி, என்னை ஆண்டுகொண்ட அதிசயந்தான் என்னே?

549

பச்சைத்தால் அரவாட்டீ படர்சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக்கொண்டு
எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோஎன்
சித்தத்தா றுய்ந்தவா றன்றேஉன் திறம்நினைந்தே. 4

பசிய நாவினையுடைய பாம்பினை ஆட்டுபவனே! விரிசடையை உடையவனே! மலரடிகள் கொண்டவனே! மேலோர்தம் பெருமானே! அடியேனை ஆண்டு கொள்வாய். குறைபாடுகளை உடைய சிறுதெய்வங்களைப் போற்றி வணங்காமல், உன்னை மட்டுமே போற்றி வணங்கினேன். எனவே, எனது உள்ளம் எண்ணியபடியே கடைத்தேறினேன். இதுவும் என்ன அதிசயமோ?

550

கற்றறியேன் கலைஞானம் கசிந்துருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்து
உற்றிருமாந் திருந்தேஎம் பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே. 5

எம்முடைய பெருமானே! உன்னைப் பற்றிய மெய்யறிவு நூல்களை அடியேன் கற்றறிந்தேனல்லேன். உள்ளத்தில் அன்புமிக்குக் கசிந்துருகினேனல்லேன். ஆனபோதிலும், உன்னையொழிய வேறு தெய்வம் எதனையும் அறியேன்.

உன்னுடைய அருள்வாக்கினால், உன் திருவடிகளை வந்தடைந்தேன். அதன் காரணமாகச் செருக்குற்றும் இருந்தேன். இருந்தபோதிலும், நாய்க்குப் பொன்னிருக்கை இடுவதுபோல், எனக்கும் உன்னுடைய பொன்னருளை அன்றே வழங்கினாய். இதுவும் என்ன அதிசயமோ?

551

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின்னருளால்
உய்ஞ்சேன்எம் பெருமானே உடையானே அடியேனை
அஞ்சேலென் றாண்டவா றன்றேஅம் பலத்தமுதே. 6

எம்பெருமானே! என்னை அடிமையாக உடையவனே! தில்லைப் பொன்னம்பலத்துத் தெள்ளமுதே! பஞ்சினையொத்த அடிகளைக் கொண்ட மகளிரின் கடைக்கண்களால் தாக்குற்றுத் துன்பமுற்று, நஞ்சினையொத்த துன்பம் உண்டாக நடுங்கினேன். உன்னுடைய பேரருளால் அத்துன்பத்தினின்றும் தப்பிப் பிழைத்தேன். 'அஞ்சாதே!' என்று, அன்றைய நாள் அடியேனை நீதான், ஆண்டு கொண்ட அதிசயந்தான் என்னே!

552

என்பாலைப் பிறப்பறுத்திங் கிமையவர்க்கும் அறியவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமான்
அன்பால்நீ அகம்நெகவே புகுந்தருளி ஆட்கொண்ட
என்பாலே நோக்கியவா றன்றேஎம் பெருமானே 7

எம்முடைய பெருமானே! விண்ணவராலும் அறியவியலாத சிறப்புக்குரியவனே! தென்திசையில் விளங்குகின்ற திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே! நீ என்னிடம் கொண்டுள்ள அன்பினால் என்னுடைய உள்ளத்தில் குடிபுகுந்தாய்; அதனையும் நெகிழச்செய்து, ஆண்டுகொண்டாய். அவ்வாறு என்னை ஆண்டு கொண்டதற்கும், அன்றைய நாளே என்மீது கருணைப் பார்வை செலுத்தியமைக்கும் என்ன காரணம் என்பதை அடியேன் அறியவில்லையே!

553

மூத்தானே மூவாத முதலான முடிவில்லா
ஒத்தானே பொருளானே உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தேநீ ஆண்டவா றன்றேஎம் பெருமானே. 8

எம்முடைய பெருமானே! உலகத் தோற்றத்திற்கும், தோற்றப் பொருள்களுக்கும் மூத்தவனே! மூப்பில்லாத முதல்வனே! இறுதியில்லா மறைகளாகவும், மறைகளின் பொருள்களாகவும் விளங்குபவனே! அடியவர்க்கு உள்ள பொருளாகவும், அல்லாதவர்க்கு இல்லாத பொருளாகவும் இருப்பவனே! உலகத்தில் பிறந்து, வாழ்க்கையில் சிக்குண்டு, துன்பத்தில் புரண்டிருந்தேனைக் கருணைத் திறத்தால் மாற்றம் செய்து, அன்றே நீயும் ஆண்டுகொண்ட உனது பெருந் தன்மைதான் என்னே!

554

மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமா னென்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமாறு
அருளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட அம்மானே. 9

திருவிடைமருதூரையே உறைவிடமாகக் கொண்ட எம்முடைய தந்தையே! மெய்யன்பால் போற்றப்படும் மணம்பொருந்திய, இனிமையான உன்னுடைய மலரடிகள், என் மனத்தில் வளர்ந்தவாறு அவை என் உள்ளத்தை உருக்கின. நான் வீதிதோறும் திரிந்தும் அலைந்தும் ஓங்கி அலறியபடி, 'சிவபெருமானே!' என்று கூறி, உன்னைப் போற்றி வணங்கினேன். அவ்வமயம் உனது மேலான அருளமுதையும் உண்டேன். மேலும் உன்னுடைய கருணைப் பெருங்கடலில் நான் மூழ்குமாறு, இங்கு எனக்கு அத்தகைய அருளினை வழங்குவாயாக!

555

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே. 10

நறுந்தேனாகவும், இனிக்கின்ற அமுதமாகவும் தித்திக்கின்ற சிவபெருமான், தானாகவே வந்து, என்னுடைய உள்ளத்தில் புகுந்துகொண்டான். இந்த உடலோடு கூடிய உயிர் வாழ்க்கையினை அடியேன் வெறுக்குமாறே, அருளினை வழங்கினான். நானோ, அவனைக் குறித்து எத்தகைய தவச்செயலையும் செய்தேனல்லேன். அப்படியிருந்தும் அவன் மூலம், 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்தின் மந்திரம் உச்சரிக்கப் பெற்றேன். இவ்வாறு வாய்க்கப் பெற்றதும் அவனருளன்றோ!

திருச்சிற்றம்பலம்

39. திருப்புலம்பல்

(திருவாரூரில் அருளியது)

சிவானந்த முதிர்வு

(கொச்சகக் கலிப்பா)

திரு + புலம்பல் – திருப்புலம்பல், தனிமைத் துயரில் கிடந்து வருந்துதலே புலம்பல். சிவபெருமான் குருவாய் வந்து, மாணிக்கவாசகப் பெருந்தகையை ஆண்டுகொண்டான். பின்னர் அவரைப் பிரிய நேர்ந்தமைக்காக, மாணிக்கவாசகர் தம்முடைய தனிமைத் துயருக்கு மிகவும் நொந்து பாடியது. சிவானந்த முதிர்வு என்பது, சிவானந்தம் முதிர்ச்சியடைந்தமை அல்லது பக்குவப்பட்டமை. இப்பகுதியில், மூன்று பாடல்களே இடம்பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

556

பூங்கமலத் தயனொடுமால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண் ணீறாடி
ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேன்நின்
பூங்கழல்கள் அவையல்லா தெவையாதும் புகழேனே. 1

மெல்லிய இதழ்களைக் கொண்ட வெண்டாமரை மலரில் விளங்குகின்ற நான்முகனோடு, திருமாலும் அறிந்துகொள்ள இயலாத நெறியினை உடையவனே! கோங்கின் அரும்பினைப் போன்று குவிந்துள்ள கொங்கைகளை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டிருப்பவனே! திருநீற்றினை விருப்பமுடன் பூசிக்கொள்பவனே! உயர்ந்தோங்கிய மதில்கள் சூழ்ந்துள்ள திருவாரூரில் உறைபவனே! அடியேன் உன்னுடைய மலரினையொத்த திருவடிகளைத் தவிர, வேறு எப்பொருளாயினும், அதனைப் போற்றிப் புகழமாட்டேன்.

557

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேன் நான்
உடையானே உனையல்லா துறுதுணைமற் றறியேனே. 2

விரிசடை உடையவனே! நெருப்பிடை நின்று ஆடல் புரிபவனே! மூன்று பிரிவுகளாய் விளங்கி, ஒளிவீசும் சூலப்படையினை உடையவனே! பெருமிதச்

சுடரே! உயிர்க்குலத்தின் தலைவனே! இளமையான வெள்ளேற்றினை வாகனமாகக் கொண்டவனே! பரந்து செறிந்த சோலைகள் சூழ்ந்துள்ள திருப்பெருந்துறையில் விளங்குபவனே! என்னை அடிமையாக உடையவனே! உன்னையல்லாமல் எனக்கு உற்றதொரு துணையாக, வேறெவரையும் அடியேன் நான் அறியமாட்டேன்.

558

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. 3

திருக்குற்றாலத் திருத்தலத்தில், விருப்பமுடன் உறைகின்ற கூத்தனே! என்னுடைய உறவின்முறையினரையும் யான் விரும்பமாட்டேன்; எனது ஊரினையும் யான் விரும்பமாட்டேன்; எனது பெயரினையும் யான் விரும்பமாட்டேன்; கற்றறிந்தவரையும் யான் விரும்பமாட்டேன். உன்னுடைய திருவருட்பேற்றினை மட்டுமே தெரிந்துகொள்ள, வழிமுறைகள் எனக்கு அமைவனவாக! ஒலிக்கின்ற கழல்கள் புனைந்த உன்னுடைய திருவடிகளுக்கே, புனிற்றிளங்கன்றினை உடைய தாய்ப்பசுவின் மனம்போல், உள்ளம் நெகிழ்ந்துருக வேண்டுமென இறைவா! உன்னைப் போற்றித் துதிக்கின்றேன்.

திருச்சிற்றம்பலம்

40. குலாப் பத்து

(தில்லையில் அருளியது)
அனுபவம் இடையீடு படாமை

(கொச்சகக் கலிப்பா)

குலா + பத்து – குலாப்பத்து. குலாவுதல் என்பது தொழிற்பெயர். குலாவு – பகுதி; தல் – தொழிற்பெயர் விகுதி. குலாவு என்னும் பகுதியே, கடை குறைந்து, குலா என ஆயிற்று. குலாவுதல் என்பதற்கு, மகிழ்தல் என்று பொருள். மாணிக்கவாசகப் பெருந்தகை, தில்லையம்பலத்தில் ஆடல்வல்லானின் அருங்கூத்தினைக் கண்டு மகிழ்ந்து; தம்முடைய உள்ளத்துப் பேருவகையினை வெளிப்படுத்தி, அவனைப் போற்றிப் பாடிய பத்துப் பாடல்களின் தொகுதி. அனுபவம் இடையீடு படாமை என்பது, இடைவெளியின்றி பற்றுக் கொள்ளும் தன்மை. அதாவது, சிவானந்த அனுபவம் இடைவெளியின்றி ஏற்பட்ட திறம். இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. எல்லாப் பாடல்களும் 'குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே' என்று முடிந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

559

ஓடுங் கவந்தியுமே உறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே எனத்தெளிந்து
கூடும் உயிருங் குமண்டையிடக் குனித்தடியேன்
ஆடுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 1

கைகளில் திருவோடும், இடுப்பில் கந்தலாடையுமே எனக்கு உறவாவன என்று நினைத்திருந்தேன். ஆனால், உள்ளம் நெகிழ்ந்து உருக்கமுடன் தேடக்கூடிய பொருள்களாவனவும் சிவனுடைய திருவடிகளே என்று தெளிவடைந்தேன். உடலும் உயிரும் மகிழ்ச்சிக் கூத்தாட, அடியேனும் வளைந்தாடியவாறே சென்று, மகிழ்தில்லை ஆண்டவனைப் பற்றிக் கொண்டேன்.

560

துடியேர் இடுகிடைத் தூய்மொழியார் தோள்நசையால்
செடியேறு தீமைகள் எத்தனையுஞ் செய்திடினும்
முடியேன் பிறவேன் எனைத்தனதாள் முயங்குவித்த
அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 2

உடுக்கையினைப் போன்ற சிற்றிடையினையும், நன்மொழிகளையும் உடையவராகிய இளமகளிரின் தோள்களைத் தோய்ந்திடும் பெருவியப்பால், பாவங்கள் சேர்வதற்குரிய தீரச்செயல்கள் பலவும் செய்தேன். ஆயினும், மீளவும் பிறக்கமாட்டேன். என்னைத் தன்னுடைய திருவடிகளைப் பற்றிக் கொள்ளச் செய்தவன் அந்த மகிழ்தில்லை ஆண்டவனே ஆவான். அடியேனும் அவனை விட்டுவிடாமல் பற்றிக் கொண்டேன்.

561

என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 3

என்னுடைய எலும்புகளின் உள்புகுந்தும் அவற்றை உருக்கினான். நல்வினை தீவினைகளாகிய இருவகை வினைகளின் ஆற்றலையும் அழித்தான். என் துன்பங்களையும் போக்கினான். இனிமேல் வருவனவற்றையெல்லாம் தூய்மை செய்தான். முன்னர் உண்டான துன்பங்கள் முழுமையும் அழியுமாறு என் உள்ளத்தில் குடிபுகுந்தான். என்பால் அன்புடைய அந்த மகிழ்தில்லை ஆண்டவனை அடியேனும் பற்றிக் கொண்டேன்.

562

குறியும் நெறியுங் குணமுமிலாக் குழாங்கள்தமைப்
பிறியும் மனத்தார் பிறிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தில் உருத்தமுதாஞ் சிவபதத்தை
அறியுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 4

குறிக்கோளும், ஒழுக்கமும், பண்பும் இல்லாதவராயும், தம்முடைய உற்றார் உறவினரைப் பிரிந்து வரக்கூடியவராயும் உள்ள அடியவர் கூட்டத்தைப் பிரிந்து செல்ல விரும்பாத தன்மையினைக் கொண்டவன். செறிவாக எண்ணத்தில் தெவிட்டாத அமுதமாக உருவான சிவபதமானவன். அடியவரால் அறிந்து கொள்ளத்தக்கவன். அத்தகைய மகிழ்தில்லை ஆண்டவனை அடியேன் பற்றுக்கோடாகக் கொண்டேன்.

563

பேருங் குணமும் பிணிப்புறும்இப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டரெல்லாம்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
ஆரும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 5

பெயரையும் பண்பினையும் பிரிக்கின்ற இந்தப் பிறப்பு என்னும் கட்டினை அறுத்தொழித்தவன். பிறப்பினால் நான் கொண்டிருந்த குற்றங்களையெல்லாம்

அறுத்தவன். அடியவரெல்லாம் ஒன்றுகூடுமாறு சிவானந்தம் என்னும் கருணைத் தேனைப் பருகிடச் செய்தவன். தில்லைப் பதியின் தலைவன் அவன். அத்தகைய மகிழ்தில்லை ஆண்டவனை அடியேன் கெட்டியாகப் பற்றிக் கொண்டேன்.

564

கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ணம் நானணுகும்
அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 6

கொம்பில் அரும்பு தோன்றும்; அரும்பானது பின்னர் மலராகும்; மலரானது அதன்பின்னர்க் காயாகும்; காயானது இறுதியில் கனியாகும். பின்னர் உதிர்ந்து அழிந்துவிடும். அதனைப் போல அடியேனும், முதிர்ச்சியடைந்து அழிந்துவிடாமல் இருப்பதற்காக, நம்பிக்கையுடைய என்னுடைய மனமும் நானும் சென்றுசேர எளிமையாக விளங்குபவன். அந்த அழகுமிக்க தில்லையம்பதியில் உறைபவன். அத்தகைய மகிழ்தில்லை வாழ்வானை அடியேன் இறுக்கமாகப் பற்றிக் கொண்டேன்.

565

மதிக்குந் திறலுடைய வல்லரக்கன் தோள்நெரிய
மிதிக்குந் திருவடி என்தலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாசம் ஒன்றுமிலோம் எனக்களித்திங்
கதிர்க்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 7

ஏதிலாரும் மதிக்கின்ற பேராற்றலுடைய பேரரக்கன் இராவணன். அப்படிப்பட்டவனுடைய தோள்கள் நசுங்குமாறு அந்நாள் மிதித்தது அவனது திருவடி. அந்தத் திருவடி இந்நாள் என் தலைமேல் இருக்க, அதனால் பெருகுகின்ற பசு, பாசம் என்பவற்றுள் ஏதொன்றும் எமக்கில்லை. அத்தகைய நினைவால் களிப்படைந்து, ஆரவாரம் செய்கின்ற மகிழ்ச்சிமிக்க தில்லைப்பதியில் விளங்குகின்ற ஆண்டவனை அடியேன் சிக்கெனப் பற்றினேன்.

566

இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி என்தலைமேல் நட்டமையால்
கடக்குந் திறல்ஐவர் கண்டகர்தம் வல்லரட்டை
அடக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 8

நிலத்தைத் தோண்டுகின்ற தன்மையினைக் கொண்ட, கடுவலிமையுடைய பன்றியின்பின் அந்நாளில், கானகத்தில் நடந்து சென்றன அவனுடைய திருவடிகள். இந்நாளில் அவற்றை என் தலையின்மேல் வைத்தவன். அதன் காரணமாக என்னை வெல்லத் துடித்த ஐம்பொறிகளாகிய வேடரின் வெறிச்செயல்களை அடக்கியவன். அத்தகையவன் தில்லைப் பதியில் உறைபவனே. அந்த மகிழ்வுக்குரிய தில்லையாண்டவனை, எனக்கு உறுதுணையாகப் பற்றிக் கொண்டேன்.

567

பாழ்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிளியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்தலையால்
ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 9

பாழ்பட்ட நிலத்தைப் பண்படுத்தி உழைத்தே, பயனற்றவனாய்க் கிடக்கின்ற அடியேனுக்கு, முன்னர்ச் செய்த தவப்பயனால் வரவேண்டிய வளமும் வந்து சேர்ந்தது. செந்தாமரையினை ஒத்த திருவடிகளை உடைய சைவனுக்கு, எனது புன்மைத் தலையால் தொண்டுபுரியக் களிப்புமிக்க தில்லையம்பதியில் உறைகின்ற ஆண்டவனை அடியேன் இறுக்கமாகப் பற்றிக் கொண்டேன்.

568

கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்
அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 10

திரட்சியும் வரிகளும் கொண்ட கொங்கைகளையும், கொம்பினை நிகர்த்த உடலினை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்ட எம்பெருமானுக்கு, என்னுடைய தூய்மையான உள்ளத்தால் திருத்தொண்டுகள் செய்பவன் நான். அடியேனுக்கு இந்தப் பிறவியில் உண்டாகின்ற தீவினைப் பயன்கள் எல்லாவற்றையும் போக்கி, என்னை அரவணைத்துக் கொள்ளும் அன்னையைப் போன்றவன் அவன். அத்தகைய மகிழ்ச்சிக்குரிய தில்லைப்பதியின் நாயகனை நான் உறுதியாகப் பற்றிக் கொண்டேன்.

திருச்சிற்றம்பலம்

41. அற்புதப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)
அனுபவம் ஆற்றாமை

(அறுசீர் விருத்தம்)

அற்புதம் + பத்து – அற்புதப்பத்து, ஆண்டவனின் அற்புதங்களை அதிசயித்துப் பாடிய பத்துப் பாடல்களின் தொகுப்பு. இம்மையில் உலக இன்பமே பெரிய இன்பமெனக் கருதியிருந்த மாணிக்கவாசகப் பெருந்தகைக்கு, இறைவன் மறுமையின் மெய்யறிவை வழங்கி ஆண்டுகொண்டது அதிசயமாகும். அத்தகு அதிசயத்தைப் பாடுவதே இந்த அற்புதப்பத்து. அனுபவம் ஆற்றாமை என்பது, சிவானந்த அனுபவம் பொங்கிப் பெருகும்போது, அஃது எப்படிப்பட்டது என்பதைச் சொல்லவியலாமல் ஏங்குதல். இப்பகுதியில், பத்துப்பாடல்கள் உள்ளன. முதல் இரண்டு பாடல்கள், 'அற்புதம் விளம்பேனே' எனவும், ஏனைய எட்டுப் பாடல்கள், 'அற்புதம் அறியேனே' எனவும் முடிந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

569

மைய லாய்இந்த மண்ணிடை
வாழ்வெனும் ஆழியு ளகப்பட்டுத்
தைய லாரெனுஞ் சுழித்தலைப்
பட்டுநான் தலைதடு மாறாமே
பொய்யெ லாம்விடத் திருவருள்
தந்துதன் பொன்னடி யிணைகாட்டி
மெய்யெ னாய்வெளி காட்டிமுன்
நின்றதோர் அற்புதம் விளம்பேனே. 1

நான் அறியாமை மயக்கம் கொண்டவனாய், இந்த உலக வாழ்வென்னும் ஆழ்கடலுள் சிக்கிக் கொண்டேன். 'மகளிர்' என்னும் சுழற்காற்றிலும் அகப்பட்டுக் கொண்டேன். அவற்றால் நான் தடுமாற்றம் அடையாமல் இருக்குமாறு, என்பால் நாடிகொண்டிருந்த புன்மைகள் எல்லாம் எம்பெருமான் நீங்குமாறு செய்தான். அவன் எனக்குத் திருவருளினைத் தந்து, பொன்னார் திருவடிகளையும் காட்டினான். மெய்யனாய்த் தோன்றி, என்முன் வெளிப்படையாகக் காட்சி கொடுத்தான். அத்தகையவனுடைய அதியற்புதங்களை எல்லாம், என்னால் தொகுத்துக் கூறவும் இயலவில்லையே!

570

ஏய்ந்த மாமல ரிட்டுமுட்
டாததோர் இயல்பொடும் வணங்காதே
சாந்த மார்முலைத் தையல்நல்
லாரொடுந் தலைதடு மாறாகிப்
போந்து யான்துயர் புகாவண்ணம்
அருள்செய்து பொற்கழ லிணைகாட்டி
வேந்த னாய்வெளி யேஎன்முன்
நின்றதோர் அற்புதம் விளம்பேனே. 2

பொருந்திய நறுமண மலர்களைத் தூவித் தடைப்படாத வண்ணம், இயல்பாக அவனை நானும் வழிபடவில்லை. சந்தனம் பூசிய கொங்கைகளை உடைய மகளிருடன் கூடித் தடுமாற்றத்திற்கு ஆளாகித் துயர்க்கடலில் மூழ்காவண்ணம், அவன் எனக்கு அருளினை வழங்கினான். அவனுடைய பொன்னார் திருவடிகளையும் எனக்குக் காட்டியருளினான். பேரரசன் போல வெளிப்படையாகவே, அவனும் எனக்குக் காட்சி தந்தான். ஒப்பிலாதவனாகிய அவனுடைய அதியற்புதங்களை எல்லாம், என்னால் எடுத்துக் கூறவும் இயலவில்லையே!

571

நடித்து மண்ணிடைப் பொய்யினைப்
பலசெய்து நானென தெனுமாயக்
கடித்த வாயிலே நின்றுமுன்
வினைமிகக் கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை
தேடிய அரும்பொருள் அடியேனை
அடித்த டித்துஅக் காரமுன்
தீற்றிய அற்புதம் அறியேனே. 3

இவ்வுலகில், நல்லவனாய் நடித்துப், பொய்ச்செயல்கள் பலவற்றையும் செய்தேன். யானென்றும் எனதென்றும் சொல்லக் கூடிய மாயப்பாம்புகள் கடித்த கடிவாயிலே, முன்வினைப்பயன் என்னும் நஞ்சானது தோன்றியது. அதனால், அழுதுபுலம்பி அழுதேனை நீ பற்றிக் கொண்டாய். என் கண் முன்னரும் நின்றாய். அந்தப் பெருமைமிக்க மறைகள் தேடியும், காண்பதற்கு மிகவும் அரியவனாக விளங்கிய நீயும், அடியேனை அடித்து அடித்துச் சர்க்கரையினைச் சுவைக்கச் செய்தாய். அத்தகைய அதியற்புதங்களை எல்லாம் அடியேனால் எடுத்துக் கூறவும் இயலவில்லையே!

572

பொருந்தும் இப்பிறப் பிறப்பிவை
நினையாது பொய்களே புகன்றுபோய்க்
கருங்கு ழலினார் கண்களால்
ஏறுண்டு கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பவை
சிலம்பிடத் திருவொடும் அகலாதே
அருந்து ணைவனாய் ஆண்டுகொண்
டருளிய அற்புதம் அறியேனே. 4

தொடர்ந்து வந்து என்னைப் பொருந்துகின்ற பிறப்பு இறப்பு என்பவை பற்றி நான் நினைக்காமல், பொய்யுரைகளையே பேசி வந்தேன். கருங்கூந்தலை உடைய மகளிரிடம் சென்று, அவர்தம் கண்களால் தாக்குண்டு கிடந்தேன். அதன் காரணமாகக் கலக்கமுற்றுக் கிடந்தேனை, உன்னுடைய திருந்திய சேவடிகளில் இருக்கும் சிலம்புகள் ஒலித்திட, உமையம்மையொடும் பிரியாமல் சேர்ந்துவந்து, அந்நாளில் ஆண்டுகொண்டு அருளினாய். அத்தகைய அற்புதச் செயலை அடியேனால் எடுத்துரைக்கவும் இயலவில்லையே!

573

மாடுஞ் சுற்றமும் மற்றுள
போகமும் மங்கையர் தம்மோடுங்
கூடி அங்குள குணங்களால்
ஏறுண்டு குலாவியே திரிவேனை
வீடுதந் தென்றன் வெந்தொழில்
வீட்டிட மென்மலர்க் கழல்காட்டி
ஆடு வித்தென தகம்புகுந்
தாண்டதோர் அற்புதம் அறியேனே. 5

பல்வகைச் செல்வங்களையும், உற்றார் உறவினரையும், மற்றுமுள்ள இன்பங்களையும், மகளிரொடு சேர்வதையும் நான் பெரிதாக விரும்பினேன். அவற்றுக்கென ஆங்காங்கே உள்ள குணங்களால் மிகவும் தாக்குண்டேன். ஆனாலும்கூட, அவற்றையே திரும்பவும் விரும்பிக் கொண்டாடித் திரிந்து வந்தேன். அப்படிப்பட்ட அடியேனுடைய கொடுஞ்செயல்கள் அழியுமாறு, உன்னுடைய மெல்லிய மலர்போன்ற திருவடிகளைக் காட்டி, என்னையும் ஆட வைத்தாய். என் உள்ளத்தினுள்ளும் புகுந்துகொண்டாய். என்னை ஆண்டுகொண்டாய். வீடுபேற்றினையும் வழங்கினாய். அத்தகைய அற்புதத்தை எவ்வாறு உரைப்பதென அறியமாட்டேன்.

574

வணங்கும் இப்பிறப் பிறப்பிவை
நினையாது மங்கையர் தம்மோடும்
பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத்
தழுந்திநான் பித்தனாய்த் திரிவேனைக்
குணங்க ளுங்குறி களுமிலாக்
குணக்கடல் கோமளத் தொடுங்கூடி
அணைந்து வந்தெனை ஆண்டுகொண்
டருளிய அற்புதம் அறியேனே. 6

என்னைச் சூழ்ந்து கொள்ளும் இந்தப் பிறப்பும் இறப்புமாகிய இவற்றைப் பற்றி நான் சிந்திக்கவே இல்லை. மகளிரொடு ஒன்று கலந்தேன். அவர்தம் வாயிதழ்களில் ஊறுகின்ற உமிழ்நீராம் பெருவெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தேன். பெரும்பித்தனாய் அலைந்து திரிந்தேன். அத்தகைய அடியேனை, குணங்களும் குறிகளும் இல்லாத குணக்கடலாய் விளங்குகின்ற அவன், இளமையும் அழகும் பொருந்திய உமையம்மையோடு ஒருசேர வந்து, என்னை ஆண்டுகொண்டான். அவ்வாறு அருளிய அவனுடைய அற்புதச் செயலை இன்ன தன்மையினது என்று சொல்ல இயலவில்லையே!

575

இப்பி றப்பினில் இணைமலர்
கொய்துநான் இயல்பொடஞ் செழுத்தோதித்
தப்பி லாதுபொற் கழல்களுக்
கிடாதுநான் தடமுலை யார்தங்கள்
மைப்பு லாங்கண்ணால் ஏறுண்டு
கிடப்பேனை மலரடி யிணைகாட்டி
அப்பன் என்னைவந் தாண்டுகொண்
டருளிய அற்புதம் அறியேனே. 7

இந்தப் பிறப்பில், இயல்பான முறையில் 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சரிக்கவில்லை. பொருந்தக்கூடிய நறுமண மலர்களைக் கொய்துவந்து, தவறில்லாத வகையில் அவனுடைய பொன்னார் திருவடிகளில் தூவி வழிபடவும் இல்லை. ஆனால், பருத்த கொங்கைகளை உடைய மகளிரின் மை பூசிய கண்களால் தாக்குண்டு கிடந்தேன். அத்தகைய அடியேனை, என்னுடைய அப்பனாகிய சிவபெருமான், தன்னுடைய மலரடிகள் இரண்டினையும் இனிதாக எனக்குக் காட்டி, ஆண்டுகொண்டான். அவ்வாறு அருளிச் செய்த அவனுடைய அற்புதச் செயலை, நான் என்னவென்று அறியேனே!

576

ஊச லாடுமிவ் வுடலுயி
ராயின இருவினை அறுத்தென்னை
ஓசை யாலுணர் வார்க்குணர்
வரியவன் உணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத்
துயர்ந்ததன் பரம்பெருங் கருணையால்
ஆசை தீர்த்தடி யாரடிக்
கூட்டிய அற்புதம் அறியேனே. 8

என்னுடைய உடலையும், உயிரையும் அலைக்கழிக்கின்ற நல்வினை தீவினை ஆகிய இரண்டு வினைகளையும் என்னைவிட்டு முற்றிலுமாக நீக்கினான். ஒலிக் குறிப்பினால் உணர்ந்து கொள்வார்க்கும் உணர்வதற்கு அரியவன். எனக்கு உணர்வினை ஊட்டி, என்னை ஒளிபெறச் செய்தவன். என்னுடைய பாசப் பற்றுகள் எல்லாவற்றையும் அறுத்தொழித்தான். தன்னுடைய மேலான கருணையினால், என்னுடைய ஆசைகளையும் போக்கினான். தன் அடியவர்தம் திருவடிகளிலும் என்னைக் கூட்டி வைத்தான். அத்தகைய அவனுடைய அற்புதத்தை, இன்ன தன்மையதென்று அறியேனே!

577

பொச்சை யானஇப் பிறவியினிற்
கிடந்துநான் புழுத்தலை நாய்போல
இச்சை யாயின ஏழையர்க்
கேசெய்தங் கிணங்கியே திரிவேனை
விச்ச கத்தரி அயனுமெட்
டாததன் விரைமலர்க் கழல்காட்டி
அச்சன் என்னையும் ஆண்டுகொண்
டருளிய அற்புதம் அறியேனே. 9

கரிந்துபோன காடாகிய இந்தப் பிறவியில், அடியேன் சிக்குண்டு கிடந்தேன். புழுத்துப் போய் அலைகின்ற நாயினைப் போல, மகளிர் விரும்பிய செயல்களையே மனமொத்துச் செய்துவந்தேன். அவரோடு நெருங்கிப் பழகி இருப்பதிலேயே, மிகவும் ஆசைகொண்டு அலைந்து திரிந்தேன். அவ்வாறு அடியேன் இருந்தபோதிலும், திருமாலும் நான்முகனும் காண முடியாத, தன்னுடைய மணம் வீசும் மலரடிகளை எனக்குக் காட்டி, என்னுடைய அப்பனாகிய அந்தச் சிவபெருமான் என்னையும் ஆண்டுகொண்டு அருள்புரிந்தான். அத்தகைய அற்புதச் செயலை என்னவென்று அறியேனே!

578

செறியும் இப்பிறப் பிறப்பிவை
நினையாது செறிகுழலார் செய்யுங்
கீறியுங் கீழ்மையுங் கெண்டையங்
கண்களும் உன்னியே கிடப்பேனை
இறைவன் எம்பிரான் எல்லையில்
லாததன் இணைமலர்க் கழல்காட்டி
அறிவு தந்தெனை ஆண்டுகொண்
டருளிய அற்புதம் அறியேனே.

ஏன்பால் இறுகிவரும் இந்தப் பிறப்பும் இறப்பும் என்பன பற்றிச் சிறிதளவு நினைத்துப் பார்க்காமலேயே இருந்து வந்தேன். ஆனால், அடர்த்தியா கூந்தலையுடைய மகளிர் செய்கின்ற மயக்கினையும், கீழான செயல்களையும் அவர்தம் அழகிய கெண்டை மீனையொத்த கண்களையுமே மெய்யானவை என் நினைத்தவாறு மயக்குற்றுக் கிடந்தேன். அத்தகைய அடியேனுக்கு, இறைவனு எம்பிரானுமாகிய சிவபெருமான், தன்னுடைய எல்லையற்ற இரண்டு மலரடிகளை காட்டினான். அத்துடன், மெய்ப்பொருளை உணர்த்தி, என்னை ஆண்டு கொண்டு அருள்புரிந்தான். அத்தகைய மேலான அற்புதச் செயலை நான் இத்தன்மையதென அறியேனே!

திருச்சிற்றம்பலம்

42. சென்னிப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)
சிவ விளைவு

(எழுசீர் விருத்தம்)

சென்னி + பத்து – சென்னிப்பத்து. ஆண்டவனுடைய அடிகள், அடியவருடைய முடிமேல் விளங்கும் தன்மையினை விவரிப்பன இந்தப் பத்துப் பாடல்கள். அதாவது, குருநாதனாகிய சிவபெருமான், தன்னுடைய சீடராகிய மாணிக்கவாசகப் பெருந்தகையின் சென்னியில், திருவடிகளைச் சூட்டினான். அதன் காரணமாகத் தாம் பெற்ற பேரின்பப் பேற்றினை, மாணிக்கவாசகர் வியந்து போற்றும் பாடல்களின் தொகுப்பு. சிவ விளைவு என்பது, சிவனிடம் கொள்கின்ற உறுதிப்பாடு. சிவபெருமானின் திருவடிகளைத் தம்முடைய சென்னியில் தாங்கியபோது, அவை உண்டாக்கிய பேரானந்தப் பெருநிலையினைப் போற்றும் வகையில், வாதவூரர் அருளிச் செய்த பதிகம். இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

579

தேவ தேவன் மெய்ச் சேவகன்
        தென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலும் அறியொ ணாமுத
        லாய ஆனந்த மூர்த்தியான்
யாவ ராயினும் அன்ப ரன்றி
        அறியொ ணாமலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவ டிக்கணம்
        சென்னி மன்னிச் சுடருமே. 1

தேவர்க்கும் தேவன்; மெய்யான சேவகன்; அழகிய திருப்பெருந்துறையின் நாயகன்; மும்மூர்த்தியராலும் அறிய முடியாத முதல்வன்; பேரானந்தப் பேருருவானவன். எவர் எப்படிப்பட்டவராயினும், அவனுடைய அன்பரல்லாமல் அறிந்துகொள்ள இயலாதவன். மலரினையொத்த ஒளி வீசுபவன். அத்தகையவனுடைய தூய தாமரை மலரினையொத்த சிவந்த திருவடிகளில், நம்முடைய தலையும் பொருந்தியவாறு, நிலைபெற்று ஒளிருமாக!

580

அட்ட மூர்த்தி அழகன் இன்னமு
தாய ஆனந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச்சிவ லோக நாயகன்
தென்பெ ருந்துறைச் சேவகன்
மட்டு வார்குழல் மங்கை யாளையோர்
பாகம் வைத்த அழகன்தன்
வட்ட மாமலர்ச் சேவ டிக்கணம்
சென்னி மன்னி மலருமே. 2

அட்டமூர்த்தி, அழகன், இனிய அமுதமாகிய பேரின்பப் பெருங்கடல், பெரியவன்; மெய்ப்பொருளாகிய சிவபுரத்திற்குத் தலைவன், அழகிய திருப்பெருந்துறையின் சேவகன், தேன் சொரியும் நீண்ட கூந்தலையுடைய உமையம்மையை ஒரு பாகத்தில் வைத்துக் கொண்டிருக்கும் பேரழகன். அந்தச் சிவபெருமான் தன்னுடைய வட்ட வடிவில் அமைந்த சிறந்த தாமரை மலரடிகளில், நம்முடைய தலையும் பொருந்தியவாறு நிலைபெற்று மலருமாக!

581

நங்கை மீரெனை நோக்குமின் நங்கள்
நாதன் நம்பணி கொண்டவன்
தெங்கு சோலைகள் சூழ்பெ ருந்துறை
மேய சேவகன் நாயகன்
மங்கை மார்கையில் வளையுங் கொண்டெம்
உயிருங் கொண்டெம் பணிகொள்வான்
பொங்கு மாமலர்ச் சேவ டிக்கணம்
சென்னி மன்னிப் பொலியுமே. 3

மகளிரே! என்னை உற்று நோக்குங்கள். நம்முடைய தலைவனும், நம்மை அடிமை கொண்டவனும், தென்னஞ்சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் மேவிய சேவகனும் நாயகனும், மகளிரின் கைகளிலே அணிந்திருந்த வளைகளைக் கவர்ந்து கொண்டவனும், எம்முடைய உயிரையும் கவர்ந்து கொண்டு எம்மை அடிமை கொள்பவனுமாகிய சிவபெருமானின் அழகுபொங்கும் தாமரைமலர் போன்ற சிவந்த திருவடிகளில், நம்முடைய தலையும் பொருந்தியவாறு நிலைபெற்றுப் பொலிவுறுமாக!

582

பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்துபார்ப் பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான்
தில்லை மூதூர் நடஞ்செய்வான்
எத்த னாகிவந் தில்பு குந்தெமை
ஆளுங் கொண்டெம் பணிகொள்வான்
வைத்த மாமலர்ச் சேவ டிக்கணம்
சென்னி மன்னி மலருமே. 4

பத்தர் சூழ்ந்திடப் பரம்பொருளானவன், இவ்வுலகில் பார்ப்பனக் கோலத்துடன் என் பொருட்டு எழுந்தருளி வந்தான். சித்தர் சூழ்ந்திட அந்தச் சிவபெருமான், தில்லை மூதூரில் திருநடனம் ஆடுபவனாகவும் இருந்தான். அவனே எத்தனாகவும் தோன்றி, என்னுடைய உடலாகிய வீட்டினுள் புகுந்து கொண்டான். என்னை ஆண்டுகொண்டான். என்னை அடிமையாகவும் கொண்டான். அத்தகைய சிவபெருமானுடைய செந்தாமரை மலர் போன்ற சிவந்த திருவடிகளில், நம்முடைய தலையும் பொருந்தியவாறு நிலைபெற்று மலருமாக!

583

மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
மதித்தி டாவகை நல்கினான்
வேய தோளுமை பங்கன் எங்கள்
திருப்பெ ருந்துறை மேவினான்
காயத் துள்ளமு தூற ஊறநீ
கண்டு கொள்ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவ டிக்கணம்
சென்னி மன்னித் திகழுமே. 5

மூங்கிலையொத்த தோளினை உடைய உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்டுள்ள அவனே, எம்முடைய திருப்பெருந்துறையில் வந்து தங்கினான். இந்தப் பொய்யான வாழ்க்கையை மெய்யான வாழ்க்கையென எண்ணிப் போற்றாமல் இருக்க, அவன் எனக்கு மெய்ஞ்ஞானத்தை வழங்கினான். என்னுடைய உடலின் உள்ளே புகுந்து, தெவிட்டாத அமுதத்தை ஊற்றெடுக்கச் செய்தான். 'நீதான் கண்டு கொள்வாயாக!' என்று காட்டிய செந்தாமரையினைப் போன்ற அவனுடைய திருவடிகளில், நம்முடைய தலையும் பொருந்தியவாறு நிலைபெற்று விளங்குமாக!

584

சித்த மேபுகுந் தெம்மையாட் கொண்டு
தீவி னைகெடுத் துய்யலாம்
பத்தி தந்துதன் பொற்க ழற்கணே
பன்மலர் கொய்து சேர்த்தலும்
முத்தி தந்திந்த மூவுல குக்கும்
அப்பு றத்தெமை வைத்திடும்
அத்தன் மாமலர்ச் சேவ டிக்கணம்
சென்னி மன்னி மலருமே. 6

மனத்திலே புகுந்துகொண்டு எம்மை ஆண்டுகொண்டான். தீவினைகளையெல்லாம் அழித்தொழித்து, கடைத்தேறுவதற்குரிய வகையில், பத்தியினைத் தந்தான். அவனுடைய பொன்னார் திருவடிகளில் பலவகையான வண்ண மலர்களையும் வாச மலர்களையும் கொய்துவந்து தூவியதும், முத்திப் பேற்றினை வழங்கினான். இந்த மூன்று உலகங்களுக்கும் அப்பாற்பட்ட பேரின்ப உலகத்தில் என்னை வைத்திடும் அப்பன் அவனே. அத்தகையவனின் செந்தாமரையினையொத்த திருவடிகளில், நம்முடைய தலையும் பொருந்தியவாறு நிலைபெற்று மலருமாக!

585

பிறவி யென்னுமிக் கடலை நீந்தத்தன்
பேர ருள்தந் தருளினான்
அறவை யென்றடி யார்கள் தங்கள்
அருட்கு ழாம்புக விட்டுநல்
உறவு செய்தெனை உய்யக் கொண்ட
பிரான்தன் உண்மைப் பெருக்கமாம்
திறமை காட்டிய சேவ டிக்கணம்
சென்னி மன்னித் திகழுமே. 7

பிறவியாகிய இந்தக் கடலை நீந்திக் கரைசேரத் தன்னுடைய பேரருள் தெப்பத்தினை எனக்கு வழங்கியருளினான். நான் ஆதரவற்றவன் என்பதை அவன் தெரிந்துகொண்டு, தன்னுடைய அடியவர் குழாத்துள் என்னைப் புகுத்தினான். அவரெல்லாரையுமே எனக்கு நல்லதோர் உறவு முறையாக்கினான். என்னைக் கடைத்தேற்றுமாறு ஆண்டுகொள்ளவும் செய்தான். அத்தகு மேன்மை பொருந்திய சிவபெருமானின் உண்மைப் பெருக்கமாம் திறமையைக் காட்டிய செந்தாமரை மலரினையொத்த திருவடிகளில், நம்முடைய தலையும் பொருந்தியவாறு நிலைபெற்றுத் திகழுமாக!

586

புழுவி னாற்பொதிந் திடுகு ரம்பையிற்
பொய்த னையொழி வித்திடும்
எழில்கொள் சோதியெம் ஈசன் எம்பிரான்
என்னுடை யப்பன் என்றென்று
தொழுத கையின ராகித் தூய்மலர்க்
கண்கள் நீர்மல்குந் தொண்டர்க்கு
வழுவி லாமலர்ச் சேவ டிக்கணம்
சென்னி மன்னி மலருமே. 8

புழுக்களால் செறிவுற்ற ஊனுடம்பில் உள்ள பொய்யினை ஒழித்திடச் செய்யும் அழகு குடிகொண்ட சோதியானவன். 'எம்முடைய முன்னவனே! எம்முடைய தலைவனே! என்னுடைய அப்பனே!' என்றெல்லாம் சொல்லிச் சொல்லி, மிகவும் பணிவுடன் வணங்குகின்ற கைகளைக் கொண்டவராகி, மலர்க்கண்களில் நீரானது பெருகிச் சொரிகின்ற அடியவர்க்கு, என்றும் பெருங்கருணையினை வழங்குபவன் அவன். குற்றமிலாத் தாமரை மலரினையொத்த அவனுடைய திருவடிகளில், நம்முடைய தலையும் பொருந்தியவாறு நிலைபெற்று மலருமாக!

587

வம்ப னாய்த்திரி வேனை வாவென்று
வல்வி னைப்பகை மாய்த்திடும்
உம்ப ரான்உல கூட றுத்தப்
புறத்த னாய்நின்ற எம்பிரான்
அன்ப ரானவர்க் கருளி மெய்யடி
யார்கட் கின்ப தழைத்திடுஞ்
செம்பொன் மாமலர்ச் சேவ டிக்கணம்
சென்னி மன்னித் திகழுமே. 9

ஒன்றுக்கும் உதவாமல் திரிகின்ற அடியேனை, 'வருக!' என்றழைத்து, என்னுடைய கொடும்பகையாகிய தீவினைகளை அழித்தொழித்த மேன்மை பொருந்தியவன். உலகங்கள் அனைத்தையும் கடந்து, அவற்றுக்கு அப்பாலும் நிலைத்து நின்ற எம்பிரான். அன்புடையார்க்கு அருளையும், மெய்யடியார்க்குப் பேரின்பத்தையும் நிறைவாக வழங்குகின்ற செம்பொன் அவன். அத்தகையவனுடைய செந்தாமரை மலர் போன்ற திருவடிகளில், எம்முடைய தலையும் பொருந்தியவாறு விளங்கித் திகழுமாக!

588

முத்த னைமுதற் சோதி யைமுக்க
ணப்ப னைமுதல் வித்தினைச்
சித்த னைச்சிவ லோகனைத்திரு
நாமம் பாடித் திரிதரும்
பத்தர் காள்இங்கே வம்மின் நீருங்கள்
பாசந் தீரப் பணிமினோ
சித்த மார்தருஞ் சேவ டிக்கணம்
சென்னி மன்னித் திகழுமே. 10

அவன் முத்திப் பேற்றினை அளிப்பவன்; முதன்மைச் சோதியாக விளங்குபவன்; மூன்று கண்களையுடைய எம்முடைய அப்பன்; எல்லாவற்றுக்கும் முதன்மை வித்து; அறிவின் வடிவம்; சிவலோகபதி. அவனுடைய திருப்பெயரினைப் பாடித் திரியும் பத்தரே! அனைவரும் இங்கே வந்து சேருங்கள். நீங்கள், உங்களுடைய உலகப் பற்றுகளெல்லாம் நீங்குமாறு அவனை மிகவும் பணிந்து வணங்குங்கள். நம்முடைய நெஞ்சத்தில் இன்பமூட்டும் அவனுடைய சேவடிகள், நம்முடைய தலையில் பொருந்தியவாறு நிலைபெற்றுத் திகழுமாக!

திருச்சிற்றம்பலம்

43. திருவார்த்தை

(திருப்பெருந்துறையில் அருளியது)
அறிவித்து அன்புறுதல்

(அறுசீர் விருத்தம்)

திரு + வார்த்தை – திருவார்த்தை. மேலான வார்த்தை என்பது பொருள். இதனை 'மெய்ப்பொருள் விளக்கம்' என்பர். இறைவன், தன்னுடைய அடியவர் பொருட்டு, எளிவந்தருளிய தன்மைகளைக் குறித்த புக்ழுரைகள். 'அறிவித்து அன்புறுதல்' என்பது, சிவபெருமானின் திருவாய்மொழிகளே மறைமொழிகள். தென்னாடுடைய சிவபெருமான், எந்நாட்டவர்க்கும் எல்லார்க்கும் இறைவனாக விளங்குபவன். அதன்படி, நான்முகன், திருமால், நாராயணன் என்னும் சொற்களெல்லாம் ஒரே பரம்பொருளைக் குறிப்பனவே. அந்தப் பரம்பொருள் சிவமே. எனவே, சிவபரம்பொருளை அறிவித்து, அன்பு கொள்ளுதலே, அறிவித்து அன்புறுதல். இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. எல்லாப் பாடல்களுமே, 'அறிவார் எம்பிரான் ஆவாரே!' என்று முடிவன.

திருச்சிற்றம்பலம்

589

மாதிவர் பாகன் மறைபயின்ற
வாசகன் மாமலர் மேயசோதி
கோதில் பரங்கரு ணையடியார்
குலாவுநீதி குணமாக நல்கும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
அருளறி வார்எம்பி ரானாவாரே. 1

உமையம்மை விரும்பி வீற்றிருக்கின்ற ஒரு பாகத்தினை உடையவன். மறைகளால் பயிலப்பட்ட சொற்களை உடையவன். அடியவரின் நெஞ்சமலரில் விளங்குகின்ற ஒளியன். குற்றம் இல்லாத மேலான அன்புடைய அடியவர் போற்றுகின்ற நீதிமான். அந்த நீதியையே நற்பண்பாகக் கொண்டு, அடியவர்க்கு அருளைக் கொடுப்பவன். மலர் விரிந்து மணம் வீசுகின்ற சோலைகளை உடைய திருப்பெருந்துறையில் உறைகின்ற எம்முடைய் புண்ணிய சீலன். அவன் இந்த மண்ணுலகிற்கு இறங்கிவந்து, ஆதிப் பரம்பொருளை எனக்குக் காட்டியருளினான். அவன் காட்டிய அந்த அருளினை அறிய வல்லவர் எவரோ, அவரே எம்பிரான் ஆவார்.

590

மாலயன் வானவர் கோனும்வந்து
வணங்க அவர்க்கருள் செய்தஈசன்
ஞாலம் அதனிடை வந்திழிந்து
நன்னெறி காட்டி நலம்திகழுங்
கோல மணியணி மாடநீடு
குலாவு மிடைவைமடநல்லாட்குச்
சீல மிகக்கரு ணையளிக்குந்
திறமறி வார்எம்பி ரானாவாரே. 2

எம்முடைய முன்னவனாகிய சிவபெருமான், திருமால், நான்முகன், விண்ணவர்கோன் ஆகியோர் வந்து பணிகையில், அவர்க்கு அருள் புரிந்தவன். இந்த மண்ணுலகிற்கு இறங்கிவந்து, எனக்கு நல்வழி காட்டியவன். நன்மைகள் விளங்குகின்ற, அழகிய மணிகளால் அணிசெய்யப் பெற்ற, நெடிய மாட மாளிகைகளை உடைய திருவிடைமருதூரில் உள்ள இளமங்கை ஒருத்திக்கு ஒழுக்கம் மிக்கிருப்பதைக் கண்டு, அவளுக்குக் கருணை புரிந்தவன். அவன் புரிந்த அந்தக் கருணையினை அறிய வல்லவர் எவரோ, அவரே எம்பிரான் ஆவார்.

591

அணிமுடி ஆதி அமரர்கோமான்
ஆனந்தக் கூத்தன் அறுசமயம்
பணிவகை செய்து படவதேறிப்
பாரொடு விண்ணும் பரவியேத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறையெம்
பேரரு ளாளன்பெண் பாலுகந்து
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும்
வகையறி வார்எம்பி ரானாவாரே. 3

அழகிய சடைமுடியினை உடைய மன்னவனாகிய அவன், தேவர்தம் தலைவனாவான். பேரானந்தப் பெருங்கூத்தன் அவன். அறுவகைச் சமயங்களும் தன்னைப் பணியுமாறு செய்தவன். இந்த மண்ணுலகும் அந்த விண்ணுலகும் போற்றி வணங்கப் பிறவிப் பிணியை விலகிடச் செய்யும் பெருந்துறை உறைகின்ற பேரருளாளன் அவன். ஒரு பெண்ணின்மேல் கொண்ட பெருவிருப்பால், படகேறிச் சென்று, மிகப் பெரியதொரு வால்மீனைப் பிடிக்க, அழகிய வலையினை வீசியவனும் அவன். அவ்வாறு அவன் வலைவீசிய வல்லமையை அறிந்தவர் எவரோ, அவரே எம்பிரான் ஆவார்.

592

வேடுரு வாகி மயேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்துதன்னைத்
தேட இருந்த சிவபெருமான்
சிந்தனை செய்தடி யோங்களுய்ய
ஆடல் அமர்ந்த பரிமாஏறி
ஐயன் பெருந்துறை ஆதிஅந்நாள்
ஏடர் களையெங்கும் ஆண்டுகொண்ட
இயல்பறி வார்எம்பி ரானாவாரே. 4

மயேந்திர மலையில் வேடனாக உருவெடுத்து, மிக்க குறைபாடுடைய விண்ணவரும் தன்னைவந்து தேடும்படியாக இருந்தவன் சிவபெருமான். அடியவராகிய நாங்கள் கடைத்தேறுமாறு சிந்தனை செய்து, பரியின்மேல் ஏறிவந்தவன். திருப்பெருந்துறைக்குத் தலைவனும் அவனே. மிகப் பழைய நாளிலேயே, தொண்டர்தமை அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் ஆண்டுகொண்டு அருளியவன். அவ்வாறு ஆண்டுகொண்டு அருளிய அவனுடைய தன்மையினை அறியவல்லவர் எவரோ, அவரே எம்பிரான் ஆவார்.

593

வந்திமை யோர்கள் வணங்கியேத்த
மாக்கரு ணைக்கட லாய்அடியார்
பந்தனை விண்டற நல்கும்எங்கள்
பரமன் பெருந்துறை ஆதிஅந்நாள்
உந்து திரைக்கட லைக்கடந்தன்
றோங்கும் மதிலிலங் கைஅதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும்
பரிசறி வார்எம்பி ரானாவாரே. 5

தேவரெல்லாம் வந்து தன்னை வணங்கி வழிபட, மிகப்பெரிய கருணைக் கடலாய் விளங்கியவன் அவன். அடியவரின் பாசக்கட்டினை அறுத்தெறிந்த பரம்பொருளும் அவன். பெருந்துறையின் முன்னவனும் அவன். அந்நாளில், அலைவீசும் கடலைக் கடந்து, உயர்ந்தோங்கிய மாடமாளிகைகள் சூழ்ந்த இலங்கை மாநகரில் உள்ள அழகிய மெல்விரல்களைக் கொண்ட வண்டோதரிக்கும் அருள் புரிந்தவன் அவன். அத்தகைய அந்தப் பெருமானின் அருளிச் செயல்களை அறிய வல்லார் எவரோ, அவரே எம்பிரான் ஆவார்.

594

வேவத் திரிபுரம் செற்றவில்லி
வேடுவ னாய்க்கடி நாய்கள்சூழ
ஏவற் செயல்செய்யுந் தேவர்முன்னே
எம்பெரு மான்தான் இயங்குகாட்டில்
ஏவுண்ட பன்றிக் கிரங்கியீசன்
எந்தை பெருந்துறை ஆதிஅன்று
கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த
கிடப்பறி வார்எம்பி ரானாவாரே. 6

வெந்துபோகும்படி முப்புரங்களையும் அழித்த வில்லாற்றலை உடையவன் அவன். கோபங்கொண்ட கடிநாய்கள் சூழ்ந்துவர, வேடுவனாய் உருவெடுத்து வந்தவன் அவன். தனக்குப் பணிவிடைகள் செய்யும் தேவர்க்கு முன்பாகப் பெருங்கானகத்தில் நடந்துசென்ற எம்பெருமான் அவன். அம்பு துளைத்த பன்றிக்காக இரக்கம் காட்டிய முன்னவனும் அவன். எமக்குத் தந்தையும் ஆனவன். பெருந்துறைக்கு முதல்வனும் ஆனவன். அந்நாளில், பசியோடு தவித்த பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த சிறப்புக்குரியவனும் அவன். அத்தகையவனுடைய கருணைத் திறத்தை அறிய வல்லவர் எவரோ, அவரே எம்பிரான் ஆவார்.

595

நாதம் உடையதோர் நற்கமலப்
போதினில் நண்ணிய நன்னுதலார்
ஓதிப் பணிந்தவர் தூவியேத்த
ஒளிவளர் சோதியெம் ஈசன்மன்னும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப்
பேதங் கெடுத்தருள் செய்பெருமை
அறியவல் லார்எம்பி ரானாவாரே. 7

இனிய ஓசையினை உடைய செந்தாமரை மலரில் விளங்குகின்ற திருமகளும், வெண்டாமரை மலரில் விளங்குகின்ற கலைமகளும் புகழ்ந்து பாடி, மலர் தூவி வணங்குகின்ற சிறப்புக்குரியவன். ஒளிமயமான சோதி வடிவானவன் அவன். எம்முடைய முன்னவன் அவன். நிலைபெற்றவாறு மலர்ச் சோலைகள் சூழப்பெற்ற திருப்பெருந்துறையில் உறைகின்ற புண்ணியனும் அவன். இந்த மண்ணுலகில் வந்து தோன்றி, அடியவரிடம் இருந்த வேறுபாடுகளை அழித்தவன். அத்தகையவனுடைய அந்தத் தன்மையினை அறியும் ஆற்றலைக் கொண்டவர் எவரோ, அவரே எம்பிரான் ஆவார்.

596

பூவலர் கொன்றையம் மாலைமார்பன்
போருகிர் வன்புலி கொன்றவீரன்
மாதுநல் லாளுமை மங்கைபங்கன்
வான்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோன்
ஏதில் பெரும்புகழ் எங்கள்ஈசன்
இருங்கடல் வாணற்குத் தீயில்தோன்றும்
ஓவிய மங்கையர் தோள்புணரும்
உருவறி வார்எம்பி ரானாவாரே. 8

அவன், மலர்ந்த கொன்றை நாண்மலர்களாலான மாலையினை அணிந்தவன். போர் புரிவதற்கென்றே வன்மையான நகங்களையுடைய பெரும்புலியினைக் கொன்ற மாவீரன். மகளிருள் சிறந்தவளாகிய உமையம்மைக்குத் தனது மேனியின் ஒரு பாகத்தை வழங்கியவன். அடர்ந்த சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையின் தலைவன். குற்றமில்லாத புகழினையுடையவன் எங்கள் முன்னவன். பெருங்கடல் தலைவனாகிய வருணனுக்குத் தீயுருவில் தோன்றிக் காட்சி தந்தவன். ஓவியம் போன்ற அழகுமங்கையரின் தோள்களைத் தோயும் உருவினையுடையவன். அவனை அறிய வல்லவரும் எவரோ, அவரே எம்பிரான் ஆவார்.

597

தூவெள்ளை நீறணி எம்பெருமான்
சோதி மகேந்திர நாதன்வந்து
தேவர் தொழும்பதம் வைத்தஈசன்
தென்னன் பெருந்துறை ஆளிஅன்று
காதல் பெருகக் கருணைகாட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்துருகக்
கேதங் கெடுத்தென்னை ஆண்டருளுங்
கிடப்பறி வார்எம்பி ரானாவாரே. 9

தூய வெண்ணீற்றை அணிந்திருப்பவன் எம்பெருமான். சோதியும் அவன். மகேந்திரத்திற்குத் தலைவன். அவன் தானாகவே எழுந்தருளி வந்து, தேவரும் வணங்கத்தக்க தன்னுடைய திருவடிகளை என்னுடைய தலைமேல் வைத்த முன்னவனும் ஆவான். அழகிய திருப்பெருந்துறையினை ஆண்டு வருபவன். அந்நாளில் பேரன்பு பெருக எனக்குப் பெருங்கருணை காட்டியவனும் அவன். என்னுடைய துயரங்களையெல்லாம் அழித்து, என்னை ஆண்டுகொண்டவனும் அவன். அத்தகைய கருணை வடிவானவனின் தன்மையினை அறிய வல்லவரும் எவரோ, அவரே எம்பிரான் ஆவார்.

598

அங்கணன் எங்கள் அமரர்பெம்மான்
அடியார்க் கமுதன் அவனிவந்த
எங்கள் பிரான்இரும் பாசந்தீர
இகபர மாயதோர் இன்பமெய்தச்
சங்கங் கவர்ந்துவண் சாத்தினோடுஞ்
சதுரன் பெருந்துறை ஆளிஅன்று
மங்கையர் மல்கும் மதுரைசேர்ந்த
வகையறி வார்எம்பி ரானாவாரே. 10

அவன் கண்ணோட்டமுடைய கண்களையுடையவன். தேவர்தம் இறைவன். அடியவர்க்குத் தெவிட்டாத தெள்ளமுதமானவன். இந்த மண்ணுலகிற்கு எழுந்தருளி வந்த எங்கள் தலைவன், தொண்டர்தம் பாசப் பற்றினைக் களைந்தவன். அவர்க்கு இம்மை மறுமைகளாகிய ஈடிலா இன்பம் உண்டாகச் செய்தவன். தலைக்குப் பாகையணிந்து, சங்கு வளைகளைக் கொண்டுவந்து வாணிகம் செய்த வல்லமையாளன். திருப்பெருந்துறையினை ஆண்டு வருபவன். அந்நாளில், மங்கையர் நிறைந்திருந்த மதுரை மாநகரை அடைந்த தன்மையினை அறிய வல்லவர் எவரோ, அவரே எம்பிரான் ஆவார்.

திருச்சிற்றம்பலம்

44. எண்ணப் பதிகம்

(தில்லையில் அருளியது)
ஒழியா இன்பத்து உவகை

(அறுசீர் விருத்தம்)

எண்ணம் + பதிகம் – எண்ணப் பதிகம். எண்ணம் – கருத்து. உள்ளக் கருத்தைப் புலப்படுத்தும் பத்துப் பாடல்களின் தொகுப்பு என்பது பொருள். மாணிக்கவாசகப் பெருந்தகை, தமது உள்ளக் கருத்தினைத் தில்லைப் பெருமானுக்குத் தேர்ந்து தெளிந்துரைப்பது. இப்பகுதியில், ஆறு பாடல்களே இடம்பெற்றுள்ளன. குறைகின்ற நான்கு பாடல்கள் குறித்து, யாதொன்றும் தெரியவில்லை. ஆயினும், பத்துப் பாடல்கள் என்னும் பொருள்படப் பதிகம் என்றே அமைந்துள்ளது. ஒழியா இன்பத்து உவகை என்பது, நீங்காத பேரின்பத்தால் உண்டாகிய, எல்லையிலாப் பேரின்பம் என்பதாகும்.

திருச்சிற்றம்பலம்

599

பாருரு வாய பிறப்பற வேண்டும்
பத்திமையும் பெற வேண்டும்
சீருருவாய சிவபெரு மானே
செங்கமல மலர்போல
ஆருரு வாயஎன் னாரமுதேஉன்
அடியவர் தொகைநடுவே
ஓருரு வாயநின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக் கொண்டருளே. 1

மிகச் சிறந்த உருவமாகத் தோன்றிய சிவபெருமானே! செந்தாமரை மலரினையொத்த செம்மேனி அம்மானே! அழகிய உருவமாகிய என்னுடைய தெவிட்டாத அமுதமே! இந்த உலகத்தில் உருவெடுக்கின்ற என்னுடைய பிறப்பு நீங்குதல் வேண்டும். உன்பால் அடியேனும் பத்திமையைக் கொள்ளவேண்டும். உன்னுடைய அடியவர் கூட்டத்தின் நடுவில், ஒப்பற்ற உருவமாகக் காட்சிதந்து, உன்னுடைய மேலான திருவருளைக் காட்டி, அடியேனையும் கடைத்தேறச் செய்வாயாக!

600

உரியேன் அல்லேன் உனக்கடிமை
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதுந்
தரியேன் நாயேன் இன்னதென்
றறியேன் சங்கரா கருணையினாற்
பெரியோன் ஒருவன் கண்டுகொள்
என்றுன் பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றென் றருளியதும்
பொய்யோ எங்கள் பெருமானே. 2

எங்கள் பெருமானே! நான் உனக்கு அடிமைப்பட்டு, உன்னுடைய அன்பினைப் பெறுவதற்குச் சற்றும் உரிமையுடையேன் அல்லேன். ஆனால், உன்னைவிட்டுப் பிரிந்தவாறும், ஒருகணங்கூடத் தரித்திரேன். நாயடியேன் அதற்கான காரணத்தையும் இன்னதென்று அறிய மாட்டேன். சிவசங்கரனே! என்பால் நீ கொண்ட கருணையினால், 'உலகில் ஒப்பற்ற பெரியவனாக என்னைக் கண்டுகொள்!' என்று நீயும் அன்றொருநாள் என்முன் வந்து; உன்னுடைய கழல்புனைந்த திருவடிகளைக் காட்டினாய். அத்துடன் அமையாமல், 'உன்னைவிட்டு ஒரு போதும் பிரியமாட்டேன்!' என்று சொல்லிச் சொல்லி அருளையும் வழங்கினாய். அவ்வாறு அருள் வழங்கியதும் பொய்தானோ?

601

என்பே உருக நின்அருள்
அளித்துன் இணைமலர் அடிகாட்டி
முன்பே என்னை ஆண்டுகொண்ட
முனிவா முனிவர் முழுமுதலே
இன்பே அருளி எனையுருக்கி
உயிருண் கின்ற எம்மானே
நண்பே யருளாய் என்னுயிர்
நாதா நின்னருள் நாணாமே. 3

என்னுடலின் எலும்புகள் அனைத்தும் உருகிடுமாறு, உன்னுடைய அருளினை அந்நாளிலேயே எனக்கு வழங்கினாய். இணைந்த மலரடிகளையும் எனக்குக் காட்டினாய். அதனால், முன்னமே என்னை ஆண்டுகொண்டாய். எல்லாவற்றையும் வெறுத்தவனே! அவ்வாறு வெறுத்தவர்தம் முழுமுதலே! இன்பத்தையே எனக்கு வழங்கி, எனது உடலினை உருக்கி, உயிரினை உண்கின்ற எம்பெருமானே! என்னுயிர்த் தலைவனே! உன்னுடைய அருளைச் சிறிதும் நாணாமல் நட்புடன் எனக்கு அருள்வாயாக!

602

பத்தில னேனும் பணிந்தில
னேனும்உன் உயர்ந்தபைங் கழல்காணப்
பித்தில னேனும் பிதற்றில னேனும்
பிறப்பறுப் பாய்எம் பெருமானே
முத்தனை யானே மணியனை யானே
முதல்வ னேமுறை யோஎன்று
எத்தனை யானும் யான்தொடர்ந் துன்னை
இனிப்பி ரிந்தாற் றேனே. 4

எம்முடைய பெருமானே! நான் உன்னிடத்தில் பற்றில்லாதவனாயினும், உன்னைப் பணிந்திடாதவனாயினும், உன்னுடைய மேலான பொன்னடிகளைக் காண விரும்பாதவனாயினும்; உன்னை உளமார எண்ணிப் பிதற்றாதவனாயினும் என்னுடைய பிறப்பினை அறுக்கவேண்டும். 'முத்தினையொத்தவனே! மாணிக்கத்தையொத்தவனே! எல்லாவற்றுக்கும் முதல்வனே! முறையாமோ?' என்று சொல்லி, எவ்வளவு காலமாயினும் நான் உன்னையே தொடர்ந்தபடி வருவேன். இனிமேலும் உன்னைப் பிரிந்திருக்க, ஒரு நொடிப் பொழுதும் பொறுத்திருக்க மாட்டேன்.

603

காணும தொழிந்தேன் நின்திருப்
பாதங் கண்டுகண் களிகூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றும
தொழிந்தேன் பின்னைஎம் பெருமானே
தாணுவே அழிந்தென் நின்னினைந்
துருகுந் தன்மைஎன் புன்மைகளாற்
காணும தொழிந்தேன் நீயினி
வரினுங் காணவும் நாணுவனே. 5

எம்முடைய பெருமானே! உன்னுடைய திருவுருவினைக் காண்பதையும் விட்டொழிந்தேன்; உன்னுடைய திருவடிகளைக் கண்ணாரக் கண்டு, உன்னைப் போற்றிப் புகழ்வதையும் விட்டொழிந்தேன்; உன்னையே எண்ணிப் பிதற்றுவதையும் விட்டொழிந்தேன். சிவபெருமானே! உன்னை மனமார நினைந்து உருகுவதையும் விட்டொழிந்தேன்; என்னுடைய சிறுமைச் செயல்களால், உன்னைக் காண்பதையும் விட்டொழிந்தேன். நீயாக என்னை விரும்பி, என் முன்னர் வருவதாயினும், உன்னைக் காண்பதற்கும் அடியேன் வெட்கப்படுவேனே!

604

பாற்றிரு நீற்றெம் பரமனைப்
பரங்கரு ணையோடும் எதிர்ந்து
தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை
யளிக்குச் சோதியை நீதியிலேன்
போற்றியென் அமுதே எனநினைந் தேத்திப்
புகழ்ந்தழைத் தலறியென் னுள்ளே
ஆற்றுவ னாக உடையவ
னேஎனை ஆவஎன் றருளாயே. 6

என்னை அடிமையாக உடையவனே! பாலின் வெண்மை போன்ற திருநீற்றினை அணிந்திருக்கும் பரமனே! மேலான கருணையுடன் எதிர்கொண்டு காட்சிதந்த பரம்பொருளே! மெய்யடியார்க்கு அருள்வழி காட்டுகின்ற சோதியே! மெய்யடியார்க்கு அருள்வழி காட்டுகின்ற சோதியே! நீதியிலேனாகிய நான், உன்னைப் போற்றி, 'என்னுடைய தெவிட்டாத அமுதமே!' என்று நெஞ்சார நினைந்து, உயர்வாகப் புகழ்ந்து அழைத்தபடி அலறவும் இல்லை. என்னுடைய உள்ளமானது ஆறுதல் அடையும்படி, 'ஐயோ!' என்று என்பால் கருணை காட்டி, அருள்புரிவாயாக!

திருச்சிற்றம்பலம்

45. யாத்திரைப் பத்து

(தில்லையில் அருளியது)
அனுபவாதீதம் உரைத்தல்

(அறுசீர் விருத்தம்)

யாத்திரை + பத்து – யாத்திரைப்பத்து. யாத்திரை – பயணம். சிவபுரத்திற்குச் செல்லும் பயணம் பற்றிய பத்துப் பாடல்களின் தொகுப்பு. அதாவது, உலகப் பற்றுக்களினின்றும் விடுபட்டு, வீடுபேற்றினையே விரும்பிச் சிவபுரத்திற்குச் செல்ல அடியாரை அழைக்கும் வகையில் அருளிய பத்துப் பாடல்கள். அனுபவாதீதம் உரைத்தல் என்பது, அனுபவத்திற்கு அதிகமானவற்றை – எட்டாதனவற்றை அறிவுறுத்தல். இப்பகுதியில், பத்துப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அனைத்தும் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

605

பூவார் சென்னி மன்னனெம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவா துள்ளம் கலந்துணர்வாய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆஆ என்னப் பட்டன்பாய்
ஆட்பட் டீர்வந் தொருப்படுமின்
போவோங் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே. 1

மலர்கள் அழகுற விளங்குகின்ற சடைமுடியினை உடைய எம்முடைய அரசனும், பாம்பினைக் கழுத்தில் அணிகலனாக அணிந்துள்ள எம்பெருமானும் ஆகிய சிவபெருமான், சிறியோராகிய எங்களை விட்டு நீங்காமல், உள்ளத்தில் இரண்டறக் கலந்து நின்றான். எங்கள் உள்ளத்தில் உணர்வினை ஊட்டி உருகவும் செய்தான். கருணை வெள்ளத்தால், அவனால் இரக்கம் காட்டப்பட்டு, அவனுடைய அன்புக்கு ஆட்பட்ட அடியவரே! எம்பெருமானின் திருவடிப்பேற்றினை அடையச் சிவபுரத்தை எதிர்நோக்கிச் செல்லும் காலமும் வந்துவிட்டது. எனவே, எல்லோரும் இங்கு வந்து ஒன்றாகச் சேருங்கள். பொய்ம்மைகளை நீக்கி, எம்பெருமானுடைய திருவடிப் பேற்றை அடைவோமாக!

606

புகவே வேண்டா புலன்களில்நீர்
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கவெல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத் துள்புகுந்து
நாயே அனைய நமையாண்ட
தகவே யுடையான் தனைச்சாரத்
தளரா திருப்பார் தாந்தாமே. 2

எம்பெருமான்மேல் மெய்யுணர்வு கொண்டோரே! நீங்கள் இனிமேலும் ஐம்புலன்களின் நுகர்வுகளில் ஆசை வைக்காதீர்! பாம்பினை மாலையாகக் கொண்டிருக்கும் பரம்பொருளின் மலரடிகளையே மிகவும் நினையுங்கள். மிகுந்துள்ள பிற பொருள்களையெல்லாம் வேண்டாமெனச் சொல்லி வெறுத்து விடுங்கள். முன்னர் இருந்த அடியவரெல்லாம் உள்ளம் களிக்கும்படியாக, இவ்வுலகிற்கு எழுந்தருளி வந்தவன் எம்பெருமான். நாயினையொத்த நம்மையெல்லாம் தன்னுடைய கருணையினால் ஆண்டுகொண்டான். அத்தகைய தகுதியினைக் கொண்டிருக்கும் அவனைச் சென்றுசேரச் சற்றும் மனத்தளர்ச்சி அடையாமல் முயன்றவரே!

607

தாமே தமக்குச் சுற்றமுந்
தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாயம் இவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே. 3

தாமே தமக்கென்று உறவினையும், தாமே தமக்கென்று விதிமுறையினையும் கொண்டவன் சிவபெருமான். நாமும் யார்? எம்முடையது என்பதும் எது? எம்முடைய பாசமென்பதும் எத்தகையது? உலக வாழ்வும் எப்படிப்பட்ட மாயத்தால் ஆகியது? ஆகிய எல்லாமே இனிமேல் உங்களை விட்டபடி அகலட்டும். பெருந்தலைவனாகிய நம்முடைய சிவபெருமானின் பழைய அடியவரோடும், அவனுடைய திருவுளக் குறிப்பையுமே உறுதிப்பொருளெனக் கொண்டு, பாம்பினை அணிகலனாக உடையவனாகிய சிவபெருமானின் பொன்னார் திருவடிகளையே பொய்ம்மைகளை நீக்கிக் கொண்டு, சென்றடையச் செல்வீராக!

608

அடியார் ஆனீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து
கடைக்கொண் டிருமின் திருக்குறிப்பைச்
செடிசே ருடலைச் செலநீக்கிச்
சிவலோ கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்தன்
பூவார் கழற்கே புகவிடுமே. 4

எம்பெருமானின் அடியவர் ஆனவரே! நீங்கள் எல்லாரும் உங்களுடைய விளையாட்டுகளை உங்களிடமிருந்து செல்லவிடுங்கள். எம்பெருமானின் மணம் பொருந்திய திருவடிகளையே வந்தடைந்து, அவனுடைய கடைக்கண் பார்வைக்காகக் காத்துக் கொண்டு இருங்கள். அவ்வாறே நீங்கள் இருப்பீரானால், திருநீற்றினைப் பூசிய திருமேனியினை உடைய பாம்பணிந்த பெருமான், தீவினைப் பயன்களின் கூட்டாக இருக்கும் இந்த உடற்கூட்டினை நீங்கச் செய்து, சிவபுரத்திற்கும் நம்மை அழைத்துச்சென்று வாழவைப்பான். மேலும், அவனுடைய மலரடிகளில் நாம் புகுமாறும் அருள்புரிவான்.

609

விடுமின் வெகுளி வேட்கைநோய்
மிகவோர் காலம் இனியில்லை
உடையான் அடிக்கீழ் பெருஞ்சாத்தோ
டுடன்போ வதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள்
அணியார் கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம்
புயங்கள் ஆள்வான் புகழ்களையே. 5

அன்புடையீர்! உங்களிடமுள்ள கோபம், ஆசை என்னும் கொடும்பிணிகளை முற்றிலும் அகற்றிவிடுங்கள். அவ்வாறானால், நீங்கள் கடைத்தேறுவதற்குரிய காலமும் இதைத்தவிர வேறில்லை. நம்மையெல்லாம் அடிமையாகக் கொண்டிருக்கும் எம்பெருமானின் திருவடிகளின்கீழ்ப் பெருங்கூட்டத்தோடு ஒன்றுகூடிச் சென்று சேர்வதற்கே உள்ளமும் ஒன்றுபட்டு வாருங்கள். அவ்வாறு வருவீரானால், நாமும் சிவபுரத்தைச் சென்றடையலாம். ஆங்குள்ள திருக்கதவம் நம்மைக் கண்டதும் அடைபடாமல் இருக்க வேண்டுமானால், அவனை நெருங்கியிருந்தபடி உள்ளமும் நெகிழ்ந்துருகியபடி போற்றிப் புகழ்வோம். பாம்பணிந்த பெருமானின் பெருமைகளையே பேசுவோமாக!

610

புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோர் இடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்தாள் வணங்கிநாம்
நிகழும் அடியார் முன்சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே. 6

அன்புடையீர்! பாம்பணிந்த பெருமானின் திருவடிகளையே எப்போதும் புகழ்ந்து போற்றுங்கள்; அவற்றையே எப்போதும் வணங்குங்கள்; அவற்றை மலர் தூவி அழகு படுத்துங்கள்; அவற்றையே நெஞ்சில் வைத்து, எல்லாவகைத் துன்பங்களையும் இன்றே இகழ்ந்து ஒதுக்கி விடுங்கள். இனிமேலும் எவ்வகைத் துன்பமும் நம்மைச் சேராதிருக்க, விளங்குஞ் சிறப்புடைய சிவபுரத்திற்குச் செல்வோம். சென்று, சிவனவன் திருவடிகளை வணங்குவோம். ஆங்கே, முன்னரே சென்றுள்ள அடியவரின் முன்சென்றும் அவரையெல்லாம் கண்டு, மனமுருகி நிற்போம்.

611

நிற்பார் நிற்கநில் லாவுலகில்
நில்லோம் இனிநாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாந் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாந் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தாற்
பெறுதற் கரியன் பெருமானே. 7

அன்புடையீர்! நிலையற்ற இவ்வுலகில், இருக்க விரும்புபவர் இருக்கட்டும்; இனியும் நாமிருக்க விரும்பமாட்டோம். சிவபெருமானின் திருவடிகளை அடையச் செல்வோம். பொன்னையொத்த திருமேனியினை உடைய பாம்பணிந்த பெருமானே நம்மை ஆண்டுகொள்ளக் கூடியவன். அவனுடைய பொன்னடிகளையே சென்றடைவோம். அவ்வாறே விரும்பக்கூடிய நீங்கள் அனைவரும் காலத்தை நீட்டிக்காமல் அவனுடைய திருவடிகளையே சென்றடையும் வகையில், உள்ளமும் ஒன்றுபடுங்கள். மாறாகக் காலத்தைக் கடத்திவிட்டுப் பின்னர் விழிப்பீராயின், உங்களால் பெறுவதற்கு மிகவும் அரியவனாய் ஆகிவிடுவான் அந்தப் பெருமான்.

612

பெருமான் பேரா னந்தத்துப்
பிரியா திருக்கப் பெற்றீர்காள்
அருமா லுற்றுப் பின்னைநீர்
அம்மா அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவந்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே. 8

எம்பெருமானின் பேரானந்தத்தைப் பிரியாமல் இருக்கக் கூடிய தகுதியைப் பெற்றவரே! நீக்கிக்கொள்ள முடியாத மயக்கத்தைப் பெற்றுப் பின்னர் நீங்கள் உள்ளமும் வருந்தி, வாய்வலிக்க அலறாமல் இருக்க வேண்டுமானால், அழகிய மணிகள் புனையப்பட்ட சிவபுரத்துத் திருக்கதவம் திறந்திருக்கும்போதே சென்றுவிட வேண்டும். காலத்தைக் கடத்திவிட்டுக் கவலைப்படுவதில் பயனில்லை. அந்தத் திருமாலும் அறியவியலாத, பாம்பணிந்த திருவாளனின் திருவடிகளை இந்தக் கணமே சென்றடைவோமாக!

613

சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணன்
பங்கன் புயங்கன் அருளமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வங் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே
பொய்யிற் கிடந்து புரளாதே. 9

அன்புடையீர்! சிவபெருமானுடைய திருவடிகளையே சேரவேண்டுமென்று எண்ணி, உங்களுடைய சிந்தனையைத் தெளிவடையச் செய்து வைத்துக் கொள்ளுங்கள். மேலும் நன்றாகச் சிந்தியுங்கள். போரிடுகையில் பொலிவுபெற்று விளங்கும் வேலினைப் போன்ற கண்களையுடைய உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்டிருப்பவனும், பாம்பை அணிந்தவனுமாகிய சிவபெருமானின் அருளமுதத்தை நிறைவாகப் பருகிப் பொய்யான இவ்வுலகில் கிடந்தவாறு புரண்டு கொண்டிராமல், அடங்காத ஆர்வத்துடன் மெய்யான சிவபெருமானின் திருவடிகளை அடைவதற்குரிய முயற்சியை மேற்கொள்ளுங்கள்.

614

புரள்வார் தொழுவார் புகழ்வாராய்
இன்றே வந்தாள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார்
மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீ ராகில் இதுசெய்ம்மின்
சிவலோ க்கோன் திருப்புயங்கள்
அருளார் பெறுவார் அகலிடத்தே
அந்தோ அந்தோ அந்தோவே.

அன்புடையீர்! தோள்கள் நிலந்தோயத் தரையில் விழுந்து புரண்டு, எம்பெருமானின் திருவடிகளை வணங்குங்கள்; அவனுடைய புகழினையே மிகவாகப் போற்றிப் பாடுங்கள் இக்கணமே. இவ்வுலகில் வந்திருக்கும் வெற்றாளாக இராதீர்! அவ்வகையில் மயக்கத்தைக் கொள்வீரானால், பின்னர் உங்களையும் யார்தாம் மதிப்பார்? அறிவு கலங்கி மயங்குகின்ற நீங்கள், அறிவுத் தெளிவினை அடைந்தவரால் மட்டுமே, சிவபுரத்தின் தலைவனும், பாம்பை அணிகலனாகக் கொண்டவனும் ஆகிய சிவபெருமானின் அருளினைப் பெறவியலும்; மற்றவரால் பெறவியலாது. அத்தகைய பெருமானின் அருளைப் பெறாதவரோ? இந்தப் பேருலகில் அந்தோ! அந்தோ! அந்தோவே!

திருச்சிற்றம்பலம்

46. திருப்படையெழுச்சி

(தில்லையில் அருளியது)
பிரபஞ்சப் போர்

(கலி விருத்தம்)

திரு + படை + எழுச்சி – திருப்படையெழுச்சி. எழுச்சி என்றால், எழுதல் அல்லது முற்படுதல். படையெழுச்சி என்பது, படையெழுதல். இருள் நிறைந்த மண்ணுலக வாழ்வில், அருள் நிறைந்த விண்ணுலக வாழ்வினைப் பெற, மருட்டும் மாயப்படை ஆன்மாவை அலைக்கழிக்காத வண்ணம், 'அருள்மறவர் படையெழுக!' என்று அடியவர்க்கு அறைகூவல் விடுப்பதே இதுவெனலாம். பிரபஞ்சப் போர் என்பது, ஆன்மாவை எதிர்த்துக் கிளம்பும் பொய்ம்மைகளை வென்று, சிவானந்தப் பேரின்பத்தை அடைவதற்காக நிகழ்த்தப்படும் ஆன்மிகப் போர் என்பதாகும். இப்பகுதியில், இரண்டு பாடல்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

615

ஞானவாள் ஏந்தும்ஐயர் நாதப் பறையறைமின்
மானமா ஏறும்ஐயர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே. 1

அன்புடையீர்! 'ஞானம்' என்னும் போர்வாளினைத் தாங்கி வருகின்ற நம்முடைய தலைவர்க்கு, அவரது 'நாதம்' என்னும் முரசினைக் கொட்டி முழக்குங்கள்; பெருமிதம் பொருந்திய வெண்காளைமேல் ஏறி வருகின்ற நம்முடைய் தலைவர்க்கு, முழுநிலவினைப் போன்று விளங்குகின்ற அவரது வெண்கொற்றக் குடையினை விரித்துப் பிடியுங்கள். உங்களுடைய பாதுகாப்புக் கவசமாகிய திருநீற்றினைப் பூசிக்கொள்ள விரைந்தோடிச் செல்லுங்கள். நம்மையும் மாயப்படை எதிர்கொண்டு வந்து தாக்காமல், 'வானம்' என்னும் ஊரினைக் கைப்பற்றிக் கொள்வோமாக!

616

தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற்படை வாராமே. 2

தொண்டரே! தூசிப் படையினராக நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள்! பத்தரே! நீங்கள் அந்தத் தொண்டர் படையினரைச் சூழ்ந்தவாறு செல்லுங்கள்! சிறந்த மனவாற்றல் படைத்த யோகியரே! நீங்கள் பேரணி நடத்திச் செல்லுங்கள்! திண்ணிய ஆற்றல் வாய்ந்த சித்தரே! நீங்கள் கூழை என்னும் துணைப்படையாகச் செல்லுங்கள்! அவ்வாறு ஒழுகினால், நம்மை மாயப்படையானது எதிர்கொண்டு வந்து தாக்காமல் தப்பித்தவாறு, வானவர் நாட்டைக் கைப்பற்றி, நாம் சிறந்த முறையில் செங்கோல் செலுத்தலாம்.

திருச்சிற்றம்பலம்

47. திருவெண்பா

(திருப்பெருந்துறையில் அருளியது)
அணைந்தோர் தன்மை

(நேரிசை வெண்பா)

திரு + வெண்பா – திருவெண்பா. சிவத்தைப் பற்றிய வெண்பா; சிவானந்தப் பேற்றினைப் பற்றிய வெண்பா. சிவம் என்றாலே, நன்மை, தூய்மை, செம்மை என்று பலவாறு பொருள்படும். அத்தகைய சிவானந்தப் பேற்றினைப் பெற்ற மாணிக்கவாசகப் பெருந்தகை, எல்லோரும் அதுபோலவே பெறவேண்டும் என்று விரும்பி, வெண்பாவின் மூலம் விளக்குவது இப்பகுதி. அணைந்தோர் தன்மை என்பது, சிவானந்தப் பேற்றினை உள்ளத்தில் உணர்ந்து கொண்டவரின் தன்மைகளை எடுத்துரைப்பது. நால்வகைப் பாக்களில் முதல் வகையாக விளங்கும் வெண்பாவால் அமையப் பெற்றது. ஏற்கெனவே கீர்த்தி, போற்றி ஆகியவை அகவற்பா வகையில் அமைந்துள்ளன. முன்னர்த் திருத்தசாங்கத்தில் அமையப் பெற்றவாறே, இங்கும் நேரிசை வெண்பா அமையப் பெற்றுள்ளது. இப்பகுதியில், பதினொரு பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

617

வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன் – செய்ய
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து. 1

தேனைச் சிந்துவதும், செந்தீயினை நிகர்ப்பதும் ஆகிய திருமேனித் திருவழகினை உடையவன், சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையில் உறைகின்ற திருவாளன். அத்தகைய் பெருமானை, என்னுடைய உள்ளத்தினுள்ளே வைக்காதிருந்தேன். அதன் காரணமாக என்னிடமிருந்த இரண்டு கொடிய வினைகளும் வெந்து மடியவில்லை; என்னுடைய உடலும் உருகவில்லை; என்னுடைய பொய்களும் பொடிப் பொடியாகவில்லை. இனிமேலும் நான்தான் என்ன செய்வேனோ?

618

ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன் – தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து. 2

மேலான பரம்பொருளே! நான் ஆரவாரந்தான் செய்வேனோ? அரற்றத்தான் செய்வேனோ? உன்னை நேர்நின்று பார்க்கத்தான் செய்வேனோ? 'தீர்ப்பதற்கு இயலாத ஆனந்த மயக்கத்தினை உண்டாக்கும் என்னுடைய தந்தையாகிய திருப்பெருந்துறையில் உறைபவன் இவன்தான்!' என்றே தலை தாழ்ந்து சொல்லக் கூடியவர்தாமே என்பவரும் யார் ஒருவரோ? இனிமேலும் நான்தான் என்ன செய்வேனோ?

619

செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பறியேன் – வைய்த்
திருந்துறையுள் வேல்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். 3

திருப்பெருந்துறையில் பொருந்திய எம்பெருமான், இந்த நிலவுலகிற்கு எழுந்தருளி வந்து, தன்னுடைய உறைக்குள் முடங்கிக் கிடந்த ஞான வேலினை எடுத்து, எனது சிந்தையில் நுழையவிட்டான். ஆனால், அடியேனோ இந்நாள்வரை செய்த பிழைகளை அறிந்திலேன். அவனுடைய திருவடிகளைக் கைகூப்பித் தொழுது, கடைத்தேறும் வகையின் உயிர்த் துடிப்பினையும் அறிந்திலேன். என்னே என் செயலும்!

620

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் – தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து. 4

பேரழகு வாய்ந்தவனும், திருப்பெருந்துறையில் பொருந்தியவனும், ஆகிய எம்பெருமான், மேலான கருணையுள்ளங் கொண்டவன். இனிவருந் துன்பங்களைப் போக்கக் கூடிய மாமருந்தைப் போன்றவனும் ஆவான். என்னுடைய முன்னை வினைகள் இரண்டினையும் வேருடன் களைந்து, எனக்கு முன்பாக நின்று காட்சி கொடுத்தவன் அவன். பின்னையும் எனக்கு வாய்க்கக்கூடிய பிறப்பினை அறுக்கக்கூடிய பெருந்தகையான் அவனே.

621

அறையோ அறிவார்க் கனைத்துலகும் ஈன்ற
மறையோனும் மாலும்மால் கொள்ளும் – இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியா
திருந்துறையும் என்னெஞ்சத் தின்று. 5

எல்லா உலகங்களையும் படைத்த நான்முகனுக்கும் திருமாலுக்கும் தன்னை வெளிப்படுத்திக் காட்டாமலும், அவர்க்கே மயக்கத்தினை உண்டு பண்ணக் கூடியவனாகிய எம்முடைய இறைவன் சிவபெருமான், என்னுடைய உள்ளத்திலும் இன்று பிரியாமல் குடிகொண்டுள்ளான். இச்செய்தியினை அறிந்துகொள்ள விரும்புவோர்க்கெல்லாம் அறைகூவிச் சொல்வாயாக!

622

பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை – அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து. 6

என் அப்பனாகிய திருப்பெருந்துறையில் உறைபவன், என்னை ஆண்டுகொண்டான்; தன்னுடைய பேரருளால், என்பால் திருப்பார்வையைச் செலுத்தினான்; இறவாமைக்கு மருந்தானான்; பேரின்பமும் ஆனான். இவ்விடத்தில் மீளவும் எழுந்தருளி வந்து, என்னைப் பித்தனாக்கி மகிழ்வான்; எனது பிறப்பினையும் வேருடன் களைவான்; எனது நெஞ்சத்திலும் இடம்புகுந்து, சொல்லவியலா வகையில் என்னை உன்மத்தம் கொள்ளச் செய்வான்.

623

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே – சீரார்
திருத்தன் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி. 7

சிறப்புப் பொருந்திய செல்வமும், பேரழகும் கொண்ட திருப்பெருந்துறையில் உறைபவன். என் உள்ளத்தில் குடிபுகுந்த ஒப்பற்ற ஒருவனும் ஆவான். அவன் எனது சிந்தனையில் பெருக்கிய ஒளியானது, மீண்டும் இவ்வுலகில் பிறந்து வாராத தன்மையினை வழங்கியது; வேறுபாடற்ற தன்மையிலும் வந்து, எனக்குத் தவிட்டாத தெள்ளமுதமாகவும் அமையப் பெற்றது.

624

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழாம் அடியேனை – யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை. 8

எல்லாத் தெய்வங்களுக்கும் மேலானவனே! அளவிடவியலாச் சிறப்பினையுடைய பெருமானே! யாவரினும் கீழ்ப்பட்ட அடியேனை, யாவராலும் பெறவியலாத பேரின்பப் பேற்றினுள் கொண்டு செலுத்தினாய். அத்தகைய பெருமானாகிய உனக்கு, நான் என்னதான் கைம்மாறு செய்யப் போகின்றேன்? அவ்வாறு செய்யும் வகையினைத்தான் அடியேன் அறியமாட்டேனே!

625

மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான் – மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும். 9

மும்மூர்த்தியாரும், முப்பத்துமூன்று தேவரும், அவர் நீங்கிய தேவர் பிறரும் காணவியலாத தன்மையினைக் கொண்டவன் எங்கள் சிவபெருமான். அந்தகையவன் பரியேறி இந்த மண்ணுலகத்தை வந்தடைந்தான். அவனுடைய கழல் புனைந்த நெடிய திருவடிகளை வழிபட்டால், என் உடலினுள்ளே இன்பம் நிறைந்தோங்கும்.

626

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்
திருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாம் – தருங்காண்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து 10

என்னுடைய நெஞ்சகமே! திருப்பெருந்துறையில் உறைகின்ற எம்முடைய சிவபெருமான், பெருங்கருணையாளன் ஆவான். அவன், மருந்து வடிவமாக வந்து, என் உள்ளத்தில் குடியேறி விட்டான். அவன், நாம் வேண்டிய அனைத்தையும் தரவல்லவன். எனவே, அவனுடைய திருவடிகளையே எப்போதும் நினைத்திருக்க அவனிடம் இருந்து கேட்டு அதனை இரந்து பெற்றுக் கொள்வாயாக!

627

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய் – அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. 11

சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையினை உறைவிடமாகக் கொண்டவன் எம்பெருமான். அவன், என்னுடைய உள்ளத்தையே தான் தங்கி வாழ்கின்ற ஊராக மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டான். அதன்பால் இன்பத்தைப் பெருக்கினான். அறியாமையாகிய இருளினை விரட்டியடித்தான். எக்காலத்திலும் என்னைத் தொடர்ந்து வருகின்ற பிறவியாகிய துன்பத்தினைத் துண்டித்தான். சோதி வடிவமாக நிலைத்து நின்றான். உள்ளத்தில் அன்பெனும் பண்பினை நிலைநாட்டினான்.

திருச்சிற்றம்பலம்

48. பண்டாய நான்மறை

(திருப்பெருந்துறையில் அருளியது)
அனுபவத்துக்கு ஐயமின்மை உரைத்தல்

(நேரிசை வெண்பா)

பண்டு + ஆய + நான்கு + மறை – பண்டாய நான்மறை. எப்போதென எவராலும் அளவிட்டுக் கூறவியலாத தொல் பழங்காலத்தே இறைவனுடைய வாய்மொழியாகத் தோன்றிய நான்கு மறைகளையே 'பண்டாய நான்மறை' என்பர். 'அனுபவத்துக்கு ஐயமின்மை உரைத்தல்' என்பது, உண்மையினை உணர்ந்த அனுபவத்தால், ஐயமின்றித் தெரிவிப்பது. திருப்பெருந்துறை இறைவனை வழிபடும் அடியவர், பாசக்கட்டறுத்து, இடர்களைந்து, இன்பவாழ்வு பெறுவர் என்பதை உணர்த்துவது, முன்னிரு பகுதிகளைப் போலவே, இப்பகுதியில், ஏழு வெண்பாப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன என்பதுடன், அவை அந்தாதித் தொடையிலும் அமைந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

628

பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனும்
கண்டாரு மில்லைக் கடையேனைத் – தொண்டாகக்
கொண்டருளும் கோகழிஎங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாகுமோ கைம்மா றுரை. 1

எனது நெஞ்சமே! பழைமைமிக்க நான்கு மறைகளும், தன்னிடம் நெருங்காச் சிறப்பிற்குரியவன் அவன். திருமாலும் நான்முகனுமாகிய இருவரில், ஒருவரும் அவனைக் கண்டவரில்லை. அத்தகையவன், கடைப்பட்டேனைத் தன்னுடைய தொண்டருள் ஒருவனாக ஏற்றுக்கொண்டான். அளவற்ற அருளையும் வழங்கினான். அவனே திருப்பெருந்துறையினை உடையவனுமாகிய எம்முடைய கோமான். அவனுக்கு நான் செய்யக் கூடிய கைம்மாறும் உளதாமோ? உளதாயின், அதனைக் கூறுவாயாக!

629

உள்ள மல்மூன்றும் மாய உகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த – வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு. 2

எல்லாம் வல்லவனாகிய எம்பெருமான், நம்மிடமுள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் அழித்து, மேன்மேலும் பொங்கிப் பெருகுகின்ற பேரின்ப வெள்ளத்தினை வழங்குபவன். அன்றைய நாளில், குதிரையின்மேல் ஊர்ந்து வந்த வள்ளலும் அவனே. அவன் மிகவும் விருப்பத்துடன் விளங்குகின்ற திருப்பெருந்துறையினை மனமார வாழ்த்துங்கள். அவ்வாறு வாழ்த்திட, நமது செறிவுற்ற பிறவிக்காடு கரிந்து, வேரோடழியும் என்பதை உணருங்கள்.

630

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன் நம்வினையை - வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து. 3

எனது நெஞ்சே! கானகத்து வேடுவனாகவும், கடலின்மேல் வலைஞனாகவும், நாட்டிடையில் குதிரைச் சேவகனாகவும் எழுந்தருளியவனே நம்முடைய பெருமான். அவனே நம்முடைய வல்வினைகளையெல்லாம் அழித்து, நமக்கு அருளினை வழங்குகின்ற திருப்பெருந்துறையான் ஆவான். உன்னுடைய மயக்கமானது அழிந்தொழிய, அவனுடைய அழகிய தாமரைத் திருவடிகளை நீதான் வாழ்த்துவாயாக!

631

வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துலகம் ஏத்தத் தகுவாருஞ் - சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர். 4

விண்ணுலகத் தேவரெல்லாம் சூழ்ந்தபடி சென்று, பணிவுடன் வணங்கப்பெறும் சிறப்புக்குரியவன், திருப்பெருந்துறைப் பெருமான், அவ்வாறே அவனைப் பணிவுடன் வணங்குகின்ற நம்மவரே, இவ்வுலகில் நல்வாழ்வு பெற்றபடி வாழ்ந்தனர்; கொடுவினையைக் கொன்றவரும் ஆயினர். அத்துடன், நிலவுலக மக்களெல்லாம் போற்றிப் புகழ்கின்ற பெருமிதத்தையும் பெற்றவராவார்.

632

நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப் - பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண். 5

எனது நெஞ்சமே! நம்முடைய துன்பங்கள் எல்லாம் நம்மைவிட்டுத் தொலைய, நீ திருப்பெருந்துறையினைச் சென்றடைவாயாக! அங்கே வீற்றிருக்கும் கோகழி மன்னவனை உள்ளத்தில் எண்ணி, மனவெழுச்சியைக்

கொள்வாயாக! இசையின் இன்பம் போன்று இனிய மொழியினையுடையவளாகிய உமையம்மையோடு, உத்தரகோசமங்கையினை விட்டு விலகாம நிலைத்திருந்தவனைக் கண்ணாரக் கண்டு களிப்பாயாக!

633

காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகல – காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு.

எனது நெஞ்சமே! தாம் காணக்கூடிய கருவிகள் அனைத்தையுமே, பேரின்ப என்றும் போற்றி வருபவர் அடியார். அவருடைய பிறவிப் பிணியானது முற்றில விலகுமாறு, தன்னுடைய கடைக்கண் பார்வையினைச் செலுத்தக் கூடி சிறப்புக்குரியவன் நம்முடைய பெரியோனாகிய சிவபெருமான். அவ திருப்பெருந்துறையினை விட்டு, எப்போதும் பிரியாமல் இருப்பவ அத்தகையவனை, மனமார எண்ணி, வாயாரப் புகழ்ந்து பேசுவாயாக!

634

பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை – பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து

பேசும் பொருள்கள் அனைத்துக்கும் இலக்காக இருப்பவன் அவன்; இதமாகவும் இருப்பவன் அவன்; மாறாகப் பேச்சினைக் கடந்த மாசில்லா மாணிக்கமாகவும் இருப்பவன் அவன். அத்தகையவனுடைய மாணிக் மணியினையொத்த வார்த்தையினையே நான் பேசினே 'திருப்பெருந்துறையுறை சிவனே!' என்று போற்றிப் புகழ்ந்தேன். பிறவிப் பிணிக் நன் மருந்தாகிய அவனுடைய திருவடிகளையே என் மனத்தில் வைத்தேன். என பிறவிப் பிணியையும் போக்கிக் கொண்டேன்.

திருச்சிற்றம்பலம்

49. திருப்படையாட்சி

(தில்லையில் அருளியது)
சீவ உபாதி ஒழிதல்

(பன்னிருசீர் விருத்தம்)

திரு + படை + ஆட்சி – திருப்படையாட்சி. படை என்னும் சொல், ஆயுதத்தைக் குறித்தது. ஆயுதம் – போர்க் கருவி. ஆடையற்றவன் அரை மனிதன் என்பது போல், ஆயுதம் இல்லாத நாடு அரைகுறை நாடாகும். ஆட்சி என்பதற்கு, ஆளுகை அல்லது அனுபவம் என்பது பொருள். நாட்டை ஆளுகின்ற அரசனுக்கு தேர், யானை, குதிரை, காலாள் ஆகிய நால்வகைப் படைகள் எந்த அளவிற்கு இன்றியமையாதனவோ, அந்த அளவிற்கு ஆண்டவனை அடைய விரும்பும் அடியவர்க்கும் ஆத்ம சாதனங்கள் நல்ல படைகளாவன. ஆதலால், அவை திருப்படைகள் எனப்படுகின்றன. அவற்றின் ஆளுகை அல்லது அனுபவம் ஓங்கும் அளவிற்கு, ஆத்ம சாதகன் முன்னேற்றமடைகின்றான். சீவ உபாதி ஒழித்தல் என்பது, இறைவன் எதிர்வந்தருளி, உள்ளத்துள் புகுகையில், உயிர் குறித்த உபாதிகள் அனைத்தும் ஒழிந்துவிடும் என்று உரைப்பது. இப்பகுதியில், எட்டுப் பாடல்களிலும் உள்ள எட்டு அரையடிகளில், இறுதி அரையடி நீங்கலாக, 'ஆகாதே!' என்னும் இயைபுத்தொடை அமைந்துள்ளது. எட்டுப் பாடல்களும் ஏகாரத்தில் முடிந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

635

கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு
மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல்
பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படு மாயிடிலே. 1

மீனைப் பிடிப்பதற்காக வலையினை வீசிய வேடுவனாகிய எம்பெருமான், நமக்கு முன்பாக வெளிப்பட்டு, நம்முடைய உயிரானது அவனோடு இரண்டறக் கலப்பதாயின், நம்முடைய கண்கள் இரண்டும் அவனுடைய திருவடிகளைக் கண்டுகளித்தல் நடவாது; மகளிருடைய வாழ்க்கையில் என்னுடைய வாழ்க்கையும் சிக்குண்டு, கடைப்படுந்தன்மை நிகழாது; உலகங்களில் வந்து வந்து பிறக்கின்றவாறு, எம்பெருமானை மறக்கின்ற நிலைமையும் உண்டாகாது; திருமாலும் அறியவியலா மலரடிகள் இரண்டினையும் வணங்குதலும் நடவாது; பண்ணிசை இன்பத்தைத் தருகின்ற பாடலுடன் ஆட்லும் புரிதல் உண்டாகாது; தென்பாண்டி நன்னாட்டை உடையவனாகிய சிவபெருமானின் படையின் ஆளுமைகளைப் பாடுவதும் இயலாது; வானுலகத் தேவரெல்லாம் இன்பம் பெறுவதற்குக் காரணமாகிய, எவ்வித அற்புதச் செயலும் நிகழ்ந்து, வேறுபடுந்தன்மை என்பதும் ஆவதற்கில்லை.

636

ஒன்றினொ டொன்றுமோ ரைந்தினொ டைந்தும்
உயிர்ப்பது மாகாதே
உன்னடி யாரடி யாரடி யோமென
உய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென வந்த
கணக்கதும் ஆகாதே
காரண மாகும் அனாதி குணங்கள்
கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த நடுக்கம்
நடந்தன ஆகாதே
நாமுமே லாமடி யாருட னேசெல
நண்ணுது மாகாதே
என்றுமென் அன்பு நிறைந்த பராவமு
தெய்துவ தாகாதே
ஏறுடை யான்எனை ஆளுடை நாயகன்
என்னுள் புகுந்திடிலே. 2

வெள்ளேற்றை வாகனமாக உடையவனும், என்னை அடிமையாக உடைய தலைவனுமாகிய சிவபெருமான், என் உள்ளத்தில் புகுவானாயின், உயிரினொடு உடலும், ஐம்பொறிகளோடு ஐம்புலன்களும் ஒன்று கலந்து செயற்படா; 'உன்னுடைய அடியவர்தம் அடியவர்க்கும் நாங்கள் அடியவரானோம்' என்று சொல்லி, அதனால் கடைத்தேறலும் நடவாது; புனிற்றிளங்கன்றினை நினைந்தவாறு, எழுந்து விரைந்து செல்லும் தாய்ப்பசுவினைப் போன்று, இயல்பான பாசப்பற்றும் நிகழாது; தீவினைகளுக்குக் காரணங்களாகிய தொன்மையிலாப் பண்புகள், நெஞ்சின் நினைவில் இடம்பெறுதல் இல்லை. 'நன்மை இதுவோ தீமை இதுவோ?' என்று ஒரு பொருள் குறித்து ஆராய்ந்ததால்

ஏற்பட்ட கலக்கம் என்பதும் உண்டாகாது; நாம் எல்லோரும் அடியார் பிறருடன் செல்லுமாறு விரும்பி நெருங்குதலும் நிகழாது. எக்காலத்திலும் என்னுடைய அன்பு கனிந்த மேலான அமுதம் போன்ற அவனை அடைதலும் ஆகாது.

637

பந்த விகார குணங்கள் பறிந்து
மறிந்திடு மாகாதே
பாவனை யாய கருத்தினில் வந்த
பராஅமு தாகாதே
அந்த மிலாத அகண்டமும் நம்முள்
அகப்படு மாகாதே
ஆதி முதற்பர மாய பரஞ்சுடர்
அண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை
சிந்திடு மாகாதே
சேலன கண்கள் அவன்திரு மேனி
திளைப்பன ஆகாதே.
இந்திர ஞால இடர்ப்பிற வித்துய
ரேகுவ தாகாதே
என்னுடைய நாயக னாகிய ஈசன்
எதிர்ப்படு மாயிடிலே. 3

என்னை அடிமையாகக் கொண்டவனும், அருள் செய்கின்றவனும் ஆகிய எம்பெருமான் என்னும் முதல்வன், எழுந்தருளி வந்து என்னை அணுகப் பெற்றால், பாசத் தொடர்புடைய பிறவிக்குக் காரணங்களாகிய பண்புகள் தோன்றுவனவும், மறைவனவும் ஆகிய தன்மைகள் நிகழா; பாவனையாகிய கருத்தாக உள்ளத்தில் தோன்றிடும் ஒப்பற்ற இன்பமாகிய அமுதத்தைச் சுவைத்தலும் இயலாது; இறுதி என்பது இல்லாத, விரிந்துள்ள பொருள் எதுவும் நமக்கெதிரில் தோன்றி நம் வசப்படும் என்பதும் ஆகாது; முன்னைப் பழைமைக்கும் முற்பட்டவனாகிய முதல்வனாம் பரஞ்சோதியானவன் நம்மை நெருங்குவதும் நிகழாது; சிவந்த பவளம் போன்ற வாயினையுடைய மகளிரால் உண்டாகும் இடர்ப்பாடுகள் நீங்குதல் என்பதும் கிடையாது. கெண்டைமீனைப் போன்ற அகன்ற கண்கள், அந்தச் செம்மேனி அம்மானின் திருமேனியினைக் கண்டு, மகிழ்வன என்பதும் நிகழா; இந்திர சாலம் போன்றதாகிய பிறவியென்னும் பெருந்துன்பம், நம்மிடமிருந்து ஒழிந்துபோதல் என்பதும் ஆகாது.

638

என்னணி யார்முலை ஆகம் அளைந்துடன்
இன்புறு மாகாதே
எல்லையில் மாக்கரு ணைக்கடல் இன்றினி
தாடுது மாகாதே
நன்மணி நாதம் முழங்கியென் உள்ளுற
நண்ணுவ தாகாதே
நாதன் அணித்திரு நீற்றினை நித்தலும்
நண்ணுவ தாகாதே
மன்னிய அன்பரில் என்பணி முந்துற
வைகுவ தாகாதே
மாமறை யும்அறி யாமலர்ப் பாதம்
வணங்குது மாகாதே
இன்னியற் செங்கழு நீர்மலர் என்தலை
எய்துவ தாகாதே
என்னையு டைப்பெரு மான்அருள் ஈசன்
எழுந்தரு ளப்பெறிலே. 4

என்னை அடிமை கொண்டவனும், எனக்கு அருள் புரிகின்றவனும்ஆகிய முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமான், எழுந்தருளி வந்து என்னை நெருங்கப் பெற்றால், அணிமணிகள் புனைந்து, அழகுடன் விளங்கும் என்னுடைய கொங்கைகள், அவனுடைய திருமேனியில் தோய்ந்து, இன்புறுதல் நிகழாது; இன்றைய பொழுதில், எல்லையில்லாத கருணைப் பெருங்கடலில் களிப்புற்று ஆடுதல் என்பதும் நடவாது; அவனுடைய நல்ல மாணிக்க நாதம் ஒலித்து, அவ்வொலியானது எனது உள்ளத்தில் பொருந்துமாறு நெருங்குவதும் நிகழாது; என்னுடைய தலைவன் அணிந்திருக்கின்ற திருநீற்றினை, நான் நாள்தோறும் தரித்துக் கொள்வதும் நடவாது; நிலைபெற்று விளங்குகின்ற அவனுடைய அடியவருள், என்னுடைய பணியே முதன்மையாக விளங்குதலும் நிகழாது; பெருஞ்சிறப்பினையுடைய மறைகள் நான்குமே அறிந்துகொள்ள இயலா மலரடிகளை வணங்குதலும் நடவாது; இனிமை பொருந்திய செங்கழுநீர்மலர் போன்ற அவனுடைய திருவடிகள் என் தலையில் பொருந்துவதும் நிகழாது.

639

மண்ணினில் மாயை மதித்து வகுத்த
மயக்கறு மாகாதே
வானவ ரும்அறி யாமலர்ப் பாதம்
வணங்குது மாகாதே
கண்ணிலி காலம் அனைத்தினும் வந்த
கலக்கறு மாகாதே
காதல்செ யும்அடி யார்மனம் இன்று
களித்திடு மாகாதே
பெண்ணலி ஆணென நாமென வந்த
பிணக்கறு மாகாதே
பேரறி யாதஅ நேகப வங்கள்
பிழைத்தன ஆகாதே
எண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை
எய்துவ தாகாதே
என்னையு டைப்பெரு மான்அருள் ஈசன்
எழுந்தரு ளைப்பெறிலே. 5

அடியேனை அடிமை கொண்டவனும், அருளைச் செய்பவனுமாகிய எம்பெருமான், என்னை எதிர்கொண்டவனாய் எழுந்தருளி வந்து நெருங்கப்பெற்றால், இந்த நிலவுலகில் மாயையானது வகுத்தவாறு என்னைத் துன்புறுத்திக் கொண்டிருக்கின்ற மயக்கங்கள் நீங்குதல் என்பது நிகழாது; விண்ணவரும் அறியவியலா அவனுடைய மலரடிகளை நான் வணங்குதல் என்பதும் நடவாது; அறிவில்லாதவனாய் இருந்து வந்த காலங்களில் எல்லாம் தோன்றிய கலக்கங்கள் நீங்குதலும் நிகழாது; அவன் மீது அன்பு செய்யும் அடியவரின் மனங்கள், களிப்புறுதல் என்பதும் இல்லை; பெண், ஆண், அலி எனவும், நாம் எனவும் நம்மிடையே தொடர்ந்து வந்த வேறுபாடுகள், நம்மிடமிருந்து ஒழிதல் என்பதும் நடவாது; பெயர்களையே அறியாவண்ணம், நம்முடைய பலவகைப் பிறப்புகளினின்றும் தப்பிப் பிழைத்தல் என்பதும் இல்லை; எண்ணற்றவையாகிய அற்புத ஆற்றல்களும், என்னை வந்து அடைதல் என்பதும் ஆகாது.

640

பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு
பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து
பொலிந்திடு மாகாதே
மின்னியல் நுண்ணிடை யார்கள் கருத்து
வெளிப்படு மாகாதே
வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம்
மிகுந்திடு மாகாதே
தன்னடி யாரடி என்தலை மீது
தழைப்பன ஆகாதே
தானடி யோம்உட னேஉய வந்து
தலைப்படு மாகாதே
இன்னியம் எங்கும் நிறைந்தினி தாக
இயம்பிடு மாகாதே
என்னைமுன் ஆளுடை ஈசன்என் அத்தன்
எழுந்தரு ளப்பெறிலே. 6

அடியேனை அந்நாளிலேயே அடிமை செய்து கொண்டவனும், முன்னவனும், என் அப்பனுமாகிய சிவபெருமான் எழுந்தருளி வந்து, என்னை எதிர்கொண்டால், பொன்மயமான திருமேனியில் திருவெண்ணீறும் பொலிவுற்று விளங்குதல் திகழாது; பெருந்தவசியரின் கைகள் ஒன்றுகூடி, மலர்மாரி பொழிதல் என்பதும் நடவாது; மின்னலை நிகர்த்த மெல்லிடையாராகிய மகளிர்தம் உள்ளக் கருத்துகள் வெளிப்படுதல் என்பதும் நிகழாது; வீணையினை மீட்டுவதால் எழுகின்ற ஓசையில் இன்பம் பெருகுதல் என்பதும் கிடையாது; தன் அடியவரின் திருவடிகள், என் தலையின்மேல் விளங்கிப் பொலிவன என்பதும் நடவாது; அவனுடைய அடியவராகிய நாங்கள், உடனே கடைத்தேறுமாறு எழுந்தருளி வந்து, எம்மை ஆட்கொள்வது என்பதும் நிகழாது; இனிய இசைக்கருவிகள், எவ்விடத்தும் நிறைவுடன் இனிதாக முழங்குதல் என்பதும் ஆகாது.

தி.24.

641

சொல்லிய லாதெழு தூமணி யோசை
        சுவைதரு மாகாதே
துண்ணென என்னுளம் மன்னிய சோதி
        தொடர்ந்தெழு மாகாதே
பல்லியல் பாய பரப்பற வந்த
        பராபர மாகாதே
பண்டறி யாதப ரானுப வங்கள்
        பரந்தெழு மாகாதே
வில்லியல் நன்னுத லார்மயல் இன்று
        விளைந்திடு மாகாதே
விண்ணவ ரும்அறி யாத விழுப்பொருள்
        இப்பொரு ளாகாதே
எல்லையி லாதன எண்குண மானவை
        எய்திடு மாகாதே
இந்து சிகாமணி எங்களை ஆள
        எழுந்தரு ளப்பெறிலே. 7

சந்திரனைத் தலையில் தாங்கியவனாகிய ஒப்பிலாத மாணிக்கம் போன்றவன், எங்களை ஆண்டு கொள்ள எழுந்தருளப் பெற்றால், சொல்லுக்குள் அடங்கவியலாமல் எழுகின்ற தூய மணியோசை, இன்பந்தருதலும் இயலாது; திடீரென என்னுடைய உள்ளத்தில் நிலைபெற்ற சோதியானது, தொடர்ந்து எழுவதும் நிகழாது; பலவகை இயல்புகளாகிய பரபரப்புகள் நீங்குமாறு வந்த மேலான பரம்பொருள் தோன்றுதலும் நடவாது; முன்னை நாள்களில் அறியமுடியாப் பற்பல தெய்வ அனுபவங்கள் எல்லாம் விரிந்து பரந்து எழுதலும் இயலா; வில்லின் தன்மையை நிகர்த்த அழகிய நெற்றியினை உடைய மகளிரின் மயக்கம், இன்று உண்டாதலும் இல்லை. வானவரும் அறியாத மேலான பொருள், இதற்கும் மேம்பட்டதாக விளங்குதலும் ஆகாது; எல்லை இல்லாதனவாகிய பரம்பொருளின் எண்குணங்களை அடைதலும் ஆகாது.

642

சங்கு திரண்டு முரன்றெழும் ஓசை
தழைப்பன ஆகாதே
சாதி விடாத குணங்கள் நம்மோடு
சலித்திடு மாகாதே
அங்கிது தீதிது நன்றெனு மாயை
அடங்கிடு மாகாதே
ஆசைஎ லாம்அடி யாரடி யோம்எனும்
அத்தனை யாகாதே
செங்கயல் ஒண்கண் மடந்தையர் சிந்தை
திளைப்பன ஆகாதே
சீரடி யார்கள் சிவானு பவங்கள்
தெரிந்திடு மாகாதே
எங்கும் நிறைந்தமு துறு பரஞ்சுடர்
எய்துவ தாகாதே
ஈறறி யாமறை யோன்எனை ஆள
எழுந்தரு ளப்பெறிலே. 8

இறுதி என்பதை அறியாத மறைகளின் நாயகனாகிய எம்பெருமான், என்னை ஆண்டுகொள்வதற்கு எழுந்தருளப் பெற்றால், சங்குகள் ஒருங்கு திரண்டு ஓசை கொண்டு எழுப்புகின்ற ஒலியானது பெருகுதலும் நிகழாது; சாதி குலங்களால் ஏற்படுகின்ற பண்புகள் எல்லாம், நம்மோடு வெறுப்புற்று ஓடுதல் என்பதும் நடவாது; ஆங்கே, 'தீது இது! நன்மை இது!' என்னும் மாயையானது, அடங்கி ஒடுங்கிவிடுதல் என்பதும் இயலாது; ஆசை எல்லாமும் 'ஆண்டவனுடைய அடியார்க்கும் அடியேம் நாங்கள்!' என்னும் அளவில் கூறுதல் என்பதும் நடவாது; சிவந்த கெண்டைமீனை நிகர்த்த, ஒளி பொருந்திய கண்களை உடைய மகளிரின் மனங்கள், பூரிப்படைதல் என்பதும் நிகழாது; சிறப்பு மிக்க அடியவரின் சிவானந்த அனுபவங்கள், இவ்வகைத்தெனத் தெரிதலும் இயலாது; அங்கிங்கெனாதபடி, எங்கெங்கும் நிறைந்தபடி, அமுதமாக ஊற்றெடுக்கும் பரஞ்சோதியை அடைதல் என்பதும் ஆகாது.

திருச்சிற்றம்பலம்

50. ஆனந்த மாலை

(தில்லையில் அருளியது)
சிவானுபவ விருப்பம்

(அறுசீர் விருத்தம்)

ஆனந்தம் + மாலை – ஆனந்த மாலை. ஆனந்தம் – இன்பம்; மாலை – இயல்பு. எனவே, ஆனந்த மாலை என்பது, இன்பத்தின் இயல்பு எனப் பொருள்படும். அதாவது, மெய்யடியாரைக் கூடிய சிவபெருமானைப் பிரியாதிருக்கும் இன்பத்தின் இயல்பினை விரும்பி உரைப்பது. சிவானுபவ விருப்பம் என்பது, சிவானந்த அனுபவத்தை விரும்பிய மாணிக்கவாசகப் பெருந்தகை, எம்பெருமானிடம் முறையிடுகின்ற தன்மையினைக் கூறுதல். இப்பகுதியில், ஏழு பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

643

மின்னே ரனைய பூங்கழல்க
ளடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர்கொண்டு
போற்றா நின்றார் அமரரெல்லாம்
கன்னே ரனைய மனக்கடையாய்க்
கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்தே
என்னே ரனையேன் இனியுன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே. 1

எம்முடைய பெருமானே! மின்னலையொத்த அழகுமிக்க உன்னுடைய மெல்லடிகளைப் பற்றியவரே, பெரிதாகிய இவ்வுலக மயக்கங்களைக் கடந்தவராவார். பொன்னைப் போன்று அழகு பொருந்திய மலர்களைக் கொண்டு, தேவரெல்லாம் உன்னுடைய திருவடிகளில் தூவி வழிபட்டு நின்றனர். அடியேனோ, கல்லினையொத்த மனம் படைத்த கடைப்பட்டேன் ஆயினேன். அதனால், சான்றோரரால் வீழ்ந்துபட்டேன். என்னை நிகர்த்தவன் நானேதான். இப்படிப்பட்ட நிலையில், இனிமேலும் உன்னை அடையுமாறு, உரிய வழியினை எனக்குக் கூறுவாயாக!

644

என்னால் அறியாப் பதம்தந்தாய்
யான தறியா தேகெட்டேன்
உன்னால் ஒன்றுங் குறைவில்லை
உடையாய் அடிமைக் காரென்பேன்
பின்னாள் உன்னைப் பண்டிந்தேத்தும்
பழைய அடிய ரொடுங்கூடா
தென்நா யகமே பிற்பட்டிங்
கிருந்தேன் நோய்க்கு விருந்தாயே. 2

எந்தை பெருமானே! என்னால் அறிந்துகொள்ள முடியா அரும்பதங்களை எல்லாம் அடியேனுக்கு வழங்கினாய். அவற்றின் சிறப்புகளை எல்லாம் அறிந்து கொள்ளாமலே அடியேன் கெட்டழிந்தேன். உன்னால் எனக்குக் குறையேதும் இல்லை. என்னை அடிமையாக உடையவனே! உன்னைத் தவிர, என்னை அடிமையாகக் கொள்ள, யாவரே உள்ளனர்? என்னுடைய தலைவனே! பல காலங்களாக உன்னைப் பணிந்து போற்றி வணங்கக் கூடிய உன்னுடைய பழைய அடியாரோடு நான் சேராமலே, பின்தங்கி இவ்வுலகில், பிணிக்கு விருந்தாகிக் கிடந்தேனே!

645

சீல மின்றி நோன்பின்றிச்
செறிவே யின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறியேறக்
கோலங் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே. 3

நல்லொழுக்கம் இல்லாமலும், நோன்புகளை இயற்றாமலும், ஆழ்ந்த அன்பு இல்லாமலும், நல்லறிவு இல்லாமலும் தோலின் பாவையெனக் கூத்தாடிக் கூத்தாடிச் சுழன்றபடி விழுந்து கிடக்கின்றேன். அத்தகையவனாகிய என்னிடம் தன் மீது மயக்கம் கொள்கின்ற வழியினைக் காட்டினான்; தன்னை அடைகின்ற நெறியினையும் காட்டினான். மீண்டும் இவ்வுலகில் பிறந்துவராத, அவ்வுலகம் சென்றிடத் தக்கவாறு தன்னுடைய திருக்கோலத்தினையும் காட்டினான். அவ்வாறு காட்டி என்னையும் ஆண்டுகொண்ட எந்தை பிரானைக் கொடியேனாகிய யான் என்றுதான் கூடுவேனோ?

646

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
கேடி லாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவ தெல்லாம்நான்
பட்டாற் பின்னைப் பயனென்னே
கொடுமா நரகத் தழுந்தாமே
காத்தாட் கொள்ளுங் குருமணியே
நடுவாய் நில்லா தொழிந்தக்கால்
நன்றோ எங்கள் நாயகமே. 4

கெட்டுப் போகும் நான், கெடும் வழிகள் எல்லாவற்றிலுமாகச் சென்று கெட்டு வருகின்றேன். கேடில்லாதவனாகிய நீதான், இந்தப் பழியினை ஏற்றுக் கொண்டாய். துன்பப்படுகின்ற அடியேன், படவேண்டிய துன்பங்கள் அனைத்தையும் பட்ட பின்னால், நீயும் என்னைக் காப்பதில்தான் யாது பயன்? கொடுநரகில் சென்று அழுந்திவிடாமல், என்னைக் காத்தபடி ஆண்டுகொள்கின்ற சிவகுருமணியே! நீதான் நடுநிலையில் நில்லாமல் என்னைக் கைகழிந்து செல்வதும் நல்லதாகுமோ? அஃது அழகும் ஆகுமோ? எங்கள் நாயகமே! நீதான் கூறுவாயாக!

647

தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி யினித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாளடைந்தேன்
தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ. 5

தாயாக விளங்கி முலைப்பாலைத் தருபவனே! நீயும் அவ்வாறு தரவில்லையானால், நானும் சவலைப் பிள்ளையாய் அழிந்து போவேனோ? நல்லவனே! இனியாவது எனக்குப் பாலை நீ தருவாயாக! எனக்குத் தாயே நீதான் என்றெண்ணி, உன்னுடைய திருவடிகளைச் சரணடைந்தேன். ஆனால், நீயோ என்னிடம் கருணையில்லாமல் இருக்கின்றாய். அன்றைய நாளில், நாயேனாகிய நான் உன்னுடைய அடிமையாகும்படி உடனே வந்து, ஆண்டுகொண்டாயே! இன்றைய நாளில் அவ்வாறு நான் உனக்குத் தேவையில்லையோ?

648

கோவே யருள வேண்டாவோ
கொடியேன் கெடவே அமையுமே
ஆவா வென்னா விடிலென்னை
அஞ்சேல் என்பார் ஆரோதான்
சாவா ரெல்லாம் என்னளவோ
தக்க வாறன் றென்னாரோ
தேவே தில்லை நடமாடீ
திகைத்தேன் இனித்தான் தேற்றாயே. 6

என்னுடைய அரசனே! எனக்கு நீதான் அருள் வழங்க வேண்டாவோ? கொடியவனாகிய அடியேன் கெட்டுவிடத்தான் வேண்டுமோ? 'ஐயோ!' என்று நீதான் என்பால் கருணையைக் காட்டாவிடில், 'நீயும் அஞ்சாதே!' என்று எனக்குச் சொல்பவர்தாம் யார்? சாகக் கூடியவருள், அடியேனும் ஒருவனா? 'இந்த நிலைமை தகுதியுடையதில்லை!' என்று, உன்னுடைய அடியவரும் எண்ண மாட்டாரோ? எடுத்தும் சொல்ல மாட்டாரோ? தெய்வமே! தில்லையம்பதியில் திருக்கூத்தினை நிகழ்த்துபவனே! நான் சோர்வுற்றேன், எனவே, இனிமேலாவது என்னுடைய சோர்வினைப் போக்கியருள்வாயாக!

649

நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வ தொன்றும் அறியேனே. 7

நரியைக் குதிரை ஊர்தியாக்கி, உலகங்கள் அனைத்தும் கண்டு வியக்குமாறு அருஞ்செயலை நிகழ்த்தியவனே! மாமன்னன் பாண்டியனின் மாநகர் முழுவதுமாகப் பெரும்பித்தினை உண்டாக்கிய பெருந்துறைப் பெருமானே! அரும்பெருமை வாய்ந்த பொருளே! அவிநாசி அப்பனே! பாண்டிப் பெருநாட்டுப் பேரின்ப வெள்ளமே! தெரிந்து கொள்வதற்கு அரிதாகிய மேலான சோதியே! இனியும் செய்ய வேண்டிய செயலென்று, யாதொன்றனையும் அடியேன் அறியாமல் உள்ளேனே! அதனை அறிவித்து, அடியேனை ஆண்டுகொள்வாயாக!

திருச்சிற்றம்பலம்

51. அச்சோப் பதிகம்

(தில்லையில் அருளியது)
அனுபவ வழி அறியாமை

(கலிவிருத்தம்)

அச்சோ + பதிகம் – அச்சோப் பதிகம். அச்சோ என்பது, வியப்புக் குறிப்புச் சொல் அல்லது இரக்கக் குறிப்புச் சொல். சிவபெருமான் தமக்கு அருள் செய்த பேரின்பத்தைக் குறித்து, மாணிக்கவாசகப் பெருந்தகை வியந்து போற்றுவது. திருவாசகத்தின் இறுதிப் பதிகம் இது. அனுபவ வழி அறியாமை என்பது, சிவானந்த அனுபவம் தமக்குக் கிடைத்த வழியினை அறியாதிருப்பது. இந்தப் பதிகத்திற்குரியன ஒன்பது பாடல்களே என்றும், பன்னிரண்டு பாடல்களே என்றும் இரண்டு நிலைப்பாடுகள் உள்ளன. பன்னிரண்டு பாடல்களே என்னும் நிலைப்பாடு, இங்குக் கொள்ளப்பட்டுள்ளது. எல்லாப் பாடல்களும் 'அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே!' என்று முடிந்துள்ளன.

திருச்சிற்றம்பலம்

650

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே 1

முத்திநெறியினை அறிந்து கொள்ளாத மூடத்தனம் கொண்டவரோடு சேர்ந்து கொண்டு, அவரைப் போன்றே யானும் முத்திநெறிக்கு முயன்று வந்தேன். அத்தகைய எனக்கு அவனும் பத்திநெறியினை அறிவுறுத்தினான். என்னுடைய பழவினைகள் யாவுமே அழியுமாறு என் மனமாசுகளைப் போக்கி என்னைச் சிவமயமாக்கி ஆண்டுகொண்டான். அவ்வாறு ஆண்டுகொண்ட என்னுடைய அப்பனாகிய அவனும், எனக்கு அருள்புரிந்ததைப் போன்று, அவனருளை யார்தாம் பெறவியலும்? இஃது ஓர் அதிசயமே!

651

நெறியில்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்
கறியும்வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே. 2

நல்ல நெறிமுறைகள் அல்லா நெறிமுறைகளையே நெறிகளாக எண்ணிக் கொண்டிருந்த அடியேனை, அவநெறிகளின் பக்கமாகச் சேரவிடாமல் தடுத்ததுடன், அவனுடைய திருவருளையே சேருமாறு செய்துவிட்டான். அவனுக்கென்று ஓர் அடையாளமும் இல்லாத கூத்தபிரான், அவனுடைய கூத்தை நானும் அறிந்து கொள்ளுமாறு அருளியதைப் போன்று, அவனருளை யார்தாம் பெறவியலும்? இஃது ஓர் அதிசயமே!

652

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையல்லுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 3

பொய்ம்மைகள் அனைத்தையும் மெய்ம்மைகள் என்றெண்ணி, நெருங்கிய கொங்கைகளை உடைய மகளிரின் இன்பத்தில் களிமயக்கம் கொண்டு திரிந்த அடியேனை, அழியாமல் காத்தருளினான். பெண்ணின் நல்லாளாகிய உமையம்மையை இடப்பக்கம் கொண்டவனும், என்னுடைய தலைவனுமாகிய அவன் எனக்கு அருள் புரிந்ததைப் போன்று, அவனருளை யார்தாம் பெறவியலும்? இஃது ஓர் அதிசயமே!

653

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ணம்
அண்ணலெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 4

இந்த மண்ணுலகில் பிறப்பெடுத்து, உடல் இளைத்து, உயிர் பிரிய உடல் வீழ்ந்துபடும் தன்மையுடையவனாக இருந்த அடியேனை, எண்ணிப் பார்க்க இயலாத வகையில் அன்பினைப் பொழிந்து, என்னை ஆண்டுகொண்டான் அவன். அத்துடன், என்னையும் தன்னுடைய சாம்பற்பொடியாகிய திருநீற்றினை அணிந்துகொள்ளச் செய்தான். தூய நெறியிலேயே அடியேன் செல்லுமாறு, அரிய பெருமான் எனக்குத் திருவருளை வழங்கினான். அதைப் போன்று அவனுடைய திருவருளை யார்தாம் பெறவியலும்? இஃது ஓர் அதிசயமே!

654

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகவென்
றஞ்சேலென் றருளியவா றார்பெறுவார் அச்சோவே. 5

பஞ்சினையொத்த மெல்லடிகளை உடைய மகளிரின் கடைக்கண் பார்வையால் தாக்குண்டு மிகுதுயர்ப்பட்டு, நெஞ்சம் நிறைந்த துன்படைந்து நிற்கின்றேன். அந்தச் சமயத்தில்தான் அடியேன் உன்னுடைய அருளினைப் பெற்றேன்; அதனால் நான் கடைத்தேறினேன். என்னை அடிமையாகக் கொண்டவனே! அடியேனை 'வருக!' என்றும், 'அஞ்சாதே!' என்றும், அழைத்தும் அரவணைத்தும் நீதான் எனக்கு அருள் வழங்கிய பாங்கினைப் போன்று, அந்த அருளை யார்தாம் பெறவியலும்? இஃது ஓர் அதிசயமே!

655

வெந்துவிழும் உடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறஎன் துரிசுமறுத்
தந்தமெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 6

வெந்தும் விழுந்தும் அழிகின்ற இந்த உடலோடு கூடிய பிறப்பினை, நானோ மெய்யானதென்று எண்ணிக்கொண்டு, தீவினைகளையே பெருக்கிக் கொண்டேன். மலர்களைக் கொத்தாகச் சூடிக்கொண்ட கூந்தலையும், சங்கு வளைகளை அணிந்துகொண்ட கைகளையும் உடைய மகளிரின் குவிந்த கொங்கைகளின்மேல்

மனங்கொண்டு, மதிமயங்கி வீழ்ந்துகிடந்தேன். அத்தகைய என்றன் பற்றினைத் துண்டித்து, என்னை ஆண்டுகொண்டாய். என்னிடமிருந்த தீமைகள் நீங்குமாறு, குற்றங்குறைகளைக் களைந்தாய். எல்லாவற்றுக்கும் மேலாக, எனக்கு வீடுபேற்றினையும் வழங்கினாய். அத்தகைய அருளிச்செயலைப் போன்று, உன்பால் யார்தாம் பெறவியலும்? இஃது ஓர் அதிசயமே!

656

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 7

மகளிர்தம் மயக்கத்திலே சிக்கிக்கொண்டு, தாழ்வடைந்து வீழ்ந்துபடக் கிடந்தேனை, அமைதியாகவே அழைத்துக் கொண்டுபோய்; பாசம் என்று சொல்லக்கூடிய தாழினை உருவிவிட்டான். அத்துடன், நான் கடைத்தேறுவதற்குரிய வழியினையும் காட்டினான். ஓங்காரத்தின் உள்ளார்ந்த பொருளினையும் எனக்கு அருளிச் செய்தான். என்னுடைய தலைவன் அவ்வாறு எனக்கு அருளியதைப் போன்று, யார்தாம் பெறவியலும்? இஃது ஓர் அதிசயமே!

657

சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதியெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 8

இறப்பும் பிறப்புமாகிய பெருஞ்சுழலில் சிக்குண்டுத் தடுமாறியும், அணிகலன்களைப் புனைந்துள்ள அழகிய மகளிரின் கலவியின்பத்தில் மிகுந்த ஆசை வைத்தும் வீழ்ந்துபட்டேன். அத்தகைய கடைப்பட்டேனை, உமையம்மையைத் தன்னுடைய திருமேனியின் ஒரு கூறாக உடைய தலைவன், தன்னுடைய திருவடிகளை வந்து அடையுமாறு அருள்புரிந்தான். அத்தகைய ஆதிமுதல்வனாகிய சிவபெருமான் அருளியதைப் போன்று, யார்தாம் பெறவியலும்? இஃது ஓர் அதிசயமே!

658

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 9

நன்மை பயக்கும் நன்னெறிகளை அறியா மூடரோடும் அடியேன் சேர்ந்து, அலைந்து திரிந்துவந்தேன். அத்தகைய அடியேனின்பால் இருந்துவந்த ஆணவம், கன்மம், மாயை என்னும் மூவகைப்பட்ட மலங்களைப் போக்குவித்து, எல்லாவற்றுக்கும் முதற்காரணனாகிய சிவபெருமான், அடியேனையும் ஒரு பொருளாக எண்ணி, நாயினையொத்த அடியேனைச் சிவிகையின்மேல் ஏற்றுவித்தான். அத்தகைய அன்னையாய் விளங்குபவன் எனக்கு அருள் செய்தது போன்று, யார்தாம் பெறவியலும்? இஃது ஓர் அதிசயமே.

659

செத்திடமும் பிறந்திடமும் இனிச்சாவா திருந்திடமும்
அத்தனையு மறியாதார் அறியுமறி வெவ்வறிவோ
ஒத்தநில மொத்தபொருள் ஒருபொருளாம் பெரும்பயனை
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 10

செத்த இடங்களும், பிறந்த இடங்களும், இனியும் சாவாமல் இருக்குமிடமும் ஆகிய அனைத்தையும் அறிந்து கொள்ளாதாரும் அறிந்து கொள்ளக் கூடிய ஒரு பொருள் அறிவுருவாகிய பரம்பொருள். 'உலகங்கள் அனைத்தும் ஒரே தன்மையின; உலகப் பொருள்கள் அனைத்தும் ஒரே தன்மையின' என்னும் பெரும்பயனாகிய மெய்ப்பொருளை எனக்கு உணர்த்தியவன். அத்தகைய பரம்பொருளிடமிருந்து அடியேன் பெற்ற அருளினைப் போன்று, வேறு எவரால்தான் பெற முடியும்? இஃது ஓர் அதிசயமே.

660

படியதனிற் கிடந்திந்தப் பசுபாசம் தவிர்ந்துவிடும்
குடிமையிலே திரிந்தடியேன் கும்பியிலே விழாவண்ணம்
நெடியவனும் நான்முகனும் நீர்கான்றும் காணவொண்ணா
அடிகளெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. 11

இந்தப் புவியில் கிடந்தவாறு, பசுவென்றும் பாசமென்றும் உள்ள பற்றுகளைத் தவிர்த்துவிடும் குடித்தனப்பாங்கில், அவனுடைய அடியவருடன் கூடித் திரிந்தேன். நான், கொடுநரகக் குழியிலே விழுந்து விடாதவாறு, என்னை ஆண்டுகொண்டான். நெடுமாலும் நான்முகனும் காண முயன்றும் காண முடியா அவனுடைய திருவடிகளை எனக்குக் காட்டியருளினான். அவ்வாறு எனக்கு அவன்தான் அருளிய அருளினை, வேறு எவரால்தான் பெறவியலும்? இஃது ஓர் அதிசயமே.

661

பாதிஎனும் இரவுறங்கிப் பகலெமக்கே யிரைதேடி
வேதனையால் அகப்பட்டு வெந்துவிழக் கடவேனைச்
சாதிகுலம் பிறப்பறுத்துச் சகமறிய எனையாண்ட
ஆதியெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே 12

நாளின் பாதியெனும் இரவில், நன்றாக உறங்குவேன்; மறுபாதியெனும் பகலில், என்னுடைய வயிற்றுக்கே இரைதேடி, துன்பத்தில் சிக்கித் தவித்து, உடலைவிட்டு உயிரானது பிரிந்து, விழுந்துபடவும் இருந்தேன் நான். அத்தகைய தன்மை படைத்த அடியேனை, என்னுடைய சாதி, குலம், பிறப்பு ஆகிய அனைத்தையும் அறுத்தெறிந்து, இந்த உலகம் அறியுமாறு ஆண்டுகொண்ட முதற்பொருளானவன் அவன். அத்தகையவன் எனக்கு அருள் செய்ததைப் போன்று, அவனுடைய அந்த அருளை வேறு எவரால்தான் பெறவியலும்? இஃது ஓர் அதிசயமே!

திருச்சிற்றம்பலம்

திருவாசகம் தெளிவுரை நிறைவுற்றது

பதிகங்கள் : 51 பாடல்கள்: 661 அடிகள்: 3382

பாத்தொடக்க அகரமுதலி

எண் : பாவெண்

ப.25.

பதிக அகரமுதலி

அருஞ்சொற்பொருள்

1. சிவபுராணம்

இமைப்பொழுதும் - கைந்நொடிக்குங்காலமும்; **கோகழி** - திருப்பெருந்துறை (திருவாவடுதுறையுமாம்); **ஆகமம்** - சிவனது ஊர்த்துவ முகத்துத் தோன்றிய நூல்கள்; **அண்ணிப்பான்** - அணுகி அருள்புரிவான்; **ஏகன்** - ஒன்றாயிருப்பவன்; **அநேகன்** - பலவாயிருப்பவன்; **பிஞ்ஞகன்** - சிவன் (சங்கரிப்போன்); **பெய்கழல்** - வீரக்கழல்; **சேயோன்** - சேய்மையில் இருப்போன்; **பூங்கழல்கள்** - பொலிகின்ற திருவடிகள்; **தேசன்** - ஒளியுடையவன்; **நிமலன்** - மல மற்றவன்; **மாயப்பிறப்பு** - மாறுபடும் பிறவிகள்; **ஆராத** - தெவிட்டாத; **முந்தைவினை** - முன்னைய வினைகள்; **ஓய** - நீங்க; **கண்ணுதலான்** - நெற்றிக் கண்ணை உடையவன் (சிவன்); **கழல்** - திருவடி; **இறைஞ்சி** - வணங்கி; **பூடு** - பூண்டு (சிறு தாவரம்); **விருகம்** - விலங்கு; **தாவரம்** - நிலைத்திணைப் பொருள்கள்; **சங்கமம்** - இயங்கு திணைப் பொருள்கள்; **மெய்யா** - மெய்ப்பொருளே; **விமலா** - அழுக்கிலாதவனே; **விடைப்பாகா** - காளை ஊர்பவனே; **வெய்யாய்** - சினவாதவனே; **தணியாய்** - அருள்தருபவனே; **இயமானன்** - வேள்வித்தலைவன்; **ஆக்கம்** - தோற்றம்; **அளவு** - எல்லை; **இறுதி** - முடிவு; **தொழும்பு** - அடிமை; **நாற்றம்** - மணம்; **நேரியாய்** - ஒப்பவனே; **சேயாய்** - சேய்மையில் உள்ளவனே; **நணியாய்** - அண்மையில் இருப்பவனே; **மாற்றம்** - சொல்; **மலஞ்சோரும்** - அழுக்கொழுகும்; **மலங்க** - கலங்க; **வஞ்சனை** - மாயை; **விலங்கு மனம்** - வேறுபடும் மனம்; **தத்துவனே** - மெய்ப்பொருள் ஆனவனே; **பாரிக்கும்** - பரவிக்காக்கும்; **ஆரியன்** - ஆசிரியன்; **ஓராதார்** - எண்ணாதார்; **துன்னிருள்** - செறிந்த இருள்; **கூர்த்த** - கூர்மையான; **மெய்ஞ்ஞானம்** - மெய்யுணர்வு; **நேர்க்கே** - அகக்கண் காட்சியே; **நுணுக்கரிய** - நுண்ணறிவுக்கும் எட்டாத; **புண்ணியனே** - தூய சிவனே; **பேரொளியே** - நுண்ணறிவுச்சுடரே; **தேற்றனே** - தெளிவினை அளிப்பவனே; **விடக்கு** - இறைச்சி (ஊன்); **குரம்பை** - குடிசை; **நட்டம்** - நடனம்; **அல்லல்பிறவி** - துயர்பிறப்பு.

2. கீர்த்தித் திருவகவல்

தில்லை - சிதம்பரம்; **மூதூர்** - பழையஊர்; **பயின்றனன்** - உடனிருப்பவன்; **துன்னிய கல்வி** - பொருந்திய கல்வி; **ஏறத்துரந்தும்** - முழுதாய் நீக்கியும்; **மீதூர** - மேன்மேல் வர; **நயப்புறவு** - விருப்புடைமை; **எஞ்சாது** - குறைவு படாது; **ஈண்டும்** - பெருகும்; **கிராதவேடம்** - வேட்டுவ உருவம்; **கிஞ்சுகம்** - சிவந்த முருக்கம் பூ; **கொங்கை** - முலை; **தடம்** - தடாகம்; **கேவேடர்** - வலைஞர்; **மாவேட்டு** - பெரிதும் விரும்பத்தக்க; **ஏறுடைஈசன்** - காளையை வாகனமாகக் கொண்ட சிவன்; **புவனி** - பூவுலகம்; **கூறுடை மங்கை** - பாகங்கொண்ட உமையம்மை; **குடநாடு** - மேற்கு நாடு; **சதுர்பட** - ஆற்றல் வெளிப்பட; **சாத்து** - குதிரைப்பாகன்; **விட்டேறு** - காளையை விட்டு; **தர்ப்பணம்** - கண்ணாடி; **மொக்கணி** - குதிரையுணவுப்பை; **சொக்கது** - அழகியதாக; **பரிமா** - வாகனக்குதிரை; **ஈண்டுகனகம்** - மிகுபொன்; **பரிசும்** - தன்மையும்; **வித்தக வேடம்** - மெய்ப்பொருள் வடிவம்; **தூவணமேனி** - தூய நிறங்கொண்ட மேனி; **கரந்த** - மறைந்த; **நாசம்** - அழிவு; **சயம்** - வெற்றி; **அட்டமாசித்தி** - எட்டுவகைச் சித்திகள்; **தக்கான்** - தகுதியுடையான்; **உகந்து** - மகிழ்ந்து; **ஈண்ட** - நெருங்க; **படிமப்பாதம்** - தூயதிருவடி; **சிலை** - வில்; **பாவகம்** - எழுச்சித் தோற்றம்; **அருத்தி** - விருப்பம்; **வழுக்காது** - தவறாது; **இந்திர ஞாலம்** - மாயவித்தை; **தன்வயின்**- தன்பால்; **படுத்து** - அடங்கப் பண்ணி; **தயாபரன்** - கருணை வடிவினன்; **இழிந்து** - இறங்கி; **துதைந்து** - நிறைந்து; **ஊனம்** - குற்றம்; **பெரும்பறை** - நுண்ணொலி (ஓங்காரம்); **கறங்கவும்** - ஒலிக்கவும்; **கழுக்கடை** - மூவிலைச்சூலம்; **மும்மலம்** - ஆணவம், கன்மம், மாயை என்னும் மூவகை அழுக்குகள்; **ஏல்வுடைத்து** - பொருத்தமுடையதாகி; **பயின்ற** - விளங்கவைத்த; **கால் விசைத்து** - மிகவும் விரைவாக; **இதஞ்சலிப்பு** - உள்ளச்சோர்வு; **சிறுநகை** - புன்முறுவல்; **உயர்கிழவோன்** - உயரிய தலைவனாகிய சிவபெருமான்.

3. திருவண்டப் பகுதி

அண்டம் - உலகம்; **உண்டை** - உருண்டை; **பிறக்கம்** - தொகுதி; **துன்னணு** - செறிவுற்ற அணுக்கள்; **புரைய** - ஒப்ப; **வேதியன்** - நான்முகன்; **புணரிய** - பொருந்திய; **மாப்பேரூழி** - மிகப்பெரிய பிரளயம்; **சூக்கம்** - நுட்பம்; **சூறைமாருதம்** - பெரும்புயல்; **எறியது** - சிறிய காற்று; **குழகன்** - இளையவன்; **கரப்போன்** - மறைப்பவன்; **கீடம்** - புழு; **கிழவோன்** - உரியவன்; **வெம்மை** - வெப்பம்; **கால்** - காற்று; **ஊக்கம்** - மனவெழுச்சி;

அனைத்து - அவ்வளவு; **அவ்வயின்** - அவ்விடங்களில்; **அடைத்தோன்** - அமைத்தோன்; **முன்னோன்** - பழையவன்; **எயிறு** - பல்; **புலியுரி** - புலித்தோல்; **தொல்லோன்** - மிகவும் தொன்மையானவன்; **பந்தம்** - கட்டு; **கற்பம்** - விரிந்த கால அளவு; **வரை** - மலை; **பந்தனை** - ஆசை; **வாளரவு** - ஒளிவீசும் பாம்பு; **இரிய** - அழிய; **மாத்தலை** - பெருந்தலை; **எஞ்சா** - குறையாத; **கேதக்குட்டம்** - துன்பக்களம்; **கையற** - கரையழிய; **ஓங்கி** உயர்ந்து; **நீர்நசை** - நீர் வேட்கை; **கணம்** - கூட்டம்; **அவப்பெருந்தாபம்** - வீணாகிய பெரிய தாகம்; **நீங்காது** தணியப்பெறாது; **அசைந்தன** - வருந்தின; **வானப் பேரியாறு** தேவகங்கை; **மேகன்** - மேகத்தைப் போன்றவன்; **அருந்தவர்** - அரிய தவமுடையவர்; **கரும்பணம்** - கரிய பாம்பு; **குனிப்போன்** வளைந்தாடுபவன்; **எதிலார்**- அயலார்; **எய்ப்பு** - இளைப்பு; **வைப்பு** - சேமநிதி; **நாற்றம்** - மணம்; **ஆக்கை** - உடல்; **பிறக்கம்** - தொகுதி; **தந்திரம்** - மெய்ந்நூல்; **உலையா** - வருந்தாத; **கடக்களிறு** மதயானை; **வழாமை** - தவறாமை; **ஒல்லகில்லேன்** - பொறுக் மாட்டேன்; **ஊன்தழை** - ஊன் மிகுந்த; **பராவமுது** - மேலான அமுதம் (மனவாசகம் கடந்த இன்பம்).

4. போற்றித் திருவகவல்

ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்; **மலர** - விரிய; **ஆதரவு** - ஆசை; **ஏனம்** - பன்றி; **ஏழ்தலம்** - ஏழுலகு (அதலம். விதலம், சுதலம், நிதலம், தராதலம், இரசாதலம், மகாதலம்) **உருவ** - ஊடுருவ; **இடந்து** - பிளந்து; **யோனி** - பிறப்பு வாயில் **உதரம்** - வயிறு; **செருவினில்** - போரில்; **தான்றி** - காய்வகை **முஞ்சுதல்** - சாதல்; **ஊறவர்** - தினவுத்துன்பம்; **கட்டம்** - துயரம் **சாகரம்** - கடல்; **ஒருங்கிய** - ஒத்த; **கச்சற** - மார்பகப் பட்டிகை அறுமாறு; **தொல்விடம்** - பழைய நஞ்சு; **சண்டமாருதம்** - சூறைக்காற்று; **உலோகாயதன்** - உலக இன்பங்களை நுகர்பவன்; **கலாபேதத்த** - கலைவேறுபாடு; **கொடிறு** - குறடு; **பேதை** - அறிவிலி; **கற்றா** - கன்றுடைய பசு; **கரமலர்** - கைம்மலர்; **மொட்டித்து** - கைகூப்பி; **சாயாஅன்பு** - அழியாத பேரன்பு; **ஆடகம்** - பொன்; **கனகக்குன்று** - பொன்மலை (மகாமேரு); **விகிர்தன்** வேறுபாடு உடையவன்; **துடைப்பாய்** - அழிப்பாய்; **தேசப்பளிங்கு** ஒளியுடைய பளிங்கு; **திரள்** - திரட்சி; **விரைசேர்** - மணம் பொருந்திய; **நம்பன்** - நம்பற்குரியவன்; **குறி** - இலக்கு; **குணம்** - எண்குணங்கள்; **நெறி** - வழி; **வாரி** - கடல்; **பார்** - உலகம்; **வளி** - காற்று; **வெளி** - வானம்; **அளிபவர்** - உருகுபவர்; **இத்தி** - மரவகை;

அத்தி - யானை; ஏனக்குருளை - பன்றிக்குட்டி; இருள் - அறியாமை; கெட - நீங்க; களங்கொளா - நில்லாமல் நினைக்க; நித்தன் - என்றுமிருப்பவன்; சிறவு - சிறந்த செயல்; மஞ்சா - கருணைமழை முகிலே; அலந்தேன் - வருந்தினேன்; இலங்குசுடர் - விளங்கொளி; புல்வாய் - மான்; பாவகம் - நினைந்தவாறு தோன்றும் வடிவம்; ஒழிவற - நீக்கமற; மையல் - மயக்கம்; புயங்கன் - பாம்பை ஆபரணமாகக் கொண்டவன்; புராணகாரண - ஆதி முதல்வனே (மூல முழுமுதற் பொருளே).

5. திருச்சதகம்

விதிர்விதிர்த்து - நடுநடுங்கி; வெதும்பி - நைந்து; கைதான் - ஒழுக்கத்தை; புரந்தரன் - இந்திரன்; நள்ளேன் - நட்புச் செய்யேன்; எள்ளேன் - இகழேன்; உள்ளேன் - நினையேன்; மத்தமனம் - களிப்புற்ற சிந்தை; மால் - மயக்கம்; சாவது - தன்முனைப்பு நீங்குவது; தகர் - ஆட்டுக்கடா; அவிதா - ஓலமிடல்; முட்டாது - இடையீடின்றி; திரு - செல்வம்; பவம் - பிறவி; இரத்த - வேண்டியன அனைத்தும்; கரந்து - மறைந்து; கண்டவன் - படைத்தவன்; கழுது - பேய்; உழுவை - புலி; உழிதருகால் - இயங்கும் காற்று; இழிதரு - ஒடுக்குகிற; பவன் - காரணன்; பனி - குளிர்ந்த; ஊடகம் - உட்புறம்; ஆமாறு - ஆகும் வண்ணம்; புத்தேளிர் - தேவர்; தூகேன் - மெழுகேன்; வளி - காற்று; மதுகரம் - வண்டு; தாரோய் - மாலை அணிந்தவனே; குரவுவார் - குராமலர் மாலை; விரவுவார் - கலப்பார்; அரவுவார் - ஒலிக்கின்ற; பெய்கழல் - கழலணிந்த திருவடி; அம்பரவா - ஞானப்பெருவெளியில் விளங்குபவனே; விரை - மணம்; அவலக்கடல் - துன்பக்கடல்; வேட்ட - விரும்பிய; போது - வா; உலறி - உலர்ந்து; ஆவிசோரேன் - உயிர் மயங்கேன்; வண்ணம் - நிறம்; சேயது - செம்மை நிறத்தது; தடுமாறி - மயங்கி; திண்ணம் - உறுதி; போது - திருவடித் தாமரை; விச்சை - மாயம்; ஆரழல் - அரிய நெருப்பு; பௌவம் - கடல்; கால் - காற்று; வான்சுறவு - பெரிய சுறாமீன்; புனை - தெப்பம்; மல்லல் - வளப்பம்; கரை - முத்திக்கரை; ஞாலம் - உலகம்; தவிசு - இருக்கை; மிகுகாதல் - பேரன்பு; அச்சம் - (மலம் பற்றிய) பயம்; அச்சன் - அப்பன்; செச்சை - வெட்சிப்பூ; பயந்து - படைத்து; மூதாதை - பாட்டன், பாட்டனுக்கடுத்த தந்தை; மேவினோம் - பொருந்தினோம்; நெறி - வழி; கிறி - பொய்ந்நெறி; கில்தவா - தன் முனைப்பு அழியாத; நெக்கிலை - நெக்குருகின்றிலை; காயம் - உடல்; மடநெஞ்சே - பேதைமை உள்ளமே; உண்டன - நுகர்ந்தவை; அற்றவாறு - இழந்தபடி; களவறுத்து - வஞ்சகத்தை நீக்கி;

உளகறுத்து - உள்ளவையாகிய பகைளை நீக்கி; **பளகறுத்து** - குற்றங்களைந்து; **உகுவது** - நீங்கப்பெறுவது; **போதவும்** - வருதலும்; **தலைகீறேன்** - தலையை மோதிடேன்; **தேறல்** - தெளிசாறு; **கணை** - அம்பு; **படிறு** - வஞ்சனை; **எவ்வம்** - துன்பம்; **படிற்றாக்கை** - வஞ்சப் புலன்களையுடைய மாய உடல்; **பூணுமாறு** - மேற்கொள்ளுமாறு; **கூய்ப்பணி** - அழைத்து அடிமை கொளல்; **கள்** - தேன்; **நள்** - நடுவு; **ஆய்** - தாய்; **நல்குரவு** - வறுமை ; **புல்வரம்பு** - சிற்றெல்லை; **கட்டு** - பாசத்தளை; **பட்டி மண்டபம்** - விவாத மேடை; **வெறியார்** - மணம் மிகுந்த; **மேவ** - அடைய; **போரேறு** - போரிடும் காளை; **ஊரேறு** - ஊர்சுற்றும் காளை; **உல்வாக் காலம்** - எல்லையற்ற காலம்; **அலவாநிற்கும்** - வருந்தி நிற்கும்; **திருக்குறிப்பு** - திருவுளக்குறிப்பு; **முடையார்** - துர்நாற்றம் மிகுந்த; **துகில்** - ஆடை; **சோர்தல்** - சொரிதல்; **தெளியை** - தெளிவை; **உம்பரான்** - தேவர் தலைவன்; **நெகுமன்பு** - நெகிழ்ந்த அன்பு; **காயவாழ்க்கை** - மாய உடல்சார்ந்த வாழ்வு; **விருத்தன்** - முதியவன்; **விடலை** - இளைஞன் (காளை); **உம்பர்** - தேவர்; **இயமானன்** - வேள்வித் தலைவன்; **விட உளே** - பற்றுகள் நீங்க; **குருவன்** - ஆசாரியன்; **கோமளம்** - அழகு; **வார்ந்த நஞ்சு** - பொங்கிய விடம்; **ஆர்ந்த** - நிறைந்த; **அன்றிதாக்** - இல்லையாகும்படி; **குஞ்சி** - குடுமி (தலை); **அஞ்சலி**- கைகூப்பு; **ஆவ** - இரக்கக் குறிப்பு; **மாண்டு மாண்டு** - பிறந்திறந்து பிறந்திறந்து; **உணங்கும்** - வருந்தும்; **இணங்கு** - நெருங்கு; **பைதல்** - துன்பம்; **நீசன்** - இழிந்தவன்; **சீரிலைம்புலன்** - ஒழுங்கற்ற ஐந்து புலன்கள்; **கருப்புமட்டு** - கருப்பஞ்சாறு; **விச்சு** - வித்து; **செடிசேருடல்** - துன்பத்துக்கு இடமாகும் உடல்; **கடியேன்** - கடியத்தக்கவன்; **பாழே** - வீணே; **ஏண்** - திருவருள் வலிமை; **பறைந்தேன்** - சொன்னேன்; **சிறவே** - சிறந்த செயல்களே; **பேராவுலகம்** - (மீளவும் வாராத) வீட்டுலகம்; **மிலைக்க** - களைக்க; **பழுது** - பயனற்ற; **ஒல்லை** - விரைவாக; **மானே** - பெருமானே; **கீறிலாத நெஞ்சு** - வன்னெஞ்சு; **மழக்கை** - மழலையின் கை; **அரத்தமேனி** - செம்மேனி; **ஏலம் ஏலும்** - நறுஞ்சாந்து தடவிய; **வைச்சு** - நிலைநிறுத்தி; **வாங்குவாய்** - ஒடுக்குவாய்; **பராபரன்** - மேலான்வன்; **துப்பன்** - உணவானவன்; **எய்ப்பு** - இளைப்புக்காலம்; **பன்ன** - நாத்தழும்பேற வாழ்த்த; **வீட** - அழிய.

6. நீத்தல் விண்ணப்பம்

கடையவன் - கீழ்ப்பட்டவன்; **விடையவன்** - இடப வாகனன்; **விறல் வேங்கை** - வலிகொண்ட புலி; **உடையவன்** - புலித்தோலாடையன்; **சடையவன்** - விரிசடையான்; **விள்ளேன்** - நீங்கேன்; **விழுத்தொழும்பு** - மேலான அடிமைத்திறம்; **உள்ளேன்** - நினையேன்; **கள்ளேன்** - வஞ்சகனல்லேன்; **காருரு** - மை தீட்டிய; **தெளிகின்ற** - குற்றமற்ற; **வழிநின்று** - உடனாயிருந்து; **ஒறுத்து** - கடிந்து; **செய்யவன்** - செம்மேனியன்; **அஞ்சொடு** - ஐந்து புலன்களோடு; **இருதலை** - இரண்டு பக்கங்கள்; **விரிதலை** - தலைவிரி; **பொருதலை** - போரில் வருத்தும்; **அளி** - வண்டு; **விளரி** - இசைவகை; **ஊறும் மட்டு** - சுரக்கும் தேன்; **உடல் இலம்** - காயக் கோயில்; **மடலின் மட்டு** - வண்டுணராப் பூந்தேன்; **களி** - மகிழ்ச்சி; **எய்த்தலைந்தேன்** - வருந்தி அலைந்து இளைத்தேன்; **வெருள்** - அச்சம்; **இகபரம்** - இம்மை, மறுமை; **கொடுங்கரி** - மதயானை; **வெம்புதல்** - வெதும்புதல்; **உம்பர்** - தேவருலகம்; **அம்பரம்** - வான்; **அண்மையன்** - அருகில் இருப்பவன்; **சேயாய்** - எட்டுதற்கரியவனே; **வெற்றடியேன்** - போலித் தொண்டன்; **உள்ளன** - செயத்தகு நற்செயல்கள்; **பொள்ளல்** - துளையுடைய (தும்பிக்கை); **வேழம்** - யானை; **நாங்கூழ்** - மண்புழு; **உறுங்கடிப்போது** - பொருந்திய மணமிகு தாமரை; **வெருநீர்மை** - பயனற்ற தன்மை; **குருநீர்** - குளிர்ந்த தன்மையுடைய; **கம்பித்து** - நடுங்கி; **கொற்றச்சிலை** - அரசிருக்கை (மேருமலை); **மலங்கள் ஐந்து** - ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதம்; **மிலைச்சி** - சூடி; **மிலைந்து** - அணிந்து; **தத்துறு** - பரந்த; **சச்சையன்** - மெய்ப்பொருளானவன்; **விச்சையன்** - ஒருவனே எல்லாமாய் விளங்கும் அற்புதமானவன்; **பச்சையன்** - நீங்காத கருணையுடையவன்; **விழுத் தொண்டு** - மேலான தொண்டு; **மிண்டு** - திரிதல்; **பண்டு** - முன்பு; **குதுகுதுப்பு** - மிகுந்த விருப்பம்; **படிறு** - பொய்; **முயற்களை** - நிலவின் களங்கம்; **ஐவாயரவம்** - வயப்படா ஐம்புலன்கள்; **பொதும்புறு** - மரப்பொந்து; **கதுவ** - புகைந்து எரிய; **நறவம்** - தேன்; **விடர்** - மயக்கு; **வலைத்தலை** - வலையில் அகப்பட்டு; **மலைத்து** - மயங்கி; **கடிப்ப** - ஆழ்ந்து சென்று; **விடக்கு** - துர்நாற்றம்; **மிடைந்த** - நிறைந்த; **சிதலை** - துன்பம் (கறையான்); **பதி** - வாழ்விடம்; **முழை** - வளை; **இறைபைத்து** - சிறிதே படமெடுத்து; **ஒன்றும்** - கலக்கும்; **தொழும்பர்** - அடியார்; **மூரித்தழல்** - பெருநெருப்பு; **விழுது** - நெய்; **சோத்து** - வணக்கம்; **உழைதரு** - மானின் பார்வையை ஒத்த; **வேலை** - கடல்; **மழை** - கார்மேகம்; **மாபரன்** - பரதேசி; **பணிலம்** - சங்கு; **வெண்மணி** - முத்து ; **மந்தாரம்** - மந்தாரமலர்;

மந்தாகினி - ஆகாய கங்கை; **நுந்தும்** - தள்ளும்; **தழி** - அணை; **கலம்** - தோணி; **தார்** - மாலை; **தாரகை** - விண்மீன்; **வெங்கரி** - கொடிய யானை; **வேசறுவேன்** - மனம் வருந்துவேன்; **விடுதி** - விட்டுவிடுவாயோ; **குழைந்து** - வாடி; **காய்சினம்** - வருத்துகின்ற கோபம்; **ஆலம்** - நஞ்சு.

7. திருவெம்பாவை

கேட்டேயும் - கேட்டும்; **வாள் தடங்கண்** - ஒளி பொருந்திய அகன்ற கண்; **வளருதி** - உறங்குகின்றனை; **வன்செவி** (நல்லவை) கேளாக்காது; **போதாரமளி** - மலர்ப்படுக்கை; **கிடந்தாள்** - அருளே-தானாய் அனுபவ நிலையில் அழுந்திக்கிடத்தல்; **ஏத்து** - போற்று; **தேசன்** - ஒளியன்; **அத்தன்** - அப்பன்; **ஆனந்தன்** - தலைவன்; **அமுதன்** - இனியன்; **அள்ளூற** - நாவில் நீர் ஊற; **துயின்று** - உறங்கி; **அவமே** - பயனின்றி; **மருந்து** - அமுதம்; **விழுப்பொருள்** - மேலானபொருள்; **தலையளித்து** - பேரருள் புரிந்து; **பொக்கம்** - பொய்; **படிறீ** - வஞ்சகி; **சீலம்** - ஒழுக்கம்; **ஞாலம்** - பூமி; **ஓலம்** - அலறல்; **பேதை** - அறிவிலி; **கேழில்** - ஒப்பற்ற; **ஆழியான்** - சக்கரப் படை உடையவன்; **ஊழிமுதல்வன்** - ஊழிக்காலத்தை வென்று தலைவனாய் விளங்குபவன்; **பாங்கு** - தோழமை; **குவலயம்** - உலகம்; **பேதை** - மகள் (உவமையம்மை); **முகேர்** - ஒலிக்குறிப்பு; **தொழும்பு** - அடிமை; **கரந்து** - நீக்கி; **குருகினம்** - பறவைக்கூட்டம்; **பெய்வளை** - வளையணிந்த; **அரவம்** - ஒலி; **பைம்பூண்** - பசும் பொன்னாலாகிய; **அணிகலன்**; **சோதிதிறம்** - மூலச்சோதி; **பேரரையர்** - மாமன்னன்; **முன்னி** - முற்பட்டு; **செங்கண்** - திருமால்; **திசைமுகன்** - நான்முகன்; **கொங்கு** - தேன்; **அங்கண்** - நெற்றிக்கண்; **கண்ணார்** - கண் நிறைந்த; **இரவி** - ஞாயிறு; **கங்குல்** - இரவு; **கார்** - இருள்; **கரப்ப** - மறைய.

8. திருவம்மானை

இடந்தும் - தோண்டியும்; **பொங்குமலர்ப் பாதம்** - அருள் பொங்கும் திருவடிகள்; **பூதலம்** - பூவுலகம்; **தெங்கு** - தென்னை; **அங்கருணை** - நிலைத்த பேரின்பம்; **விசும்பு** - ஆகாயம் ; **பேராளன்**- பெருமையை ஆள்பவன்; **வாராவழி** - வீடுபேறு (பிறவாநெறி); **அவனி** - உலகம்; **பந்தம் பறிய** - பற்று முழுவதுமாய் நீங்க; **கானின்று** - காட்டில் நிலையாக வாழ்ந்தும்; **வற்றியும்** - உலர்ந்தும்; **தலையளித்து** - பேரன்பு காட்டி; **ஊன்வந்து** - உடம்பினுள் புகுந்து; **ஒல்லை விடை** - விரையும் காளை; **கிறி** - மாயம்; **உள்குவார்** - நினைப்பவர்; **சேவகன்** - வீரன்; **ஆயானை** - அகத்தும் புறத்தும் கலந்தவனை; **மொத்துண்டு** - அடிக்கப்பெற்று;

கண்டம் - கழுத்து; **கரியான்**- நீல கண்டன்; **மாண்பு** - பெருமை; **பேணு** - பாதுகாக்கும்; **அப்பார்சடை** - கங்கை விளங்கும் திருமுடி; **சிலம்ப** - ஒலிப்ப; **செறிந்தான்** - எங்கும் நிறைந்தவன்; **கீடம்** - புழு; **பிறவாய்** - பிற உயிர்களாய்; **எய்த்தேன்** - இளைத்தேன்; **அலர்கதிரோன்** - விரிசுடரோன்; **ஆனா அறிவு** - அளவிலாத ஞானம்; **அளவிறந்த** - எண்ணற்ற; **முயங்கி** - அறிவிழந்து; **ஊடுவேன்** - பிணக்குறுவேன்; **கேழ்கிளரும்** - நிறம் விளங்கித் தோன்றும்; **தேறல்** - தேன்; **கோதாட்டி** - பாராட்டி; **கொற்றக்குதிரை** - வெற்றிக்குதிரை (பட்டத்துக்குதிரை)

9. திருப்பொற்சுண்ணம்

தாமம் - மாலை; **சோமி** - திருமகள்; **பார்மகள்** - நிலமகள்; **சுண்ணம்** - திருமஞ்சனப்பொடி; **அந்தரர்கோன்** - இந்திரன்; **எந்தரம்** - எம்பக்குவம்; **கொழுநன்** - கணவன்; **ஏய்ந்த** - தகுந்த; **கறையுரல்** - பட்டை தீட்டிய உரல்; **நறுமுறு** - முணுமுணு; **பல்லது** - அறுகு; **ஓச்சுவார்** - குத்துவார்; **கலக்க** - ஒன்றுகூட; **நலக்க** - நலம்மிக; **நாள்மலர்** - அன்றலர்ந்த மலர்; **சூடகம்** - கைவளை; **குழாம்** - கூட்டம்; **ஆர்ப்ப** - ஒலிக்க; **பாடகம்** - காலணிகலன்; **பராபரன்** - மேலானவன்; **திருமுண்டம்** - திருநெற்றி; **வையகம்** - உலகம்; **பையரவு** - படமெடுக்கும் பாம்பு; **போதரிக்கண்** - பூப்போன்ற சிவந்த கண்; **பொற்றொடி** - பொன்வளை; **பண்ணமர்** - நயமொழி; **கேள்வன்** - கணவன்; **பானல்** - குவளைமலர்; **ஆவகை** - கடைத்தேறும் வகை; **சேவகம்** - இடப வெல்கொடி; **செற்றகொற்ற** - பகைப்புலம் அழித்த வெற்றி; **மதிப்பிள்ளை** - நிலாப்பிறை; **உம்பர்** - தேவர்; **இம்பர்** - இவ்வுலகினர்; **போனகம்** - உணவு; **எயிறு** - பல்; **ஏழை அடியோம் அடி** - அறியாமை அடிமை; **சிட்டர்** - சீடர்; **மாசுணம்** - பாம்பு; **கங்கணம்** - கச்சை; **கவித்த** - வளைந்த; **அரவம்** - பாம்பு; **வேதம்** - மறை; **வேள்வி** - யாகம்.

10. திருக்கோத்தும்பி

பூவேறுகோன் - நான்முகன்; **புரந்தரன்** - இந்திரன்; **நாவேறு செல்வி** - கலைமகள்; **நாரணன்** - திருமால், **நான்மறை** - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்; **மாவேறு சோதி** - பெரிய ஏற்றினை உடைய ஒளிவடிவ உருத்திரன்; **சேவேறு** - இடப வாகனமேறும்; **மதிமயங்கி** - (நான்முகன்); **பலி** - பிச்சை; **கமலம்** - தாமரை; **குனிப்பு** - கூத்து; **வான்கருணை** - எல்லையற்ற அருள்; **பொய்த்தேவு** - பொய்யான தேவர்; **வைத்தநிதி** - சேமித்த நிதி; **விகாரக்கலக்கம்** - திரிபுத்துயரம்; **வித்தகத் தேவன்** - அறிவுருத்தலைவன்; **சட்டோ** - உடனே நினைக்க; **ஒட்டாத** - பொருந்தாத; **கவடு** - கிளைகள்; **நுந்துகன்று** - தள்ளப்பட்ட கன்று;

பொன்னங்கழல் - பொன்னாலாகிய வீரக்கழல்; சீயேதுமில்லாது - வெறுப்புணர்ச்சியற்று; ஆனகருணை - திருவருட்பேறு; மருவார் - மணம் மிகுந்த; தேனுந்து - தேன்சொரியும்; உள்ளப்படாத - நினைக்கப் படாத; கள்ளப்படாத - மயக்கப்படாத; துகில் - ஆடை; பசுஞ்சாந்து - அரைத்த சந்தனம்; தொக்கவளை - தொகுத்த வளைகள்; தெள்ளும் கழல் - தள்ளும் திருவடி; புகலரிது - அடைவதற்கரிய; ஏமாறி - ஏங்கி; இறுமாக்க - இறுமாப்புக்கொள்ள; தவிசு - ஆசனம்; தீமேனியான் - சோதிப்பிழம்பானவன் (சிவபெருமான்).

11. திருத்தெள்ளேணம்

நாமம் - பெயர்; ஒன்றுமிலான் - தனக்கென்று ஒருபொருளும் இல்லாதவன்; மேய - பொருந்திய; பிரான் - தலைவன்; கருவேர் - பிறவிமூலம்; தெரிக்கும் படித்தன்றி - தெரிந்து சொல்லும்படி இல்லாமல்; அவகதி - கீழ்நெறி; அவமாய- பயனில்லாமல்; பவமாயம் - பிறப்பினை உண்டாக்கும் வஞ்சனை; நவமாய - புதியதாகிய; கருவெந்து - மூலம் ஒழிந்து; கடைக்கணித்து - திருவருள் நோக்கம் செய்து; அடிச்சுவடு - திருவடி சூட்டிய அடையாளம்; கறங்கோலை - காற்றாடி; திறம்பாடல் - கருணைத் திருப்பாடல்; நுடங்கிடை - துவளும் இடை; சினவேற்கண் - சினந்த வேலினை நிகர்த்த; கயல்மாண்ட- கயல்மீனைஒத்த; மயல் - மயக்கம்; உழன்று - வருந்தி; நேர்பாடல் - இறையனுபவப் பாடல்; சீர்பாடல் - புகழ்பாடல்; பாவகம் - ஒன்றாகக் காணும் அகக்காட்சி; உவலைச் சமயங்கள் - பொருளற்ற சமயங்கள்; ஒவ்வாத - பொருந்தாத; மாருதம் - காற்று; சவலைக்கடல் - நீர் குறைந்த கடல்; கெட்ட - தன்முனைப்புத் தளர்ந்த; வைப்பு - சேமநிதி; சிலம்பாடல் - சிவநடனம்.

12. திருச்சாழல்

பொங்கரவம் - சினங்கொண்ட பாம்பு; துன்னம் பெய் - தைக்கப்பெற்ற; துன்னுபொருள் - செறிந்த பொருள்; காயில் - சினங்கொள்ளின்; அநங்கன் - மன்மதன்; அந்தகன் - இயமன்; வயனங்கள் - வகைகள்; மாயாவடு - அழியாத அடையாளம்; தொக்கன - திரண்டன; மிகைத்தலை - வேறாகிய தலை (ஆட்டுத்தலை); அலரவன் - நான்முகன்; சலமுகம் - போர்முகம்; பிலமுகம் - பாதாளம்; கோலாகலம் - பெருமகிழ்ச்சி; சதுர் - திறம்; யோகு - யோகம்; வீடுவர் - அழிவர்; வானுந்து - வானுலகில் வாழும்; வான்பொருள் - மேலான (பரம்) பொருள்; கங்காளம் -

எலும்புக்கூடு; **தம் காலம்** - (நான்முகன், திருமால் ஆகியோரின்) காலஅளவு; **தரித்தனன்** - அணிந்து கொண்டனன்; **தண்பணை** - குளிர்ந்த வயல்; **சலம்** - வஞ்சனை; **நயனம்** - கண்; **அம்பரம்** - ஆடை; **அருந்தவர்** - அரிய தவசீலர் (சனகாதிமுனிவராகிய நால்வர்); **அறம் முதல் நான்கு** - அறம், பொருள், இன்பம், வீடு.

13. திருப்பூவல்லி

இணையார் - இரண்டாகிய; **அணையார்** - அணைகளுடைய; **புணையாளன்** - தெப்பமானவன்; **பொடியட்டி** - மண்தூவி; **இந்து** - நிலவோன்; **அனல்** - தீக்கடவுள்; **உருமூன்று** - அருவம், உருவம், அருவுருவம்; **குணங்கூர** - குணம் நிறைவாக; **நெறி** - (சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை) நெறிகள்; **குறிசெய்து** - அடையாளமிட்டு; **முறி** - அடிமை ஓலை; **கிறி** - இல்லையென்னும்படி; **ஆகம்** - நெஞ்சம்; **போரார்புரம்** - முப்புரங்கள்; **பராபரம்** - மிகவும் மேலான; **கூடலிலாக் குணக்குறி** - கூடவியலாக் குணமும் குறியும்; **போனகம்** - உணவு; **பொன்தாது** - மகரந்தம்; **பங்கமில்** - வெட்கமில்லாத; **அருக்கன்** - ஞாயிறு; **பொங்கிய சீர்** - சினத்தால் விளைந்த புகழ்; **பன்னாகம்** - பலவாகிய பாம்புகள்; **பித்தவடிவு** - பித்தர் கோலம்; **மா** - குதிரை; **குற்றேவல்** - அடிமை; **பூவார் கழல் பரவி** - தாமரைத் திருவடிகளைத் தொழுது.

14. திருவுந்தியார்

பூசல் - போர்; **பெருமிகை** - மிகவும் அதிகம்; **தச்சு** - தைத்து; **அடியிட்டலும்** - அடிவைத்தலும்; **சாடிய** - தகர்த்த; **சதுர்முகன்** - நான்முகன்; **வெய்யவன்** - ஞாயிறு; **தறித்தான்** - துண்டித்தான்; **துஞ்சின** - அறுத்த; **கூட்டி** - சேர்த்த; **பகன்** - சூரியருள் ஒருவன்; **சோமன்** - சந்திரன்; **தொல்லை** - பழைமை; **போம்வழி** - தப்பிச்செல்லும் வழி; **கோலச் சடை** - அழகிய சடை; **ஒல்லை** - விரைவாக; **உகிர்** - நகம்; **ஏகாசம்** - மேலாடை; **இருடிகள்** - முனிவர்.

15. திருத்தோள் நோக்கம்

பேய்த்தேர் - கானல்நீர்; **பேதை** - அறிவிலி; **ஆகாமே** - பொருந்தாமல் நீக்கி; **தீர்த்தாய்** - ஆட்கொண்டாய்; **ஆழாமே** - ஆழ்ந்துபோகாமல்; **விளவு** - விளாமரம்; **குன்றாத** - குறையாத; **துன்றார்** - மிகவும் அடர்ந்த; **சேடெறிய** - பெருமையை உலகறிய; **காண்பு** - காண்பதற்கு; **நற்பாற்படுத்து** - நல்வழிப்படுத்தி; **உயிர்** - காற்று; **மைந்தன்** - இயமானன்; **புணர்ந்து** - கூடி; **சேதிப்ப** - வெட்ட; **தட்டுளுப்பு** - தடுமாற்றம்; **நிற்க** - மெய்யுணர்ந்து பின்னடைய; **சிவமாக்கி** - சிவமயமாக்கி; **மாணி**- பிரமசாரி; **தாதை** - தந்தை;

சோறு - சிவபுண்ணியம்; எரி பிழைத்து - முப்புரங்கள் எரியுண்டபோது தப்பிப்பிழைத்து; எண்ணிலி - எண்ணற்ற; பங்கயம் - தாமரை; கடைத்தலை - வாயிற்படி; சோமன்- சந்திரன்; பரமம் - பரம்பொருள்; பதைப்பு - செருக்கு; அத்தன் - அப்பன்; தொழும்பன் - அடிமையன்; பாழுக்கு - வீணுக்கு; பரம் - மேலான; தாழ் - வேர்; உள்ளொளி - ஞானம் (மெய்யறிவு); கரைமாண்ட - கரையற்ற; நீள்விசும்பு - நீண்ட வானம்; இரைமாண்ட - உணவற்ற; இந்திரியம் - ஐம்பொறிகள்; இரிந்தோட - அழிந்தோட; துரை - தன்முனைப்பு.

16. திருப்பொன்னூசல்

போரார்வேல் - போருக்குரிய கூர்மையான வேல்; நயனத்தன் - கண்ணுடையவன்; ஈறு - இறுதி; குலமஞ்சை - குலமயில்; ஆதி - முதல்; தன்னீறு - தன்திருநீறு; மன்னூற - நிலையாக ஊறும்படி; வியன்மாளிகை - பெரிய மாளிகை; மஞ்சுதோய் - மேகங்கள் படர்கின்ற; துஞ்சல் - சாதல்; புஞ்சம் - தொகுதி; அரிவை - பெண்; ஞாலம் மிக - உலகம் கடைத்தேற; பூலித்து - நிறைந்து; தெங்கு - தென்னை; தனியுருவம் - நிகரற்ற வடிவம்.

17. அன்னைப் பத்து

நாதப் பறை - பரநாத முரசு; அஞ்சனத்தர் - மை தீட்டியோர்; உலப்பிலா - வற்றுதல் இல்லாத; ஆடர - படமெடுத்தாடும் பாம்பு; பொடி - வெண்ணீறு; நெறிதரு குஞ்சி - அடர்ந்த தலைமயிர்; பரந்தெழு - கிளர்ந்தெழுகின்ற; கலிங்கத்தர் - ஆடையர்; முண்டத்தர் - நெற்றியர்; குப்பாயம் - சட்டை; தாளி - மலர்வகை; தாளம் - ஒலிக்கருவி; தாபத - தவ; ஐயம் - பிச்சை; நையும் - வாடும்; துன்றிய - நெருங்கிய; மத்தம் - ஊமத்தை மலர்; உன்மத்தம் - பெரும்பித்து.

18. குயில் பத்து

சொல்லிறந்து - சொல்லின் எல்லையைக் கடந்து; தொன்மை - பழைமை; ஏர்தரு - எழுச்சியைத் தருகின்ற; ஆர்கலி - மிகுந்த ஒலியுடைய; சீலம் - ஒழுக்கம்; ஞாலம் - உலகம்; விளங்க - விளக்கமுற; பயிலும் - பழகும்; ஊன்பழித்து - உடலை இகழ்ந்து; ஒருத்தன் - ஒப்பற்றவன்; சுந்தரம் - அழகு; அந்தரத்து - வானிடத்து; சிந்துர - சாதிலிங்க; மிழற்றும் - கூவும்; பொன் - அழகு; வான்வந்த - பேரின்பவடிவாகிய; பொன்னையழித்த - பொன்னை விஞ்சிய; பிள்ளாய் - குழந்தாய்; ஓவி - ஒழிந்து; விரிசுடர் - பரந்த நெருப்பு; கடிபொழில் - மணம் நிறைந்த சோலை; கொந்தணவும் - பூங்கொத்துகள் நிறைந்த; கூங்குயில் - கூவுங்குயில்; எந்தமர் - எம் சுற்றத்தார்.

19. திருத்தசாங்கம்

ஏரார் - அழகு நிரம்பிய; **வெண்மலரான்** - நான் முகன்; **பாற்கடலான்** - திருமால்; **ஏதமிலா** - குற்றமில்லாத; **தாதாடு** - மகரந்தம் நிறைந்த; **தத்தாய்** - கிளியே; **கோதாட்டி** - சீராட்டி; **செய்யவாய்** - சிவந்த மூக்கு; **பைஞ்சிறகு** - பச்சைச்சிறகு; **கிஞ்சுகம்** - முருக்கமலர்; **அஞ்சுகம்** - அழகிய கிளி; **மஞ்சன்** - அழகன்; **வாள்** - ஒளி; **இப்பாடு** - இவ்விடம்; **ஒப்பாடா** - ஒப்பற்ற; **கோது** - குற்றம்; **ஏற்றார்** - அடியவர்; **கழுக்கடை** - சூலம்; **முரசு** - பறை; **அள்ளூறும்** - உள்ளமுருகும்; **ஆயமொழி** - ஆராய்ந்தறியும் பேச்சு; **அறுகு** - கொடியறுகு; **ஏதிலார்** - பகைவர்; **துண்ணென்ன** - திடுமென; **ஏர்காட்டும்** - அழகு விளங்கும்; **ஏறு** - இடபம்.

20. திருப்பள்ளி எழுச்சி

வாழ்முதல் - வாழ்வின் அடிப்படை; **புலர்ந்தது** - விடிந்தது; **பூங்கழற்கு** - மலரடிகளுக்கு; **ஏற்றி** - ஏத்தி; **எழில்நகை** - அழகிய புன்னகை; **ஏற்றுயர் கொடி** - எருது பொறித்த கொடி; **அருணன்** - சூரியன்; **இந்திரன் திசை** - கீழ்த்திசை; **கடிமலர்** - மணமலர்; **திரள்நிறை** - கூட்டவரிசை; **அறுபதம்** - ஆறு கால்களையுடைய வண்டு; **முரல்வன** - ஒலிப்பன; **குருகு** - பறவை; **ஒவின** - மங்கின; **செறிகழல்** - பொருந்திய திருவடி; **துன்னிய** - நெருங்கிய; **துவள்கையர்** - வாடுபவர்; **ஏதங்கள்** - குறை பாடுகள்; **புலவோர்** - அறிஞர்; **பப்பற** - பரபரப்பு; **பந்தனை** - பிறவிப் பிணிப்பு; **செப்புறு** - சிவப்புச் சிமிழ்; **மதுவளர்** - தேன் நிறைந்த; **பணிகொளும்** - ஏவல் கொள்ளும்; **பழங்குடில்** - பழைய சிறு குடிசை; **மூவர்** - தாணு, மால், அயன்; **புவனி** - பூவுலகம்; **அவமே** - வீணே; **மலரவன்** - நான்முகன் (அயன்).

21. கோயில் மூத்த திருப்பதிகம்

உடையாள் - எல்லாவற்றையும் உடையவள் (உமையம்மை); **முடியா** - முடிவிலா; **முதல்** - முதற்பொருள்; **இவரநின்று** - ஓங்கச்செய்து; **போந்திடு** - வருக; **சகம்** - உலகு; **மகம்** - வேள்வி; **முடிவேன்** - மடிவேன்; **திரள்**- கூட்டம்; **இரை** - உணவு; **ஏசற்று** - வருந்தி; **கரை சேர்** - கடைத்தேறும்; **ஏசாநிற்பர்** - தூற்றுவர்; **பேசாநிற்பர்** - புகழ்வர்; **பேணா** - விரும்பி; **தேசா** - ஒளியானே; **திருவோலக்கம்** - அவையில் வீற்றிருக்கை; **ஏமாந்து** - ஆசைப்பட்டு; **ஆள்வாரிலி** - ஆதரிப்பார் இல்லாத; **நிலாவி** - விளங்கி; **மருங்கு** - பக்கம்; **மருளா** - மருண்டு; **தெருளார்** - தெளிவுடன்; **தரிப்பார்** - அணிசெய்வார்; **நரிப்பாய்** - இழிவாய்;

நல்காய் - வழங்குவாயாக; **நம்பி** - சிறந்தவனே; **பிதற்றி** - சொல்லிச்சொல்லி; **மல்கா** - கண்ணீர் மல்கி; **ஒல்கா நிற்கும்** - தளர்ந்து நிற்கும்; **அருளாய்** - அருள்வாயாக; **உடையானே** - எல்லாம் உடையவனே.

22. கோயில் திருப்பதிகம்

மாறிநின்று - பகைகொண்டு நின்று; **தேறல்** - மது; **என்பரம்** - என்னுடைய சார்பு; **ஆவி** - உயிர்; **ஆக்கை** - உடல்; **கைம்மாறு** - பதிலுதவி; **முத்தனே** - முத்தி தருபவனே; **புரைபுரை** - உள்துளைகள்; **கடிந்த** - நீக்கிய; **பொய்யிருள்** - மாயவிருள்; **தெண்கடல்** - தெளிந்த கடல்; **உரை உணர்வு இறந்து** - வாக்கும் மனமும் கடந்து; **உம்பர்** - தேவர்; **இணங்கிலி** - ஒப்பிலாத; **திணிந்த** - செறிந்த; **தூவெளி** - தூய்மையின் தூய்மை; **குறுகினேற்கு** - அடைந்த அடியேனுக்கு; **கோதிலர்** - குற்றமிலாத; **கொழுஞ்சுடர்** - செம்மையொளி; **இரந்து இரந்து** - வேண்டிவேண்டி; **நிரந்த ஆகாயம்** - பரவிநின்ற வானம்; **முளைத்து** - தோன்றி; **நீருருதீ** - நீரில் கலந்திருக்கும் நெருப்பு; **சீருறு** - சிறப்புப்பொருந்திய; **சதுரர்** - ஆற்றல் மிகுந்தவர்; **அந்தம்** - இறுதி; **எந்தையே** - எம்முடைய தந்தையே; **ஈசா** - முன்னவனே.

23. செத்திலாப் பத்து

அகம்நெக - உள்ளம் நெகிழ; **கையனேன்** - இழிந்தேனாகிய சிறியேன்; **அண்டவாணர்** - பல்வேறு உலகங்களிலும் வாழ்வோர்; **வற்றி** -உலர்ந்து; **ஓர் வார்த்தை** - குருவின் உறுதிமொழி; **செற்றிலேன்** - அழித்திலேன்; **தலையினால் நடந்தேன்** - செருக்குற்றுத் திரிந்தேன்; **நிலையன்** - அனைத்துக்கும் அடிப்படையாய் அமைந்தவன்; **சிலை** - வில்; **எற்றினுக்கு** - எதற்காக; **ஆட்டுத்தேவர்** - பின்பற்றிச் செல்லும் செம்மறியாட்டுத் தன்மை; **பிரிவுறா அருள்** - விட்டு நீங்காத திருவருட்பேறு; **சேட்டைத்தேவர்** - தேவர் பற்பலர்; **ஆர்கிலேன்** - அமைதிபெறேன்; **மறிகடல்** - அலைகள் மடியும் கடல்; **சீதவார்** - குளிர்ந்து பாயும்; **நயந்து** - விரும்பி; **அங்கி** - நெருப்பு; **சேல்** - கெண்டை மீன்; **நீலம்** - நீலோற்பலம்; **வளைக்கையான்** - திருமால்; **மலரவன்** - நான்முகன்; **மலைமாது** - பார்வதி.

24. அடைக்கலப் பத்து

செழு - சிவந்த; **கமலத்திரள்** - தாமரை மலர்த் தொகுதி; **பழுத்தமனம்** - கனிந்தமனம்; **குரம்பை** - உடலாகிய குடிசை; **சிறுமை** - கீழ்மை; **செறுப்பவன்** - அடக்கியாள்பவன்;

சதுரப்பெருமான் - ஆற்றல்மிக்க தலைவன்; இழிகின்ற - தாழ்ந்து செல்கின்ற; கூழையர் - கூத்தினையுடையவர்; சூழல் - சூழ்ச்சி; இருள்புரி யாக்கை - அறியாமையை உண்டாக்கும் உடல்; வெருள் - அறியாமை; மாழை - மாவடுப்பிளப்பு; நுடங்கும் - துவளும்; புன்கணன் - துன்பமுடையவன்; வகிர் - பிளப்பு; கும்பி - நரகு; பெய்கழல் - வீரக்கழல்; மறிவறியாச் செல்வம் - மீளாச்செல்வம் (வீடுபேறு); தழங்கருத்தேன் - ஒலியற்ற இனிய தேன்; அழுங்குகின்றேன் - வருந்துகின்றேன்; உடையாய் - என்னை அடிமையாகக் கொண்டவனே.

25. ஆசைப் பத்து

கருடக்கொடியோன் - திருமால்; சேவடி - சிவந்த திருவடி; பொல்லாமணி - துளையிடப்படாத மணி; இருளைத் துரந்து - மலங்களைப் போக்கி; மொய்ப்பால் - செறிந்த பகுதிகள்; சிறுகுடில் - சிறிய குடிசை; மிடைந்து - நெருங்கி; வீறிலி - சிறப்பற்ற; சோத்தம் - தோத்திரம்; அளியன் - கருணையுடையவன்; உடைந்து - நைந்து; ஆரா - தெவிட்டாத; கழுமத்தழுவி - இறுகத்தழுவி; எய்யாது - வருந்தாது; செடியாராக்கை - முடைநாற்றம் வீசும் உடல்; நைஞ்சேன் - நைந்துபோனேன்; திறமற - தன்மை நீங்க; வெகுளி - கோபம்; பஞ்சேரடி - செம்பஞ்சுக் குழம்பு பூசிய அடி.

26. அதிசயப் பத்து

வைப்புமாடு - சேமநிதி; மடவரலியர் - மகளிர்; ஏதமே - துன்பமே; இளமதி - நிலாப்பிறை; பரவுவார் - வழிபடுவார்; பாடு - பக்கம்; குரவுவார் - குராமலர் அணியப்பெற்ற; செப்பு - சிமிழ்; பரம்பரன் - மேலான இறைவன்; வல்வினை - தீவினை; முக்கண் - (நெற்றிக்கண்ணுடன்) மூன்று கண்கள்; எந்தை - எம்முடைய தந்தை; புரிசடை - முறுக்கிய சடை; இளமதி - பிறைச்சந்திரன்; பகர்வது - சொல்வது; அருநரகு - கொடிய நரகம்; ஒருப்படுகின்றேனை - உடன்படுகின்றேனை; அத்தன் - அப்பன்; ஏத்தேன் - புகழேன்; எரியாடிய - நெருப்பில் ஆடிய; எரிசடை - ஒளிர்சடை; அரவன் - பாம்பாபரணன்; ஏழைமை - அறியாமை; கலைஞானிகள் - சிவஞானியர்; நயவாது - விரும்பாது; பொத்தை - துளை; நிலாவகை - சேரா்வண்ணம்; நொடியன - நொடிப்போது; நுகம் - நுகத்தடி; அசும்பு - ஊற்றுக்கிணறு; விளாக்கைத்து - வட்டமாக உழுதல்; பொய்க்கூரை - நிலையற்ற உடல்; தூக்கி - எடுத்து; துகள் - குற்றம்; இத்தைப் பொருள் - மெய்ப்பொருள்; தெருளும் - விளங்கும்; இடிதர - இடிந்துபோக; நொடிவரை - நொடிப் பொழுது; செந்தீ - செந்நிறத்தீ; மெய்ந்நெறி - நன்னெறி; பொய்ந்நெறி - துன்னெறி.

27. புணர்ச்சிப் பத்து

தோளா - துளைக்கப் பெறாத; ஆற்றகில்லேன் - பொறுக்க மாட்டேன்; பொல்லா - துளையிடாத; அவனி - பூமி; பூண்டு - பொருந்தி; வெருவ - அஞ்ச; தொழும்பு - அடிமை; நிறையின்னமுது - நிறைந்த பேரின்பம்; கடைப்பட்ட - கீழ்ப்பட்ட; புடைபட்டு - பிரிவுற்றுக் கிடந்து; புல்லி - தழுவி; புணர்வது - கூடுவது; அகழப்பறந்தும் - அகழ்ந்தும் பறந்தும்; பரிந்து - உள்ளம் நெகிழ்ந்து; புரிந்து நிற்ப - விரும்பி நிற்க; தழைந்து - தழுதழுத்து; தழுத்த - தழுதழுத்த; கண்டம் - கழுத்து; கனைய - குரல் ஒலிக்க; கடிமலர் - மணமலர்; நக்கும் - நகைக்கும்; செக்கர் - சிவப்பு; புக்குநிற்பது - உள்ளத்தில் புகுந்து நிற்பது; தாதாய் - தந்தையே; பேதாய் - பேதையே; ஏதாமணி - ஒளிதரும் மணி; ஆய்ந்து அணைவது - ஒன்றிய நிலையில் தியானிப்பது; மேதா - ஞானவானே; பில்க - சிந்த; ஏது - காரணம்; மூவா முதலாய்- மூப்பில்லாத முதற்பொருளே; பார்ப்பானே - அந்தணனே; பரமன் - கடவுள்.

28. வாழாப்பத்து

பார் - நிலவுலகம்; பரந்த - பரவியுள்ள; வார்கடல் - நெடுங்கடல்; வம்பனேன் - வீணனேன்; செம்பெருமான் - செம்மேனியம்மான்; ஊடுவது - வேறுபாடு கொள்வது; வாடினேன் - வற்றினேன்; வல்லை - வல்லமை; எல்லை மூவுலகு - விண்ணுலகம், மண்ணுலகம், கீழுலகம்; திண்ணம் - உறுதி; எண்ணம் - மனம்; செஞ்செவே - செம்மையாக; திருவுயர்கோலம் - அழகுமிகு வடிவம்; மருளனேன் - அறியாமையேன்; அந்தமிலமுது - எல்லையில்லாத அமுதம்; வந்து - அணுகி; கலந்து - ஒன்றி; ஆரமுது - பேரின்பம்; முழங்கு - ஓங்கியுயர்; மாவுரி - யானைத்தோல்; செழுமதி - அழகிய சந்திரன்; மழவிடை - இளமையான எருது.

29. அருள் பத்து

சுரிகுழல் - சுருண்ட கூந்தல்; பணைமுலை - பருத்த கொங்கை; மடந்தை - பெண்; பங்கயம் - தாமரை; அயன் - நான்முகன்; குருந்தம் - குருந்த மரம்; ஆதரித்து - விரும்பி; அதெந்து - அஃதென்ன? நீதி - நடு; நிருத்தன் - ஆடல் வல்லான்; அருத்தன் - மெய்ப்பொருளோன்; தழலெழ - தீயெழ; வியன் தழல் - பெருநெருப்பு; கார் முகில் - மழை மேகம்; திமில நான்மறை - பேரொலியதான நான்கு மறைகள்; செடி கொள்வான் பொழில் - சிறு சிறு தூறுகள் நிறைந்த பெருஞ்சோலை; துப்பன்- வலிமையுள்ளவன்; மேவலர் - பகைவர்; துதைந்து - நெருங்கிய;

விகிர்தன் - வேறு வேறு வடிவங்கொள்வோன்; **பரகதி** - வீடுபேறு; **கடுந்தழல்** - மிகுந்த பெரு நெருப்பு; **மருளனேன்** - மயங்கும் மனத்தினேன்; **இருந்தவாறு** - இருந்தவிதம்; **அருந்தவா** - அரிய தவத்தை உடையவனே; **போதராய்** - வருவாய்; **சோதி** - தனியொளி; **ஆதி** - குரு மூர்த்தி; **சுடர்** - தீப்பிழம்பு; **சித்தனே** - சிவனே; **அறா** - அவிழா; **அத்தனே** - அப்பனே; **இறைஞ்சி** - வணங்கி.

30. திருக்கழுக்குன்றப் பதிகம்

பிணக்கு - வேறுபாடு; **இணக்கு** - ஒப்பு; **உணக்கு** - வாட்டம்; **வித்து** - பிறவி; **கணக்கிலா** - எல்லையற்ற; **சழக்கன்** - வஞ்சகன்; **சிட்டன்** - மாணாக்கன்; **மலங்கினேன்** - கலங்கினேன்; **இலங்கு** - விளங்குகின்ற; **பூண்ஒணாத** - அடைவதற்கரிய; **பெருந்தோணி** - பெரிய தெப்பம் (திருவடி); **பேணொணாத** - விரும்புவதற்கரிய; **நச்சி** - விரும்பி; **சிகாமணி** - முடியிலணியும் அணி; **சீலம்** - சைவ ஒழுகலாறுகள்; **பேதம்** - வேறுபாடு; **ஏதம்** - குற்றம்; **ஏதிலார்** - அயலார்; **தனிச்சரண்** - மேலானஅடைக்கலம்; **பொல்லாமையற்ற** - தீங்கற்ற; **துயக்கு** - சோர்வு; **கயக்க**- வருந்த; **முனே** - முன்னே.

31. கண்டபத்து

அந்தரமே - வான்வெளியே; **அந்தமிலா** - இறுதியில்லாத; **தளர்வு** - சோர்வு; **மன்னி** - நிலை பெற்று; **கருத்திருத்தி** - கருவைத் திருத்தி; **அருத்தி** - ஆசை; **பசுபாசம்** - உயிர்க்குற்றம்; **ஆதமிலி** - ஆதரவற்ற; **பேதைகுணம்** - அறிவற்ற தன்மை; **கோதிலமுது** - குற்றமற்ற அமுதம்; **பரிசு**-பண்பு; **பேராமே** - நீங்காமல்; **வித்தகனார்** - பேரறிஞர்; **பாவகம்** - எண்ணங்கள்; **அமுக்குண்டு** - புதையுண்டு; **வெறுவியன்** - வீணன்; **களவிலா** - வஞ்சனையற்ற; **வாங்கி** - அகற்றி; **உலப்பு** - உலத்தல்; **பூதங்கள் ஐந்து** - விண், மண், நீர், நெருப்பு, காற்று; **கேதங்கள்** - துன்பங்கள்.

32. பிரார்த்தனைப் பத்து

வாளா- வீணாக; **புலர்ந்து** - உலர்ந்து; **அலந்து** - வருந்தி; **முடையார்** - துர்நாற்றம் மிகுந்து; **முனிவால்** - வெறுப்பால்; **மூக்கின்றேன்** - சிறுமையுறுகின்றேன்;**கடியேன்** - கடுந்தன்மை யுடையேன்; **ஓவாது** - இடைவிடாது; **இருளார்** - அறியாமை மிகுந்து; **வெருளா** - வெருண்டோடி; **அருமாமணி** - அரியபெரிய மணி; **மேவும்** - அடையும்; **எய்த்தேன்** - இளைத்தேன்; **காவி** - நீலோற்பல மலர்; **திணியார்** - திண்மை மிகுந்து; **தேய்கின்றேன்** - மெலிகின்றேன்; **அருளளிய** - கருணை கனிய; **தணியாது** -

காலந்தாழ்த்தாது; **பேராமை** - நீங்காமை; **மதுரம்** - இனிமை; **குனிப்பார்** - கூத்தாடுவார்; **ஊடி** - பிணங்கி; **நெக்கு** - நெகிழ்ந்து; **கோனே** - அரசனே; **கொடியேற்கு** - தீயேனுக்கு.

33. குழைத்த பத்து

குழைத்தால் - வாட்டினால்; **உழைத்தால்** - முயன்றால்; **உறுதி** - வீடுபேறு; **செடிசேர்** - துன்பவினை சேர்க்கும்; **பண்டைக் கொடுவினை** - பழைய வல்வினை; **சிதையாது** - கெடாது; **போதுமே** - போதுமோ; **ஒன்றும் போதா** - ஒரு சிறிதும் பயன்படாத; **என்தான் கெட்டது** - என்னதான் கெட்டது; **ஒறுத்தால்** - தண்டித்தால்; **உய்யக்கொண்ட** - கடைத்தேற்றிய; **போய்த்தோ** - போனதோ; **எம்மானே** - எங்கள் தலைவனே; **மான்நேர் நோக்கி** - மானையொத்த மருண்டபார்வையை உடையவள் (உமையம்மை); **மணவாளா** - கணவனே; **மன்னே** - நிலைபெற்ற தலைவனே; **நூக்கி** - செலுத்தி; **கரணம்** - இந்திரியம்; **இடையூறு** - துன்பம்; **நயந்து** - விரும்பி; **அரற்றுகின்றேன்** - அலறி அழுகின்றேன்; **புராண** - கடவுளே.

34. உயிருண்ணிப் பத்து

பைந்நா - பசிய நாக்கு; **மெய்** - உடம்பு; **பரசும்** - வணங்கும்; **இறுமாக்கேன்** - வியந்து போற்றுவேன்; **அணைவான்** - சேர வேண்டி; **தவிசு** - ஆசனம்; **வளம்** - செல்வம்; **மத்தோன்மத்தன்** - பெரும்பித்தன்; **சினமால்** - சினங்கொண்ட பெரிய; **பனவன்** - பார்ப்பனன்; **வியனுலகு** - பரந்த உலகம்; **புரை** - துளை; **பினைத்தான்** - பின்னரும்; **புகுந்து** - வந்து; **எல்லே** - பகலே; **நற்றாங்கதி** - நற்பேறு; **தெற்றார்சடை** - அலைபாயும் சடை; **கோற்றேன்** - கொம்புத்தேன்; **எச்சம்** - மிகுந்தவை; **செச்சைமலர்** - வெட்சிப்பூ; **நிச்சம்** - நாள்தோறும்; **ஊன்பாவிய** - தசை பொதிந்த; **அடவி** - காடு; **பாவிய** - பரவிய; **மன்னு** - நிலை பெறுகின்ற; **நல்காய்**- அருள்வாயாக; **அச்சோ** - இரக்கக்குறிப்புச் சொல்.

35. அச்சப்பத்து

வாளரவு - கொடிய பாம்பு; **கற்றிலாதவர்** - மெய்ப்பொருளினை உணராதவர்; **வெருவரேன்** - அஞ்சேன்; **அருவராது** - வெறுப்புக் கொள்ளாது; **கிளியனார்** - கிளி போன்ற மகளிர்; **கிளவி** - சொல்; **அளியிலா** - கருணையில்லாத; **துணிநிலா** - பிறைச்சந்திரன்; **வாளுலாம்** - ஒளி வீசுகின்ற; **தகைவு** - தடுக்கவியலாத; **முகைநகை** - அரும்பு மலர்கின்ற; **தறிசெறி** - கட்டுத்தறி; **உழுவை**

- புலி; **வெறிகமழ்** - அருள்மணம் வீசுகின்ற; **செறிதருகழல்** - வீரக்கழல்கள் செறிந்த; **மஞ்சுலா** - மேகங்கள் இயங்கும்; **உருமும்** - இடியும்; **செஞ்செவே** - மிகவும் செம்மையாக; **திருமுண்டம்** - நீறணிந்த அழகிய நெற்றி; **தீட்ட** - பூச (அணிய); **வாளி** - அம்பு; **கூற்றுவன்** - காலன்; **சீற்றம்** - சினம்; **நீள்நிலா** - பிறைச்சந்திரன்; **வாள்நிலாம்** - ஒளி வீசுகின்ற; **சோர** - சோர்வடைய.

36. திருப்பாண்டிப் பதிகம்

பருவரை மங்கை - பார்வதி; **கழற்போது** - திருவடித்தாமரை; **தெரிவர** - தெளிவுடன் வெளிப்பட்டு; **இறைஞ்சி** - வணங்கி; **சதுர்** - ஆற்றல்; **சாற்றி** - அறிவித்து; **கழுக்கடை** - திரிசூலம்; **மறித்திடும்** - தடுத்திடும்; **பாரின்பம்** - உலகவின்பம்; **பெய்கழல்** - வீரக்கழல் புனைந்த திருவடி; **பேணுமின்** - போற்றுங்கள்; **கிளர்கின்ற** - கிளர்ந்தெழுகின்ற; **மாக்கடவி** - குதிரையைச் செலுத்தி; **கருதரிய** - எண்ணுதற்கரிய; **மூல பண்டாரம்** - சேமநிதி; **விலக்கிலை** - தவிர்ப்பிலை; **சேய** - செம்மையாகிய; **நெடுங்கொடை** - பெருங்கொடை; **கழிவில்** - நீக்கமில்லாத; **கடிய** - கொடிய; **பழமலம்** - ஆணவம், கன்மம், மாயை ஆகிய முந்தைய வினைகள்; **விரவிய** - கலந்த; **மேலைப்பிறப்பு** - தொடரும் பிறவி; **புரவி** - குதிரை; **மரவியன்** - மரத்தின் தன்மை; **ஐவர்** - ஐந்து இந்திரியங்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி); **கோக்கள்** - அரசர்; **உயிருண்ட திறல்** - ஆன்மாவை அழித்த ஆற்றல்; **ஒற்றைச் சேவகன்** - ஒப்பற்ற தனி வீரன்; **தேற்றமிலாதவர்** - தெளிவில்லாதவர்; **சேவடி** - சிவந்த திருவடி; **சிக்கென** - உறுதியாக.

37. பிடித்த பத்து

உம்பர் - தேவர்; **ஒழிவற** - நீங்குதலில்லாத; **யோகம்** - நற்சுழி; **ஊற்றையேன்** - துன்புறுவேனாகிய; **வம்பு** - புதுமை; **முடை** - புலால் நாற்றம்; **கடைபடா** - கீழாகாதவாறு; **பெருந்திறல்** - மிகுந்த ஆற்றல்; **தெருளிடத்து** - தெளிந்தபோது; **எய்ப்பு** - இறைப்பு; **அறவை** - ஆதரவற்ற; **பிஞ்ஞகான்** - சிவபெருமானே; **திறவிலே** - ஞானவெளியிலே; **இறவிலே** - இறுதிக்காலத்திலே; **பரிந்து** - அன்பு கூர்ந்து; **தொடக்கு** - தொடர்பு; **பாசவேர்** - அகப்புறப் பற்றுகளின் மூலம்; **தேசு** - ஒளி; **அண்டர்** - தேவர்; **அண்டம்** - உலகம்; **சித்தனே** - சித்திகளைத் தருகின்ற சிவனே; **சிக்கென** - உறுதியாக; **உலப்பு** - உலத்தல்; **யாக்கை** - உடல்; **மாசிலா** - குற்றமில்லாத; **மணி** - மாணிக்கம்; **தொடக்கு** - தொடர்பு; **அறுத்த** - துணித்த.

38. திருவேசறவு

ஈர்த்து - இழுத்து; ஒருங்கு திரை உலவுசடை உடையானே - திரளும் அலைகள் புரள்கின்ற சடாமுடியினை உடையவனே (கங்கையைச் சடையில் வைத்துள்ள சிவபெருமானே); தமர் - உறவினர்; ஓதமலி - கடலினின்றும் தோன்றிய; பச்சைத்தால் - பசியநாக்கு; சித்தத்தாறு - எண்ணத்தின் வழி; வாக்கியலால் - வாக்கின் தன்மையால்; உச்சத்தார் - அடியார்; உஞ்சேன் - உய்ந்தேன் (பிழைத்தேன்); என் பாலை - என் வசமுள்ள; ஓத்து - மறைகள்; பூத்தான் - தோன்றியவன்; பேர்த்தே - பெயர்த்தே; படிவாமாறு - படிந்து மூழ்குமாறு; உண்மையுமாய் - உளதாய்; இன்மையுமாய் - இலதாய்; ஒறுத்து - அடக்கி.

39. திருப்புலம்பல்

பூங்கமலம் - மெல்லிய தாமரை; அயன் - நான்முகன்; மால் - திருமால்; கோங்கு - கோங்குமலர்; ஓங்கெயில் - உயர்ந்தோங்கிய மதில்; மழ வெள்ளை - இளங்காளை; உறுதுணை - உற்ற துணை; கற்றா - கன்றினை உடைய பசு; பூங்கழல்கள் - தாமரை மெல்லடிகள்; குவிமுலையாள் கூறா - குவிந்த கொங்கைகளை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனே; சடையானே - செஞ்சடை உடையவனே; படையானே - (மூவிலைச் சூலப்) படையினை உடையவனே; விடையானே - காளை வாகனனே; உடையானே - எம்மை அடிமையாக உடையவனே; பரஞ்சோதீ - மேலான ஒளியே; பசுபதீ - உயிர்களின் தலைவனே; கூத்தா - ஆடல்புரிபவனே.

40. குலாப்பத்து

ஓடு - திருவோடு; கவந்தி - கோவணம்; குமண்டை - மகிழ்ச்சிச் செயல்; குலாத்தில்லை - அருள்பொங்கும் தில்லையம்பதி; நசை - விருப்பம்; செடியேறு - தீயனமிக; துவந்துவங்கள் - நன்மையும் தீமையுமாகிய மாறுபட்ட நிலைகள்; குறிக்கு - இலக்கு; நெறி - வழி; குழாம் - கூட்டம்; பிறியும் மனத்தார் - விலகியிருக்கும் மனம் கொண்டவர்; துரிசு - குற்றம்; ஆரும் - நிறையும்; வம்பு வீண் கதிக்கும் - மேல் எழுகின்ற; அதிர்க்கும் - பெருமுழக்கம் செய்கின்ற; இடக்கும் - தோண்டும்; கருமுருட்டு - கரிய முரட்டுத் தனம் மிக்க;திறலைவர் - ஆற்றலுடைய ஐம்புலன்கள்; கண்டகர் - (ஐம்புலன்களாகிய) கொடியவர்; வல்லரட்டு - வலியஅலைக்கழிப்பு; பாழ்செய் - களர் நிலம்; விளாவி - சேர்ந்து; கிழியிடு - பொன்பொதி; கொம்மை - திரட்சி; வரி - தேமல் (பசலை); அம்மை - அழகு; கூறன் - பாகங்கொண்டவன்; இம்மை - இப்பிறவி.

41. அற்புதப்பத்து

மையல் - அறியாமை மயக்கம்; **ஆழி** - கடல்; **ஏய்ந்த** - பொருத்தமான; **முட்டாது** - தட்டாது; **போந்தி** - வாய்; **வேந்தன்** - அரசன்; **மாயம்** - வஞ்சனை (பாம்பு); **முன்வினை** - பழவினை; **கழறி** - புலம்பி; **இடித்து** - திருத்தி; **இலம்பிட** - ஒலித்திட; **தீற்றிய** - ஊட்டிய; **பொருந்தும்** - வருகின்ற; **வெந்தொழில்** - கொடுஞ்செயல்; **திருவொடும்** - சத்தியொடும்; **அருந்துணைவன்** - உயிர்த்துணைவன்; **மாடு** - செல்வம்; **தாக்குண்டு**; **ஆடுவித்து** - கூத்தாடச் செய்து; **வணங்கும்** - மாறுபடும்; **பிணைந்து** - கூடி; **கோமளம்** - அழகு; **அணைந்து** - நெருங்கி; **மைப்புலாம்** - கருநிறம் பொருந்திய; **ஓசையால்** - வாக்கால்; **பொச்சை** - காடு; **புழுத்தலை** - பயனற்ற; **ஏழையர்** - மகளிர்; **செறியும்** - நெருங்கும்; **கிறி** - பொய்; **கீழ்மை** - இழிசெயல்; **உன்னியே** - நினைந்தே; **அஞ்செழுத்து** -பஞ்சாட்சரம் (நமசிவாய); **இருவினை** - நல்வினை, தீவினை; **அரி** - திருமால்; **அயன்** - நான்முகன்; **விரை** - மணம்; **அச்சன்**- அப்பன்.

42. சென்னிப்பத்து

சென்னி - தலை; **அட்ட மூர்த்தி** - எண்வகை உருவினன் (விண், மண், நீர், நெருப்பு, காற்று, ஞாயிறு, திங்கள், ஆன்மா);**சிட்டன்** - மேலானவன்; **மட்டுவார் குழல்** - தேன்நிறைந்த கூந்தல்; **சேவகன்** - காவலன்; **வட்டமலர்** - தாமரை; **தெங்கு** - தென்னை; **பொங்கு** - விளங்குகின்ற; **பராபரன்** - மேலானவன்; **எத்தன்** - பேரறிஞன்; **குரம்பை** - உடல்; **வைத்த** - சூட்டப்பெற்ற; **மூவர்** - மும்மூர்த்திகள்; **வேயதோள்** - மூங்கிலையொத்த தோள்; **காயம்** - உடல்; **பிரான்** - தலைவன்; **அறவை** - அநாதை; **சேய** - சிவந்த; **திறமை** - அருளாற்றல்; **மாமலர்** - தாமரை; **வம்பன்** - வீணன்; **உம்பர்** - தேவர்; **முத்தன்** - முத்தி தருபவன்; **தழைத்திடும்** - பெருகும்; **முதல்வித்து** - அனைத்து மூலம்; **சித்தன்** - சிவன்.

43. திருவார்த்தை

மாதிவர் - உமையம்மை உடனாய கோலம்; **கோதில்** - குற்றமில்லாத ;**குலாவும்** - மகிழும்; **ஆதிப்பிரமம்** - மெய்ப்பொருள்; **குலாவும்** - விளங்குகின்ற; **இடைவை** - திருவிடை மருதூர்; **மாமலர் மேய சோதி** - தாமரை ஒளிரும் பேரொளி; **திறம்** - வலிமை; **கோமான்** - சிவபெருமான்; **பணிவகை** - வணங்கும் வழிகள்; **பெண்பாலுகந்து** - உமையம்மையை மணக்க விரும்பி; **பரிமா** - வாகனக்குதிரை; **ஏடர்களை** - அடியவரை; **பந்தனை** - பிணிப்பு; **உந்துதிரை**- மோதுகின்ற அலைகள்; **வேவ** - வெந்து

போக; செற்ற - அழித்த; கடிநாய் - வேட்டை நாய்; ஏவுண்ட - அம்பால் கொலையுண்ட; கேழல் - பன்றி; கேவலம் - தனிமைப்பட்ட; இடப்பு - கிடக்கை; அலர் - மலர்; நன்னுதல் - நாமகள்; நாதம் - ஒலி; அலர்தூவி - மலர் சொரிந்து; பேதம் - வேற்றுமை; போருகிர் - வளைந்த நகம்; ஏது - குற்றம்; வண்பொழில் - வளம் பொருந்திய சோலை; ஏதில் - குற்றமற்ற; பெரும்புகழ் - ஓங்குபுகழ்; இரும் - பெரிய; ஓவியமங்கை - சித்திரப்பாவை; கடல் வாணன் - வருணன்; இரும்பாசம் - வலியபற்று; அவனி - நிலவுலகம்; சங்கம் - சங்குவளை; கேதம் - குற்றம்; ஆள் - ஆள்பவன்; பதம் - பாதம் (திருவடி); காதல் - ஆழ்ந்த அன்பு; வண்சாத்து - வளவாணிகர் கூட்டம்; சதுரன் - ஆற்றலாளன்; மல்கு - பெருகு.

44. எண்ணப் பதிகம்

ஒருருவாய - ஓருருக் கொண்டு; பெய்கழல் - வீரக்கழல்; உயிருண்கின்ற - சிவமாக்குகின்ற; நண்பே - உறவே; பித்து - அன்பு; பேணும் - வணங்கும்; தாணு - நிலைபேறு; எதிர்ந்து - எதிர்ப்பட்டு; அருள்துறை - திருவருள்நெறி; ஆவ - ஐயோ (இரக்கம்).

45. யாத்திரைப்பத்து

புயங்கன் - பாம்பாபரணன்; ஓவாது - இடைவிடாது; அவா - அஞ்சாதே; தகவே - தகுதியுடைய; மிக்க - மற்றவற்றை; விடுமின் - நில்லுங்கள்; உடையாள்- அனைத்தும் உடையவளாகிய அன்னை; கோமான் - இறைவன்; குறிப்பே - பேரின்பம் பற்றியே; போமாறு - சென்று சேருமாறு; கடிசேர் அடி - அருள்மணம் கூடிய திருவடி; கடைக்கொண்டு - உறுதியாகப் பற்றி; செடிசேர் - குற்றம் மலிந்து; செலநீக்கி - செல்லுமாறு விலக்கி; பொடிசேர் மேனி - திருநீறு திகழும் திருமேனி; வெகுளி - கோபம்; வேட்கைநோய் - காமநோய்; பெருஞ்சாத்து - பெரிய திருக்கூட்டம்; புடைபட்டு - அருகில் நெருங்கி; இகழ்மின் - வெறுமின்; நிகழும் அடியார் - திருவருள் திகழும் அடியவர்; பொற்பால் ஒப்பு - அழகில் தனக்குத்தான் ஒப்பாதல்; தாழாதே - காலந்தாழ்த்தாமல்; பேழ் கணித்தால் - மருண்டு விழித்தால்; அருமால் - அரிய மயக்கம்; அழுங்கி - வருந்தி; போரப்புரிமின் - சென்று சேர விரும்புங்கள்; மருள்வீர் - அறிவு கலங்கி மயங்கி நிற்பவரே; அகலிடத்தே - புறத்தே; அந்தோ- இரக்கக்குறிப்பு.

46. திருப்படை எழுச்சி

ஞானவாள் - மெய்ஞ்ஞான வாள்; **ஏந்தும்** - தாங்கும்; **ஐயர்** - தலைவர்; **நாதப்பறை** - பிரணவ மந்திர முழக்கம்; **மானமா** - பெருமிதக்காளை; **கவிமின்** - வளைத்து மூடுமின்; **ஆனநீற்றுக்கவசம்** - நன்மை தரும் திருநீற்றுப் காப்பு; **வானவூர்** - சிவலோகம்; **தூசி** - முன்னணிப் படை; **பேரணி** - பெரும்படை; **உந்தீர்** - ஊக்கத்துடன் செலுத்துங்கள்; **கடைக்கூழை** - பின்னணி; **அண்டர்நாடு** - தேவலோகம்; **அல்லல்** - துன்பம்.

47. திருவெண்பா

வெய்யவினை - கொடியவினை; **பொடி** - நீறு; **தேனுந்து** - பேரின்பம் விளைந்து; **செந்தீ** - செஞ்சுடர்; **மருவாது** - அணையாது; **ஆர்க்கோ** - ஆரவாரம் செய்க; **பார்க்கோ** - பார்த்து மகிழ்க; **ஆனந்தமால்** - பேரின்பப் பெருமிதம்; **உயிர்ப்பு** - வாழ்வின்அடிநாளம்; **அறையோ** - எடுத்துக் கூறுக; **பேச்சரிதாம்** - பேசாப்பெருநிலை; **மத்தம்** - பெரும்பித்து (உன்மத்தம்); **மாறின்றி** - மாறுபாடில்லாமல்; **திருத்தென்பெருந்துறை** - திருவருளுடன் அழகும் பொருந்தியபெருந்துறை; **ஒளி** - தூயநிலை; **மாவேறி** - குதிரைமேல் ஏறி; **வந்திழிந்த** - வருகை தந்த; **எஞ்ஞான்றும்**- எப்போழுதும்.

48. பண்டாய நான்மறை

பண்டாய் - பழைமையாகிய; **கண்டாருமில்லை** - கண்டவர் எவரும் இல்லை; **கோமான்** - இறைவன்; **உகுபெருந்தேன்** - சிந்திப் பெருகும் சிவஞானம்; **மருவும்** - அணுகும்; **வலைவாணன்** - வலைஞன்; **நமர்** - நம்மவர்; **காணும்** - நிற்கும்; **பேணுமடியார்** - போற்றும் அன்பர்; **இலக்கிதமாம்** - குறிக்கோளாகிய; **வாயார** - நாவார; **மாசிலாமணி** - குற்றமில்லாத மாணிக்கம்; **அறுத்தேன்** - துண்டித்தேன்.

49. திருப்படையாட்சி

காரிகையார்கள் - மகளிர்; **கடைப்படும்** - இழிநிலைப்படும்; **மறந்திடுமாறு** - மயங்குமாறு; **வேதகம்** - வேறுபாடு; **உயிர்ப்பது** - வாழ்வது; **பராவமுது** - மேலான இன்பம்; **பரமாய பரஞ்சுடர்**- மேலான அருட்பேரொளி; **அண்ணுவது** - நெருங்குவது; **சிந்திடும்** - பிரிந்திடும்; **மால்** - திருமால்; **கானவன்** - வேடன்; **அனாதி** - தொடக்கம் இல்லாதது; **நண்ணுவதும்** - கிட்டுவதும்; **அந்தம்** - இறுதி; **அளைந்து** - தழுவி; **முரன்று** - இசைத்து.

50. ஆனந்த மாலை

வியனுலகம் - மேலுலகம்; **கழிப்புண்டு** - கடந்து; **அவலம்** - துன்பம்; **பதம்** - ஞானநிலை; **செறிவு** - நெருக்கம்; **பாவை** - பதுமை; **சுழன்று** - மயங்கி; **மால்** - மயக்கம்; **குருமணி** - ஆசான்; **நடுவாய்** - நொதுமல் நிலை (நடுநிலை); **சவலை** - மெலிவு; **வேண்டாவோ** - புறக்கணித்திடுவாயோ; **தேற்றாய்** - ஆறுதலளிப்பாயாக; **பிச்சது** - பித்து; **பாண்டி வெள்ளம்** - கருணைக்கடல்; **அமரர்** - தேவர்; **நாயகமே** - தலைமையே; **நல்குதியே** - அருள்வாயாக; **ஆறு** - வழி; **நடம்** - நடனம்.

51. அச்சோப் பதிகம்

மூர்க்கர் - ஐம்புலன்கள் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்); **பழவினை** - முன்னைவினைகள்; **பாறும்** - நீங்கும்; **சித்தமலம்** - சகசமலம் (ஆணவம்); **சிறுநெறிகள்** - மாறுபடு நெறிகள்; **குறி** - அடையாளம்; **மையல்** - மயக்கம்; **எய்த்து** - இளைத்து; **எண்ணமிலா** - அளவிலாத; **தூய்நெறி** - வீட்டு நெறி; **துயர்கூர** - துன்பம் மிக; **உய்ஞ்சேன்** - கடைத்தேறினேன்; **கொந்து** - பூங்கொத்து; **பரிசற** - பசுத்தன்மை கெட; **துரிசு** - குற்றம்; **பையவே** - மெல்லவே; **தாழுருவி** - வேருடன் களைந்து; **செம்மை நலம்** - சிவநெறிப் பயன்; **மும்மை மலம்** - (ஆணவம், கன்மம், மாயை என்னும்) மூன்றாய குற்றங்கள்; **அம்மை** - வீடுபேறு; **சிதடர்** - அறிவிலி; **தையல்** - (உமையம்மை); **பிரான்**- தலைவன்; **இடங்கொண்ட** - பாகமாகக் கொண்ட; **அந்தம்** - இறுதி; **தையலார்** - மகளிர்; **சுழி** - சுழற்சி; **மாதொரு கூறுடைய பிரான்** - உமையொரு பாகனாகிய சிவபெருமான்; **சிவிகை** - பல்லக்கு.

இல்லம்தோறும் இடம்பெற வேண்டிய மணிவாசகர் பதிப்பகத்தின்

மலிவுப் பதிப்பு பக்தி நூல்கள்



உரையாசிரியர்
வாழ்க்கைக் குறிப்பு

பெயர்	:	வ. சிவசங்கரன்
பிறந்த நாள்	:	19.08.1939
பெற்றோர்	:	இலக்குமி – வடிவேல்
பிறந்த ஊர்	:	திருக்கழுக்குன்றம்
தாய்மொழி	:	தமிழ்
அறிமொழி	:	ஆங்கிலம்
பொதுக்கல்வி	:	எம்.ஏ. (தமிழ்)
தொழிற்கல்வி	:	எம்.எட்
செய்தபணி	:	01.06.1962 முதல் இடைநிலையாசிரியர் 10.10.1974 முதல் உயர்நிலைத் தமிழாசிரியர் 10.11.1992 முதல் மேனிலைத் தமிழாசிரியர்
ஓய்வுற்ற நாள்	:	31.05.1997
பணிக்காலம்	:	35 ஆண்டுகள்
சமயம்	:	சைவம்
ஆன்மிகம்	:	ஆர்வலர்
உணவுமுறை	:	தாவரவகை (புலால் மறுத்தல்)
படைத்த நூல்கள்	:	'மலர்கள்' கலை, இலக்கியக் கவிதைத் தொகுப்பு (1968); 'மழலை நெஞ்சம்' சிறுவர் பாடல்கள் (1979); 'திருக்குறள் தெளிபொருள்' (2001); நாலடியார் நயவுரை (2003); பழமொழி பயனுரை (2003); நானாற்பது நல்லுரை (2003)
சிறப்பு விருதுகள்	:	பாரதியார் நூற்றாண்டையொட்டிப் புதுவை அரசின் 'பாரதிப் பட்டயம்' (1982); பாவேந்தர் நூற்றாண்டையொட்டி உலகத் தமிழ்க் கவிஞர் பேரவையின் 'கவிமாமணி' விருது (1990); பல்வேறு அமைப்புகளின் 'நற்கவிஞர்', 'எழிற்கவிமணி' போன்ற விருதுகள்.